தீரும்படி சதாசந்நிதிபண்ணிக்கொண்டுகோயிலிலே கண்வளர்ந்தருளுகிற பெரியபெருமாள் திருவடிகளிலே விழுந்து தம்மபேக்ஷிதம்பெறாவிட்டால் தரிக்கவொண்ணாதிறே. விஷயமஸந்நிஹிதமாதல், ஜ்ஞாநத்தில்கொத்தையுண்டாதல் செய்யிலிறேதரித்திருக்கலாவது. நீர்மையில் கண்ணழிவுண்டாயாதல், மேன்மையில் கண்ணழிவுண்டாயாத விழக்கிறாரன்றே. இப்படி யிருக்கச்செய்தேயு மவர்திருவடிகளிலே தமக்குநினைத்த பரிமாற்றம்பெறாமையாலே தாமானதன்மைபோய் ஒருபிராட்டிதசையை ப்ராப்தராய், அவ்வளவிலும் தமக்கோடுகிறதசையைத் தாமறிந்து கூப்பிடப்பெறாதே, திருத்தாயார் கூப்பிடும்படியாய்விழுந்தது. சம்ப்லேஷ விப்லேஷங்களில் பிறக்கும் லாபாலாபங்களாலே தாம்பிராட்டிமார்தசையையுடையராகிறார், திருத்தாயாரான ஸ்வபாவம் விளைந்தபடி எங்ஙனேயென்னில் ; கிண்ணகம்பெருகியோடாநின்றா லிருகரையுமாறுகளாகப் பெருகிப்போகாநிற்கச்செய்தேயும் கடலிற்புகுமம்ஸம் குறையாமல் போய்ப்புகுமாபோலே யாயிற்றிவருடைய "அதனிற்பெரிய வென்னவா" என்கிற் வபிநிவேசமிருக்கிறபடி; ஆகையாலே யிவர்க்கெல்லார் பேச்சும் பேசக்குறையில்லை. இப்பெண்பிள்ளை மோஹித்துக்கிடக்க, இவளைக்கண்டுறவுமுறையாரடங்கலும் மோஹித்துக்கிடக்க ; பெருமாளிலு மிளையபெருமாளுக்குத் தளர்த்தியுண்டா யிருக்கச்செய்தே பெருமாளுடைய ரக்ஷணத்துக்காக விளையபெருமாளுணர்ந்திருக்குமாபோலே, திருத்தாயாருமிவளுடைய ரக்ஷணத்துக்காக வுணர்ந்திருந்து ; ஏதேலும்தசையிலும் தங்கள்காரியம் தாங்கள் செய்யக்கடவதன்றிக்கே யிவன்காலிலேவிழுந்து தங்கள் காரியம் தலைக்கட்டுங்குடியாகையாலே பெரியபெருமாள் திருவடிகளிலே யிவளையிட்டு வைத்துக்கொண்டிருந்து; "இவளழுவது தொழுவது, மோஹிப்பது, ப்ரலாபிப்பது, அடைவுகெடப் பேசுவது, நெடுமூச்செறிவது, அதுதானும் மாட்டாதொழிவது, ஸ்தப்தையாயிருப்பது, இப்படியாதி விஞ்சிச்செல்லாநின்றது; இவள் திறத்திலே நீரென் செய்யக்கடவீர்" என்று கூப்பிடாய்ச் செல்லுகிறது. எல்லாவளவிலுமவனையே பரிஹாரங்கேட்கும் குடியாகாதே, ஆண்டாளொருநாள் ஆழ்வானுக்கு, "பிள்ளைகள் விவாஹப்ராப்தரானார்கள், இவ்விடையாட்டமொன்றுமாராயாதிருக்கிறதென்" என்ன, "பகவத்குடும்பத்துக்கென்னை யின்றிருந்து கரையச்சொல்லுகிறாயோ; நானோநான்வாசித்துச்சமையக்கொள்ள ; அங்கேவரக்காட்டு" என்ன, பட்டரையும் சீராமப்பிள்ளையையும் கொடுத்துப்போகவிட, வாசித்துச்சமைந்து பெருமாள்திருவடிகளிலே நிற்க, "ஒன்றுசொல்லுவாய்போலே யிருந்தாயீ" என்றுதிருவுள்ளமாக, "'இவர்கள் விவாஹப்ராப்தரானார்கள், என்னாநின்றார்கள்" என்று விண்ணப்பஞ்செய்ய, "எல்லாம்செய்கிறோம்" என்றுதிருவுள்ளமானார் ; பிற்றைநாளே மன்னியைக்கொண்டுவந்து கொடுத்தார்கள். அகளங்கப்ரஹ்மராயர் அடையவளைந்தான் செய்யாநிற்கச்செய்தே

மதிள் போக்குகைக்காகவிளையாழ்வானகத்தை வாங்கப்புக, பட்டரத்தைக்கேட்டருளி, " வாரீர்பிள்ளாய், நீர்செய்கிறமதிள் பெருமாளுக்கு ரக்ஷகமென்றிராதேகொள்ளீர்; இங்குக்கிடக்கிற நாலுகுடியுங்காணும் பெருமாளுக்குரக்ஷை; ஆனபின்பு; நீர் செய்கிறவை யெல்லாமழகிது, 'இவையெல்லாம் நாம் செய்கிறோம்' என்றிராதே, 'பெருமாள்செய்விக்கிறார்' என்றிரீர், உமக்குநல்வழிபோகவுடலாங்காணும்" என்றருளிச்செய்தார். இத்திருத்தாயாரும் சர்வபாரங்களையு மவர்தலையிலே பொகட்டுப் பெண்பிளளைத் திருமணத்தூணுக்குள்ளே பொகட்டு, அவருடைய வசரண்யசரண்யத்வாதிகுணங்களை விண்ணப்பஞ்செய்யா நின்றுகொண்டு ; ஒருகாலநியதியாதல், ஒருதேசநியதியாதல், அதிகாரிநியதியாதலின்றிக்கே சர்வசமாஸ்ரயணீயரா யிருக்கிறபடியை யநுசந்தித்து, தன் பெண்பிள்ளையினுடைய தசையைத் திருவுள்ளத்திலே படுத்துகிறா ளித்திருவாய்மொழியாலே. ....*

ஜீயர் அரும்பதம்.

கங்குலும்பகலும்ப்ரவேசோ, (உண்ணிலாவியில் நமஸ்ஸப்தார்த்தம்) என்கிறதுக்கிரண்டுசங்கதி. முந்தினது - * உலகமுண்ட பெருவாயனிலே - த்வயத்தில் பூர்வகண்டார்த்தத்தை யருளிச்செய்தார்; * உண்ணிலாவியில் - உத்தரகண்டத்தில் * நமஸ்ஸப்தார்த்தத்தை யருளிச்செய்தார்; இதில் - * ஸ்ரீமத்பதநாராயணபதார்த்தத்தை யருளிச்செய்கிறார். "என்றிருமகள்சேர்மார்பன்" என்றதிலே - * ஸ்ரீமத்பதார்த்தம் சூசிதம். " அக்நிஹோத்ரம்ஜுஹோதி-யவாகூம்பசதி" (அக்நிஹோத்ரம்ஜுஹோதி - யவாகூம்பசதி) என்று - பாடக்ரமாதர்த்தக்ரமஸ்யபலீயஸ்த்வாத், விரோதிநிவ்ருத்த்யநந்தரம் கைங்கர்யம்ஸித்திக்கவேண்டுகையாலே, முந்துற, * உண்ணிலாவியிலே - * நமஸ்ஸப்தார்த்தம் சொல்லிற்றென்று. இப்பக்ஷத்தில், உத்தரவாக்யஸ்த்தநமஸ்ஸில் ததீயசேஷத்வம் சொல்லப்படாமையாலே, அத்தை-இங்கே, " தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன் " என்றுசொல்லும் கிஞ்சிதஸ்வாரஸ்யமுண்டு. ஆகையாலே, * உலகமுண்டபெருவாயனிலே, "புகலொன்றில்லாவடியேன்" என்று - ப்ரணவார்த்தம் சொல்லிற்று; * உண்ணிலாவியில்- திருமந்த்ரத்தில் * நமஸ்ஸப்தார்த்தம் சொல்லிற்று; * கங்குலும்பகலிலே-திருமந்த்ரத்தில் * நாராயணபதார்த்தம் சொல்லுகிறதென்று கொள்ளவேணுமென்றிரண்டாம்ஸங்கதி. * கங்குலும்பகலில் - திருமந்த்ரத்தில் * நாராயணசப்தார்த்தம்சொல்லுகிறபடி யெங்ஙனேயென்னில்; * நாராயணபதத்தில் சதுர்த்யர்த்தம்-கைங்கர்யமாய், அது தானநுபவஜநித ப்ரீதிகாரிதமாய், அவ்வநுபவந்தான் ப்ராவண்யகார்யமாய், அந்தப்ராவண்யத்தை யிதிலேசொல்லுகையாலே.

இத்திருவாய்மொழிக்கு ஸங்கதியருளிச்செய்வதாக, கீழிரண்டுதிருவாய்மொழிகளில் ப்ரமேயங்களை யநுவதிக்கிறார் (உலகமுண்டவித்யாதிவாக்யத்வயத்தாலே) ஸாதநத்தை யநுஷ்டித்தவர்கள் பலசித்திபர்யந்தமாறி யிருக்குமாபோலே யாறியிராமல் கூப்பிடுவானென்னென்ன (வ்யபிசாரமுமித்யாதி) வ்யபிசாரம்-பலாவ்யாப்தி. வ்யவதாநம் - காலவிளம்பம். சித்தஸாதநமாகையாலே யிரண்டுமில்லையென்றபடி. இப்படியிருக்கிற ப்ரபத்தி விபலமாவானென்னென்கிற சங்கை

யை யநுவதித்துப்பரிஹரிக்கிறுர் (இப்படி யித்யாதிவாக்யத்வயத்தாலே) பொறுக்க மாட்டாமைக்கு ஹேதுவேதென்ன (ஈஶ்வரனுடையவித்யாதி)

ஆனாலும், பிராட்டியைப்போலே தரித்திருக்கவொண்ணுதோவென்ன(பிராட்டியையித்யாதி) ருசியினளவில்லாமையை ஹேதுபூர்வகமாக விவரிக்கிறுர் (சம்சாரத்தினுடையவித்யாதி) இப்படி யலாபத்தில் நோவுபட்டதுக் கிவர்க்கொப்புண்டோவென்ன (பகவத்விஷயமித்யாதிவாக்யத்ரயம்) இப்படியிருக்கிற விவருடைய வார்த்தியை ப்ரகாசிப்பிக்கிற வித்திருவாய்மொழிக்கர்த்தம், கரைமேலேநிற்கிற வஸ்மதாதிகள் சொன்னுல்விரஸமாயிருக்குமென்னுமத்தை யாப்தஸம்வாதத்தாலே தர்ஸிப்பிக்கிறுர் (பட்டரித்யாதி)

ஈஶ்வரன்று னிவனைவைத்ததுக்குக் கருத்தென்னென்ன (அவனுமித்யாதி) இவரிருந்தால் ஜகத்துத்திருந்துமோவென்ன (இவரொருமுஹூர்த்தமித்யாதி) அத்தையறிந்த விவர் த்வரிக்கிறதென்னென்ன (இவர்நம்படியித்யாதி) இவ்விருப்பில் பொருந்துவார் - திருமழிசைப்பிரான்போல்வார். அவனுக்கு மிதில் பொருந்துவாரையிட்டுக் காரியங்கொள்ள வொண்ணுதோ வென்ன (அவனுமித்யாதி) அதுக்கு ஹேதுவேதென்ன (தேசிகரையித்யாதி) தேசிகரொன்கிறது - சம்சாரதோஷமும் பகவத்வைலக்ஷண்யமும் நன்ருக வறிந்தவர்களென்றபடி. அதாவது - சம்சாரத்தில் பொருந்தியிருக்கு மவர்களைத் திருத்தும்போது, சம்சாரம் துஸ்ஸஹமாம்படியான ப்ரேமமுடையாரைக்கொண்டு கார்யங்கொள்ளவேணும் ; இப்படியன்றிக்கே, இதில் பொருந்துவாரைக்கொண்டு கார்யங்கொண்டால், "தனக்கொன்றும்பிறர்க்கொன்றுமா யிவன்சொல்லுகிறபடி பாரீர்?" என்று அவர்கள் திருந்தார்கள் என்று அவற்குக்கருத்தென்றபடி, " தேசிகரைக்கொண்டு காரியங்கொள்ளவேணும் " என்றிருக்கிறதறிந்திருக்க விவர்கூப்பிடுவானென்னென்ன (பண்ணினவித்யாதி) "பிறபாடு பொறுக்கமாட்டாத" இத்யாதி வாக்யோக்த சங்கைக்குப்பரிஹாராந்தரம் (இனித்தானவனுமித்யாதி) அதாவது - ஸ்ரீபரதாழ்வானைப்போலே ஸ்வாதந்த்ர்யத்தாலே வைத்தானென்றபடி.. கீழே " ஈஶ்வரனுடைய ஸர்வஜ்ஞத்வத்துக்கும் " இத்யாதி வாக்யவிவரணம் (சர்வஜ்ஞனவனித்யாதி)

இவ்வளவும் - உண்ணிலாவியில் ப்ரமேயத்தையநுவதித்து, இதுக்கு- * கங்குலும்பகலோடே சங்கதி (இவர்தாமித்யாதி) ஜகத்காரணமென்றது - வ்யூஹத்தை. இவர் * அசிதவிசேஷிதராய்க்கிடக்க வொருகாலவிசேஷத்திலே தானறிந்து செய்யுமதாகையாலே யென்றபடி. இங்கபேக்ஷிதங்கிடையாவிட்டால் தரிக்கவொண்ணுமைக்கு ஹேதுவையருளிச்செய்கிறுர் (விஷயமித்யாதி) ஜ்ஞாநத்திலென்றது- ஈஶ்வரஜ்ஞாந ஶக்த்யாதிகளிலென்றபடி. ஏதத்விவரணம் (நீர்மையிலித்யாதி) மேன்மையாவது - ஜ்ஞாநசக்த்யாதிபூர்த்தி. இப்படி மேன்மை நீர்மைகளிரண்டும் குறைவற்றிருக்கிறவிடத்திலு மபேக்ஷிதங்கிடையாமையாலே வந்தவாற்றுமையின்கனத்தை யருளிச்செய்கிறுர் (இப்படியிருக்கச்செய்தேயுமித்யாதி)

பிராட்டிதசையும் திருத்தாயார்தசையு மேககாலத்திலேயுண்டாகி லிவருடைய ப்ராவண்யம் ஸங்குசிதமாகாதோ வென்கிறசங்கையை யநுவதித்துப் பரிஹரிக்கிறுர் (சம்ஶ்லேஷேத்யாதிவாக்யத்வயத்தாலே) (திருத்தாயாரான ஸ்வபாவம் விளைந்தபடியெங்ஙனே) என்றவநந்தரம், விளைந்ததாகி லிவருடைய வபிநிவேஶத்துக்குக் குறைவுவாராதோ (என்னில்) என்றத்யாஹார்யம், மேல் பரிஹாராநுகுணமாக. (அபிநிவேசம்) குறையாது (இருக்கிறபடி) என்று கூட்டுவது. ஆக,, பரிஹாரம் - தாயாராயும் சொல்லலாம், அபிநிவேசத்துக்குக் குறைத்தலில்லையென்றபடி.

இத்திருவாய்மொழியில் நாயகியினுடைய வார்த்திப்ரகாரங்களை விஸ்தரேணவருளிச்செய்கிறார் (இப்பெண்பிள்ளையித்யாதி) "மயங்கும்" என்றத்தைப்பற்ற (மோஹித்தென்றது) பந்துக்களடங்கலும் மோஹித்தார்களாகில் திருத்தாயாருணர்ந்திருக்கும்படி யெங்ஙனேயென்ன (பெருமாளிலுமித்யாதி) "அழுந்தொழும்" என்றத்தைப்பற்ற (அழுவதித்யாதி) " வெவ்வுயிர்க்கும் " என்றத்தைப்பற்ற (நெடுமூச்செறிவதென்றது) அவனைக்கேட்கிறதென், தாங்களே பரிஹரித்துக்கொள்ளவொண்ணாதோவென்ன (எல்லாவளவிலுமித்யாதி) இதுக்கு சம்வாதத்வயம் (ஆண்டாளித்யாதி) (பெருமாள் செய்விக்கிறார்) என்றவிடமபேக்ஷிதம். " பற்றிலார்பற்றநின்றானே " என்றத்தைப்பற்ற (அஶரண்யஶரண்யத்வாதியென்றது)..........*

இரண்டாந்திருவாய்மொழி.

முதற்பாட்டு.

கங்குலும்பகலுங்கண்டுயிலறியாள்கண்ணநீர்கைகளாலிறைக்குஞ்
சங்குசக்கரங்களென்றுகைகூப்புந்தாமரைக்கண்ணென்றேதளரு
மெங்ஙனேதரிக்கேனுன்னைவிட்டென்னுமிருநிலங்கைதுழாவிருக்குஞ்
செங்கயல்பாய்நீர்த்திருவரங்கத்தாயிவடிறத்தென்செய்கின்றாயே.

ஆறாயிரப்படி.

உன்னைக் காணப்பெறாத நிரவதிக வ்யஸநத்தாலே திவாராத்ர விபாகமின்றியே யொருகாலும் நித்ரையான தெங்ஙனே யிருக்குமென் றறியாள்.

உன்னைக்காண்கைக்காகப் பெருத்தாகவூறுகிற கண்ணநீராகிறகடலை, தன்னுடைய வபிநிவேசத்தாலும் மௌக்த்யத்தாலும் தன்சிறுக்கைகளாலே யிறையாநிற்கும். " கூராராழிவெண்சங்கேந்திக்கொடியேன்பால்வாராய் " என்று சொல்லத்தொடங்கி முடியச்சொல்ல க்ஷமையல்லாமே, அவ்விரப்புத் தோன்றும்படி கைகளாலே தொழாநிற்கும். தாமரைக்கண்களால் நோக்கா யென்றுசொல்ல வுத்யோகித்தமாத்ரத்திலே தளரும். என்னையுங்கூடத் தோற்பித் தடிமையாக்கின கண்களையுடைய வுன்னைப்பிரிந்து, தீக்ஷ்ணமான விஷத்தைப் பாநம்பண்ணினாப்போலே யொருபடியாலும் தரிக்கமாட்டேனென்று சொல்லாநிற்கும். தன்னுடையஸந்தாபத்தைப் பொறுக்கமாட்டாமே, மஹீதலத்திலே விவேஷ்டநம் பண்ணாநிற்கும். நிகில ஜந்துஜாதசரண்யனே, கோயிலிலே கண்வளர்ந்தருளுகிற திவளுக்காகவன்றோ, இவளுடைய தசையிருக்கிறபடி பார்த்தருளாய்பிரானே, இவள்திறத் தென்செய்ய நினைத்தருளினாயென்கிறாள். ......*

பன்னீராயிரப்படி.

•முதற்பாட்டில், அநுபாவ்யமான வசாதாரண சிஹ்நங்களைச் சொல்லி யிவளார்த்தையாகாநின்றாள், இவளளவி லென்செய்ய நினைத்திருக்கிறீரென்கிறாள்.

கங்குலும் - நாட்டாருறங்கும் கங்குலும். பகலும் - ப்ரணயிநிகளுறங்கும்ப கலும். கண் - கண்கள். துயில் - துயிலவேணுமென்று. அறியாள் - அறிவும் நடையாடுகிறிலள். இவள் கண்வட்டத்திலுறக்கம்வாராதபடி சோகாஸ்ருவெள்ளங்கொள்ளுகையாலே, கடலைக் கையிட்டிறைப்பாளைப்போலே, கண்ணநீர்- கண்ணநீரை· மாற்றுவதாக, கைகளால் - கைகளாலே. இறைக்கும் - இறையாநிற்கும். இக்கண்ணநீர்க்கிரங்கி வருமென்று நினைத்து அபேக்ஷைக்கீடாக * கூராராழிவெண்சங்கேந்திவரக்கூடுமாகையாலே, சங்குசக்கரங்கள் - சங்குசக்கரங்கள். என்று - என்று அவற்றைச்சொல்லி. கைகூப்பும் - வந்தால்பண்ணு மஞ்சலியைப்பண்ணுநிற்கும். வந்தால் குளிரநோக்கும் கண்களைநினைத்து, தாமரை - தாமரைபோன்ற. கண்-கண். என்றே - என்று சொல்லி, அது பெருமையாலே. தளரும் - தளராநிற்கும். உன்னை - இந்த வாயுதசோபையயு மவயவசோபையையுமுடையவுன்னை. விட்டு- விட்டு. எங்ஙனே - எங்ஙனே. தரிக்கேன் - தரிக்கக்கடவேன். 'என்னும் - என்னும். தன்னூர்த்யதிசயத்தாலே, இருநிலம் - பூமிப்பரப்படங்க. அவன் காலாலே துழாவினவோபாதி, தான், கை - கையாலே. துழா - துழாவி. இருக்கும் - அதுக்கும் சக்தையன்றியே நிர்வ்யாபாரையா யிருக்கும். செம் - இளமையாலே சிவந்தபுகரையுடைத்தான. கயல் - கயலானது. பாய் - உகளித்துப்பாய்கிற. நீர் - நீரையுடைத்தான. திருவரங்கத்தாய் - கோயிலிலே சந்நிஹிதனானவனே. இவள்திறத்து - இப்படி அதிசயிதமான விகாரத்தையுடையளாய், அந்த நீரைப்பிரிந்த கயல்போலே உன்னைப்பிரிந்து தரியாத விவளளவிலே. என் - எது. செய்கின்றாய் - செய்கிறாய்.

இவ்வார்த்தியைத் தீர்க்க நினைக்கிறாயோ, அதிசயிப்பிக்கநினைக்கிறாயோ வென்று கருத்து..*

ஈடு - முதற்பாட்டு.

இப்பிராட்டியுடைய, பேச்சுக்கு நிலமன்றிக்கே யிருக்கிற தசையைப் பெரியபெருமாளுக் கறிவித்து, இவள்திறத்துச் செய்தருளநினைத்திருக்கிற தென்னென்கிறாள்.

(கங்குலும்பகலும்கண்டுயிலறியாள்) இவளை யெப்போது கண்டுயிலப்பண்ண விருக்கிறீர். விரஹிணிகளுக் கோடுகிற வ்யஸநம் மாற்றுகைக்காக "இரா, பகல்" என்றொருவரம்புகட்டின வித்தனையிறே, அதிவளுக்குக் காரியமாகிறதில்லை. ராத்ரியில் விஷயலாபத்தாலேபோதுபோக்கவும், பகலிந்த்ரியங்களானவை விஷயாந்தரங்களிலே கொடுபுக்குமூட்டி "அப்போதாயிற்று, இப்போதாயிற்று" என்று காலக்ஷேபத்துக் குடலாயிருக்குமிறே. "எங்ஙனேதரிக்கேனுன்னைவிட்டு" என்று சொல்லுகையாலே, இவளுக் கங்ஙனொன்றுசொல்லித் தரிக்கவொண்ணாதே. தனக்காப்'வாசஹேதுவாகப் பண்ணின திவாராத்ரவிபாகமுமறிகிறிலள். பகலுமிரவோடொக்க வுறக்கங்கண்டதிறே. (பகலும்) (நாட்டாரிரவுஉறங்குவர்கள், ப்ரணயிநி) யெளவநங் குடிபுகுந்தால் இராமாறு நாயகனுக்கலைகொடுக்கையாலே உறக்கமில்லை, அவ்விழவுக்கு மெற்றி உறங்குவது பகலிறே, அதுவும் பெறுகிறதில்லை. "ஊநிஊஸூதகூஂாஜஃ" (அநித்ரஸ்ஸததம்ராமஃ) என்றுகொண்டு தன்படியாக்கினான். "ஶுாஂஜஂஸாஜெ[illegible]

வெதி" (பரமம்ஸாம்யமுபைதி) என்கிறபடியே தம்மோடு சாம்யா
த்தி கொடுத்தபடி. கண்டுயில்கொள்ளாளென்றதே, அறியாளென்கிற
ு - சம்ச்லேஷத்தி லவனுறங்கவொட்டான், விச்லேஷத்தில் விரஹவ்
ஸநமுறங்கவொட்டாது, ஆகையாலே இவளுக்கிரண்டுபடியாலு முறக்
மில்லாமையாலே. இவள்கலந்தவன்றுறங்கிறலும், இவளிப்போதுபடு
ற வ்யஸநத்தை யநுபவித்த திருத்தாயார்க் கதோன்றுய்த்தோற்றுதே!.
)வ்வ்யஸநத்துக்குப் பூர்வரங்கமாய் வந்த தொன்றுகையாலே அத்தை
யான்றாக நினைத்திருக்கிறிலள். என்றும் சிறைக்கூடத்திலே பிறந்து வ
ர்ந்தாரைப்போலே, பிரிந்தநாளேயிழவேகாணு மிவள்நெஞ்சிலே பட்டு
கிடக்கிறது. (அறியாள்) ஒக்கவிருக்கச்செய்தே "கைங்கர்யவிரோதி"
ன்று கைவிட்டவர்களிற்காட்டி லிவளுக்குண்டான வாசியிருக்கிறபடி.
றன்பில்லையாகிலு மிஜ்ஜந்மத்தில் மெய்ப்பாடுபெற்றிவிடவேண்டிற்று.

(கண்ணநீர்கைகளாலிறைக்கும்) இவளுக் கிவ்வறியாமை யெங்
நமொக்க வநுவர்த்திக்கப் பெற்றதில்லை!. "இவ்வாற்றாமையில் சர்வத்ர
ாயகன் வாராநிரான்" என்று பார்த்து, "அப்போதாகப் பகை கொண்
டாடவொண்ணாது, ப்ரதம பரிஷ்வங்கந் தொடங்கிக் காணவேணும்" எ
ன்று கண்ணநீரை மாற்றப் பாராநின்றாள். இதென்ன ஸாஹஸந்தான்!.
நிது தன்னா லியலுமென்று தொடங்கினளே. * கடல்கொண்ட கண்ணீ
ரே. கோருளிலையைக்கொண்டு கடலை வற்ற விறைப்பதாகநினைப்பாளே!.
கண்கையாலே கண்ணநீரை யிறைக்கப் பாராநின்றாள். "கிமர்த்தம் தவநே
த்ராப்யாம்" (கிமர்த்தம் தவநேத்ராப்யாம்) என்னும்படிகாணு மிருக்
கிறது.

(சங்கு) கண்ணநீரை மாற்றினால், கண்ணாலேகாண வந்துதோற்
றும்படியை நினையாநின்றாள். "தவளவொண்சங்குசக்கரம்" என்று-தி
வ்யாயுதங்களோடே காணவிறே யிவள்தானாசைப்பட்டிருப்பது. உகவா
த கம்ஸாதிகளுக்கிறே த்விபுஜனாகவேண்டுவது. "தேநைவரூபேண சதுர்ப்புஜேந" (தேநைவரூபேண சதுர்ப்புஜேந) என்றானிறே
காணவாசைப்பட்ட வர்ஜுநன். "கூராராழிவெண்சங்கேந்தி-வாராய்"
என்னக் கணிசித்து, பலஹாநியாலே தலைக்கட்டமாட்டாதே, விடாயன்
கையைமடுத்துத் தண்ணீரை வேண்டுமாபோலே, குறையுமஞ்சலியாலே
தலைக்கட்டாநின்றாள்.

(தாமரைக்கண்ணென்றேதளரும்) அவ்வாழ்வார்க ளளவும்வந்
தலையெறிகிற கண்ணழகைச் சொல்லப்புக்கு, நடுவேதளராநின்றாள். "உ
ன்றாமரைக்கண்களால் நோக்காய்" என்று சொல்லப்புக்கு, நடுவே தள
ராநின்றாள். "ராமம் ரக்தாந்தநயநம் அபச்யந்தீ ஸுது:கிதா" (ராமம்ர
க்தாந்தநயந மபச்யந்தீஸுதுःகிதா) என்னுமாபோலே.

தளருகிறதென், வேறொன்றாலே போதுபோக்கினாலோவென்பர்களே (எங்ஙனேதரிக்கேனுன்னைவிட்டென்னும்) பரவ்யூஹவிபவங்களிலே யாசைப்பட்டேனாயாறியிருக்கிறேனோ. (உன்னைவிட்டு - எங்ஙனே தரிக்கேன் – என்னும்) உறக்கத்தாலே, சூது சதுரங்கத்தாலே போது போக்கலாம் விஷயத்திலேயோவகப்பட்டதென்னும். உம்முடையவைலக்ஷண்யம் நீரறிந்தால், “நம்மைப்பிரிந்தார் தரிக்கமாட்டார்கள்” என்னுமிடம் நீரே யறியவேண்டாவோ. (உன்னைவிட்டு - எங்ஙனேதரிக்கேன் - என்னும்) உன்னைக் கண்ணாடிப்புறத்திலும் கண்டறியாயோ. கண்டாயாகில் பிரியாய், பிரிந்தாயாகி லிவள்பட்டது படுவுதி.

“ எங்ஙனேதரிக்கேன் ” என்ற வநந்தரம் வரக்காணாமையாலே (இருநிலம்கைதுழாவிருக்கும்) (கண்ணநீர்ப்ரவஹிக்கச்சேறாகையால்) மஹாப்ருதிவி ஒரு பீங்கானுக்குட்பட்ட சந்நபங்கம்பட்டது படாநின்றது.

(செங்கயல்) அவ்வூரில் வர்த்திக்கிற திர்யக்குக்களின்ஸ்வபாவமிவளுக்கரிதாவதே. அவை தந்நிறம்பெற்று வர்த்தியா நின்றன, இவள் நிறமிழந்தாள். நாரத்தைப்பற்றினது களித்து வர்த்தியாநின்றது, நாராயணனைப்பற்றின விவள் துஃகிப்பதே?. (செங்கயல்) அழகியகயல். அக்கயல் ஜலத்தைப்பிரிந்து தரிக்கிலன்றோ விவளுன்னைவிட்டுதரிக்கவல்லது. “ஜலாந்மத்ஸ்யாவிவோத்ருதௌ” (ஜலாந்மத்ஸ்யாவிவோத்ருதௌ) என்னக்கடவதிறே யிவளையும். (இவள்திறத்து) “ஏஹிபஶ்யஶரீராணி” (ஏஹிபஶ்யஶரீராணி) என்னுமாபோலே, இவள்படி பேச்சுக்கு நிலமல்லாமையாலே காட்டுகிறாள். ராக்ஷஸர் தின்ற வுடம்பைக் காட்டினாப்போலே, விரஹம்தின்ற வுடம்பைக்காட்டுகிறாள். (என்செய்கின்றாயே) இவள் திறம் செய்யப் பார்த்ததென். உம்முடையவூரில் பதார்த்தங்கள் பெற்றதும் பெறவேண்டாவோ வும்மையாசைப்பட்ட விவள்.........*

ஜீயர் அரும்பதம்.

முதற்பாட்டு (கங்குலித்யாதி) இப்பிராட்டியுடையவ நேகாவஸ்த்தைகளைச் சொல்லுகிற “ கங்குலும் ” இத்யாதிபதங்களையும், “ என்செய்கின்றாய் ” என்றபதத்தையுங்கடாக்ஷித்தவதாரிகை (இப்பிராட்டியுடையவித்யாதி)

“நித்ரைக்குக் கல்பிதமான ராத்ரியும்பகலுங் கண்டுயிலறியாள்” என்கிறவளுடைய ஹார்த்தபாவம் (இவளையெப்போதித்யாதி) கண்டுயிலறியாளென்றாதே, “கங்குலும்பகலும்” என்றுவிசேஷித்ததுக்குபாவம் (விரஹிணிகளுக்கித்யாதிவாக்யத்வயம்) விரஹிணிகளுக்கென்றது - விரஹாஸஹிஷ்ணுக்களுக்கென்றபடி. வ்யஸநமாறும் ப்ரகாரமேதென்ன (ராத்ரியிலித்யாதி) இவளுக்குமப்படி போதுபோக்கவொண்ணாதோவென்ன (எங்ஙனேதரிக்கேனித்யாதி) ஆகையாலே (தனக்காஶ்வாஸஹேதுவாக) என்றுகூட்டுவது. “ பகலுங்கண்டுயிலறியாள் ”, என்கைக்கு பகலுறங்கப்ரஸக்தியுண்டோவென்ன (பகலுமிரவோடித்யாதி) உறங்கக்கண்டதெடபடியென்ன (யௌவநமித்யாதி) அலைகொடுக்கையாலே - கலவிக்கிடங்கொடுக்கை

யாலே. அலேயென்று - வ்யாபாரமாய், ஸம்ச்லேஷத்தைச்சொல்லி; அலேகொடுக்கையாவது - ஸம்ச்லேஷிக்கையென்றபடி. பலிதம் (அநித்ர இத்யாதி) "அநித்ர ஸததம் ராம: ஸுப்தோபி ச நரோத்தம: । ஸீதேதி மதுராம் வாணீம் வ்யாஹரந் ப்ரதிபுத்யதே" (அநித்ரஸ்ஸததம்ராமஸ்ஸுப்தோபிசநரோத்தம: ஸீதேதிமதுராம்வாணீம்வ்யாஹரந்ப்ரதிபுத்யதே) இதி ஸுந்தரகாண்டே ஸீதாம் ப்ரதிஹநுமாந். "ததா வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி" (ததாவித்வாந்புண்யபாபேவிதூயநிரஞ்ஜந:பரமம்ஸாம்யமுபைதி) இதிமுண்டோபநிஷதி. நாயகனுறங்குகிறபோதாகிலுமுறங்கவில்லேயோவென்ன (இவள்கலந்தவித்யாதி) ஹேதுபூர்வகவிவரணம் (இவ்வ்யஸநத்துக்கித்யாதி) பூர்வாங்கமாவது - பாவிநர்த்தஸூசகபூர்வபாவிவ்யாபாரம். ஆனு லிவள்நெஞ்சிலே பட்டுக்கிடக்கிறதுதானேதென்ன (என்றுமித்யாதி) சிறைக்கூடத்திலேபிறந்துவளர்ந்தவர்களுக்குக் கலவிதோன்ருதாப்போலேயென்றபடி. "அறியாள்" என்றத்தால் வ்யாவ்ருத்தி (ஒக்கவித்யாதி) நித்ரையோடொக்கவிருக்கச்செய்தேயென்றபடி. "ஜஹௌ நித்ராம் ச தந்த்ரீம் ச" (ஜஹௌநித்ராம்சதந்த்ரீஞ்ச) என்று - கைங்கர்யவிரோதியென்று கைவிட்ட விளயபெருமாளேச்சொல்லுகிறது.

"நாயகன்வரும்" என்கிறதெளிவையும், நித்ரையில் வ்யுத்பத்தியில்லாமையையு மநுசந்தித்து வ்யாக்யாதாவினீடுபாடு (இவளுக்கித்யாதி) எங்குமொக்கவென்றது - நித்ரையிற்போலேயவன் வரவிலுமறியாமை யநுவர்த்திக்கப்பெற்றதில்லேயென்றபடி. கண்ணநீரைமாற்றுகைக்கு ஹேதுசொல்லுகிருள் (இவ்வாற்ருமையிலித்யாதி) பகைகொண்டாட-ப்ரதிபந்தகமாக. (இவ்வாற்ருமையில்) என்கிறவாக்யாநந்தரம் (இவளுக்கு) இத்யாதிவாக்யமநுசந்தேயம். "கைகளாலிறைக்கும்" என்கிறவளுடைய ஹார்த்தபாவம் (இதென்னவித்யாதி) எதத்விவரணம் (இதுதன்னுலித்யாதி) இயலும் -'நிறைவேறும். கடல்கொண்டவென்றது - கடலோடொத்தவென்றபடி. (கடல்கொண்டகண்ணீர்) என்கிறபாசுரம் திருவிருத்தத்தில், "கடல்கொண்டெழுந்தது" இத்யாதி. கையாலேயிறைக்கிறது ஸாஹஸமோவென்ன (கோகுளிலேயித்யாதி) கோகுள் - வ்ருக்ஷவிசேஷம். சப்தார்த்தம் (தன்கையாலேயித்யாதி) கீழே - அபரிச்சேத்யமாகையாலே யிறைத்துமுடியாதென் றருளிச்செய்து, போக்யமாயிருக்க வெறுக்கிறைக்கிருளென்று பாவாந்தரம் (ஜிமர்த்தமித்யாதி) "ஜிமர்த்தம் தவ நேத்ராப்யாம் வாரிஸ்ரவதி சோகஜம் । புண்டரீகபலாசாப்யாம் விப்ரகீர்ணமிவோதகம்" (ஜிமர்த்தம்தவநேத்ராப்யாம்வாரிஸ்ரவதிசோகஜம் । புண்டரீகபலாசாப்யாம்விப்ரகீர்ணமிவோதகம்) இதி ஸுந்தரகாண்டே ஸீதாம் ப்ரதிஹநுமான்.

"கண்ணநீர்கைகளாலிறைக்கும்" என்றவநந்தரம் "சங்குசக்கரங்கள்" இத்யாதி கதநத்துக்குபாவம் (கண்ணநீரையித்யாதி) "தாமரைத்தடங்கண்" என்ருப்போலே அவயவங்களேச்சொல்லாதே, திவ்யாயுதங்களேச்சொன்னதுக்குபாவம் (தவளவொண்சங்கித்யாதி) அதாவது - அவயவங்களோபாதி யிவையுமுத்தேச்யமென்றபடி. பெரியபெருமாள் த்விபுஜராயன்ரு விருப்பது, அவர்க்குச் சங்குசக்கரங்களுண்டோவென்ன (உகவாதவித்யாதிவாக்யத்வயம்) சங்குசக்கரங்களோடே வரவேணுமென்னுதே, "கைகூப்பும்" என்றதுக்குபாவம் (கூராராழியித்யாதி) "கிரீடிநம் கதிநம் சக்ரஹஸ்தமிச்சாமி த்வாம் த்ரஷ்டுமஹம் ததைவ । தேநைவ ரூபேண சதுர்புஜேந ஸஹஸ்ரபாஹோ பவ விச்வமூர்த்தே

தெ-ரு " (கிரீடிநம்கதிநம்சக்ரஹஸ்தமிச்சாமித்வாம்த்ரஷ்டுமஹம்ததைவ|தேநை வரூபேண சதுர்ப்புஜேநஸஹஸ்ரபாஹோபவவிஸ்வமூர்த்தே) இதி விஸ்வரூபதர்ஸ நாநந்தரோ அர்ஜுநஃ.

"சங்குசக்கரங்கள்" என்றவநந்தரம் "தாமரைக்கண்" என்றதுக்குபாவம் (அவ்வாழ்வார்களித்யாதி) விவரணம் (உன்தாமரையித்யாதி) தாமரைக்கண்ணென்று தளர்ந்ததுக்கு த்ருஷ்டாந்தம் (ராமமித்யாதி) " ஸாஹம் கதம் கரிஷ்யாமி தம் விநா ப்ரியதர்ஸநம் । ராமம் ரக்தாந்தநயநம் அபஸ்யந்தீ ஸுதுகிதா " (ஸாஹம்கதம்கரிஷ்யாமிதம்விநாப்ரியதர்ஸநம் | ராமம்ரக்தாந்தநயநமபஸ்யந்தீஸு துஃகிதா) இதி ஸுந்தரகாண்டே ஸப்தவிம்ஸே.

மேலுக்கவதாரிகை (தளருகிறதென்னித்யாதி) (போதுபோக்கிறுலோ) என்கிறவர்கள் தாய்மாராகில், " உன்னைவிட்டு " என்றது சேராதாகையாலே; தாய்மருக்தியாகிலு மீஸ்வரோக்தியாகவே ப்ரமித் துத்தரம் சொல்லுகிறுளொன்னுதல் (என்பர்கள்) என்றத்தை-பூஜாயாம் பஹுவசநமாக்கி, என்கிறவன் - அவன்றுடேயாய், அதுக்குத்தரம் - " உன்னைவிட்டு " என்றதென்னுதல். " திருவரங்கத்தாய் என்றத்தோடேகூட்டி " உன்னை " என்றதுக்குபாவம் (பரவ்யூஹேத்யாதி) "தமரைக்கண்" என்றத்தைக் கடாக்ஷித்து பாவாந்தரம் (உறக்கத்தாலே யித்யாதி அகப்பட்டது விலக்ஷணவிஷயத்திலேயன்றோ வென்னுமென்றபடி. விலக்ஷணவிஷயத்திலே யகப்பட்டாயாகில் நம்மை யென்செய்யச் சொல்லுகிறுயென்ன (உம்முடையவித்யாதி) வைலக்ஷண்யமாவது - கண்ணழகென்றுய், அது நமக்குத்தெரிமோவென்ன (உன்னைக் கண்ணுடியித்யாதி) கண்டாலென்செய்வோமென்ன (கண்டாயாகிலித்யாதி) கண்டாயாகில் - கண்ணுடிப்புறத்தி லுன்னைக் கண்டாயாலென்றபடி. பிரியாயென்றது - கண்ணுடியைப் பிரியாயென்றபடி.

" கைதொழாவிருக்கும் " என்றதுக்குபாவம் (மஹாப்ருதிவியித்யாதி) "கைதொழாவிருக்கும் - " கையாலேதொழாவாநிற்குமித்யர்த்தஃ " கை - கையாலே, தொழா- தொழாவி, இருக்கும் - அதுக்கும் சக்தையன்றியேநிர்வ்யாபாரையாயிருக்கும் " என்னையில் சப்தார்த்தம்.

கயலினுடைய சிவப்பைச்சொல்லுகிறவனுடைய ஹார்த்தபாவம் (அவ்வி லித்யாதி) விவரணம் (அவைதன்னிறமித்யாதி) " பாய்நீர் " என்றதுக்குபாவம் (நாரத்தையித்யாதிவாக்யத்வயம்) நாரம் - ஜலம். " செங்கயல் " என்றதுக்குபாவாந்தரம் (அக்கயலித்யாதி) உக்தார்த்தத்துக்குப்ரமாணம் (ஜலாதித்யாதி) " நசஸீதாத்வயாஹீநா " (நசஸீதாத்வயாஹீநா) இத்யாதி ஸ்லோகத்தடி.

இவளாற்றுமை யின்னபடிப்பட்டிருக்குமென்னுதே, "இவளிடையாட்டம்" என்றதுக்குபாவம் (ஏஹீத்யாதி) " ஏஹி பஸ்ய ஸரீராணி முநீநாம் பாவிதாத்மநாம் " (ஏஹிபஸ்யஸரீராணிமுநீநாம்பாவிதாத்மநாம்) இத்யாதி. படிகாரம். "இவள்திறத்து" என்றது - இவளளவிலென்றபடி. "ஏஹி" இத்யாதிக் தகதநபூர்வகமாக, இவள்காட்டின தின்னதென்னுமத்தையு மருளிச்செய்கிறுர் (ஸுகஸரீத்யாதி) " செங்கயல் " இத்யாதியையுங்கூட்டி " என்செய்கின்றுய் " என்கிறவனுடைய ஹார்த்தபாவத்தை யருளிச்செய்கிறுர் (உம்முடையவித்யாதி) என்றது - நாரத்துக்கு வாசகமாகையாலே, நாரமென்றது - ததீயஙபிப்ராயமாகும் ஸூசகம் ....

இரண்டாம்பாட்டு.

என்செய்கின்றாயென்றாமரைக்கண்ணாவென்னுங்கண்ணீர்மல்கவிருக்கு, மென்செய்கேனெறிநீர்த்திருவரங்கத்தாயென்னும்வெவ்வுயிர்த்துயிர்த்துருகு, முன்செய்தவினையேமுகப்படாயென்னுமுகில்வண்ணாதகுவதோவென்னு, முன்செய்திவ்வுலகமுண்டுமிழ்ந்தளந்தாயென்கொலோமுடிகின்றதிவட்கே.

ஆறாயிரப்படி.

(என்செய்கின்றாய்) என்னைத்தோற்பித் தடிமையாக்கின தாமரைக்கண்களையுடையவனே, அக்கண்களாலே யென்னைக் குளிரப்பார்த்தருள நினைத்தாயோ வில்லையோவென்னும். உன்னுடைய வவலோகநாபாவஜநித ஸந்தாபத்தாலே யக்கண்ணநீர் வெள்ளமெல்லாம் சோஷிக்கையாலே கரைக்குட்பட்ட கண்ணநீரையுடையளாய், ஒருசேஷ்டிதக்ஷமையன்றியே யிருக்கும். என்னுடைய சந்தாபத்தையெல்லாம் போக்குகைக்காகவன்றோ கோயிலிலே கண்வளர்ந்தருளிற்று, இஸ்ஸந்தாபமொன்றும் பொறுக்கமாட்டுகிறிலேன், என்செய்கேனென்னும். தன்னுடைய ஸந்தாபஜநித தீர்க்கோஷ்ண நிஶ்வாஸ பரம்பரைகளாலே யுருகாநிற்கும். ஈத்ருஶமான வ்யஸநத்தை யநுபவிக்கைக்கு ஜந்மாந்தரத்திலே யென்ன பாபத்தைப்பண்ணினேனோவென்னும். பரமோதாரனே, என்னுடையவபேக்ஷிதம் செய்யாதொழிகை யுன்னுடைய வௌதார்யத்துக்குப் போருமோவென்னும். நிர்ஹேதுகமாக லோகத்தைப்படைத்து ரக்ஷித்தருளுகிற பரமகாருணிகனே, இவளுக்கென்னாய்விளையுமோ வென்கிறாள் :..*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், நீ சர்வப்ரகாரரக்ஷகனாயிருக்க, இவளுடைய ப்ரகார மென்னாய்முடிகிறதென்கிறாள்.

என் - ப்ரதமத்திலே யென்னை யநந்யார்ஹையாக்கி. தாமரை - ஆசையைவிளைக்கும்படி யதிசயிதபோக்யமான. கண்ணா-கண்ணையுடையவனே. அநுபவபர்யந்தமாகப் பார்க்கநினைக்கிறாயோ, அவ்வளவிலே யொடியெறிந்திட்டுவைக்க நினைக்கிறாயோ, என்-என். செய்கின்றாய்-செய்யநினைக்கிறாய். என்னும்-என்னும். அதுக்கொருமறுமாற்றங்காணாமையாலே, அந்தஸ்தாபத்தாலே,அகவாயில்,கண்-கண். நீர்-நீர். மல்க-சுவறித்துளும்புமளவாம்படி. இருக்கும்-சஞ்சாரக்ஷமையன்றியே யிருக்கும். எறி-அலையெறிகிற. நீர்-நீரையுடைத்தான. திருவரங்கத்தாய்-கோயிலிலேஸந்நிஹிதனானவனே. உன்னைக்கிட்டுகைக்கு, சக்தனாய் சுலபனான நீயொன்றுஞ்செய்யாதிருக்க, அஶக்தையா யார்த்தையானநான். என் - எத்தை. செய்கேன் - செய்வேன். என்னும்-என்னும். இந்த வாகிஞ்சந்யத்துக்கும் முகங்காட்டாமையாலே, வெ-அந்தஸ்தாபத்தாலே வெவ்விதாம்படி. உயிர்த்துயிர்த்து-பலகாலும்மூச்சுவிட்டு. உருகும்-அப்பரிதாபத்தாலேயுருகாநிற்கும். இப்படி க்லேசிக்கைக்கடியாக, முன் - முன்பு. செய்த-நான்பண்ணிவைத்த. வினையே-கர்மமே. முகப்படாய்- முகந்தோற்றநில்லா

ய். என்னும் - என்று க்லேசகரமாகையாலே சேதநஸமாதியாலே சொல்லாநிற்கும். "அதுவுமவனிட்டவழக்கு" என்கிறதெளிவுபிறந்தவாறே, முகில்வண்ணா-ஜலஸ்த்தலவிபாகமற வுபகரிக்கும் மேகஸ்வபாவனானவனே. நீமுகங்காட்டாதிருக்குமது, தகுவதோ-அந்தவுபகாரத்துக்குத்தகுவதோ. என்னும்-என்னும். அந்தவுபகாரகத்வ பலமாம்படி, இ-இந்த. உலகம்-லோகத்தை. முன்-ப்ரதமத்திலே. செய்து-ஸ்ருஷ்டித்து. உண்டு - ப்ரளயத்திலேயுண்டு. உமிழ்ந்து-உமிழ்ந்து. அளந்தாய்-அந்யாபிமாநம் போம்படியளந்துகொண்டவனே. இவட்கு-உன்னையொழியச்செல்லாதபடியானவிவளுக்கு. என் - என்னுய். முடிகின்றதுகொலோ-முடியப்புகுகிறதோ.

இந்தவார்த்திக் கெல்லையுண்டாம்படி யுன்னுடைய ரக்ஷ்யவர்க்கத்திலே யிவளுக்கு மந்தர்ப்பாவமுண்டாகிறதோ, பாப்யமாய்விடும்படி யிவற்றின் புறத்தாளாம்படியாகிறதோ வென்றுகருத்து ....*

ஈடு - இரண்டாம்பாட்டு.

இப்பெண்பிள்ளையுடைய தசை யென்னாய் விளையக்கடவதென்கிறாள்.

(என்செய்கின்றாய்) ஆற்றாமை மிகமிக அவனைக்கேட்கு மித்தனையிறே. (என்தாமரைக்கண்ணாவென்னும்) ஒருநீர்ச்சாவியான பயிருக்கொருபாட்டம் வர்ஷிக்கக்கடவதன்றோ வென்கிறாள். "அவலோகநதாநேநபூயோமாம்பாலய" (அவலோகநதாநேநபூயோமாம்பாலய) என்னக்கடவதிறே. "தாமரைக்கண்ணென்றேதளரும்" என்றது; உணருகிறபோது கண்களை வாய்வெருவிக்கொண்டாயிற் றுணர்ந்ததும். கிட்டினசமயத்தில் "நானு மென்னுடைமையும் நீயிட்டவழக்கன்றோ" என்றது கண்ணாலேயிறே, அதிலேயிறே யிவளெழுதிக்கொடுத்தது.

கண்ணாலேநோக்கி யணைக்கும்படியைநினைத்து, அந்த பாவநாப்ரகர்ஷத்தாலே கலந்துபிரிந்தாப்போலே கண்ணீர்மல்கவிருக்கும்.

(என்செய்கேனித்யாதி) என்தாபமாறும்படி யவ்வலையேற்றிலேகொண்டுபோய்ப் பொகடவல்லிகோளே யென்னும். திருப்பொருனலில் நீர், பிரிந்தார்க்கு நிலாப்போலே * உபதப்தமாயிராநின்றதுபோலே. (என்செய்கேன்) உன்னைக்கிட்டுகைக்கு நான்செய்வதென்.

அப்போதே கிட்டப்பெறாமையாலே, "ஆசைப்பட்டநா மழகிதாகப்பெற்றோம்" என்று நெடுமூச்செறியாநிற்கும். [தஹந்தீவநிஶ்வாஸைர்வ்ருக்ஷாந் பல்லவதாரிண:] [தஹந்திமிவநிஶ்வாஸைர்வ்ருக்ஷாந்பல்லவதாரிண:] நெடுமூச்சாலே தன்பகையறுக்கப் பாராநின்றாள். பல்லவதாரிகளாயிருக்கை யிப்போ திவளுக்குப்பகையிறே, ஒருபடிப்படநின்று நலிகிறபடியிறேயவை. ராக்ஷஸிகளுறங்கும்போதுமுண்டிறே, உருவவிப்படியே நிற்கிறவித்தனையவை. (உருகும்) உருகுகிறபடியே நிற்குமத்தனை. இனிநெடுமூச்செறிகைக்கு தார்மியுமில்லையோ வென்னும்படியுருகும். வெவ்விதாகப் பலகால் நெடுமூச்செறிந்து, அவ்வுஷ்ணத்தாலே யுருகாநிற்கும்.

(முன்செய்தவினையே) வலிக்கைக்கு விரகுபார்க்கிறபடி. நான்முன்புபண்ணினபாபமே, என்முன்னேவந்து நிற்கவல்லையேயென்னும். நீ முகங்காட்டினாயாகில், "தாமரைக்கண்ணா - என்செய்கின்றாய்" என்று அவனைக்கேளாதொழியலாயிற்றே. "நான்செய்தவினையின்பயனிதுவானபின்பு நாமாரைவெறுப்பது" என்றிருக்கலாயிற்றே. ஸ்ரீஜநகராஜன்றிருமகளுக்கு மிவர்க்குமுள்ள தொன்றாயிற்று; "நம்மையவனாலே" என்றும், "தீமைதந்தாமாலே" என்றுமாயிற்றிருப்பது. "மமைவ து³ஷ்க்ருதம் கிஞ்சிந்மஹத³ஸ்தி ந ஸம்ஶய:" (மமைவதுஷ்க்ருதம்கிஞ்சிந்மஹதஸ்திந ஸம்ஶய:) என்றாளிறே.

(முகில்வண்ணாதகுவதோவென்னும்) நான்பண்ணினபாபம் கிடக்கிடும், கர்மாநுகுணமாகவோ நீர் காரியஞ்செய்யுமது. (தகுவதோ-சேருமோவென்றபடி.) ஜலஸ்தலவிபாகம்பாராதே நீர்வர்ஷிக்கு முமுடைய வௌதார்யகுணத்துக்குப் போருமோவென்னும். "ஒருக்ரியாமாத்ரத்துக் கித்தனையிருண்டோ, நான்காணிதுவிளைத்தேன்" என்றவ்வடிவைக்கொடுவந்து காட்டவல்லையேயென்னும். இது பக்திகார்யமேயாகிலும், பகவதநுபவவிரோதியாகையாலே - பாபமென்கிறது. அநிஷ்டாவஹம்-பாபமாமித்தனையிறே. (தகவிதோ என்றபாடத்தில்) நான்பண்ணினபாப மெனக்கநுபவிக்கவேணுமாகி லும்முடைய தகவுக்கு விஷயமின்னதென்னும். முன்செய்தவினையே முகப்படாயென்கிறவிடம் - "க்ரியை அத்ருஷ்டரூபத்தாலே நின்று பலந்தரும்" என்பார்வார்த்தை; முகில்வண்ணா என்கிறவிடம் - "ஒருபரமசேதநனுடைய வநுக்ரஹமேபலப்ரதமாவது" என்றிருக்கும் வேதாந்திகள்வார்த்தை. "ஸதோ³ஷோ வாபி"ராயிருப்பார் ராமகோஷ்டிக்காளல்லர்" என்கிறமஹாராஜர் தொடக்கமானார்வார்த்தைபோலே கீழ்ச்சொன்னது; "தோ³ஷோ யத்³யபி தஸ்ய ஸ்யாத்" (தோஷோயத்யபிதஸ்யஸ்யாத்) என்ற ராமஸித்தாந்தம்போலே மேல். "மாம் நமஸ்குரு" (மாம்நமஸ்குரு) என்றாப்போலே கீழ்ச்சொன்னது; "மா ஶுச:" (மாஶுச:) என்றாப்போலே (தகவிதோ) என்கிறது.

"முகில்வண்ணா" என்கைக்கு, நம்மௌதார்யமெங்கே பலிக்கக்கண்டு சொல்லுகிறதென்ன (முன்செய்தித்யாதி) நிர்ஹேதுகமாக முன்பு ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளைப்பண்ணி "தகவிதோ" என்கைக் குபகரணமில்லாதவன்று இத்தையுண்டாக்கி நோக்கினாய் நீயன்றோ. கரணகளேபரவிதுரமான வித்தைவெறுமுன் க்ருபையாலேயுண்டாக்கினா யித்தனையன்றோ. உண்டாக்கிவிட்டவளவேயோ; ப்ரளயாபத்திலே வயிற்றிலே வைத்துநக்ஷித்து, உள்ளேகிடந்து நோவுபடாதபடி புறப்படவிட்டு, எல்லைநடந்துமீட்டுக்கொண்டு, சர்வவிதரக்ஷணமும் பண்ணிற்றிலையோ. (என்கொலோமுடிகின்றதிவட்கே) இவளளவில் தர்மிலோபமேயோ

பலிக்கப்புகுகிறது. நீர் ரக்ஷிக்கிறபூமிக்கு மிவளுக்கு மொருவாசியுண்டா கநினைத்திருக்கிறிலீரோ. (அநந்யபராயா யநந்யகதியா யபலையாயிருக்கி றவள்;) இவளுடையகர்மமோ, உம்முடைய வநுக்ரஹமோ பலிக்கப்பு குகிறது. (இவளிடையாட்டத்தில் நீர் செய்யப்பார்த்தபடி யெங்ஙனே யென்னுதல், இவளுடையதசை யென்னாய்விளையக்கடவதென்னுதல்.).*

ஜீயர் அரும்பதம்.

இரண்டாம்பாட்டு (என்செய்கின்றாயித்யாதி) "என்கொலோமுடிகின்றதி வட்கு" என்றத்தைக்கடாக்ஷித்தவதாரிகை (இப்பெண்பிள்ளையித்யாதி)

தலைமகள் "என்செய்கின்றாய்" என்று அவனைக்கேட்கிற தென்னென்ன (ஆற்றாமையித்யாதி) "தாமரைக்கண்ணா" என்கிறமகளுடையஹார்த்தபாவம் (ஒரு நீர்ச்சாவியித்யாதி) ஒருநீர்ச்சாவி - ஒருநீருக்காகப்பட்டுப்போகிறசாவி. ஒருபாட்ட ம்-ஒருபாறல். அவன்கடாக்ஷம் ப்ரார்த்யமோவென்ன (அவலோகநேத்யாதி) "தேவ ப்ரபந்நார்த்திஹர ப்ரஸாதம் குரு கேஶவ । அவலோகநதாநேந பூயோ மாம் பாலயாவ்யய" (தேவப்ரபந்நார்த்திஹரப்ரஸாதம்குருகேஶவ। அவலோ கநதாநேந பூயோமாம்பாலயாவ்யய) இதிப்ரநமேம்மே. பரிதாபஹேதுவு மாஶ்வா ஸஹேதுவு மிதுவேயென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (தாமரைக்கண்ணென்றே யித்யாதி) இதுக்குக்கருத்து-அங்கு "தளரும்" என்று - மோஹத்தைச்சொல்லி, இ ங்கே "என்தாமரைக்கண்ணா" என்கையாலே - இதுணர்த்தியில் வார்த்தையென்கி றதென்று. "இது - ஸந்திக்தம்" என்றும் சொல்லுவர்கள். "என்" என்றதுக்கு பாவம் (கிட்டினவித்யாதி வாக்யத்வயம்)

"என்தாமரைக்கண்ணா" என்றவநந்தரம், "கண்ணீர்மல்கவிருக்கும்" என் றதுக்குபாவம் (கண்ணாலேநோக்கியித்யாதி)

'எறிநீர்" என்றதுக்குபாவம் (என்தாபமித்யாதி) "எறிநீர்" - அலையெறிகிற நீரென்றபடி. அலையேற்றிலே - அலையெறிதலிலே. இங்கே திருப்பொருநலுண்டே யென்ன (திருப்பொருநலித்யாதி) திருப்பொருநல் - திருத்தாம்ரபர்ணி. "உபதப்தோதகா தந்வீ பல்லவா ஶிஶிராம்பஸ" (உபதப்தோதகாநத்யஃபல்லவாநி ஸராம்ஸிச) இத்யாதி.

"என்செய்கேன்" என்றவநந்தரம், "வெவ்வுயிர்த்துயிர்த்துருகும்" என்ற துக்குபாவம் (அப்போதேயித்யாதி) வெவ்விதாம்படி பலகாலும் நெடுமூச்செறிந் துருகாநிற்குமென்று சப்தார்த்தம். ஸோஷ்ணமாக நெடுமூச்செறிகிறதுக்கு ப்ர மாணம் (தஹந்தீமித்யாதி) "தஹந்தீமிவ நிஶ்வாஸைர் வ்ருக்ஷாந் பல்லவதாரிண: । ஸங்காதமிவ ஶோகாநாம் து:கஸ்யோர்மிமிவோத்திதாம்" (தஹந் தீமிவநிஶ்வாஸைர்வ்ருக்ஷாந்பல்லவதாரிண:। ஸங்காதமிவஶோகாநாம்து:கஸ்யோர் மிமிவோத்திதாம்) இதி ஸுந்தரகாண்டே. "தஹந்தீம்" (தஹந்தீம்) என்றதுக்கு பாவம் (நெடுமூச்சாலேயித்யாதி) பகைபாவது - வ்ருக்ஷங்கள். "தாரிண:" (தா ரிண:) என்கிற வர்த்தமாநத்துக்கு பாவமாதல், "தாரிண:" (தாரிண:) என்ற துக்கு தாச்சில்யே இனி ப்ரத்யயமாக்கி பாவமாதல் (ராக்ஷஸிகளித்யாதி)

உருகுகிற சமயத்திலே "முன்செய்தவினையே முகப்படாய்" என்கிறதென் னென்ன (பலிக்கைக்கித்யாதி) சப்தார்த்தம் (நான் முன்பித்யாதி) நான் முன்னே

நின்றால் பெறுகிறதென்னென்ன (நீ முகங்காட்டிலுயாகிலித்யாதி) விவரணம் (நான்செய்த வித்யாதி) தன்பாபமாகச் சொன்னாருண்டோவென்ன (ஸ்ரீஜநகராஜனித்யாதிவாக்யத்வயம்) பிராட்டி யப்படிசொன்னாளோவென்ன (மமைவேத்யாதி) “[illegible] । [illegible]” (மமைவதுஷ்க்ருதம்கிஞ்சிந்மஹதஸ்திநஸம்ஶய॥ ஸமர்த்தாவபிதௌயந்மாம்நாவேக்ஷேதேபரந்தபௌ) இதி ஸுந்தரகாண்டே.

“ தகுவதோ ” என்றது - போருமோவென்றபடி. நீ செய்த கர்மபலமாகிலது நீயே யநுபவிக்கவேண்டாவோ, “ என்செய்கின்றாய் ” என்றென்னைக்கேட்கிறதென்னென்ன (நான் பண்ணினவித்யாதி) “ வினை ” என்றத்தைக்கடாக்ஷித்து, “ வண்ணம் ” என்றதுக்கு - வடிவாக வர்த்தாந்தரம் (ஒரு க்ரியாமாத்ரத்துக்கித்யாதி) இவ்வாற்றாமைக்கடி பக்தியன்றோ, அத்தை பாபமென்பானென்னென்ன (இது பக்திகார்யமே யித்யாதி) எத்தனையென்றாலும், ப்ரேமபலமாய்வந்தத்தை பாபபலமென்னலாமோவென்ன (அநிஷ்டாவஹமித்யாதி) “ தகுவதோ ” என்றன்றிக்கே, “தகவிதோ” என்று பாடாந்தரமாக்கி, அதுக்கர்த்தம் (நான்பண்ணினவித்யாதி) தகவுக்குவிஷயமின்னதென்னுமென்றது - தயைக்குவிஷயமின்னதென்றருளிச்செய்யவேணுமென்று சொல்லுமென்றபடி. இந்தபாடத்தில், ஓகாரம்-பாதபூரணார்த்தம். தகவு-தகவுக்கு. இது-விஷயமிதென்றபடி. என்னவேணுமென்றத்யாஹாரியம். “முன்செய்தவினையேமுகப்பட்டாய்” என்று-கர்மம்பலப்ரதமாகச் சொன்னவிடம் பூர்வபக்ஷமாய், “ முகில்வண்ணாதகவிதோ ” என்று ஈஶ்வரன் பலப்ரதனாகச் சொன்ன விடம் சித்தாந்தமாயிருக்கிறதென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (முன்செய்தவித்யாதிவாக்யத்வயத்தாலே) அத்ருஷ்டரூபத்தாலே பலந்தருமென்பார்-பூர்வமீமாம்ஸகர். வேதாந்திகளாவார்-வ்யாஸாதிகள். இந்தபூர்வபக்ஷ ஸித்தாந்தங்களுக்கு த்ருஷ்டாந்தத்வயம் (சதோஷராயித்யாதிநாலுவாக்யத்தாலே) அதாவது-மாஹாராஜர்வார்த்தையை பூர்வபக்ஷமாக்கிப்பெருமாள் “ [illegible] ” (தோஷோயத்யபி) என்றத்தை சித்தாந்தமாக்கினாப் போலேயும், “ [illegible] ” (மாம்நமஸ்குரு) என்றபக்தியைபூர்வபக்ஷமாக்கி “ [illegible] ” (மாமேகம்) என்றப்ரபத்தியை சித்தாந்தமாக்கினாப்போலேயும், “ முன்செய்தவினையேமுகப்பட்டாய் ” என்றவசேதநக்ரியை பலப்ரதமென்றத்தை பூர்வபக்ஷமாக்கி “ முகில்வண்ணாதகவிதோ ” என்றபரமசேதநன் பலப்ரதனென்றத்தை சித்தாந்தமாக்கினாரென்றபடி.

மேலுக்கவதாரிகை (முகில்வண்ணாவித்யாதி) கீழ்வாக்யத்தாலே பலிதம் (கரணகளேபரேத்யாதி)

“ உருகும் ” என்றத்தைக்கடாக்ஷித்து, “ கொலோ ” என்கிற ஸ்வரத்துக்குபாவம் (இவளளவிலித்யாதி) “ இவட்கு ” என்றதுக்குபாவம் (நீர் ரக்ஷிக்கிறவித்யாதி) “ முன்செய்தவினை ” என்றத்தையும் “ முகில்வண்ணா ” என்றத்தையுங்கடாக்ஷித்து, “ கொலோ ” என்றதுக்குபாவாந்தரம் (இவளுடையவித்யாதி)

“ என்செய்கின்றாய் ” என்றது - தலைமகள் வார்த்தையாதல், திருத்தாயார் வார்த்தையாதல். திருத்தாயார்வார்த்தையானபோது, கீழேயும் “ என்செய்கின்றாய் ” என்றுவைத்து, இங்கேயும் “ என்செய்கின்றாய் ” என்றால் புனருக்தியன்றோவென்ன (ஆற்றாமை) இத்யாதியடியில் வாக்யம் என்று சங்கதி. தலைமகள்வார்த்தையென்றதுக்கு நியாமகம் - (நீமுகங்காட்டிலுயாகில் தாமரைக்கண்ணா வென்செய்கின்றாயென்று அவனைக் கேளாதொழியலாயிற்றே) என்றவாக்யம்.

என்றுமனைக்கண்ணா-என்செய்கின்றாயென்று தொடங்கி, அளந்தாய்-இவட்கு-என்கொலோமுடிகின்ற தித்யந்வயः ....*

மூன்றாம்பாட்டு.

வட்கிலளிறையுமணிவண்ணாவென்னும்வானமேநோக்குமையாக்கு
முட்குடையசுரருயிரெல்லாமுண்டவொருவனேயென்னுமுள்ளுருகுங்
கட்கிலீயுன்னைக்காணுமாறருளாய்காகுத்தாகண்ணனேயென்னுந்
திட்கொடிமதிள்சூழ்திருவரங்கத்தாயிவடிறத்தென்செய்திட்டாயே.

ஆறாயிரப்படி.

(வட்கிலளிறையும்) உன்னைக் காணப்பெறாத வ்யஸநத்தாலே, தன்னுடைய ஸ்வரூபநிரூபகமான ஸ்த்ரீத்வகுணங்களையு மிழந்தாள். பின்னை நெடும்போதுகூட லப்தஸம்ஜ்ஞையாய், நிரதிசயௌஜ்ஜ்வல்யசௌலப்யாதி கல்யாணகுணங்களை யுடையவனேயென்னும். "ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கு வந்து தோற்றினாப்போலே பெரியதிருவடி திருத்தோளிலே யேறியருளி வந்து தோன்றுவதுகாண்" என்றாகாசத்தைப்பார்த்துக்கொண்டிருக்கும். அங்குங்காணாதொழிந்தவாறே மயங்கும். * சிறோணஸம்ஜ்ஞாம்ப்ரதிலப்ய, ஆஸ்ரிதப்ரதிகூலரா யதிபலபராக்ரமரானவசுரரையெல்லாம் நிரஸித்து நிருபமமான சாமர்த்யத்தையுடையவனே, உன்னைக்காண்கைக் கென்பக்கலுள்ள ப்ரதிபந்தகத்தையெல்லாம் போக்கியருளாயென்னும். பின்னையு மவன் வரக்காணாமையாலே நெஞ்சுருகும். "ப்ராக்ருதமான சக்ஷுஸ்ஸுக்களுக்கு நானொருநாளும் விஷயமாகேன்" என்றுனக்கொரு நிர்ப்பந்தமுண்டாகில், நானொருத்தியு முன்னைக்காணும்படி க்ருபைபண்ணாயென்னும். அங்ஙனே செய்யக்கடவதோ வென்னில்; "உன்னைக்காணவேணும்" என்றாசைப்பட்டார் காண்கைக்காகவன்றோசக்ரவர்த்தித்திருமகனும் ஸ்ரீவசுதேவர்திருமகனும் பிறந்தருளிற்றென்றுசொல்லும். இவளோடே ஸம்ஸ்லேஷிக்கைக்காக த்வஜபதாகாலங்க்ருதமான ப்ராகாரங்களாலே பரிவ்ருதமான கோயிலிலே கண்வளர்ந்தருளுகிற நீ, இவள்திறத்தென்செய்ய நினைத்தருளினாயென்கிறாள்.......................*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், ஆஸ்ரிதவிரோதி நிவர்த்தகமான வவதாரங்களை யுடையையாய் வைத்து, இவளிப்படி யார்த்தையாகைக் கென்செய்தாயென்கிறாள்.

இறையும் - ஏகதேசமும். வட்கு-தனக்கு நிரூபகமான லஜ்ஜையை. இலள்-உடையளாயிருக்கிறிலள். அத்தாலே யென்முன்பென்று பாராதே, மணிவண்ணா - முடிந்தாளலாம்படியான நீலரத்ந ஸ்வபாவனாய்க்கொண் டெனக்கு பவ்யனானவனே. என்னும் - என்னும். இவ்வார்த்த த்வநிக்கு வருவுதியென்று, வானமே-ஆகா

சத்தை. நோக்கும் - பார்க்கும். காணாமையாலே, மையாக்கும் - மயங்கும். ப்ரதிபந்தகத்தாலே விளம்பித்ததென்றுமைக்கு, உட்கு - மிடுக்கை. உடை - உடையரான. அசுரர் - ஆசுரப்ராக்ருதிகளினுடைய. உயிர் - ப்ராணன்களை. எல்லாம்-எல்லாம்-நிரவசேஷமாக. உண்ட - க்ரஸித்த. ஒருவனே - ஏகவீரனே. என்னும் - என்னும். அந்த விரோதிநிரஸந சாமர்த்யத்தை நினைத்து, உள் - உள். உருகும் - உடையாற்கும். "𑌨 𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌾 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿" (நசக்ஷுஷா பஶ்யதி) என்கிறபடியே, கட்கு - கண்ணுக்கு. இலீ - காணவரிய நீ. உன்னை - கண்டல்லது தரிக்கவொண்ணாதவுன்னை. காணுமாறு - காணும்படி. அருளாய் - க்ருபைபண்ணியருளவேணும். நீ காட்ட நினைத்தபோது, காகுத்தா - "𑌪𑍁𑌂𑌸𑌾𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌪𑌹𑌾𑌰𑌿𑌣𑌮𑍍" (பும்ஸாம்த்ருஷ்டிசித்தாபஹாரிணம்) என்றும், "𑌤𑌦𑍍𑌰𑍂𑌪𑌵𑌿𑌸𑍍𑌮𑌿𑌤𑌾𑌕𑌾𑌰𑌾𑌃" (தத்ரூபவிஸ்மிதாகாரா:) என்றும் நாட்டோடு காட்டோடு வாசியற தர்ஶிப்பித்தசக்ரவர்த்தி திருமகனும். கண்ணனே - "𑌦𑌾𑌸𑌾𑌮𑌾𑌵𑌿𑌰𑌭𑍂𑌤𑍍" (தாஸாமாவிரபூத்) என்று இடைச்சிகளுக்கும் வடிவைக்காட்டின க்ருஷ்ணனும் மவதரித்தவனல்லையோ. என்னும் - என்னும். அதுக்குப் பிற்பட்டாரு மிழவாதபடி, திண்-திண்ணியதாய். கொடி - கொடியையுடைத்தான. மதிள் - மதிள். சூழ் - சூழ்ந்த. திருவரங்கத்தாய் - கோயிலிலே சந்நிஹிதனானவனே. இவள்திறத்து - இவளிப்படி யார்த்தையாகைக்கு. என்செய்திட்டாய் - நீ செய்ததென்.

வடிவழகிப்படி மதிமயக்குமோவென்று கருத்து. வட்குதல் - வெட்குதலாய், லஜ்ஜை. உட்கு - மிடுக்கு...*

ஈடு - மூன்றாம்பாட்டு.

இவளிவ்வவஸ்தையை ப்ராப்தையாகைக் கிவளிடையாட்டத்தில் நீர் செய்த தென்னென்கிறாள்.

(வட்கிலளிறையும்) இதுக்கு - ஜீயரருளிச்செய்வது - " இவள்முடிந்தாள்" என்று. (வட்கென்று - லஜ்ஜை) லஜ்ஜையையிட்டிறே ஸ்த்ரீத்வத்தையறிவது. ஸ்வரூபத்தைப் பற்றிவரும் குணம்போனால்ஸ்வரூபமும் போயிற்றாமத்தனையிறே, நிரூபகத்தையொழிய நிரூப்யஸித்தியில்லையே. இவள் லஜ்ஜை குடிபோனமைக்குஸூசகமென்னென்னில் (மணிவண்ணவென்னும்) பர்த்ருநாமக்ரஹணம் பண்ணாநின்றாள். பெற்றதாய் முன்னே வடிவழகைச் சொல்லாநின்றாள். நான் கேட்டாலும் மறைக்குமத்தைத்தான் வெளியிடாநின்றாள். காமிநி யாசைப்படுவது வடிவழகையிறே, தானகப்பட்ட துறையைச் சொல்லாநின்றாள். மெய்யேநினைத்து, மெய்யே சொல்லி, மெய்யே யநுபவிக்கை யிவர்க்கு ப்ரக்ருதியாய்விட்டதே!; " உன்சிந்தமுந்திருமூர்த்தியும் சிந்தித்தேத்திக் கைதொழவே யருளெனக்கு " என்று அவன்பாடிவள்வேண்டிக்கொள்வது மிதுவேயிறே. (மணிவண்ணவென்னும்) வடிவழகைச்சொல்லுவது, சௌலப்யத்தைச்சொல்லுவதாகாநின்றாள். "𑌅𑌦𑍃𑌷𑍍𑌟𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑍍𑌯𑌸𑌨𑌾𑌂 𑌦𑍁𑌃𑌶𑍀𑌲𑌾𑌮𑌸𑍍𑌵𑌿𑌨𑍍𑌨𑌾𑌂 𑌤𑍇𑌨 𑌦𑍁𑌃𑌖𑍇𑌨 𑌰𑍁𑌦𑌤𑍀 𑌨𑍈𑌵 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑌭𑍍𑌯𑌭𑌾𑌷𑌤" (அத்ருஷ்டபூர்வவ்யஸநாம்துஸ்ஸீலாமஸ்விந்நேந து:கேநருததிநைவமா கிஞ்சிதப்ரவீத்)

என்று, எல்லாதசையிலும் வாய்விடக்கடவதன்றிக்கே யிருப்பதொன்றி
றே இது.

(வானமேநோக்கும்) "மணிவண்ணா!" என்கிற வார்த்தை த்வநி
கேட்டிருக்க க்ஷமனல்லன், த்வநிவழியே ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்குவந்து
தோன்றினாப்போலே தோன்றியருளுமென்று ஆகாசத்தையே பாராநிற்
கும். "[illegible]" (பாயாப்தகபந்த:) என்கிறவதுக்கு மவ்
வருகேயிறே யிவளுடைய் தசை.

அங்கு வந்து தோற்றக் காணாமையாலே, மையாக்கும் - மயங்கா
நின்றாள். அறிவுகெடாநின்றாள்.

மயங்கநிருமோ விரோதி கனத்திருக்கிலென்ன (உட்குடையித்
யாதி) நான் வரப்பார்த்தால் ப்ரதிபந்தகமுண்டத்தனையல்லது, நீயே வ
ரப்பார்த்தால் நிவாரகருண்டோ. உட்கெனறு - மிடுக்கு. எதிரிகள் மிடு
க்கருமாய் பலருமாமத்தனையன்றோ வேண்டுவது நரியச்செய்கைக்கு. (உ
ண்ட) "[illegible]" (பௌஜநார்த்தக:க்ருத்த:) என்
கிறபடியே. (ஒருவனை யென்றும்) வடிவழகுக்குப் போலி யுண்டாகி
லும் வீரத்துக்குப் போலி சொல்லலாவதில்லை. (உட்குடை யித்யாதி)
தான் வீரபத்நியென்னுமிடம் தோற்றச் சொல்லாநின்றாள். "[illegible]" (த்வம்நிசம்ஸவத்ஸம்ருத:) என்னுமவளிறே.

(உள்ளுருகும்) "என்னாருறையுண்டாயிறக்கிறேன்" என்றுசி
திலையாம். விளம்பஹேதுவின்றிக்கே யிருக்க, பலியாதொழிந்தவாறே நீ
ர்ப்பண்டம்போலே யுருகும்.

உருகுங்காட்டி லநிந்த்ரியவஸ்து கண்ணுக்கிலக்காமோ வென்பார்
களே ; அருளாலே பெறுவார்க் கங்ஙனொரு நியதியுண்டோவென்னுமா
யிற்றிவள். "[illegible]" (நசக்ஷுஷாபச்யதி) என்கிறது-
தாந்தாமேகாண விழிவார்க்கு ; "[illegible]" (தஸ்யைஷஆத்மாவிவ்ருணுதேதநும்ஸ்வாம்) என்று-அ
வன்தானேகாட்டு மன்றருமையில்லை. அர்ஜுநாதிகளுக்கு திவ்ய சக்ஷு
ஸ்ஸைக்கொடுத்துக்காட்டிற்றிலையோ. (கட்கிலி) கண்ணுக்கிலியென்றப
டி. (உன்னைக்காணுமாறருளாய்) உன்னைக்காணவரிது ஸ்வயத்நத்தாலே
பெறவிருப்பார்க்கன்றோ, உன்னருளடியாகக் காண்பார்க்குமரிதோ. அ
ருளாலே நாமார்க்குக்காட்டினோமென்ன (காகுத்தா) "[illegible]" (ரூபௌதார்யகுணை:) என்றும் "[illegible]" (ரூபம்ஸம்ஹநநம்லக்ஷ்மீம்) என்றும், நாகரிகர்க்கும் வநவா
ஸிகளுக்கும் காட்டிக்கொடு திரிந்திலையோ. ஒருகால் செய்ததுகொண்
டோவென்ன (கண்ணனே) ஸஜாதீயைகளான பெண்களுக்குன்னைக்கா
ட்டிற்றிலையோ. [[illegible]] [தாஸாமாவிரபூத்] ஒருநீர்ச்

சாவியிலே யொருபாட்டம் மழைவிழுந்தாப்போலேயிருக்கை. [ஶ்யாமா நவயௌவநா] [ஶ்யாமமாநமுகாம்புஜ:] அவர்கள் முன்னேதோற்றி னபின்பு வடிவில்பிறந்தசெவ்வி. [பீதாம்பரதரஸ்ஸ்ரக்வீ] [பீதாம்பரதரஸ்ஸ்ரக்வீ] பெண்கள்நெஞ்சில் மறத்தைமாற்றுவது, பரிவட்டவாய்ப் பையும் தோளில் மாலையையுங்காட்டியாயிற்று. [ஸாக்ஷாந்மந்மதமந்மத:] [ஸாக்ஷாந்மந்மதமந்மத:] காமன்கையிலே நாடுபடுமத்தைக் காமன்றான் படும்படியிருக்கை.

(திட்கொடியித்யாதி) அவதாரகாலத்தி லுதவிற்றிலீரோவென்ன; அவதாரகாலத்தி லுதவப்பெறுதா ரிழவுதீர்க்கவன்றோ விங்குவந்துசாய் ந்தருளிற்று. உகந்தார்க்குக் காட்சிகொடுக்கக் கொடிகட்டிக்கொண்ட ன்றோ கிடக்கிறது. திண்ணியமதிளென்னுதல், திண்ணியகொடியென்னு தல். அவிழ்ந்துக்கட்டாத கொடியென்கை. "வருவாரெல்லாரும்வாருங் கோள்" என்றுகட்டினகொடி. (இவள்திறத்தென்செய்திட்டாயே) இவளி ப்படிபிச்சேற வென்னமருந்திட்டாய். அவளிவளறியாதபடி யொருமுக்த் தாலே மருந்திடுமே. "மையலேற்றிமயக்க வுன்முகம் மாயமந்திரந்தா ன்கொலோ" என்று, தன்முகத்தைக்காட்டுகையிறே யவன்மருந்திடுகை யாவது. இவள்கேட்கிறதென்னென்னில்; அதுவாகிலதுக்கு ப்ரதிக்ரியை யாக, "த்ரைலோக்யராஜ்யம்ஸகலம் ஸீதாயா நாப்நுயாத்கலாம்" (த் ரைலோக்யராஜ்யம்ஸகலம் ஸீதாயாநாப்நுயாத்கலாம்) என்கிறவிவளைய வன்முன்னேநிறுத்தி, இவள்பட்டதெல்லா மவனைப்படுத்துவாளாக நி னைக்கிறாள்.

ஜீயர் அரும்பதம்.

மூன்றும்பாட்டு. (வட்கித்யாதி) "வட்கிலள்" என்று தொடங்கி, "கண்ண னேயென்னும்" என்றுமளவாக விவளுக்குப்பிறந்த வவஸ்தைகளையெல்லாம் விவ க்ஷித்து (இவளிவ்வவஸ்தையை) என்கிறார். "இவள்திறத்தென்செய்திட்டாய்" என்றத்தைத் டாக்ஷித்தருளிச்செய்கிறார் (ப்ராப்தையாகைக்கித்யாதி)

"வட்கிலளிறையும்" - அல்பமும் லஜ்ஜையில்லாதவளிதிசப்தார்த்த:. வட் கு-லஜ்ஜை. "முடிந்தாள்" என்கிறதென்கொண்டென்ன (லஜ்ஜையையித்யாதி) வி வரணம் (ஸ்வரூபத்தையித்யாதி) அதெங்ஙனேயென்ன (நிருபகத்தையித்யாதி) "ம ணிவண்ணா" என்றதுக்கு ருடியைப்பற்றபாவம் (பர்த்ருநாமேத்யாதி) பர்த்ருநாம க்ரஹணம்பண்ணுகையாவது - ஸம்ஶ்லேஷத்திலபேக்ஷைதோற்றும்படி யவன்நாம த்தைச்சொல்லுகை. யோகத்தைப்பற்றபாவம் (பெற்றதாயித்யாதி) பெற்றதாய் முன்னேசொல்லவொண்ணாதோவென்ன (நான்கேட்டாலுமித்யாதி) ஸ்வரூபகுண ங்களிருக்க வடிவழகைச்சொல்லுவானென்னென்ன (காமிநியித்யாதி) விவரணம் (தாணகப்பட்டவித்யாதி) அகப்பட்டதுறையிதுவென்கைக்கு நியாமகமேதென்ன; ப்ரமாணங்காட்டுவாராக பீடிகை (மெய்யேயித்யாதி) மெய்யென்று - வடிவும், சத்யமும். ப்ரக்ருதியாய் விட்டபடியெங்ஙனேயென்ன; ப்ரமாணம் (உன்சின்னமு

மித்யாதி) மணியினுடைய ஸ்வபாவத்தையுடையவனேயென்று சப்தார்த்தம். "வண்ணம்" என்று - அழகாதல், சௌலப்யமாதல்; உபயத்தையு மருளிச்செய்கிறார் (வடிவழகையித்யாதி) தான்கேட்டாலும் மறைக்கும்படி வடிவழகு வாய்விடக்கூவுவதன்றோவென்ன (அத்ருஷ்டபூர்வேத்யாதி) அயோத்யாகாண்டே தஸரதம்ப்ரதி ஸுமந்த்ர꞉. இதுவென்றது - வடிவழகாதல், லஜ்ஜையாதல்.

"மணிவண்ணா" என்றால் வாராதிருக்க, "வானம்" என்பானென்னென்ன (மணிவண்ணாவித்யாதி) ஸ்ரீகஜேந்த்ராழ்வானைப்போலே யிவளுக்காபத்துண்டோவென்ன (பரமபதமித்யாதி) "[illegible]" (பரமபதமாபன்னோமனஸாசிந்தயத்தரிம்) இத்யாதி.

மேலுக்கவதாரிகை (மயங்கவித்யாதி) "அசுரருயிரெல்லாமுண்ட" என்றதுக்குபாவம் (நான்வரப்பார்த்தாலித்யாதி) "உட்குடை" என்றும், "அசுரர்" என்றும் சொல்லுகிறதுக்குபாவம் (எதிரிகளித்யாதி) போக்கினுனென்னுதே, "உண்ட" என்றதுக்குப்ரமாணம் (பயாவித்யாதி) ப்ரதமேம்ஸே ஏகோநவிம்ஸே ப்ரஹ்லாதசரிதே, "[illegible] ।[illegible]" (ஹ்ருதயஸ்த்தஸ்ததஸ்தஸ்யதம்வாயுமதிஸோஷணம் । பபௌஜநார்த்தந꞉க்ருத்தஸ்ஸயயௌபவந꞉க்ஷயம்.) "மணிவண்ணா" என்றத்தைக்கடாக்ஷித்துபாவம் (வடிவழகுக்கித்யாதி) "உட்குடையசுரர்" என்று போரப்பொலியச்சொல்லி, "உண்டவொருவன்" என்றதுக்குபாவம் (தான்வீரபத்நியித்யாதி) அப்படிதன் நாயகன் வீரத்தோற்றச்சொல்லுமோவென்ன (த்வம்நீசேத்யாதி) "[illegible] । [illegible]" (யதாத்ருப்தம்சமாதங்கம்ஸஸம்சஸஹிதௌவநே। ததாத்விரதவத்ராமஸ்த்வம்நீச ஸஸவத்ஸ்ம்ருத꞉) இதிஸுந்தரகாண்டே ராவணம் ப்ரதிஸீதா.

இப்படி ப்ரதிபந்தகங்களைப்போக்குமவன் வரக்காணுமையாலே என்றிவ்வளவு மத்யாஹரித்து. அநந்தரம் (என்னகுறையுண்டாய்) இத்யாதிசொல்லிக்கொள்வது. விவரணம் (விளம்பேத்யாதி)

"கட்கிலீ" என்றதுக்கவதாரிகை (உருகுங்காட்டிலித்யாதி) "கட்கிலீ" என்றத்தால் சித்தமான வதீந்த்ரியத்வத்தைப்பிடித்துத் தாய்மார் சங்கித்தத்தை பரிஹரித்துக்கொண்டு, "உன்னைக்காணுமாறருளாய்" என்றதுக்கவதாரிகை (அருளாலே பெறுவார்க்கித்யாதி) ஆனால், "[illegible]" (நசக்ஷுஷாபஸ்யதி) என்றிருக்கிறதேயென்ன (நசக்ஷுஷேத்யாதிவாக்யத்வயம்) அப்படி நாமார்க்குக் காட்டினோமென்ன (அர்ஜுநாதீத்யாதி) "கட்கிலீ" கண்ணுக்குவிஷயமாகாதவனே இத்யர்த்த꞉. ஸூக்தமான வர்த்தத்வயத்தையும் நாயகியினுடைய பாவத்தாலேயருளிச்செய்கிறார் (உன்னைக்காணவித்யாதிவாக்யத்வயத்தாலே)

ருபௌதார்யேத்யாதிஸ்லோகங்களிரண்டும் - அடைவே, நாகரிகர்க்கும் வநவாஸிகளுக்கும் காட்டினதுக்குப்ரமாணம். "[illegible] । [illegible]" (சந்த்ரகாந்தாநநம்ராமமதீவப்ரியதர்ஸநம் । ருபௌதார்யகுணை꞉பும்ஸாம்த்ருஷ்டிசித்தாபஹாரிணம்) இத்யயோத்யாகாண்டே. "[illegible]

க்ஷ்மீம்ஸௌகுமார்யம்ஸுவேஷதாம்। த³த்³ருஶுர்விஸ்மிதாகாராராமஸ்யவநவாஸிந꞉ " (ரூபம்ஸம்ஹநநம்லக்ஷ்மீம்ஸௌகுமார்யம்ஸுவேஷதாம்। தத்ருசுர்விஸ்மிதாகாராராமஸ்யவநவாஸிந꞉) இத்யாரண்யகாண்டே. பெண்களுக்குக்காட்டினதுக்குப்ரமாணம் (தாஸாமித்யாதி) " தாஸாமாவிரபூ⁴ச்சௌரிஸ்ஸ்மயமாநமுகா²ம்பு³ஜ꞉। பீதாம்ப³ரத⁴ர꞉ஸ்ரக்³வீஸாக்ஷாந்மந்மத²மந்மத²꞉ " (தாஸாமாவிரபூச்சௌரிஸ்ஸ்மயமாநமுகாம்புஜ꞉। பீதாம்பரதரஸ்ஸ்ரக்வீஸாக்ஷாந்மந்மதமந்மத꞉) இதி ஸ்ரீபாகவதேகோபிகாகீதாநந்தரே. இதுக்கர்த்தம் (ஒருநீரித்யாதி) ஒருபாட்டம்-ஒருபாறல். " ஆவிரபூ⁴த் " (ஆவிரபூத்) என்றவநந்தரம் " ஸ்மயமாநமுகா²ம்பு³ஜ꞉ " (ஸ்மயமாநமுகாம்புஜ꞉) என்றதுக்குபாவம் (அவர்கள்முன்னேயித்யாதி) மறத்தை - கோபத்தை.

" திருவரங்கத்தாய் " என்றத்தைக்கடாக்ஷித்தருளிச்செய்கிறார் (அவதாரகாலத்திலித்யாதி) கொடியைச்சொன்னதுக்குபாவம் (உகந்தார்க்கித்யாதி) *திண்மைமதிளுக்குவிசேஷணம்.

"இட்டாய்" என்றதுக்கு ஸ்வாரஸ்யம் (இவளிப்படியித்யாதி) அவன்செய்தபடியேதென்ன (அவனிவளறியாதபடியித்யாதி) ஒருமுகத்தாலேயென்றது-சாடு. அவன்முகம்மருந்தோவென்ன (மையலேற்றியித்யாதி) பிச்சேற்றி யறிவுகெடுக்கவுன்முகமம்மான்பொடியோவென்றபடி. நாய்ச்சியார்திருமொழி இரண்டாந்திருமொழி நாலாம்பாட்டு, " பெய்யுமாமுகில் " இத்யாதி. அம்மான்பொடியாவது-சொக்குப்பொடி ....*

நான்காம்பாட்டு.

இட்டகாலிட்டகைகளாயிருக்குமெழுந்துலாய்மயங்குங்கைகூப்பும்
கட்டமேகாதலென்றுமூர்ச்சிக்குங்கடல்வண்ணாகடியைகாணென்னும்
வட்டவாய்நேமிவலங்கையாவென்னும்வந்திடாயென்றென்றேமயங்கும்
சிட்டனேசெழுநீர்த்திருவரங்கத்தாயிவடிறந்தென்சிந்திக்தாயே.

ஆறாயிரப்படி.

(இட்டகால்) இவள் பராதிநசேஷ்டிதமான கரசரணாத்யவயவங்களை யுடையளாயிருக்கும். இப்படி சேஷ்டிதக்ஷமையன்றியேயிருக்கச்செய்தே, அவஸாநசமயத்திலே ப்ரதிபம்போலே ஸஹஸா வெழுந்துலாவி மயங்கிக் கிடக்கும். பின்னையும் ப்ரபுத்தையாய்த் தன்னுடைய வ்யஸநாதிசயத்தாலே யுன்னைத் தொழாநிற்கும். ஸ்நேஹமானதித்தனை பொல்லாதாகாதே, ஸ்நேஹப்ரக்ருதிகளல்லாதாரொன்னபாக்யம்பண்ணினரோவென்று சொல்லி மோஹிக்கும். அநவதிகாதிசயாஸங்க்யேய கல்யாணகுணகணனென் றுன்னைச் சொல்லுகிற விதெல்லாம்பொய், நீசாலநிர்க்க்ருணன்காணென்று சொல்லும். வலத்திருக்கையிலே திருவாழியையேந்திக்கொண்டிருக்கிற வவ்வழகை நான் காணும்படி வந்திடாயென்று

சொல்ல வுபக்ரமிக்கும், முடியச்சொல்ல க்ஷமையல்லாமை வட்டவாய் நேமி வலங்கையா வென்றும், பின்னையும் நெடும்போது கூடவந்திடா யென்னும். வரக்காணாமையாலே பின்னையும் வந்திடா யென்னும். வரக் காணாமையாலே மயங்கும். இங்ஙனே செல்லாநிற்கும். செழுநீர்த்திருவ ரங்கத்தாய், இதுவோ வுன்னுடைய சீலவத்த்வம்; இவள்திறத் தென் செய்ய நினைத்தருளினா யென்கிறாள். ....*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், அபரிச்சிந்நமஹிமனாய்வைத்து இவளை யார்த்தையாக்கின நீ, இவளளவி லென்னினைத்திருக்கிறா யென்கிறாள்.

ஆர்த்தியினதிசயத்தாலே பரவசையாய், இட்டவிட்ட - இட்டுவைத்தவிடத் தே கிடக்கும்படியான. கால் - காலையும். கைகள் - கைகளையும். ஆய் - உடையளா ய். இருக்கும் - இருக்கும். ஆர்த்தி முதிர்ந்தபடியாலே, ஸந்நிபதிதரைப்போலே, எழுந்து - பாரவஶ்யங்குலைந் தெழுந்திருந்து. உலாய் - உலாவாநிற்கும். மயங்கு ம் - அநந்தரத்திலே மோஹிக்கும். காலமுணர்த்த மோஹந் தெளிந்தவளவிலே, "வரக்கூடும்" என்று, கைகூப்பும் - அஞ்சலிபண்ணும். வரக்காணாமையாலே, கா தல் - காதல். கட்டமே - கஷ்டமாயிருந்த நீ. என்று - என்றுவெறுத்து. மூர்ச்சிக் கும் - மூர்ச்சிக்கும். கடல்வண்ணா - தனக்குள்ளே யெல்லாவற்றையு மொதுக்கி ர க்ஷிக்கு மபரிச்சிந்நாகாரமான கடலின்படியையுடையவனே. கடியைகாண் - என க்குக்கடியையாயிராநின்றாய்காண். என்னும் - என்னும். ஆஶ்ரிதரக்ஷணத்தில், வட் டவாய் - ஸர்வதோமுகமான. நேமி - திருவாழியை. வலங்கையா - வலக்கையிலே யுடையவனே. என்னும் - என்னும். நடுவேயிளைப்பாறி, வந்திடாய் - கையுந்திருவா ழியுமாய்க்கொண்டு வந்திடாய். என்றென்றே - என்று பலகாலுமாவர்த்தித் தபே க்ஷித்து. மயங்கும் - "அபேக்ஷயிலாய்வருத்தியாலே ஸ்வரூபமிழந்தோம், அவன் வாராமையாலே யபிமதமுமிழந்தோம்" என்றறிவழியாநிற்கும். இப்படியிவளை க் லேஶிப்பித்து, சிட்டனே - சிஷ்டபாவனைபண்ணி. செழுநீர்த்திருவரங்கத்தாய் - அ ழகிய நீர்க்கரையிலே கிடக்கிறவனே. இவள்திறத்து - வ்யதிரேகத்தில் மோஹிக்கு ம்படியான விவள்திறத்து. என் - என். சிந்தித்தாய் - நினைத்திருக்கிறாய்.

மோஹிப்பிக்கவே நினைத்திருக்கிறாயோ, தேற்றங் கொடுக்க நினைத்திருக்கி றாயோ வென்று கருத்து. ....*

௩0 - நாலாயிரப்படி.

உம்மையொழிய ஜீவிக்கமாட்டாத விவள் திறத்துச் செய்தருள நினைத்திருக்கிற தென்னென்கிறாள்.

(இட்டகாலிட்டகைகளா யிருக்கும்) இவளுக்கு நீருடம்புகொ டுக்கவேண்டா, இவளவயவங்க ளிவளதீநமாகப் பண்ணவமையும். "வய ஸீஸிர் ஜ்யாஸ்ஸாவு நீ நலூ தநூவிதாணாநோசூ" (ஸகீபிர்ந்யஸ்தப்ரகீர்ண பரதந்த்ரவிபாண்டுராங்கீ) என்று, தோழிமார் பொகட்டவிடத்தே கிட க்குமித்தனை. ஸ்வாதீநமல்லாமையாலே தோழிமாரிட்டுவைத்த காலும் கையுமாயிருக்கும்.

(எழுந்துலாய்மயங்கும்) அவியும் விளக்குக் கிளர்ந்தெரியுமா போலே, அடியற்றவெழுச்சியு மடியற்றவுலாவுகையுமாயிராநின்றது. அது கிளம்பின ஸமநந்தரத்திலே அவியுமாபோலே மயங்காநின்றாள்.

(கைகூப்பும்) உணர்த்தியில் தொழுமவளல்லள், மயங்கினால் தொழாதிருக்க வல்லளல்லள். ஸாதநபுத்த்யா தொழுமதில்லை, ஆற்றாமையாலே வருமது தவிரமாட்டாள்.

(கட்டமேகாதலென்று) ஸாதநபுத்த்யா தொழுதாளாகில் "கட்டமேகாதல்" என்னக்கூடாதிறே. விஶ்லேஷத்தில் நலிவுக்குடலாகையாலே ப்ரேமம் தண்ணிதென்கிறாள்.

(கடல்வண்ணாகடியைகாணென்னும்) கடல் சகல பதார்த்தங்களையும் தன்னுள்ளே யடக்கி, ஒன்றையொன்று நலியாதபடி நோக்குமாயிற்று; அப்படியே சர்வரக்ஷகனான நீ நிர்க்ருணனானாயென்னும். அன்றிக்கே, பிரிந்தார்க்குத் தரிக்கவொண்ணாதவடிவுபடைத்த நீ காதுகனாகாநின்றாயென்னும்.

(வட்டவாய்நேமி) "சங்குசக்கரங்கள்" என்று சொல்லும் நிலையும் போச்சு. இப்போது கண்ணுக்கு விஷயமன்றிக்கே யிருக்கச்செய்தேயும், அதினுடைய சந்நிவேசம் ஸித்தமாயிருக்கிறபடி. பிடித்தவிடமெங்கும் வாயாய்க்கிடீரிருப்பது. விரோதிபோக்கப் பரிகரமின்றிக்கேயிருக்கிறாயன்றே.

(வந்திடாயென்றென்றேமயங்கும்) ஒருகால் "வந்திடாய்" என்றலாறியிருக்க வல்லளல்லளே. விடாய்த்தவன் தாஹம் சமிக்குந்தனையும் "தண்ணீர், தண்ணீர்" என்னுமித்தனையிறே; அப்படியே, "வந்திடாய், வந்திடாய்" என்றுருவ அத்தனையே சொல்லும்; மற்றொன்றறியாள். (மயங்கும்) வாஸனையே உபாத்யாயராகச் சொல்லு மத்தனை. (என்றென்றே) வெண்கலத்வனிபோலே சொல்லுக்குச்சொல் லோய்கிறபடி.

(சிட்டனே) சிட்டன் - திருமாலென்றபடி. பிராட்டிவிஷயத்திலே வ்யாமோஹத்தை யுடையவனென்னுதல், பிராட்டியைத் தன் பக்கலிலே பித்தாக்கித் துடிக்கப்பண்ணு மவனென்னுதல். உம்முடைய படி சால வழகிதாயிருந்தது. உம்மைப்போலே சில சிஷ்டர்களமைந்திருந்ததிறே அபலைகள் குடிகெடுக்கைக்கு. அழகிதாக வாக்குஸம்ஸ்ய ப்ரதாநராயிருந்தீர். ப்ரஹ்மஹத்யைகளைப் பண்ணிப் பூணூலை வெளுக்கவிட்டுக் கையிலே பவித்ரத்தையுமிட் டோத்துச் சொல்லித் திரிவாரைப்போலேயிருந்ததீ யும்முடையபடி. (செழுநீர்த்திருவரங்கத்தாய்) ஶ்ரமஹரமான நீரையுடைய கோயில். தண்ணீர்ப்பந்தலிலே காதுகரொதுங்கினவோபாதியாகாதே நீரிவ்வூரில் சாய்ந்ததும். (இவள்திறத் தென்சிந்தித்

தாயே) சர்வஜ்ஞனுக்கும், இவளுக்கோடுகிற தசைக்குப் பரிஹாரம் சிந்திக்கவேணுமென்றிருக்கிறாள். திருத்தாயார் தெளிவிருக்கிறபடி. " அவன் நினைவே கார்யமாய்த் தலைக்கட்டுவது " என்று அவனைக் காலைக்கட்டிக் கேட்கிறாள். " ஶ்ரேயோஹ்யாயதிகேஶவ꞉ " (ஶ்ரேயோத்யாயதிகேஶவ꞉) என்று, அநுகூலவிஷயத்தில் சிந்திப்பானுமவனிறே. இங்ஙனே மநோரதமாயே போமித்தனையோ, நிர்ணயாந்தமாகக் கடவதன்றோ. ...*

ஜீயர் அரும்பதம்.

நான்காம்பாட்டு. (இட்டகாலித்யாதி) " இவள்திறத் தென்சிந்தித்தாய் " என்றத்தைக் கடாக்ஷித் தவதாரிகை (உம்மையொழியவித்யாதி)

" இட்டகாலிட்டகைகளாயிருக்கும் " என்கிற தாயாருடைய ஹார்த்தபாவம் (இவளுக்கு நீரித்யாதி வாக்யத்வயம்) என், இவளவயவங்களிவளதீநமல்லவோ வென்கிற சங்கையிலேயாதல், ஆராலே யிட்டகாலிட்டகை என்கிறசங்கையிலேயாதலருளிச்செய்கிறார் (ஸ்வபரித்யாதி) இஸ்ஸ்லோகத்துக் காகரங் கண்டுகொள்வது.

இட்டகா லிட்டகைகளானு லெழுந் துலாவக் கூடுமோ வென்ன (அவியும் விளக்கித்யாதி) கீழே - மயங்குகிறதுக்கு முன்னே யெழுந் துலாவுகிறதுக்கு த்ருஷ்டாந்த மருளிச்செய்து, எழுந்துலாவினவநந்தரம் " மயங்கும் " என்றதுக்கு த்ருஷ்டாந்த மருளிச்செய்கிறார் (அது கிளம்பின வித்யாதி) எழுந்திருந் துலாவாநிற்கச்செய்தே மோஹிக்கு மிதிசப்தார்த்த꞉.

" மயங்கும் - கைகூப்பும் " என்று கூட்டி, வ்யதிரேகத்தாலு மந்வயத்தாலும் பாவம் (உணர்த்தியிலித்யாதி) ஸ்வாபதேசம் (ஸாதநேத்யாதி)

ஸாதநத்வேந தொழுகிறா ளென்றாலோ வென்ன (ஸாதநபுத்த்யேத்யாதி) " இது கட்டம் " என்னுங்காட்டில் பரிஹாரம்பிறந்த தாகாமையாலே மோஹியாநின்றாளென்றபடி.

" வண்ணம் " என்று - ரக்ஷகத்வஸ்வபாவமாதல், வடிவழகாதல். இரண்டர்த்தத்திலும் பாவமருளிச்செய்கிறார் (கடலித்யாதி வாக்யத்வயத்தாலும், அன்றிக்கே யித்யாதியாலும்) காதுகனுகையாவது - வடிவை யநுபவிப்பியாதிருக்கை.

" நேமி " என்றொன்றைச் சொன்னதுக்கு பாவம் (சங்குசக்கரங்களென்றித்யாதி) காணுதிருக்க, " வட்டவாய் " என்றறியும்படி யென்னென்ன (இப்போதித்யாதி) " வட்டவாய் " என்றதுக்கு பாவம் (பிடித்தவிடமித்யாதி) இப்பதப்ரயோகத்துக்கு பாவம் (விரோதியித்யாதி)

" என்றென்றே " என்கிறவீப்ஸைக்குபாவம் (ஒருகாலித்யாதிவாக்யத்ரயம்) " என்றென்றே " என்கிற வர்த்தமாநத்துக்குச்சேர- " மயங்கும் " என்றதும், " வந்திடாய் " என்றது மேககாலீநமாய்த் தோற்றுகையாலே; மயங்கினால் " வந்திடாய் " என்னக்கூடுமோவென்ன (வாஸநையேயித்யாதி) " என்றென்றே " என்கிற ஸ்வரத்துக்குத் தாளகதியிலே பாவம் (வெண்கலேத்யாதி)

" சிட்டன் " என்று - ஸ்ரீக்கு இஷ்டனென்று விவக்ஷித்து (திருமாலென்றபடியென்றது) சிஷ்டனென்று விவக்ஷித்து, வெறுப்பிலேயாக்கி யர்த்தாந்தரம்

(உம்முடையவித்யாதி) "அழகிதாயிருந்தது" என்றதுக்குவிவரணம் (உம்மைப் போலே யித்யாதிவாக்யத்வயம்) நம்மை "ஆந்ருஶம்ஸ்ய ப்ரதாநரல்ல" என்று க்ஷேபிக்கிறதென், நம்வடிவிலே தெரியாதோ நம்முடைய வாந்ருஶம்ஸ்ய மென்ன (ப்ரஹ்மஹத்யைகளேயித்யாதி) ஒத்து - வேதம். ஆந்ருஶம்ஸ்யப்ரதாநனல்லாவிட்டால் பரமபதத்திலே யிரேனோ, அப்படியன்றிக்கே கோயிலிலேவந்து சாய்ந்தபோதே நானாந்ருஶம்ஸ்யப்ரதாந னென்னுமிட மெல்லாருமறியாரோவென்ன (தண்ணீர்ப்பந்தலிலேயித்யாதி)

கிளைப்போல் "என்செய்கின்றாய்" என்னாதே, "சிந்தித்தாய்" என்றதுக்குபாவம் (ஸர்வஜ்ஞனுக்கு மித்யாதி) "என்சிந்தித்தாய்" என்று அவனை ஸம்போதித்துக் கேட்கிறதுக்கு பாவம் (திருத்தாயா ரித்யாதிவாக்ய த்வயம்) அவன் றானப்படி சிந்திக்குமோவென்ன (ஶ்ரேயோத்யாயதீத்யாதி) "சிந்தித்தாயே" என்கிறவவதாரணார்த்தம் (இங்ஙனே யித்யாதி வாக்யத்வயம்)

சிட்டனேசெழுநீர்த் திருவரங்கத்தாய், இட்டகாலிட்டகைகளாயிருக்குமென்றுதொடங்கி, இவள்திறத் தென்சிந்தித்தாயே யித்யந்வயஃ........................*

ஐந்தாம்பாட்டு.

சிந்திக்குந்திசைக்குந்தேறுங்கைகூப்புந்திருவரங்கத்துள்ளாயென்னும்
வந்திக்குமாங்கேமழைக்கண்ணீர்மல்கவந்திடாயென்றென்றேமயங்கு
மந்திப்போதவுணனுடலிடந்தானேயலைகடல்கடைந்தவாரமுதே
சந்தித்துன்சரணஞ்சார்வதேவலித்ததையலைமையல்செய்தானே.

ஆறாயிரப்படி.

(சிந்திக்கும்) உன்னழகையு முன்னழகோடு பண்டு ஸம்ஶ்லேஷித்தபடியையும் நினைக்கும். நினையாமோஹிக்கும். நெடும்போது கூடலப்த ஸம்ஜ்ஞையாம். தன்னுடைய வபேக்ஷிதம் பெறுகைக்காக வுன்னைத்தொழாநிற்கும். தன்னுடைய வ்யஸநம் பொறுக்கமாட்டாமையாலே, திருவரங்கத்துள்ளாயென்னும். த்வந்நாதையாயிருந்துவைத்தே நாதஹீநையைப்போலே திருவடிகளிலே விழுந்துகிடக்கும். அங்ஙனேவிழுந்துகிடந்து, தன்னுடைய வழகிய கண்கள் நீர்மல்க, வந்திடாயென்றென்றே மயங்காநிற்கும். உன்றிருவடிகளை யொருகால் கண்டு ஸம்ஶ்லேஷிக்கவேணுமென்னு மாசையாலே தன்னை தரித்துக்கொண்டிருக்கிற விப்பெண்பிள்ளையை யிப்பாடுபடுத்தவேணுமோ. உன்னுடைய நிரவதிகமான வாஶ்ரிதவாத்ஸல்யமெல்லா மெங்கே போயிற்றென்கிறாள்......................*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், ஆஶ்ரிதரபேக்ஷிதஞ்செய்யும்படியான பவ்யதையையுடையையாயிருக்க; இவள் ப்ரதிக்ஷண மவஸ்த்தாபேதம் பிறக்கும்படியான வரதியையுடையளாகா நின்றாளென்கிறாள்.

அந்தி - ஸந்த்யையென்று. போது - ஒருகாலவிசேஷத்திலே. அவுணன்-அசுரனான ஹிரண்யனுடைய. உடல் - சரீரத்தை. இடந்தானே-பிளந்தவனாய். அலை-அலையையுடைத்தான. கடல் - கடலை. கடைந்த - கடைந்து. ஆரமுதே - நிரதிசய போக்யனாய் வைத்து. அப்படி காலநியதியுமின்றியே ப்ரபலவிரோதியு மின்றியே, அருந்தொழில் செய்வித்துக்கொள்ளவும் வேண்டாதபடி ; ஆந்தராநுபவமாத்ரமன்றியே, சந்தித்து - பாஹ்யமான சம்ஶ்லேஷத்தைப்பண்ணி. உன்-உன். சரணமே-திருவடிகளையே. சார்வது - சேர்ந்தநுபவிக்கவேணுமென்கிற. வலித்த - சிக்கென வையுடையளா யிருக்கிற. தையலை - இப்பெண்பிள்ளையை. மையல்செய்தானே-மதிகெடுத்தவனே. இவள், சிந்திக்கும் - பூர்வஸம்ஶ்லேஷ ப்ரகாரத்தைச் சிந்தியாநிற்கும். திசைக்கும்-அதப்போதே சித்தியாமையாலே அறிவழியா நிற்கும். தேறும்-அசங்கிதமாகத் தேறாநிற்கும். அவ்வளவிலே வந்தாயாகக் கருதி, கை - கை. கூப்பும் - கூப்பாநிற்கும். ஆஸந்நமாக, திருவரங்கத்து - கோயிலிலே. உள்ளாய் - கண்வளர்ந்தருளுகிறவனே. என்னும் - என்று கூப்பிடாநிற்கும். வந்திக்கும் - அவ்வடிவழகை நினைத்துத் தலையாலே வணங்கும். அவ்வளவிலும் வரக்காணாமையாலே, ஆங்கே - அவ்விடந்தன்னிலே யிருந்து. மழை - குளிர்ந்த. கண்ணீர் - கண்ணீர். மல்க - மல்கும்படி. வந்திடாய் - வந்துகொள்ளாய். என்றென்றே - என்று பலகாலுஞ்சொல்லி. மயங்கும் - உக்தி பலவ்யாப்தையாகக் காணாமையாலே மோஹிக்கும். காமாதுரைகள் விகாரத்தி லிவளுக்கில்லாதனவில்லை யென்று கருத்து. ...*

ஈடு - ஐந்தாம்பாட்டு.

இவளுக்கு ப்ரதிக்ஷணம் பேதித் தொன்றோ டொன்று சேராதே வருகிற வவஸ்த்தாபேதங்களை யறிவிந்து, இவளை யிப்படி படுத்துகை யும்முடைய நீர்மைக்குப் போருமோவென்கிறாள்.

(சிந்திக்கும்) உம்முடைய ஸௌந்தர்யாதிகளையு மும்மோட்டைக்கலவியையும் நினைக்கும். முன்பிவ்வநுசந்தாநமு மின்றிக்கே யாயிற்றிருந்தது, மோஹத்தோபாதி யிதுவு மொரு விக்ருதியாயிருக்கிறபடி.

(திசைக்கும்) அப்போதே காணப்பெறாமையாலே மோஹிக்கும்.

(தேறும்) ஒரு ஹேதுவின்றிக்கே யிருக்கத் தேறாநின்றாள். இதுதானும் பயாவஹமாயிருக்கிறதாயிற்று ; மோஹம் செல்லாநிற்க, அபேக்ஷிதம்பெற்றாரைப்போலே தேறுகை பயாவஹமிறே. சரமதசையில் பிறக்கும் தெளிவுக்கு மஞ்சவேணுமே. உய்ந்தபிள்ளைபாடும்போது, "கெட்டேன், இவள் 'தேறும்' என்பதே" என்று ஜீயரருளிச்செய்வராம்.

(கைகூப்பும்) இதிவளுக்கு ப்ரக்ருதி. கீழே "மயங்கும் கைகூப்பும்" என்றது, இங்கே (தேறும்கைகூப்பும்) என்றது ; அல்லாதனஸஞ்சாரியாய்ச்செல்லாநிற்க, இதொன்றும் ஸ்த்திரமாய்ச்செல்லாநிற்கும்; ஸ்வரூபாநுபந்தியாகையாலே. "நித்யாஞ்ஜலிபுடா:" (நித்யாஞ்ஜலிபுடா:) என்னக்கடவதிறே. மோஹத்திலு முணர்த்தியிலும் ஸத்தையுண்டே. "வழுவிலாவடிமைசெய்யவேண்டுநாம்" என்றதிறே நிலைநின்ற ஸ்வரூபம். அநுவர்த்தமாநமானதிறே பரமார்த்தமாவது.

(திருவரங்கத்துள்ளாயென்னும்) "பெருமாளேயென்னும்" என்று ஜீயர். அவ்வூரில் சம்பந்தங்கொண்டுபோலே காணு மவனையும் விரும்பிற்று.

(வந்திக்கும்) "திருவரங்கத்துள்ளாய்" என்றது நெஞ்சிலே வடிம்பிட்டு, "ஒருமுகமே, முறுவலே, ஒருவளையமே" என்றுஸ்தோத்ரம்பண்ணாநின்றுளென்னுதல்; பக்நாபிமாநையாய்த் திருவடிகளிலே விழுந்துகிடக்குமென்னுதல்.

(ஆங்கே) அவ்வவஸ்த்தையிலே. (மழைக்கண்ணீரித்யாதி)குளிர்ந்தகண்ணீர்மல்க, வந்திடாயென்றென்று சொல்லி, அச்சொலவோடே யறிவுகெடும்.

நினைத்தபோதாக வரப்போமோவென்ன (அந்திப்போது) "ஸத்வ ஸர்வம ஹம் ஸர்வம்" (மத்தஸ்ஸர்வமஹம்ஸர்வம்) என்று தெளிந்திருப்பார்க்கோ வுதவலாவது, அறிவுகெடுவார்க் குதவலாகாதோ. அவன் வரத்துக் கவிருத்தடையாயிருப்ப தொருகாலத்திலே, ஆசுரப்ரக்ருதியாயிருக்கிற வவுணனுடைய சரீரத்தைப் பிளந்து பொகட்டிலேயோ. தமப்பன் பகையானலோ வுதவலாவது, நீர் பகையானு லுதவலாகாதோ. இவ்வளவிலுதவாமைக்கு மேற்படப் பகையில்லையிறே. அதொருகால் சிறுக்கனுக்கு தவினமையுண்டு, அது தப்பிற்றிறேயென்ன; பின்போ நீயுதவாதது(அலைகடல்கடைந்த) ப்ரயோஜநாந்தரபரர்க்கு மகப்படக் கடலைக்கடைந்து கொடுத்திலேயோ. உன்னைக்கொண் டொருப்ரயோஜநங் கொள்வார்க்கோ வுதவலாவது, உன்னையே "ப்ரயோஜநம்" என்றிருப்பார்க் குதவலாகாதோ. (ஆரமுதே) இவருடைய வம்ருதத்தைக்கொண்டாயிற் றவர்கள் கடல் கடைந்தது. (சந்தித்தித்யாதி) உன்னைக் கிட்டித் திருவடிகளைச் சாரவேணுமென்று வ்யவஸிதையாயிருக்கிற விவளை யிப்படி யறிவுகெடுப்பதே. ((வலித்த) ப்ராணனை பலாத்காரத்தாலே தரித்த.) அன்றிக்கே, உன்னைக்கிட்டி சந்நிதியிலே முடியுமித்தனையென்று ப்ராணனைதரித்திருக்கிறவளை யென்னுதல். ((வலித்த) அத்யவஸித்த.) "தாவத்ய ஹம் த்ருதஜிஜீவிஷெயம்" (தாவத்ய்ஹம்த்ருதஜிஜீவிஷேயம்) என்று காணுமிருக்கிறது. (மையல்செய்தானே) உம்மை யாசைப்பட்டவளுக்கும் மயக்கமேயோ பலித்துவிட்டது.................................*

ஜீயர் அரும்பதம்.

அஞ்சாம்பாட்டு (சிந்திக்குமித்யாதி) "சிந்திக்கும்" என்றுதொடங்கி, "மயக்கும்" என்னுமளவுங்கடாக்ஷித் தருளிச்செய்கிறார் (இவளுக்கு ப்ரதிக்ஷணமித்யாதி) "அந்திப்போது" இத்யாதிகளைக் கடாக்ஷித்து (இவளையிப்படியித்யாதி)

சிந்தாவிஷயத்தையும் சொல்லாநின்றுகொண்டு, "சிந்திக்கும்" என்றதுக்கர்த்தமருளிச்செய்கிறார்(உம்முடையவித்யாதி) இவ்வநுசந்தாநம் ப்ரதிக்ஷணம் பேதி

த்த வவஸ்த்தையோவென்ன (முன்பித்யாதிவாக்யத்வயம்)இப்போது "சிந்திக்கும்" என்கையாலே - முன்புமோஹம் ஸித்தம்.

"திசைக்கும்" என்றது - திகைக்குமென்றாய், அதாவது-அறிவுகலங்குகை யாய், (மோஹிக்கும்) என்றபடி.

தேறுகை நல்லதன்றோவென்ன (இதுதானுமித்யாதி) பயாவஹமெப்படியெ ன்ன (மோஹமித்யாதி) இதுக்குநியாமகமேதென்ன (சரமதசையிலித்யாதி) தேரு மது பயாவஹ மென்கைக்கு சம்வாதம் (உய்ந்தபிள்ளையித்யாதி)

இது ஸ்வபாவமானபடி யெப்படியென்ன; சஹேதுகமாகவருளிச்செய்கிறு ர் (கீழ்மயங்குமித்யாதி வாக்யத்ரயத்தாலே) இதொன்று மென்றது-அஞ்சலியை. ஸ்வரூபாநுபந்தி யாகையாலே யஞ்சலிநித்யமென்னுமதுக்கு ப்ரமாணம் (நித்யாஞ் சலீத்யாதி) "முக்தாநாம் லக்ஷணம் ஹ்யேதத் ச்வேதத்வீபவாஸிநாம் । நித்யாஞ்ஜலி புடா ஹ்ருஷ்டா: நம இத்யேவ வாதிந:" (முக்தாநாம்லக்ஷணம் ஹ்யேதத்யச்ச்வேத த்வீபவாஸிநாம் । நித்யாஞ்ஜலி புடாஹ்ருஷ்டா: நமஇத்யேவ வாதிந:) இதுக்குபபத்தி (மோஹத்திலுமித்யாதி) அத்தாலேதென்ன (வழுவிலாவி த்யாதி) அதாவது - சத்தையுண்டானபோதே தத்கார்யமான வஞ்சலியும் நித்யமா ய்ச்செல்லுமென்றபடி. மோஹமுமுணர்த்தியும் சஞ்சாரி, அஞ்சலி ஸ்த்திரமென்னு மத்தை யுபபாதிக்கிறுர் (அநுவர்த்தமாநமானதித்யாதி)

பெருமாளே யென்றர்த்தமானல், "திருவரங்கத்துள்ளாய்" என்னவேணு மோவென்ன (அவ்வூரிலித்யாதி)

"வதி அபிவாதந ஸ்துத்யோ:" (வதிஅபிவாதநஸ்துத்யோ:) என்கிற தாதுவைப்பற்ற. "வந்திக்கும்" என்றதுக்கு - ஸ்துதிக்கும், சேவிக்குமென்றர்த்த த்வயமருளிச்செய்கிறுர் (திருவரங்கத்துள்ளா யித்யாதி வாக்யத்வயத்தாலே) வ டிம்பிட்டு - ப்ரேரித்து, வடிம்பிடுகை - தனியோட்டிக் கிளப்புகை. கீழ் "கைகூ ப்பும்" என்கையாலே, இங்கே - சாஷ்டாங்கப்ரணமம் விவக்ஷிதம்.

ப்ரஹ்லாதனுக்காக ஹிரண்யனுடலைப் பிளந்தா னென்று விவக்ஷித்து, அத் தைச் சொல்லுகிற தாயாருடைய ஹார்த்தபாவம் (மத்தஸ்ஸர்வ மித்யாதி வாக்ய த்வயம்) சப்தார்த்தம் (அவன்வரத்துக்கித்யாதி) "மத்த: ஸர்வமஹம் ஸர்வம் மயி ஸர்வம் ஸநாதநே" (மத்தஸ்ஸர்வமஹம்ஸர்வம்மயிஸர்வம்ஸநாதநே) இத்யாதி, ப்ரதமேம்ஸே ஏகோநவிம்ஸே ப்ரஹ்லாதசரிதே. "அவுணனுடலிடந்தானே" என் கிறவளுடைய ஹார்த்தபாவத்தை ப்ரகாராந்தரேண வருளிச்செய்கிறுர் (தமப்பனி த்யாதிவாக்யத்வயத்தாலே) அவன் பகையோவென்ன (இவ்வளவிலித்யாதி)

மேலுக்கவதாரிகை (அதொருகாலித்யாதிவாக்யத்வயம்) (அதொருகால்) இத்யாதிக்குக் கருத்து - அவதாரம் முன்பின்னுறுறு மிப்படி யநேக வ்யாபாரங்க ளைச் செய்தானென்று. இத்தைச் சொல்லுகிறவளுடைய ஹார்த்தபாவம் (உன்னை க்கொண்டித்யாதி வாக்யத்வயம்) "ஆரமுதே" என்றத்தைப்பற்ற (உன்னையே ப் ரயோஜநமென்றிருப்பார்க்கென்றது) "ஆரமுதே" என்றதுக்கு பாவம் (இவரு டையவித்யாதி)

கிட்டி - ஆந்தரமாகவன்றிக்கே பாஹ்யமாகக்கிட்டி. சரணம் சார்வதே-சர ணம் சாரவேணுமென்றே. முந்தினவர்த்தத்துக்கு, சரணம் சாருகை - ஸம்ஶ்லேஷி க்கை; வலிக்கை - வ்யவஸ்த்திதையாகை. த்விதீயார்த்தத்துக்கு, சரணம் சாருகை-

முடிகை ; சந்திக்கை - ப்ராபிக்கை. வலிக்கை - தரிக்கை. அப்படி தரித்திருந்தபேருண்டோவென்ன (தாவத்த்யஹமித்யாதி) “ நசாஸ்ய மாதா ந பிதா நசாந்ய: ஸ்நேஹாத்விஶிஷ்டோஸ்தி மயா ஸமோ வா । தாவத்த்யஹம் தூத ஜிஜீவிஷேயம் யாவத் ப்ரவ்ருத்திம் ஶ்ருணுயாம் ப்ரியஸ்ய ” (நசாஸ்யமாதாநபிதாநசாந்யஸ் ஸ்நேஹாத்விஶிஷ்டோஸ்திமயாஸமோவா। தாவத்த்யஹம்தூதஜிஜீவிஷேயம் யாவத்ப்ரவ்ருத்திம்ஶ்ருணுயாம்ப்ரியஸ்ய) இதி சுந்தரகாண்டே ஹநூமந்தம் ப்ரதிஸீதா. அவதாரணார்த்தம் (உம்மையித்யாதி)

சிந்திக்குமென்று தொடங்கி, மையல்செய்தானே - இவள்திறத்தருளாயென்று மேலிற்பாட்டில் க்ரியையோடே யந்வயம். ....*

ஆறும்பாட்டு.

மையல்செய்தென்னைமனங்கவர்ந்தானேயென்னுமாமாயனேயென்னுஞ்
செய்யவாய்மணியேயென்னுந்தண்புனல்சூழ்திருவரங்கத்துள்ளாயென்னு
வெய்யவாடண்டுசங்குசக்கரம்வில்லேந்தும்விண்ணோர்முதலென்னும் [ம்
பைகொள்பாம்பணையாயிவடிறத்தருளாய்பாவியேன்செயற்பாலதுவே.

ஆறாயிரப்படி.

(மையல்செய்து) அதிக்ஷுத்ரமான காகத்தின்பக்கலிலேப்ரஹ்மாஸ்த்ரத்தைவிட்டருளின வுன்னுடைய சர்வவசீகரணமான ப்ரணயித்வகுணத்தாலே யென்னுடைய மநஸ்ஸை யபஹரித்தவனேயென்னும். வசீகரணமான வவனுடைய மஹாஸ்சர்யபூதமான சௌந்தர்யத்தை யநுசந்தித்து, மஹாஸ்சர்யபூதனேயென்றுசொல்லும். நிரதிசயதீப்தி யுக்தமாயிருப்பதொரு நீலரத்நம், செந்தாமரைபூத்தாப்போலே யிருந்த திருவுடம்பையும் திருப்பவளத்தையுமுடையவனே என்றவ்வழகைச்சொல்லும். அடியேனுக்காத்மதாநம் பண்ணுகைக்காகவன்றோ கோயிலிலேவந்து கண்வளர்ந்தருளுகிறதென்னும். சர்வஜ்ஞனுமாய் சர்வசக்தியுமா யத்யுக்ரமாயிருந்த ரதாங்கசங்கசார்ங்காதி திவ்யாயுதங்களை யேந்தி யருளுகிறதெனக்காகவன்றோவென்னும். இவளுக்காகநீகோயிலிலேவந்து கண்வளர்ந்தருளாநிற்கச்செய்தே, இவள்பக்கல் க்ருபைபண்ணியருளுகிறதில்லை; இதுக்குஹேது வென்னுடைய பாபமேயிறே யென்கிறாள்.................*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், ஆஸ்ரிதசம்ரக்ஷணார்த்தமான வாயுதபூர்த்தியை யுடையையாயிருக்கச்செய்தே யிவளை யிப்படி யலற்றும்படி பண்ணினநீ, இவளளவில் நான்செய்யக்கடவபடி யருளிச்செய்யவேணுமென்கிறாள்.

உன்னுடைய பவ்யதையாலே, என்னை-என்னை. மையல்செய்து - மயல்கொள்ளப்பண்ணி. மனம்-நெஞ்சை. கவர்ந்தானே-அபஹரித்தவனே. என்னும்-என்னும்.

மாமாயனே-மையல்கொள்ளுகைக்குப்பண்ணின நிரவதிகாஸ்சர்யசேஷ்டிதங்களை யுடையவனே. என்னும்-என்னும். பவ்யதாப்ரகாசகமானவுக்தியாலே ஸ்புரிக்கிற, செய்ய-சிவந்த. வாய் - அதரசோபையையுடையையாய்க்கொண்டு. மணியே-மணி போலே முடிந்தாளலாம்படி சுலபனானவனே. என்னும்-என்னும். தண்-உன்னைக்கிட்டி யென்பரிதாபந்தீருகைக்கீடாகக்குளிர்ந்த. புனல்-நீர். சூழ்-சூழ்ந்த. திருவரங்கத்து-கோயிலிலே. உள்ளாய் - ஸந்நிஹிதனானவனே. என்னும்-என்னும். வெய்ய-விரோதிவிஷயத்தில் வெம்மையேவடிவான. வாள் தண்டு சங்கு சக்கரம் வில்-ஸ்ரீபஞ்சாயுதங்களையும். ஏந்தும் - ப்ரணதரக்ஷாவிளம்பம் பொறுதாரைப்போலே யெப்போது மேந்தியிருந்து. அவ்வழகை, விண்ணோர்-சூரிகளுக்கநுபவிப்பித்து. முதல்-அவர்கள் சத்தாதிஹேதுபூதனானவனே.என்னும்-என்னும்.பை-உன்னுடையஸ்பர்ஸத்தாலே விரிகிறபணத்தை. கொள் - உடையனாய். பாம்பு - ஜாதிப்ரயுக்தமான மென்மைகுளிர்த்தி நாற்றத்தாலே நிரதிசயபோக்யமான திருவநந்தாழ்வானை. அணையாய்-படுக்கையாகவுடையவனே. இவள்திறத்து - நீபடுக்கைபொருந்திக்கிடக்கத்தறைப்பட்டுக்கிடந்தலற்றுகிற விவள்திறத்து. பாவியேன் - இவளையிப்படி காணவைத்த பாபத்தையுடையநான். செயற்பாலது-செய்யும்ப்ரகாரம். அருளாய்-அருளிச்செய்யவேணும்.

நீயநாதரித்தவளவி லென்னாற்செய்யலாவதொரு பரிஹாரமுண்டாக வுன்னாலும் சொல்லமுடியாதென்றுகருத்து. மையல்செய்தென்று - பிச்சனைப்போலே பாவித்துக்காட்டியென்றுமாம். ....*

ஈடு - ஆறும்பாட்டு.

இவளிவ்வளவாபந்நையாயிருக்க, இவளார்த்திதீர்த்தருளா தொழிகைக்குக்காரண மென்னுடைய கர்மவிபாகமென்கிறாள்.

(மையல்செய்து) உணர்த்தியுண்டாகில் நெஞ்சிழவாள்காணும். எதிரிகளுடைய வநவதாநம்பார்த்திருந்து அவர்கள் கோட்டைகொள்ளுவாரைப்போலே. (என்னை) கடலைத்தறைகண்டா னென்னுமாபோலே. (மனங்கவர்ந்தானே) புழுகூற்றிச்சட்டம் பொகடுவாரைப்போலே. (மையலித்யாதி) கொன்று கிழிச்சீரையறுப்பாரைப்போலே.

(மாமாயனேயென்னும்) மையல்செய்த ப்ரகாரங்கள். கலக்கிற சமயத்தில் தாழநின்று கையைக்காலைப்பிடித்துப் பரிமாறின பரிமாற்றங் காணு மிவள்நெஞ்சில் பட்டுக்கிடக்கிறது. ஸ்வதஸ்ஸித்தமானமேன்மை போலல்லவாயிற்று ப்ரணயித்வத்தாலே தாழநின்றநிலை. சம்ஶ்லேஷதசையி லாஸ்சர்யமான சேஷ்டிதங்களை யுடையவனேயென்னும். (செய்ய வாய்மணியேயென்னும்) இதுவுமந்தமாயங்களிலேயொன்று. தைர்யபங்கம்பிறந்து "நானுன்சரக்கன்றோ" என்றுசொல்லுகிறபோதை யதரத்தில் பழுப்பு. "ஸவிலாஸஸ்மிதாதாரம்" (ஸவிலாஸஸ்மிதாதாரம்) என்னக்கடவதிறே. (மணியே) புஷ்பம் விகசிதமாம்போ தெங்குமொக்க வொருசெவ்விபிறக்குமாபோலே, ஸ்மிதம்பண்ணுகிறபோது வடிவிலே யெங்குமொக்க வொருசெவ்விபிறந்தபடி. (தண்புனல்) ஸ்மிதத்தில்

குளிர்த்திபோலேயாயிற் றூரில்குளிர்த்தியும். அவ்வாயில் குளிர்த்திபோலேகாணு மிவ்வாயில்குளிர்த்தியும். (வாய்-இடம்.) (வெய்யவாளித்யாதி) திவ்யாயுதங்கள், எதிரிகளையழிக்கைக் குடலாயிருக்குமாபோலே காமினிகளை யழிக்கைக்கு முடலாயிருக்குமிறே. உகப்பாரையு முகவாதாரையு மொக்கத்தோற்பிக்குமவை. முன்னே கைகண்டுவைக்கிறவையிறே. காணவேயெதிரிகள் மண்ணுண்ணும்படியான திவ்யாயுதங்களை தரித்திருக்கிற நீயென் விரோதிகளைப்போக்கி முகங்காட்டாதொழிவதே. (விண்ணோர்முதலென்னும்) திவ்யாயுதங்களோட்டைச் சேர்த்தியால் வந்தவழகைக்காட்டிநடத்த, அதுவே ஜீவநமாகவாயிற் றந்நாடுகிடப்பது. இல்லையாகில், அங்கே வினையுண்டாய் தரித்துக்கொண்டிருக்கிறானன்றே. (பைகொளித்யாதி) ஸ்மிதநதோடு, திவ்யாயுதங்களோடு, நித்யவிபூதியுக்தனுயிருக்கிறவிருப்போடு, திருவநந்தாழ்வான்மேலே சாய்ந்தருளினத்தோடு வாசியற வெல்லா முத்தேப்யமாயிருக்கிறதாயிற்று. பகவத்விக்ரஹஸ்பர்ஶத்தாலுண்டான ஹர்ஷத்தாலே விகஸிதமான பணங்களையுடையனான திருவநந்தாழ்வானைப் படுக்கையாகவுடையவனே. தனிப்படுக்கையிலே சாய்வதே நீர் இவள் தரைக்கிடைகிடக்க. (இவள்திறத்தருளாய்) படுக்கையில் சேர்த்திபெறுவிட்டால், நாட்டுக்குப்பண்ணுமருளுமின்றிக்கே யொழியவேணுமோ. (இவள்திறத்து) பாடோடிக்கிடக்கிற விவள்திறத்து. (அருளாய்) அருள்கொள்வார் தேட்டமானநீ, அருள்பெறில் ஜீவிக்குமிவளை யிப்படி தரைக்கிடைகிடக்க விட்டுவைப்பதே. ((அருளாய்) அருளுகிறீரில்லையென்றபடி.) (பாவியேன்) நீரருளாதவராயல்ல, இவளதுபெறுவிடில் ஜீவிப்பாளாயல்ல, இதுக்கடி நான்பண்ணின பாபமிறே. “[illegible]” (மத்பாபமேவாத்ரநிமித்தமாஸீத்) என்னுமாபோலே. (செயற்பாலது) என்னுடையசெயலிடத்தது அருளாமைக்கடி. (பாவியேன்செயலிடத்தது-இவள்பக்கலிலும்குறையில்லை, உம்முடையபக்கலிலும் குறையில்லை, இருவருமானசேர்த்திபெறவிருக்கிற வென்பாபமிறே யிதுக்குஹேது.) ....*

ஜீயர் அரும்பதம்.

ஆரும்பாட்டு. (மையலித்யாதி) “பாவியேன் செயற்பாலதுவே” என்றத்தைப்பற்ற வவதாரிகை (இவளிவ்வளவித்யாதி)

மையல்செய்தபின்பு “மனங்கவர்ந்தான்” என்றதுக்குபாவம் (உணர்த்தியித்யாதி) உணர்த்தியறப்பண்ணி நெஞ்சை யபஹரித்ததுக்கு த்ருஷ்டாந்தம் (எதிரிகளுடையவித்யாதி) மனங்கவர்ந்தானென்னுதே, “என்னை” என்று விசேஷித்ததுக்கு பாவம் (கடலையித்யாதி) சரீரத்தைப்பொகட்டு சாராம்ஶமானமநஸ்ஸை யபஹரித்ததுக்கு த்ருஷ்டாந்தம் (புழுகூற்றியித்யாதி) ப்ராந்தியைவிளைந்து சாராம்ஶத்தை யபஹரித்ததுக்கு த்ருஷ்டாந்தம் (கொன்றித்யாதி) கிழிச்சிலை - சாணிகைப்பை.

மேலுக்கெல்லாமவதாரிகை (மையல்செய்தப்ரகாரங்ளென்று) “ மாமாயன் ” என்றுதொடங்கி “ விண்ணோர்முதலென்னும் ” என்னுமளவுங் கடாக்ஷித்து (மையல்செய்தப்ரகாரங்களென்றது) “ மாயன் ” - வ்யாமோஹயுக்தனென்றபடி. மாயமாவதேதென்ன (கலக்கிறவித்யாதி) “ மா ” என்றதுக்கு பாவம் (ஸ்வதஸ்ஸித்தமானவித்யாதி) “ மா ” - மஹத்தானவென்றபடி. இத்தால் - பரத்வத்திற்காட்டில் ப்ரணயித்வத்துக் காதிக்யமுண்டென்றபடி.

சிவப்புத்தோற்றுவது வார்த்தையாலேயாகையாலே, வார்த்தை சொல்லும் போதைச்சிவப்பாகவிவக்ஷித்தர்த்தம்(தைர்யபங்கமித்யாதி) ஸ்மிதத்தாலேவந்தசிவப்பாகவர்த்தாந்தரம் (ஸவிலாஸேத்யாதி) “ 𑌸𑌵𑌿𑌲𑌾𑌸𑌸𑍍𑌮𑌿𑌤𑌾𑌧𑌾𑌰𑌂 𑌬𑌿𑌭𑍍𑌰𑌾𑌣𑌂 𑌮𑍁𑌖𑌪𑌙𑍍𑌕𑌜𑌮𑍍 । 𑌤𑍁𑌙𑍍𑌗𑌰𑌕𑍍𑌤𑌨𑌖𑌂 𑌪𑌦𑍍𑌭𑍍𑌯𑌾𑌂 𑌧𑌰𑌣𑍍𑌯𑌾𑌂 𑌸𑍁𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌮𑍍 ” (ஸவிலாஸஸ்மிதாதாரம் பிப்ராணம்முகபங்கஜம் | துங்கரக்தநகம்பத்ப்யாம் தரண்யாம் ஸுப்ரதிஷ்டிதம்) இதிபஞ்சமேம்ஸே ஸப்ததஸே அக்ரூரத்ருஷ்ட பகவத்ரூபவர்ணனே. “ மணி ” என்றதுக்கர்த்தம் (புஷ்பமித்யாதி)

கீழுக்தத்தை ரசோக்தியாகவருளிச்செய்கிறார் (அவ்வாயிலித்யா) இவ்வாயிலென்றது - இவ்விடத்திலென்றபடி.

காமினி, அவயவங்களை விட்டாயுதங்களைச் சொல்லுவானெனனென்ன (திவ்யாயுதங்களித்யாதி) விவரணம் (உகப்பாளையுமித்யாதி) அதாவது - மேன்மையாலுமழகாலு மிருவரையு மழிக்குமென்றபடி. இவற்றிலேபெடுகைக்கு, இவளிவற்றையறிந்தபடி யெங்ஙனேயென்ன (முன்னேயித்யாதி) இது - சாடு; கைகண்டுவைக்கிறவை - அநுபவித்தவையென்றும், கையிலேகண்டு வைக்கிறவையென்றும்; முன்னே - பூர்வம், ப்ரத்யக்ஷத்திலேயென்றும். திவ்யாயுதங்களுக்கநந்தரம் “ விண்ணோர்முதல் ” என்றதுக்கு பாவம் (திவ்யாயுதங்களோட்டையித்யாதி) அவர்கள் ஜீவநார்த்தமாகவோ தரிக்கிறதென்ன (இல்லையாகிலித்யாதி) ப்ரணயினி “ மாயன் ” என்றாப்போலே சொல்லாதே, “ விண்ணோர்முதல் ” என்று நித்யவிபூதியுக்தனுனவாகாரத்தைச் சொன்னதுக்கு பாவம் (ஸ்மிதத்தோடித்யாதி)

“ பைகொள் ” இத்யாதிக்கு சப்தார்த்தம் (பகவதித்யாதி) இப்பதப்ரயோகத்துக்கு பாவம் (தனிப்படுக்கையிலே யித்யாதி) “ அருளாய் ” என்றதுக்குபாவம் (படுக்கையிலித்யாதி) “ அருளாய் ” - அருளுகிறிலே. பாடோடி - துஃகத்தோடு.

“ பாவியேன் ” என்றதுக்கு பாவம் (நீரருளாதவராயித்யாதி) “ மாமாயன் ” என்று - நிரதிசய வ்யாமுக்தரானதையைப்பற்ற (நீரருளாதவரா யல்லவென்றது) இத்தால் - அருளாதது உம்முடைய பக்கல் குறையல்ல வென்றபடி. உம்முடையபக்கலிலே யறிவழிந்தமையைப்பற்ற (இவளாறுபெறுவிடில் ஜீவிப்பாளாயல்லவென்றது) இத்தால் - உம்முடையபக்க லிவளதிமாத்ரப்ரவணையாகையாலே, நீரருளாத திவள் குறையல்லவென்றபடி. இதுக்கு ப்ரமாணம் (மத்பாபமித்யாதி) “ 𑌨 𑌮𑌨𑍍𑌥𑌰𑌾𑌯𑌾 𑌨 𑌸𑌮𑌾𑌤𑍁𑌰𑌸𑍍𑌯𑌾 𑌦𑍋𑌷𑍋 𑌨 𑌰𑌾𑌜𑍍𑌞𑍋 𑌨 𑌚 𑌰𑌾𑌘𑌵𑌸𑍍𑌯 । 𑌮𑌤𑍍𑌪𑌾𑌪𑌮𑍇𑌵𑌾𑌤𑍍𑌰 𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌮𑌾𑌸𑍀𑌦𑍍𑌵𑌨𑌪𑍍𑌰𑌵𑍇𑌶𑍇 𑌰𑌘𑍁𑌨𑌨𑍍𑌦𑌨𑌸𑍍𑌯 ” (நமந்தராயாநசமாதுரஸ்யா தோஷோநராஜ்ஞோநசராகவஸ்ய | மத்பாபமேவாத்ரநிமித்தமாஸீத் வநப்ரவேஸேரகுநந்தநஸ்ய) இத்யயோத்யாகாண்டே பரதஃ. செயலிடத்ததென்றது - கர்மத்திடத்த தென்றபடி. செயலடியான வென்னுடைய தோஷமென்றபடி...*

ஏழாம்பாட்டு.

பாலதுன்பங்களின்பங்கள்படைத்தாய்பற்றிலார்பற்றநின்றானே,காலசக்கரத்தாய்கடலிடங்கொண்டகடல்வண்ணாகண்ணனேயென்னுஞ்,சேல்கொடண்புனல்சூழ்திருவரங்கத்தாயென்னுமென்றீர்த்தனேயென்னுங், கோலமாமழைக்கண்பனிமல்கவிருக்குமென்னுடைக்கோமளக்கொழுந்தே.

ஆறாயிரப்படி.

(பாலதுன்பங்கள்) சுகதுஃகங்களையநுகூல ப்ரதிகூலாநுபாவ்யமாக நீபண்ணினவ்யவஸ்தையையென்னளவிலே விபர்யஸ்தமாக்கவோ பார்த்தருளிற்றென்றும்; உன்னுடைய வஶரண்யஶரண்யத்வ மெங்ஙனே போயிற்றென்றும்; ஆஶ்ரிதவிரோதிகளுடைய வாயுரவசாககணனைக ஸ்வபாவமானதிருவாழியை யேந்திக்கொண்டிருக்கிற தடியேனுக்காகவன்றோவென்றும்; திருப்பாற்கடலிலேவந்து கண்வளர்ந்தருளுகிறதும், ஸ்ரீநந்தகோபர் திருமகனாய்வந்து திருவவதாரம்பண்ணியருளினதும், கோயிலிலேவந்து கண்வளர்ந்தருளுகிறது மாஶ்ரிதார்த்தமாகவன்றோவென்றும்; த்வத்ருணைகதாரகபோஷக போக்யத்வ விரோதியாய் மத்கதமானவசேஷதோஷங்களையும்போக்கினாற்போலே, த்வத்ஸம்ஶ்லேஷ விரோதியானவென்னுடைய பாபங்களையும்போக்கி யருளாயென்றும் சொல்லிக்கொண்டு;பிரிவென்னும் சொல்லுங்கூடப்பொறுக்கமாட்டாதபடி ம்ருதுஸ்வபாவையான வென்னுடையபெண்பிள்ளை, தன்னுடைய வழகியகண்கள் நீர்மல்கவிருக்குமென்கிறாள்...*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், ஆஶ்ரிதசம்ரக்ஷணார்த்தமான வர்ணவசாயித்வாதி குணங்களையுடையவன் ஸ்வபாவங்களைச்சொல்லி க்லேசியாநின்றாளென்கிறாள்.

என்னுடை - என்னுடைய. கோமளம் - ம்ருதுஸ்வபாவமான. கொழுந்து - லதாக்ரம்போலே மெல்லியளாயிருக்கிறவிவள். பால - இடந்தோறுமிடந்தோறும். துன்பங்கள் - அநாஶ்ரிதவிஷயத்திலே துன்பங்களையும். இன்பங்கள் - ஆஶ்ரிதரிடத்திலே யின்பங்களையும். படைத்தாய் - உண்டாக்கினவனாய். எத்தனையேனுமபராதிகளாயும், பற்று-புறப்பற்று. இலார் - அற்றாரான ஜயந்தன்போல்வாரும். பற்ற - பற்றம்படி. நின்றனே - அசரண்யசரண்யனாய்நிற்பானாய். காலசக்கரத்தாய் - ஆஶ்ரிதருடைய ப்ராப்திகாலம் நீயிட்டவழக்காம்படி மாஸருதுவத்ஸராதி பரிவ்ருத்தியையுடைத்தான காலசக்ரத்துக்கு நிர்வாஹகனாய்க்கொண்டு. ஆஶ்ரிதரக்ஷணார்த்தமாக, கடல் - திருப்பாற்கடலிலே. கடல்வண்ணா - கடலிலேயொருகடல் சாய்ந்தாப்போலே. இடங்கொண்ட - கண்வளர்ந்தருளுமவனாய். க்ஷீரார்ணவநிகேதநனான வந்தவாகாரத்தைவிட்டு, கண்ணனே - ரக்ஷணார்த்தமாகக்ருஷ்ணனாய்வந்தவனே. என்னும்-என்னும். அதுக்கும்பிற்பட்டார்க்காக, சேல்-சேல்களை. கொள்-உடைத்தான. தண்-குளிர்ந்த. புனல்-புனல்.சூழ்-சூழ்ந்த. திருவரங்கத்தாய்-கோயிலிலேசந்நிஹித

னவனே. என்னும் - என்னும். அந்த சௌலப்யத்திலே, என் - நானவகாஹிக்கைக்கு. தீர்த்தனே-துறையானவனே. என்னும்-என்னும்.இவ்வார்த்தத்வநியில்வரக்கண்ணமையாலே, கோலம் - தர்ஸநீயமாய். மா - பெருத்து. மழை - குளிர்ந்த. கண் - கண்ணானது. பனி-நீர். மல்க-விஞ்சும்படி. இருக்கும்-நிர்வ்யாபாரையாய் நிற்கும்.

இப்பாட்டு-திருத்தாயார்வார்த்தையான முன்னிலை யில்லாமையாலே, அவள் தன்னுடைய வுட்கொண்டிரங்குதல். அன்றியே, கடல்வண்ண வென்னுமளவும்-தாய்வார்த்தையான நாயகன் முன்னிலையாய், கண்ணனேயென்று தொடங்கி-நாயகி பாசுரத்தைச்சொன்னளாகவும்ாம் ....*

ஈடு - ஏழாம்பாட்டு.

ஆப்ரயங்களை யநுசந்திந்து, பொறுக்குமளவுகளிலே யன்றே சுகதுஃகங்களைச் சுமத்துவது: இப்படியென்னைப் படுத்தலாமோ வென்னுகின்றளென்கிறள். "ஆஶ்ரிதரைவாழ்விக்கையு மநாஶ்ரிதரை நலிகையுமன்றிக்கே, இப்போது விபரீதமாயிற்றே வும்முடையபடி யென்கிறள்" என்றுபிள்ளான். இக்கோமளக்கொழுந்துக்கு, கைம்முதலொன்று மில்லாதார் பற்றினல் ரக்ஷிக்கக்கடவநீர்மையுடையவன் சந்நிதியிலே யிதெல்லாம் படவேண்டுகிறதென்னேட்டை ஸம்பந்தமென்று மனோரதிக்கிறள்.

(பாலவித்யாதி) இடமறிந்து சுகதுஃகங்களைப்படைத்தவனே. பாலென்றது - இடமென்றபடி. அப்பாலிப்பாலென்றல் - அவ்விடமிவ்விடமென்றபடி. பாலவாக-ஸ்த்தாநேஸ்த்தாநேயாக. உம்மைப்பிரிந்தாரெல்லாருமநுபவிக்கும் துஃகத்தை யிவளொருத்தியையு மநுபவிப்பிக்கப்பார்த்தா லிவளால் பொறுக்கப்போமோ. அங்ஙனன்றிக்கே, ஆஶ்ரிதர் வாழவுமநாஶ்ரிதர் கெடும்படியாகவுமன்றே நீபண்ணிவைத்தது. பாலென்பது-முறை. * செய்குந்தாவருந்தீமை யுன்னடியார்க்குத்தீர்த்தசுரர்க்குத் தீமைகள் செய்குந்தனன்றே. பண்டுகட்டின மர்யாதையுமிவளுக்கில்லையோ. பாலென்று - பாகமும், இயல்வும், இடமும், ந்யாயமும், இவைநாலுக்கும் பேர். தந்தாமால் பொறுக்கவொண்ணதவை தாந்தாமே யேறிட்டுக்கொள்ளும்போது நம்மால் செய்யலாவதுண்டோ; நம்பக்கல் குறையில்லை, பேறுதந்தாமதானல் தாங்களும் சிலசெய்யவேணுமென்று அவனுக்குக்கருத்தாக (பற்றிலார்பற்றநின்றனே) ஒருகைம்முத லில்லாதார்க்காகவன்றே யிங்குவந்து சாய்ந்தருளிற்று. இக்கிடைநித்யஸூரிகளுக்காகவோ. உம்முடைய பக்கல்பற்றறுத்துக்கொண்ட ஜயந்தன்போல்வார்க்கும் பற்றயிருக்குமவரன்றே நீர்; * தமேவசரணங்கதঃ அன்றே அதுண்டானலுமதுக்கொரு காலமுண்டேயென்ன (காலசக்கரத்தாய்) அக்காலசக்ரம் நீயிட்டவழக்கன்றே. ஆஶ்ரிதர்க்காகப்பகலை யிரவாக்கினவனன்றே. அன்றிக்கே,ப்ரதிபந்தகமுண்டேயென்னில்; ப்ரதிபந்தகத்துக்கு ம்ருத்யுவானதிருவாழியன்றே தரித்திருக்கிறது.பரிகாரமுண்டானலும் நான்தூரஸ்த்தனன்

றே யென்னவொண்ணாதே! (கடலிடங்கொண்ட கடல்வண்ணா)நீயெங்களைக்காலம்பார்த்தன்றே கிடக்கிறது. ஒருகடலொருகடலிலே சாய்ந்தாப்போலே அணித்தாகத் திருப்பாற்கடலிலே சாய்ந்திலையோ ஆனால் இங்கேவரலாகாதோவென்ன; அவ்வலையலைக்கேட்கமாட்டாத விடையர்க்கு மிடைச்சிகளுக்குமாக க்ருஷ்ணனாய்வந்துதவிற்றிலையோ வென்கிறாள் (கண்ணனேயென்னும்) [illegible] [நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம்புரீம்] என்று அக்கிடையைவிட்டு இடையிலேவந்துதவிற்றிலையோ.

அதுதப்பிற்றிறேயென்ன; அவ்வவதாரம் பரத்வமென்னும்படியன்றே கோயிலிலேவந்து சாய்ந்தருளிற்று (சேல்கொளித்யாதி) * ஜலாந்மத்ஸ்யாவிவவன்றே; ஜலசரஸத்த்வங்கள் ஜலத்தைப்பிரிந்து தரிக்கிலன்றே விவளும்மைப்பிரிந்து தரிக்கவல்லளாவது. அவ்வூரிலே வர்த்திக்கிற வுமக்குப்போருமோ விவளுக்கு முகங்காட்டாதொழிகிறவிடம். (என்தீர்த்தனேயென்னும்) நீயுபேக்ஷித்தாலு முன்னையொழியவெனக்குச் செல்லாதபடிபண்ணினவனே யென்னுதல், (புறம்புள்ளாரோடுபொருந்தாதபடியான சுத்தியோகத்தைச்சொல்லுதல்,) நானிழிந்தாடும் துறையென்னுதல்,

(கோலமித்யாதி) (தர்ஶநீயமாய்ப்பரந்து ப்ரமஹாமானகண் நீர்மல்கவிராநின்றாள்.) கண்ணுங்கண்ணநீருமான வழகு காட்டிலெறித்ததிலாவாவதே, இக்கண்ணநீருக்குஸாதநாநுஷ்டாநத்தைப்பண்ணி பலவேளையிலேயிழப்பதே. (என்னுடைக்கோமளக்கொழுந்தே) கலக்கப்பொருத மார்த்தவத்தையுடையவள் பிரியப்பொறுக்குமோ. "தசைமுறுகினல் வைத்யர்தண்முகம் பாராதாப்போலே, மகளவஸ்த்தையைக்கண்டு தளர்ந்து பெரியபெருமாள் முகம் பாராதேவார்த்தை சொல்லுகிறாள்" என்றருளிச்செய்வர். (கொழுந்து) உபக்ரம் தேட்டமானவளவிலே தறையிலேபடரவிடுவதே. "[illegible]" (பதிஸம்யோகஸுலபம்வய:) இப்பாட்டிலொருதலைக்கட்டின்றிக்கே யிருக்குமிதுக்குக்கருத்து-"'பரிஹரிக்குமெல்லைகழிந்தாள், நாமிவர்க்குச் சொல்லுவதென்' என்று தன்னிலேநோவுபடுகிறாள்" என்று, வங்கிப்புரத்துநம்பிபணிக்கும்.*

ஜீயர் அரும்பதம்.

ஏழாம்பாட்டு. (பாலவித்யாதி) (இக்கோமளக்கொழுந்து) இத்யாதிவாக்யத்தை - "என்னுடைக்கோமளக்கொழுந்து" என்றத்தையும், "பற்றிலார்பற்றநின்றானே" என்றத்தையுங் கடாக்ஷித்துப் பாட்டுக்கவதாரிகையாக முந்தறவநுசந்தித்து; அநந்தரம், (ஆஶ்ரயங்களை) இத்யாதி வாக்யத்வயத்தையும் - "பாலதுன்பங்களின்பங்கள் படைத்தாய்" என்றதி னர்த்தந்வயாநுகுணமாக, பதாவதாரிகையாகவாதல் தாத்பர்யமாகவாத லநுசந்திப்பது. யத்வா. "பாலதுன்பங்களின்பங்கள் படைத்தாய்" என்கிறபதத்திலே நோக்காக - அதினர்த்தத்வயாநுகுணமாக விர

ண்டவதாரிகையும், "என்னுடைக்கோமளக்கொழுந்து - கோலமாமழைக்கண்பனி மல்கவிருக்கும், பற்றிலார்பற்றநின்றானே" என்கிறபதங்களிலே நோக்காக வோர வதாரிகையும் ; ஆக, மூன்றவதாரிகையும் க்ரமேண வருளிச்செய்கிறார் (ஆஶ்ரய ங்களை யித்யாதி வாக்யத்ரயத்தாலே) என்னுதல். ஆஶ்ரயங்களையநுசந்தித்தென் றது - அவர்களவர்களளவுகளை யநுசந்தித்தென்றபடி. பொறுக்கத் தக்கினவர்களை விசாரித்தென்றபடி. இப்போது விபரீதமாகையாவது - ஆஶ்ரிதையானவிவளை து:க மநுபவிப்பிக்கை. மநோரதிக்கிறு ளென்றது - ஸ்வகதமாக வெண்ணுகிறு ளென்றபடி.

சப்தார்த்தம் (இடமறிந்தித்யாதி) "பால்" என்றால் - இடத்தைச் சொல்லுமோவென்ன ; லௌகிகப்ரயோகம் (அப்பாலித்யாதி) "பாலதுன்பங்களின் பங்கள்படைத்தாய்" என்கிற தலைமகள் வார்த்தையை யநுவதிக்கிற திருத்தாயா ருடைய ஹார்த்தபாவம் (உம்மைப்பிரிந்தாரித்யாதி) "பாலதுன்பங்கள்" இத்யா தி - திருத்தாயார் வார்த்தையாகில், (முகம்பாராதே வார்த்தை சொல்லுகிறாள்) என்கிற மேலில் வாக்யத்தோடே விரோதிக்கும். (இப்படி யென்னைப்படுத்தலா மோவென்னாநின்றாள்) என்கையாலே - தலைமகள்வார்த்தை யென்னுமிடம் ஸ்புட மிறே. அர்த்தாந்தரம் (அங்ஙனன்றிக்கே ஆஶ்ரிதரித்யாதி) "பால்" என்றால்-இவ் வாகாரத்வயத்தையுங் காட்டுமோவென்ன (பாலென்பது முறையென்று) கீழ்ச் சொன்ன வாகாரத்வயத்துக்கும் ப்ரமாணம் (செய்குந்தாவித்யாதி) ஆக "பால" இத்யாதிக்கு - பொறுக்கத்தக்க விடமறிந்து தந்தத் ஸ்தாநங்களிலே சுகது:கங்க ளைப் படைத்தவனே யென்று முந்தினவர்த்தம் ; பால-பொறுக்கத்தக்க விடங்களி லே யென்று சப்தார்த்தம் ; (அறிந்து) என்றது - அர்த்தாத்ஸித்தம். ஆஶ்ரிதரான முறையிலே சுகத்தையும் அநாஶ்ரிதரானமுறையிலே து:கத்தையும் படைத்தவனே யென்றிரண்டாமர்த்தம். இரண்டாமர்த்தத்துக்குச் சேர ஹார்த்தபாவம் (பண்டு கட்டினவித்யாதி) "பால்" என்றால் - இடத்தையும் முறையையுங்காட்டுமோவென் ன (பாலென்றித்யாதி) ந்யாயம் - முறை.

மேற்பதத்தி லர்த்தத்வயாநுகுணமாக மேலுக்கவதாரிகாத்வயம் (தந்தாமா லித்யாதிவாக்யத்வயம்) த்விதீயசங்கதிக்குத்தரம் (ஒருகைம்முதலித்யாதிவாக்ய த்வயம்) ப்ரதமஸங்கதிக்குத்தரம் (உம்முடையபக்கலித்யாதி) ஜயந்தன் பற்றி னானேவென்ன, ப்ரமாணம் (தமேவேத்யாதி) "ஸ பித்ரா ச பரித்யக்த:" (ஸ பித்ராசபரித்யக்த:) இத்யாதி.

"ஜயந்தன்போல்வார்க்கும்" இத்யாதிக்கநுகுணமாக ஸங்கதி (அதுண்டா னாலுமித்யாதி) அதுண்டானாலும் - ஸாபராதர்க்கும் பற்றாயிருக்குமதுண்டானாலு மென்றபடி. அப்படி காலம் நானிட்ட வழக்காக விநியோகங்கொள்ளக் கண்டது ண்டோ வென்ன (ஆஶ்ரிதர்க்காகவித்யாதி) "ஒருகைம்முதலில்லாதார்" இத்யா திக்கநுகுணமாக ஸங்கதி (அன்றிக்கேயித்யாதி) "காலம்" என்று - காலத்தை யும், ம்ருத்யுவையும் சொல்லுகிறது. காலசக்ரநிர்வாஹக னென்று முந்தினவர்த்த ம், ம்ருத்யுவான சக்கரத்தையுடையவனென்றிரண்டாமர்த்தம்.

"காலசக்கரத்தாய்" என்றதின் முந்தின வர்த்தத்தால் பலிதம் - ஆஶ்ரித ரபேக்ஷாகாலமே ரக்ஷிக்கைக்குக் காலமென்றாய், அப்படி யாஶ்ரித ரபேக்ஷாகாலம் பார்த்திருந்த விடமுண்டோவென்னவென்று ஸங்கதியை விவக்ஷித்து பாவாந்தரம் (நீ யெங்களை யித்யாதி) "கடல்வண்ணா" என்னாதே, "கடலிடங்கொண்ட" என்று விசேஷித்ததுக்கு பாவம் (ஒருகடலித்யாதி)

(அவ்வலையலைக்கேட்கமாட்டாத) என்றவிடத்திலே - ஏகதத்விதத்ரிதர்கள் கதையை நினைப்பது. (அலையலை) அலையென்று - சப்தமாய், அலையலையென்று-மஹாசப்தமென்றபடி. கடலிடங்கொண்டவனோ கண்ணனாகவந்தானென்ன, ப்ரமாணம் (நாகபர்யங்கமித்யாதி) "ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந:" (ஏஷநாராயணஸ்ஸ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந:) இத்யாதி. இடையிலே-மத்யே, இடையரிலே யென்றும்.

"சேல்கொள்" இத்யாதி பதப்ரயோகத்துக்கு பாவம் (ஜலாதித்யாதி வாக்யத்வயம்) "திருவரங்கத்தாய்" என்றதுக்கு பாவம் (அவ்வூரிலேயித்யாதி)

"தீர்த்தன்" என்றதுக்கு முந்தினவர்த்தம் - பாவநத்வத்தைப் பற்ற; இரண்டாவது - சௌலப்யத்தைப்பற்ற. முந்தினவர்த்தத்துக்கு சப்தநிர்வாஹம், தீர்த்தன் - உனக்கே யற்றுத்திரப்பண்ணினவனென்று; இரண்டாமர்த்தத்துக்கு, இழிந்தாடுந் துறைபோலே சுலபனாயிருக்கிறவனே யென்று.

மழை - குளிர்த்தி. "கோலமாமழைக்கண்" இத்யாதி பதப்ரயோகத்துக்கு பாவம் (கண்ணும்கண்ணநீருமித்யாதி வாக்யத்வயம்) "தண்புனல்சூழ்திருவரங்கத்தாய்" என்றத்தைப்பற்ற (சாதநாநுஷ்டாநத்தைப் பண்ணியென்றது).

"கோமளம்" என்றதுக்கு பாவம் (கலக்கவித்யாதி) கலக்கப்பொறுத - காடாலிங்கநார்த்தமாக விட்டணைக்கவும் பொறுத வென்றபடி. கீழ்ப்பாட்டுக்களிற்போலே "திருவரங்கத்தாய்" என்று அவனை சம்போதியாதே, ஸ்வகதமாகச் சொல்லுகிறதுக்கு பாவம் (தசைமுறுகினலித்யாதி) (அருளிச்செய்வர்) ஜீயரென்றத்யாஹார்யம். "கொழுந்து" என்றதுக்கு பாவம் (உபக்ரமித்யாதி) "கொழுந்து" என்றதுக்கு ப்ரமாணம் (பதீத்யாதி) "பதிஸம்யோகஸுலபம் வயோ த்ருஷ்ட்வா ச மே பிதா। சிந்தார்ணவகத: பாரம் நாஸஸாதாப்லவோ யதா" (பதிஸம்யோகஸுலபம் வயோத்ருஷ்ட்வாசமேபிதா। சிந்தார்ணவகத꞉பாரம்நாஸஸாதாப்லவோயதா) இதி அநஸூயாம் ப்ரதிஸீதா.

"தசைமுறுகினல்" இத்யாதிவாக்யவிவரணமாதல், க்ரியாபதமில்லாமைக்குபாவமாதல் (இப்பாட்டிலித்யாதி) தலைக்கட்டு - க்ரியாபதம். "கோலமாமழைக்கண்" இத்யாதிக்கு - "தர்ஶநீயமாய்ப் பெருத்துக்குளிர்ந்த கண்ணானது நீர் விஞ்சும்படி நிர்வ்யாபாரையாயிராநிற்கும்" என்றுரையில் சப்தார்த்தம்................*

எட்டாம்பாட்டு.

கொழுந்துவானவர்கட்கென்றுங்குன்றேந்திக்கோநிரைகாத்தவனென்னு
மழுந்தொழுமாவியனலவெவ்வுயிர்க்குமஞ்சனவண்ணனேயென்னு [ஞ்
செழுந்துமேறேக்கியிமைப்பிலளிருக்குமெங்ஙனேநோக்குகேனென்னு
செழுந்தடம்புனல்சூழ்திருவரங்கத்தாயென்செய்கேனென்றிருமகட்கே.

ஆறாயிரப்படி.

(கொழுந்து) ஸ்ரீவைகுண்டநிலயனாய் * அயர்வறுமமரர்களதிபதியா யவாப்த ஸமஸ்தகாமனாயிருந்துவைத்து, கோபவேஷபூஷிதனாய்க்

கொண்டு பிறந்தருளி, வர்ஷத்திலே யதிபீட்யமானமான கோப கோபீ ஜநங்களையும் பசுக்களையும் ஸ்ரீகோவர்த்தநத்தையெடுத்து ரக்ஷித்தருளின வுன்னுடைய நிரவதிகமான காருண்யகுணத்துக்குங்கூட விஷயமல்லேனோவென்னும். பின்னையும் நீபார்த்தருளா தொழிந்தவாறே யழாநிற்கும். தன்னுடைய வபேக்ஷிதம்பெறுகைக்காக வுன்னைத்தொழாநிற்கும். தன்னுடைய வாத்மஸ்வரூப மங்காரமயமாம்படி தீர்க்கோஷ்ண நிஸ்வாஸத்தைப்பண்ணும். என்னுடைய ஸந்தாபமெல்லாம் போம்படி, உன்னுடைய வதிசீதளமான வஞ்சனமேனியைக்காட்டி யருளாயென்னும். நீவரும்படி காணவேணுமென் றெழுந்திருந்த நிமிஷலோசனையா யாகாசத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும். அங்குக்காணாதொழிந்தவாறே, உன்னைக்காண்கைக் குபாயமேதோவென்னும். செழுந்தடம்புனல்சூழ் திருவரங்கத்தாய், என்றிருமகட்கினி நான்செய்வ தென்னென்று கூப்பிடுகிறாள்... ... ... *

பன்னீராயிரப்படி.

அநந்தரம், உன்னுடைய வதிமாநுஷசேஷ்டிதத்திலே யகப்பட்டு மேன்மேலன க்லிஷ்டையாகிற விவளுக் கென்செய்வேனென்கிறாள்.

வானவர்கட்கு-நித்யசூரிகளுக்கு. கொழுந்து-சிரோபூதனானவன். என்னும்-என்னும். அந்தமேன்மையோடேகூட ஆஸ்ரிதரக்ஷணார்த்தமாக வவதரித்து, குன்று-மலையை. ஏந்தி-அநாயாஸேநவேந்தி. கோநிரை-பசுக்களை. காத்தவன்-ரக்ஷித்தவதிமாநுஷசேஷ்டிதத்தையுடையவனே. என்னும்-என்னும். அந்தரக்ஷணம் தன்னளவிலேபலியாமையாலே, அழும்-பக்திபரவசரைப்போலே கண்ணும் கண்ணநீருமாயிருக்கும். தொழும்-ப்ரபந்நரைப்போலே அஞ்சலிபந்தம்பண்ணாநிற்கும். இரண்டும்பலியாமையாலே, ஆவி-அநாஹ்யமான ஆத்மவஸ்து. அனல-தக்தமாம்படி. வெ-வெவ்விதாக. உயிர்க்கும்-மூச்சுவிடும். அஞ்சனவண்ணனே - இப்படியார்த்தையாக்கின ஸ்யாமளவிக்ரஹத்தையுடையவனே. என்னும் - என்னும். “இக்குரலைக்கேட்டுவரக்கூடும்” என்று, மேல்-மேலே. எழுந்து-தலையெடுத்து. நோக்கி-பார்த்து. இமைப்பிலள்-இமையாதே. இருக்கும்-இருக்கும். எங்ஙனே-எந்தப்ரகாரத்தாலே. நோக்குகேன்-உன்னைக்காண்பேன். என்னும்-என்னும். செழு-தர்ஸநீயமாய். தடம் - பெருத்த. புனல்-புனல். சூழ்-சூழ்ந்த. திருவரங்கத்தாய் - கோயிலிலேஸந்நிஹிதனானவனே. என்-என்னுடைய. திருமகட்கு-லக்ஷ்மீஸமானையானவிவளுக்கு. என்-எத்தை. செய்கேன்-செய்வேன்.

ஆர்த்திக்கடியான ப்ரேமத்தை யளவுபடுத்துவேனோ, வாராதவுன்னை வரப்பண்ணுவேனோ, இரண்டும் முடியாதிறேயென்று கருத்து ....*

ஈடு - எட்டாம்பாட்டு.

இவளுக்கு மேன்மேலனவருகிறநோவுகள் தீர்க்கைக்கு நான்செய்வதென்னென்கிறாள்.

(கொழுந்துவானவர்கட்கென்னும்) நித்யசூரிகளுக்கும் தலையானவனேயென்னும். அன்றியே, அவர்கள் வேராகத்தான் கொழுந்தானவனென்னுதல். (அவர்களாலே லப்தஸத்தாகனுகை.)

(குன்றேந்தி) லோகாந்தரத்தில் பரிமாற்றந்தேடவேணுமோ, பசுக்களுக்கும் தத்ப்ராயரான இடையர்க்கு முதவினவனன்றே. மேன்மையில்லாமையிழக்கிறேனோ, நீர்மையில்லாமை யிழக்கிறேனோவென்னும்.

(அழும்) மலையைதரித்தொருவர்ஷத்தைப்பரிஹரித்த நீரிவ்வர்ஷத்தைப் பரிஹரித்தாலாகாதோ. " बहुधासन्ततदुःखवर्षिणि " (பஹுதாஸந்ததது:கவர்ஷிணி), என்கிறவிது பரிஹரித்தாலாகாதோ. (அழும்) பாலர்செய்வதையும் செய்யுமென்னுதல், ஸ்நேஹிகள் செய்வதையும் செய்யுமென்னுதல்.

(தொழும்) புகலற்றார்செய்வதைச் செய்யுமென்னுதல், வேதாந்தஜ்ஞாநமுடையார் செய்வதைச்செய்யுமென்னுதல்.

(ஆவியனலவெவ்வுயிர்க்கும்) தொழுதவநந்தரம் வரக்காணாமையாலே, " ப்ரஹ்மாஸ்த்ரம்வாய்மடிந்தது " என்று, அநாஹ்யமான வாத்மவஸ்து அக்நிமயமாம்படி நெடுமூச்செறியும். "दीर्घमुष्णं च निःश्वस्य" (தீர்க்கமுஷ்ணம்சநிச்வஸ்ய) என்கிறபடியே.

(அஞ்சனவண்ணனேயென்னும்) நெருப்பிலே நீரைச்சொரிந்தாப்போலே அக்குளிர்ந்த வடிவைக்கொண்டுவந்து தோற்றவல்லையேயென்னும். " मेघश्यामम् " (மேகச்யாமம்) என்னும்வடிவிறே - கைகேயிவார்த்தையால் பிறந்ததாபமடைய வாறுங்கிடீ! ரவ்வடிவழகிலே விழிக்கப்பெற்றோமாகி லென்றார்களிறே.

(எழுந்திருக்கும்) வடிவைநினைத்தவாறே தரித்தெழுந்திருந்து, வரஸம்பாவனையுள்ள திக்கைப்பார்த்து, "ப்ரதமபரிஷ்வங்கமேதொடங்கிக் காணவேணும்" என்றிமைகொட்டாதே பார்த்துக்கொண்டிருக்கும்.

(எங்ஙனேநோக்குகேனென்னும்) தான்பார்த்ததிக்கில் வரக்காணாமையாலே, "பின்னேவந்துகட்டிக்கொள்ளும்" என்று புரிந்துபாரா நிற்கும். (எழுந்து மேல்நோக்கி) வடிவைநினைத்தவாறே தளர்த்தியிலே யெழுந்திருந்து, " ஆனைக்குதவினாப்போலே வரக்கூடும் " என்று மேல்நோக்கிப்பார்த்து, " ப்ரதமபரிஷ்வங்கமேதொடங்கிக்காணவேணும் " என்றிமைகொட்டாதே யிருக்கும்; (எங்ஙனேநோக்குகேனென்னும்) பின்னையும் தோற்றக்காணாமையாலே, நானுன்னைக்காணும் விரகேதென்னும்.

(செழுந்தடம்புனல்சூழ் திருவரங்கத்தாய்) அழகிதாய்ப்பெருத்த நீர்சூழ்ந்தகோயிலை யிடமாகவுடையவனே. இப்படி ப்ரமஹரமானதேசத்திலே நீர்வந்துசாய்ந்த திவள்வரவுபார்த்தன்றோ. அத்தலை யித்தலையாயிற்றே. (என்செய்கேன்) கர்த்தவ்யமடங்கலும் தானேயநுஷ்டித்தாள், நானினிச்செய்வதென். உபாயாந்தரசாத்யமோ வும்முடையதர்மம்.• (என்திருமகட்கே) இவளையிழக்கலாமோவுமக்கு. உம்மையொருவரையு மாசைப்பட்ட வேற்றமன்றோவவளது, உம்மையுமவளையும்

சேரவாசைப்பட்ட வேற்றுமை... யவளல்லளோவிவள். சாக்ஷால்லக்ஷ்மியோடொக்கச் சொல்லலாமாகாதே யிவளை..............................*

ஜீயர் அரும்பதம்.

எட்டாம்பாட்டு (கொழுந்தித்யாதி) “ கொழுந்துவானவர்கட்கென்னும் ” என்றுதொடங்கி “ என்திருமகட்கு - என்செய்கேன் ” என்னுமளவுங்கடாக்ஷித்த வதாரிகை (இவளுக்கித்யாதி)

கொழுந்து வ்ருக்ஷத்துக்கு ப்ரதாநமாகையாலே (தலையானவனேயென்றது) இரண்டாமர்த்தத்துக்கு, அவர்கள் வ்யஸநத்துக்குத்தா னபிமாநியென்றுபலிதம்.

கீழிற்பதத்தோடே யிப்பதத்துக்கு ஸங்கதி (லோகாந்தரத்திலித்யாதி) “கோன், நிரை” என்று பதச்சேதமாய் (தத்ப்ராயரானவிடையர்) என்னுதல். கோநிரையென்று - பசுநிரையென்னுதல், “கொழுந்துவானவர்கட்கு” என்றத்தையுங் கூட்டிபாவம் (மேன்மையில்லாமையித்யாதி)

“ குன்றேந்தி ” என்றத்தோடேகூட்டி “ அழும் ” என்றதுக்குபாவம் (மலையையித்யாதி) விவரணம் (பஹுதேத்யாதி) “ அவிவேகக⁴நாந்த⁴தி³ங்முகே ப³ஹுதா⁴ ஸந்தத து³꞉க²வர்ஷிணி ” (அவிவேககநாந்தத்திங்முகேபஹுதாஸந்தத துஃகவர்ஷிணி) இதிஸ்தோத்ரே. “ அழும் ” என்றதுக்கர்த்தத்வயம் (பாலரித்யாதி வாக்யத்வயம்)

“தொழும்” என்றதுக்கர்த்தத்வயம் (புகலற்றுரித்யாதிவாக்யத்வயம்) புகலற்றொன்றது - “ க்ருதாபராத⁴ஸ்ய ” (க்ருதாபராதஸ்ய) இத்யாதிப்படியே சாபராதரென்றபடி. வேதாந்தஜ்ஞாநமுடையாரொன்றது - “ அஞ்ஜலி꞉ பரமா முத்³ரா ” (அஞ்ஜலிஃபரமாமுத்ரா) இத்யாதிப்படியே ப்ரபத்திவைபவமறிந்தவர்களென்றபடி. யத்வா, புகலற்றொன்றது - ப்ரபத்திநிஷ்டரை; வேதாந்தஜ்ஞாநமுடையாரொன்றது-உபாசகரை. உபாசகர்க்கு “ மாம் நமஸ்குரு ” (மாம்நமஸ்குரு) என்று தொழுகையுண்டிறே. புகலற்றார் - அநந்யகதிகள்.

“ ஆவி - ” ஆத்மா. “ அனல - ” அக்நிமயமாம்படி. தக்தமாம்படி. “ வெவ்வுயிர்க்கும் ” வெவ்விதாக மூச்சுவிடுமிதிசப்தார்த்தஃ. (அக்நிமயமாம்படி நெடுமூச்செறியும்) என்றதுக்குப்ரமாணம் (தீர்க்கமித்யாதி) “ தீ³ர்க⁴முஷ்ணம் ச நிஶ்வஸ்ய மேதி³நீமவலோகயந் । உவாச மேக⁴ஸங்காஶம் விபீ⁴ஷணமுபஸ்தி²தம் ” (தீர்க்கமுஷ்ணம்சநிஶ்வஸ்ய மேதிநீமவலோகயந் । உவாசமேகஸங்காஶம் விபீஷணமுபஸ்த்திதம்) இதிராவணவதாநந்தரோராமஃ.

“ அஞ்சனம் ” என்று-கறுப்பாய், அத்தால்-குளிர்த்திசித்தம். “ வடிவுதாபஹரம் ” என்றதுக்குப்ரமாணம் (மேகஶ்யாமமித்யாதி) “ மேக⁴ஶ்யாமம் மஹாபா³ஹும் ஸ்தி²ரஸத்த்வம் த்³ருட⁴வ்ரதம் । கதா³ த்³ரக்ஷ்யாமஹே ராமம் ஜக³த꞉ ஶோகநாஶநம் ” (மேகஶ்யாமம்மஹாபாஹும்ஸ்த்திரஸத்த்வம்த்ருடவ்ரதம்।கதாத்ரக்ஷ்யாமஹேராமம் ஜகதஶ்ஶோகநாஶநம்) இத்யயோத்யாகாண்டே ராமதித்ருக்ஷயாசித்ரகூடம் ப்ரதிகச்சந்தஃபௌராஃ. இஶ்ஶ்லோகத்துக்கர்த்தம் (கைகேயியித்யாதி) “த்³ரக்ஷ்யாமஹே” (த்ரக்ஷ்யாமஹே) என்றதுக்குபாவம் (அவ்வடிவழகிலேயித்யாதி) என்றார்களிறேயென்றது - பஹுவசநத்தைப்பற்ற.

மோஹித்தவளொழுந்திருக்கக் கூடுமோவென்ன (வடிவையித்யாதி) "இமைப்பு -" இமைகொட்டுகை. இமைப்பிலளிருக்கும்-இமைகொட்டாதே யிருக்கும்.

" எங்ஙனே நோக்குகேனென்னும் " என்றதுக்கர்த்தம் (தான்பார்த்தவித்யாதி) அதாவது - பின்னைகட்டிக்கொள்ளுமென்று புரிந்துபார்த்து, பின்னையிருந்தால் நான் நோக்கும்படியெங்ஙனே யென்னுமென்றபடி. புரிந்து - திரும்பி "எழுந்து மேனோக்கி யிமைப்பிலளிருக்கும் " என்றதனைத்தத்தை யநுவதித்துக் கொண்டு, " எங்ஙனேநோக்குகேன " என்றதுக்கர்த்தாந்தரமருளிச்செய்கிறார் (வடிவையித்யாதி) " எங்ஙனேநோக்குகேன் " என்றதுக்கர்த்தாந்தரம் (பின்னையுமித்யாதி) அதாவது - பின்னையும் தோற்றக்காணுமையாலே " சாதநாநுஷ்டாநம்பண்ணவேணும் ". என்று வாராநிருக்கிறுளென்றுபார்த்து, நானுமினைக்காணும்விரகேதென்னுமென்றபடி. விரகு-ஸாதநம்.

நடம் - பெருமை. " செழுந்தடம் " இத்யாதி பதப்ரயோகத்துக்குபாவம் (இப்படியித்யாதி)

" என்செய்கேன் " என்றதுக்கிரண்டுபாவம்; முந்தினது (கர்த்தவ்யமித்யாதி) கர்த்தவ்யமடங்கலுமென்றது - "அழுந்தொழும்" இத்யாதியை. அன்றிக்கே, சாதநாநுஷ்டாநம் பண்ணவேண்டாவோவென்கிற சங்கையிலே " என்செய்கேன் " என்றதுக்கர்த்தாந்தரம் (உபாயாந்தரேத்யாதி) "என்திருமகள்" என்றதுக்கு-லக்ஷ்மியில் வ்யாவ்ருத்தியாகபாவம் (இவளையித்யாதி) அவளில் வ்யாவ்ருத்தி தன்னையருளிச்செய்கிறார் (உம்மையொருவரையு மித்யாதிவாக்யத்வயத்தாலே) "திருமகள்" என்றதுக்குபாவம் (சாக்ஷாதித்யாதி) ....*

௩௦௮

ஒன்பதாம்பாட்டு.

என்திருமகள்சேர்மார்பனேயென்னுமென்னுடையாவியேயென்னும்
நின்திருவெயிற்றாலிடந்துநீகொண்டநிலமகள்கேள்வனேயென்னும்
அன்றுருவேழுந்தழுவிநீகொண்டவாய்மகளன்பனேயென்னும்
தென்திருவரங்கங்கோயில்கொண்டானேதெளிகிலேன்முடிவிவடனக்கே.

அருளிச்செயல் ஆறாயிரப்படி.

(என்திருமகள்) சர்வலோகமஹேச்வரியாய் * ஸமஸ்த கல்யாணகுணாம்ருதோததியா யிருந்த பெரியபிராட்டியார்க்கும் சேஷியாய், உன்னுடைய குணங்களாலே தாஸ்யமுபாகதையான ஸ்ரீபூமிப்பிராட்டியாருக்கும் சேஷியாய், தன்னுடைய நிரவதிக ஸௌந்தர்ய ஸௌகந்த்ய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாத் யஸங்க்யேய கல்யாண குணங்களாலே பரமபோக்யபூதையான நப்பின்னைப்பிராட்டிக்கும் ப்ரணயியாயிருந்த நீ; தத்பரிக்ரஹமாகையாலே யென்னை த்வதேகதாரகை யாக்கினுப்போலே, இன்னமும் " தத்பரிக்ரஹ " (தத்பரிக்ரஹம்) என்றென்னை யுன்திருக்கண்களாலே பார்த்தருளா யென்று சொல்லும். இவளுக்காகக் கோயிலிலே கண்வளர்ந்தருளுகிற நீ யிவளைப் பார்த்தருளுகிறிலை, இனியிவளுக்கென்னுய்விளையுமென் றென்று மறிகிறிலேனென்கிறுள்.........*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், லக்ஷ்மீபூமிநீளாநாயகனான வுன் ப்ரணயித்வாதிசயத்திலே யகப்பட்ட விவளுக்குக் காரியந் தலைக்கட்டவிருக்கிறபடி யறிகிறிலேனென்கிறாள்.

என் - எனக்கு ஸ்வாமிநியான. திருமகள் - லக்ஷ்மியானவள். சேர் - தனக்கபிமதஸ்த்தாநமாகச் சேர்ந்த. மார்பனே - திருமார்பை யுடையவனே. என்னும்- என்னும். அச்சேர்த்தியழகோடே, என்னுடை - எனக்கு. ஆவியே - தாரகமான ப்ராணனாய்க்கொண் டென்னெஞ்சிலே யிருந்தவனே. என்னும் - என்னும். “நீலவரையிரண்டுபிறைகவ்வி” என்கிற கணக்கிலே வடிவுக்குப் பரபாகமான. நின்-உன்னுடைய. திருவெயிற்றால் - திருவெயிற்றாலே. இடந்து - ப்ரளயத்திலேமுழுகிஅண்டகபாலத்தினின்று மிடந்தெடுத்து. நீ - நீ. கொண்ட - உனக் கபிமதை யாகக்கொண்ட. நிலமகள் - ஸ்ரீபூமிப்பிராட்டிக்கு. கேள்வனே - சந்ருஶநாயகனே. என்னும் - என்னும். அன்று - ருஷபங்களை சுலகமாகநியமித்தவன்று. உரு - இடிபோலே பயாவஹத்வநியான ருஷபங்கள். ஏழும் - ஏழையும். தழுவி - அபிமதவிஷய கண்டாஶ்லேஷம்போலே அநாயாஸேந தழுவி. நீ - நீ. கொண்ட - நிதியெடுத்துக் கொண்டாப்போலே ஸ்வீகரித்த. ஆய்மகள் - சந்ருஶகோபகுலத்திலேபிறந்த நப்பின்னைப்பிராட்டிக்கு. அன்பனே - பக்தபாவனானவனே. என்னும் - என்னும். இப்படி யவர்கள்பக்கலிலே யுன் ப்ரணயித்வத்தை ப்ரகாசிப்பித்தாப்போலே யிவளுக்குமுதவுகைக்காக, தென் - கட்டளைப்பட்ட. திருவரங்கம் - ஸ்ரீரங்கக்ஷேத்ரத்தை. கோயில் - வாஸஸ்த்தாநமாக. கொண்டானே - அங்கீகரித்தவனே. இவள்தனக்கு- இவளுக்கு. முடிவு - ஆர்த்திபர்யவஸாந ப்ரகாரம். தெளிகிலேன் - அறிகிறிலேன். உருமென்றும் பாடமாம். ....*

ஈடு - ஒன்பதாம்பாட்டு.

இவளுடைய து:கத்துக் கொருமுடிவு காண்கிறிலேனென்கிறாள்.

(என்திருமகள்சேர்மார்பனே யென்னும்) என் பேற்றுக்குப் புருஷகாரமில்லாமலிழக்கிறேனோவென்னும். விசிஷ்டத்திலன்று, என்னென்கிறவிது - விசேஷணம்ஶத்திலே. (அதாவது; என் என்கிறவிடம் - திருமகளிலே யந்வயிக்கிறது, மார்பனே என்கிறவிடத்திலந்வயிக்கிறதன்று.) அநந்தாழ்வான் தன் பெண்பிள்ளையை “என்திருமகள்” என்று திருநாமஞ் சாத்தினான். பட்டர் பெருமாளுக்கு, “அடியேனை ‘ஸ்த்ரீதநமாகப் பிராட்டிக்குவந்தவன்’ என்று திருவுள்ளம்பற்றவும், நானும் ‘இவரெங்கள் நாய்ச்சியார்க்கு நல்லர்’ என்று, அவ்வழியே ‘அழகியமணவாளப்பெருமாள்’ என்று நினைத்திருக்கவுமாகவேணும்” என்று வேண்டிக்கொண்டார். (சேர்மார்பனே) ரஹஸ்யத்தில் நித்யயோகத்தைச்சொல்லுகிறது. அவளொருக்ஷணம் பிரியவிருக்கிலன்றோ வெனக்குப் பேறு தாழ்க்கவேண்டுவது. “பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்யுமவைகேட்கைக்காக நஞ்சீயரை யழைத்தருளித் தாமமுதுசெய்யா நிற்கச்செய்தே, இத்திருவாய்மொழி யியலைக் கேட்டருளாநிற்க இப்பாட்டளவிலே வந்தவாறே ‘என்திருமகள்சேர்மார்பனேயென்னு மென்னுடையாவியே யென்னும்’ என்றியலைச் சேர்த்தருளிச்செய்ய, அத்தைக் கேட்டுக் கையை

யுதயி 'ஸ்ரீரங்கநாத' என்றஸோயிலே சாய்ந்தருளினார் பட்டர்" என்றருளிச்செய்வர். "அப்போது திருமேனியிலே பிறந்த விக்ருதியைக்கண்டு 'இவர்க்கு பகவத்ப்ராப்தி யணித்தாகிறதோ' என்றஞ்சி யிருந்தேன்" என்று ஜீயரருளிச்செய்வர். (என்னுடையாவியே யென்னும்) இவர்க்கு ப்ராண ரூவாயுவிசேஷமல்ல, ஒருமிதுநமாயிற்று. திருமகள்சேர்மார்பனைக்கொண்டெனக்கு தாரகனானவனே யென்னும்.

(நின்னித்யாதி) ப்ராணியிகளுக்குக் காரியஞ்செய்யும்போதுன்னை யழியமாறியன்றோ காரியஞ்செய்வது. ஸ்ரீபூமிப்பிராட்டிபக்கல்முகம் பெறலாவ தவள்விபூதியைத் தன்முகே நோக்கினையிறே. "நின்திருவெயிறு" என்றுமித்தனை யமருக்கு. (இடந்து நீகொண்ட) நீ யிடந்துகொண்ட. ஸ்ரீபூமிப்பிராட்டிக்கு வல்லபனானவனே.

(அன்றித்யாதி) ஒருநாளுந்தவினை நீ யின்றுதவினாலாகாதோ. நப்பின்னைப் பிராட்டியுடைய நசையை - அன்றென்றுமித்தனை. ஒன்றிரண்டன்றிக்கே யிருக்கிற ருஷபங்களையெறையும் தழுவி. அவள்திருமுலைத்தடத்தை யணைத்தாப்போலே யிருக்கிறதாயிற்று அவளைப்பெறுகைக்குபாயமாகையாலே. உருவென்று - இடி. இடிபோலே பயங்கரமான குரலையுடைய வேறென்றுதல். உருவென்று - மிடுக்காய், மிடுக்குந்தான் வடிவுகொண்டாப்போலே யென்றுதல். "உருவுட்கு" என்றுருச்சொல்லு. நிகொண்ட - நிகைக்கொண்ட. (ஆய்மகளன்பனேயென்னும்) என்னைக் கைவிட்டு என் ஸ்வாமிநிகள்பக்கலிலெங்ஙனே முகம்பெற விருக்கிறுயென்னும்.

(தென்திருவரங்கங்கோயில்கொண்டானே) தெற்குத்திக்குக்கு ஸ்லாக்யமான ஸ்ரீரங்கக்ஷேத்ரத்தை வாஸஸ்தாநமாக வுடையவனே. "எருதேழடர்த்தவவதாரத்திலே முகங்காட்டப் பெற்றதில்லை" என்னும் குறையுண்டோ. அவதாரங்கள்போலன்றியே நித்யவாசம்பண்ணுகிறது, பிற்பாடர்க்குதவவன்றோ. "ஸ்தநஸ்ஸ்வம் ஸ்தாநமுத்தமம்" (ஸ்தநஸ்ஸ்வம்ஸ்தாநமுத்தமம்) என்னவேண்டாதபடி கோயில்கொண்டானாயிற்று. (தெளிகிலேன்) அங்குக் குறையற்றபின்பு "தப்பாது" என்று தெளியவிறே யடுப்பது, அது மாட்டுகிறிலேன். "மாஸுச:" (மாஸுச:) என்றதை யநுஷ்டாநபர்யந்த மாக்கிக்கொண்டு நிற்கிறதால், "ஸ்ந்தோஸ்மி கதஸந்தேஹ:" (ஸ்திதோஸ்மி கதஸந்தேஹ:) என்றிருக்கவிறேயடுப்பது; அதுமாட்டுகிறிலேன். இவள் தனக்கு - முடிவு - தெளிகிறிலேன். இவளவஸ்தை யிதுவாயிருக்க, ஒரு ஜ்ஞாநலாபத்தாலே யாறியிருக்கப்போமோ..*

ஜீயர் அரும்பதம்.

•ஒன்பதாம்பாட்டு. (என்றிருமகளித்யாதி) "தெளிகிலேன் முடிவிவள்தனக்கே" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை (இவளுடையவித்யாதி)

பிராட்டியோட்டைச் சேர்த்தி சொன்னதுக்கு பாவம் (என்பேற்றுக் கித்யாதி) "என்" என்கிறது - * திருவுக்கு விசேஷணமென்கிறார் (விசிஷ்டத்திலித்யாதி) * திருவுக்கு விசேஷணமாக்கினதுக்கு சம்வாதம் (அநந்தாழ்வானித்யாதி) சம்வாதாந்தரம் (பட்டரித்யாதி) (வேண்டிக்கொண்டார்) "ஊ தாரக்ஷி" (மாதர்லக்ஷ்மி) இத்யாதியாலே வேண்டிக்கொண்டாரென்றபடி. "சேர்" என்கிறவர்த்தமானத்தாலே - மதுப்பிலர்த்தம் சொல்லுகிறதென்கிறார் (ரஹஸ்யத்திலித்யாதி) ரஹஸ்யமாவது - மந்த்ரரத்நம். நித்யயோகத்துக்கு பாவம் (அவளொருக்ஷணமித்யாதி) இவளுக்கு மிதுநம் ப்ராணனென்று வக்ஷ்யமாணத்துக்குசம்வாதம் (பெருமாளுக்கித்யாதி) விண்ணப்பஞ் செய்யுமவை கேட்கைக்காக வென்றது - ஸந்நிதியிலே புராணம்ஸ்லோகார்த்தோபந்யாஸோபயுக்தமாகச் சந்தைத்திரட்டுக்க ளொடுக்கைக்கு மூலம் கேட்கைக்காகவென்றபடி. இயலே - சப்தத்தை. இயல்-சப்தமும், கானமும். இப்படி சேர்த்தத்தால் தோற்றின வர்த்தமேதென்ன (இவர்க்கு ப்ராணனித்யாதி) "என்றிருமகள்சேர்மார்பனே" என்று சொல்லப்படுகிற வென்னுடைய ப்ராணனேயென்னுமென்று சப்தார்த்தம்.

பதப்ரயோகத்துக்கு பாவம் (ப்ரணயிநிகளுக்கித்யாதி) சாடு (ஸ்ரீபூமிப் பிராட்டியித்யாதி) அவள்விபூதியை - பூமியை. தன்முகேந - தான் ப்ரதாநமாக வென்றும், தன்முகத்தாலே யென்று மர்த்தத்வயம். ஒருத்ருஷ்டாந்தம் சொல்லாதே, கேவலம் "திருவெயிறு" என்றதுக்கு பாவம் (நின்திருவெயிறென்னு மித்யாதி) திரு-அழகு.

"அன்று" என்று சொல்லுகிறவனுடைய ஹார்த்தபாவம் (ஒருநாளித்யாதி) "அன்று" என்றதுகு பாவாந்தரம் (நப்பின்னையித்யாதி) அதாவது - வாக்குக்கு விஷயமன்றென்றபடி. அடர்த்தென்னுமே, "தழுவி" என்பானென்னென்ன (அவள் திருமுலையித்யாதி) "அன்று-ருஷபங்களை சுலகமாகநியமித்தவன்று" என்றுரையிலர்த்தம். "உரு" என்றும் - மிடுக்கைக் காட்டுமோவென்ன (உருவுட் கென்றித்யாதி) உருச்சொல்லு - நைகண்டுகவிசேஷமித்யர்த்தஃ. உட்கு - மிடுக்கு. உரு - இடியும், மிடுக்கும். வெறுப்பாகபாவம் (என்னையித்யாதி) ஸ்வாமிநிகளொன்று - கிருத்தரான மூவரையும் சொல்லுகிறது. "அன்பனே" என்றது - அன்புக்கு விஷயமானவனே யென்றபடி.

"கோயில்கொண்டானே" என்றதுக்கு பாவம் (எருதேழடர்த்தவித்யாதி) விவரணம் (அவதாரங்களித்யாதி) "அவதாரம் காதாசித்கம்" என்னுமதுக்கு ப்ரமாணம் (கதஇத்யாதி) மஹாபாரதே, "க்ருஷ்ணஹாராவதரணம்வ்யூயிவஹாஃ வ்யூமோஹவநஃ । மோஹயித்வாஜகத்ஸர்வம் கதஸ்ஸ்வம்ஸ்தாநமுத்தமம்." (க்ருத்வாபாராவதரணம் ப்ருதிவ்யாஃப்ருதுலோசநஃ। மோஹயித்வாஜகத்ஸர்வம் கதஸ்ஸ்வம்ஸ்த்தாநமுத்தமம்.) (கதஸ்ஸ்வம்ஸ்த்தாநம்) இத்யாதிவாக்யம் - இவ்வாக்யவிவரணம்.

"தெளிகிலேன்" என்றதுக்கு பாவம் (அங்கித்யாதி) குறையற்றபின்பெறாது - "திருவரங்கம் கோயில் கொண்டானே" என்றத்தைப்பற்ற. விவரணம் (மாஸுச இத்யாதி) தெளிந்திருக்கமாட்டாமைக்கு ஹேதுவேதென்ன (இவளவஸ்தையித்யாதி) "இவள் தனக்கு - முடிவு - தெளிகிலேன்" என்றதுக்கு-இவளுடைய துஃகாவதி காண்கிறிலேனென்றுசப்தார்த்தம். முடிவு - துஃகாவதி...............*

பத்தாம்பாட்டு.

முடிவிவடனக்கொன்றறிகிலேனென்னுமூவுலகாளியேயென்னுங்
கடிகமழ்கொன்றைச்சடையனேயென்னுநான்முகக்கடவுளேயென்னும்
வடிவுடைவானோர்தலைவனேயென்னும்வண்டிருவரங்கனேயென்னு
மடியடையாதாள்போலிவளணுகியடைந்தனள்முகில்வண்ணனடியே.

ஆறாயிரப்படி.

(முடிவிவள்தனக்கு) இப்பெண்பிள்ளை, தனக்கு முடிகைக்கோருபாயமறிகிறிலேனென்னும். ப்ரஹ்மருத்ராதி ஸகலதேவதைகளுக்கு மந்தராத்மதயாவஸ்திதனாய் அவர்களுடைய ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்தியைப்பவர்யாதி ஹேதுபூதனானவனே, உன்திருவடிகளிலவர்களோபாதி யுறவுபோராதோவென்னும். * அயர்வறுமமரர்களையுங்கூடத் தோற்பித் தடிமையாக்கிக்கொண்டிருக்கிற வுன்னைக்காட்டியருளாயென்னும். கோயிலிலே புகுந்து கண்வளர்ந்தருளி யாஸ்ரிதர்க் காத்மதானம்பண்ணிக்கொண்டிருக்கிற பரமோதாரனேயென்னும். "இவளிப்பெருமான் திருவடிகளைச்சேர்ந்து முடியமாட்டாள், போய்முடிந்தாள்" என்னும்படி ஆர்த்த ஸாபங்கையானவிவள், வ்ருத்தமான விநதவிப்லேஷ நிபந்தனமான நிர்வதிக துஃகமெல்லாம் விஸ்ம்ருதமாம்படி, நாறுளைப்பட்டபடியே பெரியபெருமாள் திருவடிகளையே சம்ஸ்லேஷிக்கப்பெற்றாளென்றிவளுடைய திருத்தாயார் ப்ரீதையாகிறாள் x

பன்னீராயிரப்படி.

அநந்தரம், ஈஸ்வராபிமாநிகளுக்கு மந்த்ராத்மாவான சர்வேஸ்வரனை யிவளுடைய வார்த்தியையறிந்து தன்சீலாதிசயத்தாலு மௌதார்யத்தாலும் தன் வடிவழகாலும் ஆந்தர சம்ஸ்லேஷத்தை விஸ்லேஷித்து ப்ரகாஸிப்பிக்க, இவளுந்தத்தால்பிறந்த விஸ்வாஸத்தைக்கண்டு ஸ்வகதமாகத் தாயார் சந்துஷ்டையாய்ச் சொல்லுகிறாள்.

இவள்-ப்ரத்யக்ஷசித்தாவஸாதத்தையுடையவிவள். தனக்கு-இப்படியவஸ்தையான தன்படிக்கு. முடிவு-முடிவு. ஒன்று-ஒன்று. அறிகிலேன - அறிகிறிலேன். என்னும்-என்னும். மூவுலகாளியே - த்ரைலோக்யேஸ்வரனை விந்த்ரனுக்கந்தராத்மாவாய்க்கொண்டு நிர்வஹித்தவனே. என்னும்-என்னும். கடிகமழ் - பரிமளப்ரவாஹியான. கொன்றை-கொன்றைத் தாரையுடைத்தான. சடையனே - ஜடையையுடையனான ருத்ரனையதிஷ்டித்துநின்று அவனுடைய ஈஸ்வரத்வோபாஸகத்வங்களுக்குள்ளீடானவனே. என்னும் - என்னும். நான்முகன் - இவர்களுக்கு சேஷியான சதுர்முகனை. கடவுளே-தைவத்துக்காத்மாவானவனே. என்னும்-என்னும். இப்படியீஸ்வராபிமாநிகளான ப்ரயோஜநாந்தரபரர்க்கும் ப்ரகாரியானசீலத்துக்குமேலே, வடிவுடை-தன்னோடுலப்தஸாரூப்யரான. வானோர் - நித்யசூரிகளுக்கு. தலைவனே-சேஷியானவனே. என்னும்-என்னும். அம்மேன்மையோடே, வண்-ஆசைப்பட்டார்க்குத் தன்னைக்கொடுக்குமௌதார்யத்தையுடையனாய்க்கொண்டு. திருவரங்க

னே-கோயிலுக்குநிர்வாஹகனானவனே. என்னும்-என்னும். இப்படி நீர்மையையும் மேன்மையையு மௌதார்யத்தையு மநுஸந்தித்திபெட்டு, இனி, அடி-அவன்றிருவடிகளை. அடையாதாள்போல்-கிட்டமாட்டாள்போலேயென்னும்படியிருந்த. இவள்-இவள். முகில் - ஜலஸ்த்தலவிபாகமறவுபகரிக்கும் காளமேகம்போலேயிருக்கிற. வண்ணன்-வடிவையுடையவனுடைய. உபகாரகத்வாதிசயத்தாலே, அடி-அவன்றிருவடிகளை. அணுகி-கிட்டி. அடைந்தனள் - ப்ராபித்தாளாயிருந்தது.....................*

ஈடு - பத்தாம்பாட்டு.

இனிக்கிட்டமாட்டாளோ ! வென்னும்படி யவஸந்நையானவிவள், பெரியபெருமாள்திருவடிகளை ஸம்ஸ்லேஷிக்கப் பெற்றாளென்கிறாள்.

(முடிவிவள்தனக்கொன்றறிகிலேனென்னும்) பெண்பிள்ளைவார்த்தையைத் திருத்தாயாரநுபாஷிக்கைகயாலே; " இவள், தனக்கு - முடிவு- ஒன்றறிகிலேன் " என்னாநின்றாளென்கிறாள். இத்துக்கஸாகரத்தைக்கரைகாணும் விரகறிகிறிலேனென்னுதல், முடிந்துபிழைக்கும் விரகறிகிறிலேனென்னுதல். (மூவுலகித்யாதி) " மூவுலகாளியே, கடிகமழ்கொன்றைச் சடையனே, நான்முகக்கடவுளேயென்னும் - வடிவுடைவானோர்க்குத்தலைவனேயென்னும் " என்று திருமாலையாண்டான் வையதிகரண்யமாக்கி நிர்வஹிக்கும். என்னு மென்றுமது - என்றுமவனும். எம்பெருமானார் கேட்டருளி, சாமாநாதிகரண்யத்தாலே யருளிச்செய்தருளினார் - த்ரைலோக்யத்துக்கும் கடவனான இந்த்ரனுக்கந்தர்யாமியாய் நின்று அவனுடைய வதிகாரத்தை நிர்வஹிக்கிறவனேயென்னும்; பரிமளத்தையுடைத்தான கொன்றையை ஜடையிலேயுடைய ருத்ரனுக் கந்தர்யாமியாய்நின்று அவனுடைய பதத்தை நிர்வஹிக்கிறவனேயென்னும்; அவர்களோடிவ்வருகுள்ளாரோடு வாசியற வெல்லார்க்கும் நிர்வாஹகனாயிருக்கிற சதுர்முகனாகிற தேவதைக்கந்தர்யாமியானவனேயென்னும். (வடிவுடையித்யாதி) பகவதநுபவத்தால்வந்தஹர்ஷம் வடிவிலே தோற்றும்படியிருக்கிற நித்யஸூரிகளுக்கு நாதனானவனேயென்னும். வடிவுடைவானோர்தலைவனே என்றத்தோடு, மூவுலகாளியே என்றத்தோடு, கடிகமழ்கொன்றைச்சடையனே என்றத்தோடு, நான்முகக்கடவுளே என்றத்தோடு வாசியற்றிருக்கிறதாயிற்றிவர்க்கு * மயர்வறமதிநலம்பெறுகையாலே. விசேஷணும்ஸத்தில் பர்யவஸிக்குமவரல்லரோ. சர்வநிர்வாஹகனென் றுணர்ந்திருக்குமவராயிற்றிவர்.

(வண்டிருவரங்கனேயென்னும்) நித்யஸூரிகளே யநுபவித்துப் போகையன்றிக்கே, நித்யசம்சாரிகளு மிழவாமைக்கன்றோ விங்குவந்து கண்வளர்ந்தருளுகிறது. இங்குச்சாய்ந்தருளினதின்பலம் நான்பெறவேண்டாவோவென்னும். ஆசைப்பட்டார்க்குத் தன்னைக் கொடுக்கு மௌதார்யம். (அடியடையாதாளித்யாதி) " ஜீவிப்பாளைப்போலேயிருந்து; கடுகமுடிந்துகொடுநின்றாள்" என்று நிர்வஹிப்பாருமுண்டு; " அப்போ

து மேல்ப்ரபந்தம் நடவாது. ஆகையாலே, திருவடிகளைக்கிட்டாதாளைப் போலே யிருந்து க்ரமத்திலே கிட்டிக்கொண்டுநின்றாள்” என்றருளிச்செய்யும்படி. இதுதான் - மாநஸாநுபவத்திலே யொருவைஸத்யத்தைச்சொன்னபடி. (அடியடையாதாள்போல்) இவளிப்போதே திருவடிகளைச்சேர மாட்டாள், இன்னம் சிறிதுகாலமிருக்குமென்றுபோலேயிருந்தது; முடிந்துகொடுநின்றாளென்னுதல். இனி சம்ஶ்லேஷிக்கப்பெறாளோவென்று தோற்றும்படி. யவலெந்தையானவிவள் கிட்டி. சம்ஶ்லேஷிக்கப்பெற்றாள் காளமேகஶ்யாமமான பெரியபெருமாள் திருவடிகளையேயென்னுதல்.

ஜீயர் அரும்பதம்.

பத்தாம்பாட்டு. (முடிவிவளித்யாதி) “அடியடையாதாள்போலிவளணுகி” இத்யாதிகளைக் கடாக்ஷித் தவதாரிகை (இனிக் கிட்டமாட்டாளோ வித்யாதி)

முடிவிவளெனக்கென்றமல், “தனக்கு” என்பானென்னென்ன (பெண்பிள்ளைவார்த்தையை யித்யாதி) “இவள், தனக்கு - முடிவு - ஒன்றறிகிலேனென்னும்” என்றந்வயிப்பது. “முடிவு - அறிகிலேன்” என்றதுக் கிரண்டுவகையாக வர்த்தமருளிச்செய்கிறார் (இந்துக்கசாகரத்தை யித்யாதி வாக்யத்வயத்தாலே) “முடிவு” - துக்காவஸாநமென்னுதல், நாஶமென்னுதல்.

திருமாலையாண்டான் நிர்வாஹத்துக்கு, “என்றும்” என்கிறது - சொல்லப்படுகையாய், “மூவுலகாளியே” இத்யாதியாற் சொல்லப்படுகிற வடிவுடையானான விந்த்ராதிகளுக்குந் தலைவனென்றபடி. “மூவுலகாளியே” இத்யாதியில் ஏகாரம் - “ஒன்றே, இரண்டே” என்னுமாபோலே எண்ணிலையாகிறது. இந்நிர்வாஹத்துக்கு, “மூவுலகாளியே” என்று பாட்டுந்தோறும் சம்போதநமாய் வருகிறவற்றையும், “என்னும், என்னும்” என்று மகள்வார்த்தையைத் தாயாரநுபாஷிக்கிறத்தையு மிருக்கி யோஜிக்கையாகிற ஸ்வாரஸ்ய முண்டென்று திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (எம்பெருமானாரித்யாதி) சாமாநாதிகரண்ய ப்ரக்ரியையை விவரிக்கிறார் (த்ரைலோக்யந்துக்குமித்யாதி) திருமாலையாண்டான் நிர்வாஹத்தில் - லீலாவிபூதிமாத்ரநாதத்வம்; எம்பெருமானார் நிர்வாஹத்தில் - உபயவிபூதிநாதத்வமேற்றம். “வானோர்தலைவனே” என்று - அசாதாரண விக்ரஹ விஶிஷ்டனையும், “மூவுலகாளியே” இத்யாதியாலே - சாதாரண விக்ரஹ விஶிஷ்டனையு மொக்க வநுபவிப்பானென்னென்ன (வடிவுடையித்யாதி) பலிதம் (விசேஷணாம்ஶத்திலித்யாதி) அந்யாபதேச ப்ரக்ரியைக்கு சாமாநாதிகரண்ய முபயோகமல்லவே யென்ன (சர்வநிர்வாஹகனித்யாதி)

எம்பெருமானார் நிர்வாஹம் (ஆகையாலேயித்யாதி) (அருளிச்செய்யும்படி) எம்பெருமானாரொன்று கூட்டுவது. ஆனால், ப்ரத்யக்ஷமாகக் கிட்டினாளோவென்ன (இதுதானித்யாதி) அணுகியடைந்தனள் - கிட்டி ப்ராபித்தாளென்றபடி. முகில்வண்ணன் - மேகம்போன்ற வடிவையுடையவன்.......................*

பதினொன்றாம்பாட்டு.

முகில்வண்ணனடியையடைந்தருள்சூடி யுய்ந்தவன்மொய்புனற்பொருநல், துகில்வண்ணத்தூநீர்ச்சேர்ப்பன்வண்பொழில்சூழ்வண்குருகூர்ச்சடகோபன், முகில்வண்ணனடிமேற்சொன்னசொன்மாலையாயிரத்திப்பத்தும்வல்லார், முகில்வண்ணவானத்திமையவர்சூழவிருப்பர்பேரின்பவெள்ளத்தே.

ஆறாயிரப்படி.

(முகில்வண்ணன்) பெரியபெருமாள் திருவடிகளைச்சேர்ந்து சர்வ ப்ரகார ஸம்ஶ்லேஷமும்பண்ணப் பெறுகையாலே லப்தோஜ்ஜீவநராய்; சுப்ரஸந்நஸலிலபூரபரிபூர்ணமான திருப்பொருநலாலும், அதிரமணீய திவ்யகந்தசுமநோபிராம தருநிகரங்களாலும் பரிகர்மிதமான திவ்யநக* ரநிலயராயிருந்த சடகோபன், முகில்வண்ணனடிமேற் சொன்னசொன்மாலையாயிரத்துளிப்பத்தும் வல்லார், பெரியபெருமாள்திருமேனியில் நீலமான ஜ்யோதிஸ்ஸின் வெள்ளத்தாலே திவ்யமான திருநாட்டிலே * அயர்வறுமமரர்கள்சூழ, சவிபூதிகபரமபுருஷாநுபவஜநித நிரவதிகாநந்த மஹார்ணவாந்தர்நிமக்நராயிருப்பாரென்கிறார்..........................*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், இத்திருவாய்மொழியை யப்யஸித்தவர்கள் பரமபதத்திலே ஸூரிகள் நடுவே ஆநந்த நிர்ப்பரராயிருப்பரென்று பலத்தையருளிச்செய்கிறார்.

முகில்வண்ணன் - உதாரமானமேகஸ்வபாவரான பெரியபெருமாளுடைய. அடியை - திருவடிகளையே. அடைந்து - ப்ராபித்து. அதுக்கடியான, அருள் - அவருடையக்ருபையை. சூடி - தலைக்கொண்டு. உய்ந்தவன்-உஜ்ஜீவித்தவராய். மொய்-மிக்க. புனல் - புனலையுடைத்தான. பொருநல் - திருப்பொருநலினுடைய. துகில்-துகிலின். வண்ணம் - நிறம்போலே. தூ - பரிசுத்தமான. நீர்-ஜலத்தையுடைத்தான. சேர்ப்பன் - பர்யந்தப்ரதேஶத்தையுடையராய். வண்-மதுபுஷ்ப சம்ருத்தியாலுள்ள வைலக்ஷண்யத்தையுடைய. பொழில் - பொழில்களாலே. சூழ் - சூழப்பட்டு. வண் - நிரதிசயசம்பத்விசிஷ்டமான. குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான. சடகோபன் - ஆழ்வார். முகில் - காளமேகம்போலே. வண்ணன் - நிரதிசயஸௌந்தர்ய யுக்தரானபெரியபெருமாள். அடிமேல் - திருவடிகள்விஷயமாக. சொன்ன - அருளிச்செய்த. சொல் - சப்தாத்மகமான. மாலை - மாலைகள். ஆயிரத்து - ஆயிரத்து. இப்பத்தும் - இப்பத்தையும். வல்லார் - பாவவ்ருத்தியோடே யப்யஸிக்கவல்லவர்கள். ஸ்ரீவைகுண்டநாதன்திருமேனியில்நிழலீட்டாலே, முகில் - மேகஶ்யாமளமான. வண்ணம் - நிறத்தையுடைய. வானத்து - பரமபதத்திலே. இமையவர் - நித்யசூரிகள். சூழ - பரிவேஷ்டிக்க. பேரின்பவெள்ளத்தே - நிரதிசயாநந்தசாகரமத்யத்திலே. இருப்பர்- இருப்பர்கள்..*

இது - எழுசீராசிரியவிருத்தம்.

௯௫ - பதினொன்றாம்பாட்டு.

நிகமத்தில் - இத்திருவாய்மொழி யப்யஸிக்கவல்லார், இவர்பட்ட க்லேசம்படாதே திருநாட்டிலே நிரதிசயாநந்த யுக்தராய், நித்யஸூரிகள் சூழவிருக்கப்பெறுவரென்கிறார்.

(முகில்வண்ணனித்யாதி) பெரியபெருமாள் திருவடிகளைக்கிட்டி யங்குத்தைப்ராஸாதத்தைப் பெற்று தரித்தவன். பூர்வாவஸ்த்தையில், ஸத்தையு மழியும்படியாயிருக்கையாலே-உய்ந்தவனென்கிறது. மொய்யென்று - மிகுதிக்கும், வலிக்கும்பேர். இப்போது, நீரோட்டத்தால் வந்த வலியைநினைக்கிறது. வலியையுடைத்தான ஜலத்தோடேகூடின பொருனலில் துகிலினுடைய வண்ணத்தையுடைத்தான நாநீர்த்துறைவன். சேர்ப்பன்-துறைவன். நெய்தல் நிலத்தில் தலைமகன். மொய்புனலென்றுநிற்க, நாநீரென்றது - பெருவெள்ளமாயிருக்கச்செய்தே தெளிந்திருக்கும்படியைப்பற்ற. "रमणीयं प्रसन्नाम्बु सन्मनुष्यमनो यथा" (ரமணீயம்ப்ரஸந்நாம்பு ஸந்மநுஷ்யமநோயதா) என்கிறபடியே. தர்ஸநீயமான பொழிலையுடைத்தாய் உதாரமான திருநகரிக்கு நாதன். (முகிலித்யாதி) காளமேகம்போலே நிரதிசய ஸௌந்தர்ய யுக்தரான பெரியபெருமாள் விஷயமாக வருளிச்செய்த சப்தாத்மகமான மாலைகளாயிரத்திப்பத்தையும் பாவவ்ருத்தியோடே யப்யஸிக்கவல்லவர்கள். "பெரியபெருமாள்திருவடிகளிலே-திருவாய்மொழி யாயிரமுஞ்சொல்லிற்று ; 'திருமோகூர்க்கீத்தபத்து,' 'திருவேங்கடத்துக்கிவைபத்து' என்றுபிரித்துக்கொடுத்தவித்தனை ; பெருமாள்திருப்பலகையிலமுது படியிலே மற்றைத்திருப்பதிகள் நாயன்மார்க்கு மளந்துகொடுக்குமாபோலே" என்று பிள்ளையருளிச்செய்வர். (முகில்வண்ணவானத்து) அங்கிருக்கிறவனுடைய நிழலீட்டாலே யவன்படியாயிருக்கிறவானமென்னுதல், முகிலவண்ணனுடைய வானமென்னுதல். (இமையவரித்யாதி) இவள்மோஹித்துக் கிடக்கத் திருத்தாயார் தனியேயிருந்து கூப்பிடவேண்டாதபடி, நித்யஸூரிகள் திரளவிருக்க அவர்கள்நடுவே யாநந்தநிர்ப்பரராயிருந்தநுபவிக்கப் பெறுவர்கள்.

ஜீயர் அரும்பதம்.

நிகமம் (முகிலித்யாதி) "இப்பத்தும் வல்லார் முகில்வண்ணவானத்திமையவர் சூழவிருப்பர் பேரின்பவெள்ளத்தே" என்றதைக்காட்டாக்ஷித்தவதாரிகை (இத்திருவாய்மொழியித்யாதி)

மேலிற்றிருவாய்மொழி - க்லேசமாயிருக்க, "உய்ந்தவன்" என்று - தரிப்புண்டாகச்சொல்லலாமோவென்ன (பூர்வாவஸ்த்தையிலித்யாதி) "துறைவன்" என்றதுக்குபாவம் (நெய்தல்நிலத்தில் தலைமகனென்றது) "சேர்ப்பன்" என்றது - துறைவனுக்கும், நெய்தல்நிலத்தில் தலைமகனுக்கும்பேர். இங்கு, துறைவனைச்சொல்லுகிறது. "மொய்" என்று - மிகுதியாகவர்த்தாந்தரம் விவக்ஷித்து, மிகுதியானால் "நாநீர்" என்கிறதுகூடுமோவென்ன (மொய்புனலித்யாதி) இதுக்குப்ரமாணம்

(ரமணீயமித்யாதி) "அக்ருஷ்டக்ஷேத்ரம் தீர்த்தம் பரத்வாஜநிஷேவிதம் ரமணீயம் ப்ரஸந்நாம்பு ஸந்மநுஷ்யமநோ யதா" (அகர்த்தமமிதம்தீர்த்தம்பரத்வாஜநிஷேவிதம் | ரமணீயம்ப்ரஸந்நாம்புஸந்மநுஷ்யமநோயதா) இதிபாலகாண்டே. "மொய்புனல்" இத்யாதிக்கு - "மிக்கஜலத்தையுடைய திருப்பொருனலினுடைய, துகிலின் நிறம்போலே பரிசுத்தமான ஜலத்தையுடைத்தான பர்யந்தப்ரதேசத்தையுடைய" என்றுரையிலேசப்தார்த்தம்.

ஆயிரமுமிவர் விஷயமாகுல், திருவேங்கடமுடையான் முதலானார்க்கின்றிக்கேபோமேயென்ன (திருமோகூர்க்கித்யாதி)

"முகில்வண்ணவானத்து" என்றதுக் கர்த்தத்வயமருளிச்செய்கிறார் (அங்கிருக்கிறவனுடைய வித்யாதிவாக்யத்வயத்தாலே) முகில்வண்ணமானவானத்து - மேகஶ்யாமளமான நிறத்தையுடைய பரமபதத்திலே யென்று முந்தினவர்த்தம்.

முகில்வண்ணனடியை யடைந்தென்றுதொடங்கி, இமையவர்சூழ-பேரின்ப வெள்ளத்தே-இருப்பரித்யந்வய:. வண்பொழில்சூழ் வண்குருகூர்ச்சடகோபன்-விலக்ஷணமான பொழிலாலேசூழப்பட்டு நிரதிசய சம்பத்விசிஷ்டமான திருநகரிக்கு நிர்வாஹகரான வாழ்வாரொன்று சப்தார்த்தம். சொன்மாலை-சப்தாத்மகமானமாலை. வல்லார் - அப்யஸிக்கவல்லார்கள். பேரின்பவெள்ளத்தே - நிரதிசயாநந்த சாகரமத்யத்திலே..*

த்ராவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி.

(கங்குலும்பகலும்.)

ஸ்ரீரங்கே ஸந்நிதாநாந்நிகிலஜகதநுஸ்ரஷ்ட்ருதாத்யைஸ்ஸுசித்வாத் வித்வா
ஸ்தாநிஷ்டபாவாதுரகஶயநத: கர்மவஶ்யாநுரூப | ஶர்மா
ஶர்மப்ரதாநாஜ்ஜலதநுநயநாதுபக்ரியாதத்பரத்வாத் ஸ்வாமீ த்ராணோ விஶ
த்ராணோபஶமயதி வேதாத்ம ஸ்ருஷ்டிஸௌரி:. (எஉ)

(ஸ்ரீரங்கேஸந்நிதாநாத்) செங்கயல்பாய்நீர்த் திருவரங்கத்தாய் - திர்யக்குகளுங்கூடக்களித்து வர்த்திக்கும்படி ஶ்ரமஹரமான ஜலஸம்ருத்தியையுடைய ஸ்ரீரங்கத்திலே யெழுந்தருளியிருக்கையாலும்; (நிகிலஜகதநுஸ்ரஷ்ட்ருதாத்யை:) முன் செய்திவ்வுலக முண்டுமிழ்ந்தளந்தாய் - எல்லாலோகங்களையும் ஸ்ருஷ்டிக்கையாலும்; ஆத்யசப்தத்தாலே - அநந்தரகாதையிலே "காகுத்தா கண்ணனேயென்னும்" என்றுசொல்லுகிற அவதீர்யரக்ஷகத்வம் ஸங்க்ரஹிக்கப்படுகிறது; (ஸுசித்வாத்) சிட்டனே - பரிசுத்தனாகையாலும்; (வித்வஸ்தாநிஷ்டபாவாத்) அந்திப்போதவுணனுடலிடந்தானே-விரோதியானஹிரண்யனை ஸம்ஹரிக்கையாலும்; (உரகஶயநத:) பைகொள்பாம்பணையாய்-தன்திருமேனிஸ்பர்சத்தாலுண்டான ஹர்ஷத்தாலே விகஸிதமான பணங்களையுடைய திருவநந்தாழ்வானைத் திருப்படுக்கையாகவுடையனாகையாலும்; (பும்ஸாம்கர்மாநுரூபம்ஶர்மாஶர்மப்ரதாநாத்) பாலதுன்பங்களின்பங்கள் படைத்தாய் - சேதநருடைய கர்மாநுரூபமாக சுகதுக்கங்களைக்கொடுக்குமவனாகையாலும்; (ஜலதநுநயநா, உபக்ரியாதத்பரத்வாத்) இங்கே - க்ரமம்விவக்ஷிதமன்று. குன்றெந்திக்கோநிரைகாத்தவனென்னும், நின்திருவெயிற்றுமித்யாதி, முகில்வண்ணனடியை - கோவர்த்தநத்தையெடுத்து கோகோபாலர்க் குபகரிக்கையாலும்

வராஹரூபத்தைக்கொண்டு பூமிக்குபகரிக்கையாலும், வர்ஷுகவலாஹகம்போலே ஶ்யாமமாய்க் குளிர்ந்திருக்கிறவடிவை யுடையனாகையாலும்; எல்லார்க்கும் ஸ்வாமியான ஸ்ரீரங்கநாதன் ஸ்வாஶ்ரிதருடைய கர்ஹையை சமிப்பியாநிற்கிறனென்று "கங்குலும்பகலும்" என்கிறதஶகத்திலே காரிமாறனருளிச்செய்தானென்கிறார். எஉ

திருவாய்மொழிநூற்றந்தாதி.

கங்குல்பகலறுதிகைவிஞ்சிமோகமுற
வங்கதனைக்கண்டோரரங்கரைப்பார்த்—திங்கிவள்பா
லென்செயநீரொண்ணுநின்றதென்றுமிலேசேர்மாற
னஞ்சொலுறநெஞ்சமேவெள்ளேயாம். (கூஉ.)

(கங்குல்பகல்) இதில் - அபிப்ராயத்தினபடியைப் பேசினபாசுரத்தையநுவதித்தருளிச்செய்கிறார். அதாவது - * உண்ணிலாவியவிலார்த்தராய்க் கூப்பிடுகிற தம்மைப் பரிஹரிக்கும் விரகுசிந்தித்துக்கொண்டு கண்வளர்ந்தருளுகிற பெரியபெருமாள் நினைவையறிந்து அவர்பரிஹரிக்குமளவு மாறியிருக்கவேண்டியிருக்க, அவர்தம்மை யுபேக்ஷித்தாராகக்கொண்டு கலங்கிமோஹித்தவர்நிலை; பார்ஸவஸ்தராரானபரிவர் பெரியபெருமாளுடைய ஶரண்யத்வாதி குணங்களைச்சொல்லிக்கொண்டு, இவர்திறத்தில் நீர்நினைத்திருக்கிறதென்னென்று கேட்கிறபடியை; பெரியபெருமாளோடே கலந்து பிரிந்தவொருபிராட்டியாற்றாமையாலே யழுவதுதொழுவது விழுவதெழுவ தலற்றுவதாய்ப்படுகிற பாடுயைத் திருத்தாயார் அவர் திருமுகத்தைப்பார்த்துச்சொல்லி ப்ரலாபிக்கிற பாசுரத்தாலே யருளிச்செய்கிற * கங்குலும்பகலிலர்த்தத்தை " கங்குல்பகலறுதி " இத்யாதியாலே யருளிச்செய்கிறார் என்கை.

(கங்குல்பகலறுதிகைவிஞ்சிமோஹமுற) அதாவது - " ஹ்ருஶம்விஸஞ்ஜ்ஞா-மதாஸக்ருதெவ " (ப்ருஶம்விஸஞ்ஜ்ஞா - ஸதாஸக்ருதேவ) என்றும், " விமோஹஸஞ்ஜ்ஞாஞ்ச திரோஹிதெவ " (விமோஹஸஞ்ஜ்ஞாம்ப்ரதிலப்யசைவ) என்றும், "ராமேதி ராகாந்த்ய நகைபஶ்ஜீ வஸாக்ஷீதி:" (ராமேதிரக்தாந்தநயனமபஶ்யந்நீஸாதுக்கிதா) என்றும் சொல்லுகிறபடியே, " கங்குலும் பகலுங் கண்துயிலறியாள், " " இட்டகாலிட்டகைகளாயிருக்கும், " " சிந்திக்குந்திசைக்கும் " இத்யாதிப்படியே திவாராத்ரவிபாகமற வழுவது தொழுவது மோஹிப்பது ப்ரலாபிப்பது அடைவுகெடப்பேசுவது நெடுமூச்செறிவது அதுநாளும் மாட்டாதொழிவதுமாய்த் தசையாயிருப்பதா யிப்படி யாற்றவிஞ்சி மோஹத்தைப்ராப்தையாக. (அங்கதனைக்கண்டு) தன்பெண்பிள்ளையிடத்திலே அத்தசையைக்கண்டு. (ஓரரங்கரைப்பார்த்து) ஆர்த்திஹரதையிலே சிந்தித்தப்போருகிற வத்விதீயரான பெரியபெருமாளைப்பார்த்து. (இங்கிவள்பால்) இத்தசைபி லிவளிடையாட்டமாக. (என்செயநீரொண்ணுகின்றது) ஆஶ்ரிதரக்ஷணசிந்தைபண்ணுகிறதேவர், ரக்ஷாபேக்ஷையுடைய இவள்திறத்தெது திருவுள்ளம்பற்றியிருக்கிறது. எடுக்கவோமுடிக்கவோ ஒன்றுந்தெரிகிறதில்லை. எல்லாதசையிலு மிவள்பேற்றுக்கு "உன்மனத்தாலென்னினைந்திருந்தாய்" என்கிறபடியே அத்தலையில் நினைவேயிறே யுபாயம், இத்தலையிலேயுள்ளதெல்லாமாற்றாமையிலே முதலிமெத்தனே. " இவள்திறத்தென்செய்கின்றாயே, " " இவள்தி

றத்தென்செய்திட்டாயே," "இவள்திறத்தென்சிந்தித்தாயே" என்றத்தைப்பின்சென்றபடி. (என்செயநீரொண்ணுகின்றதென்னுநிலைசேர்மாறன்) த்வராஜ்ஞானத்தாலே தலைமகளென்று பேரையுடையதாம் மோஹித்துக்கிடக்க, "இந்தமோஹாதிகளுமுபாயமாகா, அத்தலையில் நினைவேஸாதநம்" என்று மத்யவஸாய ஜ்ஞானத்தாலே தாயாரென்றுபேரையுடையராய்த் தெளிந்திருந்து தெரிவிக்கும் தசையையடைந்தவாழ்வாருடைய. (அஞ்சொலுற) அழகிதான விந்திருவாய்மொழியை யாதரித்தநுசந்திக்க. (நெஞ்சுவெள்ளையார்) உபாயாந்தரவிஷயமான மநோமாலிந்யம் நிவ்ருத்தமாய், ததேகோபாயத்வாநுஸந்தாநத்தாலே மநஸ்ஸுத்திபிறக்கும்.

((கங்குல்பகலரதியித்யாதி, வெள்ளையாம்) உபாயாந்தரவிஷயமான, ஓரங்களைப்பார்த்து - ஒருகிறவரங்களைப்பார்த்து. அதாவது - * உலகமுண்ட பெருவாயனிலே, "அகலகில்லேன்" என்று - பூர்ணப்ரபத்தி பண்ணினவிடத்திலும் பலித்ததில்லையென்று, * உண்ணிலாவியிலே, "அப்பனேயென்னையாள்வானே" என்று - நின்றவிடத்திலே நிறகவொட்டாமல் கூப்பிட, "திருவேங்கடத்தென்னானையென்னப்பன்," "அரங்கநகர்மேயவப்பனாய்," "மந்திபாய்" இத்யாதிப்படியே, * பைந்தபாம்பணையானுனவவன் * அரங்கநகரவினணையானாய் "பைகொள்பாம்பணையா யிவள்திறந்தருளாய்," "இவள்திறத்தென்சிந்திதநாய்" என்றுகேட்கும்படி * உறங்குவான்போல்யோகுசெய்து * யோகநித்திரை சிந்தைசெய்து இவர் ரக்ஷணசிந்தை பண்ணிக்கொண்டாறலைக்கக் கிடக்கிறவரைப்பார்த்தென்றபடி. "தொடங்கினகார்யம் தலைக்கட்டுந்தனையும் பறாதுபோலேயிருநத திவளாற்றாமை, இதுக்கென்செய்வோம்" என்று அவராராயப்புக்கார். அங்கு "அலர்மேல்மங்கையுறைமார்பா" என்றத்தை - இங்கு "என்திருமகள்சேர்மார்பனே" என்றார்; "வண்ணமருள்கொளணிமேகவண்ணா" என்றத்தை - "முகில்வண்ணன்" என்றார்; "அடிக்கீழமர்ந்துபுகுந்தேனே" என்றத்தை - "அடியையடைந்தருள்சூடியுய்ந்தவன்" என்றார். "துளங்குநீண்முடி" என்றுதொடங்கி "ஆழிவண்ணநின்னடியிணையடைந்தேன்" என்றிறே ஐக்யமாகவருளிச்செய்தது. * சென்னியோங்குதண்டிருவேங்கடமுடையானேயிறே * பொன்னிசூழ் திருவரங்கனைக் கண்வளர்நதருளுகிறது. இவர ரக்ஷணசிந்தைக்குப் பாங்கான பாற்கடல் தேசம் அரங்கம்போலே.)...(௯௨)

ஏழாம்பத்தில் - இரண்டாந்திருவாய்மொழி முற்றிற்று.

௬௩ - திருவாய்மொழி ௯௨.—பாட்டு - ௯௮௭.

ஸ்ரீ

திருவாய்மொழி.

ஏழாம்பத்து.

மூன்றாந்திருவாய்மொழி.

வெள்ளைச்சுரிசங்கு - ப்ரவேசங்கள்.

ஆறாயிரப்படி.

(வெள்ளைச்சுரிசங்கு) இப்பிராட்டிபோலே பெரியபெருமாள் சம்ஶ்லேஷ ரஸத்தை யநுபவித்து, அந்த சம்ஶ்லேஷரஸ முள்ளடங்காதபடி பெருகினவாறே யது சாத்மிக்கைக்காகவு மாஶ்ரிதப்ரதிகூல நிரஸநார்த்தமாகவும் தென்திருப்பேரையிலே யெழுந்தருளத் திருவுள்ளத்தே கோலியருளி, இவளுடைய சம்வாதார்த்தமாக விவளிடத்திலே யதிமாத்ர சம்மாநத்தைப் பண்ணியருளி “தென்திருப்பேரையிலேவேட்டைக்குப் போய்வருகிறோம்” என்றருளிச்செய்ய, இப்படி *பதிசம்மாநிதையான விவள்ஸ்வபாவ விப்ரலேஷையாகையாலுமிவனெழுந்தருளுகை யிவனைக் காக்குந்தொழிலுக்கு ஹேதுவென்றுமிட மறியாமையாலு மெழுந்தருள சம்வதிந்து விஜயத்தை யாஶாஸிந்து திவ்யாயுதங்களைக் கொடுத்தருளி “ஆத்வாரமநுவவ்ராஜ மங்களாந்யபிதத்யுஷீ” (ஆத்வாரமநுவவ்ராஜமங்களாந்யபிதத்யுஷீ) என்னும் ப்ரக்ரியையாலே திருப்பல்லாண்டுபாடிக்கொண்டு திருவனுக்கன் திருவாசலளவும் பின்னே யெழுந்தருளப் பெரியதிருவடி திருத்தோளிலே யேறியருளி, ஒரு தாமரைத்தடாகம் மலர்ந்தாப்போலே யிருந்த திருக்கண்களாலே யிவளைப்புரிந்து பார்த்தருளி யிவளாலேயநுஜ்ஞாதனாய்த் தென்திருப்பேரையிலே யெழுந்தருள, இவளவனைக்காணாமையாலே யத்யந்த மவஸந்நையாய் அவனெழுந்தருளியிருந்த தென்திருப்பேரையிலே யெழுந்தருள வுத்யோகிக்க, இவளுடைய திருத்தாயாரும் தோழிமாரும் மற்றுமுள்ள பந்துக்களு மிவளை ப்ரதிபந்திக்க; நான் போகை தவிரேன், தனியேபோனேனென்னும் பழி யுங்களுக்கு வாராமே நீங்களே யென்னைத் தென்திருப்பேரையிலே யிண்டக்கொண்டு போய்விடுங்கோளென்கிறாள்... ....*

பன்னீராயிரப்படி.

மூன்றாந்திருவாய்மொழியில், கீழ் - பெரிய பெருமாளுடைய ஔதார்ய குணாநுசந்தாநத்தாலே யாஶ்வஸ்தரான விவர்க்கு பாஹ்யாநுபவலாப மநுவர்த்

திக் கையாலே யத்யந்த மார்த்தராய், அந்தவார்த்தி சமிக்கைக்கவனுஸந்மோகத்திருப்பேரையிலே யெழுந்தருளி யிருக்கிறபடியை யநுசந்தித்து; ஆந்தராநுபாவ்யமான வவனுடைய வாயுதாதி வைலக்ஷண்யத்தையும், அதிசயிதமான பரத்வசௌலப்யங்களையும், ஆகர்ஷகமான வவயவாதி சோபையையும், அநுபாவ்யமான வாஸ்சர்யகுணாதி யோகத்தையும், அநிஷ்டவர்க்க நிரசநத்தையும், ஔதார்யாதிசயத்தையும், ப்ரபல ப்ரதிபந்தக பங்கத்தையும், ப்ரக்ருஷ்டபக்தி வர்த்தகத்வத்தையும், ப்ரளயாபத்ஸகத்வத்தையும், ஆஶ்ரிதவிரோதி நிபர்ஹணத்தையும் சிந்தித்து, ஏவம்பூதனவ னெழுந்தருளி யிருக்கிற தேசத்திலே செல்லுகையிலுண்டான த்வராவிசேஷத்தைக்கண்ட பார்ஶ்வஸ்த்ரான ஸுஹ்ருத்துக்களுக்கும் பரிவர்க்கும் ப்ராப்திஜநித வ்யவசாயத்தை யறிவிந்த ப்ரகாரத்தை; நாயகனை மகரநெடுங்குழைக்காத னெழுந்தருளியிருக்கிற தென்திருப்பேரையிலே செல்லுகையிலே த்வரையையுடைய நாயகியானவள், "இதநுரூபமன்று" என்று விலக்கத்தேடுகிற தோழிமார் தாய்மார் முதலானோரைக்குறித்து, "நானத்தேசத்திலே செல்லல் தவிரேன்" நீங்கள் கொடுபோய்விடுங்கோள், இல்லையாகில் நானேபோவேன்" என்று தன் துணிவை வெளியிட்ட பாசுரத்தாலே யருளிச்செய்கிறார். ... .*

எ ௫.

கீழ் "இட்டகாலிட்டகை" என்கிறபடியே யிவள்மோஹித்துக் கிடக்க, இவளுக்குமுன்னே தோழிமாரும் நறைப்பட, திருத்தாயாரொருத்தியு மிவள்தசையை யநுசந்தித் தருகே யிருந்து கூப்பிட்டுப் போருமது தவிர்ந்து; இப்பெண்பிள்ளை தானே யெழுந்திருந்து கால்நடை தந்து போமளவாய் விழுந்தது. அதுக்கடி - "பற்றிலார்பற்றநின்றானே" என்று - பெரியபெருமாளுடைய வஶரண்ய ஶரண்யத்வந் தொடக்கமான விவளுக்குப் பற்றுசான குணங்களையும் சௌந்தர்யாதி விக்ரஹகுணங்களையும் இவள் தான்வாய்வெருவியும் திருத்தாயர் சொல்லவும்கேட்டு அத்தாலே தரித்தாள். போனவுயிரை மீட்கவற்றயிறே குணஸ்வபாவமிருப்பது. கீழ்ப்பிறந்த மோஹமும் தெளிந்து, விப்ரலேஷ வ்யஸநமுமநுசந்திக்க வல்லளாய், பின்பு "அவனைக்கிட்டியல்லது நில்லேன்" என்னுமாற்றாமையும்பிறந்து, அது பெருமையாலே அவசந்நையாக, இவள்விடாய்க் கிடாம்படி அணித்தாகத் தென்திருப்பேரையிலே வீற்றிருந்த மகரநெடுங் குழைக்காதனுடைய வபேக்ஷிதாதிகளிலே யபஹ்ருதசித்தையாய், "அவனிருந்தவிடத்தேறப்போகவேணும்" என்றேருப்பட, பழையபடியே தோழிமாரும் தாய்மாரு மவளைச் சூழப்போந்து "உனக்கித்தனை யதிமாத்ரப்ராவண்யமாகாது, நமக்கிது பழியாய் விளையும்" என்ன, "நீங்கள் சொல்லுகிறவற்றால் ப்ரயோஜநமுண்டாகமாட்டாது, நானவன்பக்கலிலே யபஹ்ருதசித்தையானேன், ஆனபின்பு நானேபோனேனாமே நீங்களென்னோடேன்பட்டு அங்கே கொடுபோய்ச் சேர்க்கப் பாருங்கோள்" என்று தனக்குப் பிறந்த துணிவை யவர்களுக் கறிவித்துச் சொல்லுகிறதா யிருக்கிறது.

அங்ஙனன்றிக்கே பிள்ளான் பணிக்கும்படி - "('முகில்வண்ண னடியே - இவளணுகியடைந்தனள்' என்றதாகையாலே) 'ஸமர்த்வாதஶ வர்ஷாணி' (ஸமாத்வாதஶவத்ராஹம்) என்கிறபடியே பெரிய பெருமாளோடே சிரகால முன்மஸ்தகரஸமான ஸம்ஶ்லேஷம் ப்ரவ்ருத்தமாய், பிரிந்துகூடாவிடில் இரண்டுதலைக்கு மிறவு வருமளவாச்சுதாய்; இனி யெல்லாவளவிலு மொருநிராகங்கலக்கிறது தாமிரண்டும்கூடியிறே, ஆகையாலே பிரியாவிடில் தாமிலோபப்பர்யந்தமாகாது; இவ்வளவில், நாயகனவன் இரண்டுதலையும் ஜீவிக்கப்பாரப்பாரொருவனாகையாலே பிரிவை ப்ரஸங்கிக்க, இவரும் விஶ்லேஷத்தில் வாசனையில்லாதா ளொருத்தியாகையாலே, 'கலவியிலேயொருவகையோ' என்றுகொண்டு இவருமநுமதிபண்ண, அவனுமவ்வேட்டைநிமித்தமாகப்புறப்பட, இவரும் திருவனுக்கன் திருவாசலினளவுமொருபடிநிற்கின்றார்; எல்லாவளவிலும் பிரிவு தன் காரியம் செய்தன்றி நில்லாதிறே; அநந்தர மிவள் நோவுபட்டுக, இத்தைக்கண்ட தோழிமாரும் தாய்மாரும் 'உனக்கோடுகிறதென்'என்று கேட்க, 'ஸ்ரீஜநகராஜன்திருமகள் காட்டிலே கூடப்போய் அவரிருந்தவிடம் நின்றவிட முலாவினவிடந்தோறும் கூடவிருந்தநுபவித்தாப்போலே, நானுமவனிருந்தவிடத்தே போயப்புக்கல்லது நில்லேன்' என்ன, 'உனக்கிதுதலைமைக்குப்போராது, நீசொல்லுகிறவை வார்த்தை யன்று' என்ன, அவர்களை 'நீங்கள் நிரோதிக்கிறத்தால் பெற்றதென், நான் போகை தவிரேன், நீங்களே யென்னைக்கொடுபோய்விடுங்கோள்' என்ன, அவர்கள் 'அதுக்கு நாங்கள் வழிப்படோம்' என்ன, ஆகில் நானேயாகிலும் போகை தவிரேனென்கிறாள்" என்று. [ஸமா த்வாதஶ வர்ஷாணி] [ஸமாத்வாதஶதத்ராஹம்] இப்போது காதாசித்க தர்ஶநமுங்கூட வரிதாம்படியிருக்கிறதான், முன்பு சிரகாலமவரோடே யநுபவிக்கப்பெற்றேன்காண். [ராகவஸ்ய நிவேஶநே] [ராகவஸ்யநிவேஶநே] எங்கள்மாமனாருடைய மாளிகையிலே யவர் தண்ணீர்த்துரும்பறுத்துத் தர, நெடுங்காலமநுபவித்தேன். [புஞ்ஜாநா மாநுஷாந் போகாந் ஸர்வகாம ஸம்ருத்திநீ] [புஞ்ஜாநாமாநுஷாந்போகாந் ஸர்வகாமஸம்ருத்திநீ] "ஸர்வாந் காமாந்" (ஸர்வாந்காமாந்) என்கிறபடியே எல்லாமநுபவிக்கப்பெற்றேன். அப்படியுமன்றிறே யிங்கு; "பஹவோ ந்ருப கல்யாணகுணா:" (பஹவோந்ருபகல்யாணகுணா:) என்று குணங்களிரட்டித்தவிடமிறேயிது. ஆக வித்தால் சொல்லிற்றாயிற்று - நமக்கு சப்தாதிவிஷயங்களின்று மிந்த்ரியங்களை மீட்கவொண்ணாதாப்போலேயிறே யிவளை பகவத்விஷயத்தி னின்றும் மீட்கவொண்ணாதபடி. அது கர்மமடியாக வருகிறது, இது பகவத்ப்ரஸாதமடியாக வருகிறது. திருத்தாயார் பேசாய்வருகிறவை-ஆழ்வார் தமக்குப் பிறந்த தசாவிசேஷம், தலைமகளாய்ப் பேசுகிறதும் - இவர்க்குப் பிறந்ததோ ரவஸ்தாவிசேஷம்; அதில, நிஷேதிக்கிற திருத்தாயா

ர்முகத்தால் சொல்லுகிறது - ஸ்வரூபமான ப்ராவண்யத்திலே யுபாயம் சொருகிற்செய்வதென்னென்று பதுக்குச் சொல்லுகிறது; பெண்பிள்ளை கருத்தால் சொல்லுகிறது - உபாயமவனேயாகில் ப்ராவண்யம் ஸ்வரூபமாமத்தனையன்றோ வென்று. ஆக, இவ்விரண்டர்த்தத்தையு மிரண்டு முகத்தாலே யாழ்வார் தாமநுஸந்தித்த படியைச் சொல்லுகிறது. மோஹமுந்தெளிந்து தானே கூப்பிடவல்லளானவிதுவே - இத்திருவாய்மொழிக்கேற்றம...*

ஜீயர் அரும்பதம்.

வெள்ளைச்சுரிசங்குப்ரவேசம். சங்க்ரஹசங்கதி (இட்டகாலிந்யாதி) மோஹித்தவளுக்குத் தெளிவுபிறக்கைக்கு ஹேதுவேதென்ன (அதுக்கடியித்யாதி) குணங்கள் தரிப்பிக்குமோவென்ன (போனவுயிரையித்யாதி) இவ்விடத்திலே - " ஐதம் பரம்ஸ்ருதஸஞ்ஜீவநீம் ராமவ்ருத்தாந்தகதாமாஹ" (இதம்பரம்ம்ருதஸஞ்ஜீவநீம்ராமவ்ருத்தாந்தகதாமாஹ) என்றஸஹஸ்ரநாமபாஷ்யவாக்யத்தைநினைப்பது.

• " விஸ்தரஸங்கதி (கீழ்ப்பிறந்தமோஹமுமித்யாதி) ஒருப்படஉத்யோகிக்க. "என்னெஞ்சிறைகொருமர்கேயொழிந்தார்" என்றத்தைப்பற்ற (அபஹ்ருதசித்தையானேனென்றது) " என்னைக்காட்டுமினே " என்றத்தைப்பற்ற (நீங்களென்றேடுடன்பட்டித்யாதி)

" 'அணுகியடைந்தனள்' என்றது - ஸாக்ஷாத்ஸம்ஶ்லேஷத்தை " என்றுபிள்ளான் நிர்வாஹம்; அர்த்தையருளிச்செய்கிறார் (அங்ஙனன்றிக்கேயித்யாதி) பிள்ளான் நிர்வாஹத்தில்; ஸம்ஶ்லேஷமுண்டாகு லொருதிருவாய்மொழியருளிச்செய்வர், அது செய்யாமையாலே அஸவரஸம். உன்மஸ்தகரஸமான ஸம்ஶ்லேஷம் ப்ராவ்ருத்தமானால் பிரியவேண்டுவானென்னென்ன (பிரிந்துகூடாவிடிலித்யாதி) ஏகதத்த்வமென்னலாம்படி கலந்துவைத்துப் பிரியக்கூடுமோவென்ன (இனியெல்லாவளவிலுமித்யாதி) பிரிவை ப்ராஸங்கித்தால் " வேண்டா " என்னவொண்ணாதோவென்ன (இவளுமித்யாதி) ஒருப்படுத்தி-அநுப்புவித்த. வழிவிட்டென்றபடி. இப்படி வழிவிட்டு மீண்டாளாகில் நோகப்படுவானென்னென்ன (எல்லாவளவிலுமித்யாதி) நானேயாகிலும் போகைதவிரேனென்றது - "சென்றே - சேர்வன்" என்றத்தைப்பற்ற.

கீழ் ப்ரஸ்துத ஶ்லோகத்துக் கர்த்தம் (ஸமாத்வாதஶேத்யாதி) * காலாத்வனோரத்யந்தஸம்யோகே த்விதீயையாகையாலே தத்பலிதம் (தண்ணீர்த்துரும்பறுத்தித்யாதி) தண்ணீர்த்துரும்பு - ப்ரதிபந்தகம். " மாநுஷாந் போகாந் - புஞ்ஜாநாஸ்தீ, ஸர்வகாமஸம்ருத்தினீ அபவம் " (மாநுஷாந்போகாந் - புஞ்ஜாநாஸ், ஸர்வகாமஸம்ருத்திநீ அபவம்) - சமஸ்த கல்யாண குணநுபவத்தாலும் பூர்ணையானேனென்றபடி. " ஸர்வாந்காமாந் " (ஸர்வாந்காமாந்) என்றது - பரத்வத்திலேயன்றோ, இங்குண்டோ வென்ன (அப்படியுமித்யாதி) இங்கு - ராமாவதாரத்திலென்றபடி. ப்ரமாணமேதென்ன (பஹவ இத்யாதி)

இத்திருவாய்மொழிக்கு ஸ்வாபதேசம் (ஆகவித்தாலித்யாதி) இவ்வுபயத்துக்கும் ஹேதுவேதென்ன (அதுகர்மமித்யாதி) திருத்தாயாரான வவஸ்த்தைக்கும் தலைமகளான வவஸ்த்தைக்கும் பேதம் சொல்லுவதாக வதுதன்னை யநுவதிக்கிறார் (திருத்தாயாரித்யாதி) (அவஸ்த்தாவிசேஷம்) என்றவநந்தரம்; ஆயிருக்க,

நிஷேதிக்கிறதும் ப்ரவர்த்திக்கிறது மொருவர்க்கே கூடுமோவென்ன என்றத்யாஹரிப்பது. அந்யோந்ய வைஷம்ய கதநபூர்வகமாக வுத்தரமருளிச்செய்கிறார் (அதிலித்யாதி வாக்யத்வயத்தாலே)

முந்தினயோஜனையில் கீழிற்றிருவாய்மொழியைப்பற்ற விதுக்கு வாசியேதென்ன (மோஹமுமித்யாதி) . ...*

மூன்றாந்திருவாய்மொழி.

முதற்பாட்டு.

வெள்ளைச்சுரிசங்கொடாழியேந்தித்தாமரைக்கண்ணனென்னெஞ்சினூடே, புள்ளைக்கடாகின்றவாற்றைக்காணீரென்சொல்லிச்சொல்லுகேனன்னைமீர்காள், வெள்ளச்சுகமவன்வீற்றிருந்தவேதவொலியும்விழாவொலியும், பிள்ளைக்குழாவிளையாட்டொலியுமறாத்திருப்பேரையிற்சேர்வனே.

ஆறாயிரப்படி.

நிரதிஶயௌஜ்ஜ்வல்ய பரிபூர்ணநிர்மல ஶாரத சந்த்ரமண்டலம் போலேயிருந்த ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும், நிரதிஶயதீப்தி யுக்தஸூர்யமண்டலம்போலே யிருந்த திருவாழியையுமேந்தி, * பொன்மலையின் மீமிசைக்கார்முகில்போலேபெரியதிருவடி திருத்தோளிலே யேறி யருளி, * இலங்கொளிசேரரவிந்தம்போன்ற நீண்ட கண்களையுடையனானவ னென்னெஞ்சினூடே சாரிகைத்திரிந்தருளுகிறபடி நீங்கள் காண்கிறிலிகோள். இன்னபடியென்றெனக்குச் சொல்ல நிலமாகிறதில்லை. ஆதலாலவனை யொருக்ஷணம் காணாதொழியில் தரிக்கமாட்டேன்; வேதகோஷந்தானும் மஹோத்ஸவ கோஷந்தானும் க்ரீடமாநரான பாலர்களுடைய பரமபுருஷ குணஸ்துதி கோஷந்தானும் பரிபூர்ணமான திருப்பேரையிலே, மத்ஸம்ஶ்லேஷ நிரவதிக ஸுகமஹோததி நிமக்நனாய் பரிபூர்ணனாய்க்கொண்டிருக்கிற, விருப்பைக்காணவேணும்; நீங்களென்னைக் கொண்டுபோய் விடீர்களாகில் நானேயாகிலும்போவேனென்று, தன்னை ப்ரதிபந்திக்கிறதாயாரையும் தோழிமாரையுங் குறித்து சொல்லுகிறாள்.....................*

பன்னீராயிரப்படி.

முதற்பாட்டில், அநபாய்யமான வாயுதங்களோடு மவயவங்களோடும் தன்னெஞ்சிலே பெரியதிருவடியை நடத்திப்ரகாஶிக்கிற வாகாரத்தாலே யீடுபட்டு, அவனிருந்த தென்திருப்பேரையிலே செல்லுகையிலுண்டான துணிவைத்தாயாரைக்குறித்துச்சொல்லுகிறாள்.

அன்னைமீர்காள்-வாசாமகோசரமான வகவாயில் விகாரமறியாதே, "பெற்றவர்களிறே நாம்" என்றே விலக்கத்தேடுகிறவர்களே. நானாசைப்பட்டபடியே, வெள்ளை - வெளுத்தநிறத்தையும். சுரி-சுரியையுமுடைத்தான. சங்கொடு-ஸ்ரீபாஞ்சஜந்

யத்தோடே. ஆழி - திருவாழியையும். ஏந்தி - ஏந்தி. தாமரைக்கண்ணன்-நான்தளரும்படி யநந்யார்ஹயாக்கினதாமரைக்கண்ணையுடையவன். தானும்தன்விபூதியும் புகுந்தாலுமிடமுடைத்தான, என் - என். நெஞ்சின் - நெஞ்சின். ஊடே-உள்ளே. புள்ளை - பெரியதிருவடியை. கடாகின்ற - தன்னபிநிவேசமாறு ரூபமாகநடத்துகிற. ஆற்றை - ப்ரகாரத்தை. காணீர் - நீங்களறிகிறிலிகோள். இவ்வநுபவத்துக்கு,என் சொல்லி-என்னபாசுரமிட்டு. சொல்லுகேன் - நான்சொல்லுவேன். இவ்வளவில், வெள்ளச்சுகம் - பகவதநுபவத்தாலே யபரிமித சுகார்ணவத்தை யுடைத்தாய். அவன் - என்னெஞ்சுக்குள்ளே ப்ரகாசிக்கிறவன். வீற்று - தன்மேன்மைதோன்ற. இருந்த - இருக்குமிடமாய். வேதவொலியும் - அந்த ஆசநசோபையை யநுபவிக்கிறவர்களுடைய வேதகோஷமும். விழா - நிரந்தரோத்ஸவத்தாலுண்டான. ஒலியும் - வாத்யாதிகோஷமும். "ஸாமகாஸி ஸ்ரீஹா:" (பாலா அபிக்ரீடமாநா:) என்கிறபடியேஅவனுடைய குணசேஷ்டிதாதிகளைப்போற்றிட்டுக்கொண்டு, பிள்ளைக்குழா-பிள்ளைகள் திரள். விளையாடு - விளையாடும். ஒலியும் - கோஷமும். அறா - அவிச்சிந்நமாய் நடக்கும். திருப்பேரையில் - திருப்பேரையிலே. நான் - நான். சேர்வன் - சேருவன்..*

ஈடு - முதற்பாட்டு.

இப்பிராட்டி வாசாமகோசரமாம்படி தனக்குவர்த்திக்கிற வ்யஸநத்தாலே, தென்திருப்பேரையிலே போகவேணுமென்று தனக்குப்பிறந்த தசையை, வினவுகிறதிருத்தாய்மார்க்குச் சொல்லுகிறாள்.

(வெள்ளைச்சுரிசங்கொடாழியேந்தி) "தவளவொண்சங்குசக்கரம்" என்றும், "கூராராழிவெண்சங்கு" என்றும், "சங்குசக்கரங்களென்று கைகூப்பும்" என்றும் கையுந்திருவாழியுமான வழகு கைவிடாதே யிவளை யநுவர்த்திக்கிறபடி. * முகில்வண்ணனிறே, அந்நிறத்துக்குப் பரபாகமானவெளுப்பையும், சுரியையுமுடைத்தான ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும்; அங்ஙனுமொருவிசேஷணமிட்டுச் சொல்லவேண்டாதபடியான வழகையுடைத்தான திருவாழியையுமேந்தி. (தாமரைக்கண்ணன்) "தாமரைக்கண்ணென்றேதளரும்" என்றது பின்னாட்டுகிறபடி. திருமேனிக்கு திவ்யாயுதங்கள் ப்ரகாசகமாயிருக்குமாபோலே, ஆத்மகுணங்களுக்கு நோக்கு ப்ரகாசகமாயிருக்கிறபடியும். அகவாயில் தண்ணளியெல்லாம் கண்வழியேயிறே தோற்றுவது. ப்ரதிகூலர்க்கு திவ்யாயுதங்களோடொக்கத் திருக்கண்களும் விரோதியாய்த் தோற்றுமாபோலேயிறே அநுகூலர்க்குத் திருக்கண்களோபாதி திவ்யாயுதங்களுமழகுக் குடலாய்த் தோற்றும்படி. திருக்கண்களோடே திவ்யாயுதங்களையும், திவ்யாயுதங்களோடே திருக்கண்களையும் சேர்த்தநுபவிப்பர்கள். ஆயுதங்களோடே திருக்கண்களைக் கூட்டுகிறது தோற்பித்த படிக்கு; "ஜிதந்தே" என்னப் பண்ணுமிறே. கண்களோடுதிவ்யாயுதங்களைக்கூட்டுகிறது அழகுக்கு. இவ்விடத்தேநிலாத்துக்குறி பகவர்வார்த்தையை யருளிச்செய்வர் ஜீயர்: கைக்கு ஆழ்வார்களாபரணமா யிருக்குமாபோலேயாயிற்று முகத்துக்கு

திருக்கண்க ளாபரணமாயிருக்கும்படியும். " திருக்கண்டேன் பொன்மே னிகண்டேன் திகழு - மருக்கனணி நிறமுங்கண்டேன் - செருக்கிளரும்- பொன்னாழிகண்டேன் புரிசங்கங்கைக்கண்டே-னென்னாழிவண்ணன்பாலின்று " என்று வடிவழகோபாதி திவ்யாயுதங்களுமாபரணமா யழகிதாயிறேயிருப்பது. ஆழ்வார்கள்தானவனைக்கைசெய்திருக்கையாலே ஆபரணகோடியாயிறே யிருப்பது. கைசெய்கையென்று - அலங்கரிக்கைக்குப்பேர். (என்னெஞ்சினூடே) தங்கள் நெஞ்சிலில்லாமையாலே " இதுகூடாது " என்றிருப்பர்களிறே. (என்னெஞ்சினூடேபுள்ளைக்கடாகின்ற) இவர்க்கு * மயர்வறமதிநலமருளி, [நெஞ்சமேநீணகர்] என்னும்படியிறே திருத்திற்று, ஒரு த்ரிபாத்விபூதியிலு மிடமுடைத்தாயிருக்கை. திருவடி திருத்தோளிலேயேறி அங்குள்ளார்க்குஜ்ஜீவநமாகச் சாரிகைவந்துகாட்டுமாபோலே, இவர் நெஞ்சினுள்ளே பெருங்கலமாக வழக்குசெண்டேறுகிறபடி. (நெஞ்சினூடே) " அகவாயிலுள்ளது கண்ணுக்குத்தெரியாதோ" என்றிருக்கிறார்களாயிற்றிவர்கள்; (" [Grantha] " (நிர்க்குணஃபரமாத்மாஸௌதேஹம்தேவ்யாப்யதிஷ்டதி) என்னுமாபோலே " நெஞ்சிலில்லையாகில் நானுமில்லையென்றுநினைத்திருக்கலாயிற்றுக்கிடீர்"என்றிருக்கிறுளிவள். (ஒருவாசத்தடத்தில்) ஹம்ஸசக்ரவாகங்கள்போலே ஆழ்வார்களும், காடு படவலர்ந்த தாமரைபோலே யிருக்கிற திவ்யாவயவங்களும், அத்தடாகத்தில் நீருமிலையும்போலே யிருக்கிறதிருமேனியுமாய், அத்தைக்கினிய வொருமேருவஹித்தாப்போலே யிருக்கிற பெரிய திருவடியோடேகூட விவர் திருவுள்ளத்தே யுலாவுகிறபடி. இப்படியேயிறே அநுகூலரோடு பரிமாறும்படி. நஞ்சீயர்கோயிலுக்கெழுந்தருளாநிற்க, வழியிலேபிள்ளானைக்கண்டு " எம்பெருமானுக்கு ஸ்வரூபவ்யாப்தியேயோ, விக்ரஹவ்யாப்தியு முண்டோ " என்று கேட்க, " பாஷ்யகாரர்தோற்றச்செய்துகொண்டுபோந்தது ஸ்வரூபவ்யாப்தியாயிருக்கும், ஆகிலும் எம்பாரொருநாள் 'உபாஸகாநுக்ரஹார்த்தமாக வாஸ்ரீதருடைய நெஞ்சிலே விக்ரஹத்தோடே வ்யாபித்திருக்கும்' என்றருளிச்செய்யக் கேட்டேன் " என்று பணித்தான்; (" ' [Grantha] ' (குஹாயாம்) ' [Grantha] ' (கத்ரவரேஷ்ட்டம்புராணம்) " 'அரவத்தமளியினோடு மழகிய பாற்கடலோடு மரவிந்தப் பாவையுந்தானு மகம்படிவந்து புகுந்து' என்றும், ' [Grantha] ' (யேஷாமிந்தீவரஶ்யாமோ ஹ்ருதயேஸுப்ரதிஷ்ட்டிதஃ) என்றும், ' என்னெஞ்சினூடே புள்ளைக்கடாகின்ற ' என்றுஞ் சொல்லுகிறபடியே " சுபாஶ்ரயப்ரகரணங்களிலும் " [Grantha] " (தஸ்யைஷ ஆத்மாவிவ்ருணுதேதநூம்ஸ்வாம்) என்கிறபடியே அவ்வடிவேயாயிற்று த்யேயமாகச் சொல்லுகிறது ; பின்பு " [Grantha] " (ஏஷஸர்வஸ்

வபூதஸ்து) என்று கொடுப்பது மவ்வடிவேயாயிற்று. புறம்புள்ளார் சொன்னபடி சொல்லுகிறார்கள்; நம்மாழ்வார்கள் போனவழியிதுக்கு மேற்படவில்லை. “ இதுக்குறுள்ளேயொன்றுண்டு ” என்று சொல்லுகிறவர்கள் - ஸ்வரூபஸத்பாவஞ் சொல்லுகிறார்களித்தனை, விக்ரஹமில்லையென்றன்று. (புள்ளைக்கடாகின்ற) “ அகவாயில் நின்று சுழிக்குமத்தனையோ ” என்று அவன் த்வரித்து வடிம்பிட்டுத்தாக்க “ ஓங்காண், நீயறிந்தாயோ ” என்று ப்ரீதித்து மீளாநிற்கும்; “ [illegible] ” (நிமதः) என்கிறபடியே, பக்ஷபாதத்தோடே சேர்க்கையிலேயிறே யவனுக்கும்பணி. (கடாகின்ற) பூதமாய் விஸ்மரிக்கிறீகோளன்று, பவிஷ்யமா யுபதேசிக்கிறதன்று, வர்த்தமாநத்துக்குபதேசம் வேணுமோ. (காணீர்) காண்கிறிலீர். வர்த்தமாநமும் ” கார்யகரமன்றிக்கே யொழிகிறது நிரோதிக்கிற நிர்ப்பந்தத்தாலேயிறே. உங்களுக்குக்குரகோஷம்கேட்கிறதில்லையோ. ப்ரசித்தமான வர்த்த முபதேசிக்கவேண்டுவதே. (காணீர்) உங்களுக்குக் கண்ணும் செவியுமின்றிக்கே யிருந்தோ நிஷேதிக்கிறது. என்னைப்போலே * உட்கண்ணாலேகாணிகோள்.

நாங்கள் கண்டிலோம், கண்டீசொல்லிக்காணு’யென்றார்கள் (என் சொல்லிச்சொல்லுகேன்) எனக்குச் சொல்லலாவதில்லை, என்னபாசுரமிட் டெத்தைச்சொல்லுவது. உங்கள் கண்ணுக்கு விஷயமாகாதாப்போலே யென்வாக்குக்கும் விஷயமாகிறதில்லை. இவர்க்குநெஞ்சுநிறைந்தது வாய்கொள்ளுகிறதில்லைகாணும். (என்சொல்லிச்சொல்லுகேன்) நான்பலஹாநியாலே சொல்லமாட்டேன், விஷயவிஸ்தாராஹித்யத்தாலே சொல்லிமுடிக்கப்போகாது, உங்களுக்கு ப்ரதிபத்திபண்ணுகைக்கு பரிகரமில்லாமையாலே சொல்லத்தான் வேண்டா, (அன்னைமீர்காள்) ஜ்ஞாதாம்ஸங்கொண்டு * போதயந்தः பரஸ்பரம் பண்ணலாயிற்றிறே ஸஜாதீயைகளானிகோளாகில். (என்சொல்லிச் சொல்லுகேனன்னைமீர்காள்) எனக்கோடுகிற வ்யஸநத்துக்குப் பாசுரமில்லை, அவஸ்த்தாஜ்ஞாநமின்றிக்கேபழமைகொண்டாடுகிறிகோளித்தனையிறே, நிஷேதிக்கைக் கறுவர்த்தநியைகளாமத்தனையோ வேண்டுவது.

எங்களுக்குக் காணவும் கேட்கவும் கண்ணும்செவியுமில்லையாகில், நீதான்செய்யப்பார்த்ததென்னென்ன; ஹிதஞ் சொல்லி மீட்க நினைப்பாரில்லாத வூரிலே போய்ப்புகு மித்தனையென்கிறாள். பிரிந்துபோனாரை நினைக்கவொட்டாத தேசமிறே. “ [illegible] ” (நோபஜநம்ஸ்மரந்) என்கிறபடியே. (வெள்ளச்சுகமவன்) சுகவெள்ளத்தையுடையவன். விப்ரலேஷதசையிலும் சம்ப்ரலேஷ ஜநிதமான நிரதிசயசுகம் மாறாதவன். பிரிவிலுமறையாறுபடாதபடி காணும் கலவியி லவன்தேக்கின சுகாதிசயமிருந்தபடி. (வெள்ளை) என்று பாடமானபோது மறுவற்றசுக்லமென்கை. (துःகாமிப்ரசுகமென்றபடி.) (அவன்வீற்றிருந்த) (தென்திருப்பே

ணையில்) என்றந்வயம் * இட்டகாலிட்டகையளாயிருக்கிற விருப்புக்கெதிர்த்தட்டாயிருக்கிற விருப்பிறே யது. இத்தலையைத் துடிக்கவிட்டுத்தன்னைப்ரவர்யந்தோற்ற சுகோத்தரமாக விருக்கிறபடி. (அவன்விற்றிருந்த) இத்தலையைத் தோற்பித்த தன்வெற்றியெல்லா மவ்விருப்பிலே தோற்றும்படி யிருந்த. அவன் மெய்மறந் தபபடி யிருந்தால் நாமும் மெய்மறந்திருக்கவோ. பரிபூர்ணனு யவன் செருக்காலே யிருந்தால், குறைவாளராய் நோவுபடுகிற நாமுமிருக்கவோ. அவன் முறைதப்பநின்றால் நாமும் முறைதப்புமித்தனையன்றோ. பிரிந்தால் முறைபார்த்திருக்கலாம் விஷயத்துடனே கலந்தோமாகிலன்றோ நாமாறியிருக்கலாவது; முறையை யழித்தாகிலும் மடலையெடுத்துக்கொண்டு போமித்தனையன்றோ. "நமக்கேநலமாதலில்" என்னக்கடவதிறே. (வேதவொலியும்) அவன்நெஞ்சொழிந்து பழம்புணர்ப்புக் கேளாநின்றான்காணும். அதாவது - பண்டு தான் வென்ற வெற்றிமாலைகள் கேட்கையிறே. அதாவது - "ஜிதந்தே புண்டரீகாக்ஷ" (ஜிதந்தேபுண்டரீகாக்ஷ) என்கிற வெற்றிமாலைகளிறே. (விழாவொலியும்) இவளைத் தோற்பித்ததுக்கு நெய்யாடல் போற்றுகிறபடி. (அறு) தீர்த்தம் ப்ரஸாதித்த பிற்றைநாளே திருமுளைச்சாத்தா நிற்குமந்தனை. ஸ்யமந்தகமணி கைப்பட்டபின்பு அக்ரூரனடுத்தடுத்து அஸ்வமேதம்பண்ணினாப்போலே, அவர்க்கு மடுத்தடுத் துத்ஸவமாய்ச் செல்லுகிறவித்தனை ; ஸ்த்ரீரத்நமிறே இவள். இவளிருக்கிறவிடமிறே மங்களகோஷங்கள் மாறிக்கிடக்கிறது. (பிள்ளைக்குழா விளையாட்டொலியுமறு) பருவம் நிரம்பியிருக்கச்செய்தே நிஷேதிப்பா ரிருக்கிற வூரைவிட்டு, பருவம்நிரம்புவதற்குமுன்னே பகவதநுபவமே யாத்ரையாய்ச்செல்லுவா ரிருந்தவூரில்போய்ப் புகுமித்தனையென்கிறாள். அவ்வூரில் பருவம் நிரம்பாத பிள்ளைகளு மகப்பட மகரநெடுங்குழைக்காதனுடைய வடிவழகிலே தோற்று, வாய்வெருவாநிற்பர்கள். "பாலா அபி க்ரீடமாநா க்ருஹத்வாரேஷு ஸங்கஶ: । ராமாபிஷ்டவஸம்யுக்தாஶ்சக்ருரேவமிதஃ கதா: ॥" (பாலா அபிக்ரீடமாநாக்ருஹத்வாரேஷுஸங்கஶ: । ராமாபிஷ்டவஸம்யுக்தாஶ்சக்ருரே வமிதஃகதா:) என்னும்படியே. [ராமோராமோராம இதி] [ராமோராமோராம இதி] "சோறு சோறுசோறு" என்பாரைப்போலே. [ப்ரஜாநாமபவந்கதா:] [ப்ரஜாநாமபவந்கதா:] ஜநிதர்மாக்களுக்கெல்லாம் பாசுரமிதுவே. [ராமபூதம்ஜகதபூத்] [ராமபூதம்ஜகதபூத்] நாடடங்கராமாத்வைதமானபடி. நித்யவிபூதியிலே பரிமாறக்கடவதிங்கே பரிமாறுகைக்கு ஹேதுவென்னென்னில் [ராமோராஜ்யம் ப்ரஸாஸதி] [ராமோராஜ்யம் ப்ரஸாஸதி] நாடடங்கலும் தந்தாமுடைய கர்மபலம்புஜிக்கப் பெற்றார்களில்லை, ராமபாக்யமே யநுபவித்துவிட்டது, [நசாக்நிஜம்பயம்கிஞ்சித்] [நசாக்நிஜம்பயம்கிஞ்சித்] அக்நியும் சோறுவேவிக்கவேண்டுமௌஷ்ண்யத்துக்குமேற்படவுடைத்தாவதில்லை. [நாப்ஸுமஜ்ஜந்திஜந்தவ:] [நாப்ஸுமஜ்ஜந்திஜந்தவ:] கொண்டாழக்கடவ ஜலந்தானே கொண்டுமிதக்கப்புக்கதாரா

மசரத்துக்கஞ்சி. பண்டேகைகண்டிருப்பதொன்றே ஜலந்தான். * வேலை வேவ வில்வளைத்தவனிறே. (திருப்பேரையிற்சேர்வன்நானே) ஜயித்தாரிருந்தவிடத்தே தோற்றார்சென்று விழுமத்தனையிறே. * தாமரைக்கண்ணனென்னெஞ்சினூடே யிறே, ஆகையாலே "ஜிதந்தே" (ஜிதந்தே)என்று சென்று விழுமத்தனையிறே ....*

ஜீயர் அரும்பதம்.

முதற்பாட்டு (வெள்ளையித்யாதி) "என்சொல்லிச்சொல்லுகேன், திருப்பேரையிற்சேர்வன்நான், அன்னைமீர்காள்" என்கிறபதங்களைக் கடாக்ஷித்தவதாரிகை (இப்பிராட்டியித்யாதி)

திருக்கண்களுக்குமுன்னே திவ்யாயுதங்களைச் சொல்லுவானென்னென்ன; போக்யதையாலேயென்கிறார் (தவளமித்யாதி) சப்தார்த்தம் (முகில்வண்ணனித்யாதி) முகில்வண்ணனிறேயென்றது - "நிகரில்முகில்வண்ணன்" என்றத்தைப்பற்ற, "வெள்ளை" என்று சங்குக்குவிசேஷண மிட்டுச்சொன்னாப்போலே சொல்லாதே. வெறுமனே "ஆழி" என்றதுக்குபாவம் (அங்ஙனுமித்யாதி) இதுக்கநந்தரம் " தாமரைக்கண் " என்றதுக்குபாவம் (தாமரைக்கண்ணனென்றேயித்யாதி) திவ்யாயுதங்களோடே திருக்கண்களைக்கூட்டிச்சொன்னதுக்கு பாவத்வயம் (திருமேனிக்கித்யாதியாலும், ப்ரதிகூலர்க்கித்யாதியாலும்) அதாவது-ப்ரகாசகத்வாகாரமும், ஆகர்ஷகத்வாகாரமு மிரண்டுக்கு மொத்திருக்கையாலே கூட்டிச்சொல்லுகிறானென்று-க்ரமேண விரண்டு வாக்யத்துக்கும்பாவம். அப்படி ப்ரகாசகமோவென்ன (அகவாயிலித்யாதி) ப்ரதிகூலர்க்குத் திருக்கண்கள் விரோதியாய்த் தோற்றுமென்னுமதுக்கு, "சோதனையழலவிழிததானே" என்றதுப்ரமாணம். இந்தப்ரஸங்கத்திலே; திவ்யாயுதங்களோடே திவ்யாவயவங்களைச்சேர்த்தும், திவ்யாவயவங்களோடே திவ்யாயுதங்களைச்சேர்த்து மாழ்வார்க ளநுபவிப்பர்களென்கிறார் (திருக்கண்களோடேயித்யாதி) இவ்வுபயத்துக்கும் ஹேதுவேதென்ன (ஆயுதங்களோடே யித்யாதிவாக்யத்ரயத்தாலே) ஆயுதம்போலே திருக்கண் தோற்பிக்குமோவென்ன (ஜிதந்தேயித்யாதி) திருக்கண்களோடே திவ்யாயுதங்களைச்சேர்த்ததுக்கு, " செய்யகண்ணு உருவச்செஞ்சுடராழிவல்லானே " என்றத்தைக்கண்டுகொள்வது. திவ்யாயுத ப்ரஸங்கத்திலே, த்விபுஜனோ சதுர்ப்புஜனோ சர்வேஶ்வரனென்று சங்கைவர (இவ்விடத்தேயித்யாதி) அதாவது - நிலாத்துக்குறிபகவர் ப்ரஶ்நத்துக்கு பட்டர் பரிஹரித்த வார்த்தையை யருளிச்செய்வரொன்றபடி. * பயிலும்சுடரொளி யிரண்டாம்பாட்டிலே யிந்தவைதிஹ்யங்கண்டுகொள்வது. ஒப்பனையழகாலும் திவ்யாயுதங்களுக்கும் திருக்கண்களுக்கும் சேர்த்தியுண்டென்று மூன்றாம்பாவம் (கைக்கித்யாதி) "திவ்யாயுதங்களாபரணம்" என்னுமதுக்கு ப்ரமாணம் (திருக்கண்டேனித்யாதி) பாட்டுக்குக்ரமேணார்த்தம்-பெரியபிராட்டியாரைக்கண்டேன், பொன்போலே ஸ்ப்ருஹணீயமான திருமேனியைக்கண்டேன், விளங்குகிற பாலார்க்கனைப்போலே யிருவருடையவொளியும் தன்னிலேகலசி விளங்காநின்றுள்ள வழகியநிறத்தையுங்கண்டேன், யுத்தோன்முகமாய்க் கிளருகிற பொற்கென்ற நிறத்தையுடைய திருவாழியைக்கண்டேன், சுற்றும் முற்றும் சீறிப்பார்க்கிற ஸ்ரீபாஞ்சஜந்யத்தையுங்கண்டேன். புரிசங்கம் - சேஷத்வத்தாலே ப்ரஹ்வீபாவத்தையுடைய சங்கென்றுமாம். என்னுடைய, கடல்போலே ஶ்ரமஹரமான வடிவையுடையவன்பக்கலிலே யாழ்வார்க

ளிருவரும் காட்டக்கண்டவின்று. சாடு (ஆழ்வார்கள்தானித்யாதி) கைசெய்கை- அலங்கரிக்கையும், ஸஹாயம் செய்கையும், யுத்தம்பண்ணுகையும்.

"என்" என்றதுக்குபாவம் (தங்கள்நெஞ்சிலித்யாதி) அணுவானநெஞ்சுக்குள்ளுண்டோவென்ன (இவர்க்கித்யாதி) "நீணகர்" என்றதுக்கர்த்தம் (ஒரு த்ரிபாத்விபூதியித்யாதி) "கடாகின்ற" என்றதுக்குபாவம் (திருவடியித்யாதி) சாரிகை- வையாளி. அழகுசெண்டேறுகை - விளையாட்டுச்சாரிகைவருகை. அழகுகாட்டிக் கொண்டு புறப்படுகையுமாம். "நெஞ்சு" என்றதுக்குபாவமாதல், "நெஞ்சினூடே" என்றவவதாரணத்துக்கு பாவமாதல் (அகவாயிலித்யாதிவாக்யத்வயம்) அகவாயிலுள்ளது மேலேதோன்றுமென்றதுக்கு ப்ரமாணம் (நிர்க்குணஃபரமாத்மாஸௌதேஹந்தேவ்யாப்யதிஷ்டதி) என்கிறவசனம். கீழெல்லாங்கூட்டிபாவம் (ஹம்ஸேத்யாதி) அத்தை-தடாகத்தை. கினிய - கபளீகரிக்க. எல்லாருமிருக்க விவருடைய ஹ்ருதயத்திலே செய்வானென்னென்ன (இப்படியேயிறே யித்யாதி) "நெஞ்சினூடேபுள்ளைக்கடாகின்ற" என்றப்ரஸங்கத்திலே, அநுகூலரோடே ஸவிக்ரஹனாய்ப்பரிமாறுமென்றதுக்காப்தஸம்வாதம் (நஞ்சீயரித்யாதி) நோற்றவருளிச்செய்து-வ்யாக்யாநம்செய்து. விக்ரஹவ்யாப்திக்கு ப்ரமாணங்கள் (அரவத்தமளியித்யாதி) (சொல்லுகிறபடியே) என்னுமளவும் - பிள்ளான்வார்த்தை. பெரியாழ்வார் திருமொழி அஞ்சாம்பத்து இரண்டாந்திருமொழி. (அரவத்தமளியினோடும்) திருவநந்தாழ்வானுகிற படுக்கையோடும்; அமளி - படுக்கை; அத்து - சாரியைச்சொல்; (அழகிய பாற்கடலோடும்) அழகிய திருப்பாற்கடலோடும்; (அரவிந்தப்பாவையும்) பிராட்டியும்; (தானும்) உபயவிபூதிவிசிஷ்டனானதானும்; (அகம்படிவந்துபுகுந்து) அந்தரங்கரான வடியாரோடேவந்து புகுந்தென்றபடி. அகம்படி - அந்தரங்கரானவடியார். "[illegible]" (லாபஸ்தேஷாம் ஜயஸ்தேஷாங்குதஸ்தேஷாம்பராபவஃ। யேஷாமிந்தீவர) இத்யாதி. விக்ரஹம் கால்பநிகமென்கிறார்களேயென்ன; பரமார்த்தமென்கைக்குபபத்தி யருளிச்செய்கிறார் (சுபாஸ்ரயேத்யாதிவாக்யத்வயத்தாலே) ஆக, இத்தால் - உபாஸநவேளையிலே விக்ரஹத்தை த்யேயமாகச் சொல்லுகையாலும், பலவேளையிலுங்கொடுப்பதும் * சதாபஸ்யந்திக்குவிஷயமும் விக்ரஹமேயாகையாலும் விக்ரஹம் கால்பநிகமன்றென்றபடி. ஆனால், மாயிகளிதுக்கிசைய வில்லையேயென்ன; நமக்கவர்களைக்கொண்டு கார்யமென், நம்மாழ்வார்கள் சொன்னதே நமக்கு விஸ்வஸநீயமென்கிறார் (புறம்புள்ளாரித்யாதிவாக்யத்வயத்தாலே) "இவ்வுபபத்திகளெல்லாம் '[illegible]' (தஸ்யா உபாஸ்யாயாதேவதாயாரூபமுபதிஸ்யதே) இத்யாதியாலேத்ரமிடபாஷ்யகாராதுமுக்தங்கள்" என்றருளிச்செய்வர். ஆனால், "[illegible]" (ததேகாவயவம்தேவம்) இத்யாதியாலே - விக்ரஹத்தை விட்டவ்வருகே போவானென்கிறதேயென்ன (இதுக்குமுள்ளேயித்யாதி) இதுக்கும் - விக்ரஹத்துக்கும். "கடாகின்ற" என்று-திருவடியையசேதநமாகச் சொல்லுவானென்னென்ன (அகவாயிலித்யாதி) (வடிம்பிட்டு - ப்ரேரித்து - தாக்க, ஓங்காண் நீயறிந்தாயோவென்று-மீளாநிற்கும்) என்றநவயிப்பது. வடிம்பிட்டு - தனிபோட்டு. அப்படி யீஸ்வரனைப்பற்றவுமிவர்க்கு ரக்ஷணப்பாரிப்புண்டோவென்ன (நீமத இத்யாதி) "[illegible]" (ராமஸ்யவ்யவஸாயஜ்ஞாலக்ஷ்மணஸ்யசதீமதஃ। நாத்யர்த்தம்க்ஷு

ப்யதேதேவிகங்கேவஜலதாகமே) இதி ஸுந்தரகாண்டே. "ஸ்ரீமத:" (ஸ்ரீமத:) எ ன்கிறது - த்ருஷ்டாந்ததயாவந்ததித்தளை யிப்பதத்தில். கடாகின்ற - நடத்துகிற வித்யர்த்த:. கடாகின்ற" என்றத்தை - "காணீர்" என்றத்தோடே கூட்டிபாவம் (பூதமாயித்யாதிவாக்யத்ரயத்தாலே) இப்படியானுலுபதேசிக்க வேண்டுவானென் னென்ன; "காணீர்" என்கிறபதத்துக்கர்த்தத்தையு மருளிச்செய்யாநின்றுகொண் டு. அதுக்குஹேதுவையருளிச்செய்கிறார் (காண்கிறிலீரித்யாதிவாக்யத்வயத்தாலே) "காணீர்" என்றதுக்கிரண் டர்த்தம் - காண்கிறிலீரென்னுதல், காணுங்கோளென் னுதல். இந்த விரண்டாமர்த்தத்தை, ஸ்ரவணேந்த்ரியத்தாலும். சக்ஷுரிந்த்ரியத்தா லும், உட்கண்ணாலுங்காணுங்கோளென்று த்ரிவிதமாக வருளிச்செய்கிறார் (உங்களு க்கு குரகோஷமென்றுதொடங்கி, உட்கண்ணாலே காணிகோளென்னுமளவாலே) இத்தால்பலிதம் (ப்ரஸித்தமானவித்யாதி) கீழ்ச்சொன்ன வர்த்தத்வயத்தையுங்கூட் டி யருளிச்செய்து, உட்கண்ணாலே காணுங்கோளென்ற மூன்றும் ப்ரகாரத்தை ய ருளிச்செய்கிறார். (உங்களுக்குக்கண்ணுமித்யாதி)

"என்சொல்லி" என்றதுக்கவதாரிகை (நாங்களித்யாதி) எத்தைச்சொல்லு வதென்றது - எந்தவர்த்தத்தைச் சொல்லுவதென்றபடி. பாசுரமிட்டுச் சொல்ல வொண்ணாதோவென்ன (உங்களித்யாதி) ஹார்த்தபாவமாதல், ஏதத்விவரணமாத ல், "என்னெஞ்சினூடே" இத்யாதியையும் "என்சொல்லிச்சொல்லுகேன்" என் றத்தையுங்கூட்டிரஸோக்தியாதல் (இவர்க்குநெஞ்சித்யாதி) சொல்லப்போகாமைக் கு ஹேதுத்ரயமருளிச்செய்கிறார் (நான்பலஹாநியித்யாதிவாக்யத்ரயத்தாலே)

எல்லாம்சொல்லப் போகாவிட்டாலும், அறிந்தவம்சம் சொல்லவொண்ணா தோவென்ன (ஜ்ஞாதாம்ஸமித்யாதி) ஸஜாதீயைகளானிகோளாகில் - தோழிமாரா னிகோளாகிலென்றபடி. "அன்னைமீர்காள்" என்றதுக்கு - கீழ், வ்ருத்தைகளென் றருளிச்செய்து, நியாமகத்வவிவக்ஷயாபாவாந்தரம் (எனக்கோடுகிறவித்யாதிவாக் யத்வயம்) பழமைகொண்டாடுகிறிகோள்) என்றதின் விவரணம் (நிஷேதிக்கைக் கித்யாதி)

உத்தரார்த்தத்துக்கவதாரிகை (எங்களுக்கித்யாதிவாக்யத்வயம்) அவனே வாராதனோவென்ன (பிரிந்துபோனானையித்யாதி) நினைக்கவொட்டாததேஸமுண்டோ வென்ன (நோபஜநமித்யாதி) "வெள்ளச்சுகமவன்" ஸுகார்ணவத்தையுடையவனி த்யர்த்த:. ஸுகாதிசயம்வருகைக்குஹேதுவருளிச்செய்கிறார் (பிரிவிலுமித்யாதி) ம றுவற்ற-ஸ்வஸ்ரசமானவித்யர்த்த:. மறுவற்றசுகத்தையுடையவனித்யர்த்த:. "வெள் ளம்" என்றபோது, வெள்ளமென்று - சமுத்ரம். வீற்றிருந்த - வேறுபாடு தோற்ற விருந்த. "வீற்றிருந்த" என்றதுக்கு வ்யாவர்த்யம் (இட்டகாலித்யாதி) வேறுபா டேதென்ன (இத்தலையையித்யாதி) "வீற்றிருந்த" என்றதுக்கு - ராஜாவாயிருந்த வென்றர்த்தாந்தரம் (இத்தலைதோற்பித்தவித்யாதி) வெற்றி - ஜயம். அவனப் படி வீற்றிருந்தால் நீயுபேக்ஷியாதே "சேர்வன்" என்கிறதென்னென்ன (அவன் மெய்மறந்தித்யாதி) அவன் மெய்மறந்து - அவன் நம்முடைய வைலக்ஷண்யத்தை மறந்து. அப்படியிருந்தால் - உபேக்ஷித்திருந்தால். நாமும் மெய்மறந்திருக்கவோ - நாமுமவன் வைலக்ஷண்யத்தைமறந் துபேக்ஷித்திருக்கவோவென்றபடி. அதுக்கடி யேதென்ன (பரிபூர்ணனுபவனித்யாதி) அவன் வாராதிருந்தால். "தத்தஸ்யஸ உத்ருஸம்ஸவேத்" (தத்தஸ்யஸத்ருஸம்பவேத்) என்றிருக்கக்கடவநாம் "த்வரிக்கலா மோவென்ன (அவன்முறையித்யாதி) அவன் முறைதப்பினனென்று, நமக்குத்தப் பலாமோ வென்ன (பிரிந்தாலித்யாதி) முறைதப்பும் ப்ரகாரத்தைச் சொல்லுகிறார்

(முறையையழித்தாகிலுமித்யாதி) அப்படி ஸ்வயத்நத்திலே யந்வயித்தாருண்டோ வென்ன (நமக்கேயித்யாதி) நமக்கே நன்மை பார்க்கக் கடவோமென்றபடி. திருமொழி ஒன்பதாம்பத்து மூன்றாந்திருமொழி ஒன்பதாம்பாட்டு, "ஓதிநாமம்" இத்யாதி.

"வேதவொலி" என்றதுக்கு பாவம் (அவன் நெஞ்சித்யாதி) பழம்புணர்ப்பு - பழையவெற்றிமாலைகள். புணர்ப்பு - வெற்றிமாலை.

நெய்யாடல்போற்றுகை - நெய்யிறைத்து விளையாடுகை. "அரு" என்றதுக்குபாவம் (தீர்த்தம் ப்ரசாதித்தவித்யாதி) க்ருஷ்ணாந்தபூர்வகோபயாதகம் (ஸ்யமந்தகேத்யாதி) வ்யதிரேக திருஷ்டாந்தம் (இவையிருக்கிறவித்யாதி) "பிள்ளைக்குழாவிளையாட்டொலியும்" என்றதுக்குபாவம் (பருவம்நிரம்பியித்யாதி) அப்படி பால்யத்திலும் பகவதநுபவபராயிருப்பர்களோவென்ன (அவ்வூரிலித்யாதி) இதுக்கு ப்ரமாணம் (பாலாஅபீத்யாதி) "பாலா அபி க்ரீடமாநா க்ருஹத்வாரேஷு ஸங்கஶ: | ராமாபிஷ்டவஸம்யுக்தா: சக்ருரேவ மித: கதா:" (பாலாஅபி க்ரீடமாநா க்ருஹத்வாரேஷு ஸம்கதா: | ராமாபிஷ்டவஸம்யுக்தாஸ் சக்ருரேவம் மித: கதா:) இத்யயோத்யாகாண்டே. பாலர்களையன்றிக்கே, ஐநிநர்மாக்களெல்லாருமிப்படியே யென்று விவக்ஷித்து, அதுக்கு ப்ரமாணம் (ராமஇத்யாதி) "ராமோ ராமோ ராம இதி ப்ரஜாநாமபவந் கதா: | ராமபூதம் ஜகதபூத் ராமே ராஜ்யம் ப்ரஶாஸதி" (ராமோராமோராமஇதி ப்ரஜாநாமபவந்கதா: | ராமபூதம்ஜகதபூத் ராமேராஜ்யம்ப்ரஶாஸதி) இத்யுத்தரஸ்ரீராமாயணே. விப்ஸைக்கர்த்தம் (சோதித்யாதி) ஜநிநர்மாக்கள் - பிறந்தவர்களென்றபடி. அப்படி ஸ்வகர்மபலம் புஜித்திலர்களோ வென்ன, ப்ரமாணம் (நசாக்நிஜ மித்யாதி) ஸ்ரீஸங்க்ஷேபே, "ந சாக்நிஜம் பயம் கிஞ்சிந் நாப்ஸு மஜ்ஜந்தி ஜந்தவ: | ந வாதஜம் பயம் கிஞ்சிந் நாபி ஜ்வரக்ருதம் ததா." (நசாக்நிஜம்பயம்கிஞ்சிந் நாப்ஸுமஜ்ஜந்திஜந்தவ: | நவாதஜம் பயம்கிஞ்சிந்நாபிஜ்வரபயம்ததா.) ராமசரத்துக் கஞ்சியிருக்குமோவென்ன (பண்டேயித்யாதி) சாத்தாலே ஸமுத்ரத்தை தவிர்த்ததுக்கு ப்ரமாணம் (வேலையித்யாதி) திருச்சந்தவிருத்தம் முப்பத்தோராம்பாட்டு. "காலநேமி" இத்யாதி. ஸமுத்ரம் தக்தமாம்படி வில்வளைத்தவனித்யர்த்தம்.

தான் சேருகிறதென், அவன்வரப்பார்த்திருந்தாலோ வென்கிற சங்கைக்கு, பூர்வார்த்தந்திலே நோக்காக பரிஹாராந்தரம் (ஜயித்தாரித்யாதி) முந்தின பரிஹாரம் (பிரிந்துபோனுரை) இத்யாதிவாக்யம். அப்படி தான் தோற்றுளோ வென்ன (தாமரையித்யாதி வாக்யத்வயம்) ....*

இரண்டாம்பாட்டு.

நானக்கருங்குழற்றோழிமீர்காளன்னையர்காளயற்சேரியீர்கா
ளனித்தனிநெஞ்சங்காக்கமாட்டேனென்வசமன்றிறாப்பகற்போய்த்
தேன்மொய்த்தபூம்பொழிற்றண்பணைசூழ் தென்றிருப்பேரையில்வீற்றிரு
வானப்பிரான்மணிவண்ணன்கண்ணன்செங்கனிவாயின்றிறத்ததுவே.[ந்த

ஆறுயிரப்படி.

(நானக்கருங்குழல்) அதி பரிமள நீலாலகாலங்க்ருத வதநாரவிந்தங்களை யுடைய தோழிமாரு மன்னையரும் மற்றுமுள்ள பந்துஜநங்களும் " நீதனியேபோகையீடல்ல " என்றுசொல்ல, அவர்களைக்குறித்து; நானென்னுடைய ஸ்வதந்த்ரமான நெஞ்சைக்காக்கமாட்டேன், எனக்கு விதேயமன்று, ஆஸ்ரயஸுலபனாகைக்காகத் திருநாட்டில் நின்றும் ஸ்ரீவஸுதேவர் திருமகனாய்வந்து பிறந்தருளி, அக்காலத்தில் பெருதாருடைய விழவுதீரும்படி, தேன்மொய்த்த பூம்பொழில் தண்பணைசூழ் தென்திருப்பேரையில் பரிபூர்ணனா யெழுந்தருளி யிருந்தவனுடைய, மத்ஸம்பலேஷத்தாலே புதுக்கணித்த திருப்பவளத்திலே யென்னெஞ்சிராப்பகல் போய்ப்படிந்து கிடக்கும், இனிநானெங்ஙனே போகாதிருக்கும்படி யென்கிறாள்...*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், நிரவதிகமான பரத்வ சௌலப்யங்களையுடையவன்பக்கலிலே சக்தமாய்ப்போன வென்னெஞ்சைத் தகையமாட்டுகிறிலே னென்று தோழிமாரையும் தாய்மாரையு மயலாரையுங்குறித்துச் சொல்லுகிறாள்.

நானம்-பரிமளோத்தரமான கந்தத்ரவ்யத்தாலே வாசிதமாய். கரு-கறுத்த. குழல்-குழலையுடையரான. தோழிமீர்காள்-தோழிமீர்காள். அன்னையர்காள் - அவர்களோ டென்னோடுவாசியற நியந்த்ரிகளான வன்னைமீர்காள். அயற்சேரியீர்காள்-செய்திவினவவந்த அயற்சேரியீர்காள். நான்-அதிப்ரவணையானநான். தனி-என்னுமதிசயித ப்ராவண்யத்தையுடைத்தாய் ஸ்வதந்த்ரமான. இ-இந்த. நெஞ்சம்-நெஞ்சை. காக்கமாட்டேன்-என்னைவிட்டுப்போகாமல் தகையமாட்டேன். என்-எனக்கு. வசம்-விதேயம். அன்று-அல்ல. இது - இது. இராப்பகல் - இரவோடு பகலோடு வாசியற. போய்-என்னைவிட்டுப்போய். தேன்-வண்டுகள். மொய்த்த - மொய்த்த பூம்பொழில்-பூம்பொழிலையுடைத்தாய். தண்-குளிர்ந்த. பணை-நீர்நிலங்கள். சூழ்-சூழ்ந்திருக்கிற. தென்-கட்டளைப்பட்ட. திருப்பேரையில் - திருப்பேரையிலே. வீற்று தன்பெருமைதோன்றும்படி. இருந்த-இருக்கிற. வானம் - பரமபதநிலயனான. பிரன்-மேன்மையுடையனாய். மணி-உஜ்ஜ்வலமான மாணிக்கம்போலேயிருக்கிற. வண்ணன்-வடிவையுடையனாய். கண்ணன்-ஆஸ்ரிதபவ்யனான க்ருஷ்ணனுடைய. செய் சிவந்த. கனி-கனிபோலேயிருக்கிற. வாயின் - அதரசோபையிலே. திறத்தது - சக்தமாயிற்று.

நானம்-மயிர்க்கிடும் கந்தத்ரவ்யம், புழுகாகவுமாம்..............................

ஈடு - இரண்டாம்பாட்டு.

தாய்மார் முகம்பார்த்துச் சொன்னாளாயிறே - கீழ்ப்பாட்டில் ன்றது; " இவளிவ்வளவில் மீளுமவளன்றிக்கே யிருந்தாள் " என்று ய்மாரோடு தோழிமாரோடு அயற்சேரி யுள்ளாரோடு வாசியறவந்து ரண்டு ஹிதஞ்சொல்லப் புக்கார்கள்; உங்கள் ஹிதவசநங்கேள்ாதட நிரவதிகமரன பரத்வஸௌலப்யங்களையுடையவன் பக்கலிலே சக்தம

ப்போன வென்னெஞ்சைத்தகைய மாட்டுகிறிலேன், என்னெஞ்சைக்கடல் கொண்டது காணுங்கோளென்கிறாள்.

(நானக்கருங்குழல் தோழிமீர்காள்) நானம்-நறுநாற்றம். அவர்களுக்கொருபழி சொல்லுமாபோலே சொல்லுகிறாள், அவர்கள் தலையான நறுநாற்றத்துடனே வந்து நிற்கையாலே. மயிர் படமாந்தும்படியிறே யிவள் படி. உங்கள் சந்நிதியில்லையாகில் நானிங்கேயிரேனோ. * மைவண்ண நறுங்குஞ்சிக்கு ஸ்மாரகமாயிராநின்றதே யிவர்கள் குழல். "ஏகம் து:க²ம் ஸுக²ஞ்ச நௌ" (ஏகம்துஃகம்ஸுகஞ்சநௌ) என்று இவளுடைய ஸுகதுஃகங்களே தங்களுக்கும் ஸுகதுஃகமாம்படி யிருக்கையிறே தோழிமாராகையாவது; இவள் மயிர்முடி பேணாதே, பரிமளங்காணில் முடியும்படியா யிருக்க, இவர்கள் குழல்பேணிப் பரிமளங்கொண்டு காரியங்கொள்ளப் போருமோவென்னில்; கலவியிலிவளோடவன் நெருங்க நெருங்கச்சாத்திக் கழித்தபடியே சர்வஸ்வதானம் பண்ணுவதிவர்களுக்கே; அப்போதவன்பண்ணின ப்ரஸாதாதிசயத்தாலே, அநுசருகாணுமவர்கள் மாறாதேவைத்துக்கொண்டிருப்பர்களே, அதிவளுக்கு ஸ்மாரகமாய் நலிகிறபடி. அன்றிக்கே, இவர்கள் தாம் பரிமளங்கொண்டு கார்யங்கொள்ளவும் வல்லவர்கள். அதாவது - தாங்கள் தளர்ந்துகாட்டி யிவள் மிகவும் தளருமென்றுருப்பித்துக்கொண்டிருப்பர்கள் தந்தாமுடைய பொறுமையும் பாரார்களாயிற்றிவளை யுஜ்ஜீவிப்பிக்கைக்காக. அகாரவாச்யனானவனும் ஜீவித்துமகாரவாச்யனானவிவனும் ஜீவித்தநாளிகாலம் போரச்செய்தேயு முஜ்ஜீவிக்கப்பெறாதே நடுவேகிடந்துபோயிற்றே, இனிக்கடகக்ருத்யமிறே யுஜ்ஜீவிப்பிக்கை, அப்படியேயிவளை யிசைவித்துஜ்ஜீவிப்பிக்கவேணுமே. நந்தாம்க்லேசங்கள் பாரார்களிறே "சேஷிக்கதிசயம்வேணும்" என்றிருப்பார்; பெருமாளிலும் க்லேசம் மிஞ்சியிருக்கச்செய்தே பெருமாளுடைய ரக்ஷணத்துக்காக விளையபெருமாள் தம்மைப்பேணிக்கொண்டு தரித்திருக்குமாபோலே. பரமபோகிகளிறே யிளையபெருமாள் தாம். [ஸஹ த்ருஷ்வஸ்யம் வாயா:] [ஸௌமித்ரேபப்யயம் பர்யா:] அங்குத்தைபோக்யதை நெஞ்சிலே படச்செய்தேயும், பெருமாளுக்கு ஸ்யபரதை விளைக்கைக்காக முகத்தை மாறவைத்துக்கொண்டு நின்றார்; பிள்ளாய், பாராயிதிருந்தபடி யென்கிறார். (நானக்கருங்குழல்) ஒரு தமிழன் "நானமென்று-குழலுக்கு விசேஷணமாகையாலே, நாவி போன்றகுழல்" என்றான். அத்தால் நினைக்கிறதும்-பரிமளத்தை. (தோழிமீர்காள்) ப்ரியஞ்சொல்லுவாரும் ஹிதஞ்சொல்லுவார் கோடியிலே புகுவதே. (தோழிமீர்காளன்னையர்காளயற்சேரியீர்காள்) தானறிந்து தோழிமார்க்குச் சொல்லாதே யிருப்பதோரவஸ்தையும், தோழிமாரும் தானுமறிந்து தாயறியாதே யிருப்பதோரவஸ்தையும், தானும் தோழியும் தாயுமறிந்து பிறரறியாதிருப்பதோ ரவஸ்தையுமா யாயிற்றிருப்பது; அ

ந்நிலைகுலைந்தெல்லாரையு மொக்க சம்போதிக்கும்படி யாயிற்று ஜகத்ப்ரஸித்தமானபடி. பிறர்க்குச்சொல்ல வேண்டுவ தில்லையிறே; ஆயிருக்க, ப்ரதிகூலர்க்குங்கூட தயைபண்ணவேண்டும்படி காணு மிவளுடையவார்த்தி. [மாம்ஸமாநயதுஃகிதாம்] [மாம்ஸமாநயதுஃகிதாம்] என்று என்னை நீ பெருமாளுடனே கூட்டவல்லையே யென்றாளிறே ராவணனை. "ததாகுருதயாம்மயி] [ததாகுருதயாம்மயி] என்றும், "வாசாதர்மமவாப்நுஹி" (வாசாதர்மமவாப்நுஹி) என்று மொருதிருவடிபோல்வார்க்குச் சொல்லக்கடவவார்த்தையையிறே பிரித்தவனைப் பார்த்துச்சொல்லிற்று. (தோழிமீர்காளித்யாதி) எங்ஙனே நானுகந்ததுகந்திகோள். எங்ஙனே யெனக்கு ப்ரியஹிதம்பார்த்திகோள், எங்ஙனே யுதாஸீனைகளாயிருந்திகோள். எங்கள்பக்கல் குறையுண்டோ, நீமர்யாதை தப்பினவாறே நாங்களும் முறைதப்பினோ மித்தனையன்றோ வென்ன (நானித்தனி நெஞ்சங்காக்கமாட்டேன்) உங்களுக்குமிங்ஙனே யேதேனு மிருப்பதொரு ஹேதுவுண்டோமுறைதப்புகைக்கு. (நான்) நீங்களுமேதேனும் நெஞ்சிழந்திகோளோ. உங்களளவல்லவென்றபடி. (இத்தனிநெஞ்சம்) உங்களில் நான் வ்யாவ்ருத்தை யானாப்போலேயாயிற் றென்னிலுமென்னெஞ்சு வ்யாவ்ருத்தமானபடி. (தனிநெஞ்சம்) சொல்லிற்றுக்கேளாத ஸ்வதந்த்ரமான நெஞ்சம். "தத்தஸ்ய ஸத்ருஸம்பவேத்" (தத்தஸ்ய ஸத்ருஸம்பவேத்) என்றிருப்பார் நெஞ்சமுமித்துக்கொப்பல்ல. (காக்கமாட்டேன்) (பாரணசாமர்த்யம் வேணுமேகாக்க.) "முந்துற்றநெஞ்சேயியற்றுவா யெம்மொடுநீகூடி" என்றிருக்கு மித்தனையொழிய, இவளால் தடுத்துவைக்கப்போகாதே. "குரவஃகிம்கரிஷ்யந்தி" (குரவஃகிம்கரிஷ்யந்தி) என்று ஒருவரையும்பாராதே போகாநின்றது, ஒன்று கேட்டுமீளுமளவல்ல மீட்கலாமளவும் காற்கட்டிப்பார்த்து, போகாமையாலே கைவாங்கினமை தோற்றுகிறதுகாணும் - மாட்டேனென்கிற வுறைப்பாலே. சம்சாரிகள் ஸப்தாதிவிஷயங்களினின்றும் மீளமாட்டாதாப்போலே யிறே யிவர் பகவத்விஷயத்தினின்றும் மீளமாட்டாதபடி.

"மாட்டேன்" என்று சொல்லுமிதுவார்த்தையோ, எல்லாவிலும் தந்தாம் நெஞ்சு தந்தாமுக்கு விதேயமாக வேண்டாவோவென்னில் (என்வசமன்றிது) என்செய்வோம், தாய்வேறு கன்றுவேறாக்கு விஷயமானல். கைகேயிசொற்கேட்டு ஸ்ரீபரதாழ்வான் ராஜ்யம்பண்ணுன்றாயிற்றிவளு மித்தாயார் வார்த்தைகேட்டு மீளுவது. இப்போது நானுங்கள் மகளன்றோ, (மகளென்னுபவ்யராவரோ,) என்னைப்போலன்றே யென்னெஞ்சு. எனக்குத்தானென்றிருக்கும் நிலைகுலைந்தது, தவழியே நானொழுகும்படி யாயிற்று.

தந்தாமுடைய நெஞ்சு அபவ்யமானாலும், பவ்யமாயிருப்பதொருபோது பார்த்து ஹிதஞ்சொல்லவேண்டாவோ வென்ன (இராப்பக

போய்) ஸ்ருஷ்டமானகாலத்திலே யிதுக்குஹிதம் சொல்லலாவதொரு போதுகாண்கிறிலேன், ஒருபோது பகவத்விஷயத்திலும் கைவைத்து, ஒருபோது சம்சாரயாத்ரையிலும் கைவைக்கு மளவல்லவிறே யிவளுடைய ப்ராவண்யம். இங்கே யிருப்பதொருபோ துண்டாகில்லிறே யொன்று சொல்லிமீட்கலாவது. (தேன்மொய்த்த வித்யாதி) இது மீட்கலாம்விஷயத்திலேயோ வகப்பட்டது. அவ்வூரில் போக்யதையிலே படிந்தாளையும் மீட்கப்போமோ. தேனென்று - வண்டு. (பூம்பொழிலித்யாதி) பூத்த பொழில்களையும் குளிர்ந்த நீர்நிலங்களையுமுடைத்தான தென் திருப்பேரையில். (வீற்றிருந்த) பரமபதத்தி லிருப்படங்கலும் தோற்றும்படி யிருக்கை. அவ்விடம்போலுமன்றிறே யிவ்விடம்; ஒருவர் கூறைஎழுவருடுக்கிறவிடமிறே, அவ்விடத்தோடொக்க விவ்விடத்தையும் நிருத்திக்கொண்டிருக்கிறவிடமிறே.(வானப்பிரான்) இத்தால்-கண்ணழிவற்றமேன்மையைச்சொல்லுகிறது. (தென்திருப்பேரையில் வீற்றிருந்தவானப்பிரான்) ஸ்ரீவைகுண்டத்திலிருப்பைவிட்டு நமக்காகவிங்கேயிருக்கிற வுபகாரகன். (மணிவண்ணன்) மேன்மையில்லையாகிலும் விடவொண்ணாதவடிவில் பசையிருக்கிறபடி. (கண்ணன்) அங்குள்ளார்க்குப் படிவிடுமடம்பை யிங்குள்ளார்க்கு வரையாதேகொடுத்துக் கொண்டிருக்கிறவன். (வானப்பிரானித்யாதி) மேன்மையளவிடவோ, வடிவழகளவிடவோ, நீர்மையளவிடவோ. (செங்கனிவாயின் திறத்ததுவே) பின்னகத்திலொரு சுழியிலே யகப்படுவாரைப்போலே, வாய்க்கரையிலே யகப்பட்டது. ஆசைப்பட்டவிஷயத்தைக் கரைகண்டதாகிலன்றோ மீளுவது. சிவந்து கனிந்த திருப்பவளத்தினிடையாட்டத்தது. இதுமீள நினைக்கிலன்றோ வுங்கள்வார்த்தை கேட்கைக் கவகாசமுள்ளது..*

ஜீயர் அரும்பதம்.

இரண்டாம்பாட்டு. (நானமித்யாதி) "தோழிமீர்காளன்னையர்காளயற்சேரியீர்காள்" என்றத்தையும், "வானப்பிரான்மணிவண்ணன்" இத்யாதிமேலெல்லாவற்றையுங் கடாக்ஷித்து, வ்ருத்தானுவாதபூர்வகமாக வவதாரிகை (தாய்மாரித்யாதிவாக்யத்ரயத்தாலே) அயற்சேரியுள்ளாராவது - அந்தர்யாமித்வத்திலே யுறைத்திருக்குமவர்கள்.

நறுநாற்றத்தையுடைய கறுத்த குழலையுடைய தோழிமீர்காளென்றுசப்தார்த்தம். "நானக்குழல் தோழிமீர்காள்" என்று சம்போதிக்கிறவளுடைய ஹார்த்தபாவம் (அவர்களுக்கித்யாதி) தலையான - தலையிலே யுண்டான, ஶ்ரேஷ்டமானவென்றும். "கருங்குழல்" என்றத்தைக் கடாக்ஷித்து ரஸோக்தி (மயிர்படவித்யாதி) மயிர்படமாந்துகையாவது - இவர்கள் மயிரவன் மயிருக்கு ஸ்மாரகமாய் பாதகமாகை; கவரிமான் மயிரிலேபட்டா லங்ஙனேமாந்துமென்று த்வநி. மாந்துகை-நசிக்கை. நறுநாற்றம் - சுகந்தம். "நானக்கருங்குழல்" என்கிறவளுடைய ஹார்த்தபாவம். (உங்கள் சந்நிதியித்யாதி) அவர்கள் சந்நிதி யிவளுக்கு பாதகமோவென்ன (மைவண்ணமித்யாதி) இது - "கருங்குழல்" என்றதுக்குபாவம். கேழ்-ஒத்

ருஶமாய் ஸ்மாரகமாகிறதென் றருளிச்செய்து, ஸம்பந்திதர்ஶநத்தாலேயும் ஸ்மாரகமென்கிறார் (கலவியிலித்யாதி) தாத்பர்யாந்தரம் .(அன்றிக்கே யித்யாதிவாக்யத்வயம்) தங்களுக்குத் தளர்த்தியுண்டாயிருக்க, ஒப்பனைபொறுக்குமோவென்ன (தந்தாமுடையவித்யாதி) இவர்களாலே யுஜ்ஜீவிக்கவேணுமோ, தாந்தாமே யுஜ்ஜீவிக்கவொண்ணாதோவென்ன; ஸ்வாபதேஶத்திலே, ஆசார்யனில்லாவிட்டாலு முஜ்ஜீவநமுண்டோவென்கிறார் (அகாரவாச்யனான வித்யாதிவாக்யத்ரயத்தாலே) "தந்தாமுடைய" இத்யாதி வாக்யவிவரணம் (தந்தாம்க்லேஶங்களித்யாதி) இதுக்குத்ருஷ்டாந்தம் (பெருமாளிலுமித்யாதி) "பெருமாளுடைய ரக்ஷணத்துக்காக" என்கைக்கு இவர்தாமப்படி விஶ்லேஷம்பொறுக்கமாட்டாரோவென்ன (பரமபோகிகளித்யாதி) போகி-போகவானும், ஸர்ப்பமும். அப்படி தரித்திருந்ததுக்கு ப்ரமாணம் (ஸௌமித்ர இத்யாதி) "ஸௌமித்ரே பஶ்ய பம்பாயாஶ் சித்ராஸு வநராஜிஷு । கிந்நரா நரஶார்தூல விசரந்தி ததஸ்ததஃ" (ஸௌமித்ரே பஶ்யபம்பாயாஶ்சித்ராஸுவநராஜிஷு । கிந்நராநரஶார்த்தூலவிசரந்திததஸ்ததஃ) இதி கிஷ்கிந்தாகாண்டே. தந்னைவ, "த்வம் வயஸ்யோஸி ஹ்ருத்யோ மே ஹ்யேகம் து:கம் ஸுகஞ்ச நௌ । ஸுக்ரீவோ ராகவம் வாக்யமித்யுவாச ப்ரஹ்ருஷ்டவத்" (த்வம்வயஸ்யோஸிஹ்ருத்யோமேஹ்யேகம்து:கம்ஸுகஞ்சநௌ । ஸுக்ரீவோராகவம்வாக்யமித்யுவாசப்ரஹ்ருஷ்டவத்.) இதுக்குபாவம் (அங்குத்தையித்யாதி) "நானம்" என்றதுக்கு - நாவியென்றர்த்தாந்தரம் (ஒருநமிழனித்யாதி)

"தோழிமீர்காள்" என்கிற ஸம்போதநத்துக்குபாவம் (ப்ரியமித்யாதி) "தோழிமீர்காள்" இத்யாதியாலே - எல்லாரையும் சம்பாதித்ததுக் கவதாரிகையிலுக்தமான பாவமொழிய பாவாந்தரம் (தானறிந்தித்யாதி) ப்ரதிகூலரான வயற்சேரியார்க்கு ஸ்வதசையைச்சொல்லுவானென்னென்ன (பிறர்க்கித்யாதி இப்படி சொன்னபேருண்டோவென்ன (மாம்ஸமாநயேத்யாதி) "ஸாது ராவண ராமேண மாம் ஸமாநய து:கிதாம் । வநே வாஸிதயா ஸார்த்தம் கரேண்வேவ கஜாதிபம்" (ஸாதுராவணராமேணமாம்ஸமாநயது:கிதாம் । வநேவாஸிதயாஸார்த்தம்கரேண்வேவகஜாதிபம்) இதிஸுந்தரகாண்டே. "ஸமாநய-ஸங்கமய. வநே வாஸிதயா ஹஸ்திந்யா ஸஹ ப்ராபிதமிவேத்யர்த்தஃ" (ஸமாநய - ஸங்கமய. வநேவாஸிதயாகர்த்தாதௌவாஸம்ப்ராபிநயேத்யர்த்த:) இதிராமாநுஜீயம். இத்தாலே-ப்ரதிகூலர்க்கும் தயைபண்ணவேண்டியிருக்குமென்று தோற்றிற்றோவென்ன (ததாகுர்வித்யாதி) ""யதா தம் புருஷவ்யாக்ரம் காத்ரை: ஶோகாபிகர்ஶிதை: । ஸம்ஸ்ப்ருஶேயம் ஸகாமாஹம் ததா குரு தயாம் மயி," (யதாதம்புருஷவ்யாக்ரம்காத்ரைஶ்ஶோகாபிகர்ஶிதை: । ஸம்ஸ்ப்ருஶேயம்ஸகாமாஹம்ததாகுருதயாம்மயி,) "ஜீவந்தீம் மாம் யதா ராம: ஸம்பாவயதி கீர்த்திமாந் । தத்த்வயா ஹநுமந் வாச்யம் வாசா தர்மமவாப்நுஹி" (ஜீவந்தீம்மாம்யதாராமஸ்ஸம்பாவயதிகீர்த்திமாந் । தத்ததாஹநுமந்வாச்யோவாசாதர்மமவாப்நுஹி) இதிஸுந்தரகாண்டே ஸீதா. மூன்றுபேரையும் ஸம்போதிக்கிறதுக்குபாவம் (எங்ஙனேநானித்யாதிவாக்யத்ரயம்)

பாவம் (உங்களுக்கித்யாதி) இதுக்கு - "கண்ணன்செங்கனிவாயின் திறத்தது" என்றதிலே நோக்கு. "உங்களுக்கும்" இத்யாதி வாக்யவிவரணம் (நீங்களுமித்யாதி) இத்தால் பலிதம் (உங்களளவல்லவென்றபடியென்று) "தனி"என்

றதுக்கு பாவம் (உங்களிலித்யாதி) (வ்யாவ்ருத்தமானபடி) என்றத்தால் பலித மாதல், சப்தார்த்தமாதல் (சொல்லிற்றித்யாதி) “ இ ” என்றதுக்கு பாவம் (தத் தஸ்யேத்யாதி) “ காக்கமாட்டேன் ” என்றதில் வ்யதிரேகஸித்தார்த்த கதாபூர்வக மாக சப்தார்த்தம் (முந்துற்றவித்யாதி) முற்பட்டதென்றே, பிற்பட்ட வென்றோ டேகூடி கார்யத்தை நடத்தப்பாரிப்பர்கள். இயற்றுகை - எத்துகையென்றுமாம். “போகாது ” என்கிறதென், தடுக்கிறதுக்கென்னென்ன (குரவஇத்யாதி) “ குரூணாமக்ரதோவக்தும் ஸம்ப்ரவிஷ்டந க்ஷமம் | குரவஃகிம்கரிஷ்யந்தி தக்தாநாம்விரஹாக்நிநா ” (குருணமக்ரதோவக்தும் ஸம்ப்ரவிஷ்டநக்ஷமம் | குரவஃகிம்கரிஷ்யந்தி தக்தாநாம்விரஹாக்நிநா) இதி பஞ்சமேம்பே அஷ்டாதமே. பலி தமாதல், விவரணமாதல் (ஒன்றுகேட்டித்யாதி) காவேனென்றே, “ காக்கமா ட்டேன் ” என்றதுக்குபாவம் (மீட்கலாமளவுமித்யாதி) இதுக்கு ஸ்வாபதேசம் (சம்சாரிகளித்யாதி)

மேலுக்கவதாரிகை (மாட்டேனென்றித்யாதி) தாயின் ஸ்தாநத்தில்மகள், கன்றின் ஸ்தாநத்திலே மநஸ்ஸு. த்ருஷ்டாந்தமுகேநவிவரணம் (கைகேயியித்யா தி) “ இது ” என்றதுக்கு பாவம் (இப்போதித்யாதிவாக்யத்வயம்) (என்னைப் போலுமன்று) என்றத்தை யிரண்டுவாக்யத்தாலே விவரிக்கிறார் (எனக்குத்தானி த்யாதி) ஒழுகும்படி - போம்படி.

“ இராப்பகல் ” என்றதுக்கவதாரிகை (தந்தாமுடையவித்யாதி) “ இராப் பகலங்கே ப்ரவணமாச்சுது ” என்கிறவளுடைய ஹார்த்தபாவம் (ஸ்ருஷ்டமான வித்யாதி) ஒருபோது காணுகைக்கு ஹேதுவேதென்ன (ஒருபோதித்யாதி) “போ ய்” என்றதுக்கு பாவம் (இங்கேயிருப்பதொருவித்யாதி)

செய்தவாபத்ஸகத்வத்தையும். பிரான் - ஆஸ்ரிதோபகாரகமான பவ்யதையையுமு டைய. கண்ணன் - க்ருஷ்ணன். வந்து - வந்து. வீற்றிருந்த - இருக்குமிடமாய். ஏர் - ஏரினுடைய. வளம்-ஸம்ருத்தியையுடைத்தாய். ஒண் - தர்ஸநீயமான. கழனி-கழனியையும். பழனம்-நீர்நிலங்களையுமுடைத்தான. தென், திருப்பேரெயில்-திருப்பேரெயிலாகிற. மாநகர்-மஹாநகரத்தை. சென்று-சென்று. சேர்வன்-கிட்டிவிடக்கடவேன்.

ஈடு-ஒன்பதாம்பாட்டு.

நீங்களினியென்னைத் தேற்றிப்ப்ரயோஜநமில்லை, தென்திருப்பேரையிலே போய்ப் புகக்கடவேனென்கிறாள்.

(சேர்வன்சென்று) உன்றாற்றாமையாலே சில சொல்லுகிறாயாகி லிது கடைப்படவற்றோவென்ன; அவப்யமங்கே புக்கல்லது விடேனென்கிறாள்.

(என்னுடைத்தோழிமீர்காளித்யாதி) எனக்காயிருப்பாரும், என்னைத்தங்களுக்காக நினைத்திருப்பாருமென்றும் சொல்லவேண்டா. தோழிமாரோடு தாய்மாரோடு வாசியில்லைகாணு மிவளைத்தேற்றப்போகாமைக்கு. அஜ்ஞரோ வ்யவஸிதனை யுபதேசத்தாலே மீட்கப்பார்ப்பார். விஷயாதீநமாக வருகிறதை சாதநத்தாலே மீளவெழுதுமிறவர்களோ வெனக்கு வார்த்தைசொல்லுவார். இவள்தன்னை மறந்து, அவனையே பார்த்துப் பேசுகிறாள்; அவர்களவனைமறந்து, தந்தாமையே பார்த்துமீட்கத் தேடுகிறார்கள்.

(நீர்களுரைக்கின்றதென்னினிநற்) கலங்கினரோ ! தெளிந்தாரைத்தேற்றுவார். நீங்கள் இற்றை நிலையேது, என்னிலையேது. போகையிலே துணிந்திருக்கிறவென்னை, "புறப்படுகைபழி" என்றிருக்கிற நீங்கள் சொல்லுவதென். (இதற்கு) எனக்கோடுகிறதசைக்கு. ஆறாலும், நெஞ்சுமடக்கமுமுடையார்க்கிறு வார்த்தையோ; நாங்கள்சொன்னபடி செய்து எங்கள் வழியேயொழுகவேண்டாவோவென்ன (நேர்ந்தநிறைவுமெனக்கிங்கில்லை) அதுவேறுமாகி லங்கேபோய்ச்சொல்லுங்கோள். மநஸ்ஸு மடக்கமு மவன்பக்கலினை. நிறைவாவது-அடக்கம். நெஞ்சாவது- அதிட்டுவைக்கும் கலம்.

(கார்வண்ணனித்யாதி) நெஞ்சும் நிறைவுமெனக்காம்படியாயோவவன்படியிருக்கிறது, (கார்வண்ணன்) தாய்மார் தோழிமாரானவர்கள் வார்த்தைகேளாதபடியாக வடிவுபடைத்தவன். வெறும் வடிவழகேயோவுள்ளதென்னில் (கார்க்கடல் ஞாலமுண்ட)தளர்ந்தார்தாவளம். ஆபத்து வந்தால் ரக்ஷித்துவிடுமத்தனையோவென்னில் (கண்ணபிரான்) தன்னைப்பிறர்க்காக்கிவைக்கு முபகாரகன். (வந்துவீற்றிருந்த) தன்னைஸ்வர்யமெல்லாந் தோற்றும்படியிருந்த. (ஏரித்யாதி) ஏரினுடைய ஸம்ருத்தியையுடைத்தாய், அழகிதான கழனியையும் நீர் நிலங்களையுமுடைய திருப்பேரெயிலாகிற மாநகரிலே - சென்று - சேர்வன். உங்கள் தடைக்குமீளு,

ல், அவ்வழியில் நிற்றல் செய்யேன். என்னைத்தேற்றவேண்டா. வளமென்று - மிகுதிக்குப்பேர் ....*

ஜீயர் அரும்பதம்.

ஒன்பதாம்பாட்டு (சேர்வனித்யாதி) "அன்னையர்காள், என்னைத்தேற்றவேண்டா, தென்திருப்பேரெயில் மாநகர் - சேர்வன் சென்று" என்கிறபதங்களைக்கடாக்ஷித்தவதாரிகை (நீங்களினியித்யாதி) தேற்றுகையாவது - இப்படி சாஹஸத்திலே துணியுமது ஸ்த்ரீத்வத்துக்குப்போராது, செய்து தலைக்கட்டவும்போராது, ஆகையாலித்தை விடென்கை.

மேழையும் "சேர்வன் சென்று"என்றுவைத்து, திரியவும் சொன்னதுக்குபாவம் (உன்னுற்றுமையித்யாதி) கடைப்படவற்றே-நிறைவேறவற்றே. கடைப்படுகை-நிறைவேறுகை.

தோழிமீர்காளென்னுதே, "என்னுடைத்தோழிமீர்காள்" என்று விசேஷிக்கையைப்பற்ற (எனக்காயிருப்பாரும்) என்கிறது. "அன்னையர்காள்" என்று-கௌரவிக்கைகயாலே (என்னைத்தங்களுக்காக நினைத்திருப்பாரும்) என்றது. தாய்மார்க்கொழியத் தோழிமார்க்கும் தேற்றப்போகாதோவென்ன (தோழிமாரோடித்யாதி) "நீர்கள்" என்றதுக்குபாவம் (லமெங்குரோவித்யாதி) விவரணம் (நீங்களித்யாதிவாக்யத்வயமும்)

"இங்கில்லை" என்றதுக்குபாவம் (அதுவேணுமாகிலித்யாதி)

"கார்வண்ணன்" என்றதை "நெஞ்சுநிறைவு மெனக்கிங்கில்லை" என்றத்தோடே கூட்டிபாவம் (நெஞ்சும் நிறைவுமித்யாதி) "தோழிமீர்கா ளன்னையர்காள்" இத்யாதியோடேகூட்டி பாவாந்தரம் (தாய்மார் தோழிமாரானவித்யாதி) தளர்ந்தார்தாவளம் - தளர்ந்தார்க்காதாரம்.

"சென்று - சேர்வன்" என்றதுக்குபாவம் (உங்கள்தடைக்கித்யாதி)

என்னுடைத்தோழிமீர்காளித்யாப்ய, மாநகரே - சென்று - சேர்வனித்யந்வயஃ. இதற்கு - இந்தவவஸ்தைக்கு. நீர்களுரைக்கின்றதென்-தேறுகைக்குறுப்பாக நீங்கள் சொல்லுகிறவார்த்தையெது ....*

பத்தாம்பாட்டு.

நகரமும்நாடும்பிறவுந்தேர்வேனுனெக்கில்லையென்றேழிமீர்காள்
சிகரமணிநெடுமாடநீடுதென்திருப்பேரையில்வீற்றிருந்த
மகரநெடுங்குழைக்காதன்மாயநூற்றுவரையன்றுமங்கநூற்ற
நிகரின்முகில்வண்ணனேமியானென்னெஞ்சங்கவர்ந்தெனையூழியானே.

ஆறுயிரப்படி.

(நகரமும்) அவனெழுந்தருளியிருந்த தென்திருப்பேரையிலே நீயே போகில் ஊரும் நாடும் மற்றுமெல்லாரு முன்னைப் பழிசொல்லாரோவென்று தோழிமார் சொல்ல ;

அவர்களையிறே நான் தேடுகிறது என்றிவள் சொல்ல, "பழிசொன்னுலுனக்கு லஜ்ஜையாகாதோ" என்றுபின்னையும் தோழிமார்சொல்ல;

அவனுடைய நிரதிசயாஸ்சர்ய ஸௌந்தர்யாதி கல்யாணகுணங்களாலும், அவனுடைய வாஸ்சர்ய திவ்யசேஷ்டிதங்களாலு மென்னுடைய நெஞ்சும் லஜ்ஜையு மபஹ்ருதமா யெத்தனைகாலமுண்டு; ஆதலாலினித்தென் றிருப்பேரையிலே நானேயாகிலும் போமத்தனையென் றத்யவஸிக்கிறாள்.

பன்னீராயிரப்படி.

அநந்தரம், ஆஸ்ரிதவிரோதி நிரஸநசீலனாய்த் திருப்பேரையிலேயிருந்த மகர நெடுங்குழைக்காத னென்னெஞ்சை யபஹரித் தநேககாலமுண்டு, அவனிருந்த நகரத்தோடு நாட்டோடு மற்றுமுள்ள தேசங்களோடு வாசியற நானேபுறப்பட்டாராயக்கடவேன், எனக்கு லஜ்ஜையில்லை யென்கிறாள்.

என் - எனக்கு. தோழிமீர்காள் - தோழிமாரென்று பெயராய் ஹிதஞ்சொல்லி நியமிக்கத்தேடுகிறவர்களே. சிகரம் - சிகரங்களையுடைத்தாய். மணி - மணிமயமாய். நெடு - ஓங்கின. மாடம் - மாடங்களையுடைத்தாய். நீடு - சிரகாலஸ்த்தாயியான. தென் - தென். திருப்பேரையில் - திருப்பேரையில். வீற்றிருந்த - எழுந்தருளியிருக்கிற. மகரம் - மகராகாரமான. நெடு - பெரிய. குழை - ஆபரணத்தையுடைய. காதன் - கர்ணபாசங்களையுடையனாய். மாயன் - அவ்வாபரணசோபையோபாதி ஆஸ்சர்யங்களான குணசேஷ்டிதங்களை யுடையனாய். நூற்றுவரை - ஆஸ்ரிதவிரோதிகளான துர்யோதநாதிகளை. அன்று - பாரதஸமரம் ப்ரவ்ருத்தமானவன்று. மங்க - நசிக்கும்படி. நூற்ற - மந்த்ரித்து. அத்தாலே, நிகர் - ஒப்பு. இல்-இல்லாத. முகில் - காளமேகநிபமான. வண்ணன் - வடிவிற்புகரையுடையனாய். நேமியான் - ஆஸ்ரிதசம்ரக்ஷணார்த்தமான திருவாழியை யுடையனானவன். இவ்வபதாநத்தைக்காட்டி, என்-என். நெஞ்சம் - நெஞ்சை. கவர்ந்து - அபஹரித்துக்கொண்டு. எனையூழியான் - எத்தனைகாலத்தான். ஆனபின்பு, நகரமும் - அவனிருந்தநகரமும். நாடும்- அத்தோடு சேர்ந்த நாடும். பிறவும் - மற்றுமுண்டான பந்தநாதிகளும். நானே,தேர்வேன் - போயாராயக்கடவேன். நாண் - "இவர்கள் பழிக்கும்படி யிவர்கள் சந்நிதியிலே போகும்படியென்" என்கிற ஸ்த்ரீத்வப்ரயுக்தமான லஜ்ஜை. எனக்கு-எனக்கு. இல்லை - இல்லை...*

ஈடு - பத்தாம்பாட்டு.

"இருந்ததே குடியாக நாட்டாருன்னைப் பழிசொல்லார்களோ" என்று தோழிமார்கள்சொல்ல; அவர்களன்றோ வெனக்குத் தேட்டமென்கிறாள்.

(நகரமுநாடுமித்யாதி) உன் துணிவு துணிவாக, நாட்டார் நகரத்தார் மற்றுமுள்ளாரு மெல்லாமறிந்து பழிசொல்லுகிறார்களிறேயென்ன; எனக்குத்தானவனையோதேட்டம். நகரம், நாடு, பத்தநாதிகள், இவற்றிலுள்ளாருடைய பழியேயன்றோ வெனக்குத் தேட்டம். (தேர்வேன்) தேடுகிறேனென்றபடி. நீங்கள் சேரிகோளாகில், அவன் தானாகவாரானாகில், அவனுடனே கூட்டிப் பழிசொல்லுகிறவிவர்களன்றோ ஸத்தையை நோக்குகிறார்கள்; "அலரொழிலாருயிர்நிற்கும்" என்றானிறே. பிறவும்- மற்றுமுள்ளனவும்.

(நாணெனக்கில்லை) லஜ்ஜை யிங்கில்லாமையேயன்று, அங்குப் போனதுமில்லை; இவ்வபக்தி தன்னில் மூதலிலே யில்லாமை. (என்தோழிமீர்காள்) இது நானுங்களுக்குச் சொல்லி யறியவேண்டும்படியாவதே.

(சிகரமித்யாதி) பர்வதசிகரங்களைக் கொடுவந்து வைத்தாப்போலே ஒக்கமுடைத்தாய், ரத்நமயமான மாடங்களையுடைய பெரிதான தென்திருப்பேரையிலே வீற்றிருந்த. (மகரநெடுங்குழைக்காதன்) மகராகாரமான பெரியவாபரணத்தையுடைய கர்ணபாசங்களை யுடையவன். அவனுடைய வேரோரவயவங்களிலே படிந்தாரை மீட்கலாயோவிருப்பது. (மாயன்) சொல்லிச்சொல்லாத தேஹகாந்தியையு மாத்மகுணங்களையும் நினைக்கிறது. (மாயன்) ஆஶ்ரிதபக்ஷபாதம். (நூற்றுவரையன்று மங்க நூற்ற) சிலரை யழிக்கநினைத்தால், ஒன்றும் சேஷியாதபடி யழிக்குமவன். துர்யோதநாதிகளை பாரதஸமரம் ப்ரவ்ருத்தமானவன்று நசிக்கும்படி மந்த்ரித்த. (நிகரில்முகில்வண்ணன்) ஒப்பில்லாத காளமேகம்போலேயிருக்கிறவடிவழகு. இத்தால் - விரோதியைவளர்த்தாலும் விடவொண்ணுதவடிவழகென்கை. (நேமியான்) ஆஶ்ரிதவிரோதிகளைப் போக்கும்போது பகலை யிரவாக்கும் பரிகரத்தையுடையவன். திருவாழியைக் கொண்டு பீஷ்மாதிகளையும் தொடாநிற்குமிறே. (நிகரில் முகில்வண்ணன் நேமியான்) துர்யோதநாதிகளுக்கு மின்னுமிடியுமாய், பாண்டவர்க ளார்த்திதீர வர்ஷித்து நின்றபடி. அவனுன்விரோதிகளைப் போக்கிக் கூடநினையாதபின்பு, அவன் தானே வந்துன்காலிலே விழும்படி மந்த்ரித்தாலோ வென்ன (என்னெஞ்சங்கவர்ந்தெனையூழியானே) அதுக்கீடான பரிகரமிழந்து நானெத்தனைகாலமுண்டு. வடிவழகையு மாயுதச்சேர்த்தியையுங் காட்டியென்னெஞ்சை யபஹரித்துப்போ யெத்தனைகாலத்தான். (எனையூழியானே) அநேககல்பமுண்டு. துர்யோதநாதிகளைவெல்ல வெண்ணினுப்போலே என்னெஞ்சை யபஹரிக்கைக் கெத்தனைகாலமெண்ணினுனே.......*

ஜீயர் அரும்பதம்.

பத்தாம்பாட்டு (நகரமுமித்யாதி) " நகரமுநாடும் பிறவுந்தேர்வேன் " என்றத்தைக்கடாக்ஷித்தவதாரிகை (இருந்ததேயித்யாதி) இருந்ததேகுடியாக - குடியிருக்கிறபேரொல்லாரு மென்றபடி.

நகரமும்நாடும், பிறவும் - மற்றுமுண்டான பத்தநாதிகள், இவற்றிலுள்ளாருடைய பழியைத்தேடுவேனென்று சப்தார்த்தம். தேருகை - தேடுகை. விவரணம் (நகரம்நாடித்யாதி) தேட்டமாகைக்குஹேதுவேதென்ன (நீங்களித்யாதி) சேரிகோளாகில் - சேரவிடாதவர்களாகில். " பழிசத்தையைநோக்கும் " என்னுமதுக்குப்ரமாணம் (அலரித்யாதி) அலமொழில் - பழிஇளம்பில். அலர் - பழி. ஆருயிர்நிற்கும்-ப்ராணன் நிற்குமென்றபடி.

இங்கில்லையென்றதே, "எனக்கில்லை" என்றதுக்குபாவம் (லஜ்ஜையித்யாதி) விவரணம் (இவ்வக்தியித்யாதி) "தோழிமீர்காள்" என்றதுக்குபாவம் (இது நானித்யாதி)

"சிகரம் - நெடு - மணி - மாடநீடு" என்றநவயித்தர்த்தம் (பர்வதேத்யாதி) "மகரநெடுங்குழைக்காதன்" என்றந்தோடே "என்னெஞ்சங்கவர்ந்து" என்று கூட்டிபாவம் (அவனுடையவித்யாதி) மாயன் - ஆஸ்சர்யபூதனித்யர்த்தః. இன்னத்தா லாஸ்சர்யபூதனென்று விசேஷியாமையாலே யருளிச்செய்கிறார் (சொல்லியித்யாதி)

"நூற்றுவரை" இத்யாதியோடேகூட்டி "மாயன்" என்றதுக்கர்த்தாந்தரம் (ஆஸ்ரிதேத்யாதி) "மங்க" என்றதுக்கு பாவம் (சிலரையித்யாதி) கீழ்ப்பதத்தைக்கடாக்ஷித்துபாவம் (இத்தால்விரோதியையித்யாதி) "நேமியான்" என்றத்தை "நூற்றுவரை" இத்யாதியோடேகூட்டிபாவம் (ஆஸ்ரிதவிரோதிகளையித்யாதி) அந்தரங்கராயிருப்பாரு மாஸ்ரிதவிரோதிகளாகில் திக்கைக்கொண்டே ஜயிப்பதென்கிறார் (திருவாழியையித்யாதி) "முனிவண்ணன் நேமியான்" என்றத்தை-"நூற்றுவரை" இத்யாதியோடேகூட்டி, விஷயவிபாகத்தாலே பாவாந்தரம் (துர்யோதநாதிகளுக்கித்யாதி)

"என்னெஞ்சங்கவர்ந்து" என்றதுக்கவதாரிகை (அவனித்யாதி) "நூற்றுவரை" இத்யாதியோடே "என்னெஞ்சங்கவர்ந்து" என்றத்தைக்கூட்டி பாவமீதல், விவரணமாதல் (துர்யோதநாதிகளையித்யாதி)

என்தோழிமீர்காள், சிகரமணியென்றுதொடங்கி, எனையூழியான், நானெனக்கில்லை, நகரமுநாடும் பிறவும் தேர்வெனித்யந்வய:. அன்று - பாரதஸமரம் ப்ரவ்ருத்தமானவன்று. மங்க-நசிக்க. நூற்ற-மந்த்ரித்த. ஆலோசித்த. கவர்ந்து-அபஹரித்து. எனையூழியானே-எத்தனைகாலந்தான். எத்தனைகாலத்தை யுடையவனென்றபடி.*

பதினொன்றும்பாட்டு.

ஊழிதோறூழியுருவும்பேருஞ்செய்கையும்வேறவன்வையங்காக்கு
மாழிநீர்வண்ணனையச்சுதனையணிகுருகூர்ச்சடகோபன்சொன்ன
கேழிலந்தாதியோராயிரத்துள்ளிவைதிருப்பேரையின்மேயபத்து
மாழியங்கையனையேத்தவல்லாரவரடிமைத்திறத்தாழியாரே.

ஆறாயிரப்படி.

(ஊழிதோறூழி) ப்ரதியுகம் பிந்நரூப நாமசேஷ்டிதனாய்க்கொண்டு ஸ்வாஸாதாரண திவ்யருபேருவதிர்ணரு யாஸ்ரிதனை ரக்ஷித்தருளும் ஸ்வபாவனாயிருந்த வச்சுதனை யணிகுருகூர்ச்சடகோபன்சொன்ன, ஸகலகுணங்களாலும் நிருபமமாயிருந்த திருவாய்மொழியில் தென்திருப்பேரையைச்சொன்ன வித்திருவாய்மொழியைக்கொண்டு, அவனுடைய, திருவாழியுங்கையுமாயிருக்குமழகை யேத்தவல்லார், திருவாழியோடொக்க வடிமைசெய்யப் பெறுவாரொன்கிறார்..............................*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், இத்திருவாய்மொழியைச்சொல்லி ஸ்துதிக்கவல்லவர்கள் பகவத்கைங்கர்யத்தி லவகாஹநத்தையுடையவராவரொன்று பலத்தையருளிச்செய்கிறார்.

ஊழிதோறூழிதோறு - கல்பந்தோறும் கல்பந்தோறும். பேருமுருவும்செய்கையும் - நாமரூபவ்யாபாரங்களை. வேறவன் - வேறாகவுடையனாய்க்கொண்டு. வையம்-ஜகத்தை. காக்கும் - ரக்ஷிக்குமவனாய். ஆழிநீர் - சமுத்ரஜலம்போலேபசுத்த. வண்ணனை - அஸாதாரணவிக்ரஹத்தையுடையனாய். அச்சுதனை - ரக்ஷ்யவர்க்கத்தை நழுவவிடாதவனானவனை. அணி - ஜகத்துக்கலங்காரமான. குருகூர் - திருநகரிக்குநிர்வாஹகரான. சடகோபன் - ஆழ்வார். சொன்ன - அருளிச்செய்த. கேழ் -ஒப்பு. இல்-இல்லாத. ஓரந்தாதி, ஆயிரத்துள்-ஆயிரத்துள். திருப்பேரையில் - திருப்பேரையில். மேய - சேர்ந்த. இவைபத்தும்-இப்பத்தை. கொண்டு, ஆழியங்கையனை-கையுந்திருவாழியுமான சர்வேஶ்வரனை. ஏத்த - ஸ்துதிக்க. வல்லாரவர்-வல்லரானவர்கள். அடிமைத்திறத்து-சேஷவ்ருத்திவிஷயத்தில். ஆழியாரே - அவகாடரே ....*

இது - எண்சீராசிரியவிருத்தம்.

ஈடு - பதினொன்றாம்பாட்டு.

நிகமத்தில் - இத்திருவாய்மொழி கற்றார் பகவத்கைங்கர்யத்திலே மிகவு மவகாஹித்தாரென்கிறார்.

(ஊழியித்யாதி) ஆஶ்ரிதரக்ஷணார்த்தமாக, கல்பந்தோறும் கல்பந்தோறும், திருமேனியும் திருநாமமும் சேஷ்டிதங்களும் வேறுபடக்கொள்ளுமவன். இதுக்குப்ரயோஜநமென்னென்னில் (வையங்காக்கும்) ஜகத்ரக்ஷணார்த்தமாக. (ஊழிதோறூழியித்யாதி) அப்படியே ரக்ஷித்திலனாகில் இப்படி விஶ்வஸிப்பாரில்லையே யிவனை "ரக்ஷகன்" என்று. (ஆழிநீர்வண்ணனை) நோக்காதே படுகொலையடிக்கிலும் விடவொண்ணாதவடிவு. வேறுபடாதே யங்குள்ளார்க்குக் காட்சிகொடுக்கு மஸாதாரணவிக்ரஹத்தைச்சொல்லுகிறது. (அச்சுதனை) அவ்வடிவு தனக்கொருநாளும ழிவில்லையென்னுதல், பற்றினாரை யொருநாளும் விடானென்னுதல். (அணிகுருகூர்) ஆபரணமானதிருநகரி. (கேழிலந்தாதி) ஒப்பில்லாதவந்தாதி. தம்மாலும் பிறராலும் மீட்கவொண்ணாதபடி பகவத்விஷயத்திலுண்டான வ்யவஸாயத்தைச்சொன்ன பத்தாகையாலே ஒப்பின்றிக்கேயிருக்கிறபடி. ஒப்பில்லாதவாயிரத்துள் திருப்பேரையிலே சேர்ந்த விப்பத்தைக்கொண்டு (ஆழியங்கையனையேத்தவல்லார்) இதெல்லாவற்றாலும் சொல்லிற்றாயிற்று - கையுந்திருவாழியுமானவழகிலே யீவாகப்பட்டபடி. அல்லாதவழகுக ளொருபடியு மிதொருபடியுமாயிருக்கை; இது கைமேலே யநுபவித்துக்காணலாமே. (அவரடிமைத்திறத்தாழியாரே) அடிமைவர்க்கத்தில் திருவாழியின் தன்மையையுடையவரென்னுதல், அடிமையிடையாட்டத்திலொருவரால்மீட்கவொண்ணாதபடியுட்புகுவரென்னுதல்.

ஜீயர் அரும்பதம்.

நிகமம் (ஊழிதோறித்யாதி) "ஏத்தவல்லாரவரடிமைத்திறத்தாழியார்" என்றத்தைக்கடாக்ஷித்தவதாரிகை (இத்திருவாய்மொழிகற்றாரித்யாதி)

சப்தார்த்தம் (ஆஸ்ரிதேத்யாதி) இதுக்கு - வேறுபடக்கொள்ளுகைக்கு. (ஆஸ்ரிதரக்ஷணார்த்தமாக) என்று கீழேயருளிச்செய்திருக்க, (இதுக்குப்ரயோஜநமென்னென்னில்) என்கிறசங்கை யுதிக்கக்கூடுமோவென்னில்; "கீழே - வ்யாக்யாதாவருளிச்செய்தமாத்ரம், இங்கே - மூலஸ்பர்ஸியாக சங்கிக்கிறார்" என்றருளிச்செய்வர். (ஜகத்ரக்ஷணார்த்தமாக) என்றதுக்கு விவரணம் (ஆஸ்ரிதரக்ஷணார்த்தமாக) என்ற கீழ்வாக்யமென்று கண்டுகொள்வது. "வேறவன்" வேறாகவுடையவனுயித்யர்த்த:. சாடுவுக்காக பதோபாதாநம் (ஊழிதோறித்யாதி) சாடு (அப்படியேயித்யாதி) அப்படி-அந்தப்படியாலே. இப்படி - இந்தபூமியிலே. படி-ப்ரகாரமும், விக்ரஹமும், பூமியும். "வையங்காக்கும்" என்றவநந்தரம் "ஆழிநீர்வண்ணனை" என்றதுக்குபாவம் (லோகாதேயித்யாதி) படுகொலையடிக்கிலும்- கொலையிலேபட்டுவிழும்படி ஹிம்ஸிக்கிலும். "வேறவன்" என்றவநந்தரம் "ஆழிநீர்வண்ணனை" என்றுகூட்டிபாவார்த்தம் (வேறுபடாதேயித்யாதி) கடல்நீர்போலே குளிர்ந்து பசுத்தவடிவையுடையவனை யென்று சப்தார்த்தம். மேற்பதத்தைக்கடாக்ஷித்து "அச்சுதன்" என்றதுக்கர்த்தம் (அவ்வடிவித்யாதி) "வையங்காக்கும்" என்றதைக்கடாக்ஷித்தர்த்தாந்தரம் (பற்றினாரையித்யாதி) இந்த வர்த்தத்வயமும் - ச்யுதோநபவதீத்யச்யுத:, ஆஸ்ரிதாந்நச்யாவயதீத்யச்யுத: என்கிற வ்யுத்பத்தி த்வயத்தைப்பற்ற.

ஒப்பில்லாமைக்கு ஹேதுவேதென்ன (நம்மாலுமித்யாதி) இதெல்லாவற்றுலும் - இத்திருவாய்மொழி யெல்லாவற்றுலுமென்றபடி. "தாமரைக்கண்ணன்" என்றும் "செங்கனிவாய்" என்றும் "செஞ்சுடர்நீண்முடி" என்றும் சொல்லிற்றேயென்ன (அல்லாதவித்யாதி) ஒருபடியும்-ஒருதட்டுமென்றபடி. அதெப்படியென்ன (இதுகைமேலேயித்யாதி)

முந்தினவர்த்தத்தில், "அடிமைத்திறத்து" என்றது; "திறம்" என்று - ஸமூஹமாய், (அடிமைவர்க்கத்தில்) என்றபடி; "ஆழியார் -" (திருவாழியின்தன்மையையுடையவர்) என்றபடி; தன்மை - ஸ்வபாவம். த்விதீயார்த்தத்தில், "திறம்" என்று - இடையாட்டமாய், அடிமைவிஷயத்திலென்றபடி; "ஆழியார் -" ஆழ்ந்தவர்கள்; அவகாஹித்தவர்களென்றபடி.

ஊழிதோறூழியித்யாரப்ய, க்ரமேணாந்வய:. திருப்பேரையில் மேயபத்தும்- திருப்பேரையிலேசேர்ந்த விப்பத்தையுங்கொண்டு; ஏத்தவல்லாரவர் - ஏத்தவல்லாரானவர்கள்..*

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி.

(வெள்ளைச்சுரிசங்கு.)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] (எரு)

(பத்மாக்ஷத்வேநஹ்ருத்ஸ்த:) தாமரைக்கண்ணனென்னெஞ்சினூடே - ஸரஸிஜஸத்ருசநயநனாய்க்கொண்டு ஹ்ருதயத்திலே ப்ரகாசிக்குமவனாய்; (பரம

ஸ்ரீ

திருவாய்மொழி.

ஏழாம்பத்து.

நான்காந்திருவாய்மொழி.

ஆழியெழ - ப்ரவேஶங்கள்.

ஆறாயிரப்படி.

(ஆழியெழ) இப்படி தென்றிருப்பேரையிலே தாமேபோகவத் யவஸித்திருந்த சமயத்திலே, " [illegible] " (யதாவ்ரஜதிஸம்க்ராமம் க்ராமார்த்தேநகரஸ்யவா|கத்வா ஸௌமித்ரிஸஹிதோ நாவிஜித்யநிவர்த்ததே. ஸங்க்ராமாத்புநராகம்ய குஞ்ஜரேணரதேநவா । பௌராந்ஸ்வஜநவந்நித்யம் குஶலம்பரிப்ருச்சதி) என்னும் ப்ரக்ரியையாலே தென்றிருப்பேரையிலே ம்ருகயார்த்தமாக வெழுந்தருளின பெரியபெருமாள் விஜயலக்ஷ்மீ பரிவ்ருதராய்க்கொண் டெழுந்தருளினபடியைக்கண்டு நிரதிசயப்ரீதியுக்தராய் ஸம்ப்ராந்தமானஸராய்க்கொண்டு, " [illegible] " (தம்த்ருஷ்ட்வா ஶத்ருஹந்தாரம் மஹர்ஷீணாம்ஸுகாவஹம் । பபூவஹ்ருஷ்டாவைதேஹீ பர்த்தாரம்பரிஷஸ்வஜே) என்னும் ந்யாயத்தாலே ப்ரதிகூலநிரஸநஜநித ஶ்ரமத்துக்கு ஶிஶிரோபசாரமாகப் பெரியபெருமாளோடே ஸம்ஶ்லேஷித்து, ததீய திவ்யசேஷ்டிதங்களைச்சொல்லி ; என்னப்பன் செய்தருளினபடியென், பிரான்செய்தருளினபடி யென்னென்றநுபவிக்கிறார்......*

பன்னீராயிரப்படி.

நாலாந்திருவாய்மொழியில், விஶ்லேஷஜநிதமான வார்த்தியாலே ப்ராப்தித்வரையை யுடையவிவர் ; தம்முடைய வார்த்திஹேதுவான ப்ரபல ப்ரதிபந்தகங்களைப் போக்குகைக்கு, சர்வசக்தியான சர்வேஶ்வரனையொழிய சமர்த்தரில்லையென்றறுதியிட்டு; அவனுடைய த்ரிவிக்ரம வ்யாபாரத்தையும், அம்ருத மதநத்தையும், பூம்யுத்தரணத்தையும், ஜகந்நிகரணத்தையும், பாரதஸமரப்ரவர்த்தகத்வத்தையும், ஹிரண்யவதத்தையும், லங்காபங்கத்தையும், பாணயுத்தத்தையும், ஜகத்ஸ்ருஷ்டிப்ரகாரத்தையும், கோவர்த்தநோத்தரணத்தையு மநுசந்தித்து, ஏவம்விதவிஜயாபதாந

விசிஷ்டனான சர்வேஶ்வரனுடைய விரோதி நிரஸந சாமர்த்யத்தை யநுசந்தித்தரு ளுகிறார். ....*

ஏ ௫.

கீழ்த்திருவாய்மொழியிலே - பகவத்விஷயத்திலே யிவரபஹ்ருத சித்தரானபடி சொல்லிற்று ; கீழிவர்க்குப் பிறந்த வ்யவஸாதம், ஒன்றைக் கொடுத்து மாற்றுதல் ஒருவராலே பரிஹரித்தல் செய்யுமதொன்றன்றி றே; " இனியிவர்க்குச் செய்யலாவதென் " என்றுபார்த்தருளி, " ஒன் றுகொடுக்கலாவதிதுக்குமேலில்லையிறே " என்றுபார்த்துத் தன்னுடைய விஜயபரம்பரைகளைப் பத்தும்பத்தாகக் காட்டிக்கொடுக்கக் கண்டநுபவி த்து ஹ்ருஷ்டராகிறார். அவனுக்குறுப்பாமன்று தாமும்வேண்டி, அவனு க்குறுப்பாகாதவன்று தாமும் வேண்டாவென்றிருக்கும் - * வளவேழுல கிலாழ்வாரிறே யிவர்தாம் ; தம்மையழியமாறியு மத்தலைக்கு நன்மைதே டுமவரிறே ; இப்படி யிவர் ப்ரக்ருதி யறியுமவனாகையாலே, தன்னுடைய வபதாநங்களைக்காட்டி யிவருடைய விழவெல்லாந் தீரும்படி சமாதாநம் பண்ண, அநுபவித்துத் தலைக்கட்டுகிறார். பூதகாலத்திலுள்ளவையடங்க லும் ஸமகாலத்திற்போலே ப்ரத்யக்ஷவிஷயமாம்படிபண்ணிக்கொடுத்தா ன். அடியிலே யிவர்தாம் ஸாக்ஷாத்கரிக்கவல்லராம்படி பண்ணிக்கொடுத் தானிறே. * மயர்வறமதிநலமருளினபின்பு மிவ்வளவும்வர வாசனைபண் ணுவித்தானே, ஆகையா லிவர்க்கொரு குறைகளில்லையே.

அன்றிக்கே, கீழே "பேரெயில்சூழ்கடல்தென்னிலங்கைசெற்றபி ரான்" என்று - ராமாவதாரவிஜயம் ப்ரஸ்துதமாகையாலே, அவ்வழியா லு மெல்லாவவதாரங்களிலுமுண்டான விஜயங்களை யநுசந்தித்து; ராமா வதாரத்தில் விஜயங்களைக் கண்டுகக்கும் சக்ரவர்த்தியைப்போலவும், க்ரு ஷ்ணாவதாரத்தில் விஜயங்களைக் கண்டுகக்கும் ஸ்ரீவசுதேவரைப்போலவு மிவருமுகந்துபேசுகிறாரென்னுதல். [அஹம்புந:] [அஹம்புந:] என் ப்ரக்ருதியையறிந் தென்வழியே போந்தநீ, " பெருமாள்காடேறப்போக" என்றால் நான் ஜீவிப்பேனென்று சொன்னாயே. [தேவகுமாரரூபம்] [தேவகுமாரரூபம்] அதுகிடக்க, இவரையே நீதான் " காடேறப்போக " என்கிறது. " இவர்க்குமவ்வளவேயோ " என்று சிறியாத்தான் கேட்க, " ' கண்ணெச்சிலாம் ' என்று தரம்போராதாரை யொப்பாகச் சொல்லி ருஷி கரிபூசுகிறான் " என்றார். [அலங்க்ருதம்] [அலங்க்ருதம்] அத்தா லும் வெறும்புறங்கிடீ ! ரொருபோலி சொல்லலாவது, ஒப்பித்தாலொக் கச் சொல்லலாவாரில்லை. [தம்ஸாதம்] [தம்ஸாதம்] இவனுக்கிரண்டுப டியு முத்தேஶ்யமாயிருக்கிறபடி. [ஆவ்ராஜந்தம்] [ஆவ்ராஜந்தம்] புஷ்ப மலரும்போ தெங்குமொக்கப் பிறக்கும் விகாசம்போலே. அதுவும் வண் டைநோக்கியிறே யலருவது, இவரும் போக்தாக்களைக்குறித்திறே. [நந் தாமீத்யாதி] கண்டபடியே யிருக்கச்செய்தே, காணாதுகண்டாரைப்போ லேயாயிற்று நாடோறும் நாடோறும் க்ஷணந்தோறும் க்ஷணந்தோறுமு கக்கும்படி. [தர்ஶநே] [தர்ஶநே] அணைத்தல், வார்த்தைசொல்

லுதல் செய்யவேண்டா; காட்சியேயமையும். கரைபுரண்டவநுபவமுள் ளவிடத்திற்போலேகாணும் ப்ரயோஜநம்; * ஸதாபஶ்யந்தியிறே. [ஸவா திஜாஷா...] [பவாமித்ருஷ்ட்வாசபுநர்யுவேவ] அறுப திறாயிரம் ஸம்வத்ஸரம் வயஸ்ஸைப்புக்கு வ்ருத்தனுனசக்ரவர்த்தி,பெரு மாளைக்கண்டபின்பு, பெருமாளுக்கும் தனக்கும் வாசிதெரியாதபடியானு ன். "காமனைப்பயந்தகாளை" என்னுமாபோலே. தன்னையநுபவிப்பாரை யும் தன்னைப்போலேயாக்கி யுஜ்ஜீவிப்பிக்கும் விஷயம்போலேகாணும் "...." (யுவேவ வஸுதேவோபூத் விஹாயாப்யாகதாம்ஜராம்) என்னும்படியானுரிறே ஸ்ரீ வசுதேவரும்.

"இழே ' கண்ணபிரானுக்கென்பெண்மை தோற்றேன் ' என்று கொண்டு - இத்தலையில் தோல்விக் கெதிர்த்தலையான வத்தலையில் விஜ ங்களை யநுசந்திக்கிறார்" என்று பிள்ளை திருநறையூரரையர் பணிக்கு படி..

ஜீயர் அரும்பதம்.

ஆழியெழப்ரவேஶே, வ்ருத்தாநுவாத பூர்வகமாக வர்த்திஷ்யமாணஸங்க (கீழிற்திருவாய்மொழியிலே யென்று தொடங்கி, ஹ்ருஷ்டராகிறு ரென்னுமளவ லே) விஜயபரம்பரைகளைக் காட்டிக் கொடுக்கைக்கு ஹேதுவை யருளிச்செய்கிறு (கீழிவர்க்கித்யாதி) மாற்றுதல் - பரிஹரித்தல். பரிஹரிக்கும் ப்ரகாரமருளிச்செ கிறுர் (இனியிவர்க்கித்யாதி) பத்தும்பத்தாக - பத்துப்பாட்டிலுமென்று ஸ்வ வார்த்தம், நன்றாகவென்று த்வநி. சம்ஶ்லேஷார்த்தமாக துஃகப்படுகிற விவர்க் விஜயபரம்பரைகளைக் காட்டிக்கொடுத்தால் தீருமோவென்ன (அவனுக்குறுப்ப ன்றித்யாதிவாக்யத்ரயம்) விவரணம் (தம்மையித்யாதி) அதீதகாலத்திலுள்ள ற்றை யிப்போது ப்ரத்யக்ஷமாகக் காணும்படியென்னென்ன (பூதகாலத்திலித் தி) அப்படி கொடுத்தானோவென்ன (அடியிலேயித்யாதி) ஆனாலு மெல்லா வ தாரவிஜயங்களையு மொருகாலே யநுபவிக்க சக்தியுண்டோவென்ன (மயர்வற யாதி) வாஸநை பண்ணுவிக்கையாவது - அந்த ஜ்ஞாநத்தை யிவ்வளவாக வி மாக்குகை.

ஸங்கத்யந்தரம் (அன்றிக்கேயித்யாதி) அப்படி ராமாவதாரவிஜயத்தை ண்டு சக்ரவர்த்தியுகந்தானோவென்ன (அஹம்புநரித்யாதி) "...." (அஹம்புநர்த்தேவகுமாரரூப ங்க்ருதம்தம்ஸுதமாவ்ரஜந்தம் । நந்தாமிபஶ்யந்நபிதர்ஶநேநபவாமித்ருஷ்ட்வ நர்யுவேவ) இத்யயோத்யாகாண்டே தஶரதப்ரலாபே. இது - போக்யதைக்கு மாணமேயாகிலும், விஜயங்களுமிப்படி போக்யமாயிருக்குமென்கைக்காக வி யெடுத்தருளினுரென்னுதல்; ஸ்வவ்யதிரிக்தகாந்திகளை கத்யோதகல்பமாக்கும் அழகும் விஜயாந்தர்ப்பூதமென்று கருத்தென்னுதல். புநஃ-வ்யாவ்ருத்தியுண்டெ டி. கைகேயியைப்பார்த்து "இப்போது நான் வ்யாவ்ருத்தன்" என்று சொ ...... (என்பாக்நகிலயயித்யாதி) அதுகிடக்க-எனக்கு ஹிதகா

யிருக்கிற வாகாரமில்லாவிட்டாலுமென்றபடி. இவனையே - இவ்வழகையுடையவனையே. தேவகுமாரர் - சுப்ரஹ்மண்யர். இவர்க்கும் - பெருமானுக்கும். அவ்வளவேயோ-அழகு சுப்ரஹ்மண்யனளவோவென்றபடி. நம்பிள்ளையை (கேட்க)என்றபடி. கண்ணெச்சில் - த்ருஷ்டிதோஷம். கரிபூசுகை - த்ருஷ்டிதோஷ பரிஹாரமாகக்கரியைப்பூசுகை. அழகைமறைக்கிறானென்றபடி. "தேவகுமாரரூபம்" என்றவநந்தரம் "அலங்க்ருதம்" என்றதுக்குபாவம் (அத்தாலுமித்யாதி) அத்தாலும் - கரிபூசுகிற வாகாரத்தாலுமென்றபடி. இவனுக்கென்றது - சக்ரவர்த்திக்கென்னுதல், ருஷிக்கென்னுதல். இரண்டுபடியும் - அழகும் புத்ரத்வமுமென்றபடி. ஆஸமந்தாத்வ்ரஜந்தமென்று விவக்ஷித்துபாவம் (புஷ்பமித்யாதி) அதாவது - பூவலரும்போது ஓடையெங்குமொக்க வொருவிகாஸம்பிறக்குமாபோலே, இவர் நடக்கும்போது திருமேனியெங்குமொக்க வொருசெவ்விபிறக்குமென்றபடி. எங்குமொக்க-ஓடைமுதலான ப்ரதேஶமெங்குமொக்கவென்றபடி. ஆபிமுக்யேந வ்ரஜந்தமென்று விவக்ஷித்தர்த்தாந்தரம் (அதுவும் வண்டையித்யாதி) " 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿, 𑌨𑌨𑍍𑌦𑌾𑌮𑌿 " (பஶ்யந்தி, நந்தாமி) என்கிறவர்த்தமாநத்வயத்துக்கர்த்தம் (கண்டபடியேயித்யாதி) " 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 " (பஶ்யந்தி) என்றது - (நாள்தோறும்) என்றபடி; " 𑌨𑌨𑍍𑌦𑌾𑌮𑌿 " (நந்தாமி) என்றது -(க்ஷணந்தோறும்) என்றபடியென்று வர்த்தமாநத்வயத்துக்கர்த்தம். இப்படி க்ஷணந்தோறு முகக்கிறது ஸம்பாஷண ஸம்ஶ்லேஷங்களாலேயோவென்ன (தர்ஶநேந) என்று ஸங்கதி. கரைபுரண்ட வநுபவமுள்ள விடமாவது-பரமபதம். காட்சிமாத்ரமேபோருமோவென்ன (கரைபுரண்டவித்யாதி) அங்கும் காட்சியேயோ ப்ரயோஜநமென்ன (ஸதேத்யாதி) " 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 " (பஶ்யந்தி) என்கிற வர்த்தமாநத்தாலே - ஸர்வகாலமுமென்கிறவர்த்தம் ஸித்தியாநிற்க, " 𑌸𑌦𑌾 " (ஸதா) என்கிறது - ஸர்வாவஸ்த்தைகளிலுமென்றபடி. கீழ்ச்சொன்ன தர்ஶநந்தன்னையே - " 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 " (த்ருஷ்ட்வாச) என்று அர்த்தாந்தரவிதாநார்த்தமாகவநுவதிக்கிறது. " 𑌪𑍁𑌨𑌰𑍍𑌯𑍁𑌵𑍇𑌵 𑌭𑌵𑌾𑌮𑌿 " (புநர்யுவேவ-பவாமி) என்றதுக்கர்த்தம் (அறுபதினாயிரமித்யாதி) வ்ருத்தனானவன் மகனைப்போலே யாகக்கூடுமோவென்ன, த்ருஷ்டாந்தம் (காமனையித்யாதி) காமனைப்பெற்ற யுவாவென்றபடி. சர்வசக்தியாகையாலே யவனுக்குக்காளையாகலாம், இவனுக்குக்கூடுமோவென்ன (தன்னையித்யாதி) க்ருஷ்ணவதாரத்தில் விஜயங்களைக்கண்டு ஸ்ரீவஸுதேவரு முகந்ததுக்குப்ரமாணம் (யுவேவேத்யாதி) " 𑌮𑌹𑍋𑌤𑍍𑌸𑌵𑌮𑌿𑌵𑌾𑌸𑌾𑌦𑍍𑌯 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌨𑌨𑌵𑌿𑌲𑍋𑌕𑌨𑌮𑍍 । 𑌯𑍁𑌵𑍇𑌵 𑌵𑌸𑍁𑌦𑍇𑌵𑍋𑌽𑌭𑍂𑌦𑍍𑌵𑌿𑌹𑌾𑌯𑌾𑌭𑍍𑌯𑌾𑌗𑌤𑌾𑌂 𑌜𑌰𑌾𑌮𑍍 ॥ " (மஹோத்ஸவமிவாஸாத்யபுத்ராநநவிலோகநம் | யுவேவவஸுதேவோபூத்விஹாயாப்யாகதாம்ஜராம்) இதிபஞ்சமேம்ஶே.

மூன்றாம்சங்கதி (கீழேகண்ணபிரானுக்கித்யாதி)..............................*

நான்காந்திருவாய்மொழி.

முதற்பாட்டு.

ஆழியெழச்சங்கும்வில்லுமெழத்திசை
வாழியெழத்தண்டும்வாளுமெழவண்ட
மோழையெழமுடிபாதமெழவப்ப
னூழியெழவுலகங்கொண்டவாறே.

ஆறாயிரப்படி.

சதுர்த்தசபுவநாந்தர் வர்த்திகளான சர்வாத்மாக்களினுலும் ஸம்ஸ்துதயமானனுய், ஸ்ருஷ்ட்யந்த மென்னும்படி பிதுரிதாண்டபித்திகமாக சம்வர்த்திதிவ்யாவயவ திவ்யாயுதோபேதனுய்க் கொண்டு என்னப்பன் மஹாபலியைஜயித்து லோகத்தை யளந்துகொண்டருளினபடி யென்னென்கிறுர் ....*

பன்னீராயிரப்படி.

முதற்பாட்டில், திருவுலகளந்தருளின ப்ரகாரத்தை யநுஸந்தித்து சந்துஷ்டராகிறுர்.

திருவுலகளந்தருள வளருகிறபோது, திவ்யாயுதங்கள், பரிவாலே "ஸஹாய் ஆயுதாஃ" (ஸ்ப்புரதாயுதஃ) என்கிறகணக்கிலே, ஆழி - ப்ரதாநனுன திருவாழியாழ்வான். எழ-முன்னேயுயர்ந்துதோன்றவும். அநந்தரம், சங்கும்-ஸ்ரீபாஞ்சஜந்யமும். வில்லும்-ஸ்ரீஸார்ங்கமும். எழ-தோன்றவும். தண்டும் - கதையும். வாளும்-நந்தகமும். எழ-தோன்றவும். இவ்வாயுதபூர்த்தியைக் கண்டுகந்து, "ஸஶங்க ஸஶார்ங்க ணாஃ" (ஸங்கைஸ்ஸாராணும்) என்கிறபடியே. திசை-திக்குத்தோறும் நின்றநின்றநிலையிலே. வாழ் - தேவமநுஷ்யாதிகளுடைய மங்களாஸாஸநகோஷம். எழு - கிளம்பும்படியாகவும். அவிளம்பமாக வளர்ந்தபடியாலே, அண்டம் - அண்டகபாலம்பிளந்து. ஆவரணஜலம், மோழை - குமிழி. எழ - கிளம்பும்படியாகவும். வளர்ந்தருளின சடக்காலே, முடி - திருமுடியும். பாதம் - எடுத்ததிருவடியும். எழ-ஒக்கக்கிளம்பும்படியாகவும். ஆசுரப்ரக்ருதியான மஹாபலி யபிமாநம்நடந்தகாலம் போய், ஊழி - விலக்ஷணகாலம். எழ - கிளம்பும்படியாகவும். அப்பன்-சர்வஸ்வாமியான சர்வேஶ்வரன். உலகம் - லோகத்தை. கொண்ட-அளந்துகொண்ட. ஆறு-ப்ரகாரம். ஏ - இருந்தபடியே.

மோழை - குமிழி..*

ஈடு - முதற்பாட்டு.

அவையெல்லாவற்றுக்கு மடியாக, திருவுலகளந்தருளின பெரிய விஜயத்தை யநுசந்திக்கிறுர்.

"தேவாஸ்ஸ்வாஸ்த்ராநமாயாந்தி நிஹதாதைத்யதாநவாஃ । நபயம் வித்யதே தேஷாம் ஜிஜ்ஞஸிதம் பகவதா ஜகத்" (தேவாஸ்ஸ்வாஸ்த்தாநமாயாந்தி நிஹதாதைத்யதாநவாஃ । நபயம்வித்யதேஷிஞ்சிஜ்ஜிதம்பகவதாஜகத்) என்கிறபடியே தனக்காக்கிக்கொண்ட செயலிறே. ராவணனைப்போலே யெதிரியாக்கிக்கொல்லாதே, குணலவமுண்டாகையாலே நின்றநிலையிலே தோற்பித்து, கொண்டபடி.

நாயகனுக்கடியாரிறே வென்று கொடுப்பார் (ஆழியெழ) "த்ரைலோக்யத்தையும் காற்கிழேயிட்டுக்கொள்ளவேணும்" என்னும் கறுவுதலுள்ளது சர்வேஶ்வரனுக்கேயிறே, அவ்வபிசந்தியின்றிக்கே யிருக்கச்

செய்தேயு மவனுக்குமுன்பே பரிகரம் முற்பட்டபடி. "காட்டுக்குப்போம்" என்றுநியமித்தது பெருமாளையே யாயிருக்க, இளையபெருமாள் முற்பட்டாப்போலே. "பூர்வஜஸ்யாநுயாத்ரார்த்தே த்ருமசீரைரலங்க்ருத:" (பூர்வஜஸ்யாநுயாத்ரார்த்தேத்ருமசீரைரலங்க்ருதः) என்று கொண்டுபோக்குக்கிடாக முற்கோலி யலங்கரித்துக்கொண்டு நின்றாரிறே. (ஆழியெழ) தோற்றத்திலே யரசுபோராயிற்று; * ஹேதிராஜனிறே-திவ்யாயுதங்களுக்கெல்லாம் ப்ரதாநமிறே திருவாழி. பரிகரம் நிற்கமஹாராஜர் ராவணன்மேலே பாய்ந்தாப்போலே. " பையல்முடியுந் தானுமாய்ப் பெருமாள்திருமுன்பேநிற்பதே, ஈரரசாயிற்றே " என்றுபொறாமையாலே மேல்விழுந்தாரிறே. [அத ஹரிவரநாத:] [அதஹரிவரநாதः] தம்மோடொக்கவினைசெய்யவல்லபேர் தனித்தனியேயநேகரிறே. [ப்ராப்ய ஸங்க்ராமகீர்த்திம்] [ப்ராப்யசங்க்ராமகீர்த்திம்] இவர்களோடுகூடி நின்றொத்தபோராகவொண்ணாது, தூசித்தலையிலே யோரேற்றம்செய்து தீரம் பெறவேணுமென்றிருந்தார். பூசல்தலையிலே பெருமாளுக்குண்டான கீர்த்தியையும் தந்தலையிலே யேறிட்டுக்கொண்டார். [நிசிசரபதிம்] [நிசிசரபதிம்] அத்தலையிலு மவனோடொக்க வினைசெய்யவல்லாரநேகரிறே. " அவன்கீழ்த்திரியுமவர்கள் தரம்போரார் " என்று அவன்றன்னோடே பொருதபடி. [ஆஜௌ] அவர்களைப்போலே வழியல்லாவழியே யிளைப்பிக்கையன்றிக்கே, செவ்வைப்பூசல்செய்திளைப்பித்தபடி. [யோஜயித்வா ப்ரமேண] [யோஜயித்வாப்ரமேண] இதுக்குமுன்பு கூடாததொன்றோடே கூட்டினார். [ககநமதிவிஶாலம் லங்கயித்வா] [ககநமதிவிசாலம்லங்கயித்வா] பரப்பையுடைத்தான வாகாசத்தைத்திறலாலேவருத்தமறக்கடந்தார், [அர்க்கஸூநு:] [அர்க்கஸூநு:] மீட்சியில் தம்வரவு தெரியாதபடிமீண்டார். பிறப்புக்கீடாகச்செய்தார். தன்னிலமிறே ஆதித்யனோரிடத்திநின்று மோரிடத்தேறப்போம்போது தெரியாதிறே. [ஹரிவரகணமத்யே] [ஹரிவரகணமத்யே]" இவர்களிலொருவ்யாவ்ருத்திதோற்றவொண்ணாது " என்று இவர்கள்நடுவேநின்றார். [ராமபார்ஶ்வம் ஜகாம] [ராமபார்ஶ்வம்ஜகாம] தூசித்தலையிலே மதிக்க வொருவினைசெய்தாரன்றோ முன்னிற்கப்பெறுவார் " என்று பெருமாள் பார்ஶ்வத்திலேவந்துநின்றார். (ஆழியெழ) " ஆயிரக்காதம் பறப்பதின்குட்டி ஐஞ்நூற்றுக்காதம் சிறகடிக்கொள்ளும் " என்னுமாபோலே முற்கோலிவளர்ந்தபடி. சிறகடிக்கொள்ளுகை யாவது-பின்புதூரப்பறக்கைக்கு யோக்யமாம்படி பால்யத்திலேயப்யஸிக்கை. பயசங்கையில்லாதவிடத்தே யிருந்து பயப்படக்கடவார், பயஸ்த்தாநத்தைக்கண்டால் பேசாதிரார்களிறே. பயசங்கையில்லாதவிடத்திலும் பயப்படப்பண்ணுகிறது விஷயவைலக்ஷண்யமிறே. துர்யோதநகோஷ்ட்டியிலே க்ருஷ்ணனெழுந்தருளினபோது அவர்கள்பண்ணின வஞ்சநத்தைக்கண்டதிசங்கைபண்ணி, தம்முடைய திருமாளி

கையில் படுக்கையையும் தடவிப்பார்த்தாரிறே; "ஸம்ஸ்ப்ருஸந்நாஸநம் ஸௌரேர்விதுரஸ்ஸமஹாமதி:" (ஸம்ஸ்ப்ருஸந்நாஸநம்ஸௌரேர்விதுரஸ்ஸமஹாமதி:) என்கிறபடியே - கடல்கலங்குவது தன்னளவிலேயிறே. பிள்ளையுறங்காவில்லிதாசர் "மஹாமதி: என்றது - மதிகேடனென்கிறபடியோ" என்றார். பிள்ளைதாம் பெருமாளெழுந்தருளும்போது "எங்கேனுமொரு சலநம்பிறக்கில் நம்பரணனை விடுமத்தனை" என்று சொட்டையையுருவிப்பிடித்துக்கொண்டு சேவிப்பராம்; நம்முதலிகளத்தைக்கண்டு இவரை "மஹாமதிகள்" என்றழைப்பர்கள். அறிவுண்டாகையாவது - பகவத்விஷயத்திலே மதிகெடுகையிறே. (ஆழியெழ) இவன் வளர்ந்தருளுகைக்குக் கணிசித்தபடியைக்கண்டு, "தனியாகவொண்ணாது" என்று பயப்பட்டுத் திருவாழியாழ்வானொருகையிலேயேறினார். (சங்கும் வில்லுமெழ) தூசியேறினவர்கள் பொரப்புக்கவாறே நின்றவிளவணிகலங்கி மேலேநடக்குமாபோலே, மற்றையாழ்வார்களும் மற்றைக்கையிலே யேறினார்கள். இளைபெருதவிடத்தே யிருந்துசிறுபாறு என்னக்கடவவர்களிறையுள்ள விடத்திலொருவர்க்கொருவர் விட்டுக்கொடார்களிறே. இனத்திலே யொருவன்ஜீவிக்கக்கண்டவாறே பந்துவர்க்கம்வந்து மேல்விழுமாபோலே, மற்றைதிவ்யாயுதங்களும் மேல்விழுந்தபடி. [இடங்கைவலம்புரிநின்றார்ப்ப] இவனுடைய வடிவழகை யநுசந்தித்து ஸ்ரீபாஞ்சஜந்யமானது நின்றார்ப்ப. [எரியித்யாதி] அவனைப்போலார்த்துக்கொள்ள வவஸரமற்று அக்நியையுமிழ்ந்துகொண்டு, நமுசிப்ரப்ருதிகளை வாய் வாய் என்றது திருவாழி. [விடங்காலுமித்யாதி] கிடந்தவிடத்தேகிடந்து ஶத்ருக்கள்மேலே விஷாக்நியையுமிழுமத்தனையிறே திருவநந்தாழ்வானாலாவது. [அரவணைமேற்றோன்றல்] திருவநந்தாழ்வானைப் படுக்கையாகவுடையப்ரதாநன். [திசையளப்பான் பூவாரடிநிமிர்த்தபோது] ஒருபூவைக்கொண்டாகாதே காடுமோடையுமளந்துகொண்டது. பூவையிட்டுப்பூவைக் கொண்டான்காணும். அப்படுக்கையிலே பொருந்தும் ஸௌகுமார்யத்தை யுடையவனிக்காடுமோடையுமான ஜகத்தையளக்கப்புக்கால், இவர்களுக்கிப்படி படவேண்டாவோ. அவனிப்படியளவா நின்றாலிவர்கள் பேசாதிரார்களிறே. (திசைவாழியெழ) "அவனுக்கென்வருகிறதோ" என்றாயிற்று திவ்யாயுதங்கள்கிளருகிறது, "அவைதனக்கென்வருகிறதோ" என்று "வடிவார்சோதிவலத்துறையும் சுடராழியும்பல்லாண்டு படைபோர்புக்கு முழங்கு மப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டு" என்னுநிற்பர்களிறே. "நின்கையில் வேல்போற்றி" என்று-வேல் தனக்கும் பரியவேண்டியிருக்குமிறே. திக்குக்கள்தோறு மநுகூலருடைய, வாழிவாழி என்கிற மங்களாஸாஸநத்வநிகள்கிளர. திவ்யாயுதங்களிலுமவனுக்கு ரக்ஷையிவர்களுடைய மங்களாஸாஸநமென்றிருக்கிறார் - திவ்யாயுதங்களுக்கு நடுவே யிவற்றைச் சொல்லுகையாலே. (திசைவாழியெழ) * ஏத்தவேழுலகங்கொண்ட கோலக்கூத்தனிறே. "தீவி

ஸூ:ஸூ ஸூ ... ” (த்ரிவிக்ரம:க்ரமாக்ராந்தத்ரைலோக்யஸ்ஸ்புரதாயுத:) (தண்டும்வாளுமெழ) “ தூசித்தலையிலவர்களேகைதொடராய்த் தரம்பெற்றுப்போகவொண்ணாது” என்று நின்றபேரணியும் குலைந்துமேல்விழுமாபோலே; “ பிற்பட்டோம், கெட்டோம் ” என்றொருவர்க்கொருவர் படுகிறபடி, ஒருவர்க்கிட்ட சோற்றைப்பலராசைப்படுமாபோலே காணுமிவர்கள் படுகிறபாடு. அநுகூலன்வந்துபுகுர, “ வத்யதாம் ” (வத்யதாம்) என்கிறவர்கள், ப்ரதிகூலருள்ளவிடத்தில் பேசாதிரார்களிறே. [என்னிதுமாயமென்னப்ப னறிந்திலன் । முன்னையவண்ணமேகொண்டளவாய் என்று] நமுசிவந்து; என் பிதா உன் வஞ்சநமறிந்திலன். நீமுன்புபோலே நின்றளக்கவேணுமென்று திருவடிகளைக்கட்டிக்கொண்டு கிடந்தானிறே. அன்றேபிறந்தன்றே வளர்ந்தானொருவனுடைய வ்யாபாரமிறேயிதடைய; ஆகையாலேபரிகைக்கு, ஹேதுவுண்டென்றபடி. [பிராற்பிறந்தித்யாதி] உன்கையிலேபருத்திபட்ட பன்னிரண்டும் படுகிறபூமியை நீரேற்கும்போது இப்படிபடவேணுமோவென்கிறார். (அண்டம்மோழையெழ) இந்த்ரனுக்காக த்ரைலோக்ய மித்தனையு மளந்துகொடுப்பதாக விறேயுபக்ரமித்தது; கணிஶ மவ்வளவல்லாமையாலே அண்டாவகாசமுள்ள விடமெங்கும் சென்றளந்து, அண்டகடாஹத்திலே திருவடிசென்று “ ஒண்மிதியிற்புனலுருவி யொருகால்நிற்ப ” என்கிறபடியே கீழிலண்டகடாஹத்தை யுருவிநிற்க, கீழிலாவரணஜலம் மேலேயெழ. ஆவரணஜலத்துக்கு நடுவே யொருகழல்போலே மிதக்கு மித்தனையிறேயண்டம். “ரக்ஷகமானசெயலே பாதகமாகிறதோ ” என்றஞ்சவேண்டும்படியிறே அப்போதைக்கலுவுதல். மோழை - குமிழி. (முடிபாதமெழ) திருவபிஷேகத்தளவும் திருவடிகள் கிளர. “ முடிமேலேபாதமெழ ” என்றுஞ்சொல்லுவர்கள் ந்ருத்தலக்ஷணத்துக்காக. (அப்பனூழியெழ) மஹாபலி அப்ராப்தமாகராஜ்யம்பண்ணுகையால் வந்தபொல்லாக்காலமானதுபோய், நல்லடிக்காலமாயிற்று. நல்லடிக்காலம் கிளரும்படியாகவும் (அப்பன் – உலகங்கொண்டவாறே) மஹோபகாரகனான சர்வேஶ்வரன் லோகத்தைக்கொண்ட வாஶ்சர்யமிருந்தபடியென்னென்னுதல். அன்றியே. லோகத்தைக்கொண்ட ப்ரகாரமிருந்தபடி யென்னென்னுதல். அப்பன், அப்பன் என்று ஹ்ருஷ்டராகிறாராகவுமாம். (அப்பன்) இந்த்ரனுக்கு ராஜ்யத்தைக்கொடுத்த செயலாலே யெனக்கு ஸத்தையைத்தந்தானென்கிறார்..........................*

ஜீயர் அரும்பதம்.

முதற்பாட்டு. (ஆழியெழவித்யாதி) “ உலகங்கொண்டவாறே ” என்றத்தைக்கடாக்ஷித்தவிதாரிகை (அவையித்யாதி) அவையெல்லாவற்றுக்கும் - பத்துப்பாட்டில் விஜயங்களெல்லாவற்றுக்கு மென்றபடி. இது பெரிய விஜயமோ வென்ன (தேவாஇத்யாதி) “ தேவாஸுரா ... ”

நஹ்யம் விந்தே தேவாஸ்ஸ்வஸ்த்தா மாயாந்தி ஜிதம் பகவதா ஜகத்" (தேவாஸ்ஸ்வஸ்த்தாமாயாந்தி நிஹதாதைத்யதாநவா:। பயம் விந்தே தேந்து ஜிதம் பகவதா ஜகத்) என்று - திருவுலகளந்தருளினபோது ஜாம்பவான் மஹாராஜர் பறையறைந்தபடியிது. மஹாபலி பக்கலிலே யிரந்தளக்கவேணுமோ, அவனை ஸம்ஹரித்து விடவொண்ணாதோ வென்ன (ராவணனைப்போலேயிந்யாதி) குணலவமாவது - ஔதார்யம்.

முந்தற திவ்யாயுதங்களைச் சொல்லுகிறதுக்குபாவம் (நாயகனுக்கிந்யாதி) அடியாரென்றது - சாடு. திருவடிகளும், ப்ருத்யரும். வென்றுகொடுப்பார்-ஜயித்துக்கொடுப்பார். அவனிருக்க, ஆழியெழுவானென்னென்ன (த்ரைலோக்யத்தையுமித்யாதிவாக்யத்வயத்தாலே) அதாவது - பரிவினாலேயென்றபடி. கறுவுதல் - ஆக்ரஹம். பரிகரம் முற்பட்டதுண்டோவென்ன (காட்டுக்கித்யாதி) அவர் முற்பட்டாரோவென்ன, ஸப்ரமாணமாக வருளிச்செய்கிறார் (பூர்வஜஸ்யேத்யாதி) "ப்ராகேவ து மஹாபாகஸ் ஸௌமித்ரிர் மித்ரநந்தந:। பூர்வஜஸ்யார்த்தரக்ஷார்த்தே த்ருமசைலம் அலங்க்ருத:" (ப்ராகேவதுமஹாபாகஸ் ஸௌமித்ரிர்மித்ரநந்தந:। பூர்வஜஸ்யாநுயாத்ரார்த்தே த்ருமசீரைரலங்க்ருத:) இதி சுந்தரகாண்டே ஹநுமந்தம் ப்ரதிஸீதா. இஸ்ஸ்லோகத்தில் "ப்ராகேவ" (ப்ராகேவ) என்றத்தைக்கடாக்ஷித்து (முற்கோலி) என்றது.

அல்லாத திவ்யாயுதங்களிருக்க, திருவாழியெழுவானென்னென்ன ; பாவம் (தோற்றத்திலேயித்யாதி) தோற்றத்திலே - உபக்ரமத்திலே. அரசுபோர்-ராஜயுத்தம். இவனரசோவென்ன (ஹேதிராஜனிறேயென்று) இதுக்கர்த்தம் (திவ்யாயுதங்களுக்கெல்லாமித்யாதி) "தோற்றத்திலேயரசுபோர்" என்றதுக்கு த்ருஷ்டாந்தம் (பரிகரமித்யாதி) மஹாராஜர் மேல்விழுகைக்கு ஹேதுவருளிச்செய்கிறார் (பையலித்யாதி) அப்படி மேல்விழுந்தாரோவென்ன, ப்ரமாணம் (அதேத்யாதி) "அத ஹரிவரநாத: ப்ராப்யஸங்க்ராமகீர்த்திம் நிசிசரபதிமாஜௌ யோஜயித்வா ச்ரமேண। ககநமதிவிசாலம் லங்கயித்வார்க்கஸூநுர் ஹரிவரகணமத்யே ராமபார்ச்வம் ஜகாம" (அதஹரிவரநாத: ப்ராப்யஸங்க்ராமகீர்த்திம் நிசிசரபதிமாஜௌயோஜயித்வாச்ரமேண । ககநமதிவிசாலம்லங்கயித்வார்க்கஸூநுர்ஹரிவரகணமத்யே ராமபார்ச்வம்ஜகாம) இதியுத்தகாண்டே. ஹரிநாத: என்னாதே, "ஹரிவரநாத:" (ஹரிவரநாத:) என்றதுக்குபாவம் (தம்மோடொக்கவித்யாதி) வினை - யுத்தம். ஆனால் தாம் முற்பட மேல்விழுவானென்னென்ன (இவர்களோடித்யாதி) ஒத்தபோர் - சமாநயுத்தம். தூசித்தலை-யுத்தமுகம். தாம்-ச்ரேஷ்டயம். "அபியாதா ப்ரஹர்த்தா ச" (அபியாதாப்ரஹர்த்தாச) இத்யாதியைக்கடாக்ஷித்துபாவம் (பூசற்றலையித்யாதி) பூசல் தலை - யுத்தமுகம். "நிசிசரபதிம்" (நிசிசரபதிம்) என்றதுக்கு பாவம் (அந்தலையிலுமித்யாதி) (அந்தலையிலும்) என்ற சப்தம் - (தம்மோடொக்க வினைசெய்யவல்லபேர்) என்றத்தை சமுச்சயிக்கிறது. அந்தலையிலும் - ராவணனிடத்திலும். ஆனாலவர்களோடே யுத்தம்பண்ணுகிறதுக்கென்னென்ன (அவன்கிழ்த்திரியுமித்யாதி) செவ்வைப்பூசல் - தர்மயுத்தம். "யோவஜ்ரபாத" (யோவஜ்ரபாத) இத்யாதி பூர்வார்த்தத்தைக் கடாக்ஷித்துபாவம் (இதுக்குமுன்பித்யாதி) "லங்கயித்வா" (லங்கயித்வா) என்றதுக்குபாவம் (பரப்பையித்யாதி) திறலாலே - மிடுக்காலே. இப்படி மீளுகைக்கு ஹேதுவென்னென்ன: அர்க்கஸூநுவாகையாலே யென்கிறார் (பிறப்புக்கித்யாதி) அப்படிசெ

ய்கைக்கு ஹேதுவேதென்ன (தன்னிலமிறேயென்று) தம் வரவு தெரியாதபடி மீ ண்டவாகாரம் ஸூர்யனுக்குண்டோவென்ன (ஆதித்யனித்யாதி) (மத்யே) என்றது க்குபாவம் (இவர்களிலித்யாதி) "வாரு-ஸஜாக" (பார்ஸ்வம்ஜகாம) என்றது க்குபாவம் (தூசித்தலையிலேயித்யாதி) மதிக்க - பெருக்க. எல்லாரும் சந்தோஷ ப்படவென்றுமாம்.

"அவனுக்குமுன்பே பரிகரம் முற்பட்டபடி" என்றதிலே ரஸோக்தி (ஆயி ரக்காதமித்யாதி) முற்கோலுகைக்கு ஹேதுவேதென்ன (பயசங்கையித்யாதி) பய சங்கை யில்லாதவிடத்தே பயஹேதுவேதென்ன (பயசங்கையித்யாதி) வைலக்ஷ ண்யத்தைக்கண்டு அஸ்தரானே பயசங்கைபண்ணினருண்டோவென்ன (தூர்யோத நேத்யாதி) தடவிப்பார்த்ததுக்குப்ரமாணம் (ஸம்ஸ்ப்ருஸந்நித்யாதி) "ஒஹாஒதிஃ" (மஹாமதிஃ) என்றதுக்கு பாவம் (கடவித்யாதி) "ஜ்ஞாநாதிக்யம் ப்ரேமத்தாலே கலங்குகைக்குடல்" என்னுமத்தை யாப்தசம்வாதத்தாலே தர்ஸிப்பிக்கிறார் (பிள் ளையுறங்காவில்லியித்யாதி) இந்தவாகாரமவர்க்குமுண்டென்கிறார் (பிள்ளைதாமித் யாதி) சொட்டை - ஆயுதம். "ஒஹாஒதிஃ" (மஹாமதிஃ) என்றால் - மதிகேடொ ன்று காட்டுமோவென்ன (அறிவுண்டாகையாவதித்யாதி) கீழ் "த்ரைலோக்யந்த யும்" இத்யாதி வாக்யவிவரணம் (இவன்வளர்ந்தருளுகைக்கித்யாதி) கணிசித்த-சி ந்தித்த. எழ - கிளரவென்றபடி.

பொரப்புக்கவாறே - யுத்தம்பண்ணப்புக்கவாறே. இளவணி-காலாள். ஏறினா ர்களென்றது-அர்த்தஸித்தம். மற்றையாழ்வார்கள் திருவாழியாழ்வானிடத்தில் பரி விலேகிளம்பினதாக - எழுந்தருளிச்செய்து, ஈஸ்வரனிடத்தில் பரிவாலே கிளம்பி னதாக விவக்ஷித்தத்தை த்விதமாகக்காட்டுகிறார் (இரைபெறுதவிடத்தேயித்யாதி வாக்யத்வயத்தாலே) முந்தினவிதம். கேவலம் பரிவாலே மேல்விழுந்தது, இரண் டாம்விதம்-பொறாமையால்வந்த பரிவாலே மேல்விழுந்ததென்றபடி. இனந்திலே-ஸ்வஜநத்திலே. திருவுலகளந்தபோது திவ்யாயுதங்கள் பரிவாலேகிளம்பிற்றோவெ ன்ன, ப்ரமாணம் (இடங்கையித்யாதி) ஆர்த்துக்கொள்ள - சம்ப்ரமிக்க. வாய்வாய்-கபோலதாடநம். அடங்கார்-சத்ருக்கள். காலும்-உமிழாநிற்கும். விடங்காலுந்தீவா ய்-அரவு, "அரவு-அணைமேல்" என்றிரண்டிடத்திலுமர வந்வயிப்பது. தோன்றல்-ஸ்வாமி. சாடு (பூவையிட்டித்யாதி) பூவை-பூமியை. பூவையிட்டு - புஷ்பம்போன்ற திருவடிகளையிட்டு. அவனளந்தாளிவர்களிப்படி படவேணுமோவென்ன (அப்படுக் கையிலேயித்யாதி) சாடு (அவனிப்படியித்யாதி) படி-ப்ரகாரமும், பூமியும், ஜீவந மும். பேசாநிற்பார்களிறே-வெறுமனிரார்களிறேயென்றபடி.

"ஆழியெழச்சங்கும்வில்லுமெழ" என்றவநந்தரம் "திசைவாழியெழ" என்கையாலே - திவ்யாயுதங்களுக்கு மங்களாசாஸநம் பண்ணுகிறார்களென்கிறார் (அவனுக்கித்யாதிவாக்யத்வயத்தாலே) ஆயுதங்களுக்கு மங்களாசாஸநம்பண்ணுகி றதுக்கு ப்ரமாணாந்தரம் (நின்கையிலித்யாதி) ஈஸ்வரவிஷயமாக மங்களாசாஸந ம்பண்ணுகிறார்களென்று பாவாந்தரம் (திவ்யாயுதங்களினுமித்யாதி) இதுக்குநியா மகம் (திவ்யாயுதங்களுக்கித்யாதி) திருவுலகளந்தபோது மங்களாசாஸநம் பண் ணினார்களோவென்ன (ஏத்தவேழுலகமித்யாதி) திவ்யாயுதங்கள் கிளர்ந்ததுக்கு ப்ரமாணாந்தரம் (த்ரிவிக்ரமஇத்யாதி) "வாமநோர்க்ஷதுஸதாபவந்தம்யஃக்ஷணதபூத்। த்ரிவிக்ரமஃக்ரமாக்ராந்தத்ரைலோக்யஸ்ஸ்புரதாயுதஃ"

(வாமநோர்க்ஷதுஸதாபவந்தம்யஃக்ஷணதபூத் । த்ரிவிக்ரமஃக்ரமாக்ராந்தத்ரைலோக்

யஸ்ஸ்ப்புரதாயுதஃ) இதி பஞ்சமேம்ஸோ நந்தகோபஃ. இதில் (ஸ்ப்புரதாயுதஃ) என்ற திங்கு வேண்டுவது.

கைதொடராய் - கைவிடாதவராய். சஹாயபூதராயென்றுமாம். தரம்-பஹுமானம். பேரணி - சேனாவ்யூஹம். இதுக்கு த்ருஷ்டாந்தம் (ஒருவர்க்கித்யாதி) அஸ்த்தானே பயசங்கைபண்ணினதுக்கு விதுரனையே யன்றிக்கே மஹாராஜனையுங்காட்டுகிறார் (அநுகூலனித்யாதி) ப்ரதிகூலருண்டோ வென்ன (என்னிதுமாயமித்யாதி) பெரியாழ்வார் திருமொழி முதற்பத்து ஒன்பதாந்திருமொழி எட்டாம்பாட்டு. எடுத்தபாசுரத்துக்கர்த்தம் (நமுசிவந்தித்யாதி) மாயம்-வஞ்சநம். முன்னைய வண்ணமேகொண்டு - முற்பட்டவடிவையேகொண்டு. "மன்னு" என்றதுக்கர்த்தம் (திருவடிகளையித்யாதி) கீழே - பரிகைக்கு ஹேது சௌகுமார்யாதி வைலக்ஷண்யமென்றருளிச்செய்து, ஹேத்வந்தரம் (அன்றேபிறந்தித்யாதி) அன்றேபிறந் தன்றேவளர்ந்த வ்யாபாரத்துக்குப் பரிந்தபேருண்டோவென்ன (சீராலித்யாதி) இப்பாட்டுக்கு பாவம் (உன்கையிலேயித்யாதி) "மார்பாரப்புல்கிநீயுண்டுமிழ்ந்த" என்றத்தைக்கடாக்ஷித்து (உன்கையிலே பருத்திபட்ட பன்னிரண்டும் படுகிறபூமியை) என்றது, இப்படி படவேணுமோ வென்றது - "சீராற்பிறந்து சிறப்பால்வளராது, பேர்வாமனுகாக்கால்" என்றத்தைக் கடாக்ஷித்து. பெரியதிருவந்தாதி பதினும் பாட்டு. இந்தப்பாட்டுக்கு - கீழே வ்யாக்யான மெழுதிற்று. பருத்திபட்ட பன்னிரண்டும் படுகையாவது - இஷ்ட சர்வ சேஷ்டாவிஷயமாகை.

அண்டம் குமிழியெழுகைக்கு வகை யருளிச்செய்கிறார் (இந்த்ரனுக்காகவித்யாதி) கணிசம் - எண்ணம். ஒண்மிதியில் - அழகியவடிவைப்பில், புனலுருவி - கீழாவரணஜலத்தையுருவி, ஒருகால்நிற்ப - ஒருதிருவடிநிற்க வித்யர்த்தஃ. திருநெடுந்தாண்டகம் அஞ்சாம்பாட்டு. அண்டத்துக்குக்கீழே ஜலமுண்டோ வென்ன (ஆவரணேத்யாதி) கழல் - கழற்கொடி. அவன் செயல் ரக்ஷணத்துக் குடலாயிருக்க, இப்படி கலங்கவேண்டுவானென்னென்ன (ரக்ஷகமானவித்யாதி) கறுவுதல் - ஆக்ரஹமும், கோபமும்.

"ஊழியெழ" என்றதுக்கு - பொல்லாக்காலம் போகவென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (மஹாபலியித்யாதி) (நல்லடிக்காலமாயிற்று) என்றது-அர்த்தாத்ஸித்தம். நல்லடிக்காலம் - நல்லவடிவையுடையவனுடைய காலம், நன்மைக்கு மூலமானகாலம்.

"ஆழியெழ" என்று தொடங்கி "உலகங்கொண்டவாறே" என்று - ஆஸ்சர்யத்திலே யாதல், ஆறு - ஆஸ்சர்யம்; "அப்பன் - உலகங்கொண்டப்ரகாரம்-ஆழியெழ" என்று தொடங்கியாதல்; ஆறு-ப்ரகாரம், என்றிப்படி யிரண்டந்வய மருளிச்செய்கிறார் (மஹோபகாரகேத்யாதிவாக்யத்வயத்தாலே) அன்றிக்கே, "ஆழியெழ" என்றுதொடங்கி "உலகங்கொண்டவாறே, என்னப்பன்" என்னுதல்; இத்தையருளிச்செய்கிறார் (அப்பனப்பனென்று ஹ்ருஷ்டராகிறாராகவுமாமென்று) இந்த மூன்றுமந்வயமும்-மூந்நினவந்வயவிவரணமாதல். "அப்பன்" என்றதுக்கு - ஜநகனென்றர்த்தாந்தரம் (இந்த்ரனுக்கித்யாதி)............................*

இரண்டாம்பாட்டு.

ஆறுமலைக்கெதிர்ந்தோடுமொலியர
வூறுசுலாய்மலைதேய்க்குமொலிகடன்
மாறுசுழன்றழைக்கின்றவொலியப்பன்
சாறுபடவமுதங்கொண்டநான்றே.

ஆறாயிரப்படி.

(ஆறு) கடைந்தருளுகிறபோது மலைகளிற்காட்டில் கடலுக்கு கையாலே, ஆறுமலையைநோக்கி யோடுகிற வோசையும், பாம்பினுடம்பைச்சுற்றி மலையைத்தேய்க்கிற த்வநியும், பர்வதத்தைவலித்தபோதிடமும் வலமுமாய்ச் சுழன்று கோஷிக்கிற கோஷமும், என்னப்பன் நீர்கோதாம்படி பசைபடக்கடைந் தம்ருதம்வாங்கின நாளிவையெல்லா முளவாயினவென்று ஸமுத்ரமதநப்ரக்ரியையை யநுபவிக்கிறார்...... ....*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், அம்ருதமதந வ்ருத்தாந்தத்தையநுஸந்தித்து சந்துஷ்டராகிறார்

அப்பன்-மஹோபகாரகனான சர்வேஶ்வரன். தேவர்களுக்கு, சாறு-மஹோத்ஸவம். பட - உண்டாம்படியாக. கடலைக்கடைந்து, அமுதம் - அம்ருதத்தை. கொண்ட-கொண்ட. நான்று-நாள். கடைந்தவேகத்தாலே, ஆறு - ஆறுகளானவை. மலைக்கு - தனக்குப் பிறப்பிடமானமலையைநோக்கி. எதிர்ந்து - எதிரே. ஓடும் - ஓடுகிற- ஒலி-ஒலியும். அரவு-வாசுகியாகிற பாம்பினுடைய. ஊறு-உடம்பை. சுலாய்-சுற்றி. மலை-மந்தரத்திலே. தேய்க்கும்-தேய்க்கிற. ஒலி - ஒலியும். கடைகையாலே, கடல். கடல். மாறு-இடம்வலமாகமாறி. சுழன்று - சுழன்று. அழைக்கின்ற - கூப்பிடுகிற. ஒலி-ஒலியும். ஆயிற்றின-ஆயிற்றின.

சாறு-உத்ஸவம். சாரமுமாம். நான்று-நாள். ஊறு-உடம்பு. சுலாய்-சுற்றி.

ஈ௨ - இரண்டாம்பாட்டு.

சமுத்ரமதந வைசித்ரியை யநுஸந்திக்கிறார்.

(ஆறுமலைக்கெதிர்ந்தோடுமொலி) கடலிலே மந்தரத்தை நட்டவாறே கடல்கொந்தளித்து, ஸஹ்யம்போய்த்தாழ்ந்துகொடுத்தது; நீரானது தாழ்ந்தவிடத்தே யோடக்கடவதிறே. ஆறுகளானவை மலையைக் குறித் தெதிரிட்டோடுகிறபோதை, த்வநியான திவர்க்குச்செவிப்படுகிறபடி. இவர்க்குக் காலத்ரயத்திலுமுள்ளதெல்லாம் தெரியும்படியிறே யவன்வெளிச்சிறப்பித்தது. (ஆறுஸஹ்யங்களைநோக்கி யெதிரேயோடுகிற வோசையும்.) (அரவூறுசுலாய்மலைதேய்க்குமொலி) ஊறு - உடம்பு. சுலாய்-சுற்றி. வாசுகியினுடைய வுடலைச்சுற்றிக் கடைகிறபோதைச் சரசரவென்கிற த்வநியும். (கடல்மாறுசுழன்றழைக்கின்றவொலி) மந்தரத்தைக்கொடுபுக்குநட்டுத்திரித்தபோது, கீழ்கடல் மேல்கடலாய்க் கிடாய்ப்பாய்த்தல்போலே திரையோடு திரைதாக்கிக்கிளருகிற வொலியும் (அப்பன்) உபகாரகன். (சாறுபட) கடலில் நீர்கோதாம்படி ப்ரயோஜனமான வம்ருதமுண்டாக. சாறென்று - உத்ஸவமாய்,தேவஜாதிக் குத்ஸவமுண்டாம்படியாகவென்னுதல்; சாறுபட - விழவுபடவென்றபடி. நீலே ரஸமானபசைபடவென்னுதல், உத்ஸவமாம்படியென்னுதல். (அமுதங்கொண்டநான்றே) அம்ருதமதநம்பண்ணினகாலத்தி லிவையெல்லமுண்டாயிற்று ....

ஜீயர் அரும்பதம்.

இரண்டாம்பாட்டு (ஆறித்யாதி) " சாறுபட " இத்யாதியைக்கடாக்ஷித்தவதாரிகை (சமுத்ரேத்யாதி)

ஆறுமலைக்கெதிரேயோடுகைக்கு ஹேதுவேதென்ன (கடலிலேயித்யாதி) கொந்தளித்து - பொங்கி. போய்-மிகவும். மலைதாழ்ந்தா லங்கேயோடவேணுமோவென்ன (நீரானதித்யாதி) சப்தார்த்தம் (ஆறுகளானவையித்யாதி) பூதகாலத்தில் த்வநி செவிப்படக்கூடுமோவென்ன (இவர்க்கித்யாதி) வெளிச்சிறப்பித்தது-ஜ்ஞாநவைசத்யத்தைப்பண்ணிக்கொடுத்தது.

தேய்க்கும்-கடைகிற.

திரித்தபோது - திருப்பிக்கடைகிறபோது. கீழ்கடல் மேல்கடலாயென்றது-கிழக்குத்தையில் நீர் மேற்கேபோச, மேற்குத்தையில் நீர் கிழக்கேவரவென்றபடி. கொப்பாய்ச்சல் - மேஷயுத்தம். அழைக்கின்ற-கிளருகிற.

சாறு - ஸாரம். பட-உண்டாக. அர்த்தாந்தரம் (சாறென்றித்யாதி) நான்று-அன்று.

அப்பன் சாறுபட வமுதங்கொண்டநான்று - ஆறு மலைக்கென்றுதொடங்கி, அழைக்கின்றவொலி, இவையெல்லாமுண்டாயிற்றின வித்யர்வயః ....*

மூன்றாம்பாட்டு.

நான்றிலவேழ்மண்ணுந்தானத்தவேபின்னு
நான்றிலவேழ்மலைதானத்தவேபின்னு
நான்றிலவேழ்கடறானத்தவேயப்ப
னூன்றியிடந்தெயிற்றிற்கொண்டநாளே.

ஆறாயிரப்படி.

(நான்றில) என்னப்பன், ரசாதலகதையான பூமியைத் திருவெயிற்றிலே யிடந்தெடுத்தருளினபோது, சப்தத்வீபங்களும் சப்தகுலபர்வதங்களும் சப்தசமுத்ரங்களும் தந்தாமுடைய ஸ்தாநங்களிலே நிஶ்சலமாயிருக்கும்படி யெடுத்தருளினான்; இதென்ன வாஶ்சர்ய மென்னப்பனென்னப்ப னென்கிறார்...*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், பூம்யுத்தரண வ்ருத்தாந்தத்தை யநுசந்தித்து ப்ரீதராகிறார்.

அப்பன் - தன்வடிவை யழியமாறி, நீருக்கிரையாதவராஹ வேஷத்தைக்கொண்ட மஹோபகாரகன். ப்ரளயாந்தர்க்கதையானபூமியை, ஊன்றி - அண்டகபாலத்திலொட்டு விடும்படிகுத்தி. இடந்து - இடந்து. எயிற்றில் - எயிற்றின்மேலே. கொண்ட - கொண்ட. நாள் காலத்தில். ஏழ் சப்தத்வீபரூபமான. மண்ணும் - பூபேதங்களானவை. நான்றில-நழுவாதே. தானத்த-ஸ்வஸ்தாநஸ்தங்களாயிற்றின. பின்

னும் - அதுக்குமேலே. அதுக்குதாரகமான, ஏழ்மலை - சப்தகுலபர்வதங்களும். நான்றில - சலியாதனவாய்க்கொண்டு. தானத்த - ஸ்வஸ்த்தாநஸ்த்தங்களாயிற்றின. பின்னும் - அதுக்குமேலே. ஏழ்கடல் - சப்தசமுத்ரங்களும். நான்றில - உடைந்தொழுகாதே. தானத்த - ஸ்வஸ்த்தாநஸ்த்தங்களாயிற்றின ....*

ஈடு - மூன்றும்பாட்டு.

மஹாவராஹ வ்ருத்தாந்தத்தை யநுசந்திக்கிறார்.

(நான்றிலவேழ் மண்ணும் தானத்தவே) ஏழு பூமியும் நாலாதபடி யெடுக்கை. சப்தத்வீபவதியான பூமியை யெடுக்கச்செய்தே, ஒன்றும் நாலாதே முன்புபோலே ஸ்வஸ்த்தாநத்திலே கிடக்கும்படி. இவன் பெரியவனைத் தொழிலைச்செய்யா நிற்கச்செய்தேயும், முன்பு போலேயொருகுறையற, உண்பாருடுப்பாராய்ச் செல்லுகிறபடி. ஆதாரமானவன்கூட நிற்கையாலே யிவற்றுக்கொரு குறைவாராதே. சப்தத்வீபமும் சலித்ததில்லை, ஸ்வஸ்த்தாநஸ்த்தங்களாயிற்றின.

(பின்னும்) அதுக்குமேலே. (நான்றிலவேழ்மலைதானத்தவே) பூமிக்காணியடித்தாப்போலே யிருக்கிற சப்தகுலபர்வதங்களும் ஒன்றுங்குலையாதே ஸ்வஸ்வஸ்த்தாநங்களிலே நிற்கும்படி. ஒரு கோத்ரஸ்கலநம் பிறந்ததில்லை. பின்னும் பின்னுமென்று வருகிறதுக்குக்கருத்து - இவற்றிலே யொரு வ்யாபாரமமையுங்கிடீர், அதுக்குமேலே யிவையும் செய்தா னென்கைக்காக.

(நான்றிலவேழ்கடல்தானத்தவே) அவைதாம் காடிந்யத்தாலே குலையாதே யொழிந்த தென்னவுமாமிறே, அதுவுமில்லையிறே யிதுக்கு; த்ரவத்ரவ்யமிறேஜலம். அதுவும் ஸ்வஸ்த்தாநத்திலே கிடக்கும்படியாக அவற்றின்காடிந்யமு மிவற்றின் த்ரவத்வமுமப்ரயோஜகம்; அவன்றிருவுள்ளக்கருத்துயாதொன்று, அதுவேகார்யகரமாவதென்கை. இவையிப்படிகிடக்கிறது அவனவஹிதனாய்க்கொண்டு ரக்ஷிக்கும்போதோ வென்னில் (ஊன்றியிடந்தெயிற்றிற்கொண்டநாளே) மறுபாடுருவத்தைக்கும்படிகுத்தி, அண்டபித்தியினின்று மொட்டுவிடுவித்தெடுத்தேறட்டு, எயிற்றிலே யெற்றிக் கொண்டு வ்யாபரித்தபோது, "மண்ணெல்லாமிடந்தெடுத்து மதங்கள் செய்து" என்கிறபடியே. அவனிப்படி முக்யமாக ரக்ஷிக்கப்புக்காலவை சலிக்குமோ. அசலங்களோடு சலங்களோடு வாசியற ஸ்வஸ்த்தாநத்திலே நின்றன...*

ஜீயர் அரும்பதம்.

மூன்றும்பாட்டு (நான்றிலவித்யாதி) "அப்பனூன்றியிடந்து" இத்யாதியைக்கடாக்ஷித்தவதாரிகை (மஹாவராஹேத்யாதி)

விவரணம் (சப்தேத்யாதி) "ஏழ்மண்ணும் - நான்றில - தானத்தவே" - சப்தத்வீபவதியான பூமியும் நழுவாதபடி ஸ்வஸ்த்தாநத்திலே கிடந்ததென்றபடி. ந

ன்றில - நாலாதபடி. சலியாதபடியென்றுமாம். நழுவாதபடி. சலியாமையின் சரமாவதி (இவன்பெரியவித்யாதி) ஆனைத்தொழில் - அதிமாநுஷவ்யாபாரம், ஸ்வாதந்த்ர்யக்ருத்யமும். இதுக்குஹேதுவேதென்ன (ஆதாரமித்யாதி) முன்புபோலே- ஸ்ருஷ்டிகாலம்போலே.

மண்ணைச்சொன்னவநந்தரம் மலையைச்சொன்னதுக்குபாவம் (பூமிக்கித்யாதி) ரஸோக்தி (ஒருவித்யாதி) கோத்ரஸ்கலநம் - பர்வதஸ்காலித்யம், நாமவ்யத்யாஸமென்று சாடு. கோத்ரம்-பர்வதமும். பேரும், கோத்ரமும். "பின்னும், பின்னும்". என்கிறது-ஒரொன்றே அசக்யமென்றபடி.

கீழ்ச்சொன்னவைபோலன்றிக்கே, நாலாமைக் கஸம்பாவிதமானத்தையும் நாலாதே ஸ்வஸ்த்தாநத்திலே கிடக்கும்படிபண்ணின சாமர்த்யத்தை யருளிச்செய்கிறார் (அவைதானித்யாதிநாலுவாக்யத்தாலே) கீழுக்தத்தால்பலிதம் (அவற்றினித்யாதி வாக்யத்வயம்)

அவஹிதனாய் - ஸாவதானனாய். எயிற்றிலே - தம்ஷ்ட்ரையிலே. அப்படியூன்றியிடந்தானேவென்ன (மண்ணெல்லாமித்யாதி) பூமிப்பரப்படையவிடந்தெடுத்து ஐஶ்வரத்வத்தால்வந்த செருக்காலே மதகார்யமான வ்யாபாரங்களைப்பண்ணியென்றபடி. திருமொழி மூன்றாம்பத்து நாலாந்திருமொழி மூன்றாம்பாட்டு, " வையமேனந்த " இத்யாதி. ரஸோக்தி (அவனித்யாதி) முக்யம்-முகசம்பந்தியும், ப்ரேஷ்டமும்.

கீழெல்லாவற்றையும் நிகமிக்கிறார் (அசலங்களோடித்யாதி)

அப்பனூன்றியிடந் தெயிற்றிற்கொண்டநாளே - நான்றிலவே ழித்யாரப்யாந்வயஃ..*

நான்காம்பாட்டு.

நாளுமெழநிலநீருமெழவிண்ணுங்
கோளுமெழவெரிகாலுமெழமலை
தாளுமெழச்சுடர்தானுமெழவப்ப
னூழியெழவுலகமுண்டவூணே.

ஆறாயிரப்படி.

(நாளுமெழ) * கலாமுஹூர்த்தாதிமயமான காலத்தையும், ப்ருதிவ்யாதி பஞ்சபூதங்களையும், சகல குலாசலங்களையும், நக்ஷத்ர ஜ்யோதிஸ்ஸங்கங்களையும், ப்ரளயகால ஸலில பூர்ணீபூதமான சமஸ்த ஜகத்தையுமநாயாஸேந பக்ஷணம்பண்ணினாப்போலே நிரவசேஷமாகவுண்டருளினானென்னப்ப னென்னப்ப னென்கிறார்...... ....*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், ஜகந்நிகரணத்தை யநுசந்தித்து சந்துஷ்டராகிறார்.

நாளும் - திவஸாதிவிபாகம். எழ - நிலைகுலைந்துபோகவும். நிலநீரும் - ப்ருதிவீஜலங்களும். எழ - நிலைகுலைந்துபோகவும், விண்ணும் - ஆகாசமும். கோளும்-

க்ரஹங்களும். எழ - நிலைகுலைந்துபோகவும். எரிகாலும் - அக்நிவாயுக்களும். எழ-நிலைகுலைந்துபோகவும். மலை - பர்வதங்கள். தாள் - அடி. எழவும் - பறிந்துபோகவும். சுடர்தானும் - நக்ஷத்ராதி தேஜஃபதார்த்தங்களும். எழ - குலையவும். அப்பன் - ப்ரளயாபத்ஸகனான மஹோபகாரகன். ஊளியெழ - "பசித்துண்டான்" என்றுதோன்றும்படியாக. உலகம் - லோகத்தை. உண்ட - உண்ட. ஊண் - ஊண். ஏ- இருந்தபடியே.

கோள்-க்ரஹம். ஊளி-பசி. "உறிஞ்சினவோசை" என்பாருமுளர்.........*

ஈடு - நான்காம்பாட்டு.

மஹாப்ரளயத்தில் ரக்ஷணப்ரகாரத்தை யருளிச்செய்கிறார். "'இப்போதிருக்கிறாப்போலே மார்க்கண்டேயன் திருவயிற்றினுள்ளேயொன்றுமறியாதே யிருக்கக்கண்டான்' என்கிற புராணரூபமாக வவாந்தரப்ரளயத்தை யிவ்விடத்தே யருளிச்செய்கிறாராகவுமாம்" என்றருளிச்செய்வர்.

(நாளுமெழ) காலவ்யவஸ்த்தைபோக. "நாஹோராத்ரிः" (நாஹோராத்ரிः) என்னும்படியே. எழ - போர. ஆண்டென்றும், மாசமென்றும், நாளென்றும், கலையென்றும், காஷ்டையென்றும் சொல்லுகிறவையெல்லா மாதித்யனுடைய கத்யாகதியாலே வருகிறவையிறே; வ்யவச்சேதகனான வாதித்யனுள்ளேபுக்கால் வ்யவச்சேத்யமான விவையும் போமித்தனையிறே. (நிலநீருமெழ) காரணங்களோடு கார்யங்களோடுவாசியற வுள்ளேபுக. கார்யமுள்ளவிடத்தே காரணமநுவர்த்திக்கக் காணாநின்றோம்; "மாமாயை - மங்கவொட்டு" என்று - ப்ரக்ருதிதத்த்வத்தைச் சொல்லாநிற்கச்செய்தே, "இங்கிவ்வுயிரேய்பிரகிருதி" என்றுசொல்லாநின்றாரிறே - இதுதான் காரணத்திலே போகாமைக்காக. உயிரேய் பிரகிருதியென்கிறார் - சேதநஸம்ஸ்ருஷ்டையான ப்ரக்ருதியென்று தோற்றுகைக்காக. (விண்ணுங்கோளுமெழ) ஆகாசமும் அங்குள்ள க்ரஹங்களுமெழ. (எரிகாலுமெழ) அக்நிதத்த்வமும் வாயுதத்த்வமும்போக. (மலைதாளுமெழ) பர்வதங்களடியோடே பறிந்துள்ளேபுக. வேர்க்குருத்தோடே பறிய. (சுடர்தானுமெழ) அநுக்தமான தேஜஸ்தத்த்வங்களுமுள்ளேபுக (அப்பனூளியெழ) ஊளி-சப்தம். எழவென்றது - தோற்றவென்றபடி ஓரோகோஷபங்களுண்டானால் நம்முடைய வடையவளைந்தானுக்குள்ளே புகும்போது திருவாசலில் பிறக்கு மாரவாரம்போலே, திருவயிற்றிற்புகுகிறபோது ப்ராணிகளுக் குண்டான சம்ப்ரமத்வநிகள் கிளர. அன்றியே "'இவற்றை யுறிஞ்சுகிறபோதை த்வநிகாண்' என்றம்மாள்பணிக்கும்படி" என்றருளிச்செய்வர். அத்தால் நினைக்கிறது - ஈப்ஶ்வரத்வப்பிடராலன்றியே பத்தும்பத்தாக வாஶ்ரிதரக்ஷணமேயா யிருக்கிறபடி..................

ஜீயர் அரும்பதம்.

நாலாம்பாட்டு (நாளுமித்யாதி) "உண்ட" என்று - சாமாந்யசப்தமாகையலே, "அத்தாசராசரக்ரஹணாத்" (அத்தாசராசரக்ரஹணாத்) என்கிறபடியே

மஹாப்ரளயமாதல், அவாந்தரப்ரளயமாதலென்றவதாரிகாத்வயம் (மஹாப்ரளயத்திலித்யாதிவாக்யத்வயத்தாலே) "तदप्यस्य महत् सर्वं कुक्षौ तस्य महात्मनः"(ததபஸ்ய மஹம்ஸர்வம்குக்ஷௌ தஸ்யமஹாத்மந:) என்றதைப்பற்ற (திருவயிற்றினுள்ளேயென்றது)

நாளுமெழ-காலம்போகவென்று விவக்ஷித்து, "अनादिर्भगवान् कालः" (அநாதிர்ப்பகவாந்கால:) என்ற நித்யமான காலம் போகக்கூடுமோவென்ன (காலவ்யவஸத்தைபோக) என்கிறார். காலவ்யவஸ்த்தைதா னின்னதென்னுமத்தையும், அவ்வ்யவஸ்த்தைக்கு ஹேதுவின்னதென்னுமத்தையும், ஹேதுபூத னுள்ளே புகுருகையாலே கார்யமான விவ்வ்யவஸ்த்தையும் போமென்னுமத்தையு மடைவேயருளிச்செய்கிறார் (நாஹோநராத்ரிரித்யாதி வாக்யத்ரயத்தாலே) "नाहो न रात्रिर्न नभो न भूमिर्नासीत्तमोज्योतिरभून्न चान्यत् । श्रोत्रादिबुद्ध्यानुपलभ्यमेकं प्राधानिकं ब्रह्म पुमांस्तदासीत्" (நாஹோநராத்ரிர்நநபோநபூமிர் நாஸீத்தமோஜ்யோதிரபூந்நசாந்யத் | ஶ்ரோத்ராதிபுத்த்யாநுபலப்தமேகம் ப்ராதாநிகம்ப்ரஹ்மபுமாம்ஸ்ததாஸீத்) இதி ப்ரதமேம்ஸேத்விதீயே. நாஹோநராத்ரி: என்றது - மஹாப்ரளயபக்ஷத்துக்கு ப்ரமாணம். அவாந்தர ப்ரளயபக்ஷத்துக்கு ப்ரமாணமாகில், நாஹோநராத்ரி: என்றமாத்ரமே வேண்டுவது.

பஞ்சபூதங்க ளண்டத்துக்குப் புறம்பானபோது காரணங்களாய், அண்டத்துக்குள்ளானபோது கார்யங்களாயிருக்குமென்றிட்டு (காரணங்களோடு கார்யங்களோடு வாசியற) என்கிறார். "நிலநீருமெழ" என்றதிலே - கார்யமான பூதங்களையன்றே சொல்லுகிறது. காரணங்களையு மிதுக்கர்த்தமாக்கும்போது கார்யத்திலே காரணமுண்டோவென்ன (கார்யமுள்ளவிடத்தேயித்யாதி) இதுக்கு நியாமகமேதென்ன (மாமாயையித்யாதி) அதாவது - "மங்கவொட்டுன்மாமாயை" என்று-மூலப்ரக்ருதியைச் சொல்லச் செய்தேயும், "இங்கிவ்வுயிரேய்பிரகிருதி" என்று-ஸ்த்தூலசரீர விசிஷ்டசேதந ஸம்ஸ்ருஷ்ட ப்ரக்ருதியென்று காரணும்ஸத்தைப்பிரித்துச்சொன்னாரிறே - இந்த காரணும்ஸமானது மூலப்ரக்ருதியாய்ப் போகாமைக்காகவென்றபடி. இதுதானென்றது - ஸ்த்தூலசரீர விசிஷ்டசேதந ஸம்ஸ்ருஷ்டகாரணும்ஸமான விந்தப்ரக்ருதிதான். காரணத்திலே போகாமைக்காகவென்றது - மூலப்ரக்ருதியாய்ப் போகாமைக்காகவென்றபடி, "இதுதான் காரணத்திலே போகாமைக்காக" என்றத்தை விவரிக்கிறார். (உயிரேய்பிரகிருதியித்யாதி) ஏய்கை-பொருந்துகை. அயமர்த்த:; மாமாயையென்று - ப்ரக்ருதியைச்சொல்லச்செய்தே, உயிரேய் பிரகிருதியென்று - புந: ப்ரக்ருதியைச் சொன்னது - இந்த கார்யமானசரீரத்திலே காரணமான மூலப்ரக்ருதி யநுவர்த்திக்கிறதென்று தோற்றுகைக்காகவென்று. ஆக, இத்தால் - கார்யங்களிலும் காரணும்ஸ மநுவர்த்திக்கு மென்றபடி.

"கோள்" - ஜ்யோதிஸ்ஸு. "எழ" - போக.

விவரணம் (வேர்க்குருத்தோடேயித்யாதி)

"ஊளி" - த்வநி. இங்கே, "எழ" என்றது - கிளரவென்றபடி. ஈஸ்வரத்வப்பிடர் - ஈஸ்வரத்வத்தாலே வந்த கர்வம்.

நாளுமெழ வென்று தொடங்கி, உலகமுண்டவூணே யித்யந்வய:. உண்டவூணே - உண்டவூணிருந்தபடியே யென்றபடி..................................*

ஐந்தாம்பாட்டு.

ஊணுடைமல்லர்ததர்ந்தவொலிமன்ன
ராணுடைச்சேனைநடுங்குமொலிவிண்ணு
ளேணுடைத்தேவர்வெளிப்பட்டவொலியப்பன்
காணுடைப்பாரதங்கையறைபோழ்தே.

ஆறாயிரப்படி.

(ஊணுடைமல்லர்) அதிபல பராக்ரமரான மல்லருடைய வித்வம்ஸந த்வநியும், சௌர்ய வீர்யாதி பரிபூர்ணஸைந்ய ஸஹிதரான ராஜாக்களுடைய பயஜநிதமான மஹாகோஷமும், ப்ரதிதரான ப்ரஹ்மேஶாநாதிகளுடைய ஸ்வவிஷய ஸ்துதிகோஷமு மெழும்படியாக, தர்ஶநீயமான மஹாபாரத யுத்தத்திலே யணிவகுத்தென்னப்பன் சாரத்யம்பண்ணினபடி யென்னென்கிறார்..*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், பாரதஸமரப்ரவர்த்தகத்வத்தை யநுஸந்திக்கிறார்.

சேதநனைத்தோற்பிக்கும்படியும், அவ்வழகை யாஶ்ரிதரை யநுபவிப்பிக்கு முபகார கத்வமும் சொல்லுகிறதென்கிறார் (பிரானென்றித்யாதி) "ப்ரியஹிதங்களிரண்டும் பெருமானே" என்னுமதுக்கு ப்ரமாணம் (ப்ரியவாதீசேத்யாதி) "ப்ரியவாதீ ச பூதாநாம் ஸத்யவாதீ ச ராகவ: । பஹுஶ்ருதாநாம் வ்ருத்தாநாம் ப்ராஹ்மணாநாமுபாஸிதா" (ப்ரியவாதீசபூதாநாம்ஸத்யவாதீசராகவ:பஹுஶ்ருதாநாம்வ்ருத்தாநாம் ப்ராஹ்மணாநாமுபாஸிதா) இத்யயோத்யாகாண்டே. "ஸத்யம் பூதஹிதம் ப்ரோக்தம்" (ஸத்யம்பூதஹிதம்ப்ரோக்தம்) என்றத்தையுட் கொண்டருளிச்செய்கிறார் (பூதஹிதமித்யாதி இஸ்ஸ்லோகத்தில் - பெருமாளுக்கு இக்கன்றே ப்ரியஹிதத்வங்களைச்சொல்லுகிறது, பெருமாளுக்குச் சொல்லவில்லையே யென்ன; அது கிம்புநர்ந்யாயஸித்தமென்கிறார் (ஒருக்குயேயித்யாதி) அல்லாதஅுக் கென்றது - ஸ்வரூபகுணாதிகளுக்கென்றபடி. "அவ்வழகாலே சேதநனை யநர்யார்ஹமாக்கும்படியும்" என்று கீழேசொன்னதுக்குப்ரமாணம் (ராமோராமஇத்யாதி) "ராமோ ராமோ ராம இதி ப்ரஜாநாமபவன் கதா: । ராமபூதம் ஜகதபூத் ராமே ராஜ்யம் ப்ரஶாஸதி" (ராமோராமோராமஇதி ப்ரஜாநாமபவன்கதா: । ராமபூதம்ஜகதபூத்ராமேராஜ்யம்ப்ரஶாஸதி) இதியுத்தகாண்டே. "ராமோ ராமோ ராம:" (ராமோராமோராம:) என்று - ப்ரியத்வமொழிய, ஹிதத்வம் சொல்லவில்லையேயென்ன (அவன்ஸத்தையித்யாதி) அதாவது-ஹிதத்வந்தானுக்கவன் சத்தையேபோரும், ப்ரியத்வமே சொல்லவேண்டுவதென்றபடி. பின்புண்டானவை யென்றது - குணவிக்ரஹசௌந்தர்யாதி ளென்றபடி. நிகமிக்கிறார் (ப்ரியஹிதங்களிரண்டுமித்யாதி) ப்ரியஹிதங்களிரண்டுமவரோயென்றத்தால் பலித்தது-உபாயோபேயங்களிரண்டு மவரோயென்னுமதென்று ஸித்தவத்கரித்து, அதுக்குப்ரமாணம் (ஸாக்ஷாதித்யாதி) "ராம: ஸத்புருஷோ லோகே ஸத்யதர்மபராயண: । ஸாக்ஷாத் ராமாத் விநிர்வ்ருத்தோ தர்மஶ்சாபி ஶ்ரியா ஸஹ" (ராமஸ்ஸத்புருஷோ லோகேஸத்யதர்மபராயண: । ஸாக்ஷாத்ராமாத்விநிர்வ்ருத்தோதர்மஶ்சாபிஶ்ரியாஸஹ) இத்யயோத்யாகாண்டே. "ஸாக்ஷாச் - ஶ்ரியா ஸஹ, ஸாக்ஷாச்-தர்ம:, ராமாத் விநிர்வ்ருத்த:" (ஸாக்ஷாத்-ஶ்ரியாஸஹ,ஸாக்ஷாத்-தர்ம:,ராமாத்விநிர்வ்ருத்த:) இத்யந்வய:. ஸ்ரீயென்று-ஸாத்யம். தர்மமென்று-சாதநம். இவ்விரண்டு மிவரிடத்தில் நின்றுமுண்டாகிறதென்றது-இவர்தாமேயாயிருப்பரென்றபடி. சாக்ஷாச்ச்ரீயோடேகூட சாக்ஷாத்தர்மமானது ராமனாலே யுண்டாச்சுதென்றர்த்தமாகையாலே யத்தையருளிச்செய்கிறார் (அவ்வவதாரேநவித்யாதி) ஏகம் சாதநபாம்பரயா சாத்யமாய், அஸ்ஸாதநத்துக்கங்கம் பரம்பரயா சாதநமாயிருக்கையாலே, அத்தை வ்யாவர்த்திக்கிறது (அவ்யவதாநேந) என்று கற்பாரிராமபிரானைக்கற்கவேண்டாவோவென்னுதே; "மற்றுங்கற்பரோ" என்கிறதென்னென்ன (கற்பாரித்யாதி) இதரநிஷேதமே ப்ரயோஜநமென்றபடி. இதரவ்யவச்சேதமாத்ரமேபோருமோ, ஆஶ்ரயியுங் கோளென்னவேண்டாவோவென்ன (ராகப்ராப்தமித்யாதி வாக்யத்வயத்தாலே) கீழே "மற்றும்" என்றதுக்கு - இதரவிஷயங்களாக வருளிச்செய்து, பரத்வாவதாராந்தரங்களாகவர்த்தாந்தரம் (மற்றுமென்று தேவதேத்யாதி) தேவதாந்தரங்களைச்சொன்னாலோவென்ன (பதரித்யாதி) அதுலெத்தைக்கழிக்கிறதென்ன (பரத்வத்தையுமித்யாதி) பரத்வத்தைக்கழிக்கிறதுக்கு த்ருஷ்டாந்தம் (பாவோநாந்யத்ரேத்யாதி) "பாவோ நாந்யத்ர கச்சதி । ஹநூமன் ..."

நிய.தாவீரஹாவோ நாந்யத்ர கச்சதி" (ஸ்நேஹோமேபரமோராஜந்த்வயிநித்யம்ப்ரதிஷ்டிதஃ । பக்திஸ்சநியதாவீரபாவோநாந்யத்ரகச்சதி) இது உத்தர ஸ்ரீராமாயணேராமம் ப்ரதிஹநூமான். ஶ்லோகத்துக்கவதாரிகை (எழுந்தருளுகிறவித்யாதி) பரமபதத்துக் கெழுந்தருளுகிற வென்றபடி. பரமசப்தார்த்தம் (அவ்வளவன்றுகாணுமென்று) (அவ்வளவன்றுகாணும்) என்றதுக்கு - இங்கேயிருந்தே யும்முடைய சாரித்ராநுபவம் பண்ணுமதொழிய, கூடவரும்படியன்று காணுமென்றபடி. "பரமஃ" என்றதுக்கு - என்னிற்காட்டில் பரமமென்று விவக்ஷித்து, அதுக்குப்ரமாணம் (என்றனித்யாதி) உன்பக்கல்நானுடையேனுன ப்ரேமம் ஆஶ்ரயபூதனுன வென்னளவிலேயடங்கிநிற்ப தன்றென்றபடி. இரண்டாந்திருவந்தாதி சாற்றுப்பாட்டு, "மாலே" இத்யாதி. (உயிரினித்யாதி) ஆத்மாவினளவன்றிக்கே, அபிநிவேசமானது பெருகாநிற்குமென்றபடி. இந்தஸ்நேஹம் வருகைக்கடி யும்முடைய ரஞ்சநீயத்வமென்று விவக்ஷித்தருளிச்செய்கிறர் (இதுதானுமித்யாதி) "நித்யம்" என்றதுக்கு பாவம் (இப்போதித்யாதி) மற்றொருபோது கொள்ளுகிறேமென்றது-ஸ்நேஹமில்லாத தசையிலே கூட்டிக்கொண்டுபோகிறேமென்றபடி. தர்மியைப்பற்றியென்றது - திருவடியுடைய ஸ்வரூபத்தைப்பற்றி யென்னுதல், "ராஜம்ஸ்த்வயி" (ராஜம்ஸ்த்வயி) என்ற - விலக்ஷணகுணவிசிஷ்டரான பெருமாளுடைய ஸ்வரூபத்தைப்பற்றி யென்னுதல். "பக்திஸ்சநியதா" (பக்திஸ்சநியதா) - பக்தியு மெப்போது முள்ளது. ஸ்நேஹத்துக்கும் பக்திக்கும் பேதமேதென்ன; அத்தலையில் குணமடியாக வருவதொரு ப்ரீதி - ஸ்நேஹமாவது ; பக்தியாவது-தாஸனுக்கு ஸ்வாமியிடத்திலே பிறப்பதோ ரநுராகவிசேஷம். சக்ரவர்த்திக்குப் பெருமாளிடத்திலுண்டான ப்ரீதி - ஸ்நேஹமாவது, இளையபெருமாளுக்குப் பெருமாளிடத்திலுண்டான ப்ரீதி - பக்தியாவது. "வீர" என்றதுக்கு பாவம் (உம்முடையவித்யாதி) "வீர" என்றதுக்கு பாவாந்தரம் (தானுமித்யாதி) அவனுகையாலே - வீரனுகையாலே. "பாவஃ - அந்யத்ர - நகச்சதி" (பாவஃ - அந்யத்ர - நகச்சதி) என்றதுக்குபாவம் (என்னைமீட்டாகிலுமித்யாதி) இதுக்கு ப்ரமாணம் (என்னுடையித்யாதி) "தானுமில்லான்" என்றதுக்கு பாவம் (சர்வசக்தியானவித்யாதி) "அந்யத்ர" (அந்யத்ர) என்றதுக்கு த்ருஷ்டாந்தம் (கண்டகண்களித்யாதி) பரமபதத்திலே யென்றுதே, "அந்யத்ர" (அந்யத்ர) என்றதுக்கு பாவம் (அந்யத்ரவென்கிறதித்யாதி) அஸஹ்யமானமைக்கு ப்ரமாணம் (மற்றுமித்யாதி) "அல்பம், அஸ்திரம்" (அல்பம், அஸ்த்திரம்) என்று புருஷார்த்தங்களை தூஷித்து, மற்று - ஆநந்தாவஹமாய் * அந்தமில் பேரின்பமாய் நிலைநின்றபுருஷார்த்தம், உண்டென்பாரென்றபடி. திரியநிருமடல். "கற்பரோ!" என்கிற ஸ்வரத்துக்கு ஸநிதர்ஶநமாக பாவம் (காட்டுங்களுமித்யாதிவாக்யத்வயம்) (இவ்விஷயத்தையொழிய) இத்யாதி அடியில்வாக்யம் - ஸ்வரத்தால் பலிதமானபாவம். (இவ்வூரிற்பிள்ளைகள் கண்டசர்க்கரையொழிய வுண்ணும்படியெங்ஙனே) என்கிற விடத்திலே - ஓரம்மையாரகத்திலே ராஜகுமாரனிளைத்துச்சென்று "ப்ரஸாதம்வேணும்" என்ன, அவளும் "உண்" என்று ப்ரசாதமிட, "அதுக்குபதம்ஶம்வேணும்" என்ன, உப்பைக் கொடுவந்திட, அவன் "கண்டசர்க்கரையில்லையோ" என்ன, அவளும் "இல்லை" என்ன, "இவ்வூரிற் பிள்ளைகள் கண்டசர்க்கரை யில்லாமலெப்படி யுண்பூர்கள்" என்று தன்னைப்போலே விசாரித்துச் சொன்னுனென்று கதை.

"முதலா" என்றதுக்கர்த்தம் (தூர்வாதித்யாதி) ஜங்கமங்களிலெறும்பு புல்லியதோ வென்ன (ப்ரஹ்மாவையித்யாதி) க்ஷுத்ரமான புல்லையுமெறும்பை

யும் ப்ரதாநமாகச் சொல்லுவானென்னென்ன (புற்பாமுதலாவித்யாதி) இவைமுற்படும்படி யென்னென்ன, த்ருஷ்டாந்தம் (வெள்ளமித்யாதி) சேதநரைப் பொகட்டுப் புல்லையு மெறும்பையும் சொல்லுகையாலே பலித்ததோ ரர்த்தவிசேஷத்தை யருளிச்செய்கிறார் (ஸ்த்தாவரங்களிலித்யாதிவாக்யத்ரயத்தாலே) ஆனால் ஜ்ஞாநம் வேண்டாவோவென்ன (சைதந்யமித்யாதி) "𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑍍𑌮𑍋𑌕𑍍𑌷𑌃" (ஜ்ஞாநாந்மோக்ஷ:) என்றுநிற்க, "ஜ்ஞாநம்வேண்டா" என்பானென்னென்ன ; மோக்ஷஹேது வான ஜ்ஞாநத்தை "வேண்டா" என்கிறதல்ல, கர்மதாரதம்ய ப்ரயுக்தமான ஜ்ஞாநத்தை "வேண்டா" என்கிறதென்கிறாராதல், கீழ்வாக்யவிவரணமாதல் (இவற்றினித்யாதி) ஆனால் ப்ரயோஜகமேதென்ன (நிருபாதிகேத்யாதி) கர்மநிபந்தநமான தாரதம்யங்க ளப்ரயோஜகமாய், அப்ரதிஷேதமாத்ரமேகொண்டு அவன் க்ருபைபலித்தவிடமுண்டோவென்ன (ஸ்ரீபரதாழ்வானையித்யாதி) கழுத்துமட்டு நீரிலேயென்றது - வ்ருக்ஷாஸ்ஸசரே என்கிறதானுவைப்பற்ற. அப்படி மரங்கள் வாடிற்றோவென்ன (அபிவ்ருக்ஷாஇத்யாதி) "𑌉𑌪𑌤𑌪𑍍𑌤𑍋𑌦𑌕𑌾𑌃" (உபதப்தோதகா:) என்றதுக்கர்த்தம் (நீரோடித்யாதி)

"ஒன்றின்றியே" - நிர்ஹேதுகமாகவென்றபடி. ஒன்றொழியாமலெல்லாவற்றையு மென்றர்த்தமானாலோவென்ன; புநருக்தமாமென்கிறார் (எல்லாவற்றையுமித்யாதி) ஆனாலதுக்கர்த்தமேதென்ன (இனியித்யாதி) "𑌦𑍇𑌶𑍋𑌽𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌮𑌧𑍁𑌕𑍍" (தேஶோயம்ஸர்வகாமதுக்) என்கிறபடியே * அயோத்தியில் வாழுகையுண்டாயிருக்க, " ஒன்றின்றியே " என்கிறதென்னென்ன (பெறுகிறதன்னித்யாதி) இத்தை கிம்புநர்ந்யாயத்தாலே சாதிக்கிறார் (பரமபக்தியோடித்யாதி) ஆனால் "𑌦𑍇𑌶𑍋𑌽𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌮𑌧𑍁𑌕𑍍" (தேஶோயம்ஸர்வகாமதுக்) என்றதுக்குக்கருத்தென்னென்ன (இனியங்கிகாரேத்யாதி) அதாவது - தேஶவாசம் வ்யாஜமாத்ரமாகையாலே, "𑌦𑍇𑌶𑍋𑌽𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌮𑌧𑍁𑌕𑍍" (தேஶோயம்ஸர்வகாமதுக்) என்றது - தேசவைபவபரமென்றபடி. சாதநமென்றது - வ்யாஜமென்றபடி. தனித்வயத்திலே "𑌬𑌦𑍍𑌧𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌪𑍁𑌟𑌂 𑌦𑍀𑌨𑌂 𑌯𑌾𑌚𑌨𑍍𑌤𑌂 𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌮𑍍" (பத்தாஞ்ஜலிபுடம்தீநம் யாசந்தம்ஶரணாகதம்) என்கிற ஶ்லோகவ்யாக்யாநம்பண்ணுமிடத்தில், "𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌮𑍍" (ஶரணாகதம்) என்றபதத்துக்கு - "'𑌤𑍇 𑌵𑌯𑌂 𑌭𑌵𑌤𑌾 𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌾 𑌭𑌵𑌦𑍍𑌵𑌿𑌷𑌯𑌵𑌾𑌸𑌿𑌨𑌃' (தேவயம்பவதாரக்ஷ்யாபவத்விஷயவாஸிந:) என்று உகந்தருளின தேஶங்களிலே யபிமாநித்து மவ்வெல்லைக்குள்ளே கிடந்துவிடுகையும் ப்ரபத்தி " என்றாரிறே.

அன்றிக்கே (இனி யங்கீகாரஹேதுவாய்) இத்யாதி வாக்யத்வயமும் - "நற்பாலயோத்தியில்வாழும்" என்றதுக் கவதாரிகையென்னவுமாம். சப்தார்த்தம் (நல்லவிடத்தையுடைத்தானவித்யாதி) "நல்லவிடத்தையுடைத்தான" என்றத்தால்பலித்தபாவம் (நிலமிதியித்யாதி) நிலமிதி-நிலஸ்வபாவம். நிலமிதிராமபக்தியைவிளைக்குமோவென்ன (தேஶோயமித்யாதி) "𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌂 𑌦𑍇𑌶𑍋𑌽𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌮𑌧𑍁𑌕𑍍 । 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌵𑌾𑌸𑌰𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌣 𑌵𑌾𑌸𑌸𑌂𑌵𑌿𑌦𑌿𑌤𑌾𑌂 𑌨𑍃𑌣𑌾𑌮𑍍" (பவித்ரம்பரமம்புண்யம்தேஶோயம்ஸர்வகாமதுக் । யஸ்மிந்வாஸரமாத்ரேண்வாஸம்விததாம்ந்ருணாம்) இதிகாருடபுராணே. நிலமிதியே ராமபக்திஜநகமானால், மந்தரைக்கு ராமபக்தியில்லாமைக்கு ஹேதுவேதென்ன (ஜ்ஞாதிதாஸீத்யாதி) "𑌜𑍍𑌞𑌾𑌤𑌿𑌦𑌾𑌸𑍀 𑌯𑌤𑍋 𑌜𑌾𑌤𑌾 𑌕𑍈𑌕𑍇𑌯𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍁 𑌸𑌹𑍋𑌷𑌿𑌤𑌾 । 𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑌂 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌸

[illegible]" (ஜ்ஞாதிதாஸீயதோஜாதா கைகேய்யாஸ்துஸஹோஷிதா। ப்ராஸாதம்சந்த்ரஸங்காஸமாருரோஹயத்ருச்சயா) இத்யயோத்யாகாண்டே. "[illegible]" (யதோஜாதா) என்றதுக்கு சங்காபூர்வகமாகபாவம் (இதுக்கித்யாதி) ஒருவிபூந்தான்கிடக்கை - அப்ரஸித்தையாய்க்கிடப்பாளொருத்தி. உக்தத்துக்கு சம்வாதம் (யதஃ ஆநஸ்ஸிதித்யாதி) அப்படி வ்யாக்யாநம்பண்ணினவனுக்குபாவம் தாம் கீழ்ச்சொன்னதேயென்கிறார் (இந்நிலத்திலித்யாதி) "[illegible]" (தேஸோயம்ஸர்வகாமதுக்) என்றதுக்கர்த்தம் (தேசந்தானேயித்யாதி) இதுகண்டதுண்டோவென்ன (இவ்வூரிலித்யாதி) இவ்வூரென்றது-கோயிலை. இவ்வூரிலவர்களென்றது - கோயிலிலே யிருக்கிறவர்களென்றபடி. பெருமாளுக்கு - பெரியபெருமாளுக்கு. தடிந்து - பூரித்து. "சத்ருசரீரம்போலே" என்றதுக்கர்த்தம் (சத்ருசரீரமித்யாதி) சத்ருசரீரம்போலே யிருக்கவென்றது - முழுச்சொல்லு. சத்ருசரீரம்போலேயென்றபடி. அவன் ப்ரயோஜநத்துக்காகத்தங்கள் ப்ராணன்களை யுபேக்ஷித்தபேருண்டோவென்ன (ராகவார்த்தே இத்யாதி) யுத்தகாண்டே. இதுக்கர்த்தம் (ப்ராணன்களித்யாதி) த்யைபண்ணுகைக்குப்ரசக்து(பல்காட்டவென்றது) உடையவருமென்றது -"[illegible]" (ராகவார்த்தே) என்றத்தைப்பற்ற. (உடையவரும் நீங்களுமொருதலையானால்) இருவரும் நமக்கேபரமானால். ஒருதலைக்கே பரமாகை. உடையவர் - சேஷிகள். சேஷியைவிட்டுங்களைக்கைக்கொள்ளப்போமோவென்றபடி. பழமைபார்க்கவேண்டாவோவென்ன (பழைமைபார்ப்பரோவித்யாதி) "[illegible]" (ந்ர்த்தோவாயதிவாத்ருப்தஃபரோஷாம்ஸரணாகதஃ। அரிஃப்ராணாந்பரித்யஜ்யரக்ஷிதவ்யஃக்ருதாத்மநா) இதியுத்தகாண்டே. கீழ்வாக்யத்துக்கு த்ருஷ்டாந்தம் (வேங்கடத்தையித்யாதி) நாய்ச்சியார் திருமொழி, "மதயானை" இத்யாதி. "பொல்லாக்குறளுருவாய்" இத்யாதி. பதி-ஸ்த்தாநம். நளிரரங்கம் - ஸ்ரமஹரமான வரங்கம். நளிர் - குளிர்த்தி. வர்த்தநம்வாழ்ச்சியென்கைக்கு ஹேதுவருளிச்செய்கிறார் (ப்ராப்யதேசத்திலித்யாதி) ப்ராப்யதேசம் பரமபதமன்றோ, இது ப்ராப்யமாகைக்கு ஹேதுவேதென்ன (நித்யப்ராப்யமானவித்யாதி) நித்யப்ராப்யவஸ்து, ஸந்நிஹிதமானால், நமக்கநுபவம்காதாசித்கமாவானேன்னென்ன (நமக்கித்யாதி) அசிர்ஸம்ஸர்க்கத்தாலே யாகவேணுமோ, விஷயஸங்கோசத்தாலேயானாலோவென்ன (தர்மியித்யாதி)

நற்பாலுக்கு - நல்லஸ்வபாவத்தை யுடைத்தாம்படி. உய்த்தனன்-நடத்தினன். புல்லெறும்பாதிகளுக் கிந்தவவஸ்தையுண்டாகக்கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (இவற்றினித்யாதிவாக்யத்வயத்தாலே) மநுஷ்யபாவனையாயிருக்கிறவிவர் நற்பாலுக்குய்க்கக்கூடுமோவென்ன (மயாத்வமித்யாதி) "[illegible]" (யாகதிர்யஜ்ஞஸீலாநாமாஹிதாக்நேஸ்சயாகதிஃ। அபராவர்த்திநாம்யாசயாசபூமிப்ரதாயிநாம்। மயாத்வம் ஸமநுஜ்ஞாதோகச்சலோகாநநுத்தமான்) இத்யாரண்யகாண்டே ஜடாயுஷம்ப்ரதிராமஃ. பண்புடைத்தன்றிறே-வருந்தத்தையுடைத்தானதன்றிறே. நான்முகனுர் நாடென்னாதே, "பெற்றநாடு" என்று விசேஷித்ததுக்குபாவம் (ராஜாவித்யாதி) கையடைப்பான - கைவசமான. பதம்செய்து - பக்வமாக்கி.

நற்பாலயோத்தியில்வாழும் - புற்பாமுதலாப் புல்லெறும்பாதியான - சராசரம் முற்றவும் - நான்முகனார்பெற்றநாட்டுளே - ஒன்றின்றியே - நற்பாலுக்குய்த்தனன், ஆகையாலே சுற்பாரிராமபிரானையல்லால் மற்றுங்கற்பரோ வித்யந்வயஃ. " 'மற்றுங்கற்பரோ' என்றவிடத்திலே - கோயில்கந்தாடைநாயன், 'திருவடியும் திருப்பாணாழ்வாரும் தொண்டரடிப்பொடியாழ்வாருங் கூடியிருக்கிறதுக்குக் கருத்து த்தெரியுமோ' என்று ஸ்ரீபாதத்தில் முதலிகளைக்கேட்க, 'அடியோங்களுக்குத்தெரிந்ததில்லை' என்ன, ஆனால் ' நாஹம் … ' (நாம்யத்ரகச்சதி) என்றும், 'மற்றொன்றினைக்காணா' என்றும், ' அச்சுவைபெறினும்வேண்டேன் ' என்றும் மூவரு மேகப்ரக்ருதிகளாகையாலே கூடவெழுந்தருளியிருக்கிறார்கள்' என்றருளிச்செய்தார்" என்று ப்ரசாதித்தருளுவர் ....*

இரண்டாம்பாட்டு.

நாட்டிற்பிறந்தவர்நாரணற்காளன்றியாவரோ
நாட்டிற்பிறந்துபடாதனபட்டுமனிசர்க்கா
நாட்டைநலியுமரக்கரைநாடித்தடிந்திட்டு
நாட்டையளித்துய்யச்செய்துநடந்தமைகேட்டுமே.

ஆறாயிரப்படி.

(நாட்டிற்பிறந்தவர்) தான் திருவவதாரம்பண்ணியருளின திருநகரியிலே வர்த்திக்கிற ஜந்துக்களைத் தன்திருவடியே தாரகபோஷக போக்யமாகப் பண்ணினானென்று மிதோரோற்றமோ; மநுஷ்ய மாத்ரத்தினுடையதுஃகம் பொறுக்கமாட்டாமை தத்விரோதி நிரஸநம்பண்ணி யருளின மஹாகுணத்தைப் பார்த்தாலென்கிறார்.

ராவணவதார்த்திகளான தேவர்களாலே யர்த்திதனாய், தனக்கு விஸத்ருஶமான மநுஷ்யலோகத்திலே தத்ஸஜாதீயனாய்வந்து திருவவதாரம்பண்ணியருளி; ஒருமநுஷ்யமாத்ரம் துஃகப்படிலும் தானதிமாத்ரதுஃகிதனாய்; தத்துஃகஹேதுபூதரான விராதப்ரப்ருதிராவண பர்யந்தரானராக்ஷஸரையெல்லாரையும், பித்ருவசநபரிபாலந வ்யாஜேநவநத்திலே யெழுந்தருளித்தேடி வதித்தருளி, இப்படிலோகத்தை ரக்ஷித்தருளி, " … " (தநிதம்நஃக்ருதம்கார்யம் - ப்ராஹ்ருஷ்டோதிவமாக்ரம) என்று ப்ரஹ்மா விண்ணப்பஞ்செய்தபோதே யெழுந்தருளாதே, ஸ்வவிப்லேஷத்தாலே விநஷ்டப்ராயமான திருநகரியில் சராசரஜந்துஜாதத்தையெல்லாம், மீண்டெழுந்தருளி யுய்யச்செய்து, பின்னைத்திருநாட்டிலே யெழுந்தருளின விம்மஹாகுணத்தைக்கேட்டும், சேதநராயிருப்பார், " ஹவாநாராயணோதேவஃ " (பவாந்நாராயணோதேவஃ) என்று சொல்லப்படுகிற தசரதாத்மஜனை நாராயணனுக் கடிமையாகாதிருக்கும்படி யெங்ஙனேயென்கிறார்............*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், அவதாரகார்யம் சமைந்தவளவிலே யெழுந்தருளுகையன்றியே பதினோராயிரமாண்டெழுந்தருளியிருந்து ரக்ஷித்த சீலாதிக்யத்தை யருளிச்செய்கிறார்.

நாட்டில் - தன்வாசியறியாத நாட்டிலே பிறந்து - ஆஶ்ரிதரர்த்தித்ததுக்காக, கர்மவஶ்யர் பிறக்குமாபோலேவந்து பிறந்து. “ராஜ்யாத் ப்ரம்ஶ:” (ராஜ்யாத் ப்ரம்ஶ:) இத்யாதியாலே, படாதன - அவர்கள் தாங்களும் படாத க்லேஶத்தை. பட்டு - பட்டு. மனிசர்க்கா - பின்பு பழிசொல்லும்படி க்ருதக்நரான மநுஷ்யர்க்காக. நாட்டை - அவர்கள் வர்த்திக்கிற நாட்டை. நலியும் - நலியக்கடவரான. அரக்கரை - ராக்ஷஸரை. நாடி - இருந்தவிடங்களிலே யாராய்ந்து சென்று. தடிந்திட்டு - கொன்றிட்டு. அநந்தரத்தில், “தஶவர்ஷஸஹஸ்ராணி தஶவர்ஷஶதாநி ச” (தஶவர்ஷஸஹஸ்ராணி தஶவர்ஷஶதாநிச) என்று - பதினோராயிரமாண்டு தன் சீலரூபசரிதங்களை யுபகரித்து, நாட்டை - நாட்டை. அளித்து - ரக்ஷித்து. உய்யச்செய்து - அபம்ருத்யு புகுராதபடி யுஜ்ஜீவிப்பித்து. நடந்தமை - பின்பு, “ஸஶரீரஸ்ஸஹாநுக:” (ஸஶரீரஸ்ஸஹாநுக:) என்கிறகணக்கிலே, அவ்வடிவோடே ஸபரிகரனாய்க்கொண் டெழுந்தருளின ப்ரகாரத்தை. கேட்டும் - ஶ்ரீராமாயணமுகத்தாலே கேட்டிருக்கச்செய்தேயும். நாட்டில் - அவன் சீலாதிகுணங்கள் நடையாடுகிற நாட்டிலே. பிறந்தவர் - பிறக்கப்பெற்றவர்கள். நாரணற்கு - “பவாந் நாராயணோ தேவ:” (பவாந்நாராயணோதேவ:) என்று நிருபாதிக சம்பந்தத்தை யுடைய சக்ரவர்த்தி திருமகனுக்கு. “பரவாநஸ்மி காகுத்ஸ்த” (பரவாநஸ்மிகாகுத்ஸ்த) என்கிற இளையபெருமாளைப்போலே, ஆள் - அடிமையாவது. அன்றி-ஒழிய. ஆவரோ - வேறொருவர்க்கடிமையாவரோ.

ஸந்தாநிபந்தநமன்றியே குணநிபந்தநமாகவும் தாஸ்யம்பண்ணவேணுமென்று கருத்து. இப்பாட்டுக்களிரண்டிலும், முதற்பாட்டில் - ரக்ஷணத்தையும், இப்பாட்டில் - புருஷார்த்தப்ரதத்வத்தையுஞ் சொல்லுவாருமுளர்.....................*

ஈடு - இரண்டாம்பாட்டு.

“ ‘மேல் சொல்லப்புகுகிற குணங்களை ப்ரக்ருத்ய பிறிற்பாட்டிற் சொன்ன குணம் குணஹாநி’ என்னும்படி மேலிற்பாட்டுக்கள் குறைநிகயந்சொல்லுகிறது” என்றருளிச்செய்வர்.

(நாட்டிற்பிறந்தவர்) இப்பாட்டில் - திருவயோத்யையிலுள்ளார் ராமகுணைகதாரகராகப் பண்ணினவளவேயோ, நாட்டிலுள்ளாருடைய விரோதிகளைப்போக்கி ரக்ஷிக்கும்படிக் கென்கிறார். (நாட்டிற்பிறந்தவர்) நாட்டிற்பிறவாதாரில்லையிறே. ராமகுணங்கள் நடையாடுமிடத்திலேபிறந்தவர்களென்கிறது. பெருமாளுடைய வெல்லையில்லாத விடமில்லையிறே [இக்ஷ்வாகூணாமியம் பூமிஸ்ஸஶைலவநகாநநா] [இக்ஷ்வாகூணாமியம் பூமிஸ்ஸஶைலவநகாநநா] [விதித்ஸ ஹி யஜ்ஞ:] [விதிதஸ்ஸஹிதர்மஜ்ஞ:] ராவணா, பெருமாளுடைய குணங்கள் கேட்டறியாயோவென்றுளி

றே. அக்குணங்கள் நடையாடாததோரிடமுண்டாகிலிறே யவ்விட மிவ ரெல்லையன்றிக்கே யிருப்பது. நாட்டில் பிறக்கையாவது - அவருடைய வெல்லைக்குள்ளே பிறந்து, அவர்தோள்நிழலிலே ஜீவிக்கை. (நாரணற் காளன்றியாவரோ) பெருமானுக்காளன்றி யாவரோவென்றபடி. ப்ரஹ் மாதிகளும் "भवान्नारायणो देवः" (பவாந்நாராயணோதேவஃ) என்றார்களிறே. "ஒருவன்சோற்றையுண்டவர்க ளவனையொழியவேறொ ருவற்குக் காரியஞ்செய்வர்களோ" என்னுமாபோலே. (நாரணற்கு) வ ணையாதே யெல்லாரோடும் பொருந்துகையும், ஆஶ்ரிதர்க்காகத் தன்னை யோக்கி வைக்கையும், அவர்களுக்காகத் தன்மார்பிலே யம்பேற்கையும், அவர்கள் விரோதிகளைப்போக்குகையும், ஆஶ்ரிதவத்ஸலனா யிருக்கையும், அவர்கள் தோஷதர்ஸநம்பண்ணிவிட்டுப் போகமாட்டாமையும், இவை யெல்லாவற்றாலும், பெருமானை - "நாராயணன்" என்னத் தட்டில்லை யிறே. (ஆளன்றியாவரோ) கீழ்ப்பாட்டிலே - "கற்பரோ" என்றது; இ ங்கே (ஆளன்றியாவரோ) என்றது-கல்வியினுடையபல மாளாகை யெ ன்கிறது. (பிறந்தவர் - ஆளன்றியாவரோ) "सृष्टस्त्वं वनवासाय" (ஸ்ருஷ்டஸ்த்வம்வநவாஸாய) என்னுமாபோலே; ஜநித்தவர்கள் ஜந்ம பலத்தை யிழப்பரோவென்றபடி. வகுத்ததுறையில் பாரதந்த்ர்ய மாகை யாலே வாசியறிந்த விவர்களுக் குத்தேஶ்யமாய்த்தோற்றுமிறே; வகாத துறைகளில்பண்ணின வாஸநையாலே "இதுபுருஷார்த்தமோ!" என்று தோற்றுகிறது.

(நாட்டிற்பிறந்து) அஸ்ப்ருஷ்ட சம்சாரகந்தனாயிருக்கிறவன், கர் மவஶ்யருங்கூட வருவருக்கும் தேசத்திலே பிறந்து. [ஸஹதேவைரித்யா தி] [स-जज्ञे-हि] [ஸ:-ஜஜ்ஞே-ஹி] "கர்மபந்தமாக ஜந்மமில்லை" என்று ப்ரமாண ப்ரஸித்தனானவன்கிடீர்! கர்மவஶ்யர்க்கு மிவ்வருகாய் வந்து பிறந்தானென்றபடி. இப்படி பிறக்கைக்கடி யென்னென்னில் [अर्थि तः] [அர்த்திதஃ] என்கிறது; அவர்களிரப்புக்காக வென்றபடி. இரப்புத் தா னிச்சையையும் பிறப்பிக்குமாகாதே!; * இச்சாக்ருஹீதமிறே. [दे वैः] [தேவைஃ] தங்கள் காரியத்துக்காக விரந்து பிறக்கப்பண்ணிக் காரியந் தலைக்கட்டினவாறே யெதிரிட்டு "ईश्वरोऽहम्" (ஈஶ்வரோ ஹம்) என்றிருப்பார்க்காகக்கிடீர். "நீணகர்நீளெரிவைத்தருளாய்" என் பர்கள் - லங்கையைச் சுட்டுத்தரவேணுமென்பர்கள். [उदीर्णस्य रावण स्य] [உதீர்ணஸ்யராவணஸ்ய] பயாவஹனானவையல், தானே வரபலத் தாலே யழியச் செய்யவேண்டும்படி விஞ்சினபடி. [वधार्थिभिः] [வதார் த்திபிஃ] தாங்கள் பட்ட நலிவாலே திருவுள்ளத்துக்குப் பொருந்தாதவ ற்றையும் விண்ணப்பஞ்செய்தார்கள். "ஒருவனை யழியச்செய்ய ஒருநா டாகப்பிழைக்குமாகிலாகாதோ" என்றழியச்செய்தானத்தனை. [अर्थि तः] [அர்த்திதஃ] * தன்னுடைச்சோதிக் கெழுந்தருளுந்தனையும் திருவுள்ளத்

திற்பட்டுக்கிடந்ததிதுவே. [அர்த்திதம்] [அர்த்திதஃ] உபாஸித்தவர்களல்ல. [மாநுஷே லோகே] [மாநுஷேலோகே] ஆக்கஞனதேவர்கள், மநுஷ்யகந்தத்துக்கு சர்திபண்ணி பூமியிலிழியவருவருத்து, ஒன்றரையோஜனைக்கவ்வருகே நின்று ஹவிஸ்ஸுக்கொள்வர்கள்; அவர்கள் மநுஷ்யஸ்த்தாநத்திலே யாம்படியான தத்த்வங்கிடீ ரிங்கேவந்து பிறந்ததென்றபடி. *மனிசர்க்குத் தேவர்போலத் தேவர்க்குந்தேவனிறே. [ஜஜ்ஞே] [ஜஜ்ஞே] ஆவிர்ப்பூதமானமாத்ரமன்று; நாட்டார் பத்துமாஸம் கர்ப்பவாஸமநுபவிக்கில் பன்னிரண்டுமாஸமிறே யிவனநுபவித்தது; "ததஶ்ச த்வாதஶே மாஸே" (ததஶ்சத்வாதஶேமாஸே) என்றும், "ஜாதோஹம் யத்தவோதராத்" (ஜாதோஹம்யத்தவோதராத்) என்றும், [விஷ்ணுஸ்ஸநாதந:] [விஷ்ணுஸ்ஸநாதநஃ] (நாட்டிற்பிறந்தித்யாதி) அகர்மவஶ்யனான தான் கர்மவஶ்யரோடே ஸஜாதீயனாய் நாட்டிலேவந்து பிறந்து; அவர்கள்படும் துஃகத்தளவன்றிக்கே, கடலுக்கக்கரையிலே யுயிரு மிக்கரையிலே யுடலுமாம்படியான ஜநகராஜபுத்ரீ விஶ்லேஷமென்ன, பெரியவுடையார்நிதநமென்ன, ஏவமாதி துஃகங்களையும்பட்டு; அதுக்குமேலே, செய்தநன்றியறியாத மனிசர்க்காக, நிரபராதமான நாட்டை நலிகிற ராவணாதிகண்டகரை, "பொருந்தார்கைவேல்நுதிபோல்பரற்பாயமெல்லடிகள்குருதிசோர - விரும்பாதகான்விரும்பி," "எவ்வாறுநடந்தனையெம்மிராமாவோ" என்கிறபடியே, அவர்களிருந்த விடங்களிலே தேடிச்சென்று கொன்று. லங்காத்வாரத்திலே விஜயஶ்ரீபரிவ்ருதராய்க்கொண் டெழுந்தருளிநிற்க; அவ்வளவிலே ப்ரஹ்மாதிதேவர்கள் வந்து, "ததிதம் ந: க்ருதம் கார்யம் ப்ரஹ்ருஷ்டோ திவமாக்ரம" (ததிதம்நக்ருதம்கார்யம் - ப்ரஹ்ருஷ்டோதிவமாக்ரம) என்று - நாங்களர்த்தித்தவையடைய வெங்களளவுபாராதே தேவர்செய்தருளிற்று, இனி * தன்னுடைச்சோதியேற வெழுந்தருளவமையுமென்ன; அவ்வளவிலே ருத்ரன், "நாடடைய தேவரீருடைய விஶ்லேஷத்தாலே விநஷ்டப்ராயமாய்க் கிடக்கிறது, திருத்தாய்மாரையும் திருத்தம்பிமாரையும் திருப்படைவீட்டிலுள்ள ஜநங்களையும், மீண்டுபுகு சிலநாளெழுந்தருளி யிருந்து ரக்ஷையாலே தட்டிரக்ஷித்தெழுந்தருளவேணும்" என்ன; "கடல்ஞாலத்தளிமிக்கான்" என்னும்படியே, பதினோராயிரமாண்டெழுந்தருளியிருந்து ரக்ஷித்தபடியைச் சொல்லுகிறது - நாட்டையளித்தென்று. இதுக்காகவிறே, முக்கண்ணனை - "ஷடர்த்தநயநஶ்ஶ்ரீமாந்" (ஷடர்த்தநயநஶ்ஶ்ரீமாந்) என்றது; இல்லையாகில், பிக்ஷுகனை "ஶ்ரீமாந்" என்ன விரகில்லையிறே. (உய்யச்செய்து) நெடுநாளிருந்து தன்னையல்லது செல்லாதபடி பண்ணி, இட்டுவைத்துப் போகாதே கூடக் கொடுபோ யுஜ்ஜீவிப்பித்தபடியைச் சொல்லுகிறது. (நடந்தமை கேட்டுமே) "திர்யக்யோநிகதாஶ்சாபி ஸர்வே ராமமநுவ்ரதா:" (திர்யக்யோநிகதாஶ்சாபிஸர்வேராமமநுவ்ரதாஃ,) "விஷ்வக்ஸேநம் தே

ஜ்ஞஶரீரஸஞ்ஹாநம்" (விவேஶவைஷ்ணவம்தேஜஸ்ஸஶரீரஸ்ஸஹ்ரா நுகঃ) என்கிறபடியே - தன்னுடனேகூடக் கொடுபோனபடியைச் சொல்லுகிறது. "இன்னவிடத்திலே கொடுபோய்வைத்தான்" என்று ஸம்ஶயிக்க வேண்டாதபடி யருளிச்செய்து வைத்தாரிறே ஆழ்வார், "அன்றுசராசரங்களை வைகுந்தத்தேற்றி" என்று - பரமபதத்தே கொடுபோனமையை. (நடந்தமைகேட்டும்) இந்த ப்ரயாணவ்ருத்தாந்தத்தைக் கேட்டும். அதாவது - பசித்தாரிளைத்தாரைப் பார்த்துக் கொடுபோகையிறே. * புண்டரீகாக்ஷ நாமசங்கீர்த்தநாம்ருதமிறே பாதேயம். "ஜிதந்தேபுண்டரீகாக்ஷ" (ஜிதந்தேபுண்டரீகாக்ஷ) என்று கொடுபோலேகாணும் போவது. * ராமঃகமலபத்ராக்ஷঃ இறே. (இப்படி யுஜ்ஜீவிப்பித்து நடந்தமைகேட்டும் - நாரணற்காளன்றியாவரோ.)

கீழ்ப்பாட்டில் - சப்தாதிவிஷயப்ரவணராய், "'ஸர்வேஶ்வரன்' என்றொருதத்த்வமுண்டு" என்று கேட்டார் வாய்க்கேட்டிருக்கிறவர்களை, தான்வந்தவதரித்துத் தன் வடிவழகாலும் குணங்களாலும் வசீகரித்துத் தன்னையல்லதறியாதபடி பண்ணினானென்று சொல்லிற்று; இப்பாட்டில்- இதோரேற்றமோ, தன்னாலல்லது செல்லாமையைப் பண்ணிப் பொகட்டுப்போகையாகிறது படுகொலைக்காரரோபாதியிறே, அங்ஙன்செய்யாதே தன்னோடேகூடக் கொடுபோய் ரக்ஷித்த குணத்துக்கென்கிறார்.........*

ஜீயர் அரும்பதம்.

இரண்டாம்பாட்டு. (நாட்டிலித்யாதி) இனிமேலுள்ள பாட்டுக்களிற் சொல்லுகிற குணங்களெல்லாம் கீழ்ச்சொன்னகுணங்களைப் பற்றவதிகமென்னு மிடந்தோன்ற வருளிச்செய்கிறார் (மேற்சொல்லப்புகுகிறவித்யாதி) ப்ரக்ருத்ய - அபேக்ஷித்தென்னுதல்.

முதற்பாட்டைப்பற்ற விரண்டாம்பாட்டி லதிகமானகுண மின்னதென்கிறார் (இப்பாட்டிலித்யாதி) (ரக்ஷிக்கும்படிக்கு) என்றவநந்தரம், அதிசயமில்லையோ (என்கிறார்) என்று கூட்டிக்கொள்வது. நாட்டிற்பிறவாதாரில்லையிறே யென்றது- சேதநராகி லொருகுறிச்சியில் பிறவாதாரில்லையிறேயென்றபடி. இவ்வாக்யத்துக்கநந்தரம், ஆனாலிதுக்கர்த்தமேதென்னில் என்றத்யாஹரித்துக்கொள்வது. பரிஹாரம் (ராமகுணங்களித்யாதி) "ராமகுணங்கள் நடையாடுகிறவிடம்" என்னவேணுமோ, பெருமாளுடைய சீமையிலேபிறந்தவர்க ளென்னவொண்ணாதோவென்ன; அதுக்கர்யதாஸித்தி யருளிச்செய்கிறார் (பெருமாளுடைய வித்யாதிவாக்யத்வயத்தாலே) "இக்ஷ்வாகூணாமியம் பூமிஸ்ஸஶைலவநகாநநா। ம்ருகபக்ஷிமநுஷ்யாணாம் நிக்ரஹப்ரக்ரஹாவபி" (இக்ஷ்வாகூணாமியம்பூமிஸ்ஸஶைலவநகாநநா। ம்ருகபக்ஷிமநுஷ்யாணாம்நிக்ரஹப்ரக்ரஹாவபி, இதி கிஷ்கிந்தாகாண்டே வாலிநம் ப்ரதிராமঃ. "ராமகுணங்கள் நடையாடுமிடத்திலே பிறந்தவர்கள்" என்றதுக்கு மர்யதாசித்தியுண்டென்கிறார் (விதிதஇத்யாதி) அதாவது - ஶத்ருகோஷ்டியிலும் குணங்கள்நடையாடுகையாலேயிவ்வர்த்தமுங்கூடாதேதென்றபடி. கீழ்ச்சொன்ன வர்யதாசித்தியிரண்டையும் சேரப்பிடித்தருளிச்செய்கிறார் (அக்குணங்களித்யாதி) ஆனால் சித்தாந்தார்த்தமேதென்ன (நாட்டிற்பிறக்கையாவதித்யாதி)

“ விதிதஸ்ஸஹிதர்மஜ்ஞஶ்ஶரணாகதவத்ஸல: । தேந மைத்ரீ பவது தே யதி ஜீவிதுமிச்சஸி ” (விதிதஸ்ஸஹிதர்மஜ்ஞஶ்ஶரணாகதவத்ஸல:।தேநமைத்ரீபவது தேயதிஜீவிதுமிச்சஸி) இதிஸுந்தரகாண்டே ராவணம் ப்ரதிஸீதா. “நாரணன் என்றால் பெருமானைக்காட்டுமோவென்ன (ப்ரஹ்மாதிகளுமித்யாதி) “ ஭வாந் நாராயணோ தேவ: ஶ்ரீமாம்ஶ்சக்ராயுதோ விபு: । ஏகஶ்ருங்கோ வராஹஸ்த்வம் பூதபவ்யஸபத்நஜித் ” (பவாந்நாராயணோதேவஶ் ஶ்ரீமாம்ஶ்சக்ராயுதோவிபு: । ஏகஶ்ருங்கோவராஹஸ்த்வம் பூதபவ்யஸபத்நஜித்) இதி ராவணவதாநந்தரோ ராமம் ப்ரதிப்ரஹ்மா. நாட்டிற்பிறந்தால் நாரணனற்காளாகவேணுமோவென்ன (ஒருவன்சோற்றையித்யாதி) இவர் “ நாரணன் ” என்கைக்கு-கீழேப்ரமாணங்காட்டி, உபபத்திகாட்டுகிறார் (வரையாதேயித்யாதி) வரையாதே - தாரதம்யம்பாராதே. ஒக்கிவைக்கை - ஆக்கிவைக்கை. கீழே - “ கற்பரோ ” என்றுசொல்லி, இங்கே - “ ஆளன்றியாவரோ ” என்றதால் பலிந்ததோரர்த்தவிசேஷம் (கீழ்ப்பாட்டிலேயித்யாதி) “ பிறந்தவர் - ஆளன்றியாவரோ ” என்றதால் பலித்தவர்த்தம் (ஸ்ருஷ்டஸ்த்வமித்யாதி) “ ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய ஸ்வநுரக்தஸ்ஸுஹ்ருஜ்ஜநே ” (ஸ்ருஷ்டஸ்த்வம்வநவாஸாயஸ்வநுரக்தஸ்ஸுஹ்ருஜ்ஜநே) இத்யாதி லக்ஷ்மணம்ப்ரதிஸுமித்ரா. “ ஸர்வம் பரவஶம் து:கம் ” (ஸர்வம்பரவஶம்து:கம்) என்று - பாரதந்த்ர்யம் து:கரூபமாயிருக்க, இத்தைக்கல்விக்குபலமாகச் சொல்லலாமோவென்ன (வருத்ததுறையித்யாதி) இவர்களுக்கு - ஆழ்வார்களுக்கு. நமக்கப்படி தோற்றவில்லையேயென்ன (வகாதவித்யாதி) வகாததுறை - அப்ராப்தவிஷயம்.

இங்கேவந்து பிறந்தது குணமாகைக் குறுப்பாக, அவனுடையமேன்மையையும் சம்சாரத்தினுடைய தன்மையையு மருளிச்செய்கிறார் (அஸ்ப்ருஷ்டேத்யாதி) அப்படிபிறந்தானோவென்ன, ப்ரமாணம் (ஸஹிதேத்யாதி) “ ஸஹி தேவைருதீர்ணஸ்ய ராவணஸ்ய வதார்த்திபி: । அர்த்திதோ மாநுஷே லோகே ஜஜ்ஞே விஷ்ணுஸ்ஸநாதந: ” (ஸஹிதேவைருதீர்ணஸ்ய ராவணஸ்யவதார்த்திபி: । அர்த்திதோமாநுஷேலோகே ஜஜ்ஞேவிஷ்ணுஸ்ஸநாதந:) இத்யயோத்யாகாண்டே வால்மீகி:. ஸ: - ப்ரஸித்திபரமானதச் சப்தத்துக்கு உக்தார்த்தத்திலே நோக்கென்கைக்காக, “ ஸஹி - ஜஜ்ஞே ” (ஸஹி-ஜஜ்ஞே) என்றந்வயித்து, இரண்டுக்கும்ர்த்தம் (கர்மநிபந்தநமானவித்யாதி)“ஆத்மமாயயா - ஸம்பவாமி ” (ஆத்மமாயயா - ஸம்பவாமி) என்னுகிறக, “ இரப்பாலேபிறந்தான் ” என்கிறதென்னென்ன (இரப்புத்தானித்யாதி) “ இச்சையாலேயவதரிக்கும் ” என்னுமதுக்கு ப்ரமாணம் (இச்சாக்ருஹீதவிறேயென்று) “ இச்சாக்ருஹீதாபிமதோருதேஹ: ” (இச்சாக்ருஹீதாபிமதோருதேஹ:) இத்யாதி. இரக்கிறவர்கள் தான் திருவடி திருவநந்தாழ்வானல்ல, தர்மாநிகளாய் ஸ்வகார்ய பரரானவர்கள் கிடீ! றென்கிறார் (தங்கள் கார்யத்துக்கித்யாதி) “ ஸ்வகார்யபரர் ” என்னுமதுக்கு ப்ரமாணம் (நீணகரித்யாதி) பாசுரத்துக்கர்த்தம் (லங்கையையித்யாதி) * ராவணசப்தார்த்தம் (பயாவஹனனவென்று) “ ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம் ” (ஸுஹ்ருதம்ஸர்வபூதாநாம்) என்றிருக்கிறவனை யிதுக்காக வர்த்திக்கலாமோவென்ன (தாங்கள்பட்டவித்யாதி) தன்றிருவுள்ளத்துக்குப் பொருந்தாதத்தைச் செய்வானென்னென்ன (ஒருவனையித்யாதி) “ அர்த்தித: ” (அர்த்தித:) என்ற பூதார்த்ததாத்பர்யம் (தன்னுடைச்சோதியித்யாதி) அதாவது - “ யதீத்ருஶ: ” (யதீத்ருஶ:) இத்யாதிப்படியே பிறப்

டோமென்று புண்படுகிறனென்றபடி. பாவாந்தரம் (உபாசித்தவர்களல்லவென்று) "விஷ்ணு:" என்று - அவன் பெருமையையும், பிறந்த ஸ்த்தலத்தின் கொடுமையை யுமருளிச்செய்கிறார். (ஆக்கனைவித்யாதிவாக்யத்வயத்தாலே) ஆக்கனை-ஸ்ருஜ்ய ரான. "அவர்கள் மநுஷ்யஸ்த்தாநத்திலே யாம்படியான தத்த்வம்" என்றதுக்கு ப்ரமாணம் (மனிசர்க்கித்யாதி) "ஜஜ்ஞே" (ஜஜ்ஞே) என்றதுக்கு பாவம் (ஆவிர்ப்பூதமித்யாதி) பிறந்ததுக்கு ப்ரமாணாந்தரம் (ஜாதோஹமித்யாதி) "ஸ்துதோஹம் யத்த்வயா பூர்வம் புத்ரார்த்திநா ததத்ய தே । ஸபலம் தேவிஸஞ்ஜாதம் ஜாதோஹம் யத்தவோதராத்" (ஸ்துதோஹம்யத்த்வயாபூர்வம் புத்ரார்த்திந்யாததத்யதே। ஸபலம்தேவிஸஞ்ஜாதம் ஜாதோஹம்யத்தவோதராத்) இதி பஞ்சமேம்ஸே த்ருதீயே. "நாட்டிற்பிறந்து" என்று தொடங்கி, "நாட்டையளித்து" என்னுமளவும் சப்தார்த்தமருளிச்செய்வதாக (நாட்டிற்பிறந்தித்யாதி) என்கிறார். "பிறந்து" என்றதுக்கு பாவம் (அகர்மவஶ்யனைவித்யாதி) "மனிசர்க்கா-தடிந்திட்டு" என்றந்வயிப்பது. தடிந்திட்டு - (கொன்று)

(அளிமிக்கானென்னும்படியே) தயாளுவாகையாலே யென்று கூட்டுவது. இதுக்காகவிறே யென்றது - "எழுந்தருளியிரும்" என்று சொன்னதுக்காகவிறே யென்றபடி. "ஶ்ரீமாந்" (ஶ்ரீமாந்) என்றதுக்கு - இது பாவமாகவேணுமோ வென்ன (இல்லையாகிலித்யாதி)

"ததஶ்ச த்வாதஶே மாஸே சைத்ரே நாவமிகே திதௌ" (ததஶ்சத்வாதஶேமாஸேசைத்ரேநாவமிகேதிதௌ) இத்யாதி, "கௌஸல்யாஜநயத்ராமம் ஸர்வலக்ஷணஸம்யுதம்" (கௌஸல்யாஜநயத்ராமம் ஸர்வலக்ஷணஸம்யுதம்) இத்யந்தம் பாலகாண்டேஷ்டாதஶே. பெருமாள் திருமொழி (பொருந்தாரித்யாதி) சத்ருக்கள் கையில் வேல்முனையிட்டேர்ந்தாப்போலே சுக்கான் பரல்களானவை பாய. பரல்களிலே மிதிக்கையாலே (மெல்லடிக்கள் குருதிசோர) ம்ருதுவான திருவடிகள் ரக்தங்களைப் புறப்படவிட. (விரும்பாதகான்விரும்பி) சுகுமாரரல்லாதவரும் விரும்பாதகாட்டை, "நான் போகச்சொன்னேன்" என்னுமத்தாலே விரும்பி. (எவ்வாறுநடந்தனை) எப்படி நடந்துபோனீரென்றபடி. இந்தப்பாசுரம் "வெவ்வாயேன்" என்கிறபாட்டிலே. (ததிதமிதி) "ததிதம் ந: க்ருதம் கார்யம் த்வயா தர்மப்ருதாம் வர । நிஹதோ ராவணோ ராம ப்ரஹ்ருஷ்டோ திவமாக்ரம" (ததிதம்ந: க்ருதம்கார்யம்த்யாதர்மப்ருதாம்வர । நிஹதோராவணோராமப்ரஹ்ருஷ்டோதிவமாக்ரம) இதி ப்ரஹ்மா. "இதம் ஶுபகரம் வாக்யம் வ்யாஜஹார மஹேஶ்வர: । ஆஶ்வாஸ்ய பரதம் தீநம் கௌஸல்யாம் ச யஶஸ்விநீம்" (இதம்ஶுபகரம்வாக்யம் வ்யாஜஹாரமஹேஶ்வர: । ஆஶ்வாஸ்யபரதம்தீநம் கௌஸல்யாம்சயஶஸ்விநீம்)இத்யாரப்ய, "நந்தயித்வா ஸுஹ்ருஜ்ஜநம்" (நந்தயித்வாஸுஹ்ருஜ்ஜநம்) என்னுமளவும் கடாக்ஷித்து (அவ்வளவிலே ருத்ரனித்யாதி, எழுந்தருளவேணுமென்ன வென்னுமளவும்) "ஷடர்த்தநயநஶ்ஶ்ரீமாந் மஹாதேவோ வ்ருஷத்வஜ:" (ஷடர்த்தநயநஶ்ஶ்ரீமாந் மஹாதேவோவ்ருஷத்வஜ:) இதி ராவணவதாநந்தரே.

"நடந்தமை" என்றதுக்கு பாவம் (திர்யகித்யாதி) "நோச்ச்வாஸிதம் அயோத்யாயாம் ஸுஸூக்ஷ்மமபி த்ருஶ்யதே । திர்யக்யோநிகதாஶ்சாபி ஸர்வே ராமமநுவ்ரதா:," (நோச்ச்வாஸிதமயோத்யாயாம் ஸுஸூக்ஷ்மமபித்ரு

ஸ்யதே । திர்யக்யோநிகதாஸ்சாபி ஸர்வேராமமநுவ்ரதா:,) "விதாதேஹவ ஸ்ருஷ்டாவிநிஸ்ஸ்ருத்ய தேஹாநேதில்விஷ்வ ஸ்வைஷ்ணவம்தேஜ ஸ்ஸ்ரீரஸஹஸ்ஹ நாஸம்" (பிதாமஹவசஸ்ஸ்ருத்வாவிநிஸ்சித்யமஹாமதி: । விவேஸவைஷ்ணவ தேஜஸ்ஸஸரீரஸ்ஸஹாநுக:) இத்யுத்தரஸ்ரீராமாயணே. ராமாயணநிகளிலே "ப் ஹ்மலோகத்திலொருப்ரதேசத்திலே வைத்தான்" என்றிருக்கிறதேயென்ன (இ னவிடத்திலே யித்யாதி) (அன்று சராசரங்களையித்யாதி) பெருமாள் திருமொழி ஸ்பஷ்டோர்த்த:. ஸஹஸ்ரநாமபாஷ்யத்திலே "ஸ்த்யாவா நிகாமம் வ ஜேஷ்வரிக்ரஹ:" (ருதஸ்ஸநாமகாலபரமேஷ்டீபரிக்ரஹ:) என்ற டத்திலே, "பரிக்ரஹ:" (பரிக்ரஹ:) என்றதுக்கு - "அத்ர அத்ர அவப தோக்ரஹ: அஸ்வே ஜிவபரிக்ரஹ: - ஸ்வஸம்பந்திபௌரஜாநபதத ரவாஸ்த்வேவதாராமதஸ்தூர்வாதேரபிபரமபதப்ராபணத்" (அத்ரசதத்ரசபரிதோக்ரஹ: அஸ்யேதிபரிக்ரஹ: - ஸ்வஸம்பந்திபௌரஜாநபதத ந்திரவாஸ்துதேவதாராமதருதூர்வாதேரபிபரமபதப்ராபணத்) என்றுரிறேபட்டர் "நடந்தமை" - நடந்த ப்ரகாரமென்றபடி. நடந்தப்ரகாரமேதென்ன (அதாவதி த்யாதி) பசித்தாரிஜீத்தாரையென்று - முழுச்சொல்லு. அத்யந்தமார்த்தரையென் றபடி. அவன்பார்வை தாரகமோவென்ன, ப்ரமாணம் (புண்டரீகாக்ஷேத்யாதி) "ஸஹஸ்ராம்ஸ்ருதயாநம் த்ருஷ்டாதஸ்ஸ்ருஷ்டுமேவதஸாஹ் । பாசேயம்ப ண்டரீகாக்ஷ நாமஸங்கீர்த்தநாம்ருதம்." (கச்சதாம்தூரமத்வாநம் த்ருஷ்ணாமூர்ச்சி தசேதஸாம் । பாதேயம்புண்டரீகாக்ஷ நாமஸங்கீர்த்தநாம்ருதம்.) பலிதம் (ஜிதந்த இத்யாதி) பெருமாள் புண்டரீகாக்ஷரோவென்ன (ராம இத்யாதி) "ராமகமல பத்ராக்ஷ ஸர்வஸத்த்வமநோஹர: । ரூபதாக்ஷிண்யஸம்பந்ந: ப்ரஸூதோ ஜநகாத்மஜே" (ராம:கமலபத்ராக்ஷஸ் ஸர்வஸத்த்வமநோஹர: । ரூபதாக்ஷி ண்யஸம்பந்ந: ப்ரஸூதோஜநகாத்மஜே) இதி சுந்தரகாண்டே ஸீதாம் ப்ரதி ஹநூ மான்.

இப்பாட்டுக் கவதாரிகையிற் சொன்ன தாத்பர்யமொழிய தாத்பர்யாந்தரம் (கீழிற்பாட்டிலித்யாதி)

நாட்டிற்பிறந்தவர் - நாட்டிற்பிறந்தென்று தொடங்கி, கேட்டும் - நாரண ற்காளன்றியாவரோ வித்யந்வய:. ....*

மூன்றாம்பாட்டு.

கேட்பார்கள்கேசவன்கீர்த்தியல்லான்மற்றுங்கேட்பரோ
கேட்பார்செவிசுடுகீழ்மைவசவுகளேவையுஞ்
சேட்பாற்பழம்பகைவன்சிசுபாலன்றிருவடி
தாட்பாலடைந்ததன்மையறிவாரையறிந்துமே.

ஆறாயிரப்படி.

(கேட்பார்கள்) மநுஷ்யமாத்ர துஃகிரஸகம்பண்ணியருளு மிது தானொருகுணமோ, ப்ரதிகூலனான சிசுபாலனுக்குங்கூடத் தன்றிருவடி களைக்கொடுத்த விம்மஹாகுணத்தைப்பார்த்தாலென்கிறார்.

ஸ்வபரிவாத ஶ்ரவணைகபோகரான ப்ரதிகூலருடைய செவிகளும் வேம்படி பருஷபாஷணபரனாய் ப்ரதிபவ மிம்மஹாபராதயுக்தனாயிருந்த சிசுபாலனுக்குங்கூடத் தன்திருவடிகளைக்கொடுத்தருளின இஸ்ஸ்வபாவத்தை யறிவாரையறிந்துவைத்தும், * ஸம்ஸ்ரவே மதுரமாயிருப்பதொன்றைக்கேட்கவேண்டி யிருப்பார், அவர்கள் பக்கலிலேசென்று இக்குணத்தையன்றி மற்றுமொன்றைக்கேட்பரோவென்கிறார்.....................*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், அநிஷ்டத்தை நிரஸித்து ரக்ஷித்தவளவன்றியே, அநிஷ்டகாரியான சிசுபாலனுக்கு மோக்ஷத்தைக் கொடுத்த குணாதிக்யத்தை யருளிச்செய்கிறார்.

கேட்பார்செவி - "பகவத்குணஹாநிகேட்கவேணும்" என்றபிசந்திபண்ணியிருக்கு மவர்கள்செவிக்கு. சுடு - அக்நிகல்பமாம்படி சுடக்கடவதாய். கீழ்மை - நிகர்ஷாபாதகமான. வசவுகளே - பருஷோக்திகளையே சொல்லி. வையும் - வையுமவனாய். ஹிரண்யராவணஜந்மங்களையே தொடங்கி, சேட்பால் - தூரகாலஸ்த்தனாய்க்கொண்டு. பழம் - பழையதாக. பகைவன் - பகைவனாய்ப்போருகிற. சிசுபாலன்-சிசுபாலனானவன். திருவடி - நிருபாதிக ஸ்வாமியான க்ருஷ்ணனுடைய. தாட்பால் - திருவடிகளிடத்திலே. அடைந்த - சாயுஜ்யத்தை ப்ராபித்த. தன்மை - அசாதாரணஸ்வபாவத்தை. அறிவாரை - அறிவாரான ஜ்ஞாநாதிகரை. அறிந்தும் - அறிந்துவைத்திருக்கச்செய்தேயும். கேட்பார்கள் - தங்களுக்குஜ்ஜீவநப்ரகாரத்தைக்கேட்கவேண்டி யிருக்குமவர்கள். அவ்வறிவுடையார் பக்கலிலே, கேசவன் - கேசிஹந்தாவான க்ருஷ்ணனுடைய. கீர்த்தி - * ப்ரதிபவமபராத்தாவுக்கு மோக்ஷப்ரதையான மௌக்த்யகீர்த்தியை. அல்லால் - ஒழிய. மற்றும் - விலக்காதார்க்கு மோக்ஷங்கொடுத்த வ்யக்த்யந்தரத்தை. கேட்பரோ - கேட்பரோ. ....*

ஈடு - மூன்றாம்பாட்டு.

சிசுபாலனையு முட்படத்தன்திருவடிகளிலே சேர்த்துக்கொண்ட பரமக்ருபையையறிந்தவர்கள், கேசிஹந்தாவினுடைய கீர்த்தியை யொழியவேறொன்றைக்கேட்பரோ வென்கிறார்.

(கேட்பார்கள்) கீழே - " கற்பரோ " என்றது - அதாவது - முதல் நடுவு இறுதிதன்னெஞ்சிலே யூற்றிருக்கும்படி வாசநைபண்ணுகையாயிற்று; இனி, கேட்கையாவது-வாசநைபண்ணினானொருவனொரர்த்தத்தையுபபாதித்தால், அத்தைபுத்திபண்ணி விஶ்வஸித்திருக்கை. நடுவிருந்தநாளுநாளும் தன்னெஞ்சு தெளிவுபிறந்ததில்லையே யாகிலும், விழுக்காட்டிலிருவர்க்கும் பலமொத்திருக்கக்கடவது. கற்றிலனாகிலும் கேட்கவேண்டுவதுண்டிறே - கற்றுத்தெளியக்கண்டவர்த்தத்தைக் கேட்டு விஶ்வசித்திருக்கை. கல்வியுமதின் பலரூபமானகைங்கர்யத்திலு மந்வயிக்கப்பெற்றிலனாகிலும், ஆசார்யன்பக்கலிலே யோரர்த்தத்தைக் கேட்டமாத்ரமாயிருந்தாலும் தனக்கோராபத்திலே யுதவுகைக்கொருகுறையில்லை. இனி, தன்னிழவு - பரப்ரதிபாதந சக்தியில்லாமையும், தன்னெஞ்சு தெளியாமையால் வருவதுமேயிறேயுள்ளது. (கேட்பார்கள்) செவியில் தொளையுடையவர்கள். பகவத்குணங்கள் கேட்கையிறே செவிக்கு ப்ரயோஜ

நம்; "கேளாச்செவிகள்செவியல்லகேட்டாமே" என்னுநின்றதிறே, எறும்புவனையோபாதியிறே. (கேசவன்கீர்த்தியல்லால்) விரோதிநிரஸநசீலனை க்ருஷ்ணன்கீர்த்தியல்லது வேறேசிலவற்றைக்கேட்பரோ. பருவம் நிரம்பிக்கற்ற பின்பல்லவிரோதிகளைப்போக்கிற்று; பூதனைதொடக்கமானவிரோதிகளைத் தொட்டிற்பருவத்தேயிறே போக்கிற்று. விரோதிநிரஸநந்தான்ஜ்ஞாததயாவன்று, சத்தயாபாதகமா யிருக்கிறபடி. நஞ்சுகொல்லுகிறதறிவுண்டாயல்லவிறே.[𑌵𑍍𑌯𑌾𑌧𑌿𑌤𑌾𑌸𑍍𑌯𑍋 𑌮𑌹𑌾𑌰𑍌𑌦𑍍𑌰𑌃 𑌸𑍋𑌽𑌸𑍁𑌰𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑌬𑌾𑌹𑍁𑌨𑌾" (வ்யாதிதாஸ்யோமஹாரௌத்ரஸ் ஸோஸுர:க்ருஷ்ணபாஹுநா) கேசியானவன், வாயையங்காந்துகொண்டு, கண்டாரெல்லாரும் நடுங்கும்படி வந்து தோற்ற; முக்தராயிருப்பார் த்வாரங்கண்டவிடத்தே கைநீட்டக்கடவதாயிருக்குமிறே, அந்தவாசனையாலே யிவன் வாய்க்குள்ளேகையைநீட்ட, அபூர்வாநுபவத்தாலே கைவிம்ம வளர்ந்துகொடுத்தது; அப்போதிடியேறுண்டமரம்போலே யிருபிளவாய்விழுந்தான் (மற்றுங்கேட்பரோ) கீழ்ச்சொன்ன ராமவ்ருத்தாந்தந்தான் கேட்பரோ. இவர் ஸ்வபாவமிருந்தபடியென்!. "இராமபிரானையல்லால் மற்றுங்கற்பரோ" என்றார் - கீழ், இங்கே - "கேசவன்கீர்த்தியல்லால் மற்றுங்கேட்பரோ" என்னுநின்றார்; இதுதனக்கடியென்னென்னில்; அவ்வவதாரத்தை யநுசந்தித்தபோது "தயரதற்குமகன்றன்னையன்றி மற்றிலேன்தஞ்சமாக" என்பர், இவ்வவதாரத்தை யநுசந்தித்தபோது "நங்கண்ணன்கண்ணல்லதில்லையோர்கண்ணே" என்பர்; இப்படியிழிந்த துறைகள்தோறுமழுந்த வல்லாரொருவரிறே. ஒரோகுணங்களை யநுபவிக்கப்புக்கால் குணாந்தரங்களில் கால் வாங்கமாட்டாதாப்போலே யாயிற்று, ஒரோவவதாரத்திலே யிழிந்தால் அவதாராந்தரங்களில் போகமாட்டாமையும்.

(கேட்பார்செவிசுடு கீழ்மைவசவுகளேவையும்) இதற்குக்கீழ்- "கேட்பார்" என்றதுபோலல்ல, கீழ்மைவசவுகளே கேட்பாரிறே - இங்கு. பகவந்நிந்தைக்கு ஜீவநம் வைத்துக்கேட்கும் தண்ணியவர்களுங்கூடப்பொறுக்கமாட்டாமை செவிபுதைத்து, "இத்தனை யதிரச்சொன்னாய், இப்படிசொல்லப்பெறுய்காண்" என்று சொல்லும்படியான வசவுகளே வைகை.(வசவுகளேவையும்) அநுகூலராயிருப்பார்க்கு மசித்ஸம்ஸர்க்கத்தாலே ப்ராமாதிகமாகவு மொரு ப்ராதிகூல்யம் விளையுமிறே; அப்படியே இவனுக்கும் யாத்ருச்சிகமாக வொரு நல்வார்த்தையும் கலசுமோ வென்னில் ; அதுவு மில்லை யென்கிறது - ஏவகாரத்தாலே. அதுக்கடி சொல்லுகிறது மேல் (சேட்பால் பழம்பகைவன்) மிகவும் ஜந்மஸத்ருவென்றபடி. இந்தஜந்மமே யன்றிக்கே பூர்வஜந்மமே தொடங்கி சத்ருவாய்ப் போருகிறானிறே - இவனேரோஜந்மங்களிலே பண்ணின ப்ராதிகூல்யத்துக்கோ ரளவில்லையிறே; இப்படிப்பட்ட ஜந்மந்தா னநேகம். அவ்வவஜந்மங்களிலுண்டான காலத்தின்மிகுதியும், பண்ணின ப்ராதிகூ

ல்யத்தினுடைய மிகுதியும், இவையெல்லாவற்றையும் நினைக்கிறது-பகையினுடைய பழமையாலே அபுத்திபூர்வகமாகச்சொல்லிலும் வாசனையாலே தப்பாதென்கை. அன்றீன்றகன்று அப்போதே தாய்முலையிலே வாய்வைக்குமதஜ்ஜந்மத்திலே வாசனைகொண்டன்றிறே; இவனுக்கு மிஜ்ஜந்மத்திலே பகவந்நிந்தைக்கடி-ஜந்மாந்தரவாசனையிறே. (திருவடிதாட்பாலடைந்த) சர்வஸ்வாமியுடைய பாதபார்ஶ்வத்தைக்கிட்டின. சாயுஜ்யலக்ஷண மோக்ஷமாகிறது தானின்னதென்கிறது. அதாவது - விச்சேதமின்றிக்கே கிட்டிநின்று நித்யகைங்கர்யம்பண்ணப்பெறுகை. "ப்ரஹ்மவேத ப்ரஹ்மைவ பவதி" (ப்ரஹ்மவேதப்ரஹ்மைவபவதி) என்றும், "பரமம் ஸாம்யமுபைதி" (பரமம்ஸாம்யமுபைதி) என்றும், "தம்மையேயொக்கவருள்செய்வர்" என்றும், "மம ஸாதர்ம்யமாகதா:" (மமஸாதர்ம்யமாகதா:) என்றும், "ஸமானோ ஜ்யோதிஷா" (ஸமானோஜ்யோதிஷா) என்றும் சொல்லுகிறவற்றால் - வஸ்த்வைக்யம்சொல்லுகிறதன்று, பேற்றில்வந்தாலவனோடிவனுக்கு சர்வதா சாம்யமுண்டென்கிறது, "ஜகத்வ்யாபாரவர்ஜம்" (ஜகத்வ்யாபாரவர்ஜம்) "போகமாத்ர ஸாம்யலிங்காச்ச" (போகமாத்ரஸாம்யலிங்காச்ச) என்றும் சொல்லுகையாலே. சாயுஜ்யமாகிறது - "அவனோடொன்றும்" என்கிறதன்று, அவன்றிருவடிகளிலே பரிசர்யைபண்ணுமென்கிறது; "ஸாயுஜ்யம் ப்ரதிபந்நாயே தீவ்ரபக்தாஸ் தபஸ்விந: । கிங்கரா மம தே நித்யம் பவந்தி நிருபத்ரவா:" (ஸாயுஜ்யம் ப்ரதிபந்நாயே தீவ்ரபக்தாஸ்தபஸ்விந: । கிம்கராமமதேநித்யம் பவந்திநிருபத்ரவா:) என்றுஞ்சொல்லுகையாலே. (தன்மையறிவாரையறிந்துமே) கேட்பார்க்குவிஷயமுண்டாக்குகிறார். இந்த குணஜ்ஞாநமுடையாரையறிந்து, (அவர்கள்பக்கலிலேசெவிதாழ்த்து) வைத்தும் - கேட்பார்கள் கேசவன்கீர்த்தியல்லால் மற்றுங்கேட்பரோ.

•

இவன் திருவடிகளைக் கிட்டிற்றென்கொண் டென்னில்; திருநாமங்களைச்சொல்லி த்வங்கரிக்கையும், கையுந்திருவாழியுமானவழகை யந்திமதசையிலே ஸ்மரிக்கவுங் கூடுமிறே. மேலெழ வாராய்ந்துபார்த்தால் சிலஹேது சொல்லலாம், இதுக்கினியோருபபத்தி தேடிச்சொல்லுகையாவ தவன் க்ருபைக் கொருகொத்தை சொல்லுகையிறே. "சர்வேஶ்வரன் க்ருபையாலே சிசுபாலன் திருவடிகளைப்பெற்றான்" என்று ஆழ்வார்களும் ருஷிகளுமெல்லாரும் சொல்லிக்கொண்டு போருவர்களிறே. இவன்பக்கலிலே பரமபக்திபர்யந்தமாக வுண்டானாலும், "அதுக்கும் கரணசம்பத்திகொடுத்தானீஶ்வரனன்றோ" என்று அதுவும் கழியாநிற்க, வருந்தியில்லாததொன்றுண்டாக்குகை பணியன்றிறே. ஆளவந்தார் "சிசுபாலன் பெற்றிலன்காண்" என்றருளிச்செய்வர்; "அதுவென்னென்னில், இதுக்கடியாகச் சொல்லலாவதொரு சாதந மிவன்கையி லில்லாமையாலே; நாட்டை நலியாமைக்குக் கொற்றவன்வாசலுக்குள்ளே சுழற்றியெ

ரிந்தானத்தனைகாண்" என்றருளிச்செய்வர். "காகம், திருமுன்பே யெ ய்த்துவிழுகையாலும், இவன் திருநாமங்களைச்சொல்லி த்வங்கரிக்கையா லும், அவன்குணங்கள் நினைத்தபடி விஸ்த்ருதமாகப்பெருதே சங்குசிதங் களாயிற்றின" என்றிறே சொல்லுகிறது; "ஸஹிஷ்ணு ஜிஷ்ணுஸ்ய கரா ணாம் ... " (பலிபுஜி ஸிஸுபாலேதாத்ருகாகஸ்கரேவா குணலவஸஹவாஸாத்த்வத்க்ஷமா ஸங் குசந்தி) என்கையாலே. "பலபலநாழுஞ்சொல்லிப்பழித்தசிசுபாலன்ற ன்னை, யலைவலைமைதவிர்த்தவழகன்" என்றுரிறேபெரியாழ்வாரும். "வை துநின்னைவல்லவாபழித்தவர்க்கும்" இத்யாதி. இப்பாட்டு மேலற்றமாகிற து - "தன்னுலல்லதுசெல்லாமை விளைந்தாரைக்கூடக் கொடுபோனுன்" என்றதோரேற்றமோ, தன்பக்கலபராதம்பண்ணின சிசுபாலனுக்கு மவர் கள்பேற்றைக் கொடுத்ததுக்கென்றபடி. ....*

ஜீயர் அரும்பதம்.

மூன்றும்பாட்டு. (கேட்பார்களித்யாதி) "சிசுபாலன்திருவடி" என்று தொடங்கி, "அதிந்தும்-கேட்பார்கள் கேசவன்கீர்த்தியல்லால் மற்றுங்கேட்பரோ" என்றபதங்களைக் கடாக்ஷித்தவதாரிகை (சிசுபாலனையுமித்யாதி)

கீழே - "கற்பார்" என்றுர், இங்கே - "கேட்பார்" என்கிறுர்; இரண்டுக் கும் பேதமேதென்ன (கீழேயித்யாதி) அதாவது - கற்கையாவதென்றபடி. ஊற் றிருக்கும்படி - மாருதே யநுவர்த்திக்கும்படி. ஆறு லாசார்யசந்நிதியிலே ஸம்ஸய விபர்யயமறக் கற்றவனுக்கொழியக் கேட்டவனுக்கு முஜ்ஜீவநமுண்டோ வென்ன (நடுவிருந்தவித்யாதி) விழுக்காட்டில் - பர்யவசாநகதியிலே யென்றபடி. இருவர்க் கும் - கற்றவர்க்கும் கேட்டவர்க்கும். பலம்-பகவத்ப்ராப்தி. கல்லாதவனுக்கு ஸ்ர வணுதிகாரந்தானுண்டோவென்ன (கற்றிலனுகிலுமித்யாதி) ஏதத்விவரணம் (கற் றுத்தெளியவித்யாதி) "நடுவிருந்த" இத்யாதிவாக்யவிவரணம் (கல்வியுமித்யாதி) அதின் பலரூபமான கைங்கர்யமாவது - பிறரையும் தங்களோபாதி யப்யாசத்துக்க திகாரிகளாக்கி யீஸ்வரன் திருவடிகளிலே சேர்த்து, அவனுக்கு முகவிகாஸத்தைப் பண்ணுகை யென்றபடி. (தனக்கோராபத்திலே யுதவுகைக்கொருகுறையில்லை)என் கிறவிடத்திலே - "ஸமேதாந்யேவ ... ஸர்வாணி ... ...

... (அங்யேத்வேவமஜா நந்தஸ்ஸ்ருத்வாந்யேப்யஉபாஸதே।தேபிசாதிதரந்த்யேவம்ருத்யும்ஸ்ருதிபராயணுः) என்கிற ஸ்லோகமநுசந்தேயம். ஸ்ரோதாவுக்கிப்படி பலமுண்டானவோபாதி, இ ங்கிருக்கிற நாலுநாளு மிரண்டிழவு முண்டென்கிறுர் (இனித்தன்னிழவித்யாதி) "கேசவன்கீர்த்தியல்லால் மற்றுங்கேட்பரோ" என்கையாலே - செவிக்கு ப்ரயோ ஜநமிதென்கிறுர் (செவியிற்றுளையித்யாதி) "செவிக்கு ப்ரயோஜநம்" என்றதின் வ்யதிரேகசித்தமான வர்த்தத்தை யருளிச்செய்கிறுர் (கேளாச்செவிகளித்யாதி) திருமொழி பதினேராம்பத்து ஏழாந்திருமொழி யிரண்டாம்பாட்டு, "நீள்வான்" இத்யாதி. அவன்கீர்த்தியைக்கேளாத செவிகள் செவியல்லவென்றபடி. "செவிய ல்ல" என்பானென், ரந்த்ரமிருக்கிறதேயென்ன (எறும்புவளையித்யாதி) க்ருஷ்ண னென்னுதே, "கேசவன்" என்றதுக்கு பாவம் (விரோதீத்யாதி) விரோதி நிரஸந

சீலமானபடியை விவரிக்கிறார் (பருவம்நிரம்பி யித்யாதி வாக்யத்வயத்தாலே) கற்றபின்பல்ல - ஜ்ஞாநம்பிறந்தபின்பல்லவென்றபடி. இத்தால் பலித்தவர்த்தமாதல், விவரணமாதல் (விரோதிநிரசநந்தாளித்யாதி) ஸத்யாபாதகமென்றது-ஸத்தாப்ரயுக்தமென்றபடி. இது கூடுமோவென்ன (நஞ்சித்யாதி) கேசியை சம்ஹரித்ததுக்கு ப்ரமாணம் (வ்யாதிதாஸ்யஇத்யாதி) "வ்யாதிதாஸ்யோ மஹாரௌத்ரஸ்ஸோஸுரக்ருஷ்ணபாஹுநா | நிபபாதத்விதாபூதோ வைத்யுதேநயதாத்ருமஃ" (வ்யாதிதாஸ்யோமஹாரௌத்ரஸ்ஸோஸுரக்ருஷ்ணபாஹுநா | நிபபாதத்விதாபூதோ வைத்யுதேநயதாத்ருமஃ) இதி பஞ்சமேம்ஸே ஷோடஸே. அங்காந்துகொண்டு - திறந்துகொண்டு. பாஹுப்யாம் என்றுதே, "பாஹுநாத்விதாபூதஃ" (பாஹுநாத்விதாபூதஃ) என்றதுக்கு பாவம் (முக்தராயிருப்பாரித்யாதி) விம்ம - அதிகமாக. பெருக்கவென்றபடி. "மற்றும்" என்றதுக்கு - இதரவிஷயங்களாக (செவியிற்றுளை) இத்யாதிவாக்யத்திலே யருளிச்செய்து, அவதாராந்தரமாக வர்த்தாந்தரம் (கீழ்ச்சொன்னவித்யாதி) வ்யாக்யாதாவினுடைய (இவர்ஸ்வபாவமித்யாதி) ஒவ்வொன்றி லிவர்க்குண்டான ப்ராவண்யாதிசயஞ்சொல்லுகிறதாகையாலே விரோதமில்லையென்று விவக்ஷித் தந்தரமருளிச்செய்கிறார் (அவ்வவதாரத்தை யித்யாதிவாக்யத்ரயத்தாலே) ஒரோவவதாரங்களிலிவர்க்குண்டான ப்ராவண்யாதிசயத்தை ஸத்ருஷ்டாந்தமாக த்ருடீகரிக்கிறார் (ஒரோகுணங்களையித்யாதி)

"பகவத்குணங்களைக்கேட்பார் செவிசுடு" என்றால் இவன்பருஷோக்தியின் க்ரௌர்யம் சித்தியாதென்று திருவுள்ளம்பற்றி, "கேட்பார்" என்றதுக்கு வேறேயர்த்தமருளிச்செய்கிறார் (இதுக்குக் கீழித்யாதி) இதுக்குக் கருத்து - கீழ் "கேட்பார்கள்" என்றதுக்கு - (செவியிற்றுளையுடையவர்கள்) என்றாப்போலே யிங்கும் சொல்லப்போகாது, அர்த்தௌசித்யத்துக்காகவென்றபடி. "கீழ்மைவசவுகளே - கேட்பார்செவிசுடுகீழ்மைவசவுகளேவையும்" என்று, "கீழ்மைவசவுகள்" என்றத்தை யிரண்டிடத்திலுங் கூட்டுவது. இப்படி சொல்லுகிறதுக்குபாவ மிவன்வசவின் க்ரௌர்யம் சித்திக்கைக்காக வென்கிறார் (பகவந்நிந்தைக்கித்யாதி) தண்ணியவர்களும் - நிக்ருஷ்டரும். அதிர - நடுங்க. அவதாரணார்த்தம் (அநுகூலராயித்யாதி)

"சேட்பால்பழம்பகைவன்" என்றதுக்குபாவம் (மிகவுமித்யாதி) சேழ்ப்பழம்பகையைப் பாலாகவுடையவன்; "சேழ்" என்று - மிகுதியாய், மிகவும் பழையதான பகையை ஸ்வபாவமாக வுடையவனென்று சப்தார்த்தம். மிகவும் ஜந்மஸித்துவானபடி யென்னென்ன (இந்தஜந்மமித்யாதி) விவரணம் (இவனோரோவித்யாதி) பகையினுடைய பழமைசொன்னதுக்கு ப்ரயோஜநமேதென்ன (அவ்வவஜந்மங்களிலித்யாதி) பலிதம் (அபுத்திபூர்வகமாகவித்யாதி) இஜ்ஜந்மத்தில் வாசனையாலே யாணோவென்ன (அன்றின்றவித்யாதி)

"தாட்பாலடைந்த" என்கையாலே - சாயுஜ்யமாவது ஐக்யமன்றென்று பரிஹரிக்கிறார் (சாயுஜ்யலக்ஷணேத்யாதி வாக்யத்வயத்தாலே) (ப்ரஹ்மைவ) என்றவிடத்தில் ஏவகாரம் - "விஷ்ணோரேவபூத்வா" (விஷ்ணோரேவபூத்வா) என்றவிடத்திற்போலே, "ஸாம்யமுபைதி" (ஸாம்யமுபைதி) இத்யாதிவசநாநுகுணமாக, இவசப்தார்த்தத்தைக் காட்டுகிறது. ஜ்யோதிஷா - பரமாத்மநேத்யர்த்தஃ. மோக்ஷமாவ தைக்யமன்றென்கைக்கு ப்ரமாணாந்தரம் (ஜகத்வ்யாபாரேத்யாதி) "நித்யகைங்கர்யம்பண்ணப்பெறுகை" என்றத்தை விவரிக்கிறார் (சாயுஜ்யமா

கிறித்யாதி) “ [illegible] ” (யுஜ்யத இதியுக்-குணஃ, ஸமாநாஃயுஜஃயயோஸ்தௌ-ஸயுஜௌ, ஸயுஜோர்ப்பாவஃ-ஸாயுஜ்யம்) என்று பாஷ்யோக்தலக்ஷணம். சாயுஜ்யமென்று கைங்கர்யத்தைச்சொல்லுமோவென்ன, ப்ரமாணம் (சாயுஜ்யம்ப்ரதிபந்நாஇத்யாதி)

“ [illegible] ” (புண்யபாபேவிதூய நிரஞ்ஜநஃ பரமம்ஸாம்யமுபைதி) இதி முண்டோபநிஷதி. “ [illegible] ” (இதம்ஜ்ஞாநமபாஶ்ரித்ய மமஸாதர்ம்யமாகதாஃ) இத்யாதி கீதாயாம். “ [illegible] ” (ஜகத்வ்யாபாரவர்ஜம் ஸமாநோஜ்யோதிஷா) இதிவ்ருத்திஃ. “ [illegible] ,” (ஜகத்வ்யாபாரவர்ஜம் ப்ரகரணாதஸந்நிஹிதத்வாச்ச,) “ [illegible] ” (போகமாத்ரஸாம்யலிங்காச்ச) இதி ப்ரஹ்மமீமாம்ஸாயாம். (தம்மையே யொக்க வருள்செய்வர்) தம்மோடு ஸாம்யாபத்தியைத் தந்தருளுவரித்யர்த்தஃ. திருமொழி. “ [illegible] ” (ஸாயுஜ்யம்ப்ரதிபந்நாயே) இத்யாதிக்கு ஆகரங்கண்டு கொள்வது.

தன்மையறிந்துமென்னுதே, “ நன்மையறிவாரையறிந்தும் ” என்றதுக்கு பாவமேதென்ன (கேட்பார்க்கிந்யாதி) அதாவது - ஓராசார்யன்பக்கலிலே கேட்கவேண்டுகையாலே, அடியிலே “ கேட்பார்கள் ” என்றவர்களுக்கு, “ தன்மையறிவாரை ” என்று கேட்கைக்கு விஷயமுண்டாக்குகிறு ரென்றபடி. கீழ்வாக்யத்தை விவரியாநிற்கச்செய்தேயு மந்வயமுங்காட்டுகிருர் (இந்தகுணஜ்ஞாநமித்யாதி) தன்மை - ஸ்வபாவம். குணமென்றபடி.

த்வேஷபரனான சிசுபாலன், திருவடிகளைக் கிட்டுகைக்கு ஹேதுவேதென்கிற சங்கையை யநுவதிக்கிருர் (இவனித்யாதி) ஹேதுவையருளிச்செய்கிருர் (திருநாமங்களையித்யாதி) த்வங்கரிக்கையும், வடிவழகை ஸ்மரிக்கையுமாகிற வித்தையொரு ஹேதுவாகச் சொல்லவேணுமோ ; “ சத்ருஸாதநமுண்டு ” என்று கார்யத்தைக்கொண் டநுமித்தாலோ வென்கிற சங்கையை யுட்கொண்டு பரிஹரிக்கிருர் (மேலெழவித்யாதிவாக்யத்வயத்தாலே) நிர்ஹேதுகமென்கிற தென்கொண்டென்ன (ஸர்வேஸ்வரனித்யாதி) த்வங்கரிக்கைமுதலானவை தான் சத்ருஸாதநமானாலோ வென்ன (இவன்பக்கலிலேயித்யாதி) சிசுபாலனைப்போலே நாமும் வைது மோக்ஷம்பெறலாமேயென்ன; “ அதுமோக்ஷமன்று ” என்கைக்கு சம்வாதம் (ஆளவந்தாரித்யாதிவாக்யத்ரயத்தாலே) சாதநமிவன்கையி லில்லாமையாலே - அர்த்தித்வ மில்லாமையாலே யென்றபடி. எப்படியாகிலும் பெற்றானேயென்ன (நாட்டையித்யாதி) கொற்றவன் - ஸ்வாமி. “இதுக்கினியொருபபத்தி தேடிச் சொல்லுகையாவது அவன் க்ருபைக்குக் கொத்தை சொல்லுகை” என்றதுக்கு ப்ரமாணங்காட்டுவாராக, ததர்த்தத்தை யருளிச்செய்கிருர் (காகமித்யாதி) ப்ரமாணந்தன்னை யருளிச்செய்கிருர் (பலிபுஜீத்யாதி) ஸ்ரீரங்கராஜஸ்தவே. “ [illegible] ” (மயிகுணபரமாணுதந்துசிந்தாநபிஜ்ஞே விஹரதுவரதாஸௌஸர்வதாஸார்வபௌமீ) இத்யுத்தரார்த்தம். (சர்வேஸ்வரன் க்ருபையாலே சிசுபாலன் திருவடிகளைப்பெற்றானென் றும்

வார்களருளிச்செய்தார்கள்) என்றார் - கீழே; அவர்களருளிச்செய்த தெங்கேயெ ன்ன (பலபலவித்யாதி) "சிசுபாலன் நிர்ஹேதுகமாக மோக்ஷம்பெற்றான்" என்ற தக்கு ப்ரமாணம் (வைதுநின்னையித்யாதி) கீழ்ப்பாட்டைப்பற்ற விப்பாட்டுக் கா திக்யமேதென்ன (இப்பாட்டிலேற்றமாகிறதித்யாதி)

பெரியாழ்வார்திருமொழி நாலாம்பத்து மூன்றாந்திருமொழி அஞ்சாம்பாட் டு, "பலபலநாழும்" இத்யாதி. இதுக்கர்த்தம் - பலபல குற்றங்களையும் சொல்லி நிந்தித்த சிசுபாலன்றன்னை; (அலைவலைமைதவிர்த்தவழகன்) சரமதசையிலே தன் னழகைக்காட்டித் தன்னளவி லவனுடைய த்வேஷத்தை மாற்றுகையாலே, "தா ன்" என்றால் நிந்தித்துக்கொண்டு மலைவலைத்தனத்தைப் போக்கி ரக்ஷித்த வழகை யுடையவனென்றபடி. திருச்சந்தவிருத்தம் நூற்றுப்பதினோராம்பாட்டு (வைதுநி ன்னை) புகழப்படுமுன்னைப் பருஷித்து; (வல்லவாபழித்தவர்க்கும்) சக்தியுள்ளவரா வும் நிந்தித்தவர்களாய் ; (மாறில்போர்செய்து நின்னசெற்றதீயில்வெந்தவர்க்கும்) எதிரில்லாத யுத்தத்தைப்பண்ணி, உன் கோபாக்நியாலே தக்தரான சிசுபாலன்வாலி முதலானார்க்கும்; (வந்துனை) வந்தென்னை ; (எய்தலாகுமென்பர்) சர்வாதிகனான வுன்னை வந்து ப்ராபிக்கலாமென்று ருஷிகள் சொல்லாநின்றார்கள். "ஹரவனுஉ வஙீதஸு ஹறியெஙவ ஷுஉபெயயள" (பகவந்தமுபநீதஸ்தஸ்மிந்நேவலயமுப யயௌ) என்று சிசுபாலமோக்ஷத்தை ஸ்ரீபராசரபகவான் சொன்னான். "ராமெ வாணாஸநக்ஷிவு உாவஹ நராஂமதிஂ" (ராமபாணாஸநக்ஷிப்த மாவஹத்ப ரமாம்கதிம்) என்று வாலியினுடைய பரகதியைச் சொன்னான் ஸ்ரீவால்மீகிபகவா னென்றபடி. கேட்பார்கள் - கேட்பார் செவிசுடு என்று தொடங்கி, தன்மையறிவா ரை யறிந்தும் - கேசவன்கீர்த்தியல்லால் மற்றுங்கேட்பரோவித்யந்வயஃ............*

நான்காம்பாட்டு.

தன்மையறிபவர்தாமவற்காளன்றியாவரோ
பன்மைப்படர்பொருளாதுமில்பாழ்நெடுங்காலத்து
நன்மைப்புனற்பண்ணிநான்முகனைப்பண்ணித்தன்னுள்ளே
தொன்மைமயக்கியதோற்றியசூழல்கள்சிந்தித்தே.

ஆறாயிரப்படி.

(தன்மையறிபவர்) ப்ரதிகூலனான சிசுபாலனை ரக்ஷித்தருளினா னென்னுமிதுதானொருகுணமோ, அஸங்க்யேய ப்ரதிகூலாநுகூல சகலஜ ந்துஜாதத்துக்குமசேஷ புருஷார்த்தசாதநபூதகரண களேபராத்யுபகரண ப்ரதாநம்பண்ணின மஹாகுணத்தைப் பார்த்தாலென்கிறார்.

தேவாதிஸ்த்தாவராந்த நிகிலஜந்துக்களும் த்விபரார்த்தகாலம்ஸ வஸ்மிந் ப்ரலீநமாய் சேதநேதராயமாணமாய் சகலபுருஷார்த்த சூந்ய மாயிருக்க, ஸ்வகீயநிரவதிக காருண்யத்தாலே, சலிலசதுர்முகாதி சே தநாசேதந சமஸ்தவஸ்துக்களையும் தன்னுடைய சங்கல்பமாத்ரத்தா லேஸ்ருஷ்டித்தருளின விம்மஹாகுணத்தை யநுசந்தித்தால், சமஸ்த

வஸ்துயாதாத்ம்யத்தை யறிவாரந்தப் பரமகாருணிகனுக்கன்றி யாளாவ ரோ வென்கிறார்...*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், இல்லாதஜகத்தையுண்டாக்கின வதிசயத்தையநுசந்தித்தருளுகிறார். பன்மை - பலவகைப்பட்ட தேவாதிபேதங்களை யுடைத்தாய். படர் - புண்யபாபாநுரூபமாகவிஸ்தீர்ணமான. பொருள் - பதார்த்தங்களெல்லாம். ஆதும்-ஒன்றும். இல் - இன்றியே. பாழ் - சூந்யமாய்க்கிடந்த. நெடுங்காலத்து - த்விபரார்த்த காலாவஸாநத்திலே. நன்மை-பூதாந்தர ஸம்ஸ்ருஷ்டமாய், கார்யோத்பத்திஹேதுவான நன்மையையுடைத்தான. புனல் - காரணஜலத்தை. பண்ணி - "அவஏவ ஸஸர்ஜாதௌ", (அபஏவஸஸர்ஜாதௌ) என்கிறகணக்கிலே ஸ்ருஷ்டித்து "தஸ்மிந்ஜஜ்ஞே ஸ்வயம்ப்ராஹ்மா" (ததண்டமபவத்தைமம்-தஸ்மிந்ஜஜ்ஞேஸ்வயம்ப்ராஹ்மா) என்கிறமர்யாதையிலே அஜ்ஜலத்திலே யுத்பந்நமான அண்டத்திலே. நான்முகனை - ப்ரஹ்மாவை. பண்ணி - ஸ்ருஷ்டித்து. இந்தசமஷ்டி ஸ்ருஷ்ட்யநந்தரம், தொன்மை - பூர்வவாசநையழியும்படி. தன்னுள்ளே தன் ஸ்வரூபைகதேசமாத்திலே. மயக்கிய - "ஸர்வமிதம்" (ஏகீபவதி) என்கிறபடியே மயங்குவித்துக்கிடந்த சமஸ்தபதார்த்தங்களையும், தோற்றிய-விபக்தமாம்படிஸ்ருஷ்டிமுகத்தாலேதோற்றுவித்த. சூழல்கள்-ஈக்ஷணஸ்ருஷ்ட்யநுப்ரவேச நாமரூபவ்யாகரணங்கள்தொடக்கமானவிரகுகளை. சிந்தித்து-வேதாந்தமுகத்தாலேயநுசந்தித்து. தன்மை-அவனுடைய வஸாதாரணலக்ஷணமான காரணமான ஸ்வபாவத்தை. அறிபவர்-அறியுமவர்கள். தாம்-தங்கள் தத்த்வஜ்ஞாநவைபவாநுரூபமாக. அவற்கு-"க்ருஷ்ணஏவ ஹிலோகாநாமுத்பத்தி:" (க்ருஷ்ணஏவஹிலோகாநாமுத்பத்தி:) என்று ஜகத்காரணபூதனனக்ருஷ்ணனுக்கு. அன்றி - ஒழிய. வேறொருவர்க்கு, ஆள்-ஆள். ஆவரோ - ஆவரோ...*

ஈடு - நான்காம்பாட்டு.

சிசுபாலனுக்குத் தன்னைக்கொடுத்ததோ ரேற்றமோ, ப்ரளயத்திலே மங்கிக்கிடந்த ஜகத்தையுண்டாக்கின விம்மஹாகுணத்துக் கென்கிறார். சிசுபாலனிற்குறைந்தாரில்லையிறே சம்சாரிகளில்.

(தன்மையறிபவர்தாம்) தத்த்வஸ்த்திதியறியுமவர்தாம். அதாவது இதினுடையவுத்பத்தி யவனுக்காகக் கண்டதென்றிருக்குமவர்கள்; * ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாயபோலே. ஜகத்காரணவஸ்துவே யுபாஸ்யமென்றறியுமவர்கள்; * காரணந்துத்யேய:இறே, "அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா" (அதாதோப்ரஹ்மஜிஜ்ஞாஸா) என்று "ஜந்மாத்யஸ்யயத:" (ஜந்மாத்யஸ்யயத:) என்றுநின்றதிறே. (அவற்காளன்றியாவரோ) கரணகளேபரங்களைக்கொடுத்தது தனக்கடிமைசெய்கைக்கிறே.

(பன்மைப்படர்பொருளாதுமில்பாழ் நெடுங்காலத்து) தேவாதிபேதத்தாலே பலவகைப்பட்டு, கர்மாநுகுணமாக விஸ்த்ருதமான பதார்த்தங்களொன்றுமில்லாதகாலத்து. தேவதிர்யகாதிரூபேண வுண்டாகக்

கடவஸ்துக்க ளொன்றுமில்லாதபடி பாழ்கூவிக்கிடக்கிற நெடுங்காலத்து. ஈஶ்வரன்ஜகத்தை ஸம்ஹரித்து நெடுங்காலம் பாழ் கூவிக்கிடக்கும்படி யிட்டுவைக்கும். கர்ஷகனானவன் விளைநிலமுவர்கழியும்படி நீரைத்தேக்கி வைக்குமாபோலே, இவற்றினுடைய துர்வாசனைபோகைக்காக ஸ்ருஷ்டியோபாதிகாலம் ஸம்ஹரித்திட்டுவைக்கும். கண்ணுக்கிட வொருதுரும்பில்லாதபடி ஸதவஸ்த்தமானகாலத்து. (நன்மைப்புனல்பண்ணி) அழிக்கப்பரப்பின நீர்போலல்ல. "அப ஏவ ஸஸர்ஜாதௌ" (அபஏவ ஸஸர்ஜாதௌ) என்கிறபடியே முற்படஜலஸ்ருஷ்டியைப்பண்ணி. இவ்வளவும்வர வசித்தைக்கொண்டுகார்யங்கொண்டு, "இவையிரண்டும் நம் புத்பதீனமானபின்பு இனிச்சித்தையுங்கொண்டு கார்யங்கொள்ளுவோம்" என்றுபார்த்து சதுர்முகனையும் ஸ்ருஷ்டித்து. "யஸ்யாத்மா ஶரீரம்" (யஸ்யாத்மாஶரீரம்) "யஸ்ய ப்ருதிவீ ஶரீரம்" (யஸ்யப்ருதிவீசரீரம்) என்று இரண்டுமிவனுக்குறுப்பாய் பரதந்த்ரமாயிறேயிருப்பது. "யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்" (யோப்ரஹ்மாணம்விததாதிபூர்வம்) (நன்மைப்புனல்பண்ணி நான்முகனைப்பண்ணியென்று) "ஒருகுழமணனைப்பண்ணி" என்பாரைப்போலே. (தன்னுள்ளே) தன் சங்கல்பசஹஸ்ரைகதேஶத்திலே. (தொன்மையித்யாதி) பழையதாக, "ஸதேவ" என்கிறபடியே - தாமென்கிறசொல்லுக்குள்ளேயாம்படி பண்ணியிட்டுவைத்து, பின்னை "பஹுஸ்யாம்" (பஹுஸ்யாம்) என்கிறபடியேயிவற்றையாவிர்ப்பவிப்பித்தவிரகுகளைச்சிந்தித்து-தத்த்வஸ்த்திதியறியுமவர்கள் அவனையொழியவேறேசிலர்க்காளாவரோ. (தன்மை-உண்மை. புனலென்றது - மற்றவற்றுக்குமுபலக்ஷணம். தோற்றிய - தோற்றுவித்த.) விரோதியான சிசுபாலனுக்குத் தன்றிருவடிகளைக் கொடுத்தானென்றது, இதோரேற்றமோ விரோதிகளையுண்டாக்கித் தன்னைவைவித்துக்கொண்ட நீர்மைக்கென்கிறார். பன்மைப்படர்பொருள் - தன்னுள்ளே தொன்மையயக்கிய - ஆதுமில்பாழ்நெடுங்காலத்து நன்மைப்புனல்பண்ணி நான்முகனைப்பண்ணி - தோற்றியசூழல்கள்சிந்தித்து - தன்மையறிபவர் தாமவற்காளன்றியாவரோ வென்றந்வயம்..................................*

ஜீயர் அரும்பதம்.

நாலாம்பாட்டு (தன்மையித்யாதி) "ஆதுமில் பாழ்நெடுங்காலத்து" என்றுதொடங்கி "தோற்றிய சூழல்கள்" என்னுமளவுங்கடாக்ஷித்தவதாரிகை (சிசுபாலனுக்கித்யாதி) உண்டாக்கினது மஹாகுணமானபடியென், அவனைப்போலேயெல்லாரும் வைத்துக்கொண்டிருந்தார்களோவென்ன (சிசுபாலனித்யாதி)

தத்வஸ்திதியாவதேதென்ன (அதாவதித்யாதி) அவனுக்காகக்கண்டது - அவனுடைய கைங்கர்யத்துக்குடலாக ஸ்ருஷ்டமாயிற்றென்றபடி. இதுக்கு த்ருஷ்டாந்தம் (ஸ்ருஷ்டஸ்த்வமித்யாதி) "தன்மையறிபவர்" என்றதுக்கர்த்தாந்தரம் (ஜகத்காரணேத்யாதி) "காரணவஸ்துவேயுபாஸ்யம்" என்னுமதுக்கு ஶ்ருதிசூத்ரங்

கள் (காரணத்வித்யாதி) "இதினுடையவுத்பத்தியவனுக்காகக்கண்டது" என்கிற வாக்யார்த்தமாகவர்த்தம் (கரணேத்யாதி) இப்போது, "அவற்காளன்றியாவரோ" என்றதுக்கு - கரணகளேபரங்களைக்கொடுத்தவற்கொழிய வேறொருவர்க்காளாவரோவென்று சப்தார்த்தம். "தன்மையறிபவர்" என்றதுக்கு - "காரணவஸ்துவே யுபாஸ்யமென்றறியுமவர்கள்" என்றர்த்தமானபோது, "அவர்க்காளன்றியாவரோ" என்றதுக்கு-காரணபூதனானவனுக்கொழிய வேறொருவர்க்காளாவரோவென்று சப்தார்த்தம். இந்தவர்த்தம் இருபத்தாலாயிரத்திலே கண்டுகொள்வது.

விவரணம் (தேவதிர்யகாதித்யாதி) நெடுங்காலம் பாழாகவிட்டுவைக்கிறதேதுக்கென்ன (ஈஸ்வரனித்யாதிவாக்யத்வயம்) உவர்கழியும்படி - சவர்கழியும்படி. "ஆதுமில்" என்றதுக்கர்த்தம் (கண்ணுக்கிடவித்யாதி) கண்ணுக்கிட வொருதுரும்பில்லாதபடி-கண்ணாலேகாண்கைக் கொன்றுமில்லாதபடி யித்யர்த்தஃ.

புனலுக்குநன்மையேதென்ன (அழிக்கவித்யாதி) முந்தற ஜலஸ்ருஷ்டியைச்சொன்னதுக்கு ப்ரமாணம் (அபஏவேத்யாதி) இவ்வளவும் வரவென்றது-அண்டஸ்ருஷ்டிபர்யந்தமென்றபடி. இவையிரண்டும் - நெறித்துக்களிரண்டும். இரண்டும் தன்புத்ரபதிரமோவென்ன, ப்ரமாணம் (யஸ்யாத்மேத்யாதி) சேதநஸ்ருஷ்டியில் முந்தற ப்ரஹ்மஸ்ருஷ்டியைச்சொன்னதுக்குப்ரமாணம் (யோப்ரஹ்மாணமித்யாதி) ஸ்ருஷ்டித்தானென்னுதே, "பண்ணி" என்றதுக்குபாவம் (நன்மைப்புனலித்யாதி) குழமணன் - மரப்பாச்சி.

மயங்கல்-கூடலாய், (இட்டுவைத்து) என்றபடி. தோற்றிய-தோற்றுவித்த.

கீழ்ப்பாட்டி லிதுக்கார்க்யமேதென்ன (விரோதியான வித்யாதிவாக்யத்வயம்) "ஆதுமில்பாழ்நெடுங்காலத்து - மயக்கிய" என்று - ஸம்ஹாரத்திலும், "நான்முகனைப்பண்ணி - தோற்றிய" என்று - ஸ்ருஷ்டியிலும் தோற்றுகிற புநருக்திகளைப் பரிஹரிக்கைக்காக வந்வயம் (பன்மையித்யாதி) மயக்கிய-மயக்குகையாலேயென்றபடி...*

ஐந்தாம்பாட்டு.

சூழல்கள்சிந்திக்கின்மாயன்கழலன்றிச்சூழ்வரோ
வாழப்பெரும்புனறன்னுளழுந்தியஞாலத்தைத்
தாழப்படாமற்றன்பாலொருகோட்டிடைத்தான்கொண்ட
கேழற்றிருவுருவாயிற்றுக்கேட்டுமுணர்ந்துமே.

ஆறாயிரப்படி.

(சூழல்கள்) கிணற்றிலேவிழுந்த தன்னுடைய ப்ரஜையை மாதாவானவள் வாத்ஸல்யாதிசயத்தாலே விழுந்தெடுக்குமாபோலே, ரஸாதலத்திலே நிமக்நையான ப்ருதிவியை வராஹரூபதாநாய் க்ஷணத்திலேசென்று முழுகியெடுத்தருளின விம்மஹாகுணத்தைக்கேட்டு, ப்ரஸ்துதமானத்தை ஸ்மரித்திருந்துவைத்து; "தங்களுக்கொரு புருஷார்த்தஸாதநத்தைச்செய்யவேண்டும்" என்று நினைக்கில், அந்தவாப்ஸர்ய பூதனானவனுடைய திருவடிகளையல்ல தாப்ரயிப்பரோவென்கிறார்.......................*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், அழிந்தஜகத்தையுண்டாக்கினவளவன்றியே, தன்வடிவை யழிய மாறியு மாபத்ஸகனான ஸ்ரீவராஹரூபியினுடைய வ்ருத்தாந்தத்தை யருளிச்செய்கிறார்.

நிலம் நீர் எரிகால் விண் - ப்ருதிவ்யாதிபூதபஞ்சகமும். உயிர் - பௌதிகசரீரவிசிஷ்டமான ப்ராணிவர்க்கமும். என்று-ஆகிற. இவைதான் - இவை. முதலா-முதலாக. முற்றும் - சமஸ்தபதார்த்தங்களும். ஆய் - ப்ரகாரமாம்படி. நின்ற-நின்ற. எந்தாய் - ஸ்வாமியாய். அந்த சாமாந்யரக்ஷணமன்றியே, அவதாரப்ரயுக்தவிசேஷரக்ஷணமான, ஆநிரை - பசுத்திரளை. மேய்த்து - மேய்த்து. அதுக்கு வர்ஷத்தால் வந்த பாதை தீரும்படி, குன்று - மலையை. எடுத்து - எடுத்து. அவை - அவை. காத்த - காத்த. எங்கூத்தா - மநோஹாரி சேஷ்டிதத்தை யெனக்கு ப்ரகாசிப்பித்தவனே. அரன் - ருத்ரனும். நான்முகன் - ப்ரஹ்மாவும். ஏத்தும் - ஸ்துதிக்கும்படியாய். செய்ய - தர்ஶநீயமான. நின் - உன். திருப்பாதத்தை - திருவடிகளை. யான்-அநந்யப்ரயோஜநனான நான். சேர்வது - சேர்வது. என்றுகொல்-என்றோ. அந்தோ-ஐயோ!.

ப்ரயோஜநாந்தரபரர்க்கும் சுலபமான திருவடிகளை, அநந்யப்ரயோஜநனான நான் கிட்டுகைக்குக் கூப்பிடவேண்டுவதே யென்று கருத்து......................*

ஈடு - இரண்டாம்பாட்டு.

அந்யபரராய்ப் புறம்பே தாரகாதிகளாம்படியிருக்கிறவர்களுக்குங்கூட ஸ்ப்ருஹணீயமாம்படி யிருக்கிற திருவடிகளை, அநந்யபரனாயிதுவே ப்ரயோஜநமாக விருக்கிற நானென்று பெறக்கடவேனென்கிறார்.

(என்றுகொல்) திருக்கையில் ஸ்பர்ஶசுகத்தை யபேக்ஷித்து, “என்றுகொல்சேர்வது” என்றவளவிறே - கீழ்; அதுக்கொரு ப்ரதிவசநம் பெறாதேயிருக்க, “என்றுகொல்சேர்வது” என்கிற தென்னதசைதான். (அந்தோ) இனி, “என்றுகொல்சேர்வது” என்பாரு மின்றியே யொழியக்கிடாய்ப்புகுகிறது ; நான் முடிந்தேனென்கிறார். (அந்தோ!) என்கிற ஸ்வரத்தாலே - தம்முடைய வாற்றாமையை யாவிஷ்கரிக்கிறார். (அரன் நான்முகனேத்தும் செய்யநின்திருப்பாதத்தை) அழிப்பாருடனுக்குவாருடன் வாசியற வுகக்கும்படியான திருவடிகளை. ப்ரயோஜநாந்தரபரர்க்குங்கூட ஸ்ப்ருஹணீயமாம்படியிருக்கிற திருவடிகளை, அநந்யப்ரயோஜநனான நானென்று பெறக்கடவேன். தந்தாமுடைய தொழில்களிலே யந்யபரராயிருக்கிற ப்ரஹ்மாதிகளு மநந்யபரராயேத்தும்படி ஸ்ப்ருஹணீ

மாய்ச் சிவந்திருந்துள்ள வுன் திருவடிகளை, அநந்யபரனானநான் கிட்டப் பெறுவதென்றோ. அரன் நான்முகனேத்தும் செய்யநின்றிருப்பாதத்தை யான் - என்றுகொல் சேர்வது.

(நிலநீரித்யாதி) பெற்றபின்பு நோக்குகை யன்றிக்கே "ப்ரஜையைப்பெறவேணும்" என்று ஏற்கவே வருந்தும் தாயைப்போலே, ஸ்ருஷ்டிக்குமுன்பே யிவற்றை யுண்டாக்குகைக்காக த்ரிவ்ருத்கரணத்தை நினைத்து பஞ்சீகரணத்தைப்பண்ணி, இவற்றையடைய ஸ்ருஷ்டித்து, ஸ்ருஷ்டமான பதார்த்தங்களுடைய வஸ்துத்வ நாமபாக்த்வங்களுக்காக ஜீவத்வாரா அநுப்ரவேசித்து, பின்னை யிவற்றைச்சொன்ன பாசுரம், அசித்தும் அசிதபிமாநிஜீவனும் ஜீவாந்தர்யாமியான பரமாத்மாவுமான விஸ்ஸங்காதத்துக்கு வாசகமாய்க்கொண்டு, தன்னளவிலேவரும்படி நிற்கிறநிலையைச்சொல்லுகிறது - முற்றுமாய்நின்ற வென்கிற வித்தாலே. இவை யறியாதிருக்க, இவற்றின்பேற்றுக் கவன் வருந்தவேண்டுகிறஹேதுவென்னென்னில் (எந்தாயோ) அநுக்கடியான சம்பந்தத்தைச்சொல்லுகிறது. இவற்றை யுண்டாக்கும் நாளிலே யுண்டாக்கி, "இனிமேல்வருமாபத்து, இவைதானே பரிஹரித்துக்கொள்ளுகிறது" என்று விட்டுவைக்கையன்றிக்கே, அரியனசெய்தும் நோக்குமவனென்கிறார் (குன்றெடுத்து) மலையையெடுத்திறே நோக்கிற்று. (ஆநிரைமேய்த்து) நோக்குமிடத்து,வரையாதே பசுக்களை நோக்குமவனாயிற்று. (அவைகாத்தவெங்கூத்தாவோ) (ஆநிரைமேய்த்து - குன்றெடுத்து - அவைகாத்தவெங்கூத்தாவோ.) வர்ஷத்திலே நோவுபடுகிற பசுக்களை ரக்ஷிக்கைக்காக மலையையெடுத்தானவன், அப்போது த்ரிபங்கியாய் நின்ற வடிவுதான் வல்லாராடினாப்போலே தமக்காகர்ஷகமாயிருக்கையாலே-எங்கூத்தாவோவென்கிறார். ஆக, இவ்விரண்டுபாட்டாலும் - அவனுடைய ஸ்ப்ருஹணீயதையைச் சொல்லி, ப்ராப்யத்வம் சொல்லிற்று; மேலஞ்சுபாட்டாலே - அவனுடையப்ராபகத்வம்சொல்லுகிறது..*

ஜீயர் அரும்பதம்.

இரண்டாம்பாட்டு (என்றுகொலித்யாதி) "அரன் நான்முகனேத்தும்செய்யநின்றிருப்பாதத்தையான் - என்றுகொல்சேர்வது" என்றபதங்களைக்கடாக்ஷித்தவதாரிகை (அநந்யபரராயித்யாதி) ஸ்ருஷ்ட்யாத்யநந்யபரரென்றபடி. அரியதொழில்களைச்செய்திவ்வதிகாரங்களைப் பெறுகையாலே - (புறம்பேதாரகாதிகள்) என்றது மிப்பதத்திலே சித்தம். இவ்விரண்டுக்கும் ப்ரதிகோடி (அநந்யபரனாயித்யாதி)

"என்றுகொல்" என்றுமுன்னேயும் சொல்லிவைத்து, மீளவும் "என்றுகொல்" என்கிற தாற்றுமையினதிசயத்தாலே யென்கிறார் (திருக்கையிலித்யாதி) ஆற்றாமையாலேசொல்லுகையாலே புநருக்தியில்லையென்றபடி. என்றவளவிறேயென்றது - என்றதிறேயென்றபடி. (முடிந்தேன்) என்றதுக்கு சப்தமேதென்ன (ஆந்தோவென்கிறவித்யாதி)

ப்ரஹ்மாதிகளுக் கர்யபரதையும் ப்ரயோஜநாந்தரபரதையு முண்டாகையா லே, இரண்டையு மிரண்டுவாக்யத்தாலே யருளிச்செய்கிறார் (அழிப்பாருடனித் யாதி) "அழிப்பாருடன்" என்றவாக்யமாத்ரவிவரணம் (தந்தாமுடையவித்யாதி) "செய்யநின்திருப்பாதத்தை" என்றதுக்கு சப்தார்த்தம் (ஸ்ப்ருஹணீயமாயித்யாதி) புத்திசௌகர்யார்த்த மந்வயம் (அரனித்யாதி)

ஸ்ருஷ்டித்தபின்பு பாலநம்பண்ணிவிடுகையன்றிக்கே, ஸ்ருஷ்டியுமிவனே செய்தானென்னுமதுக்கு த்ருஷ்டாந்தம் (பெற்றபின்பித்யாதி) த்ரிவ்ருத்கரணத்தை நினைத்து-த்ரிவ்ருத்கரணத்தை ஸங்கல்பித்து. த்ரிவ்ருத்கரணம் மற்றையிரண்டுக்கு முபலக்ஷணமென்று வ்யாக்யாதமேயாகிலும், இவ்விடத்தில், இந்த்ரனுக்கு த்ரை லோக்யத்தை வாங்கிக்கொடுக்கநினைத்து அண்டாவகாசமெல்லா மளந்தாப்போ லே, த்ரிவ்ருத்கரணத்தை ஸங்கல்பித்தத்தால் கார்யங்கொள்ளாமையாலே பஞ்சீக ரித்தானென்றதுவு மொருபாவமாகவருளிச்செய்வர். "முற்றுமாய்நின்ற" என்கிற விது ஸ்வரூபைக்யமல்ல, அநுப்ரவேஶக்ருதப்ரகார ப்ரகாரிபாவத்தைச்சொல்லுகி றதென்கிறார் (ஸ்ருஷ்டமானவித்யாதி) "எந்தாய்" என்றதுக்கவதாரிகை (இவைய நியாதிருக்கவித்யாதி)

"குன்றெடுத்து" என்றதுக்கவதாரிகை (இவற்றையித்யாதி) அரியனசெய் தானோவென்ன (மலையையித்யாதி) அவைகாத்தவனேயென்னாதே, "எங்கூத்தா வோ" என்று விசேஷித்ததுக்குபாவம் (வர்ஷத்திலேயித்யாதி) ப்ரவேஶத்திலேய ருளிச்செய்த ப்ராப்யப்ராபகங்களுக்கு வாசகமான பாட்டுக்க ளித்தனையென்கிறார் (ஆகவிவ்விரண்டித்யாதிவாக்யத்வயத்தாலே)

நிலநீரொன்றுதொடங்கி, எந்தாயோ, ஆநிரைமேய்த்து-குன்றெடுத்து-அவை காத்தவெங்கூத்தாவோ, அரன் நான்முகனேத்தும் செய்யநின் திருப்பாதத்தையா ன்-சேர்வது-என்றுகொலோ, அந்தோ ! வித்யந்வயஃ ....*

மூன்றாம்பாட்டு.

காத்தவெங்கூத்தாவோமலையேந்திக்கன்மாரிதன்னைப்
பூத்தண்டுழாய்முடியாய்புனைகொன்றையஞ்செஞ்சடையாய்
வாய்த்தவென்னான்முகனேவந்தென்னாருயிர்நீயானா
லேத்தருங்கீர்த்தியினாயுன்னையெங்குத்தலைப்பெய்வனே.

ஆறாயிரப்படி.

(காத்தவெங்கூத்தாவோ) த்வதநீநஸ்வரூப சதுர்முகபசுபதி ப்ர ப்ருதிகளும், த்வதநீந மத்ஸ்வரூபனுமாய், இயத்தாசங்க்யா ரஹிதமாகை யாலே யஶக்யஸ்தவமான கல்யாணகுணவிசிஷ்டனுமா யிருந்தவனே, வ ர்ஷபீடிதமான பசுக்களை ரக்ஷித்தருளுகைக்காக ஸ்ரீகோவர்த்தநத்தை யெ டுத்துக்கொண்டுநின்றருளின வுன்னுடைய தர்ஶநீயமான வந்நிலையையு ம், அப்போது திருவாயர் திருத்துழாயைக்கொண்டொப்பித்தருளப்பண் ணின வவ்வழகையும், கேவலமுன்னுடைய க்ருபையாலேயென்றோ கா ண்பதென்கிறார் ....*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், சர்வசுலபனும் சர்வாதிகனுன நீயெனக்கு தாரகனும்படி செல்லாமை விளைந்திருக்க, நானுன்னை யெங்கேகிட்டுவதென்கிறார்.

மலை - மலையை. ஏந்தி - ஏந்தி. கல்மாரிதன்னை - கல்மழை. காத்த - காத்தபோது. எங்கூத்தா - வல்லாராடினுப்போலே தர்சநீயமான நிலையையுடையையாய். பூ - சர்வேச்வரத்வஸூசகமாய் விகஸிதமானபூந்தாரையுடைத்தாய். தண்-ஸ்ரமஹரமான. துழாய்-திருந்துழாய்மாலையை. முடியாய் - திருமுடியிலே யுடையையாய். புனை - அத்தோபாதிதன்னையுமீச்வரனுகவபிமாநித்துப்புனைந்த. கொன்றை- கொன்றைமாலையையும். அம் - அந்தாலேயழகுபெற்று. செம் - அந்தவீச்வரத்வசாதகமாயுள்ள வுபாசகத்வஸூசகமாய்ச்சிவந்த. சடையாய் - ஜடையையுமுடையனுன ருத்ரனைப்ரகாரமாகவுடையையாய். வாய்ந்த - அவனுக்குமுந்பாதகனுய்த் தன்பக்கலிலே யுத்பந்நனுன. என்நான்முகனே-சதுர்முகனைப்ரகாரமாகவுடையையாயிருக்கிற வாகாரத்தையெனக்கு ப்ரகாசிப்பித்தவனும். ஏத்த-அந்தபரத்வசௌலப்யங்களுக்கெல்லைகண்டேத்த. அரும் - அரிய. கீர்த்தியினும் - கீர்த்தியையுடையவனே. என்னபேக்ஷையின்றியே, நீ-நீ. வந்து - வந்து. என் - எனக்கு. ஆருயிர் - பரிபூர்ணதாரகன். ஆனல் - ஆம்படியாலே. உன்னை - சர்வாதிகனும் சர்வசுலபனுமிருக்கிறவுன்னை. எங்கு - எங்கே. தலைப்பெய்வன் - கிட்டியநுபவிப்பேன்.

ஓ - ஓ. ஈச்வராபிமாநிகளுக்கு மறிவில்லாதார்க்குங்கிடைத்தவிது, த்வதேகதாரகனும் வாசியறிந்து கூடப்பெறுமெனக்கரிதாவதேயென்றுகருத்து...........*

ஈடு - மூன்றும்பாட்டு.

ப்ரஹ்மாதிகளுக்கும் காரணபூதனுனநீ, நிர்ஹேதுகமாக வந்து த்வதேகதாரகனும்படியென்னைப் பண்ணியருளினுய்; ஆனபின்பு, நீயேகுறையும் செய்தருளவேணுமென்கிறார்.

(காத்தவெங்கூத்தாவோ) கீழே - க்ருஷ்ணவ்ருத்தாந்தம் ப்ரஸ்துதமிறே; "ஆநிரைமேய்த்தவைகாத்தவெங்கூத்தாவோ" என்று, "எத்திறம்" என்ருல், பின்னையும் "எத்திறம்" என்று அதிலேபோமித்தனையிறே. கீழ்ச்சொன்னது வடிம்பிட்டு, திரியட்டும் "காத்தவெங்கூத்தாவோ" என்கிறார். (மலையேந்திக்கல்மாரிதன்னை) கல்லாலேவர்ஷிக்கையாலே மலையையெடுத்து பரிஹரித்தான்; நீராலேவர்ஷித்தானுகில் கடலையெடுத்து நோக்குங்காணும். பசுக்கள்ஸ்வரக்ஷணத்துக்கு மலையையெடுத்ததோ. (பூத்தண்டுழாயித்யாதி) தத்தத்ஸ்வரூபங்களுக்கசாதாரணமான லக்ஷணம்சொல்லுகிறது. (பூத்தண்டுழாய்முடியாய்) தனக்கசாதாரணமாய் ஐஸ்வர்யஸூசகமான மாலையாயிற்றிது. தன்னுடைய சத்தைதன்னதீநமாம்படி யிருக்கும் வஸ்துவுக்கு லக்ஷணமாயிற்றிம்மாலை. இத்தாலிவர் பெற்றதாயிற்றென்னிப்போதென்னில்; உன்சத்தையுன்னதீநமானவோபாதி யென்சத்தையுமுன்னதீநமாயிருக்க, நானெங்ஙனேயுன்னைப் பெறுகைக்கு சாதநாநுஷ்டாநம்பண்ணிக் காணும்படியென்கை. (புனைகொன்றையஞ்செஞ்சடையாய்) பிறர்சத்தையோ தானுன்னதீநமன்றிக்

கே யிருக்கிறது. பசுக்களின்சத்தையுன்னதீனமானாப்போலே, ஈஶ்வராபிமாநிகளாயிருப்பாருடைய சத்தையுமுன்னதீனமாயன்றே யிருக்கிறது. (புனையித்யாதி) புனையப்பட்டகொன்றையையுடைத்தாய், அழகிதாய்ச் சிவந்திருந்துள்ள ஜடையையுடைய ருத்ரனும் நீயிட்டவழக்கு. (வாய்த்தவென்நான்முகனே) கீழிரண்டுபதத்திலும்சொன்ன மாலைகளவ்வவர்க்கசாதாரணமா யிருக்குமாபோலேயாயிற்று, இவனுக்குந்தனக்கடைத்தகாரியத்துக்கு நாலுமுகமஸாதாரணமாயிருக்கும்படி. (வாய்த்த - ஸ்ருஷ்டியையுடைய், சதுர்முகன்.) இன்னமும், ஈஶ்வரன்றனக்கும் " இப்படி ஸ்ருஷ்டிப்போம " என்றாலும் முடியாதபடியாயிற்று ப்ரஹ்மஸ்ருஷ்டியிலுண்டானவாய்ப்பு. (என்) என்கிறவிதுக்கு - விசேஷ்யத்திலே யூற்றமாகக்கடவது. வையதிகரண்யத்தாலேசொன்னால் கழற்றிக்கொள்ளுகைக்குமுடலாய், கேவலபேதத்தையேசொல்லுகிறதென்று ப்ரமிக்கைக்குமுடலாயிருக்கும்; சாமாநாதிகரண்யத்தாலேசொன்னால் சேஷசேஷிபாவமாகிற பிரிவும்தோற்றியிருக்கும். ஆக, சாமாநாதிகரண்யவையதிகரண்யங்களிரண்டுக்கும் பலம் நிலைநியமநமிறே. ஆனாலும், சாமாநாதிகரண்யத்தாலே சொல்லுமதுக்கித்தனைவாசியுண்டு. [ஸ்வேச்சயா] [ஸ்வமுக்திஸ்ய] ஸ்வார்த்தமாகவிறே யிவற்றையுபாதாநம்பண்ணிற்று. [உபாதத்தே ஸத்தா ஸ்திதிநியமநாத்யைஶ்சிதசிதௌ ஸ்வமுத்திஶ்ய] [உபாதத்தேஸத்தாஸ்த்திநியமநாத்யைஶ்சிதசிதௌஸ்வமுத்திஶ்ய] சத்தையேபிடித்து ஸ்திதிநியமநாதிகளகப்படவவனதீனமாயிருக்கையாலே, பிரியநின்று சாதநாநுஷ்டாநம்பண்ணுகைக்கொரு ப்ராப்தியில்லையாம்படியாயிற்று அத்யந்தபாரதந்த்ர்யமிருக்கும்படி. (வந்தென்னாருயிர்நீ) பிறர்பக்கல் பண்ணினவுபகாரத்தைச் சொல்லவேணுமோ, என்பக்கல்பண்ணின வுபகாரந்தானே யமையாதோ. "நீயொருவனுமே" என்றுகனுக்கண்டுமறியாதே புறம்பே அந்யபரனாயிருக்கிறவென்னை, அத்தைத்தவிர்த்து உன்படியையறிவித்து உன்னையொழிய தரியாதபடியான தசையைப்பிறப்பித்தாய். (ஆனால்) இப்படியிருந்தபின்பு. (ஏத்தருங்கீர்த்தியினாய்) நீசத்தையையுண்டாக்கவுன்னாலே லப்தசத்தாகனாயிருக்கிறநான் "ஏத்துவேன்" என்றால், என்னாலேதானேத்தலாம்படியிருந்ததோ. ஆனால், உன்படியது, என்படியிது; இங்ஙனேயிருந்தபின்பு. (உன்னையெங்குத்தலைப்பெய்வனே) நானொருபாயாநுஷ்டாநம்பண்ணி யுன்னையெங்கேவந்துகிட்டப்புகுகிறேன். என்னாலேவந்து கிட்டுகையென்றொன்றுண்டோ.........................*

ஜீயர் அரும்பதம்.

மூன்றாம்பாட்டு (காத்தவித்யாதி) "புனைகொன்றை" இத்யாரப்ய, "ஆருயிர்நீயானால் - எங்குத்தலைப்பெய்வன்" என்கிறவற்றைக்கடாக்ஷித்தவதாரிகை (ப்ரஹ்மாதிகளுக்குமித்யாதி)

திரியட்டும் "காத்தவெங்கூத்தாவோ" என்றதுக்குமூன்றுபரிஹாரம். முந்தி
னது (கீழேக்ருஷ்ணவ்ருத்தாந்தமித்யாதிவாக்யசதுஷ்டயம்) அதாவது-கீழ்ச்சொ
ன்னநீர்மையி லீடுபட்டுத்திரியட்டும் சொல்லுகிறானென்றபடி. வடிம்பிட்டு - ப்ரே
ரித்து. "மலையேந்திக்கன்மாரிதன்னை - காத்த" என்றதுக்குரஸோக்தி (கல்லாலே
யித்யாதிவாக்யத்வயம்) திரியட்டும் "காத்தவெங்கூத்தாவோ" என்றதுக்கு-இப்
பாட்டுக்குசேஷமாக த்விதீயபரிஹாரம் (பசுக்களித்யாதி) எனக்குசாதநாநுஷ்ட்
டாநம்பண்ண ப்ராப்தியில்லையென்கைக்காக மீளவும் சொல்லுகிறானென்றபடி.

"பூத்தண்டுழாய்முடியாய்" என்று தொடங்கிமூவர்க்கும் துழாய்முதலான
வற்றைச்சொன்னதுக்குபாவம் (தத்தத்ஸ்வரூபங்களுக்கித்யாதி) ஸ்வரூபங்களுக்கு-
மூர்த்திகளுக்கென்றபடி. "பூத்தண்டுழாய்முடியாய்" என்றத்தாலே யீஸ்வராசா
தாரணலக்ஷணம் சொல்லுகிறதென்கிறார (தனக்கித்யாதி) ஐஸ்வர்யசூசகம்-சர்வா
திகத்வ ஸூசகம். பலிதம் (தன்னுடையவித்யாதி) பதப்ரயோகத்துக்கு ஹார்த்தபா
வம் (உன்சத்தையித்யாதிவாக்யம்) பூத்துஸ்ரமஹரமான திருத்துழாயைத் திருமு
டியிலே யுடையவனேயென்று ஸம்போதநம்.

"பூத்தண்டுழாய்முடியாய்" என்றதின்பாவத்தை யவலம்பித்துக்கொண்டு
"புனைகொன்றை" இத்யாதிக்குசங்கதி (பிறர்சத்தையித்யாதி) "சடையாய்" எ
ன்கிற சமாநாதிகரண்யம் சரீரசரீரிபாவ நிபந்தநமாகையாலே, ருத்ரனுடையசத்
தையு மவனதீநமென்றபடி. கோவர்த்தநோத்தாரணம் சொன்னதுக்கு மூன்றும் பரி
ஹாரம் (பசுக்களித்யாதி) அன்றிக்கே, திரியட்டும் "காத்த" என்றதுக்கிரண்டே
பரிஹாரமாய், "மலையேந்தி" இத்யாதியைக் கடாக்ஷித்துக் கீழ்வாக்ய விவரணம்
(பசுக்களித்யாதி) அதாவது-பசுக்களின் சத்தைபோலே (பசுபக்ஷிசத்தையும் த்வத
தீநமென்றபடியென்றுமாம். சம்போதநம் (புனைபப்பட்டவித்யாதி)

கீழிருவரையும்போலே யிவனையும் மாலையையிட்டு நிரூபியாதொழிவானே
ன்னென்ன (கீழிரண்டித்யாதி) தனக்கடைத்தகாரியமாவது-ஸ்ருஷ்டியென்றபடி.
"ஸஹ-ஸ்ருஷ்டிதிவ்யாஹாரம், ஸஹ-ஸ்ருஷ்டிலோகஜ" (ஸூரிதிவ்யாஹாரத்ஸூமிம
ஸ்ருஜத) இத்யாதிப்படியே வேதோக்தமானபடியே ஸ்ருஷ்டிக்கவேண்டுகையாலே
இந்தவேதந்தான் நாலாயிருக்கையாலே நாலுமுச்சரிக்கைக்கு நாலுமுகம்வேண்டு
கையாலே (தனக்கடைத்தகாரியதுக்கு நாலுமுகமஸாதாரணமாயிருக்கும்படி) எ
ன்கிறார். "வாய்த்த" என்றதுக்கர்த்தம் (இன்னமுமித்யாதி) வாய்த்த-சமர்த்த
னென்றபடி. வையதிகரண்யமாகவன்றிக்கே, சாமாநாதிகரண்யமாகவருளிச்செ
ய்வானென்னென்ன (வையதிகரண்யத்தாலே யித்யாதிவாக்யத்வயம்) கழற்றிக்
கொள்ளுகைக்கும்-ப்ருதக்ஸ்த்திதியில்லாதவுறவறுத்துக்கொள்ளுகைக்கும். சரீரசரீ
ரிகளுக்கும் பேதமுண்டாகைய லே (சேஷசேஷிபாவமாகிற பிரிவுந்தோற்றியிருக்
கும்)என்றபடி. பிரிவுமென்றசப்தத்தாலே-அப்ருதக்ஸித்தவிசேஷணத்வமும் தோ
ற்றுமென்றபடி. உபயத்தாலும் சித்தித்தது நிர்வாஹகத்வமேயாகிலும், சாமாநாதி
கரண்யத்தாலே சொல்லுமதுக்கு அப்ருதக்ஸித்தியாகிற வாதிக்யமுண்டென்று
சாமாநாதிகரண்யத்துக்கு ப்ரயோஜநமருளிச்செய்கிறார் (ஆகவித்யாதிவாக்ய த்வ
யத்தாலே) இத்தனைவாசியென்றது - வக்ஷ்யமாணத்தைக்கடாக்ஷித்து. அப்ருதக்ஸி
த்தவிசேஷணமாய் நியாம்யமா யிருப்பார்களோவென்ன (ஸ்வமுத்திஸ்யேத்யாதி)
"ஸ்வமுத்திஸ்ய" என்றதுக்கர்த்தம் (ஸ்வார்த்தமாகவித்யாதி) ஸ்வார்த்தமாகவெ
ன்றது - ஸ்வசேஷகமாவென்றபடி. இத்தால் - சத்தாஸ்த்திதிநியமநாதிக ளவன

நீநமென்று தோன்றுமையாலே, கீழ்ப்பதங்களையுமுபாதாநம்பண்ணுகிறார் (உபாதத்தே இத்யாதி) "உபாதத்தே ஸத்தாஸ்திதிநியமநாத்யைஶ்சிதசிதௌ ஸ்வமுத்திஶ்ய ஶ்ரீமாநிதி வததி வாகௌபநிஷதீ। உபாயோபேயத்வே ததிஹ தவ தத்த்வம் நது குணௌ அதஸ்த்வாம் ஶ்ரீரங்கேஶய ஶரணமவ்யாஜமபஜம்" (உபாதத்தேசத்தாஸ்திதிநியமநாத்யைஸ்சிதசிதௌஸ்வமுத்திஸ்ய ஸ்ரீமாநிதிவததிவாகௌபநிஷதீ। உபாயோபேயத்வே ததிஹதவதத்த்வம்நதுகுணௌவதஸ்த்வாம் ஸ்ரீரங்கேஶயஶரணமவ்யாஜமபஜம்) இதி ஸ்ரீரங்கராஜஸ்தவே. ஸ்லோகார்த்தகதந பூர்வகமாக விப்பாட்டிற்சொல்லுகிற சாமாநாதிகரண்யத்துக்கு ப்ரகரணாநுகுணமாக ப்ரயோஜநமருளிச்செய்கிறார் (சந்தையேபிடித்தித்யாதி) "உபாயோபேயத்வே" (உபாயோபேயத்வே) இத்யாத்யுத்தரார்த்தமும் விவக்ஷிதம். குணௌ-ஔபசாரிகௌ.

"வாய்ந்தவென்னுள்மகனே" என்றநந்தரம், "வந்தென்னுருயிர்" என்றதுக்குபாவம் (பிறர்பக்கலித்யாதி) அந்தவுபகாரமேதென்ன (நீயொருவனித்யாதி) "வந்தென்னுருயிர்நீ -" என்னபேக்ஷையின்றிக்கே நீயேவந்தெனக்கு பரிபூர்ணதாரகனுயென்று சப்தார்த்தம்.

"என்னுருயிர்நீயானுல்" என்றநந்தரம், "ஏத்தருங்கீர்த்தியினுய்" என்கையாலே - என்னுலேத்திமுடிக்கப்போகாதகீர்த்தியையுடையவனென்று விவக்ஷித்து, அதுக்குஹேதுவையருளிச்செய்கிறார் (நீசத்தையையுண்டாக்கவித்யா) "ஏத்தருங்கீர்த்தியினுய் - வந்தென்னுருயிர்நீயானுல்" என்றந்வயத்தைவிவக்ஷித்தருளிச்செய்கிறார் (ஆனாலும்படியதுவித்யாதி)

மலையேந்திக்கன்மாரிதன்னை - காத்தவெங்கூத்தாவோ, பூந்தண்டுழாயென்றுதொடங்கி, வந்தென்னுருயிர்நீ - ஏத்தருங்கீர்த்தியினுய் - ஆனால் - உன்னையெங்குத்தலைப்பெய்வனித்யந்வயஃ...*

நான்காம்பாட்டு.

எங்குத்தலைப்பெய்வனானெழின்மூவுலகுநீயே
யங்குயர்முக்கட்பிரான்பிரமபெருமானவனீ
வெங்கதிர்வச்சிரக்கையிந்திரன்முதலாத்தெய்வநீ
கொங்கலர்தண்ணந்துழாய்முடியென்னுடைக்கோவலனே.

ஆறாயிரப்படி.

(எங்குத்தலைப்பெய்வன்) ப்ரஹ்மேசாநாதி சர்வஜந்துக்களுடைய சத்தாமாத்ரமேயோ த்வத்ஸங்கல்பாயத்தம், அவர்களுடையவைபவமும் த்வத்ப்ரசாதாதீநமன்றோ; ஆதலால், ப்ரதிபந்தகத்தையும் போக்கியருளி அடியேனையுன்திருவடிகளிலே சேர்த்தருளவேணுமென்கிறார்.*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், சர்வஸ்மாத்பரனு யாஶ்ரிதபவ்யனு யதிசயிதபோக்யனுனவுன்னை, அகிஞ்சநனுன நானெங்கே கிட்டுவதென்கிறார்.

கொங்கு-மதுவையுடைத்தாய். அலர்-விகஸிதமான. தண்ணந்துழாய்-செவ்வித்திருத்துழாயாலே யலங்க்ருதமான. முடி-மயிர்முடியையுடையையாய். என்னுடை-அவ்வழகை யெனக்குப்ரகாஶிப்பித்த. கோவலனே - பவ்யனான க்ருஷ்ணனே. எழில்-தர்ஶநீயவைலக்ஷண்யத்தையுடைய. மூவுலகும் - த்ரிவிதலோகமும். நீயே-நீயிட்டவழக்காய். அங்கு-அந்தலோகத்திலே. உயர் - ஜ்ஞாநசக்த்யாதிகளாலே யுச்ச்ரிதனாய்த் தோற்றியிருக்கிற. முக்கட்பிரான்-ஈஶ்வராபிமாநியான த்ரிணேத்ரனும். பிரமன்-அவனுக்கு ஸ்வாமியான வாநிக்யத்தையுடையப்ரஹ்மாவென்ற. பெருமானவன்-ப்ரஸித்தனானவனும். நீ-நீயிட்டவழக்காய். வெங்கதிர்- சத்ருக்களுக்கபயவநீயனும்படி ப்ரதாபோஜ்ஜ்வலமான. வச்சிரம்-வஜ்ரத்தை. கை - கையிலேயுடைய. இந்திரன்-இந்த்ரன். முதலா-முதலான. தெய்வம்-தேவவர்க்கமும். நீ-நீயிட்டவழக்கு. ஆனபின்பு, நான் - த்வத்ப்ராப்திஹேதுக்க ளொன்றுமில்லாதநான். எங்கு-எங்ஙனே. தலைப்பெய்வன்-வந்துகிட்டுவேன் ....*

ஈடு - நான்காம்பாட்டு.

கீழ்ப்பாட்டில் - அவர்கள் ஸ்வரூபம் ததநீநமென்றது; அவ்வவ ஸ்வரூபகதமா யிருப்பன சிலமினுக்கங்க ளுண்டிறே, அவையும் ததநீநமென்கிறது - இதில்.

(எங்குத்தலைப்பெய்வன்நான்) ஒரு துர்ப்பலனை "மலையைச்சும" என்றால், அவனாலே யதுசெய்து தலைக்கட்டப்போமோ.

(எழில்மூவுலகும்நீயே) த்ரைலோக்யத்தி லுண்டான பதார்த்தங்களினுடைய வுத்கர்ஷமும் த்வதநீநம். (அங்குயர்முக்கட்பிரான்) அந்த வண்டத்திலல்லாத தேவதைகளிற்காட்டில் ருத்ரன்பக்கலிலே வந்தவாறே யொருத்கர்ஷமுண்டிறே, அந்த வுச்ச்ராயமும் த்வதநீநம். (பிரமபெருமானவன்நீ) அவன்றனக்கும்கூட ஜநகனாய் சதுர்த்தஶ புவநேஶ்வரனாகையால் வருவதோரேற்றமுண்டிறே ப்ரஹ்மாவுக்கு, அதுவும் நீயிட்டவழக்கு. (வெங்கதிர்த்யாதி) "வஜ்ர ... ஹஸ்த:" (வஜ்ரஹஸ்த:புரந்தர:) என்கிறபடியே - வெவ்விய கதிரையுடைத்தான வஜ்ரத்தைக் கையிலேயுடையனாயிருக்கிற விந்த்ரன்தொடக்கமான தேவதைகளுடைய வுச்ச்ராயமும் நீயிட்டவழக்கு.

(கொங்கலரித்யாதி) உன்னையொழிந்த பதார்த்தங்களினுடைய வுத்கர்ஷமுமன்னநீநமாம்படி யிருக்கிறநீ, உன்னுடைய வுச்ச்ராயம் நானிட்டவழக்காம்படியானாய். மதுவையுடைத்தாய் விகஸிதமான செவ்வித்திருத்துழாயாலே யலங்க்ருதமான மயிர்முடியையுடையையாய், அவ்வழகையெனக்கு ப்ரகாஶிப்பித்த வாஶ்ரிதபவ்யனான க்ருஷ்ணனே. கொங்கலர்தண்ணந்துழாய்முடி யென்கையாலே - போக்யதாப்ரகர்ஷஞ்சொல்லிற்று; என்னுடைக்கோவலனே யென்கையாலே - ஆஶ்ரிதபவ்யதையைச் சொல்லுகிறது...*

ஜீயர் அரும்பதம்.

நாலாம்பாட்டு (எங்கித்யாதி) "எழில்மூவுலகும், அங்குயர் - பிரமபெருமான்" இத்யாதிகளைக்கடாக்ஷித்தவதாரிகை (கீழ்ப்பாட்டித்யாதி) மினுக்கங்கள்- உத்கர்ஷங்கள்.

பின்னையும் "எங்குத்தலைப்பெய்வன்" என்றது-ஆர்த்யதிசயத்தாலே. "நான்-எங்குத்தலைப்பெய்வன்" என்றுதம்முடைய வசக்தியைச்சொல்லுகிறவருடைய பாவம் (ஒருதுர்ப்பலனையித்யாதி)

"மூவுலகும்" என்று - லோகஸ்த்தரைச்சொல்லுகிறது. "எழில், உயர், பெருமான்" இத்யாதிகள் விசேஷணமாயிருக்க, இதிலேமாத்ரம் தாத்பர்யமென்னக்கூடுமோவென்னில்; "ப்ராங்முகோந்நாநிபுஞ்ஜீத" (ப்ராங்முகோந்நாநிபுஞ்ஜீத) என்கிறவிடத்தில் - அந்நபோஜநம்ராகப்ராப்தமாகையாலே, "விதிரத்யந்தமப்ராப்தே" (விதிஸ்த்வத்யந்தமப்ராப்தே) என்கிற ந்யாயத்தாலே அப்ராப்தமான ப்ராங்முகத்வத்திலே விதிக்குதாத்பர்யமானாப்போலே, இந்தப்பாட்டில் ஸ்வரூபதாதநீய முக்தமாகையாலும், இவற்றிலோரோ விசேஷணமிட்டுச்சொல்லுகையாலும், "எழில், உயர், பெருமான், வெங்கதிர்வர்ச்சிரம்" என்கிற மினுக்கங்களிலே யிப்பாட்டுக்குதாத்பர்யமென்று கருத்து.

அங்கு - அந்தவண்டத்தில்.

கதிருக்குவெம்மையாவது - பராபிபவந சாமர்த்யம்.

"எழில்மூவுலகும்" இத்யாத்யுக்தோத்கர்ஷநா ததிந்யாநுவாதபூர்வகமாக "என்னுடை" என்றதுக்குபாவம் (உன்னையொழிந்தவித்யாதி) "கொங்கலர்" இத்யாதி பதத்வய பலிதபாவம் (கொங்கலரித்யாதிவாக்யத்வயம்)

எழில் மூவுலகு மித்யாரப்ய, தெய்வம்நீ, கொங்கலர்தண்ணந்துழாய்முடியென்னுடைக்கோவலனே, நான் - எங்குத்தலைப்பெய்வ னித்யந்வயः ....*

ஐந்தாம்பாட்டு.

என்னுடைக்கோவலனேயென்பொல்லாக்கருமாணிக்கமே
யுன்னுடையுந்திமலருலகமவைமூன்றும்பரந்
துன்னுடைச்சோதிவெள்ளத்தகம்பாலுன்னைக்கண்டுகொண்டிட்
டென்னுடையாருயிரார்எங்ஙனேகொல்வந்தெய்துவரே.

ஆறுயிரப்படி.

(என்னுடைக்கோவலனே) ப்ரஹ்மேசாநாதிகளுடைய சத்தாவிபூதிகள் மத்ப்ரசாதாதீநமேயாகிலும், த்வதபேக்ஷிதமத்தர்ஹந ப்ராப்த்யுபாயத்தை நீயேயநுஷ்டிக்கவேண்டுமென் றொருநிர்ப்பந்தமுண்டாகில், த்வந்நாபீகமலோத்பூத சகலலோகாந்தர்வர்த்தி சர்வவிஷயங்களிலும் ப்ரவணமான வென்னுடையவாத்மா, ப்ரதிபந்தநிரசநத்தைப்பண்ணி நிரதிசய தேஜோமயமான திருநாட்டிலே யுன்னைக்கண்டு ப்ராபிக்கும்படி யெங்ஙனே; இம்மஹாத்மாவுக்கு முடியாததுண்டோவென்று தம்மையுபாலம்பித்துக்கொண்டு சொல்லுகிறார்..*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், நிரதிசய ப்ராப்யபூதனை யுன்னை, லௌகிக விஷயங்களிலே கைகழிந்திருக்கிற வென்னாத்மா வெங்ஙனே கிட்டக்கடவதென்கிறார்.

என்னுடைக்கோவலனே - "பசுவைமேய்" என்று நியமிக்கலாம்படியான வாஸ்ரிதபவ்யதையையெனக்கு ப்ரகாசிப்பித்தவனாய். பொல்லா-தொளையாத. என் கருமாணிக்கமே - நீலரத்நம்போலேயெனக்கவிகலபோக்யனானவனே. உன்னுடை-உன்னுடைய. உந்தி - திருநாபியிலே. மலர் - விகசிதமான. உலகமவை - லோகங்களுடைய. மூன்றும் - ப்ரசித்தமான குணத்ரய விபாகயுக்தமான விஷயங்களிலே. பரந்து-பரந்துவைத்து. தம்மை யவற்றுக்கு போக்தாவாக வபிமாநம்பண்ணி யிருக்கிற, என்னுடை - என்னுடைய. ஆருயிரார் - ஆத்மாவானவர். உன்னுடை - உன்னுடைய. சோதிவெள்ளம் - விலக்ஷண தேஜோராசிரூபமான தேசத்துக்கு. அகம்பால்-உள்ளே. உன்னை - நிரதிசயப்ராப்ய பூதனான வுன்னை. கண்டுகொண்டிட்டு-"𑌸𑌦𑌾 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿" (ஸதாபஶ்யந்தி) என்கிறகணக்கிலே, நிதியெடுத்துக் காண்பானைப்போலே கண்டுகொண்டு. வந்தெய்துவர் - ப்ராபிப்பது. எங்ஙனேகொல்-எங்ஙனேயாயிருக்கிறது.

சாம்சாரிகவிஷயத்தில் கைகழிந்த வெனக்குக் கிட்ட விரகெங்ஙனேயென்று கருத்து. உந்திமலரிலே யென்றுமாம்...*

ஈடு - ஐந்தாம்பாட்டு.

எல்லாம்செய்தாலும், [ஶாஸ்த்ரபலம்ப்ரயோக்தரியன்றோ] பலமும்மதானபின்பு நீரும் சிறிது யத்நம்பண்ணவேணுங்காணுமென்ன; நீஸ்ருஷ்டித்தலோகங்களில் விஷயங்கள்தோறு மகப்பட்டுக்கிடக்கிற நான், உன்னைப்பெறுகைக் கொருசாதநத்தை யநுஷ்டித்துவந்து பெறுகையென்றொன்றுண்டோ வென்கிறார்.

(என்னுடைக்கோவலனே) பாண்டவர்களுடையவனைப்போலேயாயிற்று. இதுசீலமிருந்தபடி. (என்பொல்லாக்கருமாணிக்கமே) இது வடிவழகிருந்தபடி. "அழகிது" என்னில் நாட்டொப்பாமென்று பார்த்து, விஜாதீயமானசப்தத்தாலே சொல்லுகிறாராதல். அன்றியே, தொளையாமணியென்றுதல். பொல்லல் - தொளைத்தல். அநுபபுக்தமான ரத்நம் போலே யென்றுதல்.

(உன்னுடையித்யாதி) உன்படியிதுவாயிருக்க, உன்னையொழிந்த விஷயங்களினுடைய வடிவழகிலும் குணங்களிலும் கால்தாழ்ந்துபோந்தவனாயிருந்தேன் நான். உன்னுந்தியிலேமலராகின்றுள்ள லோகங்கள் மூன்றிலுமுண்டான விஷயங்கள்தோறும், தனித்தனியேயற்றுக் கால்தாழ்ந்துபோந்தவனாயிருந்தேன் நான். நீசர்வசக்தியோகத்தாலே வ்யாபிக்குமிடமடைய நானென்னுடைய சாபலத்தாலேகால்தாழ்ந்து திரிந்தேன். இதென்னிலையிருந்தபடி. அதுக்குமேலே நீயெட்டாநிலத்தை யிருப்பிடமாகவுடையையாயிருந்தாய் (உன்னுடைச்சோதியித்யாதி) உனக்கேயசாதாரணமாய், நிரவதிகதேஜோரூபமாய், "𑌅𑌤𑍍𑌯𑌰𑍍𑌕𑌾𑌨𑌲𑌦𑍀𑌪𑍍𑌤𑌂 𑌤𑌤𑍍𑌸𑍍𑌥𑌾𑌨𑌂" (அத்யர்க்காநலதீப்தம் தஸ்த்தாநம்) என்றுசொல்லப்படுகிற ஸ்ரீவைகுண்டத்தை யிருப்பிடமாகவுடையையா யிருக்கிறவுன்னை, ப்ரக்ருதிப்ராக்ருதங்களிலுண்டான சம்பந்தமற்று நெடுந்தூரம்வழிவந்து அதுக்கநுரு

பமா யிருப்பதொரு சரீரத்தைபரிக்ரஹித்து, பரமபதப்ராப்திபண்ணிறு லநுபவிக்கவேண்டி யிருந்தது, ஆக, என்னிலேயிருந்தபடியிது, உன்னிலேயிருந்தபடியது,என்னெஞ்சில் ப்ராவண்யமிருந்தபடியிது; ஆனபின்பு, இந்த முதலியார் கடுகவந்துன்னைக்கிட்டாரோ. ((என்னுடையாருயிரார்) சப்தாதிகளிலே ப்ரவணமானவென்னாத்மா. "முதலியார்" என்று க்ஷேபிக்கிறார்.) ஆக, ஸ்வரூபம் த்வதநிநமாயிருந்தது; அவ்வவருடைய வுத்கர்ஷங்களும் த்வதநிநமாயிருந்தது. என்னிலேயிது, உன்னிலேயது, என்னெஞ்சில் ப்ராவண்யமிது; ஆனபின்பு, நாமொரு சாதநாநுஷ்டாநம் பண்ணிவந்து கிட்டுகை யென்றொரு பொருளுண்டோவென்கிறார்..... ....*

ஜீயர் அரும்பதம்.

அஞ்சாம்பாட்டு. (என்னுடையித்யாதி) எல்லாம் செய்தாலுமென்றது - ஸ்வருபோத்சர்ஷங்கள் மததீநமாயிருந்ததேயாகிலு மென்றபடி. சாஸ்த்ரபலம் ப்ரயோக்தரி - சேதநன் கர்த்தாவாயுள்ளவளவில் சாஸ்த்ரத்துக்கு சாபல்யமுண்டென்றபடி. "கீழிரண்டுபாட்டாலே - அநப்யுபகம்ய, சாதநாநுஷ்டாநத்துக்கு ப்ராப்தியில்லையென்றார்; மேலிரண்டுபாட்டாலே - அப்யுபகம்ய, சக்தியும், 'அறியேன்' என்கையாலே - ஜ்ஞாநமுமில்லையென்கிறார்" என்றருளிச்செய்வர். "உன்னுடையுந்திமலருலகமவைமூன்றும்பரந்து - என்னுடையாருயிராரெங்ஙனேகொல் வந்தெய்துவர்" என்கிறவற்றைக் கடாக்ஷித் தருளிச்செய்கிறார் (நீஸ்ருஷ்டித்தவித்யாதி)

பாண்டவர்களுடையவனைப்போலே யென்றது - "இன்னாருடையமநுஷ்யன்" என்னுமாபோலே யென்று த்ருஷ்டாந்தம். இப்பதத்தால் பலிதம் (இதுசீலமிருந்தபடியென்று)

இப்பதத்தால் பலிதம் (இதுவடிவழகிருந்தபடியென்று) வடிவழகைச்சொன்னால் பொல்லாமணி யென்பானென்னென்ன (அழகிதென்னிலித்யாதி) "துளையாமணி" என்றத்தால் பலிதம் (அநுபபுக்தமித்யாதி)

சௌசீல்யத்தையும் வடிவழகையும் சொன்னவநந்தரம், "உன்னுடையுந்திமலருலகமவை மூன்றும்பரந்து" என்கிறவருடைய பாவம் (உன்படியித்யாதி) படியென்றது - சாடு. திருமேனியென்று ஸ்வபாவார்த்தம். "கருமாணிக்கம்" என்று - வடிவழகுக்கும், "என்னுடைக்கோவலன்" என்றகுணத்துக்கும் ப்ரதிகோடியாக (உன்னையொழிந்த விஷயங்களினுடைய வடிவழகிலும் குணங்களிலும்) என்றபடி. சப்தார்த்தம் (உன்னுந்தியிலேயித்யாதி) "பரந்து" என்றதினர்த்தம் (தனித்தனியேயித்யாதி) விவரணம் (நீசர்வசக்தித்யாதி) "பரந்து" என்கிறவிடத்திலே-

"𑌯𑌤𑍍𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌂 𑌵𑍍𑌰𑍀𑌹𑌿𑌯𑌵𑌂 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌂 𑌪𑌶𑌵𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃 । 𑌏𑌕𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌨 𑌪𑌰𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌮𑌿𑌤𑌿 𑌮𑌤𑍍𑌵𑌾 𑌶𑌮𑌂 𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑍍" (யத்ப்ருதிவ்யாம்வ்ரீஹியவம்ஹிரண்யம்பஶவஸ்த்ரியஃ। ஏகஸ்யாபிநபர்யாப்தமிதிமத்வாஶமம்வ்ரஜேத்) என்றதநுசந்தேயம். இதென்னிலே யிருந்தபடியென்றது - சாதநாநுஷ்டாந பூர்வபாவி விரக்தியு மில்லையென்றபடி. மேலிற்பதத்துக்கவதாரிகை (அதுக்குமேலேயித்யாதி) சப்தார்த்தம் (உனக்கேயித்யாதி) இந்த பதப்ரயோகத்துக்கு பாவமாதல், பலிதமாதல் (ப்ரக்ருதீத்யாதி)

கீழ்ச்சொன்ன வர்த்தங்களை நிகமித்துக்கொண்டு, "என்னுடையாருயிரார்" இத்யாதிக்கர்த்தமருளிச்செய்கிறார் (ஆகவென்னிலையித்யாதிநாலுவாக்யத்தாலே) "ஆகவென்னிலையிருந்தபடியிது" என்றதின்விவரணம் - (என்னெஞ்சிலித்யாதி) கீழிரண்டுபாட்டி லர்த்தத்தையுங் கூட்டிக்கொண்டு கீழ்வாக்யத்ரயவிவரணம் (ஆக ஸ்வரூபமித்யாதி)

என்றுடைக்கோவலனே இத்யாரப்ய, பரந்திருக்கிற - என்னுடையாருயிரார் - உன்னுடைச்சோதிவெள்ளத் தகம்பா லுன்னைக் கண்டுகொண்டிட்டு - எங்ஙனே கொல் வந்தெய்துவரித்யந்வய:. "[illegible] |[illegible]" (அத்யர்க்காநலதீப்தம்தத்ஸ்தாநம்விஷ்ணோர்மஹாத்மந: | ஸ்வயைவப்ரபயாராஜந் துஷ்ப்ரேக்ஷம்தேவதாநவை:) இத்யாரண்யபர்வணி ஆர்ஷ்டிஷேண:. ....*

ஆறும்பாட்டு.

வந்தெய்துமாறறியேன்மல்குநீலச்சுடர்தழைப்பச்
செஞ்சுடர்ச்சோதிகள்பூத்தொருமாணிக்கஞ்சேர்வதுபோ
லந்தரமேற்செம்பட்டோடடியுந்திகைமார்புகண்வாய்
செஞ்சுடர்ச்சோதிவிடவுறையென்றிருமார்பனையே.

ஆறாயிரப்படி.

(வந்தெய்துமாறறியேன்) அசமமாய், நீலமாயிருந்த ஜ்யோதிஸ்ஸைத்தழைத்துச் சிவந்தவொளியைப்பூத்ததொரு மாணிக்கங் கிடந்தாப்போலே, திவ்யரூபகதநீலஜ்யோதிஸ்ஸாலும், பீதாம்பரசரணநிமக்நநாபீகமலகரதல கௌஸ்துப லக்ஷ்மீவிராஜித வக்ஷஸ்த்தல விலோசநவதநாருணகிரணங்களாலும் நீப்யமாநனுமாய், ஸ்ரிய:பதியாய்க் கோயிலிலே கண்வளர்ந் தருளுகிறவுன்னைக் காணுறதொழிலில் தரிக்கமாட்டுகிறிலேன்; காண்கைக்கோருபாயமும் காண்கிறிலேனென்கிறார்.......................*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், ப்ராப்யதாப்ரகாசகமான நிரதிசயாபிரூப்யத்தையுடைய வுன்னை நான்வந்து கிட்டுமுபாயமறிகிறிலேனென்கிறார்.

மல்கு - செறிந்த. நீலச்சுடர் - நீலச்சுடரானது. தழைப்ப - பரம்பாநிற்க. இடையிடையே, செம் - சிவந்த. சுடர் - ஒளியையுடைத்தான. சோதிகள் - தேஜோவிசேஷங்களை. பூத்து - பூத்திருப்பது. ஒரு - ஒரு. மாணிக்கம் - நீலரத்நமானது. சேர்வதுபோல் - பொருந்தியிருந்தாப்போலே. அந்தரமேல் - பரமவ்யோமத்திலே. செம் - சிவந்த. பட்டோடு - திருப்பீதாம்பரத்தோடே. அடி - திருவடிகளும். உந்தி - திருவுந்தியும். கை - திருக்கை. மார்பு - திருமார்பு. கண் - திருக்கண். வாய் - திருப்பவளமும். செம் - சிவந்த. சுடர் - ப்ரகாசத்தையுடைத்தான. சோதி - தேஜஸ்ஸை. விட - பரப்பாநிற்கும்படி. உறை - எழுந்தருளியிருக்கிறவிருப்பை. என் - எனக்குப்

ரசாசிப்பித்த. திருமார்பனை - ஸ்ரீமானானவனை. நான், வந்து - வந்து. எய்தும் - கிட்டும். ஆறு - உபாயம். அறியேன் - அறிகிறிலேன்.

அறியும் நீவந்துகொண்டுபோ மித்தனையென்று கருத்து.....................*

ஈடு - ஆறாம்பாட்டு.

ஆனாலும், ஏதேனுமொருபடி நீரும் சிறிது செய்துவந்து கிட்ட வேண்டாவோவென்ன; உன்னைவந்துகிட்டு முபாயமறியேனென்கிறார்.

(வந்தெய்துமாறறியேன்) வந்துகிட்டுமுபாயமறிகிறிலேன். நீதானே மேல்விழுந் துன்வடிவழகைக்காட்டாநின்றால் அத்தைவிலக்காமைக்கு வேண்டுவதுண்டு; என்றாலுன்னையொரு சாதநாநுஷ்டாநம்பண்ணிவந்து கிட்டப்போகாது. ஆனாலிழந்தாலோவென்ன; இழக்கலாயோவென்படி யிருக்கிறதென்கிறார் (மல்குநீலச்சுடர்தழைப்ப) வடிவழகில்லையென்றுவிடவோ, பெறுவிக்கைக்குப்புருஷகாரமில்லையென்றுவிடவோ, எனக்காசையில்லையாய்விடவோ. (மல்குநீலச்சுடர்) குறைவற்றநீலப்புகரானது. (தழைப்ப) கர்மநிபந்தநமாகவந்ததல்லாமையாலே மேன்மேலனமிக்குவருமிறே; இவ்வளவென்ன வொண்ணாதபடி மேன்மேலனவளராநிற்கும். (செஞ்சுடர்ச்சோதிகள்பூத்து) சிவந்தசுடரை யுடைத்தாயிருந்துள்ளதேஜஸ்ஸானது, காலப்பூவலர்ந்தாப்போலேபூத்து. (ஒருமாணிக்கம்சேர்வதுபோல்) அநுபவயோக்யமாம்படி யொருமாணிக்கமானது சாய்ந்தாப்போலே. மல்குநீலச்சுடர் தழைப்பவென்கையாலே - நிறமிருந்தபடிசொல்லிற்று; செஞ்சுடர்ச்சோதிகள் பூத்தென்கையாலே - திவ்யாவயவங்களிருந்தபடிசொல்லிற்று; ஒருமாணிக்கம்சேர்வதுபோ லென்கையாலே-இரண்டுக்கு மாச்ரயமான திருமேனி தன்னைச்சொல்லுகிறது.

செஞ்சுடர்ச்சோதிகள் பூத்தென்கிறவிடத்தில் தெரியாதபடி மறைத்துச் சொல்லிற்றென்றுண்டிறே, அதுதன்னை வ்யக்தமாகச்சொல்லுகிறார் மேல் (அந்தரமேலித்யாதி) அந்தரம் - நடுவு. உடம்புக்குநடுவு அரை. திருவரையில் திருப்பீதாம்பரத்தோடே, திருவடிகள்; திருநாபிகமலம், திருக்கைகள், பெரியபிராட்டியாரெழுந்தருளி யிருக்கையாலே கீழ்ச்சொன்னவற்றோடொக்கச் சொல்லலாம்படி சிவந்திருக்கிற திருமார்பு, திருக்கண்கள், திருப்பவளம், இவை. (செஞ்சுடர்ச்சோதிவிட) சிவந்தசுடரையுடைத்தான தேஜஸ்ஸை ப்ரசரிக்க. (உறையென்திருமார்பனையே) இதுவுமோராபரணம்போலே. என் ஸ்வாமிநியானபெரியபிராட்டியாரைத் திருமார்விலே யுடையவனை. திருப்பாற்கடலிலே நீருறுத்தாதபடி திருவநந்தாழ்வானைப் படுக்கையாகக்கொண்டு, அதிலேநாநாவர்ணமாயிருப்பதொரு மேல்விரியைவிரித்தாப்போலே, அவன்சாய்ந்தருள, மேலெழுந்தருளியிருக்குமாயிற்றுப்பிராட்டி. (மேல்விரி - திருப்படுக்கைமேலே யலங்காரமாகப்படுத்துமது.) "வாஸ்ராயேணவுஜ்வஸ்த்தைஃ" (பர்யாயேணப்ரஸுப்தஃ) என்னக்கடவதிறே......................................*

ஜீயர் அரும்பதம்.

ஆறாம்பாட்டு (வந்தெய்துமித்யாதி) "வந்தெய்துமாறறியேன்" (என்ற த்தைக்கடாக்ஷித்தவதாரிகை (ஆறுலுமித்யாதி) 'ஆறுலும்' என்றது - நீரசக்தராறு லுமென்றபடி.

ஆறு - உபாயம். பலிதம் (நீதானேயித்யாதி) எய்துமாறறியேனென்றதே, "வந்தெய்துமாறறியேன்" என்கையாலே - 'விலக்காமைக்கு வேண்டுவதுண்டு' என்று தோற்றுகிறது.

மேலுக்கவதாரிகை (ஆறுவிறந்தாலோவித்யாதி) "மல்குநீல" என்று தொடங்கி "சோதிவிட" என்றதைப்பற்ற (வடிவழகில்லேயித்யாதி) "என்திருமார்வனை" என்றதைப்பற்ற (பெறுவிக்கைக்கித்யாதி) "வந்தெய்துமாறறியேன்" என்றத்தைப்பற்ற (எனக்காசையித்யாதி) "மல்குநீல" என்று - சம்ருத்திசொல்லியிருக்கமீளவும் "தழைப்ப" என்றதுக்குபாவம் (கர்மநிபந்தநமித்யாதி) விவரணம் (இவ்வளவென்னவித்யாதி) "சோதி" என்று - கிரணம். "செஞ்சுடர்ச்சோதியென்கிறது - விசதமாகாமையாலே விவரிக்கிறார்" என்று நினைத்து, மூன்றுந்தானின்னதென்கிறார் (மல்குநீலவித்யாதிவாக்யத்ரயத்தாலே)

மூன்றையும் விவரியாமல் ஒன்றை விவரிப்பானென்னென்ன (செஞ்சுடர்ச்சோதிகளித்யாதி) 'மறைந்துச்சொல்லிற்று' என்றது - "மல்குநீலச்சுடர், ஒருமாணிக்கம்" என்கிறவற்றுக்கு - உபமேயம் ஸ்புடமாறுப்போலே, "செஞ்சுடர்ச்சோதிகள்பூத்து" என்கிறதுக்கு - தார்ஷ்டாந்திகம் திவ்யாவயவங்களென்று ஸ்புடமாகாமையாலேயென்றபடி. திருமார்வுக்குறததிருக்க, அவயவங்களோடேகூட்டு வானென்னென்ன (பெரியபிராட்டியாரித்யாதி)

பெரியபிராட்டியாரோட்டைச் சேர்த்தியையு மோராபரணமாக ரூபிக்கிறார் (இறவுமித்யாதி) "சேர்வதுபோல்" என்றநுபந்துக்குச்சேர வின்னவிடத்திலேயென்னவேண்டுகையாலே யத்தையருளிச்செய்கிறார் (திருப்பாற்கடலிலேயித்யாதி) "மலராள்தனத்துள்ளான்" என்னவேண்டியிருக்க, அவன்மார்விலேயிருக்கிறாளென்னக்கூடுமோவென்ன (பர்யாயேணேத்யாதி) "பரிஶ்ராந்தஸ்ய ராவணாஜ்ஞாநம் விபஞ்சீ | பர்யாயேணப்ரஸுப்தஸ்ய ஸ்தநாந்தரகதம் ஸுஜோ" (பரிஶ்ராந்தப்ரஸுப்தநாசராகவாங்கேஸ்மயஹாம்பிரம் | பர்யாயேணப்ரஸுப்தஸ்சமமாங்கேபரதாக்ரஜோ) இதி ஸுந்தரகாண்டே வாயஸவ்ருத்தாந்தகதநப்ரகரணே. இதுக்கு - "பரிஶ்ராந்த" (பரிஶ்ராந்த) இத்யாதி பூர்வார்த்தத்திலேநோக்கு. 'மேலெழுந்தருளியிருக்குமாயிற்று' என்றவிடத்திலே - "மலயஜஸுரபி விஷ்ணு" (மலயஜஸுரபிலிப்தம்) இத்யாத்யநுசந்தேயம்.

மல்குநீலவென்றுதொடங்கி, திருமார்பனை - வந்தெய்துமாறறியேன் இத்யந்வய: .... *

ஏழாம்பாட்டு.

என்திருமார்பன்றன்னையென்மலைமகள்கூறன்றன்னை
யென்றுமென்னுமகளையகம்பாற்கொண்ட நான்முகனை
நின்றசீபதியைநிலங்கீண்டெயின்மூன்றெரித்த
வென்றுபுலன்றுரந்தவிசும்பாளியைக்காணேனே.

௩௩

ஆறாயிரப்படி.

(என்றிருமார்பன்றன்னை) உன்னுடையபோகப்ரவ்ருத்திகள் த்வததீநமானுப்போலே, ப்ரஹ்மருத்ராதிகளுடைய போகப்ரவ்ருத்திகளும் த்வததீநம்; ஆனபின்பு, என்னுடையவபேக்ஷிதமும் த்வத்ப்ரஸாதைகலப்யம்; இங்ஙனேயிருக்கச்செய்தே, நீயோவென்னபேக்ஷிதம் செய்தருளுகிறிலை; நானினியுன்னைக்காணப்பெறாதே போமத்தனையாகாதே யென்கிறார்...*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், ஸ்வேநரூபேணவும் கார்யபுருஷரூபேணவும் நின்று சர்வப்ரகாரரக்ஷணம்பண்ணுகிற வவனைக்காணப்பெறேனேயென்கிறார்.

என்திருமார்பன்றன்னை-சேஷித்வஸூசகமான ஸ்ரீயஃபதித்வத்தை யெனக்கு ப்ரகாசிப்பித்தவனாய். என்மலைமகள்கூறன்றன்னை-பார்வதியை சரீரார்த்தத்திலேயுடைய ருத்ரனைப்ரகாரமாகவுடையனாய் நிற்கிறநிலையை யெனக்குக்காட்டினவனாய். என்றும்-என்றும். என்நாமகளையகம்பால்கொண்டநான்முகனை- நாமகளானசரஸ்வதியை அந்தரங்கமஹிஷியாய்க்கொண்ட சதுர்முகப்ரகாரத்வத்தை யெனக்குப்ரகாசிப்பித்தவனாய். நின்ற - இவர்களோடு சமகணனையிலே நிற்பானாய். சசீபதியை-ஸசீபதியான விந்த்ரனைப்ரகாரமாகவுடையனாய். ஸ்வேநரூபேண, நிலங்கீண்டு-பூம்யுத்தரணம்பண்ணியும். ருத்ராந்தராத்மாவாய்க்கொண்டு, மூன்றெயிலெரித்த-த்ரிபுரதஹநம்பண்ணியும். ப்ரஹ்மாவுக்குள்ளீடாகநின்று, ஸ்ருஷ்ட்யுபயுக்தமாக, புலன்-இந்த்ரியங்களை. வென்று-ஜயித்து. அரந்த - ஒட்டியும். இந்த்ரசரீரியாய்க்கொண்டு, விசும்பாளியை - ஸ்வர்க்கநிர்வஹணம்பண்ணியும்ரக்ஷித்தவனை. காணேனே - காணமாட்டேனே.

இப்படி சர்வப்ரகாரரக்ஷணவ்யாபாரத்தை யுடையவனைக்காண்கையே ப்ரயோஜநமான வெனக்குக்காணக்கிட்டாதொழிவதே யென்றுகருத்து. எயில் - மதிளாய், புரத்தைக்காட்டுகிறது...*

ஈடு - ஏழாம்பாட்டு.

உத்தேசியலாபமவனாலேயாயிருந்தது, இத்தலையாலே ப்ரவர்த்திக்கைக்கு ப்ராப்தியில்லாதபடியான பாரதந்த்ர்யமுண்டாயிருந்தது, அத்தலையாலே பெறுமிடத்தி லொருகண்ணழிவின்றிக்கே யிருந்தது; இப்படியிருக்கச்செய்தேயு மிழந்திருக்கக் காண்கையாலே, "நானிவ்விழவோடே கிடந்து முடிந்துபோமித்தனையாகாதே" என்கிறார்.

(என்றிருமார்பன்றன்னை) இவ்விடத்திலே "என்" என்கிறவிதுக்கு-விசேஷணம்சத்திலே யந்வயம் * என்றிருமகள்சேர்மார்வனிற்போலே. என்ஸ்வாமிநியான பெரியபிராட்டியாரைத் திருமார்விலேயுடையவனை. (இதுவிசேஷணத்திலும் விசேஷ்யத்திலும் விசிஷ்டத்திலும்; ஆச்ரயணதசை ப்ராப்திதசை போகதசை.)

(என்மலைமகளித்யாதி) இவ்வேோபதங்களில் "என்" என்கிறவிதுக்கு - விசேஷ்யாம்சத்திலே யூற்றம். அவனுடைய விபூதியோகத்துக்

குறுப்பாகச் சொல்லு மித்தனைபோக்கி, "மறந்தும்புறந்தொழாமாந்தர்" என்றிருக்குமவர், இவர்களோடே தமக்கோரன்வய முண்டென்கிறு ரல்லரே. (என்மலைமகள்கூறன்றன்னை) ஹிமவானுடைய பெண்பிள்ளையைத் தன்னுடம்பி லொருபார்ச்வத்திலே புடையனுயிருக்கிறருத்ரனைத் தானிட்டவழக்காக வுடையனுயிருக்கிறவனை. (என்றுமித்யாதி) சரஸ்வதியை, என்றுமொக்கத் தன்பக்கலிலே புடையனுயிருக்கிற சதுர்முகனுக்கந்தராத்மாவாயுள்ளவனை. (நின்றசசிபதியை) இவர்களை யெண்ணினுல் தன்னை யெண்ணலாம்படி ஐஶ்வர்யத்தால் குறைவற்றிருக்கிற விந்த்ரனுக்கந்தராத்மாவாயுள்ளவனை. "ஸப்ரஹ்மாஸஶிவஃ" (ஸப்ரஹ்மாஸஶிவ:) என்றுல் "ஸேந்த்ரஃ" (ஸேந்த்ர:) என்றுக்கச் சொல்லலாம்படி முட்டுப் பொறுத்துநின்ற விந்த்ரனுக்கந்தர்யாமியாயுள்ளவனை.

இப்போதிவைசொல்லுகிறதுக்குக் கருத்தென்னென்றுல்; இவ்வேஸ்வரூபமுமுச்ச்ராயமும் ததீநமென்றது ; இங்கே-ப்ராப்தயௌவநரான புத்ராதிகளை சத்ருஸவிஷயங்களிலே விவாஹம்பண்ணுவிக்கும்பித்ராதிகளைப்போலே, இவர்களுடைய மஹிஷீலாபமும் தந்தாமாலல்ல, சர்வேஶ்வரனலே யென்கை. (நிலங்கீண்டித்யாதி) இவர்களுடைய ப்ரவ்ருத்திகளுமெல்லாம் ததீநமென்கிறதுமேல் (நிலங்கீண்டு) ப்ரளயார்ணவமக்னையா யண்டபித்தியிலேபுக் கொட்டினபூமியை மஹாவராஹமாய்ப்புக்கெடுத்துக்கொண் டேறினபோதை வ்யாபாரம் ததீநமானப்போலே, அவர்களுடைய வ்யாபாரங்களும் ததீநமென்கிறது. (எயில்மூன்றெரித்த) மதிள்மூன்றையெரித்த. "விஷ்ணுராத்மா" (விஷ்ணுராத்மா) என்னக்கடவதிறே; அதுவுமவனிட்டவழக்கு. (வென்றுபுலன்துரந்த) ஸ்ருஷ்டிக்குறுப்பாக விந்த்ரியஜயந்தைப்பண்ணினவனை. புலன்களை வென்றோட்டின. (விசும்பாளியை) ஸ்வர்க்கத்தை வன்னியமறுத்தாளுகிறவனை. (இங்குப்ரவ்ருத்திவிசிஷ்டரான விவர்களோடே சமாநாதிகரித்தது, சகலப்ரவ்ருத்தியுமவனதீநையாகையாலே யென்னுடையவபேக்ஷித சித்திக்கவனையொழிய வென்றுஞ்செய்யலாவதில்லை யென்கைக்காக.) (காணேனே) ஆகச்சொல்லிற்றுயிற்றது-உத்தேஶ்யலாபமவனலேயாயிருந்தது, அதுக்குறுப்பான ப்ரவ்ருத்தியில் வ்யாபரிக்க ப்ராப்தியில்லாதபடிஅதுவுமவனிட்டவழக்காயிருந்தது. இனி இத்தலையாலே பேறுமன்று விளம்பஹேதுவுண்டாயிருந்தது; அவனலே பேறுமன்று விளம்பஹேதுவின்றிக்கேயிருந்தது. இப்படியிருக்கச்செய்தேயும் தம்மை யிழந்திருக்கக் கண்டார், ஆகையாலே "இனி இவ்விழவோடே யிங்ஙனே முடிந்துபோமித்தனையாகாதே" என்று க்லேசிக்கிறுர்...................................*

ஜீயர் அரும்பதம்.

ஏழாம்பாட்டு (என்றிருமார்பனித்யாதி) ப்ரஹ்மாதிகளை ஸ்வஸ்வமஹிஷிகளோடேகூடச் சொல்லுகிறதுக்குக்கருத்து - "அவரவர்களுக்கபிமதமான விஷயங்

களை ஈஶ்வரன் தலைக்கட்டிக்கொடுக்கும்" என்றிறே; "இப்படியே நமக்கு மபிமதமான தன்திருவடிகளில் கைங்கர்யத்தையுந்தரும்" என்றுவிவக்ஷித்து 'உத்தேஶ்யலாபமவனாலேயாயிருந்தது' என்கிறார். "எயில்மூன்றெரித்து" இத்யாதியாலே- இவர்கள் ப்ரவ்ருத்தியுமவனதீநமென்கையாலே, "தமக்குசாதநாநுஷ்டாநம்பண்ண ப்ராப்தியில்லாதபடியான பாரதந்த்ர்யந்தோற்றுகிறது" என்றுவிவக்ஷித்தருளிச்செய்கிறார் (இத்தலையாலேயித்யாதி) "என்திருமார்வன்றன்னை" என்றத்தைப்பற்ற (அத்தலையாலேயித்யாதி) கண்ணழிவு-விளம்பம். "காணேனோ" என்றத்தைக்கடாக்ஷித்தருளிச்செய்கிறார் (இப்படியிருக்கச்செய்தேயுமித்யாதி)

கீழைப்போலே "என்" என்கிறவை விசேஷணாம்சாந்வயியன்றென்கிறார் (இவ்வோபதங்களிலித்யாதி) விசேஷ்யாம்ஶத்திலேயென்றது - பரமவிசேஷ்யனான ஈஶ்வரனிடத்திலென்றபடி. விசேஷணாம்சத்திலூற்றமானால் விரோதமென்னென்ன (அவனுடையவித்யாதி) இவர்களோடே தன்னையுமெண்ணலாம்படியிருக்குமோவென்ன (ஸப்ரஹ்மேத்யாதி)

ருத்ராதிகளை ஸ்வஸ்வமஹிஷிகளோடே சொல்லுகிறதுக்குபாவத்தை சங்காபரிஹாரமுகேந வருளிச்செய்கிறார் (இப்போதிவையித்யாதி) இவைசொல்லுகிறதுக்கு - மஹிஷிகளோடே யிவர்களைச்சொல்லுகிறதுக்கென்றபடி.

ஆனால், "திலங்கீண்டு" என்று ஸ்வவ்யாபாரம் சொல்லுவானென்னென்ன; த்ருஷ்டாந்தார்த்தமென்கிறார் (ப்ரளயார்ணவேத்யாதி) த்ரிபுரத்தைதஹித்தவன் சர்வேஶ்வரனோவென்ன (விஷ்ணுராத்மேத்யாதி) இந்த்ரியஜயம் - ப்ரஹ்மாவின் கார்யம். "காணேனோ" என்றது-காணப்பெறேனோவென்றபடி. பலிதம் (ஆகவித்யாதி) ப்ரவ்ருத்திகளும் தததீநமென்கையாலே-ப்ரகரணத்துக்குபலித்தபாவம் (இனியித்தலையாலே யித்யாதிநாலுவாக்யத்தாலே)

க்ரமேணாந்வய: ....*

எட்டாம்பாட்டு.

ஆளியைக்காண்பரியாயரிகாணரியாயரக்க
ரூளையிட்டன்றிலங்கைகடந்துபிலம்புக்கொளிப்ப
மீளியம்புள்ளைக்கடாய்விறன்மாலியைக்கொன்றுபின்னு
மாளுயர்குன்றங்கள்செய்தடர்த்தானையுங்காண்டுங்கொலோ.

ஆறாயிரப்படி.

(ஆளியை) ஆளியைககண்ட குதிரையைப்போலேயும், ஸிம்ஹத்தைக்கண்ட நரியைப்போலேயும், ஹதசேஷரான ராக்ஷஸரெல்லாரும் பீதபீதரா யூளையிட்டு லங்கையினின்றும் ரஸாதலத்திலேபுக்கொளிக்கும்படியாக ப்ரதிகூலர்க்கு ம்ருத்யுபூதரான பெரியதிருவடிதிருத்தோளிலேயேறி லங்கையைச்சென்றடர்த்து, அதிபலபராக்ரமராயிருந்த மாலிசுமாலிகளை ஸஸைந்யமாகக்கொன்றருளினாப்போலே, விரோதியானவென்னுடைய பாபங்களையும்போக்கி யெனக்கென்றோ தன்னைக்காட்டி யருளுவதென்கிறார்...*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், மாலிப்ரப்ருதிகளை நிரசித்த வுபேந்த்ரமூர்த்தியானவனைக் காணக்கூடுமோவென்கிறார்.

ஆளியை-யாளியை. காண்-கண்ட. பரியாய்-குதிரைபோலவும். அரி-ஸிம்ஹத்தை. காண்-கண்ட. நரியாய்-நரிபோலவும். அரக்கர் - ராக்ஷஸரானவர்கள். அன்று-யுத்தோத்யோகம்பிறந்தவன்று. ஊளையிட்டு-பயாதிசயத்தாலே கதறிக்கொண்டு. குளவிகூட்டைவிட்டுப்பறந்துபோமாபோலே, இலங்கை - இலங்கையை. கடந்து-விட்டு. பிலம்-பிலத்வாரத்திலே. புக்கு-புக்கு. ஒளிப்ப-பாதாளத்திலே யொளிக்கும்படி. மீளி-பெருமிடுக்கனாய். அம்-தர்சநீயனான. புள்ளை - பெரியதிருவடியை. கடாய்-நடத்தி. விறல்-ப்ரபலனான. மாலியை-மாலியை. கொன்று-கொன்று. பின்னும்-அவ்வளவிலேவிடாதே. ஆள்-அதிக்ரூரரானபுருஷர்களை. கொன்று, உயர் - உயர்ந்த. குன்றங்கள்-மலைகளாக. செய்து-பண்ணி. அடர்த்தானையும்- அவர்களையழிக்குமுபேந்த்ரனையும். காண்டுங்கொல்-காணக்கூடுமோ.

மாலிசுமாலி ப்ரப்ருதிகளை யழியச்செய்தாப்போலே, நம்முடைய அஹங்கார மமகார ப்ரதாநமான ராகத்வேஷாதிகளையு மழிக்கக்காண்போமோவென்று கருத்து. மீளி-மிடுக்கு..*

ஈடு - எட்டாம்பாட்டு.

மாலிதொடக்கமான ப்ரதிகூல வர்க்கத்தைக் கொன்றருளின சர்வேச்வரனைக் காணவல்லோமே யென்கிறார்.

முதலிரண்டுபாட்டாலே-ப்ராப்யனவனே என்னுமிடம்சொல்லி, மேலேந்துபாட்டாலே - ப்ராபகனவனே தன்னைப் பெறுகைக்கு என்னுமிடத்தைச்சொல்லி, இப்பாட்டாலும் மேலிற்பாட்டாலும் - அவனுடைய விரோதிநிரஸநசீலதையைச் சொல்லி, ப்ரதிபந்தகத்தைப் போக்குவான வனே யென்னுமிடத்தைச் சொல்லுகிறது.

(ஆளியைக்காண்பரியாய்) ஆளியைக்கண்ட குதிரையைப் போலவும். (அரிகாணரியாய்) ஸிம்ஹத்தைக்கண்ட நரியைப்போலவும். ஸ்ரீ ராமாயணத்தே - அந்த ராக்ஷஸர் பயப்பட்டபடியாகப் பலவுதாஹரணங்களையிட்டுச் சொல்லிப் போரக்கடவதிறே; இங்கே இரண்டுவகையாலே யத்தை ஸூசிப்பிக்கிறார். பரி-குதிரை. (அரக்கரூளையிட்டு) கீழே "நரி" என்கையாலே - அந்த ஸமாதியாலே சொல்லுகிறார். (ராக்ஷஸர்திரளநின்றொரு ப்ரவ்ருத்திபண்ணமாட்டாதே கதறிக்கொண்டு.)

(அன்றித்யாதி) ("மாலி, மால்யவான், ஸுமாலி" என்கிறவர்களை, பெரியதிருவடியைமேற்கொண் டழியச்செய்கிறவன்று.) தூசித்தலையில் நேர்நின்று வ்யாபரிக்க க்ஷமரல்லாமையாலே லங்கையை விட்டுப்போய், பாதாளத்திலேபுக்கொளிக்க. புற்றுக்களெப்போதுமொக்கப் பாம்பு பற்றறுதாப்போலே, என்றுமொக்க ராக்ஷஸர்மாறாதே, " மாலி, சுமாலி, மால்யவான் " என்றாப்போலே சொல்லுகிறவர்கள் வர்த்தித்துப் போந்தார்களாய், பெரியதிருவடி முதுகிலே வந்து தோன்றி அவர்களை நிரஸித்தா

ஞகச் சொல்லக்கடவதிறே; அத்தை யிங்கே ப்ரசங்கிக்கிருர். (பிலம்புக் கொளிப்ப) கையிலாயுதம் போகட்டாரையும், முதுகுகாட்டினாரையும் கொல்லக்கடவதல்லவிறே; ஆகையால், தப்பியோடிப்போ யொளிப்பாரும் உள்ளேபட்டுப்போனாருமாய்ப் போனார்களாயிற்று.

(மீளியம்புள்ளைக்கடாய்) மீளியமென்று - ஒருசொல்லாய், வலியையுடைய பெரியதிருவடியை நடத்தியென்னுதல்; மீளி அம் புள் என்று பிரித்து "கறையணிமூக்குடைப்புள்ளைக்கடாவி" என்கிறபடியே ப்ரதிகூலர்க்கு ம்ருத்யுபோலே யிருப்பானாய், "தூவாயபுள்ளூர்ந்து" என்கிறபடியே அநுகூலர்க்கு தர்ஶநீயமான வேஷத்தையுடைத்தான பெரியதிருவடியை நடத்தியென்றுதல். பெரியதிருவடி முதுகிலேவந்துதோற்றும்போதை யழகையேயிறே யிவர்கள் பாவித்துக்கிடப்பது. மீளியென்று-வலிக்கும், ம்ருத்யுவுக்கும், பாலைநிலத்தில் தலைமகனுக்கும் பேராகச்சொல்லுவர்கள். (விறல்மாலியைக்கொன்று) ஆக, ப்ரஸித்தரிலே யொருவனைச்சொல்லிற்று. (பின்னுமித்யாதி) பின்பும், ஆண்பிள்ளைகளாயிருப்பா ரநேகரை யழியச்செய்து, அவர்களாலே பிணமலையாம்படி பண்ணி. ஆளாலே உயர்ந்தமலைக ளுண்டாம்படி பண்ணி. (அடர்த்தானையும் காண்டுங்கொலோ) அவனுசுரவர்க்கத்தை யழியச்செய்தாப்போலே, நம்விரோதிகளைப்போக்கி நமக்குக் காட்சியிலே யந்வயமாய், நாம் கண்டோமாய்த்தலைக்கட்டவல்லோமோ..*

ஜீயர் அரும்பதம்.

எட்டாம்பாட்டு (ஆளியையித்யாதி) "விறல்மாலியைக்கொன்று பின்னுமாளுயர்குன்றங்கள் செய்தடர்த்தானையுங்காண்டுங்கொலோ" என்றபதங்களைக்கடாக்ஷித்தவதாரிகை (மாலிநொடக்கமானவித்யாதி)

கீழ்ப்பாட்டுக்களோடே யிதுக்கு சங்கதியேதென்ன (முதலித்யாதி)

ஆளி-சரபம். இப்படி த்ருஷ்டாந்தம்சொல்லுகிறதுக்கு ப்ரமாணமுண்டோவென்ன (ஸ்ரீராமாயணத்தேயித்யாதி) பலவுதாஹரணங்களையென்றது - பலத்ருஷ்டாந்தங்களையென்றபடி. அவைகளாவன - "ஶரபேண யதா ஸிம்ஹா: ஸிம்ஹேந த்விரதா யதா | த்விரதேந யதா வ்யாக்ரா வ்யாக்ரேண த்வீபிநோ யதா" (ஶரபேணயதாஸிம்ஹாஸ் ஸிம்ஹேநத்விரதாயதா | த்விரதேநயதாவ்யாக்ராவ்யாக்ரேணத்வீபிநோயதா) இத்யாரப்ய, "ததா தே ராக்ஷஸா யுத்தே விஷ்ணுநா ப்ரபவிஷ்ணுநா | த்ரவந்தோ த்ராவிதா: ஸர்வே ஶாயிதாஶ்ச மஹீதலே" (ததாதேராக்ஷஸாயுத்தேவிஷ்ணுநாப்ரபவிஷ்ணுநா | த்ரவந்தோத்ராவிதாஸ்ஸர்வே ஶாயிதாஶ்சமஹீதலே) இத்யந்தம்சொன்னவைகளை, இவை உத்தரஸ்ரீராமாயணத்திலே மாலிஸுமாலியுத்தே.

கூப்பிட்டென்னுதே "ஊளையிட்டு" என்றதுக்குபாவம் (கீழேயித்யாதி)

" அன்று " - பெரியதிருவடியைமேலேகொண்டு, மாலிசுமாலி மால்யவான் முதலானரை யழியச்செய்தவன்றென்றபடி. லங்கையைவிட்டுப்போகவேண்டுவா

னென்னென்ன (கையிலித்யாதி) யுத்தத்திலே பட்டுப்போனருமாயென்றபடி. உள்ளேயென்றது-லங்கைக்குள்ளேயென்றபடி.

திருமொழி (தூவாயபுள்ளூர்ந்து) அழகியவாயையுடைய புள்ளை நடத்தி என்றபடி. பெரியதிருவடி அநுகூலர்க்கு தர்சநீயரென்னென்ன (பெரியதிருவடியித்யாதி) "பண்கொண்டபுள்ளின் சிறகொலிபாவித்து" என்றதைக்கடாக்ஷித்து (இவர்கள் பாவித்துக்கிடப்பதென்றது) "மீளி" என்று - வலி. ம்ருத்யுவைச்சொல்லுமோவென்ன (மீளியென்றித்யாதி)

அவதாரிகையிலே "மாலிதொடக்கமான" என்றுவைத்து, இங்கொருவனைக்கொன்றென்கிற தென்னென்ன (ஆகப்ரஸித்தரிலேயித்யாதி)

சப்தார்த்தம் (ஆளாலேயித்யாதி) பதப்ரயோகத்துக்கு ஹார்த்தபாவம் (அவனைசுரேத்யாதி)

க்ரமேணாந்வய: ....*

ஒன்பதாம்பாட்டு.

காண்டுங்கொலோநெஞ்சமேகடியவினையேமுயலு
மாண்டிறன்மீளிமொய்ம்பிலரக்கன்குலந்தடிந்து
மீண்டுமவன்றம்பிக்கேவிரிநீரிலங்கையருளி
யாண்டுதன்சோதிபுக்கவமரரரியேற்றினையே.

ஆறாயிரப்படி.

(காண்டுங்கொலோ) பின்னையும் க்ரூரகர்மத்திலே நிரதனாய் வீர்யதேஜோவிஶிஷ்டனாய் ம்ருத்யு சத்ருஸனுமாயிருந்த ராவணனுடைய குலோத்ஸாதநத்தைப்பண்ணி, "அவனைக்கொன்றோமே" என்றுதிருவுள்ளத்திலேநொந்து, அவன்றம்பியான ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கு லங்கைஸ்வர்யத்தைக்கொடுத்தருளி, மீண்டெழுந்தருளி, ஸ்வவிஸ்லேஷ ஜநிதநிரவதிகவ்யஸநத்தாலே விநஷ்டப்ராயமான திருவயோத்யாநகரியிலுள்ள ஸ்தாவரஜங்கமாத்மகமான சர்வஜந்துஜாதத்தையும் ரக்ஷித்தருளி, அவர்களையுங்கூடக்கொண்டு திருநாட்டிலேயெழுந்தருளி, திருமாமணிமண்டபத்திலே * அயர்வறுமமரர்கள்நடுவே ப்ரதிகூலநிரஸந ஜயமாநஜயத்தோடேகூட வெழுந்தருளியிருக்கிறவிருப்பை, நெஞ்சே நாமுமொருநாள் காணவல்லோமோவென்கிறார் ....*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், விபீஷணபக்ஷபாதத்தாலே ராவணகுலத்தை நிஶ்ஶேஷமாகமுடித்து அவனுக்கு லங்காதிபத்யத்தையுங்கொடுத்துத் தானு மபிஷிக்தனாய் ராஜ்யம்பண்ணி * தன்னுடைச்சோதியேற வெழுந்தருளின சக்ரவர்த்திதிருமகனை, அந்த மேன்மையோடே யிருக்கச்செய்தே யவனைநாம் காணவல்லோமோவென்று நெஞ்சைக்குறித் தருளிச்செய்கிறார்.

கடிய-அதிக்ரூரமான. வினையே-பாஹிம்ஸாவ்ருத்தியையே. முயலும்-கல்பித்துப்பண்ணும் மநோரத்யோகத்தையுடையனாய். ஆண் - ப்ரதாபோஜ்வலமான பும்ஸ்த்வத்தையுடையனாய்க்கொண்டு. திறல் - பராபிபாவுகமான சௌர்யத்தையும். மீளி — சிம்ஹம்போலேயிருக்கும். மொய்ம்பில் - பெருமிடுக்கையுடையனான, அரக்கன் — ராக்ஷசஜந்மாவான ராவணனுடைய. குலத்தை - ப்ராதாவான கும்பகர்ணனும் இந்த்ரஜித்ப்ரமுகபுத்ரருமானகுலத்தை. தடிந்து - நிஶ்ஶேஷமாக வறுத்துப்பொகட்டு. அவ்வளவில்விடாதே, மீண்டும்-பின்னையும். அவன்தம்பியாயிருக்கச்செய்தே, ஆஶ்ரயணோபகாரமடியாக, அவன்றம்பிக்கே-விபீஷணனுக்கு. விரி - விஸ்தீர்ணமான. நீர்-சமுத்ரஜலத்தையுடைத்தான. இலங்கை-லங்கையை. அருளி - ராஜ்யமாகக்கொடுத்து. ஆண்டு-திருவயோத்யையிலெழுந்தருளி யபிஷிக்தராய்ப் பதினோராயிரம் சம்வத்ஸரம் ராஜ்யம்பண்ணி. தன்-தனக்கஸாதாரணமாய். சோதி-ஜ்யோதீரூபமானபரமபதத்திலே. புக்க - சென்றிருப்பானாய். இந்தமேன்மையாலே, அமரர்-நித்யசூரிகளுக்கு, அரி-சிம்ஹஶ்ரேஷ்டம்போலே. ஏற்றினை - செருக்குத்தோன்ற வெழுந்தருளியிருக்கிறவனை. நெஞ்சமே-பிரிவுக்குக்கூட்டாயீடுபட்டுப்போந்த நெஞ்சமே. நாம், காண்டுங்கொலோ-காணக்கூடுமோ.

மீண்டென்று ஆண்டென்கிறவிடத்திலே யந்வயிக்கவுமாம். ரஜஸ்தமஃகார்யமான வந்யதாஜ்ஞாந விபரீதஜ்ஞாநங்களையும், தஜ்ஜநிதகாமக்ரோதாதிகளையும், ராவணகும்பகர்ணாதிகளை ஸஸந்தாநமாக வழித்தாப்போலேயழித்து, * தர்மாத்மாவான விபீஷணனுக்கு லங்காராஜ்யத்தைக்கொடுத்தாப்போலே, சுத்தசத்த்வகார்யமான ஜ்ஞாநவைசத்யத்தையுடைய நமக்கு கைங்கர்யஸாம்ராஜ்யத்தைத்தரும் சூரிசேவ்யனைக்காணக்கூடுமோவென்றுகருத்து. மீளியென்று-ம்ருத்யுவென்றுமாம். மொய்ம்பு-மிடுக்கு. திறல்-சௌர்யம் ....*

௯-ம் - ஒன்பதாம்பாட்டு.

ராவணாதிகளை நிரசித்ததசரதாத்மஜனை, நெஞ்சேகாணவல்லோமே யென்கிறார்

(காண்டுங்கொலோநெஞ்சமே) இழவாலேகட்டிக்கொண்டு கதறுகைக்குக் கூட்டானநீ, இப்பேற்றாலே நிர்வ்ருதரா யநுபவிக்கு மநுபவத்துக்கும் நீகூட்டாய் நாமவனைக்காணவல்லோமேயோ. (கடியவினையேமுயலும்) தாயையும் தமப்பனையுமிரண்டிடத்திலே யாக்குவாரைப்போலேயிறே, பெருமாளையும் பிராட்டியையு மிரண்டிடத்திலேயாக்கிற்று. இதில் தாழ்ந்திருப்பதொரு செயலில்லை யாயிற்றிவன் செய்யுமவற்றில். சர்வேஶ்வரனுக்கு "க்ரமத்தாலே பலம்கொடுக்கிறோம்" என்றாறியிருக்கவொண்ணாதபடியாயிற்றுக்கொடிய செயல்கள் செய்யும்படி. "ஐஹைவ ஸ்நுதே" (இஹைவபலமஶ்நுதே) என்னும்படியே.

அவதாரணத்தால் - சதாசாரசம்பந்தமில்லாதவன். (ஆண்டிறலீத்யாதி) ஆண்பிள்ளைத்தனத்தில்வந்தால், திறலையுடைய சிம்ஹம்போன்றமிடுக்கையுடைய வரக்கன். மீளி - சிம்ஹம். அன்றியே, திறலையுடையனாய், பராபிபவநசாமர்த்த்யத்தையுடையனாய், ம்ருத்யுகல்பமான மிடுக்கையுடையனான ராவணனுடைய குலத்தைத்தடிந்து. தடிகை - கடிகை,

“க்ஷிபாம்யஜஸ்ரமஶுபாநாஸுரீஷ்வேவ யோநிஷு” (கழிஷ்யேமை திலிடுப்பதோரப்ராசமாக்ஷஸம்) என்கிறபடியேகுலமாகநிரசித்து. (அவன்றம்பிக்கேவிரிநீரிலங்கையருளி) “யதிவாராவணஸ்ஸ்வயம்” (யதிவாராவணஸ்ஸ்வயம்) என்று - சரணமென்றபாசுரமழகிதாயிருந்தது, “அவனோடு சம்பந்தமுடையாரொருவன் வந்தானாகையன்றிக்கே, அவன்றானே வரப்பெறுவதானால்” என்று செவிசிப்பாய்த்திருந்தாரிறே. அங்ஙனன்றும் வந்தானொருவனைக் கைக்கொண்டாராக வமையாதோ, இங்ஙனிர்ப்பந்தமென்னென்னில்; அவனோடு சம்பந்தமுடையானொருவனைக் கைக்கொண்டால் அவன்றானும் நாளும்பெறுமே யாய்ப்போம், அவன்றானே வரப்பெற்றதாகில் அநாயாஸேநகூட்டக நோக்கிற்றாகலாமிறே; இனித்தான் ப்ராதிகூல்யத்தில் முதிர நின்றுவுமவனே யாகையாலே, ரக்ஷகாபேக்ஷையுள்ளது மவனுக்கேயிறே. இப்படியவனை விஷயீகரிக்கக்கோலிப்பெறுத விழவிருந்த இவனைக் கைக்கொண்டபின்பாயிற்று. “அநுஜோ ராவணஸ்யாஹம்” (அநுஜோராவணஸ்யாஹம்) என்று அவன்வர, இவரும் “அவன்றம்பிய” என்றுபிற்றவனைக் கைக்கொண்டது. (விரிநீரிலங்கையருளி) கடல்சூழ்ந்த லங்கையைக்கொடுத்தருளி.

(நீண்டும் - ஆண்டு) ராவணவதாநந்தரத்திலே, ப்ரஹ்மாதிதேவர்கள் “தேவரையம்புக்கிலக்காக்கி, நாங்கடுமெங்கள்காரியம் தலைக்கட்டிக்கொண்டோம்; இனி, தன்னுடைச்சோதியேற வெழுந்தருளவமையும்” என்ன, அவ்வளவிலே பரதாழ்வான், “தேவரங்கனசெய்தருளவொண்ணாது, திருவபிஷேகத்துக்கு விக்நம்பிறக்கையாலே திருத்தாய்மாரு மிழவுபட்டிருந்தார்கள், நாடுமுடையதொரத்திருந்தது, ஸ்ரீபரதாழ்வானு மார்த்தனாயிருந்தான், ஆனபின்பு, ‘உபவாஸக்ருஶம் தீநம்’ (உபவாஸக்ருஶந்தீநம்) என்கிறபடியே ஸ்ரீபரதாழ்வான் தொடக்கமானாரிழவுகளெல்லாந்தீரும்படி மீண்டெழுந்தருளி, திருமுடிசூடி, நாட்டைவாழ்விக்கவேணும்” என்ன, அதற்திருவுளத்துக்குப்பொருந்தும் செயலாகையாலே பதினோராயிரமாண்டொருபடிப்படவிருந்து நாட்டைவாழ்வித்தருளி.

(தன்சோதிபுக்க) அப்படிக்கிலக்காகவாழ்ந்திருந்தவிடத்தைவிட்டுத் தனக்கஸாதாரணமாய் நிரவதிகதேஜோரூபமாயிருக்கிற பரமபதத்திலேபோய்ப்புக்க. (அமரரிவேற்றனையே) அம்பிட்டெய்வாரின்றிக்கே ஆநுகூல்யமே ஸ்வபாவமாய் கைங்கர்யைகநிஷ்டரான நித்யஸூரிகள் நடுவே யவனிருக்குமிருப்பைக் காணவல்லோமே. கோவத்ஸசங்கத்தின்நடுவே யொருவ்ருஷபம் செருக்கித்திரியுமாபோலே, நித்யஸூரிகள்கொண்டாட, அவர்கள்நடுவே யத்தாலேசெருக்கிமேனாணித்திருக்கு மிருப்பைச்சொல்லுகிறது. நித்யஸூரிகள் திரளிலே அவ்வோலக்கத்தின்நடுவேயிருக்கு மிருப்பைக்காண்கையிறே ப்ராப்யமாகிறது ... .*

ஜீயர் அரும்பதம்.

ஒன்பதாம்பாட்டு (காண்டுங்கொலோவித்யாதி) "அரக்கன்குலத்தைத்தடிந்து" இத்யாதிகளைக்கடாக்ஷித்தவதாரிகை (ராவணநிரஸனயித்யாதி)

"நெஞ்சமே" என்று சம்போதித்து, "கொலோ" என்கிறவருடையஹார்த்த பாவம் (இழவாலேயித்யாதி) இப்பேற்றாலேயென்றது - பகவத்ஸாக்ஷாத்காரத்தாலேயென்றபடி. இது-"அமரரரியேற்றினை - காண்டுங்கொலோ" என்றதைப்பற்ற.

ராவணன்செய்த க்ரூரபாபமேதென்ன (தாயையுமித்யாதி) இது-அவதாரணத்துக்குபாவம். "கடியவினை" என்றதுக்கர்த்தம் (சர்வேச்வரனுக்கித்யாதி) "கொடியசெயல்களைச்செய்தால்சீக்ரமாகபலங்கொடுக்கவேணும்" என்னுமதுக்குப் ரமாணம் (இஹைவேத்யாதி) "[illegible]" (அத்யுத்கடைஃபுண்யபாபைரிஹைவபலமச்நுதே । த்ரிபிர்வர்ஷைஸ்த்ரிபிர்மாஸைஸ்த்ரிபிஃபக்ஷைஸ்த்ரிபிர்திநைஃ) இதிதர்மசாஸ்த்ரே. திறல் - மிடுக்கும், பராபிபவந சாமர்த்யமும். மீளி - சிம்ஹமென்னுதல், ம்ருத்யுவென்னுதல். மொய்ம்பு-மிடுக்கு. "[illegible]" (ஆகர்ணபூர்ணைரிஷுபிர்ஜீவலோகம்துராஸதைஃ । கரிஷ்யேமைதிலீஹேதோரபிசாசமராக்ஷஸம்) இத்யாரண்யகாண்டே,

விபீஷணனுக்கென்னுதே, "அவன்றம்பிக்கு" என்கைக்கு, அவன்சம்பந்தமங்கீகாரஹேதுவோவென்ன (யதிவேத்யாதி) "[illegible]" (விபீஷணோவாஸுக்ரீவயதிவாராவணஸ்ஸ்வயம்) இத்யாதி.

இதுக்கர்த்தம் (சரணமித்யாதி) செவிசிப்பாய்ந்து-ஆதரித்து. "ராவணன்றானேவரவேணும்" என்றாசைப்பட்டிருந்த பெருமாளுடையகருத்தை ப்ரசம்நோத்தரரூபேணவருளிச்செய்கிறார் (அங்குநின்றுமித்யாதி) அறுப்புக்கூடு - தூற்றுப்பொலி எல்லாரையும் நோக்கலாமென்றபடி.. ராவணனையே கைக்கொள்ளவேணுமென்னுமதுக்கு ஹேத்வந்தரம் (இனித்தானித்யாதி) ஆனாலவன்வந்தானில்லையேயென்ன (இப்படியித்யாதி) அப்படி தத்ஸம்பந்தமடியாகக் கைக்கொண்டாரோவென்ன (அநுஜ இத்யாதி) "[illegible]" (அநுஜோராவணஸ்யாஹம்தேநசாஸ்ம்யவமாநிதஃ।பவந்தம்ஸர்வபூதாநாம்சரண்யம்சரணம்கதஃ) இதிராமம் ப்ரதிவிபீஷணஃ. அதாவது - அவன் ஸ்வதோஷத்தை முன்னிட்டுக்கொண்டுவர, அதுவே பற்றாசாக வங்கீகரித்தாரென்றபடி.

(ஆச்வாஸ்யேதி) "[illegible]" (ஆச்வாஸ்யபரதம்தீநம் கௌஸல்யாஞ்சயசஸ்விநீம்) இத்யாதி, இதிருத்ரஃ. "அமரரரியேற்றினை - காண்டுங்கொலோநெஞ்சமே" என்றவருடையஹார்த்தபாவ (அம்பிட்டித்யாதி) "அரியேறு" என்றதுக்குபாவம் (கோவதுவித்யாதி) "அமரரரியேற்றினை - காண்டுங்கொலோ" என்றுகூட்டிபாவம் (நித்யசூரிகளித்யாதி)

கடியவினையித்யாரப்ய, அருளி, மீண்டும் - ஆண்டுதன்சோதிபுக்க வமரரரியேற்றினை - காண்டுங்கொலோ நெஞ்சமே இத்யந்வயஃ ....

பத்தாம்பாட்டு.

ஏற்றரும்வைகுந்தத்தையருளுநமக்காயர்குலத்
தீற்றிளம்பிள்ளையொன்ருய்ப்புக்குமாயங்களேயியற்றிக்
கூற்றியல்கஞ்சனைக்கொன்றைவர்க்காய்க்கொடுஞ்சேனைதடிந்
தாற்றன்மிக்கான்பெரியபரஞ்சோதிபுக்கவரியே.

ஆறாயிரப்படி.

(ஏற்றரும்) ஸ்ரீநந்தகோபருமாரனாய்வந்து பிறந்தருளி, * திண் கொளசுரனைத்தேய வளர்ந்தருளி, பந்தருபேணபோய்ப்புக்கு ப்ரதிகூல னான கம்ஸனை வஞ்சித்துக்கொன்றருளி, பின்னைபாண்டவர்களுக்காக தத் ப்ரதிகூலனான துர்யோதநனையும், க்ரூரமானவவனுடைய சேனையையும் நிப்சேஷமாக நசிப்பித்துப் பாண்டவர்களுக்கு ராஜ்யத்தைக்கொடுத்து, பின்னையுமவர்களுக்கொன்றும் செய்யாதானாய்த் திருநாட்டிலேபோய்ப் புக்கருளின பரமபுருஷனை அந்தது ஷ்ப்ராபமான திருநாட்டைநமக்கும் தந்தருளுமென்று தம் திருவுள்ளத்தைபாபவசிப்பிக்கிறார்.............*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், ஸ்வஜநமான ஸ்ரீவசுதேவ பாண்டவப்ரப்ருதிகளுடைய விரோதிகளை நிரசித்து ரக்ஷித்த க்ருஷ்ணன், நமக்குப் பரமபதத்தை யருளுமென்கிறார்.

ஈன்று - பிறந்தபோதே. இளம் - சுசைசவத்தையுடைய. பிள்ளை - பிள்ளையாய்க்கொண்டு. ஆயர்குலத்து - கோபகுலத்திலே. ஒன்றாய் - ஏகிபவித்து. புக்கு - புக்கு. மாயங்களே - பூதநாஶகடயமளார்ஜுநநிரசந ரூபமான வத்யாஶ்சர்யங்களையே. இயற்றி - ப்ரவர்த்தித்து. கூற்று - உடலேயுமுயிரையும்பிரிக்கும்ம்ருத்யுவின். இயல் - ஸ்வபாவத்தை யுடையனாய்க்கொண்டு. கஞ்சனை - ஸ்ரீவசுதேவர்தேவகியார்க்கு ப்ராணபூதனான தன்னைப்பிரித்த கம்சனை. கொன்று - நசிப்பித்து. பின்பு, ஐவர்க்கு-பாண்டவர்களைவர்க்கு. ஆய்-ஆய். கொடும்-க்ரூரமான. சேனை-துர்யோதநசேனையை. தடிந்து-அழியச்செய்து. இதெல்லாம் செய்தபின்பு, “ ஜணம்ஙுவுஜ்ருதி வலெ ” (ருணம்ப்ரவ்ருத்தமிவமே) என்று ஒன்றும்செய்யாதானைப்போலே நிற்றம் மிஞ்சுகையாலே, மிக்க-மிக்க. ஆற்றலான்-பொறையையுடையனாய். பெரிய-அபரிச்சிந்நமாஹாத்ம்யத்தையுடைந்தாய். பரஞ்சோதி-பரஞ்சோதிஶ்ஶப்தவாச்யமான பரமபதத்திலே. புக்க-பூபாரநிர்ஹரணநந்தரமெழுந்தருளிப்புக்க. அரி - * சிரியசிங்கமானக்ருஷ்ணனானவன். ஏற்றரும் - * பரமயோகிவாங்மநஸா பரிச்சேத்யஸ்வரூபஸ்வபாவமான. வைகுந்தத்தை-பரமபதத்தை. நமக்கு-நமக்கு. அருளும்-தன்க்ருபையாலே தந்தருளும்.

“ ஸவ-புவாமெஹெ ்ராமொக்ஷயிஷ ்ராமி ” (ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி) என்றுசமஸ்தவிரோதிநிவர்த்தகனானவன், “மாஶுசஃ” (மாஶுசஃ) என்கிறபடியே நம்மார்த்திதீரும்படி பலப்ரதனுமென்று கருத்து. அரியென்று - ஸம்ஜ்ஞையுமாம். பாபஹரஸ்வபாவனென்றுமாம்.............................*

ஈடு - பத்தாம்பாட்டு.

ப்ராப்யனவனே யென்னுமிடத்தைச்சொல்லி, தன்னைப்பெறுகைக்கு சாதநம்தானே யென்னுமிடத்தையுஞ்சொல்லி, விரோதிநிரசநம்பண்ணுவானுமவனே யென்னுமிடத்தையுஞ்சொல்லி, இப்படிநமக்குப்பேற்றுக்குக் கண்ணழிவின்றிக்கே யிருந்தபின்பு அவன்தன்னை நமக்குத்தருமென்றறுதியிடுகிறார்.

(ஏற்றரும்வைகுந்தத்தையருளும்நமக்கு) ஒருவராலும் ஸ்வயத்நத்தாலே ப்ராபிக்கவொண்ணாதிருக்கிற ஸ்ரீவைகுண்டத்தை யவன்றானே தரப்பெறவிருக்கிற நமக்குத்தரும்.

எல்லாவழியாலு மவன்ஸ்வபாவத்தையறிந்து "அத்தைத்தரும்" என்றிருந்தீரேயாகிலும், பெறவிருக்கிறநப்படியைப் பாராரேனென்னில் (ஆயர்குலத்தீற்றிளம்பிள்ளை) நம்படிபார்க்கவறியாதமுக்தன். "[illegible]" (முக்தஸாயுஜ்யதோபூ:) என்னக்கடவதிறே இவ்விடமிரண்டுவகையாலே சப்தம்வசிக்கக்கடவது. ஈற்றென்றுகொண்டு - முடிவாய், ஈற்றிளம்பிள்ளை யென்றாய் - அதிமுக்தனென்றபடி. அன்றிக்கே, ஈன்றிளம்பிள்ளையென்றாய் - கற்றிளம்பிள்ளையென்றபடி. இரண்டாலும் - அதிமுக்தனென்றபடி. (ஒன்றாய்ப்புக்கு) கம்சனும் பொய்யே மாதுலனாய் "வில்விழவுக்கு" என்றழைத்துவிட, இவனும்பொய்யே மருமகனாயதுக்கெல்லாம் நானேகடவனாக அபிமாநித்துப்போய்ப் புக்கானாயிற்று. அன்றிக்கே, "வில்விழவு" என்றுகொண்டொரு வ்யாஜத்தையிட்டுப்போய்ப்புக்கென்னுதல். (மாயங்களேயியற்றி) ஆயுதசாலையிலே புக்கு ஆயுதங்களை முறிப்பது, ஈரங்கொல்லியைக்கொன்று பரிவட்டம் சாத்துவது, குவலயாபீடத்தின் கொம்பைமுறிப்பது, மல்லரைக்கொல்லுவதான வாச்சர்யங்களையே செய்து. இயற்றுதல்-ப்ரவர்த்தித்தல். இவனிப்படிசெய்யப்புக்கவாறே அவற்றைக்கேட்டுப் பொறுக்கமாட்டாமை ம்ருத்யுபோலே கிளர்ந்தானாயிற்றுக்கம்சன் (கூற்றியல்கஞ்சனைக்கொன்று) மஞ்சத்திலேயிருக்கிறகம்சனைமுகம்கீழ்ப்பட விழவிட்டுக்கொன்றுபொகட்டானாயிற்று. இயல்வு- ஸ்வபாவம். [[illegible]] [விகளத்கிரீடமவநீதலேபாதயாமாஸ] என்றதுக்குப்பொருள் - "ராஜத்ரோஹிகளைக்கொல்லும்போது ராஜசிஹ்நங்களைவாங்கிக் கொல்லுவாரைப்போலேகாண்" என்றம்மாள். தான்கொடுத்த தரமாகையாலேமற்றொருவர்க்குத் தேற்றத்துக்குடலாகவேணுமிறே. (அதாவது - ஈச்வரன்கொடுத்த சிஹ்நங்களிருக்கில் அவன்றன்றாலும் கொல்லப்போகாதென்கை)

ஆக, தன்னைத்தானறிவதற்குமுன்பு, கம்சன்வரவிட்டவர்களையும் அவன்றன்னையும் தப்புகைக்குப் பணிபோந்தது. பருவம்நிரம்பித் தன்னைத்தானறிந்தபின்பு பாண்டவர்கள் காரியம்செய்து திரிந்தவித்தனை

(ஐவர்க்காய்க்கொடுஞ்சேனைதடிந்து) பாண்டவர்களைச் சீறினவர்களுடைய "சாரதி, சாரதி" என்றுவாய்பாறிக்கொண்டுவர, அவர்களையுடையத்தேர்க்காலாலே புழுக்கிப்பொகட்டானாயிற்று.

(ஆற்றல்மிக்கான்) ப்ரதிபக்ஷத்தையும் வேரோடே வாங்கிப்பொகட்டு, தர்மபுத்ரன்றலையிலே முடியையும்வைத்து, இவள்குலைந்த குழலையும் முடிப்பித்த விடத்திலும், "[illegible]" (நாஸ்திஸ்வஸ்த்தமநா:) என்றிறே யெழுந்தருளிற்றும். ஆற்றலென்று - பொறையாய், பொறைமிக்கவனென்னுதல். அன்றிக்கே, வலியாய், வலிமிக்கவனென்னுதல். இவற்றையுடைய வழியச்செய்கைக்கடியானவலியைச்சொன்னபடி. (பெரியபரஞ்சோதிபுக்கவரியே) கம்சனும் துர்யோதநனுமில்லாதவிடத்தில் பரமபதத்திலேபோய்ப்புக்க பின்பும், "நித்யஸூரிகள் நடுவேயிருந்தோமிறே" என்றுபாராதே, கம்சன், துர்யோதநன், கர்ணன் என்று, ஆசிலே வைத்தகையுந்தானுமாய் விரோதிகள்மேலே சீறின சீற்றத்தின் வாசனையங்கேயுமநுவர்த்திக்கபடி.................................

ஜீயர் அரும்பதம்.

பத்தாம்பாட்டு (ஏற்றருமித்யாதி) இதில் ப்ரமேயங்களை யநுவதித்துக்கொண்டிப்பாட்டுக்கு சங்கதி (ப்ராப்யனவனெனிதியாதி) "வைகுந்தத்தையருளும்" என்றத்தைப்பற்ற (அவன்தன்னைநமக்கித்யாதி) "வைகுந்தத்தையருளும்" என்றுநிற்க "தன்னைத்தரும்" என்றது - அங்கேபோனாலநுபாவ்யன் தானாகையாலே. உபாயக்ருத்யம் - அநிஷ்டநிவர்த்தகத்வேஷ்ட ப்ராப்தகத்வங்களாகையாலே, இவ்விரண்டு பாட்டாலே - அநிஷ்டநிவர்த்தகத்வத்தை யருளிச்செய்து, இதிலே-இஷ்டப்ராபகத்வத்தை யருளிச்செய்கிறார் என்று இவ்விரண்டுபாட்டுக்களோடேசங்கதி.

மேலிற்பதத்துக்கவதாரிகை (எல்லாவழியாலுமித்யாதி) நம்தோஷத்திலவிஜ்ஞாதாவாயிருக்குமென்கைக்குறுப்பாக, அவன் பால்யத்தைச் சொல்லுகிறதுக்கு ப்ரமாணம் (முக்தசாயுந்யேத்யாதி) ஸ்தோத்ரேயாமுநாசார்யா:, "[illegible]" (ரகுவரயதபூஸ்த்வம்) இத்யாதி. "ஒன்றாய்ப்புக்கு" என்றதுக்கு க்ரமேணார்த்தத்வயம் (கம்ஸனுமித்யாதி வாக்யத்வயத்தாலே)

"கொன்று" என்றதுக்குப்ரமாணமுகோகார்த்தம் (விகளத்கிரீடமித்யாதி) "[illegible]" (கேசேஷ்வாக்ருஷ்யவிகளத்கிரீடமவநீதலே । ஸகம் ஸம்பாதயாமாஸதஸ்யோபரிபபாதச) இதிபஞ்சமேம்சே. கூற்றியல் - ம்ருத்யுவின்ஸ்வபாவத்தையுடைய விதிசப்தார்த்தம். முடியைவாங்கிக்கொல்லுகிறதென்னென்ன (தான்கொடுத்தவித்யாதி) தேற்றத்துக்கு - விஸ்வஸிக்கைக்கு.

சேனைக்குக்கொடுமையேதென்ன (பாண்டவர்களையித்யாதி) உழக்கி - நெரித்து.

"ஆற்றல்" என்று - பொறையைவிவக்ஷித்துபாவம் (ப்ரதிபக்ஷத்தையித்யாதி) வலிசொன்னதுக்குபாவம் (இவற்றையுடையவித்யாதி) "அரி" என்று - சத்ருவாயிருக்குமென்கிறாதல், அரமஸ்யாஸ்தீத்யரீ என்றாய், திருவாழியையுடையவனென்கிறாதல் (கம்சனுமித்யாதி) ஆசு - ஆயுதப்பிடி.

ஒன்றாய்ப்புக்கென்று தொடங்கி, புக்கவரியான - ஆயர் குலத்தீற்றிளம்பிள்ளை. நமக்கு - எற்றரும் வைகுந்தத்தையருளு மித்யந்வய:.........................*

பதிற்றொன்றாம்பாட்டு.

புக்கவரியுருவாயவுணனுடல்கீண்டுகந்த
சக்கரச்செல்வன்றன்னைக்குருகூர்ச்சடகோபன்சொன்ன
மிக்கவோராயிரத்துளிவைபத்தும்வல்லாரவரைத்
தொக்குப்பல்லாண்டிசைத்துக்கவரிசெய்வரேழையரே.

ஆறாயிரப்படி.

(புக்கவரியுருவாய்) வாசாமகோசரமாம்படி மஹாஸ்சர்யமான ஸிம்ஹரூபதரனாய்ப்புக்கு அஸுரனைப்பிளந்தருளி ப்ரஹ்ருஷ்டனாய், தத்தத்ப்ரதிகூல நிரஸநோசித சர்வதிவ்யாயுத சம்பத்பரிபூர்ணனாய், ஆஸ்ரிதார்த்த ஸ்வரூபரூபகுண விபூதிகனான பரமபுருஷனுக்கு ப்ரதிபாதகமாய், ப்ரதிபாத்யத்திலும் மஹத்தான திருவாய்மொழிகளி லித்திருவாய்மொழிவல்லார்க்கு பகவத்பரிசர்யைக போகராயிருப்பா ரெல்லாரும், நிரந்தரமாக சர்வசேஷவ்ருத்திகளும்பண்ணுவார்களென்கிறார்..........*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், இத்திருவாய்மொழியை யப்யசிக்கவல்லவர்களை, பகவத்கைங்கர்யபரரான * மதிமுகமடந்தையர் சாமரவ்யஜநாதிகளைக்கொண்டு சத்கரிப்பர்களென்று பலத்தையருளிச்செய்கிறார்.

அ-அத்யத்புதமான. அரியுருவாய் - ஸிம்ஹவிக்ரஹத்தையுடையனாய். புக்கு- சத்ருவிஷயத்தில்புக்கு. அவுணன் - ஆஸுரப்ரக்ருதியான ஹிரண்யனுடைய. உடல்- சரீரத்தை. கீண்டு-பிளந்து. உகந்த-அநாயாஸேந ப்ரஹ்லாதவிரோதிபோனபடியாலே ப்ரீதனாயிருப்பானாய். விரோதிநிரஸநத்திலவகாசமில்லாதபடியாலே, சக்கரச்செல்வன்றன்னை-அழகுக்கு மைஸ்வர்யத்துக்கு முறுப்பானதிருவாழியையுடையவனை. குருகூர்-திருநகரிக்குநிர்வாஹகரான. சடகோபன்-ஆழ்வார். சொன்ன-அருளிச்செய்ததாய். மிக்க - பகவத்குணசேஷ்டிதாதிகளை கார்த்ஸ்நயேந ப்ரதிபாதிக்கும் பெருமையையுடைத்தாய். ஓர்-அத்விதியமான. ஆயிரத்துள் - ஆயிரந்திருவாய்மொழிக்குள்ளே. பகவத்விஷயத்தில் ப்ராப்யத்வவிரோதிநிவர்த்தகத்வங்களடியான வபிநிவேசத்துக்கு ப்ரகாசகமான. இவை-இவை. பத்தும்-பத்தும். வல்லாரவரை-அப்யஸிக்கவல்லரானவர்களை. ஏழையர்-பகவத்கைங்கர்யபரைகளாய் பாகவதகிஞ்சித்கார சபலைகளாயிருக்கிற * மதிமுகமடந்தையர். தொக்கு - திரண்டு. பல்லாண்டிசைத்து-மங்களாசாஸநம்பண்ணி. கவரி-தத்விஷயத்தில்பண்ணும் சாமரவ்யஜநாதிகளை. செய்வர்-பண்ணியுபசரியாநிற்பர்கள்.

புக்கவரியுருவென்று-காதாசித்கமாக ப்ரவேசித்த நாஸிம்ஹரூபத்தையுடையனென்றுமாம்..*

இது - கலித்துறை.

ஈடு - பதினொன்றாம்பாட்டு.

நிகமத்தில் - இத்திருவாய்மொழிகற்றார், * மதிமுகமடந்தையர் விரும்பித் திருப்பல்லாண்டுபாடிப் பிலாகிப்பர்களென்கிறார். (நம்முடைய ப்ரக்ருதி நமக்கு பயமேறுவென் றபேக்ஷித்தால் நிரசிக்குமென்றுகருத்து.)

(புக்கவரியுருவாய்) அவ்வரியுருவாய் - புக்கு. அவ்வரியுருவென்று மித்தனையாயிற்றுச்சொல்லலாவது. நரசிம்ஹமான வேஷத்தைக்கொண்டு விரோதி சந்நிதியிலேபுகட்டு. அன்றிக்கே, ஹிரண்யனுடலைப்பிளந்துகொடு புறப்பட்டபோதைக்கடுமை. புறம்பிட்டொருவன்வந்து செய்தானாகையன்றிக்கே, உள்ளேநின்று மொருசிம்ஹம் பிளந்துகொடு புறப்பட்டாப்போலே யாயிற்று; அத்தைச்சொல்லுகல். (தாதாத்விகமாகப்ரவேசித்த நரசிம்ஹரூபத்தையுடையவனென்கை.) (அவுணனித்யாதி) ஹிரண்யனுடலைப்பிளந்துபொகட்டு, "சிறுக்கன்விரோதி போகப்பெற்றோம்" என்றுகந்தானாயிற்று.

(சக்கரச்செல்வன்றன்னை) ஹிரண்யனுடைய வுடலுங்கூடத் திருவுகிருக்கிரை வயிறாய்ப்போகையாலே, பின்னை யழகுக்குப் பத்திரங்கட்டினவித்தனையாயிற்று. (அழகுக்கு மைப்பவர்யத்துக்கு முறுப்பான திருவாழியையுடையவனை.

(குருகூரித்யாதி) ஆழ்வாரருளிச்செய்த, மிக்கவோராயிரத்து - பகவத்விஷயத்தையுள்ளவளவும் சொன்னவாயிரத்திலும் வைத்துக்கொண்டு, இப்பத்தையும்சற்றவர்களை.

(தொக்கித்யாதி) கிண்ணகத்திலிழிவாரைப்போலே தனியிழியவொண்ணாமை திரண்டுகொண்டு, "பொலிகபொலிக" என்று மங்களாசாஸநம்பண்ணி, சர்வேஸ்வரன்பக்கல் பண்ணக்கடவ சாதாரண பரிசர்யைகளையுடைய விப்பத்தை யப்யசித்தவர்கள்பக்கலிலே பண்ணுகிற்பர்கள் * மதிமுகமடந்தையர். நெடுநாள் சம்சாரத்திலேபட்ட விழவெல்லாந்தீரும்படி யவர்களாலே கொண்டாடப்பெறுவர்கள். (தொக்கு-திரண்டு. கவரி-சாமரம். ஏழையர்-பாகவதநிருபித்கார சபலைகளான * மதிமுகமடந்தையர்.) ....*

ஜீயர் அரும்பதம்.

நிகமம் (புக்கவித்யாதி) "அவரைத்தொக்குப்பல்லாண்டிசைத்துக்கவரிசெய்வரோழையர்" என்றதைக்கடாக்ஷித்தவதாரிகை (இத்திருவாய்மொழியித்யாதி)

"உக்ரம்வீரம்" இத்யாதி மந்த்ரலிங்கத்தைப்பற்ற (அவ்வரியுருவென்னுமித்தனை யித்யாதி) "அரியுருவாய் - புக்கு" என்றதுக்கு சப்தார்த்தம் (நரசிம்ஹமானவித்யாதி) அர்த்தாந்தரம் (அன்றிக்கே ஹிரண்யனித்யாதி) அதாவது-அவ்வரியுருவாய், அவுணன்முனனே, புக்கு - கிட்டியென்னுதல்; அவுணனுடலிலே, புக்கிருக்கிற - ப்ரவேசித்திருக்கிற வரியுருவாயென்னுதலென் றர்த்தத்வயம்.

"உகந்த" என்றதுக்குபாவம் (ஹிரண்யனித்யாதி)

"சக்கரச்செல்வன்" என்றதுக்குபாவம் (ஹிரண்யனுடையவுடலுமித்யாதி) "செல்வம்" என்று - திருவாழியால்வந்தவழகு. பத்திரம்-ஆயுதம்.

"மிக்க" என்றது - பகவத்ப்ரதிபாதநசாமர்த்யத்தால் மிக்கவென்றபடி.

தொக்கு-திரண்டு. நின்னைகம் - ஆற்றுப்பெருக்கு. சம்சாரத்திலேபட்டவிழவாவது - * வெஞ்சொலாளர்கள் * கடுஞ்சொல்லைக்கேட்டவிழவு. (அஸாதாரணபரிசர்யை) என்றவிடத்திலே - "அதேயமாஸீத்ரயமேவபூபதேச்சம்ஸப்ரியம்சத்ரமுபேசசாமரே" (அதேயமாஸீத்த்ரயமேவபூபதேம்ஸப்ரியம்சத்ரமுபேசசாமரே) என்றதநுசந்தேயம் ....*

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி.

(பாமருமூவுலகும்)

நாபீபத்மோஜ்ஜ்வலத்வாத் விதிசிவபஜநீயாங்க்ரிபாவாத் கவாஞ்ச த்ராணா-
த்ஸர்வபூதாந்தரநியமநத: ஸம்ச்ரிதேஷ்வபயபாவாத் । ப்ரஹ்மா-
த்யாபத்விமோக்ஷாத் அஸுரநிரஸநாத் த்ராதரக்ஷோஜஜத்வாத் ஸ்ரீயாக்ராந்த-
வக்ஷா: ஸ்ருதிஶிரஸி ஹரிஸ்ஸர்வநிர்வாஹகோ வாஸிதோஸ்மிம் ॥ (எசு)

(நாபீபத்மோஜ்ஜ்வலத்வாத்) பாமருமூவுலகும்படைத்த பற்பநாபாவோ- ஜகத்ஸ்ருஷ்டிஹேதுவான திருநாபீகமலத்தாலே யுஜ்ஜ்வலனாகையாலும்; (விதிசிவபஜநீயாங்க்ரிபாவாத்) அரன்நான்முகனேத்தும்செய்யநின்திருப்பாதத்தை-ப்ரஹ்மருத்ரர்களாலே சேவ்யமான திருவடிகளையுடையனாகையாலும்; (கவாஞ்சத்ராணாத்யை:) காத்தவெங்கூத்தாவோமலையேந்தி - கோவர்த்தநத்தை யெடுத்து கோகுலத்தை ரக்ஷிக்கையாலும்; (ஸர்வபூதாந்தரநியமநத:) ஏழில்மூவுலகும் நீயேயித்யாதி - சமஸ்தபூதங்களையு மந்த:ப்ரவிஶ்ய நியமிக்கையாலும்; (ஸம்ஶ்ரிதேஷ்வபயபாவாத்) என்னுடைக்கோவலனே - க்ருஷ்ணனாயவதரித் தாஶ்ரிதர்க்கு பவ்யனாயிருக்கையாலும்; இத்தாலேதானே - மேலிற்பாட்டில் என்திருமார்பனை யென்று - பூர்வோக்தபவ்யதைக்கு ஹேதுவாகச் சொல்லப்படுகிற லக்ஷ்மீசம்பந்தமு முக்தமாயிற்றென்று திருவுள்ளம். (ப்ரஹ்மாத்யாபத்விமோக்ஷாத்) நிலங்கீண்டெயில் மூன்றெரித்தவித்யாதி - "விஷ்ணுராத்மாபகவத:" (விஷ்ணுராத்மாபகவத:) இத்யாதிகளிற்படியே ப்ரஹ்மருத்ரேந்த்ரர்களை விசேஷித்தபிமானித்து அவர்கள்தொடங்கின த்ரிபுரசம்ஹாராதிகளைத் தலைக்கட்டி அந்தந்த வாபத்துக்களி னின்றும் விடுவிக்கையாலும்; (அஸுரநிரஸநாத்) ஆளியைக்காண்பரியாயித்யாதி - விரோதிகளானவசுரர்களை யோரிடத்திலும் தரிக்கவொட்டாதேநிரஸிக்கையாலும்; (த்ராதரக்ஷோஜஜத்வாத்) அரக்கன்குலத்தைத் தடிந்து மீண்டு மவன்றம்பிக்கே விரிநீரிலங்கையருளி - தம:ப்ரக்ருதியான ராவணனை புத்ரமித்ரர்களோடேகூடசம்ஹரித்து, சத்த்வப்ரக்ருதியான விபீஷணாழ்வானுக்கு லங்காராஜ்யத்தைக்கொடுத்து ரக்ஷிக்கையாலும்; இவற்றாலேதானே - மேலிற்பாட்டிலே ஏதத்ஸத்ருஶமாய், "ஐவர்க்காய்க்கொ

மெம்சேனைதடிந்து" என்றுசொல்லுகிற துஷ்ப்ரக்ருதிகளான துர்யோதநாதிநிரஸந பூர்வகமான பாண்டவரக்ஷணமு முபலக்ஷிதமென்றுகருத்து. இப்படிகளாலே எம் பெருமான், ஸ்வாஶ்ரிதர் தன்னை யநுபவிக்கப்பெறுதே கூப்பிடுகிறவற்றைப் பரிஹரி யாநிற்கிறுனென்று "பாமருமூவுலகும்" என்கிற தசகத்திலே யாழ்வார் ப்ரதி பாதித் தருளினுரென்கிறுர். ....(எசு)

திருவாய்மொழிநூற்றந்தாதி.

பாமருவுவேதம்பகர்மால்குணங்களுட
னுமழகுவேண்டப்பாடாமவற்றைத் - தூமனத்தால்
நண்ணியவனைக்காணநன்குருகிக்கூப்பிட்ட
வண்ணலைநண்ணுரோமையர். (கூ௬)

(பாமருவு) இதில் - எம்பெருமானுடைய குணங்களைச்சொல்லிக் கூப்பிட் ட பாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறுர். எங்ஙனேயென்னில்; * கற்பாரில்-நிர வதிகபோக்யங்களான கல்யாணகுணங்களையுடைய வெம்பெருமானுடைய ப்ராப்ய த்வம் ப்ராபகத்வம் விரோதிநிவர்த்தகத்வமாகிற விவ்வோ ஸ்வபாவங்களை யநுசந் தித்து, "இப்படி குணுதிகனுனவனை யநுபவிக்கவேணும்" என்றுசைப்பட்டுக்கிடை யாமையாலே, அம்புபட்டாரைப்போலே கிடந்தழைக்கின்ற * பாமருமூவுலகிலர்த் தத்தை "பாமருவுவேதம்" இத்யாதியாலே யருளிச்செய்கிறுரென்கை.

(பாமருவுவேதம்பகர்மால்குணங்களுட னுமழகுவேண்டப்பாடாமவற்றை) சந்தஸ்ஸுக்களோடேகூடின வேதப்ரதிபாதயமான குணங்களோடேகூடி நன்று னவழகு மேன்மையாகிறவவற்றை. (தூமனத்தால்நண்ணி) "ஶுத்தஸத்வ விஶுத் தேந" (மநஸாதுவிஶுத்தேந) என்று மாநஸஸாக்ஷாத்காரத்தாலே கிட்டி யநு பவித்து. (அவனைக்காண) கீழ்ச்சொன்ன குணவிஶிஷ்டனுன வவனை ப்ரத்யக்ஷாநுபவம்ப ண்ணவேணுமென்றிச்சித்து. (நன்குருகிக்கூப்பிட்ட) நன்றுகவுருகி, அந்தப்ரேமா நுகூலமான வுருகுதலோடே கூப்பிட்ட. (அண்ணலைநண்ணுரோமையர்) அதாவது- வேதம்பகர்மால்குணங்களாவது - "ஸர்வகாமா:" (ஸர்வாந்காமாந) என்கி ற கல்யாணகுணங்கள்; அவைதாம் ப்ராப்யங்களாயும் ப்ராபகங்களாயு மிருக்குமி றே; மோக்ஷதசையில் ப்ராப்யமாய், முமுக்ஷுதசையி லநுபவிப்பார்க் கவதாராதி களில் ப்ராப்யதவ ப்ராபகத்வமாகிற வுபயாகாரத்தையுமுடைத்தாயிருக்கும்; ஆகை யாலே "பாமருமூவுலகும்படைத்த பற்பநாபாவோ" என்றுதொடங்கி "தாமரை க்கையாவோ வுன்னையென்றுகொல்சேர்வதுவே" என்றும், "என்றுகொல்சேர்வ தந்தோ" என்றுதொடங்கி "நின்திருப்பாதத்தையான்" என்று - ப்ராப்யத்வத் தையும்; "காத்தவெங்கூத்தாவோ" என்றுதொடங்கி "உன்னையெங்குத்தலைப்பெ ய்வனே" என்றும், "எங்குத்தலைப்பெய்வன்நான்" என்றுதொடங்கி "என்னுடை க்கோவலனே" என்றும், "என்னுடைக்கோவலன்" என்று தொடங்கி "என்னு டையாருயிராரெங்ஙனேகொல்வந்தெய்துவரோ" என்றும், "வந்தெய்துமாறறியே ன்" என்றுதொடங்கி "என்திருமார்பனை" என்றும், "என்திருமார்பன்றன்னை" என்றுதொடங்கி "விசும்பாளியைக்காணேனே" என்றும், இப்படியஞ்சுபாட்டா லே - அவனுடைய ப்ராபகத்வத்தையும்; "ஆளியைக்காண்பரியாய்" என்று தொ

டங்கி "அடர்த்தானையுங்காண்டுங்கொலோ" என்றும், "காண்டுங்கொலோநெஞ்சமே" என்றுதொடங்கி "அமரரரியேற்றினையே" என்றும், இவ்விரண்டுபாட்டாலும் - விரோதிநிரஸநசீலத்தையும்; "ஏற்றரும்வைகுந்தத்தையருளும்நமக்காயர்குலத்தீற்றிளம்பிள்ளை" என்று - மோக்ஷப்ரதத்வத்தையும்; இப்படியான "ஸஹஸ்ரநாமகல்யாணகுணாம்" (பஹுவோந்ருபகல்யாணகுணாः) என்கிறவிக்குணங்களோடே நன்றானவழகையும். அதாவது - "பற்பநாபாவோ" என்று - *கொப்பூழிலெழுகமலப்பூவழகையும், "பற்பபாதாவோ, தாமரைக்கண்ணாவோ, தாமரைக்கையாவோ," "செய்யநின்றிருப்பாதம்" என்று-திவ்யாவயவசௌந்தர்யத்தையும், "காத்தவெங்கூத்தாவோ" என்று-சமுதாயசோபையையும், "பூத்தண்டுழாய்முடியாய்" என்று - ஒப்பனையழகையும், "என்பொல்லாக்கருமாணிக்கமே" என்றும் "செஞ்சுடர்ச்சோதிகள் பூத்தொருமாணிக்கம் சேர்வதுபோல்" என்றும்-வடிவழகையும், "என்றிருமார்பனையே" என்று - ஸ்ரீயஃபதியாகையால்வந்த சேர்த்தியழகையும், "மூவுலகும்படைத்த" என்று - ஜகத்ஸ்ரஷ்ட்ருத்வமும், "மூவுலகுமளந்த" என்று - ஸ்ருஷ்டமான ஜகத்தைத் தன்காலின்கீழேயாம்படியெல்லைநடந்துமீட்டும், அதுக்குமேலே "தாமரைக்கண்ணாவோ" என்று - புண்டரீகாக்ஷத்வத்தால் வந்த மேன்மையையும், "அரன்நான்முகனேத்தும் செய்யநின்றிருப்பாதம்" என்று - சர்வஸ்மாத்பரத்வத்தையும், "என்மலைமகள்கூறன்றன்னையென்றுமென்னுமகளை யகம்பால்கொண்டநான்முகனை நின்ற சசிபதியை" என்று - அவர்களுக்கந்தராத்மதயா நிர்வாஹகனானபடியையும்; இவற்றாலேபலித்த வேண்டப்பாட்டையும். (தூமனத்தால்நண்ணியித்யாதி) கீழுக்தங்களானவவற்றை, "தூமனத்தனாய்" என்கிற பரிசுத்தமாநஸஜ்ஞாநவிஷயமாம்படி யநுபவித்து, ஏவம்விதனானவனை ப்ரத்யக்ஷ சாக்ஷாத்காரத்தாலே யநுபவிக்க விச்சித்து, பக்திபாரவஶ்யத்தாலே த்ரவீபூதராய்க்கூப்பிட்ட. "பற்பநாபாவோ," "காத்தவெங்கூத்தாவோ," "விசும்பாளியைக்காணேனே" என்றிப்படி விஷாதாதிசயத்தாலேகூப்பிட்ட. (அண்ணலைநண்ணாரேழையர்) இதரவிஷயத்திலே சபலராய், ததலாபத்திலே கூப்பிடுகிற சம்சாரிகள், பகவதலாபத்திலே கூப்பிடுகிற சர்வாத்மசேஷியான வாழ்வானையாஶ்ரயியார்கள். அதுக்கடி - இதரவிஷயசாபல்யமிறே. "இப்படிசபலராய் ப்ராப்தசேஷியான வாழ்வானை லபியாதே யிதரவிஷயசபலராவதே!" என்று வெறுக்கிறார்.. (௬௬)

ஏழாம்பத்தில் - ஆறாந்திருவாய்மொழி முற்றிற்று.

ஆக - திருவாய்மொழி ௬௬.—பாட்டு - ௭௨௮.

ஸ்ரீ

திருவாய்மொழி.

ஏழாம்பத்து.

ஏழாந்திருவாய்மொழி.

ஏழையர் - ப்ரவேஶங்கள்.

ஆறாயிரப்படி.

(ஏழையராவி) இப்படி யெம்பெருமானுடைய வாஶ்ரித வாத்ஸல்யாதி குணானுஸந்தாநத்தாலே ஸ்வாபேக்ஷிதத்தைச் செய்தருளுமென்றுஸ்வஸ்தரான வாழ்வார், அவன்செய்தருளாமையாலே பின்னையு மவனோடே ஸம்ஶ்லேஷிக்கவாசைப்பட்டு, தத்ஸௌந்தர்யாநுஸந்தாந ப்ரகர்ஷஜநித தத்ஸாக்ஷாத்காரராய், தத்ஸம்ஶ்லேஷமலபமாநராய் ஸாக்ஷாத்க்ருதாதி ரமணீய ததீய திவ்யாவயவங்களாலே பீட்யமாநராய்க்கொண்டந்யாபதேசத்தாலே கூப்பிடுகிறார் ... .*

பன்னீராயிரப்படி.

ஏழாந்திருவாய்மொழியில், இப்படி ஆர்த்தியோடேகூப்பிட்டவர், "அடியுந்திகைமார்புகண்வாய்" என்று ப்ரஸ்துதமான விக்ரஹவைலக்ஷண்யத்தை யநுசந்தித்து, "𑌸𑌰𑍍𑌵𑌂𑌵𑌾𑌮𑍁𑌖𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇" (ஸர்வம்வாமுகமுச்யதே) என்கிறபடியே விலக்ஷணமான வுத்தமாங்காவயவங்கள் தனித்தனியேயும் சமுதாயமாகவும் ப்ரத்யக்ஷவத்விஶதமாம்படி ப்ரகாஶிக்க; அபரிச்சிந்நஸ்வபாவனான க்ருஷ்ணனுடைய திருக்கண்களையும், ஆஶ்ரிதவிஷயாபிநிவிஷ்டனான வவனுடையநாஸாதண்டத்தையும், ஶ்யாமளவிக்ரஹத்துக்கு பரபாகமான வதரசோபையையும், காமனுக்கு முத்பாதகனும்படி கமநீயதையையுடையவனுடைய ப்ருயுகளத்தையும், கோவர்த்தனோத்தரணம்பண்ணின வநாயாஸத்தையுடையவனுடைய மந்தஸ்மிதத்தையும், அநந்தசாயியான வவனுடைய கர்ணிகாலங்க்ருதமான கர்ணபாசத்தையும், மஹாபுஜனான வவனுடைய லலாடசோபையையும், ஏவம்விதாவயவ விஶிஷ்டமான க்ருஷ்ணனுடைய சாமாந்யமுகசோபையையும், ஆஶ்சர்யபூதனான வவனுடைய மயிர்முடியழகையும், சர்வாதிகத்வ சூசகமான வபிஷேகசோபையையு மநுசந்தித்து; அது சம்ஶ்லேஷபர்யந்தமல்லாமையாலே அத்யந்தமார்த்தரான விவருடைய வார்த்திகண்டு நீர்விண்ணரான சுஹ்ருத்துக்களுக்கும் பரிவர்க்கும் தமக்கோடுகிறதசையை யாவிஷ்கரித்த ப்ரகாரத்தை, நாயகனான க்ருஷ்ணனுடைய விஶ்லேஷதசையிலே அவனுடைய திவ்யாவயவங்க ளுருவெளிப்பாடாய்த் தோன்றக்கிட்டி யநுபவித்து

ப்பெருமையாலே க்லிஷ்டையான நாயகியானவள், தனக்கு ஹிதஞ்சொல்லிய மித்ர தோழிமார்க்கும் தாய்மார்க்கும் தன்னுடைய விபொட்டையறிவித்த பாசுரத்தாலே யருளிச்செய்கிறார்...*

ஈ டு.

கீழ்த்திருவாய்மொழியிலே - "மல்குநீலச்சுடர்தழைப்பச் - செஞ்சுடர்ச்சோதிகள் பூத்தொருமாணிக்கம்சேர்வதுபோ - லந்தரமேற்செம்பட்டோடடியுந்திகைமார்புகண்வாய் — செஞ்சுடர்ச்சோதி விடவுறை யென்றிருமார்பனையே" என்று அவன்வடிவழகை யநுசந்தித்தார்; அவ்வடிவழகுதானே நெஞ்சிலே யூற்றிருந்து அத்தையேபாவித்து, அந்த பாவநாப்ரகர்ஷத்தாலே ப்ரத்யக்ஷஸமாநாகாரமாய், பின்னை "ப்ரத்யக்ஷம்" என்றே புத்திபண்ணியணைக்கக் கணிசித்துக் கையைநீட்டி, அப்போதேபெருமையாலே தமக்குப்பிறந்த வாற்றாமையை, எம்பெருமானோடே கலந்துபிரிந்து உருவுவெளிப்பாட்டாலே நோவுபடுகிறாளொருபிராட்டி பாசுரத்தாலே யருளிச்செய்கிறார். சர்வேப்ஶ்வரனோடே கலந்து பிரிந்து தளர்ந்து உருவுவெளிப்பாட்டாலே நோவுபடுகிறாளொருபிராட்டி, சேதநர் சேதநரோடேகலக்கும்போது த்ருஷ்டிபந்தம் முன்னாகப்பின்னையிறே யல்லாதபரிமாற்றங்களை யாசைப்படுவது, ஆகையாலே, திருக்கண்களி லழகையநுசந்தித்து, அவ்வழியாலே திருமுகத்திலழகையநுசந்தித்து, அநந்தர மவ்வருகே சிலபரிமாற்றங்களை யாசைப்பட்டு, அப்போதே யதுகைவாராமையாலே நோவுபட; இவள்தசையை யநுசந்தித்த தோழிமாரும் தாய்மாரும் "உனக்கோடுகிறதென்" என்றுகேட்க, சிலர்க்குச்சொல்லிச் சிலர்க்குமறைக்கும்படியாயன்றே யாற்றாமை ப்ரசித்தமானபடி, ஆகையாலே, அவர்களைக்குறித்து "அவனுடையதிருமுகத்திலழகானது தனித்தனியும் திரளவும் வந்தென்னை நலியாநின்றது" என்ன, "நீயிங்ஙனேசொல்லுமதுன்னுடைய ஸ்த்ரீத்வத்துக்குப்போராது, அவனுடைய தலைமைக்கும்போராது, நீதானெங்களைநோக்கக்கடவதாயிருப்பதொரு ஸ்வபாவமுண்டே, அதுக்கும்போராது, ஆனபின்பு, இத்தைத்தவிர்" என்று ஹிதஞ்சொல்லுவாரும் பொடிவாருமாக; "நீங்கள் பொடிகிறவிதுகேட்டு மீளுமளவல்லவதென்னைநலிகிறபடி, இனித்தானேதேனுமாக, உறைத்ததிலே யூன்றிநிற்குமத்தனையிறே, ஆனபின்பு, நீங்களென்னைவிட்டுப்பிடிக்கவமையும்" என்று அவர்களுக்குத் தன்பக்கல் நசையறவேண்டும்படி தனக்குப்பிறந்த வாற்றாமையை யறிவிக்கிறாளாயிருக்கிறது.

சர்வேப்ஶ்வரனுடைய குணங்களை யாசைப்படுகையும், அதுதான் மாநசாநுபவமாயிருக்கையும், அநுபூதகுணங்களொழிய குணாந்தரங்களிலே யபேக்ஷைபண்ணுகையும், அதுதன்னில் க்ரமப்ராப்திபற்றாமையும், அதுதான் கீழ்நின்றநிலையை மறக்கும்படிபண்ணுகையுமாகிற விவைய்

றே-இவர்க்குத்திருவாய்மொழி யெங்குமோடுகிற ஸ்வபாவந்தான். அவற்றிற்காட்டில், உருவுவெளிப்பாடாகச்சொல்லுகிற விதிலேறினவம்சமென்னென்னில்; கீழ்ப்பிறந்த வைசத்யமுங்கிடக்கச்செய்தே மேலே யபேக்ஷிக்குமதாயிற்று - உருவுவெளிப்பாடாகிறது. அல்லாதவிடத்தில், கீழ்ப்பிறந்த வைசத்யத்தையழித்திறே மேலிலபேக்ஷிப்பது. * எங்ஙனேயோவிலும் - ப்ராயேணவிதுவேயன்றோ வோடுகிறது. அதிலிதுக்குவாசியென்னென்னில்; அதில் - ப்ரீத்யப்ரீதி சமமாயிருக்கும், இங்கு-அப்ரீதிமிக்கிருக்கும். திருக்கண்களிலழகை "இணைக்கூற்றம்" என்னும்படியாயிற்றிங்கு பாதகத்வத்திலுறைப்பிருக்கும்படி ....*

ஜீயர் அரும்பதம்.

ஏழையராவிப்ரவேஶே, சங்க்ரஹசங்கதி (கீழிற்றிருவாய்மொழியிலேயித்யாதி) ஊற்றிருந்து - ஊறிக்கொண்டிருந்து. மாறாதே யநுவர்த்தித்தென்றபடி. உருவுவெளிப்பாடு - ப்ரத்யக்ஷ சமானாகாரமானஸ சாக்ஷாத்காரம்.

கீழுக்தத்தை விஸ்தரேண வருளிச்செய்கிறார் (சர்வேஶ்வரனுடையித்யாதி) (ஒருபிராட்டி) என்றதுக்கு (திருக்கண்களிலழகையநுசந்தித்து) என்றத்தோடேயந்வயம். முன்னே திருக்கண்ணழகைச்சொல்லுவானென்னென்ன (சேதநரித்யாதி) த்ருஷ்டிபந்தம் முன்னாகவென்றது - "சக்ஷுஷ்ப்ரீதிர் மனஸ்ஸங்க:" (சக்ஷுஷ்ப்ரீதிர்மநஸ்ஸங்க:) என்றத்தைப்பற்ற. பரிமாற்றம்-காயிகவ்யாபாரம். தோழிமார்க்கொழிய தாய்மார்க்கு ஸ்வாவஸ்த்தையைச்சொல்லலாமோவென்ன (சிலர்க்கித்யாதி) திரளவுமென்றது - "கோளிழைத்தாமரையும்" இத்யாதியைப்பற்ற. "நிற்றிமுற்றத்துள்" என்றத்தைப்பற்ற (ஸ்த்ரீத்வத்துக்குப்போராதென்றது) எங்களைநோக்கக்கடவதாயிருப்பதொரு ஸ்வபாவமென்றது - எங்கள்வார்த்தைகேட்டு எங்களுக்குபவ்யையாயிருப்பதொரு ஸ்வபாவமென்றபடி. நாங்களும் நலியவில்லையோ, எங்கள்வழியே யொழுகவொண்ணாதோவென்ன (இனித்தானித்யாதி) உறைத்ததிலே-ப்ரபலமானதிலேயென்றபடி. "அன்னைமீர்நசையென் நுங்கட்கே" என்றத்தைப்பற்ற (ஆனபின்பித்யாதி)

ஸ்வாபதேசத்திலிதாவதேதென்ன (சர்வேஶ்வரனுடையவித்யாதி) அதுதன்னில் - குணாநுபவத்தில். ஏறினவம்சம் - அதிகாம்சம். மற்றையிடங்களிலிப்படியன்றோவென்ன (அல்லாதவித்யாதி) அல்லாதவிடத்தில்-உருவுவெளிப்பாடல்லாதவிடத்திலென்றபடி. ப்ராயேணவென்கையாலே-மற்றைத்திருவாய்மொழிகளிலே யோரோபாட்டுக்களிலே யுருவுவெளிப்பாடுண்டென்றபடி. "மிக்கிருக்கும்" என்கைக்குநியாமகமேதென்ன (திருக்கண்களித்யாதி)..................................*

ஏழாந்திருவாய்மொழி.

முதற்பாட்டு.

ஏழையராவியுண்ணுமிணைக்கூற்றங்கொலோவறியே
னாழியங்கண்ணபிரான்றிருக்கண்கள்கொலோவறியேன்
சூழவுந்தாமரைநாண்மலர்போல்வந்துதோன்றுங்கண்டீர்
தோழியர்காளன்னைமீரென்செய்கேன்றுயராட்டியேனே.

ஆறாயிரப்படி.

பரமபுருஷ சம்ஶ்லேஷாபேக்ஷவநிதாஜந ப்ராணஹாரி ம்ருத்யுயுகளமோ, அன்றியே, ஆயதாதிரமணீய விலோசந விஜித சகலலோகனான வெம்பெருமானுடைய திருக்கண்கள்கொலோ, அறிகிறிலேன்; அப்போதலர்ந்த தாமரைப்பூப்போலே சூழவந்து தோன்றியென்னை பாதியாநின்றன; தோழியர்காள், அன்னைமீர், என்றும் துஃகமேபடப்பிறந்தேனாகாதேயென்று, “ஹா ராம ஹா லக்ஷ்மண ஹா ஸுமித்ரே ஹா ராம மாத: ஸஹ மே ஜநந்யா” (ஹாராமஹாலக்ஷ்மண ஹாஸுமித்ரேஹாராமமாதஸ்ஸஹமேஜநந்யா) என்று அசோகவநிகையில் பிராட்டிகூப்பிட்டாப்போலே கூப்பிடுகிறாள்.....................................*

பன்னீராயிரப்படி.

முதற்பாட்டில், க்ருஷ்ணனுடைய திருக்கண்கள் தன்னை நலிகிறபடி சொல்லுகிறாள்.

ஏழையர் - சபலைகளானபெண் பிறந்தாருடைய. ஆவி - ப்ராணனை. உண்ணும் - க்ரசிக்கக்கடவதாய். இணை - ஒன்றுக்கொன்று சேர்த்தியானவிரட்டை. கூற்றங்கொலோ - ம்ருத்யுவோ. அறியேன் - பாதகத்வத்தாலே, கண்ணென்றறுதியிடமாட்டுகிறிலேன். அங்ஙனன்றியே, ஆழி - ரத்நாகரம்போலே. அம் - அபரிச்சிந்ந விலக்ஷணஸ்வபாவனாய். என்னோடு ப்ரதமத்திலே, கண்ணன் - விதேயனாய். பிரான் - ஸம்ஶ்லேஷித் துபகரித்த க்ருஷ்ணனுடைய. திரு - விலக்ஷணமான. கண்கள் கொலோ - திருக்கண்கள்தானோ. அறியேன் - தர்ஶநீயதையாலே, ம்ருத்யுவென்றறுதியிட மாட்டுகிறிலேன். சூழவும் - அகலப்போகவொண்ணாதபடி சுற்றும். தாமரை - தாமரையினுடைய. நாண்மலர்போல் - செவ்விப்பூப்போலே. வந்து - வந்து. தோன்றும் - தோன்றாநின்றது. கண்டீர் - காணுங்கோள். தோழியர்காள் அன்னைமீர் - ஆந்தரக்லேஶமறியாதே அந்தரங்கரான தோழிமாரோடு, ப்ரக்ருதியறிந்து பெற்றுவளர்த்த தாய்மாரோடு வாசியற நியமிக்கிறவர்களே. துயராட்டியேன் - ஸ்வசம்வேத்யமான க்லேசத்தையுடையநான். என்செய்கேன் - க்லேசநிவ்ருத்திக்கென்னபரிஹாரம் பண்ணுவேன்.

தோன்றுகிற திருக்கண்களை மறைக்கமாட்டேன், கிட்டியநுபவிக்கமாட்டேனென்றுகருத்து...*

ஈடு - முதற்பாட்டு.

இம்முகத்துக்கு நேத்ரபூதர் நாமன்றோவென்று முற்பட, திருக்கண்களிலழகுவந்து தம்மைநலிகிறபடியை யருளிச்செய்கிறார்.

(ஏழையராவியித்யாதி) ஓரோவிஷயங்களிலே சாபலத்தைப்பண்ணி, அவைபெறாவிடில் தரிக்கமாட்டாத சபலைகளுடைய ப்ராணன்களை முடிக்கிற ம்ருத்யுக்களிரண்டோ. பிரிந்தாற்றாமையை விளைத்தவனுக்குமன்றிக்கே, “இதாகாது” என்று ஹிதஞ்சொல்லி மீட்கப்பார்க்கும் பருவங்கழிந்த தாய்மார்க்குமன்றிக்கே, அபலைகளையே முடிப்பனவிரண்டு கூ

ற்றமோ. தன்கண்ணழகு தானறிகிறிலனே. தன்னையும் நலிந்ததாகில் வாரானோ, கண்ணாடிப்புறத்திலுங் கண்டறியானோ. (ஆவியுண்ணும்) ராமசரம்போலே, ஒப்பனைகுறியழியாதேயிருக்க வுயிரை முடியாநின்றது. (இணைக்கூற்றங்கொலோ) ம்ருத்யுக்களிருவர் தங்களிலே க்ருதசங்கேதராய் வந்தாப்போலேகாணும் திருக்கண்களிலழகு பாதகமாகிறபடி. (அறியேன்) அறியேனென்பானென்னென்னில்; ம்ருத்யுக்களிருவர் க்ருதசங்கேதராய்வந்தாலு மபலைகளையே நலியவேண்டும் நிர்ப்பந்தமில்லையே; (* பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணமிறே.) அத்தாலேசொல்லுகிறது (ஆழியங்கண்ணபிரான்றிருக்கண்கள் கொலோவறியேன்) அன்றிக்கே, பெண்பிறந்தாரையே நலியக்கடவவானவைதாமேயோ. அல்பமண்ணியாரோபாதகராமன்று தப்பவிரகில்லை. இப்படிமுதலுறவு பண்ணிப்பொருந்தவிட்ட வித்திருக்கண்கள்தாமேயோ. உபகாரசீலனான க்ருஷ்ணனுடைய கடல்போன்ற கண்களென்னுதல், கடல்போலே ப்ரமஹரமான வடிவையுடைய வுபகாரசீலனான க்ருஷ்ணனுடைய திருக்கண்களென்னுதல். (அறியேன்) இதுக்கு முன்புபிரிந்தறியாமையாலே திருக்கண்கள் பாதகமாமென்று வ்யுத்பத்தியில்லை. "உயிர்க்கெல்லாம் தாயாயளிக்கின்ற தண்டாமரைக்கண்" என்றிறே கேட்டிருப்பது - இக்கடாக்ஷமே தாரகமாகவிறே லோகமடையஜீவிப்பது. நாம்கேட்டிருந்தபடியன்றிக்கே யிராநின்றதிப்போது காண்கிறபடி.

ஆனால்தப்பினாலோ வென்னில் (சூழவுமிக்யாதி) மூலபலத்தினைன்று பார்த்த பார்த்தவிடமெல்லாம் பெருமாளே யானாப்போலே யாயிற்று. ராமசரத்துக்கு ராக்ஷசர்க்குத் தப்பலாமன்றாயிற்று இக்கண்ணழகின்கீழபலைகளா யிருப்பார்க்குத் தப்பலாவது. " புண்டரீகநெடுந் தடங்கள்போலப்பொலிந் தெமக்கெல்லாவிடத்தவும் " என்னக்கடவதிறே. சர்ப்பபயம்போலே யிருக்கை. இருக்கநினைத்த விடமெங்கும் தானேயாயிராநின்றது. இப்போது " தாமரைநாண்மலர்போல் " என்பானென்னென்னில்; (சம்ச்லேஷதசையிற்செவ்வியைச் சொல்லுகிறாள்.) "[illegible]" (மஹாதாஜ்வலதாம்ய மக்நிநேவாக்நிபர்வதஃ.) [[illegible]] [நைவதம்ஸாந்நமஸகாந்] இத்யாதி பெருமாளூர்ந்ததும் கடித்ததுங் துடைக்கவறியார் என்ன; " அதுக்கடியென்" என்ன [[illegible]] [த்வந்கதேநாந்தராத்மநா] பெருமாளிங்கே குடிபோர வங்கிவையார் தானறிவார் என்றானிறே. பிரிவிவ்வளவல்லவிறே யத்தலைக்காற்றாமை. அதறிகிறிலளே யிவள். தன்னோடேவந்துகலந்து விளைநீரடைத்துக்கொண்டு பிரிகிறபோதைச்செவ்வியிறே யிவளறிவது, அதுவேயிறே யிவள் நெஞ்சில் பட்டுக்கிடப்பது பின்பவன்பட்டதறியாளே, ஆகையாலேசொல்லுகிறாள். (வந்துதோன்றும்) ப்ரத்யக்ஷத்திலத்தலையாலே வரவானாப்போலே, உருவுவெளிப்பாட்டிலுமத்தலையாலே வந்துதோன்றவாயிற்றுத் தானறிகிறது. (கண்ணி

ர்) உங்களுக்கிதுதோற்றுகிறதில்லையோ. (தோழியர்காளன்னைமீர்) சிலர்க்குச்சொல்லிச்சிலர்க்கு மறைக்கும்படியன்றிறே யிவள்தசை. "தோழிமார்க்குச்சொன்னவித்தைத்தாய்மார்க்குச் சொல்லுவோமல்லோம்" என்றுமறைக்குமளவல்ல வாயிற்றிவளுக்குப் பிறந்ததசாவிசேஷம். (என்செய்கேன்) இத்தைத்தப்பப்பார்ப்பதோ, அநுபவிக்கப்பார்ப்பதோ, எத்தைச்செய்கேன். (துயராட்டியேனே) "ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந் ந பிபேதி குதஶ்சந" (ஆநந்தம்ப்ரஹ்மணோவித்வாந்நபிபேதிகுதஶ்சந) என்றிருக்க வேண்டியிருக்க, அங்ஙனன்றிக்கே, "அவஶ்யமநுபோக்தவ்யம்" (அவஶ்யமநுபோக்தவ்யம்) என்கிறபடியே பழையக்லேஶமே சித்திக்கும்படி யாயிற்றே..*

ஜீயர் அரும்பதம்.

முதற்பாட்டு (ஏழையரித்யாதி) "திருக்கண்கள்தொலோவறியேன்" என்றத்தைப்பற்ற ரசோக்தியாகவவதாரிகை (இம்முகத்துக்கித்யாதி) இந்தமுகத்துக்கும், இப்ப்ரதேசத்துக்கு மித்யர்த்தத்வயம். நேத்ரபூதர்-கண்ணானவர், ப்ரதாநபூத ரித்யர்த்தத்வயம்.

ஸ்த்ரீகளென்னாதே, "ஏழையர்" என்று விசேஷித்ததுக்குபாவம் (ஓரோவிஷயங்களிலேயித்யாதி) "ஏழையர்" என்றத்தால் வ்யாவ்ருத்தி (பிரிந்தித்யாதி) அவனுக்கு பாதையில்லையென்று தானறிந்தபடி யெப்படியென்ன (தன்கண்ணழகித்யாதி) கண்ணழகு - கண்ணழகால்வந்த பாதையென்றபடி. அறிந்தாலோவென்ன (தன்னையுமித்யாதி) தன்கண்ணழகு தனக்குத்தெரிய ப்ரஸக்தியுண்டோவென்ன (கண்ணுடியித்யாதி) "ஆவியுண்ணும்" என்றதுக்குபாவம் (ராமசரமித்யாதி) * உயிர்க்கெல்லாம்தாயாயளிக்கின்ற தண்டாமரைக்கண்ணை, "இணைக்கூற்றம்" என்பானென்னென்ன (ம்ருத்யுக்களித்யாதி) (அறியேனென்பானென்) கூற்றமென்றுநிஶ்சயித்தாலோ (என்னில்) என்று கூட்டுவது. (அத்தாலே) "அறியேன்" என்று (சொல்லுகிறது) என்றபடி.

"கண்ணபிரான்திருக்கண்கள்" என்றதுக்குபாவம் (அன்றிக்கேபெண்பிறந்தாரையேயித்யாதி) நலிகிறதசையிலே "பிரான்" என்பானென்னென்ன |(அல்பமண்ணியாரோயித்யாதி) அதாவது - ப்ரதிகூலன் பாதகனானு லுபாயத்தாலே தப்பலாம், அநுகூலன் பாதகனானால் தப்பப்போகாதென்றபடி. இத்தால் - உபகாரகனைப்போலேயிருந்து பாதகனாகிறானென்றபடி. சம்ஶ்லேஷாநந்தரம் விஶ்லேஷிக்கையாலே (அல்பமண்ணியாரென்கிறது) "திருக்கண்கள்" என்று நிஶ்சயியாதே, "அறியேன்" என்பானென்னென்ன (இதுக்குமுன்பித்யாதி) பிரிந்தறியாவிட்டால் கேட்டறியவில்லையோவென்ன (உயிர்க்கெல்லாமித்யாதி) சர்வப்ராணிகளையும் தாயாய்க்கொண்டளிக்கின்ற, குளிர்ந்ததாமரைபோன்ற கண்களையுடையவனேயென்று சப்தார்த்தம். திருமொழி ஏழாம்பத்து முதற்றிருமொழி ஒன்பதாம்பாட்டு, "தூயாய்" இத்யாதி. இதுக்கர்த்தம் (இக்கடாக்ஷமேயித்யாதி)

"சூழவும்" என்றதுக்கர்த்தம் (மூலபலத்தினித்யாதி) "தாமரைநாண்மலர்" என்றதுக்கு பாவம் (ராமசரத்துக்கித்யாதி) திருக்கண்களெங்கும் பரந்திருக்குமோவென்ன (புண்டரீகமித்யாதி) திருவிருத்தம் முப்பத்தொன்பதாம்பாட்டு,

“ நீலத்தடவரைமேல் புண்டரீகம் ” இத்யாதி. இதுக்கர்த்தம் - நீலரத்நமயமான பெரியமலையின்மேலே, தாமரையையுடைத்தான நெடியதடாகங்கள்போலேயழகு மிஞ்சி, நமக்கு சர்வப்ரதேசத்திலும் ப்ரகாசியாநின்றனவென்றபடி. பொங்குமுந்நீரொன்றுதொடங்கி, எம்பிரான்கண்ணின்கோலங்கள் - எமக்கெல்லாவிடத்தவுமித்யந்வயஃ. பார்த்தபார்த்தவிடமெல்லாம் திருக்கண்கள் பாதகமென்னுமதுக்கு த்ருஷ்டாந்தாந்தரம் (சர்ப்பபயமித்யாதி) “ சூழவும் ” என்றதுக்கு சப்தார்த்தம் (இருய்க்கவித்யாதி) விஶ்லேஷவேளையிலே “நாண்மலர்” என்னக்கூடாதென்று சங்கிக்கிறார் (இப்போததாமரையித்யாதி) என், “ தாமரைநாண்மலர்போல் ” என்னவொண்ணாதோவென்ன ; விஶ்லேஷதசையி லவனுருவியிருக்கையாலே யப்படி சொல்லவொண்ணாதென்று விவக்ஷித்து, அதுக்கு ப்ரமாணங்கள் (மஹதேத்யாதிநைவதம்ஶாநித்யாதி) இதுக்கர்த்தம் (பெருமாளித்யாதி) ப்ரக்ருதேஷிமாயாதமித்யத்ராஹ (பிரிவிலித்யாதி) (ஆற்றாமை) என்றவநந்தரம், இப்படியிருக்க (தாமரைநாண்மலரொன்பானென்னென்னில்) என்று கீழோடே யந்வயிப்பது. இதுக்கு பரிஹாரம் (அதறிகிறிலளேயிவளென்று) “[illegible] ” (ஸதவாதர்ஶநாதார்யே ராகவஃபரிதப்யதே । மஹதாஜ்வலதா) இத்யாதி, “[illegible] ” (நைவதம்ஶாந்மஶகாந் கீடாந்நஸரீஸ்ருபாந் । ராகவோபநயேத்காத்ராத் த்வத்கதேநாந்தராத்மநா) இதி சுந்தரகாண்டே ஹநுமாந். பின்னையெவ்வளவறிவளென்ன (தன்னுடேயித்யாதி) வினைநீரடைத்துக்கொண்டு - வினையும்படி யொருகாலே நீரைத்தேக்கிக்கொண்டு. பூர்ணமாக வநுபவித்தென்றபடி. “அதறிகிறிலள்” என்றத்தை விவரிக்கிறார். (பின்பவனித்யாதி) தோன்றுமென்றதே, “வந்துதோன்றும்” என்றதுக்குபாவம் (ப்ரத்யக்ஷத்திலித்யாதி)

இருவரையும் சம்போதிக்கிறதுக்கு பாவம் (சிலர்க்கித்யாதி) கீழ்வாக்யவிவரணம் (தோழிமார்க்கித்யாதி) “ என்செய்கேன் ” என்றது - கோடிதவயாவலம்பியாகையாலே யருளிச்செய்கிறார் (இத்தையித்யாதி) “ சூழவும் ” என்கையாலே-தப்பப்போகாதென்றபடி. பழைய க்லேஶமேயென்றது-விஶ்லேஷக்லேஶமேயென்றபடி.

க்ரமேணாந்வயஃ. ....*

இரண்டாம்பாட்டு.

ஆட்டியுந்தூற்றியுநின்றன்னைமீரென்னைநீர்நலிந்தென்
மாட்டுயர்கற்பகத்தின்வல்லியோகொழுந்தோவறியே
னீட்டியவெண்ணெயுண்டான்றிருமூக்கெனதாவியுள்ளே
மாட்டியவல்விளக்கின்சுடராய்நிற்கும்வாலியதே.

ஆறாயிரப்படி.

(ஆட்டியும்) ஸௌரப்யோபாதாநமாய்க்கொண்டு மூளைத்தெழுந்த கற்பகத்திலுடைய கோமளமானவல்லியோ, அன்றிக்கே, அதிலுடைய

யகொழுந்தோ, அதுவுமன்று, ஈட்டியவெண்ணெயுண்டான் திருமூக்கு; அந்த வெண்ணெயுடைய திவ்யவாஸநாவாஸிதமான வத்திருமூக்கழகு, என்னுடையவாத்மாவினுள்ளே யாரோபிதமாய், மஹத்தாயிருப்பதொரு விளக்கினுடைய ஜ்வாலைபோலே நின்று தஹியாநின்றது; அவ்வளவன்று, அதிலும் பாதகமாயிராநின்றது; என்னை யலைத்துக்கொண் டெங்கும் கோஷித்துநின்றென்னை பாதித்தால், அன்னைமீருங்களுக்கென்ன ப்ரயோஜநமுண்டென்கிருள்.......................... ....*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், ஆஸ்ரிதருடைய த்ரவ்யத்தி லபிநிவேசத்தாலே நவநீதசோரனை க்ருஷ்ணனுடைய நாஸாதண்டமானது என்னெஞ்சுக்குள்ளே ப்ரகாசியாநின்றதென்கிருள்.

அன்னைமீர் - ப்ரியபரைகளான தாய்மாரா யிருக்கிற. நீர் - நீங்கள். ஆட்டியும் - ஹிதஞ்சொல்லி இருந்தவிடத்திலிராதபடி பண்ணியும். தூற்றியும் - புறம்பே பழிதூற்றியும். நின்று - ஒருபடிப்பட நின்று. என்னை - என்னை. நலிந்து - நலிகிறத்தால். என் - என்னப்ரயோஜநமுண்டு. உங்கள் நலிவும் பலியாமைக்கடி, மாட்டு-பரிசரத்திலே. உயர் - ஓங்கியிருப்பதொரு. கற்பகத்தின் - கற்பகத்தினுடைய. வல்லியோ - கொடியோ. கொழுந்தோ - கொழுந்தோ. அறியேன் - அறிகிறிலேன். ஈட்டிய - கடைந்து திரட்டிவைத்த. வெண்ணெய் - வெண்ணெயை. உண்டான்-களவிலேயமுதுசெய்தவனுடைய. திருமூக்கு - திருமூக்கானது. எனது - என். ஆவியுள்ளே - நெஞ்சுக்குள்ளே. மாட்டிய - தூண்டப்பட்டு. வாலியது-பெருத்து. வல்ஸ்த்திரமான. விளக்கின்சுடராய்நிற்கும் - தீபஜ்வாலைபோலே ப்ரகாசியா நின்றது.

ருஜுவாகையாலே - கொடியென்னவுமாய், அதசைந்தோங்கின தலையை யுடைத்தாகையாலே - கொழுந்தென்னவுமாயிருக்கிறது. வாலிமை - பெருமை. மாட்டிய - தூண்டின. வன்மை - ஸ்த்தைர்யம்....................................*

ஈடு - இரண்டாம்பாட்டு.

“இரண்டுக்கும் நடுவே நாமிருக்க விவை முற்படுகையாவதென், அத்தனையோ நம்மூக்குவலி” என்று திருமூக்கிலழகு நலிகிறபடியைச் சொல்லுகிறது.

(ஆட்டியும் தூற்றியும்) ஆட்டுகையாவது - தாந்தாம் பழிசொல்லியலைக்கை. தூற்றுகையாவது - பிறருமறியப்பழிசொல்லுகை. “அச்சமுறுத்திமீட்கலாமோ” என்றொருகாலலைக்கை ப்ராப்தமிறே; அங்ஙனன்றிக்கே (நின்று) முன்புசெய்ததுக் கொருப்ரயோஜநம் காணுதிருக்கச் செய்தேயும் விடாதே நின்று. (அன்னைமீரென்னைநீர்நலிந்தென்) ஹிதத்திலே நடக்கும் பித்ராதிகளைப்போலே, என் ப்ரியத்திலே நடக்கும் நீங்களென்னை நலிகிறதென். என்னுகப்பே பேருக நினைத்திருக்கக்கடவ நீங்கள் நலிகிறதென். (நலிந்தென்) அந்தவுருவுவெளிப்பாட்டைப் பரிஹரிக்கலாமென்ருே, என்னைமீட்கலாமென்ருே. ஒருப்ரயோஜநமில்லாததிலே

யும் ப்ரவர்த்திக்கக்கடவதோ. அவனுடைய மூக்குவலி யிருக்கிறபடியை யாரிந்து நீங்களென்செய்யப்படுகிறீர்கோள்.

நாங்கள் சொல்லுகிற ஹிதவசநத்துக்கொருப்ரயோஜநமில்லையாகில், என்செய்தால் ப்ரயோஜநமுண்டென்ன (மாட்டுயரித்யாதி) வல்லிகோளாகி விஸ்ஸம்ஸயத்தை யறுத்துத் தாருங்கோள். மாடு-அருகு. கண்ணருகென்றபடி. ஒருகடலருகே அக்கடலூற்றே தாரகமாக வளருகிறதொருகொடிபோலே யாயிற்று, திருக்கண்களருகே திருமூக்கிருக்கிறபடி. (உயர்) "உஙஸஷ" (உந்நஸம்) என்கிறபடியே. (கற்பகத்தின் வல்லியோ கொழுந்தோ) ஒழுகுநீட்சியாலே - கொடியென்னவுமாய், ஸௌரத்தை மாறுமையாலே - கொழுந்தென்னவுமாயிராநின்றது. அறியேனென்கிறது - "இன்னது" என்று நிஸ்சயிக்கவரிதாகையாலே, சர்வதா சாம்யத்தாலே. (ஈட்டியவித்யாதி) எங்களுக்கறியப்போமோ, இதிலே யுட்புகநின்றநுபவிக்கிற நீ பின்னைச சொலலாயென்ன (ஈட்டியவித்யாதி) அநுகூலஸ்பர்ஸமுள்ள த்ரவ்யத்தாலல்லது தரிக்கமாட்டாதே வெண்ணெய் களவுகாணப்புக்குக்கொண்டியிலேபிடியுண்டு, பின்பத்தை யில்லை செய்கைக்காக முகத்திலே தடவிக்கொள்ளுமே; அவ்வெண்ணெயிலே முடைநாற்றமு முருவு வெளிப்பாட்டிலே தோற்றுகிறதாயிற்றிவளுக்கு. அப்போதை முடைநாற்ற முபலப்தமாம்படியாயிற் றுருவுவெளிப்பாட்டில் மெய்.

நீ சக்ஷுர்விஷயமாகச் சொல்லுகிற விதெங்களுக்குத் தெரிகிறதில்லையீயென்ன (எனதாவியுள்ளோ) என் ஹ்ருதயத்துக்குள்ளே. (மாட்டிய) சுடர்வெட்டியவென்னுதல், ஏற்றியவென்னுதல். (வல்விளக்கின் சுடராய்) (பெரியவிளக்கினொளியையுடைத்தாய.) விரஹந்தா லவியாதவிளக்காயிற்று. "'ஏற்றியபெருவிளக்கு' என்றொருநமிழனிட்டுவைத்தான்" என்றருளிச்செய்வர். (நிற்குமவாலியதே) வலிதாய்நின்றுநவியாநிற்கும். தீபமாகிறது தான் க்ஷணிகமுமாய் ப்ராதேசிகமுமாயிறே யிருப்பது; இதங்ஙனன்றிக்கே, எப்போதுமா யெங்குமுண்டாயிராநின்றது. பாதகத்வத்திலுறைப்பை யநுசந்தித்துச சொல்லுகிற வார்த்தையிறேயிது. (மாட்டியவாலியதான வல்விளக்கின்சுடராய்நிற்கும். வாலிமை - பெருமை. வன்மை - ஸ்த்தைர்யம்.) ....*

ஜீயர் அரும்பதம்.

இரண்டாம்பாட்டு. (ஆட்டியுமித்யாதி) "திருமூக்கு" என்றத்தைப்பற்ற ரசோக்தியாக வவதாரிகை (இரண்டுக்குமித்யாதி) மூக்குவலியென்றது - மூச்சென்று ரசோக்தி; மூக்கென்று பேரையுடைய நம்முடைய வலியென்று ஸ்வபாவார்த்தம்.

"நின்று" என்றதுக்கு பாவம் (அச்சமுறுத்தியித்யாதி) உக்தார்த்த விவரணம் (முன்புசெய்ததுக்கித்யாதி) இத்தனைநாளும் தோழிமாரை ப்ரியபரைகளாகவும், தாய்மாரை ஹிதபரைகளாகவும் சொல்லிக்கொடுபோந்தாள்; இப்போது, பித்

ரபேக்ஷயா, தாய்மாரை ப்ரியபரைகளென்கிறாள் (ஹிதத்திலேயித்யாதி) "நீர்" என்றதுக்கு பாவம் (என்னுகைப்பேயித்யாதி) "என்" என்கிறது - கோடித்வயாவலம்பியாகையாலே, உங்களுக்கு நலிகைக் கொருப்ரயோஜநமில்லையென்று பாவாந்தரம் (அநந்யவுருவித்யாதி) விவரணம் (அவனுடையவித்யாதி)

"வல்லியோ கொழுந்தோ வறியேன்" என்று அவர்கள்முன்னே சம்சயிக்கிறதுக்குக் கருத்து - இத்தை நிச்சயித்துத் தரவேணுமென்றுகையாலே, அத்தை ப்ரச்ந ப்ரதிவசநரூபேண வருளிச்செய்கிறார் (நாங்களித்யாதிவாக்யத்வயத்தாலே) தாருங்கோள் - சம்சயத்தை யறுத்துத்தருகை ப்ரயோஜநமென்றபடி. ஸ்தோத்ரே யாமுநாசார்யா:, "ஸஸ்மிதம் கோமளகண்டமுந்நஸம் லலாடபர்யந்தவிளம்பிதாளகம்" (ஸஸிஸ்மிதம்கோமளகண்டமுந்நஸம் லலாடபர்யந்தவிளம்பிதாளகம்) இதி. "வல்லியோகொழுந்தோ" என்கிற சம்சயத்துக் காபாதகதர்மமேதென்ன (ஒழுகித்யாதி) ஒழுகுநீட்சி - சாஸ்த்ரசித்தமான வாகாரவைதர்க்யம். நிச்சயிக்கப்போகாமைக்கு ஹேதுவேதென்ன (சர்வதா சாம்யத்தாலேயென்று)

"ஈட்டியவெண்ணெயுண்டான்" என்று விசேஷித்ததுக்குபாவம் (அநுகூலஸ்பர்சமித்யாதி) ஈட்டிய - திரட்டின. கொண்டி - களவு. முடைநாற்றமிப்போது தோற்றுமோவென்ன (அப்போதையித்யாதி) உபலப்தமாம்படி-தோற்றும்படி.

* வன்மைக்கர்த்தம் (விரஹத்தாலித்யாதி) இவ்விடத்திலே - "அல்பாக்நி, ப்ரபலாக்நிமேலிட்டாலவியும்; இங்கு விரஹாக்நி, ப்ரபலமாயிருக்கச்செய்தேயு மவியாதவிளக்காயிற்று" என்றருளிச்செய்வர். "ஏற்றிய" என்றதுக்கு சம்வாதமாக, தமிழன் நிர்வாஹம் (ஏற்றியபெருவிளக்கென்றித்யாதி) "வல்விளக்கு" என்றும், "வாலியது" என்றும் சொல்லுகிற புநருக்திக்கு பேதமருளிச்செய்கிறார் (தீபமித்யாதி) எப்போதுமாயென்றது - * வன்மைக்கர்த்தம். எங்குமென்றது - "வாலியது" என்றதுக்கர்த்தம். ஆக, வன்மைக்கர்த்தத்வயம். வாலியது - வலியதென்றபடி. எங்குமுண்டாகக் கூடுமோவென்ன (பாதகத்வததிலித்யாதி)..............*

மூன்றாம்பாட்டு.

வாலியதோர்கனிகொல்வினையாட்டியேன்வல்வினைகொல்
கோலந்திரள்பவளக்கொழுந்துண்டங்கொலோவறியேன்
நீலநெடுமுகில்போற்றிருமேனியம்மான்றொண்டைவா
யேலுந்திசையுளெல்லாம்வந்துதோன்றுமெனின்னுயிர்க்கே

ஆறாயிரப்படி.

(வாலியதோர்) பக்வமாயம்ருதரசமா யிருப்பதொரு கனியோ அன்றியே, பாதகமாகையாலே சஹஜவிரஹவ்யஸநையாயிருந்தவென்னுடைய மஹாபாபமோ, * சௌந்தர்யசாரசமுதாயமான பவளத்தினுடைய கொழுவியதாயிருப்பதொருமுறியோ, அவையெல்லாமல்ல; நீலமஹாவலாஹகரமணீய திவ்யரூபனானவனுடைய சாருதரபிம்ப சத்ருசமான திருப்பவளம், ததீயதிவ்யரூப சௌந்தர்ய ஸஹக்ருதமாய்க்கொண்டென்னை முடிக்கைக்காக வெல்லாத்திக்குக்களிலும் வந்து தோன்றாநின்றதென்கிறாள் ....

பன்னீராயிரப்படி.

அநந்தரம், ஶ்யாமளமானவடிவுக்கு பரபாகமான வதரசோபையானது, பார்த்தபார்த்தவிடமெங்கும் தோன்றுகின்றதென்கிறாள்.

வாலியது-போதுசெய்யாத நன்மையையுடைத்தாய். ஓர்-மென்மையாலும் நிறத்தாலும் இனிமையாலும் அத்விதீயமாயிருப்பதொரு. கனிகொல் - பழமென்னலாயிருக்கிறதோ. வினையாட்டியேன்-இப்பலத்தை யப்போதேயநுபவிக்கப்பெறாத பாபத்தையுடைய வென்னுடைய. வல்-அநுபவித்துக்கழிக்கவரிய. வினைகொல்-பாபமொருவடிவுகொண்டதாயிருக்கிறதோ. கோலம்-ஸௌந்தர்ய ஸௌலப்ய ஸௌகுமார்ய சாரஸ்யாதிகள். திரள்-திரண்டதொரு. பவளம் - பவளத்தினுடைய. கொழும்-கொழுவிதான. துண்டங்கொலோ-துண்டமென்னலாயிருக்கிறதோ. அறியேன்-இன்னதென்று நிர்த்தரித்தறியலாயிருக்கிறதில்லை. நீலம் - ஶ்யாமளமாய். நெடும்-பெருத்த. முகில்போல்-மேகம்போலே. திருமேனி-அழகையுடையனுன. அம்மான்-ஸ்வாமியுடைய. தொண்டை-தொண்டைப்பழத்தின் நிறத்தையுடைத்தான. வாய்-திருவதரமானது. ஏலும்-என்றுகொண்டுபார்த்த. திசையுளெல்லாம்-திக்கெல்லாம். என்-என். இன்-இனிய. உயிர்க்கு-உயிரானோக்கு. வந்து-வந்து. தோன்றும்-தோன்றுகின்றது ....*

ஈடு - மூன்றாம்பாட்டு.

அது தன்னைக்குவலிகாட்ட நாம் பேசாதேயிருந்தால், " அத்தனையோ விதின்வாய்வலி " என்று நம்மையேசுவர்களென்று, திருப்பவளத்திலழகுவந்து நலிகிறபடியை யருளிச்செய்கிறார்.

(வாலியதோர்கனிகொல்) முன்புபிஞ்சாய், அநந்தரம் பக்வமாய், பின்பு அநுபவயோக்யமன்றிக்கே போவனசில பலங்களுண்டிறே; அங்ஙனன்றிக்கே, என்றுமொக்க வேகரூபமாயிருப்பதொருகனியோ. அத்தலையில் போக்யதை போதுசெய்யாமையாலே யித்தலையிலாற்றாமையும் போதுசெய்யாதே. (வினையாட்டியேன்வல்வினைகொல்) போக்யவஸ்து பாதகமாயிற்று போக்தாக்கள்பண்ணின பாபத்தாலேயிறே - அம்ருதமே விஷமாம்படியான பாபத்தைப்பண்ணினேன். பாபத்தைப்பண்ணின வென்னுடைய பாபமானது பக்வமாய்க்கொண்டங்கே குடியேறிற்றோ. அங்கேகிடந்திறே யிங்கநுபவிப்பிப்பது - பகவத்விஷயத்தில் நிக்ரஹரூபேணகிடந்திறே யிங்கநுபவிப்பிப்பது. க்ரியையாகையாலே செய்தபோதே நசித்துப்போமே. இவன்பண்ணினபாபத்துக்கு, தானே ஸ்வதந்த்ரமாய் நின்று பலப்ரதமாகைக்கு ப்ராப்தியில்லையே. (வல்வினைகொல்) அநுபவவிநாஶ்யமாகாதபடியான பாபமாயிற்று. (கோலந்திரளித்யாதி) அழகு திரண்டிருந்துள்ள பவளத்தினுடைய ஶ்ரத்தையையுடைத்தான முறியோ, அறிகிறிலேன். முறியோவென்கிறது - புழுதியுடைத்திராமைக்கு; முறித்தவாயானது ஒளியுண்டாய் நெய்த்திருக்குமிறே.

(நீலமித்யாதி) இதுதானென்று முண்டாயிருக்கச்செய்தே, இது க்குமுன்பு பாதகமாயிற்றில்லையிறே; கூட்டுப்படைநின்றவாறே நலியநி

ன்றதாயிற்று. நீலமாய் போக்யதை யளவிறந்திருந்துள்ள முகில்போன்
றவடிவையுடைய சர்வேச்வரனுடைய. (தொண்டைவாய்) தொண்டை-
கோவை. கோவைப்பழம்போலே கனிந்துநெய்த்திறே திருப்பவளந்தா
னிருப்பது. தன்னிற்றானுண்டானபகை பார்த்திருக்கிறதில்லையாயிற் றிவ
ளோநலிகிறவிடத்தில். இரண்டுக்கும் சேரவன்னியமில்லையிறே. (வன்னி
யம்-ஸ்வாதந்த்ர்யம். ஒருவன்பக்கலிருவர் பகையானால், இருவரும் ஸ்வ
தந்த்ரரானு லவனை வெல்லவொண்ணாது; ஆகையாலே, இருவரு மொ
ருமிடறாய் நலிவர்கள்; அப்படியேயிங்கும்.) அவை நலிந்துகொடு தோற்
றுநின்றதாகில் தப்பப்பார்த்தாலோவென்ன; வாய்வலிதப்பலாயோவிரு
க்கிற தென்கிறாள் மேல் (ஏழும்திசையுமெல்லாம்) நானு மிவைநலியா
தவிடந்தேடித் தப்பவிரகுபாராநின்றேன், அவ்வோவிடங்களிலேவந்து
தோன்றாநின்றது. பார்த்தபார்த்தவிடமெல்லாம் தானேயாயிராநின்றது.
தோன்றுகிறதுக்குக் கருத்தென்னென்னில் (என்னின்னுயிர்க்கே) என்
னுடைய நற்சீவனைமுடிக்கைக்காக...................................*

ஜீயர் அரும்பதம்.

மூன்றாம்பாட்டு (வாலியதோரித்யாதி) ''தொண்டைவாய்'' என்றத்தைப்ப
ற்ற ரஸோக்தியாகவவதாரிகை (அதுதன்னித்யாதி)

" வாலியதோர்கனிகொல் " ஏகரூபமாயிருப்பதொரு கனியோவென்று சப்
தார்த்தம். வாலியது-வலியது. வன்மையாவது-ஸ்தைர்யம். அதாவது-ஏகரூபமென்
றபடி. "வாலியதோர்கனி" என்றதுக்கு வ்யாவர்த்யம் (முன்புமிஞ்சாயித்யாதி)
சிலபலங்களென்றது-எட்டிப்பழம்முதலானவை. இதுக்கு ஹார்த்தபாவம் (அத்த
லேயித்யாதி) போதுசெய்கை-முகுளிதமாகை.

"வல்வினை" என்கைக்கு ஹேதுவேதென்ன (போக்யவஸ்துவித்யாதி) விவ
ரணம் (அம்ருதமேயித்யாதி) சப்தார்த்தம் (பாபத்தையித்யாதி) பக்வமாய்-பலோந்
முகமாயென்றபடி. அங்கேகுடியேறிற்றே - அவனிடத்திலே யதரமாகத்திரண்ட
தோவென்றபடி. தன்னுற்றாமையாலே சொன்னவளவேயன்று, வாஸ்தவமானவ
ர்த்தமு மதுவேயென்கிறார் (அங்கேகிடந்தித்யாதி) விவரணம் (பகவத்விஷயத்திலி
த்யாதி) நிக்ரஹரூபேணகிடந்தநுபவிப்பிக்கவேணுமோ, தானே ஸ்வதந்த்ரமாக வ
நுபவிப்பித்தாலோவென்ன (க்ரியையாகையாலேயித்யாதி) அசேதநமாகையாலும்
மாட்டாதென்று பரிஹாராந்தரம் (இவன்பண்ணினவித்யாதி) * வன்மைக்கர்த்தம்
(அநுபவேத்யாதி)

துண்டம்-முறி. ப்ரத்தை-ஸ்நிக்ததை. துண்டம் புழுதிபுடைத்திராதோவெ
ன்ன (முறித்தவாயித்யாதி) நெய்த்திருக்கை - ஸ்நிக்தமாய்ப்பளபளத்திருக்கை.

இதுதானென்றது-திருப்பவளத்திலழகை. கூட்டுப்படையாவது - திருமேனி
யிலழகு. திருமேனியில்கறுப்பும் பரபாகமாய் ஸ்பர்த்தியாதே, கூடிநலியக்கூடு
மோவென்ன (தன்னிற்றானித்யாதி) நலிவிலிரண்டும் ப்ரதாநமோவென்ன (இரண்
டுக்குமித்யாதி) ஒன்றேப்ரதாநமென்றபடி. அதாவது-திருமுகத்திலழகைச்சொல்லு
கிற ப்ரகரணமாகையாலே - திருவதரமேப்ரதாநமாய், திருமேனியழகு கூட்டுப்ப
டையென்றபடி. சேரவன்னியமில்லை-சமசாத்ரவமில்லையென்றபடி.

மேலுக்கலதாரிகை (அவைகலிந்தித்யாதி) "எல்லாம்" என்றநக்குபாவம் (நானுமித்யாதிவாக்யத்வயம்) விவரணம் (பார்த்தபார்த்தவித்யாதி) ஏலும்திசையு ளெல்லாம்-தப்பயோக்யமானவிடங்களெல்லாம். ஏலும்-யோக்யமான. திசை-இடம். திக்காதல். முடிக்கைக்காகவென்றது-தாத்பர்யார்த்தம். உயிர்க்காகவந்தென்று சப்தார்த்தம் ....*

நான்காம்பாட்டு.

இன்னுயிர்க்கேழையர்மேல்வளையுமிணைநீலவிற்கொல்
மன்னியசீர்மதனன்கருப்புச்சிலைகொன்மதனன்
றன்னுயிர்த்தாதைக்கண்ணபெருமான்புருவமவையே
யென்னுயிர்மேலனவாயடுகின்றனவென்றுநின்றே.

ஆறாயிரப்படி.

(இன்னுயிர்க்கு) பரமபுருஷ ஸம்ச்லேஷத்திலே லாலஸமான காமிநீஜநத்தினுடைய ப்ராணனையே லக்ஷ்யமாக வுடையவையாய், நம்ரமாய் நீலமாயிருப்பன விரண்டுவிற்களோ, அன்றிக்கே, மதநனுடைய சௌந்தர்யநிகேதநமான விக்ஷுகோதண்டமோ, இவையெல்லாமல்ல; சௌந்தர்யஸாரனான மதநனுக்கு ஜந்மபூமியான புண்டரீகவிலோசநனுடைய புருவங்களே, இவை யென்னுடைய ப்ராணன்களை யெப்போதும் பாதிக்கிறன வென்கிறாள்...*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், காமோத்பாதகனாய் *ஸாக்ஷாந் மந்மதமந்மதனான க்ருஷ்ணனுடைய திருப்புருவங்களானவை யென்னாத்மாவை நலியாநின்றனவென்கிறாள்.

இன் - நல்ல. உயிர்க்கு - ப்ராணனை யபஹரிக்கைக்காக. ஏழையர்மேல்-சபலைகளான பெண்பிறந்தார்மேலே. வளையும் - தானே வளைந்து நலிவதான. நீலம்-நீலநிறத்தையுடைய. இணை - இரண்டு. விற்கொல் - வில்லென்னலாயிருக்கிறதோ. அங்ஙனன்றியே, மன்னியசீர் - ஸ்தநிரசௌந்தர்யாதிகுண யுக்தனான. மதனன்-காமனுடைய. கருப்புச்சிலைகொல் - காமுகரை நலியும் கருப்புவில்லென்னலா யிருக்கிறதோ. மதனன்றன்-அந்தக்காமன்றனக்கு. உயிர்-சத்தாப்ரதனாய்க்கொண்டு. தாதை-உத்பாதகனாய். கண்ணன் - க்ருஷ்ணனான. பெருமான் - சர்வாதிகனுடைய. புருவமவையே - *தன்கைச்சார்ங்கமதுவேபோலும் திருப்புருவங்கள்தாம். என்-என். உயிர்மேலனவாய் - ஆத்மாவின்மேலே அபிமுகங்களாய்க்கொண்டு. என்றும் - என்றும். நின்றே - ஒருபடிப்பட நின்று. அடுகின்றன - நலியாநின்றன.

அவையேயென்றது - முன்பு த்ருஷ்டாந்ததயா சங்கித்த வ்யக்திகளிற்காட்டில் பாதகத்வம் கனத்திருக்கையாலே. ....*

ஈடு - நான்காம்பாட்டு.

"என்றான், இங்ஙனே யதரோத்தரமாயிற்றே போய்" என்று திருப்புருவத்தி லழகு வளைந்து கொடுவந்து நலிகிறபடியை யருளிச்செய்கிறார்.

(இன்னுயிர்க்கு) என்னுடைய நற்சீவனைக் கொள்ளுகைக்காக. (ஏழையர்மேல் வளையும்) வளைப்பாருமின்றிக்கே வளைக்கைக்கு விஷயமுமின்றிக்கே - அகர்மகமாகவு மகர்த்ருகமாகவும் வளையாநின்றது. விஷயமில்லாமையாலே கர்மமில்லை, வளைப்பாரில்லாமையாலே கர்த்தாவில்லை. ஏழையர்மேலே வளைகிற நீலமான விரண்டுவில்லோ. "ஸக்ருதாவநிஹவாஶைர்ஹீஷ்வாஸௌ ஸத்ருநாஸநே" (ஸக்ரசாபநிபேசாபே க்ருஹீத்வாஸத்ருநாஸநே) என்னும்படியே. இந்த்ரதநுஸ்ஸுக்கு "அபலைகளையே நலியவேணும்" என்னும் நிர்ப்பந்தமில்லையிறே. (மன்னியசீரித்யாதி) பெண்பிறந்தாரையே நலியக்கடவதான காமனுடைய வில்லுத்தானேயோ. அதுதன்னிலும் ருத்ரனாலே வடிவிழப்பதற்கு முன்புத்தையவன்கையில் வில்லாகவேணும். (கருப்புச்சிலைகொல்) கண்ணுக்காபாசமாய் பாதகத்வமுறைத்திருக்கிறபடி.

அவனோட்டை சம்பந்தத்தால் வந்த ராஜகுலங்கொண்டு திரிகிறவன்கையில் வில்லுக் கித்தனை யுறைப்புண்டாகமாட்டாது, அவன்றனக்குங்கூட ஜநகனான க்ருஷ்ணனுடைய திருப்புருவங்கள்தாமேயாகவேணும். (மதன்னித்யாதி) * தன்கைச்சார்ங்கமதுவேபோல் புருவவட்டமழகியவனுடைய புருவங்கள்தாமே யாகவேணும். ஆண்டாள்வார்த்தை யிருக்கிறபடியிறே. [தருமமறியாக்குறும்பனை] தர்மமறியும்போது அபிஷிக்தக்ஷத்ரியன் வயிற்றிலே பிறந்தவனாகவேண்டாவோ. யாதவர்கள் நேரே முடிசூடுவதில்லையிறே. * ஆந்ருஸம்ஸ்யமிருக்கும்படி முதலிலே புதியதுண்டறியாதவனாயிற்று. ஸ்ரீநந்தகோபர், தம்முடைய ராஜ்யத்திலே மூலையடியேநடந்து திரிவாரொருபிள்ளையையாயிற்றுப் பெற்றது. [தன்கை யித்யாதி] கையிலே வில்லைக்கண்டால், "முகத்திலே யிருக்கக்கடவது கையிலேயிருந்ததீ!" என்னலாம்படியா யிருக்கும். முகத்திலேகண்டவாறே, "கையிலேயிருக்கக்கடவிது முகத்திலே யிருந்ததீ!" என்னலாயிருக்கும். [அதுவேபோல்] என்கிறதாயிற்று - ஸர்வதா ஸாம்யத்தாலே. [புருவவட்டமழகிய] "தருமமறியான்" என்றிழக்கவொண்ணுதபடி யாயிற்று வடிவழகிருப்பது. [பொருத்தமிலியை] சிலபதார்த்தங்களுண்டிறே-நிறமழகியதாய் பார்த்தவாறே, உபயோக யோக்யமன்றிக்கே யிருப்பன; அவைபோலே, வடிவழகேயாய், ஆசைப்பட்டார்பக்கல் ரசந்தொங்கிலும் தொங்கானாயிற்று. [கண்டீரோ] அவனுக்குப் பொருத்தமில்லாவிட்டால், நமக்குப் பொருத்தமில்லையாகிலிறே விட்டிருக்கலாவது; அவன்பொருந்தாமை தமக்குத் தொடர்ந்துதிரியுமத்தனையாயிற்று. (புருவமவையே)

கீழ்ச்சொன்னவழகுகள்தா மநுகூலமென்னும்படியாகவாயிற் றிவை பா தகமாகிறபடி. (என்னுயிர்மேலனவாய்) இருப்பதங்கேயா யிருக்கச்செய் தேயும், நோக்கென்மேலேயாயிராநின்றது. * எங்கும்பக்கநோக்கறியாதி றே யிருப்பது. (அடுகின்றன) கொல்லாநின்றன. (என்றுநின்றே) பாத கமாக நிற்கச்செய்தேயு மநித்யமாயிருப்பன சிலபதார்த்தங்களுண்டிறே, இவையங்ஙனன்றிக்கே யென்றுமொக்கநின்று நலியாநின்றன. என்னை ந லிகைக்காக நித்யத்வத்தை யேறட்டுக்கொண்டது; "நித்யம் நித்யாக்ருதி தரம்" (நித்யம்நித்யாக்ருதிதரம்) என்கிறதுதானேயிறே நலிகிறது. *

ஸ்ரீயர் அரும்பதம்.

நான்காம்பாட்டு. (இன்னுயிர்க்கித்யாதி) "புருவமவையே" என்றத்தைப்ப ற்ற ரசோக்தியாக வவதாரிகை (என்னுனித்யாதி) அதரோத்தரமாயிற்றே - தாழ் ந்ததே மேலாய்விட்டதோ வென்று ரசோக்தி.

"இன்னுயிர்க்கு" என்றது - அநுவாதமன்று. புருவந்தானே வளைந்திருக் கையாலே (வளைப்பாருமின்றிக்கேயென்கிறது) விஷயமும்-லக்ஷயமும். "வளைப்பா ரும்" இத்யாதியை வ்யுத்க்ரமமாக விவரிக்கிறார் (அகர்மகமித்யாதி) "அகர்மகம், அகர்த்ருகம்" (அகர்மகம், அகர்த்ருகம்) என்கிறதுக்கு ஹேது கதநபூர்வகமாகவிவ ரணம் (விஷயமித்யாதி) "ஏழையர்" என்கையாலே-விஷயமில்லையென்றபடி. சப்தார்த்தம் (ஏழையரித்யாதி) "விற்கொல்" என்றது-இந்த்ரதநுஸ்ஸுக்களோ வென்றபடி. அப்படி யிந்த்ரதநுஸ்ஸு போக்யமோவென்ன (ஶக்ரசாபேத்யாதி) கிஷ்கிந்தாகாண்டே பம்பாதீரே ஹநுமாந். சம்ஶயிக்கிறதென், அதுதானேயென்ன வொண்ணாதோவென்ன (இந்த்ரதநுஸ்ஸுக்கித்யாதி)

"மதனன் கருப்புச்சிலைகொல்" என்றதுக்கு பாவம் (பெண்பிறந்தாரையே யித்யாதி) "மன்னியசீர்" என்றதுக்குபாவம் (அதுதன்னிலுமித்யாதி) வடிவோ டே, மன்னிய - பொருந்தின, சீர் - எழிலையுடைய, காமனென்று சப்தார்த்தம். யு த்தபரிகரமல்லாமையாலே ஆபாசமான கருப்புச்சிலை பாதகமாமோவென்ன (கண் ணுக்கித்யாதி)

கீழெல்லாம் சம்ஶயித்து, "புருவமவையே" என்று நிஶ்சயிக்கிறதுக்கு பா வமருளிச்செய்கிறார் (அவனோட்டையித்யாதிவாக்யத்வயத்தாலே) மன்னியசீர்மத னன் - ஸ்த்திரமான சௌந்தர்யாதிகுணயுக்தனான காமனென்று உரையில் சப்தார் த்தம். மதனன்றன்னுயிர்த்தாதைக் கண்ணபெருமான் - அந்தகாமன்றனக்கு சத்தா ப்ரதனாய்க்கொண் டுத்பாதகனாய் க்ருஷ்ணனான சர்வாதிகனுடைய வென்றுரையில் சப்தார்த்தம். திருப்புருவம், "சிலைகொல்" என்று விகல்பிக்கும்படி விற்போலே யிருக்குமோவென்ன ; ப்ரமாணம் (தன்கையித்யாதி) நாய்ச்சியார் திருமொழி. ஆண்டாள்வார்த்தை யிருக்கிறபடியிறே யென்றது - அல்லாதாரைப்போலன்றிக்கே, திருப்புருவத்திலழகையுட்புக் கநுபவித்தவள் வார்த்தையென்றபடி. பாட்டுக்கர்த்த மருளிச்செய்வதாக ப்ரதீகோபாதாநம் (தருமமித்யாதி) "ஆந்ருஶம்ஸ்யம் பரோ தர்ம:" (ஆந்ருஶம்ஸ்யம்பரோதர்ம:) என்றிருக்கையாலே, தர்மமென்று - க்ருபையைச்சொல்லுகிறது. "தருமமறியா" என்றவநந்தரம், "குறும்பனை" என் று விசேஷிக்கிறவனுடையபாவம் (தர்மமறியும்போதித்யாதி) ஸ்ரீவசுதேவர் க்ஷத்ரி

யரன்றோவென்ன (யாதவர்களித்யாதி) "தருமம்" என்றதின்னதென்றும், "அறி யா" என்றதுக்கு மர்த்தம் (ஆந்ருஶம்ஸ்யமித்யாதி) "குறும்பனை" என்றதுக் கர்த் தம் (ஸ்ரீநந்தகோபரித்யாதி) குறும்பனை - தீம்பனை. சர்வதா சாம்யத்திலுடைய வு றைப்பை யருளிச்செய்யா நின்றுகொண்டு அதுக்கு சப்தநிர்வாஹங் காட்டுகிறார் (சைபிலேயித்யாதிவாக்யத்ரயத்தாலே) இதுக்கு நியாமக மேதென்ன (அதுவே போலித்யாதி) நீர்மையில்லாவிட்டால் விடுமத்தனையன்றோவென்ன (தருமமறியா ணித்யாதி) "புருவவட்டமழகிய" என்றத்தோடே, "பொருத்தமிலியை" என்றத் தையுங் கூட்டி பாவம் (சிலபதார்த்தங்களித்யாதி) (பார்த்தவாறே - நிறமழகிய தாய்) என்றங்வயிப்பது. சிலபதார்த்தங்களென்றது - எட்டிப்பழந்தொடக்கமான வை. தொங்கான் - இரான். தொங்குகை - இருக்கை. பொருத்தமில்லாவிட்டால் "கண்டீரோ" என்று - அதுகேட்பானென்னென்ன (அவனுக்கித்யாதிவாக்யத்வயம்) "அவையே" என்றவவதாரணார்த்தம் (கீழ்ச்சொன்னவித்யாதி)

அவன்முகத்திலே யிராநிற்க, இவர்க்கு பாதகமாகக் கூடுமோவென்ன (இரு ப்பதித்யாதி) இந்நோக்குத் தம்மேலேயேவென்ன, ப்ரமாணம் (எங்கும்பக்கநோக் கித்யாதி) "நித்யம்" என்றதுக்கு ப்ரமாணம் (நித்யம்நித்யாக்ருதீத்யாதி) என் னுத்மாவின்மேலே யபிமுகங்களாய்க்கொண்டு, என்று மொருபடிப்பட நின்று நலி யாநின்றனவென்று சப்தார்த்தம்...

ஐந்தாம்பாட்டு.

என்றுநின்றேதிகழுஞ்செய்யவீன்சுடர்வெண்மின்னுக்கொ
லன்றியென்னுவியடுமணிமுத்தங்கொலோவறியேன்
குன்றமெடுத்தபிரான்முறுவலெனதாவியடு
மொன்றுமறிகின்றிலேனன்னைமீரெனக்குய்விடமே.

ஆறாயிரப்படி.

(என்றுநின்றே) தோன்றிமாயாதே யென்றும் நின்றுவிளங்கா ன்று சிவந்தசுடரை யீனுநின்றவெள்ளை மின்னோ, அன்றிக்கே, என்னு மாவைநோவுபடுத்தாநின்றுள்ள வழகிய முத்துநிரையோ, அறிகிறிலே ன்; * கோவர்த்தநோத்தரணம்பண்ணி யாஸ்ரிதர்பக்க லநுக்ரஹஶீலனுன க்ருஷ்ணனுடைய முறுவலானது என்னுடைய ப்ராணனை நலியாநின் று; அன்னைமீர், அவனுடைய திருவழகாலேவந்த நலிவைத்தப்பி யு ஜீவிக்கலாமிடமொன்று மறிகிறிலே னென்கிறாள்..... ....

பன்னீராயிரப்படி.

அநந்தரம், அநாயாஸேந கோவர்த்தநோத்தரணம்பண்ணின க்ருஷ்ண டைய தாத்காலிக மந்தஸ்மிதமான தென்னை நலியாநின்றது, ஒதுங்கிப்பிழை லாவதோரிடம் காண்கிறிலேனென்கிறாள்.

என்றும்-என்றும். நின்றே-ஒருபடிப்படநின்று. திகழும்-விளங்கக்கடவ ய். செய்ய-சிவக்க. ஈன்-ஈனுநிற்கிற. சுடர்-சுடராயுடைத்தான. வெண்-வெளு

மின்னுக்கொல்-மின்னென்னலாயிருக்கிறதோ. அன்றி-அன்றியே. என்-என். ஆவி-ப்ராணனை. அடும்-நலியக்கடவதாய். அணி - அணியாகநினைத்த. முத்தங்கொலோ-முத்துக்களாயிருக்கிறதோ. அறியேன்-அறுதியிடமாட்டுகிறிலேன். குன்றம் - கோவர்த்தநத்தை. எடுத்த-எடுத்துரக்ஷித்த. பிரான-மஹோபகாரகனுடைய. முறுவல்-ரக்ஷணப்ரீதியாலே யப்போதுண்டானமுறுவலானது எனது - என். ஆவி - ஆத்மாவை. அடும்-தபியாநின்றது. அன்னைமீர் - இவ்வளவிலும் ஹிதஞ்சொல்லுகிற வன்னைமீர். எனக்கு-எனக்கு. உய்விடம்-பிழைக்கலாமிடம். ஒன்றும்-ஒன்றும். அறிகின்றிலேன்-அறிகிறிலேன்.

திவ்யாவயவசௌந்தர்யங்கள் தனித்தனியே பாதகமாமதொழிய, ஆஸ்வாஸகரமாயிருப்பதொன்று முண்டாயிருக்கிற தில்லையென்றுகருத்து... ... .*

ஈடு - ஐந்தாம்பாட்டு.

"இம்முகத்துக்குவாய்க்கரையிலே நாமிருக்க விவைமுற்படப்போவதே" என்றுதிருமுறுவலி லழகுவந்து நலிகிறபடியை யருளிச்செய்கிறார்.

(என்றுமித்யாதி) என்று மொக்கமாறுதே விளங்காநிற்பதாய், செய்யசுடரையீனு நின்றுள்ளவெண்மின்னு. திருப்பவளத்தில் சிவப்பும் திருமுத்துநிரையில் வெளுப்புமாய்க்கலந்து தோற்றுகிறபோது, திருப்பவளத்தில் சிவப்பையதின்றுப்போலே யாயிற்றிருக்கிறது. இத்தை "ஸவிராம்ஸம்" (அபிராமம்) என்பர்களே. "பிறைநலிய" என்றவாறே பல்லிறுக்கிக்கொண்டு வருகிறதுகாணும். (அன்றி) அன்றிக்கே, என்ப்ராணனை முடிக்கிற திருமுத்துநிரைதானேயோ. (அணிமுத்தங்கொலோ) ஆனையணிசெய்துவந்து தோன்றிற்றுப்போலே யாயிற்றிருக்கிறது. (அணிமுத்தம்) அழகியமுத்தமென்னுதல். கீழே "வெண்மின்னுக்கொல்" என்கிறவிடத்தே-திருவதரத்தோடேகூடினஸம்ஸர்க்கத்தாலே நலிந்தபடிசொல்லிற்று; இங்கு - தனியேநலிகிறபடி சொல்லுகிறது.

(குன்றமெடுத்தவித்யாதி) மலையையெடுத்து மழையிலே நோவுபடாதபடி பெண்களைநோக்கின வுபகாரகனுடைய முறுவலானது, எனக்கொருத்திக்கும் பாதகமாகாநின்றது. பசுக்களையன்றோ தான்நோக்கிற்றென்னில்; "மொமொவீஜநவுஜமுஜ! ஸதீவாதஃ" (கோகோபீஜநஸங்குலம் । அதீவார்த்தம்) என்னக்கடவதிறே. மழையால் வந்தநிவை மலையையெடுத்துப்பரிஹரித்து, அவர்களார்த்தியெல்லாம் போம்படி ஸ்மிதம்பண்ணிக்கொண்டாயிற்று நின்றது. ஆனால், இதுவாராத விடந்தேடி யுஜ்ஜீவிக்கப் பார்த்தாலோவென்ன (ஒன்றுமித்யாதி) எனக்குப்போ யுஜ்ஜீவிக்கலாவதோ ரிடமுண்டோவென்று நானும் தேடாநின்றேன், இங்கொதுங்குகைக் கோரிடங்காண்கிறிலே னென்னுதல்; கீழ்ச்சொன்னவழகுகள் பாதகமாகிற வித்தனையலலது, ஒதுங்கநிழலா யிருப்பதோரிடங்காண்கிறிலேனென்னுதல்..............................

ஜீயர் அரும்பதம்.

அஞ்சாம்பாட்டு (என்றுநின்றேயித்யாதி) "முறுவலெனதாவியடும்" என்ற த்தைப்பற்ற வவதாரிகை (இம்முகத்துக்கித்யாதி) வாய்கரையிலே-உபக்ரமத்திலே யென்று ரஸோக்தி; அதரத்திலென்று வாஸ்தவமானவர்த்தம்.

சப்தார்த்தம் (என்றுமொக்கவித்யாதி) செய்யசுடரையீனுநின்றுள்ள வெண்மின்னென்று - அபூதோபமை. வெண்மின்செய்ய சுடரையீனக்கூடுமோவென்ன (திருப்பவளத்திலித்யாதி) அசிராம்சுவானதென்றும் நிற்கக்கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (இத்தையித்யாதிவாக்யத்வயத்தாலே) நலிகைக்காக நித்யத்வத்தையேறிட்டுக்கொண்டதென்றபடி. பல்லிறுகிக்கொண்டென்றது-சாடு. பல்லைக்கடித்துக்கொண்டென்று ரஸோக்தி; பல்லானது ஸ்த்திரத்வத்தை யேறிட்டுக்கொண்டென்று ஸ்வபாவார்த்தம்.

"அணி" என்று - பங்க்திபரமாகமுதலர்த்தம்; இந்தவர்த்தத்துக்குபாவம் (ஆனையித்யாதி) ஆனையென்றது-பாதகத்வத்தினுறைப்பாலே. அணிசெய்து - நிரைசெய்து. "செய்யவீன்சுடர்வெண்மின்" என்று த்ருஷ்டாந்தத்திலே சொன்னப்போலே, தார்ஷ்டாந்திகத்திலும் அதரகாந்தியுக்தமான முக்தமென்னவேண்டாவோவென்ன (கீழேவெண்மின்னித்யாதி)

"குன்றமெடுத்தபிரான் முறுவல்" என்றது - "அணிமுத்தங்கொலோ" என்று கீழ்ச்சொன்னவித்தை யநுவதிக்கிறது. அன்றிக்கே, "முத்தம்" என்றது-மௌக்திகமாதல்; இந்தபக்ஷத்திலும், அநுவாதமென்றதொக்கும். பெண்களைநோக்கி நகையுண்டோவென்று சங்கித்து பரிஹரிக்கிறார் (பசுக்களையித்யாதிவாக்யத்வயத்தாலே) "ததஸ்தத்கோகுலம் ஸர்வம் கோகோபீஜனஸங்குலம் । அதீவார்த்தம் ஹரிர்த்ருஷ்ட்வா மைத்ரேயாசிந்தயத்ததா" (ததஸ்தத்கோகுலம்ஸர்வம்கோ கோபீஜனஸங்குலம் । அதீவார்த்தம்ஹரிர்த்ருஷ்ட்வாமைத்ரேயாசிந்தயத்ததா) இதி பஞ்சமேம்சே. "குன்றமெடுத்தபிரான் முறுவல்" என்று விசேஷித்ததுக்குபாவம் (மழையாலித்யாதி)

"ஒன்றும்" என்றது - ஓரிடமுமென்னுதல், தாரகமான வழகொன்றுமில்லையென்னுதல். அழகுகளுக்குள்ளேயும் விடமான வோரழகு மறிகின்றிலேன் என்றிரண்டாம் யோஜனையில் சப்தார்த்தம்.

என்றுநின்றே யித்யாரப்ய, எனதாவியடும், அன்னைமீர் - எனக்குய்விடம் ஒன்று மறிகின்றிலே னித்யந்வயః ....

ஆறும்பாட்டு.

உய்விடமேழையர்க்குமசுரர்க்குமரக்கர்கட்கு
மெய்விடமென்றிலங்கிமகரந்தழைக்குந்தளிர்கொல்
பைவிடப்பாம்பணையான்றிருக்குண்டலக்காதுகளே
கைவிடலொன்றுமின்றியடுகின்றனகாண்மின்களே.

ஆறாயிரப்படி.

(உய்விடம்) அபலைகளுக்கு மசுரர்களுக்கும் ராக்ஷஸர்க்கு முய்வி ட்டெவ்விடமென்றிலங்கி திருமகரகுண்டலம் தளிருகிறதளிரோ; தன் னோட்டை ஸ்பர்ஶத்தாலே விகசிதமான பணங்களையும், ப்ரதிகூலருக்க ணுகவொண்ணுதபடி நஞ்சையுமுடையனாய், தன்னுடைய திருவழகுக் குத்தம்பகனான திருவனந்தாழ்வானை யணையாகவுடைய வெம்பெருமா னுடைய திருக்குண்டலக்காதுகளை நிரந்தரமாக நலியாநின்றன, பாரீ கோளென்கிறாள்...*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், இந்தவவதாரகந்தமான வநந்தசாயியினுடைய திருமகரக்குழை கள் நலிகிறபடியைச் சொல்லுகிறாள்.

ஏழையர்க்கும் - அநுகூலப்ரதிகூல விபாகமில்லாதபடி யாசைப்பட்டவப லைகளுக்கும். அசுரர்க்கு மரக்கர்கட்கும் - எதிரிடும் அசுரராக்ஷஸர்களுக்கும். உய்வி டம்-பிழைக்குமிடம். எவ்விடம்-எவ்விடம். என்று-என்று. இலங்கி - பெரியதேஜஸ் ஸையுடைத்தாய்க்கொண்டு. மகரம்-மகராகாரமாய். தழைக்கும் - தழைத்தனசில. தளிர்கொல்-தளிர்களோவென்னலாய். பை-திருமேனியோட்டை ஸ்பர்ஶத்தாலே விரிகிறபணங்களையுடைத்தாய். விடம்-விரோதிகளுக் கநபிபவநீயமான விஷத்தை யுடைத்தாயிருக்கிற. பாம்பணையான்-திருவரவணையையுடையனவான. திரு - தர்ஶநீ யமான. குண்டலம்-மகரகுண்டலங்களையுடைத்தான. காதுகளே - காதுகள்தாமே. ஒன்றும்-ஒருப்ரகாரத்தாலும். கைவிடலின்றி-கைவிடாதே. அடுகின்றன - நலியாநி ன்றன. காண்மின்கள்-காணுங்கோள்.

போக்யமான மகரகுண்டலம் விரோதிகளுக்கு பாதகமாவது அஸஹ்யதை யாலே. காண்மின்களென்று-தன்னோபாதியவர்களுக்குமதோற்றுமென்றிருக்கிறாள்.

ஈடு - ஆறும்பாட்டு.

"நாம்செவிப்பட்டிருக்க விவற்றைமுன்னேபோக விட்டிருந்தோ ம்" என்று திருக்காதிலழகுவந்து நலிகிறபடியைச் சொல்லுகிறது. கா தாட்டிக்கொண்டு சொல்லுவரோ.

(உய்விடமித்யாதி) அசுரராக்ஷஸர்களுக்கு மபலைகளுக்கும் தப்பி ப்போய்ப் பிழைக்குமிடமெவ்விடமென்று, உஜ்ஜ்வலமாய்க்கொண்டு மக ரம்தழைக்கின்றதளிரோ. அசுராதிகள், அழகுகண்டால் பொறுக்கமாட் டாதே முடிவர்கள்; அபலைகள் லபிக்கப்பெறாதே முடிவர்கள். "அபலை களை நலியுமாபோலே அசுரராக்ஷஸர்களுக்கும் ஸ்நேஹத்தை விளைத்து பாதகமாகாநின்றது" என்றொருதமிழனிட்டுவைத்தானென்றத்தை ஜீயர் கேட்டருளி, " இப்பொருளழகிது, ஆனாலும், அபக்ஷதர்மம் - அசுரரா க்ஷஸர்களுக்கும் பாதகமாகாநின்றதென் றிப்போதிதுசொல்லுகை, தேட் டமன்றிறே, ஆனபின்பு அதுவேண்டா " என்றருளிச்செய்தாராம்.

(பைவிடமித்யாதி) தன்னோட்டை ஸ்பர்ஶத்தாலேவிகசிதமாகா நின்றுள்ள பணங்களையும், உகவாதார் முடியும்படியான விஷத்தையுமு

டையனான திருவனந்தாழ்வானைப் படுக்கையாகவுடையவனுடைய திருக்குண்டலக்காதுகளே. திருக்காதிலழகுபாதகமாகிறப்போலே யாயிற்று, திருவனந்தாழ்வானோட்டை சேர்த்தியும் பாதகமாகிறபடி. பெறுகைக்கரிந்த புருஷகாரமுண்டாயிருக்கக்கிடீர்! நான்நோவுபடுகிறது. காதுகளேயென்று - கீழில் பாதகமானவை நன்றென்னும்படி யாயிற்றிது நலிகிறபடி. அவைதண்ணீர்ப்பந்தல வைத்ததென்னும்படியாகவாயிற்று; "மாலை-நல்கிற்றையெல்லாம்" என்னுமாபோலே. (கைவிடலொன்றுமின்றி) ஒருகாலும் கைவிடாதே. ஒருகால்விட்டுப்பற்றுமதன்றிக்கே. (அடுகின்றன)முடியாநின்றன. (காண்மின்களே) அவர்களுக்கும் எல்லா முருவுவெளிப்பாடாய்த்தோற்றுமென்றிருக்கிறாள்.*வாயுந்திரையுகளிலாழ்வாரிறே.

ஜீயர் அரும்பதம்.

ஆறாம்பாட்டு (உய்விடமித்யாதி) "காதுகள்" என்றத்தைப்பற்ற ரஸோக்தியாகவவதாரிகை (நாமித்யாதி) கேட்டிருக்கவென்று ரஸோக்தி; செவியாயிருக்கவென்று ஸ்வபாவார்த்தம். ரஸோக்த்யந்தரம் (காதாட்டியித்யாதி)

அழகிருவர்க்கும் பாதகமாம் ப்ரகாரமேதென்ன (அசுராதிகளித்யாதிவாக்யத்வயத்தாலே) மகரம்-மகரகுண்டலம். அழகிதென்று - அர்த்தாங்கீகாரம். அபக்ஷதர்மம் - ப்ரகரணவிருத்தம். ப்ரகரணத்துக்குச்சேராதென்றபடி. "அபக்ஷதர்மம்" என்றத்தைவிவரிக்கிறார் (அசுரராக்ஷஸர்களுக்குமித்யாதி) (தேட்டமன்றிறே) என்றவநந்தரம், ஆபலைகளுக்கு பாதகமென்று சொல்லிவருகிற ப்ரகரணமாகையாலே என்றுகூட்டி, அநந்தரம் (ஆனபின்பித்யாதி) அநுசந்திப்பது. அசுரராக்ஷசர்களுக்கு பாதகமாமாபோலே, ஏழையர்க்கும் பாதகமென்று சித்தாந்தார்த்தம்.

அழகுகள்சொல்லுகிற ப்ரகரணத்திலே, திருவனந்தாழ்வான் சேர்த்தியைச்சொல்லுவானென்னென்ன (திருக்காதித்யாதி) பரிஹாராந்தரம் (பெறுகைக்கித்யாதி) அவதாரணார்த்தம் (காதுகளேயென்றித்யாதி) விவரணம் (அவைதண்ணீரித்யாதி) இதுக்குப்ரமாணம் (மாலையித்யாதி)

தாய்மார்க்குத்தெரியுமோவென்ன (அவர்களுக்குமித்யாதி) அதெங்ஙனேயென்ன (வாயுமித்யாதி)

(மாலைநல்கிற்றையெல்லாமித்யாதி) திருவிருத்தம் முப்பத்தஞ்சாம்பாட்டு, "பால்வாய்ப்பிறைப்பிள்ளை" இத்யாதி. பால்வாயென்றுதொடங்கி, மாலையானது உலகளந்தவென்றுதொடங்கி, மனமுடையார்க்கு நல்கிற்றையெல்லாம் சொல்வான் புகுந்திதுவோர் பனிவாடைதுழாகின்றதே யித்யந்வயः. இதுக்கர்த்தம் - சந்த்யையானது அவன்திருவடிகளில் திருத்துழாயை யாசைப்பட்ட நெஞ்சுடையார்க்குபகரித்த சத்தாமாத்ரத்தையொன்றும் சேஷியாதபடி யபஹரித்துக்கொள்வதாக ப்ரவேசித்து, பனிவாடையானது சத்தைகிடந்தவிடந்தேடித் தடவாநின்றதென்றுபடி. மாலைநல்கிற்றையெல்லாமென்றது - அந்வயித்துச்சொன்னபடி. இத்தால்-கீழ் பாதகமானமாலை நன்றென்னும்படியாயிற்று வாடை பாதகமானபடியென்றுகருத்து. அசுரர்க்கு மரக்கர்கட்கும்-ஏழையர்க்கும்-உய்விடம்-எவ்விடமென்றிலங்கிமென்றுதொடங்கி, காதுகளே-ஒன்றும்-கைவிடல்-இன்றியடுகின்றன, காண்மின்களே யித்யந்வயः....*..

ஏழாம்பாட்டு.

காண்மின்களன்னையர்காளென்றுகாட்டும்வகையறியே
னுண்மன்னுவெண்டிங்கள்கொலோநயந்தார்கட்குநச்சிலைகொல்
சேண்மன்னுநாற்றடந்தோட்பெருமான்றன்றிருநுதலே
கோண்மன்னியாவியடுங்கொடியேனுயிர்கோளிழைத்தே.

ஆறாயிரப்படி.

(காண்மின்கள்) (நாள்மன்னு) பூர்வபக்ஷத்தி லஷ்டமீசந்த்ரனோ. அன்றிக்கே, ஆசைப்பட்டார்க்கு நச்சவேண்டா திருக்கிறதோ; கொழுந்துவிட்டுச் சுற்றுடைத்தான நாலுதிருத்தோளையுடைய சர்வேச்வரனுடைய திருநெற்றியே, இப்படி நோவுபடுகைக்குப்பாபத்தைப் பண்ணின வென் ப்ராணனைமுடிக்கையிலே துணிந்தபிநிவேசித்து நலியாநின்றது; இத்தைக்காண்மின்களன்னையர்காளென்று காட்டும்வகை யறிகிறிலே னென்கிறாள்...... ....*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், மஹாபுஜனான க்ருஷ்ணனுடைய திருநெற்றியழகு தன்னை நலியாநின்றதென்கிறாள்.

என்னை நலிகிறப்ரகாரத்தை, அன்னையர்காள் - அன்னையர்காள். காண்மின்கள் - நீங்கள்காணுங்கோள். என்று - என்று. காட்டும் - காட்டும். வகை - ப்ரகாரம். அறியேன் - அறிகிறிலேன். நாள் - அஷ்டமீபர்யந்தமானநாளோடே. மன்னு- மன்னி. வெண் - அர்த்தாகாரனாகையாலே களங்கமற்று வெளுத்த. திங்கள்கொல்- சந்த்ரனோ. நயந்தார்கட்கு - ஆசைப்பட்டவர்களுக்கு. நச்சு - நச்சுவடிவா யிருப்பதொரு. இலைகொல் - இலையோ. சேண் - ஓங்குதலை. மன்னு - உடைத்தாய். நால் - நாலுவகைப்பட்டு. தடம் - பணைத்த. தோள் - தோள்களால். பெருமான்றன் - பெரியனான க்ருஷ்ணனுடைய. திரு-தர்சநீயமான. நுதலே-திருநெற்றிதானே. கோள் - மிடுக்கை. மன்னி-அவலம்பித்துக்கொண்டு. கொடியேன் - அழகேபாதகமாம்படியான கொடுமையை யுடையவென். உயிர் - ப்ராணனை. கோள் - கொள்ளுகையை. இழைத்து - நிரூபித்து. ஆவி - என்னாத்மாவை. அடும் - நலியாநின்றது.

கோள் - மிடுக்கு. ஒளியாகவுமாம்.. ....*

ஈடு - ஏழாம்பாட்டு.

" இவையவள்முன்னே நிற்கவற்றோ, இவற்றுக்கெல்லாம் நாம் நெற்றிக்கையன்றோ '' என்று திருநுதலிலழகுவந்து நலிகிறபடியை யருளிச்செய்கிறார்.

(காண்மின்களித்யாதி) இது நலியாநின்றதாகச் சொல்லாநின்றாய், எங்களுக்கிது தெரிந்திருக்கிறதில்லை, எங்களுக்கும் தெரியும்படி சொல்லிக்காணாயென்ன (காண்மின்களித்யாதி) நீங்களுமித்தைக் காணுங்கோளென்று, உங்களுக்குக்காட்டும் ப்ரகாரமறிகிறிலேன். என்கைக்குப்பிடி தருதல், 'உங்களுக்குருவுவெளிப்பாடுண்டாதல் செய்யிலிறே யென்னால்

காட்டலாவது. (அன்னையர்காள்) ஆண்களுக்குக்காட்டிவிறே பருவம்நிர ம்பின வுங்களுக்குக்காட்டலாவது. (நாண்மன்னுவெண்டிங்கள்கொல்) பூர்வாஷ்டமீசந்த்ரனோ. இளகிப் பதித்திருக்கைக்கும், "காட்டு, காட்டு" என்றுவளருகைக்கும். (நயந்தார்கட்குநச்சிலைகொல்) ஆசைப்பட்டார்க்கு நச்சுப்பூண்டோவென்னுதல், தன்னையாசைப் பட்டார்க்காசைப் படவேண்டாதிருக்கிறதோ வென்னுதல். "நச்சுமாமருந்தம்" என்னும வரிறே இப்போதுகண்ணுஞ்சுழலை யிட்டிவ்வார்த்தைசொல்லுகிறார். "இன்னமலையிலே யுண்டு" என்று அங்கேபோய்த்தேடி வருந்தவேண்டாதே, ஆசைப்படுவதுமாய் மேல்காற்றிலேகாட்டப் பரிஹாரமுமாம் மருந்தாயிற்றிது. மாமருந்தம் - அபத்யஸஹமான ஔஷதம். இவன்றலையிலே பழியிட்டுக்கைவிடு மௌஷதமன்று, வானமாமலையில் தலையான ஔஷதமிறே இப்போதிவளுக்கு நச்சுப்பூண்டாகிறது.

(சேணித்யாதி) ஓக்கத்தையுடைத்தாய், கல்பகதருப்பணைத்தாப் போலேயாய்ச் சுற்றுடைத்தா யிருக்கிற திருத்தோளிலழகாலே யென்னை யகப்படுத்துமவரா யிருக்கிற திருநெற்றியே "ஆயதாம்ஸச ஸுவ்ருத்தாம்ஸ" (ஆயதாம்ஸசஸுவ்ருத்தாம்ஸ) என்னும்படியே திருவடியகப்பட்ட துறையிலே காணுமிவளுமகப்பட்டது. (கொடியேனுயிர்கோளிழைத்து-கோள்மன்னியாவியடும்) என்னுயிரினுடைய வழகை யழித்துக்கொள் கையிலே விருப்பத்தைப்பண்ணி முடியாநின்றது. (அழகுபாதகமாம்படிபாபத்தைப்பண்ணின வென்ப்ராணனைமுடிக்கையிலே துணிந்து, அதிலே யபிநிவேசித்து, ப்ராணனைமுடியாநின்றதென்றுமாம்....... ....*

ஜீயர் அரும்பதம்.

ஏழாம்பாட்டு. (காண்மின்களித்யாதி) "திருநுதலே" என்றதைப்பற்ற ரஸோக்தியாக வவதாரிகை (இவையவளித்யாதி) நெற்றிக்கை - முந்தினவ்யூஹம்; ப்ரதானமென்று ரஸோக்தி. எதிர்சேனையென்றுமாம்.

கீழே "காண்மின்களே" என்றுவைத்து, இப்போது தெரியாதென்பானென்னென்கிற சங்கையிலே யருளிச்செய்கிறார் (இதுநலியாநின்றதாகவித்யாதி) வகை - ப்ரகாரம். அறியாமைக்கு ஹேதுவேதென்ன (என்கைக்கித்யாதி) பிடிதருதல் - பிடிக்கலாம்படி யகப்படுதல். "அன்னையர்காள்" என்கிற சம்போதநத்துக்குபாவம் (ஆண்களுக்கித்யாதி)

பூர்வாஷ்டமீ - பூர்வபக்ஷாஷ்டமீ. அஷ்டமீபர்யந்தமான நாளால் மன்னியிருக்கிற நிஷ்களங்க சந்த்ரனோவென்று சப்தார்த்தம். "பூர்வாஷ்டமீசந்த்ரன்" என்றுசொல்லுகைக்கு ஹேதுவருளிச்செய்கிறார் (இளகிப்பதித்தித்யாதி) காட்டுக்காட்டென்று வளருகை - மேன்மேலென வளருகையென்றபடி.

நச்சிலையாவது - (நச்சுப்பூண்டு) விஷபத்ரமென்றபடி. த்விதீயார்த்தத்துக்கு, நச்சுதலில்லையோ - ஆசையில்லையோவென்றபடி. வ்யாக்யாதாவினீபொடு (நச்சுமாமருந்தமித்யாதி) இதுக்கர்த்தம் (இன்னமலையித்யாதி) "நச்சுமாமருந்தம் என்றதுக்கு - கீழருளிச்செய்தவர்த்தமொழிய, இங்கேதானே யிவளை நச்சுமதாமருந்தென்று அர்த்தாந்தரம். "மாமருந்தம்" என்றதுக்கர்த்தாந்தரம் (அபத்யே

யாதி) விவரணம் (இவன்றலையிலே யித்யாதி) பரமபதநாதனுடைய செற்றி யிவ ளுக்கு விஷப்பூண்டாகிறது விஸ்லேஷத்தின் முறுகுதலாலே யென்கிறார் (வான மாமலையிலித்யாதி)

தோளழகுக்குத் தோற்றதுக்கு ப்ரமாணம் (ஆயதாஸ்சேத்யாதி) அர்த்தா நுகுணமாக வந்வயம் (கொடியேனித்யாதி) சப்தார்த்தம் (என்னுயிரித்யாதி) கொடியேனுயிரினுடைய, கோளுண்டு-அழகு, அத்தை, இழைத்துக்கொள்கையிலே-அழித்துக்கொள்கையிலே, மன்னி - விருப்பத்தைப்பண்ணி, ஆவியடும் - ப்ராணனை முடியாநின்றதென்றபடி. உயிர் - ப்ராணன்.

காண்மின்களென்றுதொடங்கி, கொடியேனுயிர்கோளிழைத்து - கோள்மன் னியாவியடுமித்யந்வய:.... . ...*

எட்டாம்பாட்டு.

கோளிழைத்தாமரையுங்கொடியும்பவளமும்வில்லுங்
கோளிழைத்தண்முத்தமுந்தளிருங்குளிர்வான்பிறையுங்
கோளிழையாவுடையகொழுஞ்சோதிவட்டங்கொல்கண்ணன்
கோளிழைவாண்முகமாய்க்கொடியேனுயிர்கொள்கின்றதே.

ஆறாயிரப்படி.

(கோளிழைத்தாமரையும்) தன்னொளியைத் தனக்காபரணமாக வுடைய தாமரையும், கொடியும், பவளமும், வில்லும், அழகை யாபர ணமாகவுடைய குளிர்ந்தமுத்தும், தளிரும், குளிர்ந்து பெருத்தபிறையு மாய், தன்னழகே தனக்காபரணமா யிருக்கின்றஜ்யோதிர்மண்டலமோ; த ன்னொளியே தனக்காபரணமாகவுடைய க்ருஷ்ணனுடைய வழகிய திரு முகமென்றொரு பேரையிட்டுக்கொண்டு இப்படி துஃகப்படுகைக்கீடான ஸ்வபத்தையுடைய வென்னுடையப்ராணனை நலிகிறதென்கிறாள் ....*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், உத்தமமான வவயவ ஸௌந்தர்யத்தையுடைய க்ருஷ்ணனுடைய முகசோபையானது தன்னை நலிகிறபடியைச் சொல்லுகிறாள்.

கோள் - தன்னுடைய வொளியே. இழை - தனக்காபரணமான. தாமரை ம் - தாமரைகளும். கொடியும் - கொடியும். பவளமும் - பவளமும். வில்லும்-வி லும். கோள் - தன்னுடைய வொளியை. இழை-தனக்கிழையாகவுடைத்தாய். த ர - குளிர்ந்த. முத்தமும் - முத்தும். தளிரும் - தளிர்களும். குளிர் - சீதளமாய். ான் - அழகியதான. பிறையும் - பிறையுமானவிவற்றை. கோள் - கொள்கையை. ழையா - தனக்காபரணமாக. உடைய - உடைத்தாய். கொழும் - பூர்ணமான. சோதிவட்டங்கொல் - ஜ்யோதிர்மண்டலமோ. கண்ணன் - க்ருஷ்ணனுடைய. உத் மான வுபமாநங்களுக் குபமேயபூதமான திருக்கண்கள், நாஸாதண்டம், திருப்ப

வளம், திருப்புருவம், திருமுறுவல், கர்ணபாசம், திருநெற்றி யாகிற வவயவங்களை யுடைத்தாயிருப்பதாய், கோள் - தன்னொளிதானே. இழை - ஆபரணமாம்படி. வாள் - உஜ்ஜ்வலமான. முகமாய் - திருமுகமாய்க்கொண்டு. கொடியேன் - அழகாலே நலிவுபடும் பாபத்தின்கொடுமையையுடைய வென். உயிர் - ப்ராணனை. கொள்கின்றது - அபஹரியாநின்றது.

கோள் - ஒளி. ....*

ஈடு - எட்டாம்பாட்டு.

"தலையானபேரை நெற்றிக்கையிலேவிட்டுக் காட்டிக்கொடுக்கவொண்ணாது" என்று, கீழ்நலிந்தவை யெல்லாம் சேரவொருமுகமாய் வந்து நலிகிறபடி சொல்லுகிறது. அங்குமிங்கும் சிதறிக்கிடந்தபடையை, சத்ருக்கள்வந்து முடுகினவாறே யொன்றாகத்திரட்டி யொருகாலே தள்ளுவாரைப்போலே, தனித்தனியே நலிந்தவழகுகளெல்லாம் திரளவந்து நலிகிறபடியைச்சொல்லுகிறார்.

(கோளிழைத்தாமரையும்) ஜாதியொன்றா யிருக்கச்செய்தேயும், "பொற்கால்தாமரை, நூற்கால்தாமரை" என்றுதாமரையிலே சிலபேதமுண்டிறே; அதில், நூற்கால் தாமரையென்னுதல்; அன்றியிலே, கொள்கையிலே துணிந்திருக்கிற தாமரையென்னுதல்; தன்னழகேதனக்காபரணமாகவுடைய தாமரையென்னுதல்; தேஜஸ்ஸேயாபரணமான தாமரையென்னுதல். திருக்கண்ணும். (கொடியும்) திருமூக்கும். (பவளமும்) திருவதரமும். (வில்லும்) திருப்புருவமும். (கோளிழைத்தண் முத்தமும்) தன் தேஜஸ்ஸேயாபரணமாகவுடைய குளிர்ந்த திருமுத்துநிரையும். அன்றியே, இழையிலே கோப்புண்ட முத்துப்போலே யிருக்கிற குளிர்ந்த திருமுத்தென்னுதல். (தளிரும்) திருக்காதும். (குளிர்வான்பிறையும்) திருநெற்றியும் நேத்ரபூதரானவரும், "மூக்குவலியோம்" என்றவரும், வாய்சொல்லிப்போனவரும், "அதரோத்தரமாயிற்றே" என்றுவளைத்துக்கொடுபோனவரும், வாய்க்கரையிலே யிருந்தவரும், தாம்செவிப்பட்டவாறேபோனவரும், "இவற்றுக்குநெற்றிநாம்" என்று போனவருமெல்லாமொருமுகமாய். (கோளிழையாவித்யாதி) கொள்ளப்பட்டவாபரணத்தையுடைத்தான ஜ்யோதிர்மண்டலமோ. ரூபகமிருக்கிறபடி. (தன்னழகே தனக்காபரணமாயிருப்பதொரு ஜ்யோதிர்மண்டலமோ வென்னுதல்.)

(கண்ணன்கோளிழையித்யாதி) கண்ணனுடைய, தன்னழகேதன க்காபரணமாய் ஒளியையுடைத்தான முகமென்றொருவ்யாஜத்தையிட் (கொடியேனுயிர்கொள்கின்றதே) கொடியேன்-உயிர்பெறுங்காலத்திலே யுயிரிழக்கும்படியான பாபத்தைப்பண்ணினேன். வாழுங்காலத்திலே சே டும்படியான பாபத்தைப்பண்ணின வென்னுடைய வுயிரைக்கொள்கிறது - கோளிழையாவுடைய கொழுஞ்சோதி வட்டங்கொல்..........

ஜீயர் அரும்பதம்.

எட்டாம்பாட்டு. (கோளிழையித்யாதி) கீழ்ச்சொன்னவழகுக ளெல்லாவற்றினுடைய வபிசந்தியையும் ரசோக்தியாலே யருளிச்செய்கிறார். (தலையானவித்யாதி) தலையானபேரை - நெற்றியையென்று ஸ்வபாவார்த்தம்; ப்ரதாநரையென்று ரஸோக்தி. நெற்றிக்கை - முன்றூசி. உக்தத்தை ஸத்ருஷ்டாந்தமாக விவரிக்கிறார் அங்குமிங்குமித்யாதி)

சப்தார்த்தம் (ஜாதியித்யாதி) முந்தினவர்த்தத்துக்கு, இழை - நூல், கொள்கை - உடைத்தாகை; த்விதீயார்த்தத்துக்கு, கோளென்று - நெஞ்சை யபஹரிக்கை, இழையென்று-அணிகை; த்ருதீயார்த்தத்துக்கு, கோளென்று - அழகு, இழையென்று - ஆபரணம்; நாலாமர்த்தத்துக்கு, கோளென்று - தேஜஸ்ஸு, இழையென்று - ஆபரணம். பலிதம் (திருக்கண்ணுமென்று)

இரண்டாமர்த்தத்துக்கு, "இழை-கோள்-தண்முத்தம்" என்றந்வயம். இழை-நூல். கொள்கை-கோப்புண்கை.

"குளிர்வான்பிறை" குளிர்ந்த பெரியசந்த்ரனென்றபடி.

"கோளிழையாவுடைய" க்ரசிக்கப்பட்ட வாபரணதேஜஸ்ஸையுடைத்தான "கொழுஞ்சோதிவட்டங்கொல்" பூர்ணமான ஜ்யோதிர்மண்டலமோவென்றபடி.

"ஆய் (வ்யாஜத்தையிட்டு) "கொள்கின்றது" க்ரஸியாநின்றது. உயிர்பெறுங்காலத்திலே யென்றது - எல்லாரு மிவ்வழகை யநுபவித்து சத்தைபெறுங்காலத்திலேயென்றபடி.

கோளிழைத்தாமரையென்றுதொடங்கி, குளிர்வான்பிறையுமான - கண்ணன் கோளிழைவான்முகமாய்க் கொடியேனுயிர்கொள்கின்றது - கோளிழையாவுடையகொழுஞ்சோதிவட்டங்கொலித்யந்வயः ....*

ஒன்பதாம்பாட்டு.

கொள்கின்றகோளிருளைச்சுகிர்ந்திட்டகொழுஞ்சுருளி
னுள்கொண்டநீலநன்னூற்றழைகொலன்றுமாயன்குழல்
விள்கின்றபூந்தண்டுழாய்விரைநாறவந்தென்னுயிரைக்
கள்கின்றவாறறியீரன்னைமீர்கழறாநிற்றிரோ.

அருமயிரப்படி.

(கொள்கின்ற) ப்ரளயகாலத்தில் திவாராத்ரவிபாகமின்றிக்கே ஜகத்தையடைய வ்யாபியாநின்ற மிக்கதமஸ்ஸைப் புறவாயிலே வெளிறானவம்சத்தைக்கழித்து அதினுள்ளே யுண்டான கொழுவிய விருண்ட சுருளினுடைய சாரமான கறுத்தநூற்றிரளோ, அங்ஙனமன்று; ஆச்சர்யமான வழகையுடைய க்ருஷ்ணனுடையதிருக்குழல், அலராநின்றுள்ள வழகிய திருத்துழாயினுடைய பரிமளம் நாறவந்து என்னுடைய ப்ராணனையபஹரிக்கிறபடி யறிகிறிலிகோள், ஏதேனுமொன்றைச் சொல்லிப்பொடியாநின்றிகோ ளென்கிறாள்..............................*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், ஆஶ்சர்யரூபனான க்ருஷ்ணனுடைய வுபமாதீதமான திருக்குழல்களிலிற ப்ரகாரத்தைச் சொல்லுகிருள்.

கொள்கின்ற - லோகத்தை யடங்கக் கொள்ளக்கடவதான. கோள் - மிடுக்கையுடைய. இருளை - இருளை. சுகிர்ந்திட்ட - கந்தல்கழியும்படி யெஃகிப்படப்பட்டதாய். கொழும் - செறிந்த. சுருளின் - சுருட்டினுடைய. கையழுக்குப்படாமல், உள் - உள்ளே. கொண்ட - நூற்றுக்கொள்ளப்பட்ட. நீலம் - நீலநிறத்தை யுடைத்தான. நல் - அழகிய. நூல்தனைகொல் - நூல்திரளோ. அன்று - அக்ருத்ரிமமான விது அப்படியல்லவிறே. மாயன் - ஆஶ்சர்யரூபனான க்ருஷ்ணனுடைய. குழல்- உபமாதீதமான திருக்குழலானது. விள்கின்ற - விகஸிதமான. பூ - புஷ்பத்தையுடைத்தாய். தண் - செவ்வியையுடைத்தான. துழாய் - திருத்துழாயின். விரை-பரிமளமானது. நாற - பரம்பும்படி. வந்து - வந்து. என் - என். உயிரை-ஆத்மாவை. கள்கின்ற - சௌர்யம்பண்ணுகிற. ஆறு - ப்ரகாரம். அறியீர் - அறிகிறிலிகோள். அன்னைமீர் - தாய்மாராயிருந்துவைத்து. கழறுகிற்றிர் - அவஸ்த்தையறியாதே நியமியாநின்றிகோள்.

கள்கை - களவிலே கொள்கை..*

ஈடு - ஒன்பதாம்பாட்டு.

"இவ்வவஸ்த்தைக்கன்றோ நமக்குப்பூவும் புழுகுமிட்டு சிரசாவஹித்துக்கொடுபோந்தது" என்று திருக்குழற் கற்றையிலழகுவந்து நலியாநின்றதென்கிருள்.

(கொள்கின்றவித்யாதி) திருக்குழலிலழகுக் கோருபமானஞ்சொல்லப்புக்கு, அழகுக்கநுதான் நேர்கொடு நேருபமானமாகப் போராமையாலே அதுதன்னைக்கிடந்து சிக்ஷிக்கிறது. ப்ரளயகாலத்தில்திவாராத்ரவ்பாகமற வெங்கு மொக்கத்தானேயாம்படி, கொள்ளாநின்றுள்ள - வ்யாப்யாநின்றுள்ள, கோட்பாட்டையுடையவிருளென்னுதல்; கோளென்று மிடுக்காய், மிடுக்கையுடைய விருளென்னுதல். அதுதன்னை, சுகிருவது எஃகுவது, இப்படி யெஃகுகிறதுதன்னில் கொழுவிதானவம்சத்தைத் ரட்டுவது, அதுதன்னிலுமுண்டான புறவிதழைக்கழித்து அகவாயில் யிரமாய் நீலமானநிறத்தை யுடைத்தாய் நன்றாயிருந்துள்ள நூற்றிரளே (அன்றுமாயன்குழல்) இவள்நெஞ்சிலே யழகிதாகமயிர் பட்டதுகாணு இத்தனைசிக்ஷித்தாலாயிற்று உபமாநமாகப் போராதென்னலாவது. பினையும், ஆஶ்சர்யபூதனானவனுடைய திருக்குழலென்னுமித்தனை. இனையிடுசிவப்பான தவனுடையஸ்வாபாவிகமான திருக்குழலுக்கு சத்ருமோ. (விள்கின்றவித்யாதி) அலராநிற்பதாய் அழகிதாய்க்குளிர்ந்திருக்குள்ள திருத்துழாயில் பரிமளமானது முகத்திலே யலையெறியவாயிற்றுந்துதோற்றுகிறது. திருக்குழலிலழகுக்கு, திருத்துழாயில் பரிமள்மது தூசியேறிநடக்கவாயிற்று வந்துபாதகமாகிறது. (என்னுயிரைக்க ...ாறறியீர்) கள்கின்ற - களவுகாண்கிற. நீங்களெல்லாரும் சுக

யிருக்கச்செய்தே, என்னொருத்தியுடைய வாத்மவஸ்துவை வந்துகளவு காண்கிற ப்ரகாரமறிகிறிலிகோள். களவுகாண்கையாவதென்னென்னில்; இத்தலையிலிசைவின்றிக்கே யிருக்கக்கைக்கொள்ளுகை. அவனிறே களவு காண்கிறான். இத்தலையத்தலையானபடி. அப்ராப்தனபஹரித்தால் பரிஹ ரிக்கலாம், ப்ராப்தனானவனபஹரித்தால் பரிஹாரமில்லையிறே. இதுகை ப்பட்டவாறே ஒருப்ரமாணங்கொடு நின்று வழக்குபேசத்தொடங்குமி றேயவன். (அன்னைமீர்கழறுகிற்றிரோ) நீங்களபிபவித்து. இக்களவுக்குநா ளும் பெருநிலைநின்று கூட்டுப்பட்டேனைப்பொடியா நின்றிகோள். இந் தவுருவுவெளிப்பாட்டைப் பரிஹரிக்கலாகவும் வேண்டாவோ. ஒரு நிய ந்த்ரு நியாம்யபாவமேயோ வேண்டுவதுபொடிகைக்கு. (கழறுகை-அபிப வித்துவார்த்தைசொல்லுகை. கழறல் - நோவச்சொல்லுதல்.) ....*

ஜீயர் அரும்பதம்.

ஒன்பதாம்பாட்டு. (கொள்கின்றவித்யாதி) “மாயன்குழல்” என்றத்தைப்ப ற்ற ரஸோக்தியாக வவதாரிகை (இவ்வவஸ்தையிலுக்கன்றோவித்யாதி) இஸ்ஸமயத் துக்கன்றோவென்றபடி.

திருக்குழலிலழகுக் குபமாநமான விருளை வர்ணிக்கிறதுக்குபாவம் (திருக்கு ழலிலித்யாதி) கோட்பாடாவது-அழகு. அன்றிக்கே, கோட்பாட்டையுடையவென் றது-வ்யாப்தியை ஸ்வபாவமாக வுடையவென்றுதல். எய்துவது - பண்ணுவதென் றபடி. கொழுவிதான - அழகியதான. ஸாரம்ஸமானவென்றபடி.

இப்படி வர்ணிக்கிறதுக்கு பாவம் (இவனித்யாதி) “அன்று” என்றதுக்கு பாவம் (இத்தனையித்யாதி)

இடுசிவப்பானது - ஆரோபிதமான சிவப்பையுடைத்தானது. ஸ்வதஃ இன்றி க்கே, ஆரோபிதாகாரத்தை யுடையதென்றபடி.

முகத்திலே - நாயகிமுகத்திலே. “விள்கின்ற” இத்யாதியால் பலிதம் (திரு க்குழலித்யாதி) தூசி - சேநாமுகம். “எனவியலாககள்கின்றவாறு” என்று வி சேஷிக்கிறவனுடைய பாவம் (நீங்களெல்லாருமித்யாதி) ஸ்வாபதேசத்திலே சங் கித்து பரிஹரிக்கிறார் (களவுகாண்கையித்யாதி) “சோரேணாத்மாபஹாரிணா” (சோரேணாத்மாபஹாரிணா) என்று இவன் கள்ளனாயிருக்க, ப்ராப்தனான வன் ஸ்வீகரித்தத்தைக் களவெனகிறதெனனென்ன (அவனிறேயித்யாதி) அதாவ து - சேதநனுடைய வாத்மாபஹாரப்ராபல்யம், ஈச்வரன் ஸ்வசேஷ வஸ்துவையு மிவனறியாதபடி யபஹரிக்கும்படியாயிற்றென்றபடி. பலிதம (இத்தலையித்யாதி) ஆனாலவன் ஸ்வீகரியாதபடி விலங்கினாலோவென்ன (அப்ராப்தனித்யாதி) பரிஹார மில்லாமைக்கு ஹேதுவேதென்ன (இதுகைப்பட்டவித்யாதி) இங்கே - “த்வம் மே ஹம் மே” (த்வம்மேஹம்மே) இத்யாத்யநுசந்தேயம்.

பெருநிலை - ஸஹாயம். “அன்னைமீர்” என்றதுக்கு பாவம் (இந்தவுருவித் யாதி)

கொள்கின்றவித்யாரப்ய, அன்று, மாயன்குழல் - அன்னைமீர் - விள்கின்ற வென்றுதொடங்கி, கள்கின்றவாறறியீர் - கழறுகிற்றிரோ யித்யந்வயஃ. ....*

பத்தாம்பாட்டு.

நிற்றிமுற்றத்துளென்றுநெரித்தகையராயென்னைநீர்
சுற்றியுஞ்சூழ்ந்தும்வைதிர்சுடர்ச்சோதிமணிநிறமாய்
முற்றவிம்மூவுலகும்விரிகின்றசுடர்முடிக்கே
யொற்றுமைக்கொண்டதுள்ளமன்னைமீர்நசையென்னுங்கட்கே.

ஆறாயிரப்படி.

(நிற்றிமுற்றத்துள்) தன்னகத்துமுற்றத்தே நின்றுயென்று அயுக்தஞ்செய்தேனுகக்கொண்டு, என்னுடைய தசையை யறிந்தநீங்கள், விடாதே சுற்றியும் சூழ்ந்தும் வையாநின்றீகோள்; நிரவதிக தேஜஸ்ஸான ரத்நங்களுடைய வொளியையுடைத்தாய்க்கொண்டு, சமஸ்தலோகங்களையு மோரிடமொழியாமே வ்யாபிக்கிற தேஜஸ்ஸையுடைய திருவபிஷேகத்திலென்னுடைய ஹ்ருதயமகப்பட்டது; இனி யென்னைப்பொடிந் தன்னைமீருங்களுக்கொரு ப்ரயோஜநமில்லை யென்கிறாள்.....................*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், சர்வாதிகத்வ ஸூசகமான திருவபிஷேகத்திலே தன்னெஞ்சு ஒன்றுபட்டபடியைச்சொல்லுகிறாள்.

உள்ளில்நின்றும், முற்றத்துள் - முற்றத்திலே. நிற்றி - நீற்றி. என்று - என்று. நெரித்த - நெரிதத. கையராய் - கையையுடையீராய்க்கொண்டு. என்னை - என்னை. நீர் - நீங்கள். சுற்றியும் - சுற்றிக்கொண்டுநின்று. சூழ்ந்தும்-பழியாலே சூழ்ச்சிசெய்தும். வைதிர் - வையாநின்றீகோள். சுடர் - சுடராய்ப்பரம்பின. சோதி - ஒளியையுடைத்தான. மணி - ரத்நங்களினுடைய. நிறமாய் - நிறத்தை யுடைத்தாய்க்கொண்டு. இம்மூவுலகு - த்ரிவிதசேதநாசேதநாத்மகமானலோகத்தை. முற்றவும் - அடங்கலும். விரிகின்ற - வ்யாபிக்கிற. சுடர் - தேஜஸ்ஸையுடைத்தான. முடிக்கே - திருவபிஷேகத்திலே. உள்ளம் - நெஞ்சானது. ஒற்றுமைக்கொண்டது - ஒருமைபட்டது. அன்னைமீர் - அன்னைமீர். நுங்கட்கு - வைகிறவுங்களுக்கு. நசை - என்டக்கல்நசைபண்ணி. ஏன் - என்னப்ரயோஜநமுண்டு...... ....,..........

ஈடு - பத்தாம்பாட்டு.

“ ஸ்ரீயஃபதியுங்கூட நம்மைசிரசாவஹித்துப்போருகிறதிவ்வவஸ்தைக்கன்றோ ” என்றுதிருவபிஷேகத்தி லழகுவந்துநலிகிறபடியைச்சொல்லுகிறாள்.

(நிற்றியித்யாதி) இத்தனையும் நசையறச்சொல்லாவிடி லவர்கவிடார்கள்போலே. (நிற்றிமுற்றத்துளென்று) முற்றத்துள்நிற்றியென்ர்கள். படுக்கையினின்று மெழுந்திருந்தெல்லாரும் காணும்படிமுற்றத்லே நிற்கைக்கு மேற்படப்பழியில்லையாக நினைத்திராநின்றார்கள். “யா ஸக்ரா” (யாஸக்யா) இத்யாதி. “ ராஜமக்கதாஜநா: ” (ராஜமக்கதாஜநா:) என்றவோபாதியாக நினைத்திராநின்றார்க ளாயிற்றித்ல

முற்றத்திலே புறப்பட்டுநிற்கும்படிபிறந்தஸாஹஸத்துக்கு நெரித்தகைய ராய். (என்னைநீர்) உருவு வெளிப்பாடுபுறப்பட விடுவித்து நிறுத்த நிற் கிறவென்னை, இத்தால் நலிவுவாராதபடி பாக்யம்பண்ணின நீங்கள். அ வன்புறப்பட விடுவித்துநிறுத்த நிற்கிறவென்னை, இதுகொண்டுகாரியமி ல்லாதநீங்கள். (சுற்றியும் சூழ்ந்தும்வைதிர்) " இவளைத்தப்புவித்தோ மாம்விரகென் " என்றுநெருசிலே விசாரிக்கையும், கால்வாங்கிப்போரநி ற்கவு மொண்ணாதபடி சூழநிற்கையுமென்னுதல். அன்றிக்கே, போயும்வ ந்தும் பொடியாநின்றிகோ ளென்னுதல்.

(சுடர்ச்சோதியித்யாதி) தப்புவிக்கைக்கு வார்த்தைசொல்லுகிற விவர்களைப்போலே யொருப்ரதேசத்தி லல்லவிறே அகப்படுத்தி நலியக் கோலுகிற வதுநிற்கும்படி. மிக்கபுகழையுடைத்தான ரத்நத்தினுடைய தேஜஸ்ஸையுடைத்தாய்க்கொண்டு கண்டவிடமெங்கும் பரம்பாநின்றுள் ள தேஜஸ்ஸையுடைய திருவபிஷேகத்திலே யொருமைப்பட்ட தென் னுடைய ஹ்ருதயமென்னுதல், அநேக விலைசெய்து கொடுத்ததென்னு தல்.

(அன்னைமீர்நசையென்னுங்கட்கே) தாயமாரான நீங்களென்பக் கல் நசையறவமையும். தாய்மாராவார், பெற்றுவளர்த்து போகயோக்ய தை பிறந்தால் பின்புகைப்பிடித்தவன்கையிலே காட்டிக்கொடுத்துக் கட க்க நிற்குமத்தனைபோக்கி, பொடியக்கடவர்களோ. ப்ராப்தயௌவனைக ளானாலும், பெற்றப்ராப்திகொண்டு ஹிதஞ்சொல்லி மீட்கப்பார்க்கக்கட வதோ...*

ஜீயர் அரும்பதம்.

பத்தாம்பாட்டு (நிற்றியித்யாதி) " சுடர்முடிக்கே " என்றத்தைக் கடாக்ஷித் து ரசோக்தியாக வவதாரிகை (ஸ்ரீயஃபதியுங்கூடவித்யாதி)

" நசையென்றுங்கட்கே " என்று ஆசைபறச்சொல்லுவா னென்னென்ன (இத்தனையுமித்யாதி) முற்றத்திலேநிற்கை பழியோவென்ன (படுக்கையித்யாதி) மு ற்றத்திலே புறப்பட்டு நிற்கிறத்தைத் தெருவிலே புறப்பட்டதாக நினைத்து, அப்படி புறப்பட்டதுக்குப்ரமாணம் (யாநசக்யேத்யாதி) "யா நஶக்யா புரா த்ரஷ்டும் பூதைராகாஶகைரபி । தாமத்ய ஸீதாம் பஶ்யந்தி ராஜமார்க்ககதா ஜநா:" (யாநஶக்யாபுராத்ரஷ்டும்பூதைராகாஶகைரபி । தாமத்யஸீதாம்பஶ்யந் திராஜமார்க்கதாஜநா:) இத்யயோத்யாகாண்டே.

" என்னை, நீர் " என்றபதத்வயத்துக்கு மர்த்தம் (உருவுவெளிப்பாடித்யா தி வாக்யத்வயம்) ஏதத்வாக்யத்வயவிவரணம் (அவன்புறப்படவித்யாதி) மூன்றின வர்த்தத்துக்கு, "சுற்றியும் சூழ்ந்தும்" என்று-மாநஸகாயிகங்களைச் சொல்லுகிறது.

"முற்றவிம்மூவுலகும் விரிகின்ற" என்கிறவளுடைய ஹார்த்தபாவம் (தப்பு விக்கைக்கித்யாதி) சப்தார்த்தம் (மிக்கவித்யாதி) ஒற்றுமை - ஒருமை. ஐகாந்த்யம் ஒருப்பட்டது-தத்பரமாயிற்றென்றபடி. இரண்டாமர்த்தத்துக்கு, ஒற்றுமைக்கொண் டது-விலைசெய்துகொடுத்ததென்றபடி. ஒற்றுமை-விலையும், ஒருமையும். " இம்மூவு லகும் - முற்றவும் - விரிகின்றசுடர்முடி" என்றந்வயிப்பது.

"அன்னைமீர்" என்றதுக்குபாவம் (தாய்மாராவாரித்யாதி) "அன்னைமீர்" என்றதுக்கு பாவாந்தரமாதல், விவரணமாதல் (ப்ராப்தேத்யாதி)

அன்னைமீர் - முற்றத்தூள் - நிற்றி - என்று நெரித்தவென்றுதொடங்கி, சுடர்முடிக்கே - உள்ளம் - ஒற்றுமைக்கொண்டது - நுங்கட்கு-நசையென் இத்யர்வயஃ.*

பதிற்றொன்றும்பாட்டு.

கட்கரியபிரமன்சிவனிந்திரனென்றிவர்க்கும்
கட்கரியகண்ணனைக்குருகூர்ச்சடகோபன்சொன்ன
வுட்குடையாயிரத்துளிவையுமொருபத்தும்வல்லா
ருட்குடைவானவரோடுடனாயென்றுமாயாரே.

ஆறாயிரப்படி.

(கட்கரிய) மநுஷ்யருடைய விந்த்ரியங்களுக்கு விஷயமன்றிக்கேயிருக்கிற ப்ரஹ்மாதிகளுக்கும் கண்ணாற்காண வரியனான க்ருஷ்ணனைக்குருகூர்ச்சடகோபன் சொன்ன, (உட்குடையாயிரம்) வாச்யத்தை வசிக்கவல்ல சக்தியோகத்தையுடைய வாயிரத்தி லித்திருவாய்மொழி வல்லார் பகவத்குணசேஷ்டிதாதிகளைப் பூர்ணமாகவநுபவிக்கவல்ல * அயர்வறுமமரர்களோடே நித்யசம்ஶ்லேஷம் பண்ணப்பெறுவர்களென்கிறார் ......*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், இத்திருவாய்மொழியை யப்யசித்தவர்கள், நித்யஸூரிகளோடே நித்யசம்ஶ்லிஷ்டராவரென்று பலத்தையருளிச்செய்கிறார்.

கட்கு - மநுஷ்யாதிகள்கண்ணுக்கு. அரிய - அரியரான. பிரமன் சிவனிந்திரன் - ப்ரஹ்மருத்ரேந்த்ராதிகள். என்று - என்றுசொல்லப்பட்ட. இவர் - இவர்கள். கட்கும் - கண்ணுக்கும். அரிய - காணவரியனான. கண்ணனை - க்ருஷ்ணனை. குருகூர்ச்சடகோபன் - உருவுவெளிப்பாடாம்படிமாநஸாநுபவம்பண்ணினவாழ்வார். சொன்ன - அருளிச்செய்ததாய். உட்கு-ஸ்வார்த்தமான பகவத்ஸ்வரூபரூபகுணாதிகளுடைய ப்ரதிபாதநத்தில்சக்தியை. உடை - உடைத்தான. ஆயிரத்துள் - ஆயிரத்துள். ஒரு-பகவத்ஸௌந்தர்யாதிசய ப்ரதிபாதகத்வத்தாலே யத்விதீயமான. இவையும்பத்தும் - இவைபத்தையும். வல்லார் - அப்யசிக்கவல்லவர்கள். உட்குடை-நிரந்தரபகவதநுபவசக்தியுக்தரான. வானவரோடு - பரமபதவாசிகளோடே. என்றும் - சர்வகாலமும். உடனாய் - சமவேதராய். மாயார் - சம்சாரசம்பந்த ரூபமான ஸ்வரூபவிநாசமற்று வர்த்திப்பர்கள். உட்கு - மிடுக்கு.

இதுவும் - கலித்துறை...*

ஈடு - பதிற்றொன்றும்பாட்டு.

நிகமத்தில் - இத்திருவாய்மொழியை யப்யசித்தவர்கள், பகவத்விஶ்லேஷத்தால் க்லேசப்படாதே, நித்யஸூரிகளோடேகூடி நித்யாநுபவம்பண்ணப்பெறுவ ரென்கிறார்.

(கட்கரியவித்யாதி) மநுஷ்யருடையகண்ணுக் கவிஷயமாம்படி யி ருக்கிற ப்ரஹ்மாதிகளுக்கும் கண்ணுக்கவிஷயமாம்படி யிருக்கிற க்ருஷ் ணனே. ப்ரஹ்மாதிகள கண்ணுக்கவிஷயமாம்படி யிருக்கிற க்ருஷ்ணன் ம நக்கவொண்ணுதபடி உருவுவெளிப்பாடாய்த்தோன்ற, அத்தாலே நலி வுபட்டு, போனபோனவிடமெங்கும் சூழ்ந்துகொண்ட தென்னும்படி யாயிற்றிவர்க்கு ப்ரகாசித்தபடி. அவர்கள் கண்ணுக்கரிய ஞைப்போலே யாயிற்றிவர்கண்ணுக்கு "சூழவுந்தாமரை நாண்மலர்போல்வந்துதோன் றும்" என்னும்படி ப்ரகாசித்தபடி. (குருகூர்ச்சடகோபன்சொன்ன) ஆ ழ்வாரருளிசெய்த. (உட்குடையாயிரத்துளித்யாதி) ப்ரதிபாத்யார்த்த த்தையுள்ளபடி ப்ரதிபாதிக்கவல்ல சக்தியையுடைத்தான வாயிரத்திலும் வைத்துக்கொண்டு, இப்பத்தையு மப்யசிக்கவல்லார்கள், நித்யாநுபவம் பண்ணாநின்றாலும் மேன்மேலென பகவத்குணங்களை பூர்ணமாகவநுபவிக் கைக்கீடான யோக்யதையுடைய நித்யசூரிகளோ டொருகோவையாய். (என்றும்மாயாரோ) மாய்கையு முருவுவெளிபபாடும் பர்யாய மென்றிருக் கிறார்காணும். மாயார் - பிரியார். * அடியார்கள் குழாங்களை - உடன் கூ டி நித்யாநுபவம்பண்ணப்பெறுவர்கள். பகவதபசார பாகவதாபசாரங்க ளுண்டானல் வருமதுபோலன்றே, பகவதங்கீகாரமுண்டாய் அது நிலே நில்லாமையால் படும்க்லேசம். பாளயங்கோத்தாப்போலே கண்ணைக்க ண்கோத்திறேகிடக்கிறது. (சூழவும்.) இதெல்லாமவன் கழுத்துக்குமே லேபடுத்தினக்லேசமிறே...*

ஜீயர் அரும்பதம்.

நிகமம் (கட்கரியவித்யாதி) "இவையுமொருபத்தும்வல்லார்" இத்யாதிமே லெல்லாம் கடாக்ஷித்தவதாரிகை (இத்திருவாய்மொழியை யித்யாதி)

பலிதம் (ப்ரஹ்மாதிகளித்யாதி) விவரணம் (அவர்கள்கண்ணுக்கித்யாதி)

ஆயிரத்துக்கு மிடுக்கின்னது, நித்யசூரிகளுக்கு மிடுக்கின்னதென்று விபஜி த்தருளிச்செய்கிறார் (ப்ரதிபாதயார்த்தத்தையித்யாதி)

வானவர்க்கு உட்காவது - போக்த்ருத்வசக்தி. "மாயார்" என்றது - பிரிக் துருவுவெளிப்பாட்டாலே துःகப்படாரென்றபடி. பிரியாரென்று - அர்த்தாந்தரமா தல். பின்னை யேதுசெய்வாரென்ன (அடியார்களித்யாதி) பகவதபசாராதிகளன் றோ சேதநஸ்வரூபநாசகரத்வேந துःகாவஹங்கள், உருவுவெளிப்பாடு துःகருபமோ வென்ன (பகவதபசாரோத்யாதி) பகவதங்கீகாரம் - பகவதநுபவம். உருவுவெளிப் பாடு துःகருபமாகைக்கு ஹேதுவேதென்ன (ப்ராளயமித்யாதி) கண்ணைக் கண்கோ த்துக் கிடக்கையாவது - தம்முடையகண்ணை யவன்கண்கோத்துக்கிடக்கிறதென்ற படி. ரசோக்தி (இதெல்லாமித்யாதி) அதாவது - முகாவயவங்க ளிப்படிபடுத்துகி றது கீழ்விடில் எல்லாங்கூடிறு லென்படுத்துமோ வென்றபடி. கழுத்துக்குமேலே யென்றது - திருமுகத்திலழகாகையாலே, ஸமாஸ்கமன்றென்று ரஸோக்தி........*

த்ராவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி.

(ஏழையராவியுண்ணும்)

த்ருக்ப்யாம் பத்மாக்ருதிப்யாமமரதருலதா நாஸிகாதோऽதரேண
ப்ருசாபேந ஸ்மிதேந மகரலஸத்குண்டலாப்யாம் விசிஷ்ட: । பா
லேநார்த்தேந்துபாஸாமலமுகருசிநா நேத்ரபோதாதிபாஜா ஸ்ரீமா
ந்தேவ: கிரீடீ ஸ்ருதிவிசததநுர்த்ராதிவேதஹ்ருத்யாயி॥ (எஎ)

(த்ருக்ப்யாம்பத்மாக்ருதிப்யாம்) ஆழியங்கண்ணபிரான்றிருக்கண்கள்கொலோவித்யாதி - ஸரஸிஜ ஸத்ருஶங்களான திருக்கண்மலர்களோடும்; (அமரதருலதாநாஸிகாத:) மாட்டுயர்கற்பகத்தின் வல்லியோ கொழுந்தோ வித்யாதி - கல்பக வ்ருக்ஷத்தினுடைய லதைபோலே யிருக்கிற திவ்ய நாஸையோடும்; (அதரேண) கோலந்திரள் பவளக்கொழுந்துண்டங்கொலோவித்யாதி - அழகிய பவளமுறிபோலேயும் பக்வமான கோவைப்பழம்போலேயு மிருக்கிற திருவதரத்தோடும்; (ப்ருசாபேந) மன்னியசீர்மதனனித்யாதி - மந்மதனுடைய விக்ஷுகோதண்டம்போலேயிருக்கிற திருப்புருவங்களோடும்; (ஸ்மிதேந) வெண்மின்னுக்கொலித்யாதி - வெளுத்தமின்போலேயும் முத்துநிரைபோலேயுமிருக்கிற ஸ்மிதத்தோடும்; (மகரலஸத்குண்டலாப்யாம்) மகரந்தழைக்கும் தளிர்கொலித்யாதி - தளிர்போலேயிருக்கிறதிருச்செவியிலே மகரஸந்நிவேசமாய் விளங்காநிற்கிற திருக்குண்டலங்களோடும்; (பாலேநார்த்தேந்துபாஸா) நாண்மன்னுவெண்டிங்கள்கொலித்யாதி - தர்ஶநீயமானபூர்வாஷ்டமீசந்த்ரனை யநுகரிக்கிறதிருநெற்றியோடும்; (அமலமுகருசிநாநேத்ரபோதாதிபாஜா) கோளிழைத்தாமரையுமித்யாதி - திருக்கண்மலர், திவ்யநாஸாவம்ஶம், திருவதரம், திருப்புருவம், மந்தஸ்மிதம், திவ்யகர்ணபாசம், திருநெற்றி, இவைகளாலே சோபமாநமாய், நிர்மலபரிபூர்ண சந்த்ரஸத்ருஶமான திருமுகமண்டலத்தோடும் விசிஷ்டனுய்க்கொண்டு; (ஸ்ரீமாந்தேவ:கிரீட) முற்றவிம்மூவுலகும் விரிகின்றசுடர்முடிக்கே - நிரதிசயதீப்தியுக்தமான திருவபிஷேகத்தையுடையனுய், அத்தாலே சர்வாதிகனுக விளங்காநிற்கிற; (கிரீட) என்கிறவிவற்றாலே தானே - முன்னில்பாட்டிலே "கொள்கின்றகோளிருளை" இத்யாதியாலே சொல்லப்படுகிறதிருவபிஷேகத்தோடே சம்பந்தித்திருக்கிற திருக்குழற்கற்றையை யுடையனுகையுமுசதமாயிற்றென்று கருத்து. ஏவம்பூதனுன வெம்பெருமான், ஆஶ்ரிதர்க்கதிவிசதமாக ஸ்ம்ருதிவிஷயமாகிருனென்று "ஏழையராவியுண்ணும்" என்கிற தசகத்திலே யாழ்வாராலே யருளிச்செய்யப்பட்ட தென்கிருர்.. .(எஎ

திருவாய்மொழி நூற்றந்தாதி.

ஏழையர்களெஞ்சையிளகுவிக்குமாலழகு
சூழவந்துதோன்றித்துயர்விளைக்க - ஆழுமனந்
தன்னுடனேயவ்வழகைத்தானுரைத்தமாறன்பால்
மன்னுமவர்தீவினைபோம்மாய்ந்து. (சஎ)

(ஏழையர்கள்நெஞ்சை) இதில் - அவனுடைய வுத்தமாங்கத்திலழகு ஒருமுகமாய் நலிகிறபடியைப் பேசுகிற சூக்தியை யநுவதித்தருளிச்செய்கிறார். எங்ஙனேயென்னில்; "மல்குநீலச்சுடர்தழைப்ப" என்று கீழ் ப்ரஸ்துதமான வெம்பெருமானுடைய வழகு திருவுள்ளத்திலே யூற்றிருந்து, அத்தையே யிடைவிடாமல்பாவித்து, பாவநாப்ரகர்ஷத்தாலே அவ்வழகு ப்ரத்யக்ஷ ஸமாநாகாரமாய்த்தோற்றி, தனித்தனியும் திரளவு மொருமுகஞ்செய்து நலிய, தாம் நலிவுபட்டுச்சொல்லுகிறபடியை, உருவுவெளிப்பாட்டாலே நோவுபடுகிற ளொருபிராட்டி பாசுரத்தாலே யருளிச்செய்கிற * ஏழையராவியிலர்த்தத்தை "ஏழையர்கள்" இத்யாதியாலே யருளிச்செய்கிறாரென்கை.

(ஏழையர்கள்நெஞ்சையிளகுவிக்குமாலழகு) சபலகளானவபலைகளுடைய மநஸ்ஸை த்ரவிப்பிக்கும் சர்வேஶ்வரனுடைய * ஸ்மயமான முகாம்புஜத்தில் நயநசௌந்தர்யம். (சூழவந்துதோன்றித்துயர்விளைக்க) எங்கும் சூழ்ந்து ஸ்ம்ருதிவிஷயமாய் பாதகமாயிறே து:கத்தை விளைப்பது. அதாவது - "[illegible] - [illegible]" (வ்ருக்ஷேவ்ருக்ஷேஹிபஶ்யாமி - பாஶஹஸ்தமிவாந்தகம்) என்னும்படி, "ஏழையராவியுண்ணுமிணைக்கூற்றங்கொலோவறியேன்" என்கிற முதற்பாட்டை யடியொத்தினபடி. (ஆழுமனந்தன்னுடனேயவ்வழகைத்தானுரைத்த) "வெண்ணெயுண்டான்றிருமுக் கெனதாவியுள்ளேமாட்டியவல்விளக்கின்சுடராய்நிற்கும்" என்றும், "நீலநெடுமுகில்போல் திருமேனியம்மான் தொண்டைவாயேயுந்திசையுளெல்லாம் வந்துதோன்றும்" என்றும், "கண்ணபெருமான் புருவமவையேயென்னுயிர்மேலனவாயடுகின்றன வென்றுநின்றே" என்றும், "குன்றமெடுத்தபிரான்முறுவலெனதாவியடும்" என்றும், "பைவிடப்பாம்பணையான்றிருக்குண்டலக்காதுகளே கைவிடலொன்றுமின்றியடுகின்றன" என்றும், "பெருமான்றன்றிருநுதலேகோள்மன்னியாவியடும்" என்றும், இப்படிதனித்தனியும்; "கோளிழைத்தாமரையும்" இத்யாதிப்படியே ஒருமுகமாகவும்; அதுக்குமேலே, "செங்கமலப்பூவில்தேனுண்ணும்வண்டேபோல் பங்கிகள்வந்துன்பவளவாயைமொய்ப்ப" என்றும், "[illegible]" (லலாடபர்யந்தவிலம்பிதாளகம்) என்றும் சொல்லும்படியாய், "மாயன்குழல்விள்ளின்றபூந்தண்டுழாய்விரைநாறவந்தென்னுயிரைக்கள்கின்றவாறு" என்றுமருளிச்செய்தவையென்கை. இப்படி து:கமக்நமான மநஸ்ஸுடனே. (அவ்வழகைத்தானுரைத்தமாறன்பால்) நிரவதிகபோக்யமான அந்த உத்தமாங்கத்திலே சௌந்தர்யத்தை யநுபவித்தருளிச்செய்த வாழ்வார்விஷயத்திலே பொருந்தியிருக்குமவர்களுடைய ப்ரபலப்ரதிபந்தகம் நசித்து நிஶ்ஶேஷமாகப்போம். தீவினை-துஷ்கர்மம். (மாறன்சொல்மன்னுமவர்தீவினைபோம்மாய்ந்து) என்று பாடமானபோது, ஆழ்வாரருளிச்செய்த திருவாய்மொழியை மநஸ்ஸிலே பொருந்தி யநுசந்திக்குமவர்கள் ப்ரதிபந்தகம் நிஶ்ஶேஷமாகப்போமென்றபடி. ....(௬எ)

ஏழாம்பத்தில் - ஏழாந்திருவாய்மொழி முற்றிற்று.

ஆக - திருவாய்மொழி - ௬எ.—பாட்டு - எ௱௧.

ஸ்ரீ

திருவாய்மொழி.

ஏழாம்பத்து.

எட்டாந்திருவாய்மொழி.

மாயா-ப்ரவேஸங்கள்.

ஆறாயிரப்படி.

கீழுருவு வெளிப்பாடென்றறிந்து நோவுபடச்செய்தே தன்னைக் காட்டியார்த்தி தீராதொழிகிறபடியையும், அங்ஙனே யிருக்க முடியாதபடி தம்மை நடத்துகிறபடியையுங்கண்டு "இவ்வாஸ்சர்ய மிருந்தபடியென்" என்று எம்பெருமானுக்கறிவிக்க; அவனும் "இவ்வளவோவென்படி" என்று தன்னுடைய விசித்ர விபூதித்வத்தைக்காட்டி யருளக்கண்டு, "இதிருந்தபடியென்" என்று விஸ்மித ராகிறார்......................*

பன்னீராயிரப்படி.

எட்டாந்திருவாய்மொழியில், கீழ்-உருவுவெளிப்பாடான ப்ரகாசம் நடக்கச்செய்தே அநுபவம் பெறாதபடி நிரோதித்து ஆர்த்தியை யதிசயிப்பித்த வைசித்ர்யங்கண்டவர்; இந்த விசித்ரசக்தியோகத்துக்கு ஹேதுவானவனுடைய வாஸ்சர்யமாயுள்ள வர்த்தித்வ ரூபத்தையும், அபிமதசித்தியால்வந்த வாதிக்யத்தையும், அம்மேன்மைகிடக்கச்செய்தே யுண்டான வாஸ்ரிதபவ்யதையையும், உத்துங்கபவ்யதைகளிரண்டுக்கும் ஸூசகமான புண்டரீகாக்ஷத்வத்தையும், அநந்ய ப்ரயோஜநர்க்கதிசயித போக்யனும்படியையும், சித்தப்ராமகமான சேஷ்டிதாதிகளையும், கர்மாத்யநுரூபமான து:கஜநகத்வத்தையும், அதிசயிதஜ்ஞாநர்க்கு மயபோதநார்ஹதையையும், துரவபோதத்வ ஹேதுவான ஸௌக்ஷ்ம்யாதிசயத்தையும், ஸூத்ருட ப்ரமாணசித்தமான ஸூக்ஷ்ம சிதசித்ப்ரகாரத்வத்தையு மநுசந்தித்து; ஏவம் ப்ரகாரவிசிஷ்டனை நீ, ஒன்றுக்கொன்றொவ்வாத விசித்ராகாரமான ஜகத்தை விபூதியாகக்கொண்டு நிற்கிற வாஸ்சர்ய சக்தியோக மிருந்தபடி யென்னென்று புத்தி சந்நிஹிதனான ஸர்வேஸ்வரனுக்கு விண்ணப்பஞ்செய்து, தம்முடைய விரோதி நிவ்ருத்தியில் பணியில்லாமையை நினைத்து சந்துஷ்டராகிறார்.................................

ஈடு.

கீழ்த்திருவாய்மொழி - உருவுவெளிப்பாடாய்ச்சென்றது. ஸம்ஸ்லேஷம் கெட்டாமையாலே உருவுவெளிப்பாடென்றறிவரிறே. இனி, சர்வேஸ்வரன் தான் நினைத்தகாரியம் செய்து தலைக்கட்டிக்கொள்ளு மளவும் இவரைமையிங்கே வைக்கிறானென்னுமிடமுமறிவரிறே; ஆகிலும், அவனைப் பிரிய தரிக்கமாட்டாதவராகையாலே இத்தை நினைத்தாறியிருக்கவும் ... "விரோதியைப்போக்கித் தரவேணும்" என்றிவரார்த்தி

லு மவனுமிவனைக்கொண்டு தான் நினைத்த ப்ரபந்தங்கள் தலைக்கட்டிக் கொள்ளுமளவு மிவரபேக்ஷிதம் செய்யானே. இவரபேக்ஷிதம் செய்யா திருக்கச்செய்தேயும், இவனை யிங்கேவைத்து ஜீவிப்பிக்கு முபாயங்களு மறிந்திருக்குமே. ஆகையாலே, சில பதார்த்தங்களை யுயிர்போகாதபடி யொன்றிலே கோத்திட்டு வைக்குமாபோலே, முடியவுமொட்டாதே ஜீவிக்கவு மொட்டாதே நடுவேயிருத்தி நலிகிறபடியை யநுசந்தித்து, " எனக்கிதில் பொருந்தாமை யுண்டாயிருக்கசெய்தேயு மிஸ்ஸம்சாரத்திலே வைத்தென்னைநடத்திக்கொடு போருகிற விவ்வாஸ்சர்யத்தை யெனக்கருளிச்செய்யவேணும் " என்ன, ஒன்றைக்கேட்கவேறே சிலவற்றைச சொல்லுவானைப்போலே, " இதொன்றுங்கண்டோ நீராஸ்சர்யப்படுகிறது, இவ்வளவல்லாத நம்முடைய விசித்ரஜகதா காரதையைப் பாரீர் " என்று தன்னுடைய வாஸ்சர்ய ஜகதாகாரதையைக் காட்டிக்கொடுக்க; அதுதானும் தான் நினைத்ததன்றேயாகிலு மவன் காட்டிக்கொடுத்த தாகையாலே அதுவு மிவர்க்கு ப்ரீதிஹேதுவாயிருக்குமிறே. ஆக, இவரொன்றைக்கேட்க அவனநேகாஸ்சர்யங்களைக் காட்டிப் பரிஹரித்தான். அக்ரூரன், யமுனையிலேபுக்கு முழுகினவாறே பிள்ளைகளை நீருக்குள்ளே கண்டஞ்சாக்கரையிலே பார்த்தான், அங்கேயுங்கண்டான்; கண்டு, " ஜகதேதந்மஹாஸ்சர்யம்ரூபம்யஸ்யமஹாத்மந꞉। தேநாஸ்சர்யவரேணாஹம் பவதாக்ருஷ்ணஸங்கத꞉ " (ஜகதேதந்மஹாஸ்சர்யம்ருபம்யஸ்யமஹாத்மந꞉। தேநாஸ்சர்யவரேணாஹம் பவதாக்ருஷ்ணஸங்கத꞉) என்று கொண்டு அவனுஸ்சர்யப்பட்டாப்போலே, இவருமவனுடைய விசித்ர ஜகதாகாரதையை யநுசந்தித்து விஸ்மிதராகிறார்...*

ஜீயர் அரும்பதம்.

மாயாவாமனன்ப்ரவேசம், வ்ருத்தாநுவாதம் (கிழிந்யாதி) உருவுவெளிப்பாடென்றறியும்படி யென்னென்ன (கைக்கித்யாதி) அவன் தம்மைவைத்த காரியமறிந்திருக்க, த்வரிப்பானென்னென்ன (இனிசர்வேஸ்வரனித்யாதி) " இனியாமுறுமை " என்றபோதே விரோதியைப்போக்காதிருப்பானெனனென்ன (விரோதியையித்யாதி) இவ்வாக்யாநந்தரோ, (இனிசர்வேஸ்வரன்) இத்யாதி வாக்யமநுசந்தேயம். அபேக்ஷிதஞ்செய்யாவிட்டால் முடியாரோவென்ன (இவரபேக்ஷிதமித்யாதி) உக்தார்த்தநிகமந பூர்வகமாக, ஆஸ்சர்யமிருந்தபடியென் என்றுகேட்கும் ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார் (ஆகையாலேயித்யாதி) சிலபதார்த்தங்களை யென்றது - மத்ஸ்யாதிகளை. (ஆகையாலே யென்றுதொடங்கி, அருளிச்செய்யவேணு மென்னுமளவும்) " பாசங்கணிக்கி " என்கிறபாட்டைக்கடாக்ஷித்து. இவர்க்கநபேக்ஷிதத்தைக் காட்டினுலிஷ்டமாமோவென்ன (அதுதானுமித்யாதி) ஜகதாகாரதை யாஸ்சர்யமென்னுமதுக் குதாஹரணம் (அக்ரூரனித்யாதி) " ஜகதேதந்மஹாஸ்சர்ய " (ஜகதேதந்மஹாஸ்சர்யம்) இதிபஞ்சமேம்சே. * புகழுநல்லொருவனிலே - சம்சயம், * நல்குரவிலே - விருத்த விபூதிகத்வம், இதில் - ஆஸ்சர்யஜகதாகாரதையென்று பேதம்...*

எட்டாந்திருவாய்மொழி.

முதற்பாட்டு.

மாயாவாமனனேமதுசூதாநீயருளாய்
தீயாய்நீராய்நிலனாய்விசும்பாய்க்காலாய்த்
தாயாய்த்தந்தையாய்மக்களாய்மற்றுமாய்முற்றுமாய்
நீயாய்நீநின்றவாறிவையென்னநியாயங்களே.

ஆறாயிரப்படி.

(மாயாவாமனனே) அத்யாஸ்சர்யபூதனா யாஸ்ரிதவிரோதி நிரஸந சீலனான நீ யென்னைத் தெளிவிக்கவேண்டும். லோகத்தில், வஹ்நிஜல பூம்யாகாச வாயுக்களையும் தாயையும் தந்தையையும் மக்களையும் மற்றெல்லாரையும் விபூதியாகவுடையையாய், இவற்றோடு பிரியவஸாதாரணாகாரத்தையு முடையையாய்க் கொண்டு நீ நின்றபடியென் என்று விஸ்மிதராய் எம்பெருமானைக் கேட்கிறார்......................................*

பன்னீராயிரப்படி.

முதற்பாட்டில், காரணரூபமாயும் கார்யரூபமாயு மிருக்கிற சகலபதார்த்தங்களையும் விபூதியாக வுடையையாயிருக்கிற ப்ரகார மென்னாயிருக்கிறது, இத்தை ஆஸ்சர்ய ரூபனான நீ யருளிச்செய்யவேணுமென்கிறார்.

மாயா-ஸ்வாபாவிகமான வாஸ்சர்யசக்தியை யுடையையாய். வாமனனே- அதுக்கநுரூபமாக, மஹாமேருவைமஞ்சாடியாகச்சுருக்கினாப்போலே வடிவைச்சிறுக விட்டிருந்த வாமநனாய். மதுசூதா - உன்னுடைய சக்திவைசித்ர்யத்தில் சந்தேஹித்தாருடைய சம்சயத்தை, மதுவைநிரசித்தாப்போலே நிரசித்துக்கொடுக்கு மவனே. நீ - நீயே. அருளாய் - உன் ப்ரகாரத்தை யருளிச்செய்யவேணும். தீநீர்நிலன் விசும்புகால் - அண்டகாரணமான பூதபஞ்சகமும். தாய்தந்தைமக்கள் மற்றும்- அண்டாந்தர்வர்த்திகளில் ஒருவர் செய்த தொருவர் செய்யாதபடியான மாதா பித்ரு புத்ர ப்ரப்ருதிகளும். முற்றும் - தத்சம்பந்திகளாயுள்ள சமஸ்த பதார்த்தங்களும். ஆய் - நீ யிட்டவழக்காம்படி தத்தத்ப்ரகார விசிஷ்டனாய். அவ்வளவே யன்றியே, நீயாய் - அசாதாரணாகாரயுக்தனாய். நீ, நின்ற - நிற்கிற. இவையாறு - இப்ப்ரகாரம். என்ன - என்ன. நியாயங்கள் - உபபத்தியுக்தங்களா யிருக்கிறன.

காரணரூப வஸ்துக்களா யிருக்கிறவைதானே கார்யரூபமாகையாலே சவாத்மகனான தான் தத்கததோஷஸ்பர்ஸமில்லாதபடி வ்யாவ்ருத்தனா யிருக்கையு ஒருவர்க்கறிய வொண்ணாதபடியாலே யிந்த வேதாந்தரஹஸ்யோப பத்திகளை நீயே யருளிச்செய்யவேணுமென் றாராயிற்று..

ஈடு - முதற்பாட்டு.

விசித்ரமானகார்ய காரணங்களையெல்லாம் விபூதியாக வுடையையிருக்கிற விருப்பை யநுசந்தித்து; இவை யென்னபடிகளென்றுப்

(மாயா) மாயாவென்கிறவிது - இத்திருவாய்மொழிக்காக ஸங்க்ரஹமாயிருக்கிறது. (வாமனனே) மாயாவென்கிற பதத்திற் சொல்லுகிற வாஶ்சர்யத்துக்கு வ்யாப்தி க்ரஹணபூமியாயிருக்கிறது. அன்றேபிறந்தன்றே வளர்ந்து மஹாபலி பக்கலிலே சென்று அவன் முன்னே நின்று, தான் சொன்னவையெல்லாம் செய்யவேண்டும்படி வார்த்தை யருளிச்செய்து, சிற்றடியைக்காட்டிப் பெரியவடியாலேயளந்துகொண்டு, இப்படி பண்ணின வ்யாபாரங்களையடைய முன்னேட்டுக்கொண்டு - வாமனனே யென்கிறார். (மதுஸூதா) ஆஶ்சர்ய சேஷ்டிதங்களுக்கெல்லாம் ஸ்ரீவாமநனைப்போலேயாயிற்று, விரோதிநிரசநத்துக்கு மதுஸூதநனென்கிறது. (மதுஸூதாநீயருளாய்) மதுவாகிறவசுரனை நிரசித்தாப்போலே, எனக்கோடுகிற ஸம்சயத்தையும் நீயேபோக்கித் தந்தருளவேணும்.

(தீயாயித்யாதி) கார்யகதமானவைசித்ரி, காரணத்திலேயு முண்டாயிருக்குமிறே. இனித்தான், ஒன்றின்படியாயிராதிறே மற்றையது. இப்படிபின்னமான ப்ரகாரங்களை யுடையவான பூதபஞ்சகங்களுக்கும் நிர்வாஹகனாய். (தாயாயித்யாதி) கார்ய வர்க்கத்திலும், தாய்செய்தது தமப்பன் செய்யமாட்டான், தமப்பன் பண்ணுமுபகாரம் புத்ரர்கள் பண்ணமாட்டார்கள், புத்ரர்கள் பண்ணுமுபகாரம் பந்துக்கள் பண்ணமாட்டார்கள், இப்படி சர்வவித பந்துக்களுமாய். (முற்றுமாய்) அநுக்தமான சம்பந்திகளாயுள்ள சகலசேதநா சேதநங்களுக்கும் நிர்வாஹகனானவனே. (நீயாய்) ஜகதாகாரனாயிருக்குமளவல்லவிறே அசாதாரண விக்ரஹயுக்தனாயிருக்குமிருப்பு. இவர்க்குப் பரமபதத்திலே சூரிபோக்யனாயிருக்கிற விருப்போடு, ஜகதாகாரனாய் நிற்கிற நிலையோடு வாசியற போக்யமாம்படியிறேயிவர்க்குப்பிறந்த ஜ்ஞாநவைசத்யம். (நீநின்றவாறு) இப்படி இவையெல்லாமாய்க் கொண்டு நீ நின்றப்ரகாரம். (இவையென்னநியாயங்களே) இவையென்ன படிகள்தான். முதற்றிருவாய்மொழியிலே - இவனுடைய வைஶ்வர்யத்தை யநுபவித்திருக்கச்செய்தேயும், இதுக்குமுன்பு கண்டறியாதாப்போலே புதியரா யநுபவிக்கிறு ராயிற்று. குணாநுபவத்தில் க்ஷணந்தோறும் புதுமைபிறந்து * அப்பொழுதைக்கப்பொழுதென் னாராவமுதமா யநுபவிக்குமாபோலே யாயிற்று, விபூத்யநுபவத்திலும் புதியராயநுபவிக்கவல்லபடி. (இவையென்னநியாயங்கள் - நீ யருளாய்) இத்தையருளிச்செய்யவேணும். " ஏதந்மே ஸம்ஶயம் க்ருஷ்ண சேத்துமர்ஹஸ்யஶேஷத: " (த்வதந்யஸ்ஸம்ஶயஸ்யாஸ்யச்சேத்தாநஹ்யுபபத்யதே) என்று அர்ஜுநன் சம்ஶயம் தீர்த்தாப்போலே, என்னுடைய சம்சயத்தையும் தீர்த்தருளவேணும்..*

ஜீயர் அரும்பதம்.

முதற்பாட்டு (மாயாவித்யாதி) " தீயாய் நீராய்" என்றுதொடங்கி, "இவையென்னநியாயங்கள்" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை (விசித்ரமானவித்யாதி)

மாயா - ஆஶ்சர்யபூதனே. வ்யாப்திக்ரஹணபூமியாவது-ஆஶ்சர்யமுண்டென்கிறதை யறிகிறஸ்தாநம். வாமநனிடத்திலாஶ்சர்ய மேதென்ன (அன்றேயித்யாதி) முன்னேட்டுக்கொண்டு - மேலேயெண்ணிக்கொண்டு. விரோதிநிரசந கதநத்துக்கு பாவம் (மதுவாகிறவித்யாதி)

ஏகாகாரமான காரணத்திலே வைசித்ரியேதென்ன (கார்யகதமானவித்யாதி) அதாவது - கார்யம் விசித்ரமானபோதே காரணமும் தததநுகுணமாகவேணுமென்று அநுமாநாத்ஸித்தமென்றபடி. ஹேத்வந்தரம் (இனித்தானித்யாதி) அதாவது காரணங்கள் பரஸ்பர விசித்ரங்களென்றபடி.

கார்யவர்க்கத்திலும் வைசித்ரி யருளிச்செய்கிறார் (கார்யவர்க்கத்திலு மித்யாதி) ஒருவனே சர்வவிதபந்துவுமாகிறது மாஶ்சர்யமென்றபடி. "முற்றுமாய்" என்றதுக்கர்த்தம் (அநுக்தமானவித்யாதி) "நீயாய்" என்றதுக்கு - (அசாதாரணவிக்ரஹயுக்தனுய்) என்று சப்தார்த்தம் விவக்ஷித்து, இதிலேயாஶ்சர்யமேதென்ன (ஐகதாகாரனுயித்யாதி) * அழுக்குப்பதித்தவுடம்பையும், "நீயாய்" என்று- * பரஞ்சுடருடம்பையு மொக்கவருளிச்செய்வானென்னென்ன (இவர்க்கித்யாதி)

நியாயம் - ப்ரகாரம். கீழேயும் விபூதியோகத்தை யநுபவித்திருக்க, இப்போதும் பூர்வம்போலே யாஶ்சர்யப்படுவானென்னென்ன (முதற்றிருவாய்மொழியிலே யித்யாதி) இதுக்கு த்ருஷ்டாந்தம் (குணுநுபவத்திலித்யாதி) உமக்கு சந்தித்தமான வர்த்தங்க ளென்றால் தீர்க்கப்போமோ வென்ன (த்வதர்ய இத்யாதி) "ஏதம்மேஸம்ஶயம்க்ருஷ்ண சேத்துமர்ஹஸ்யஶேஷத꞉ । த்வதந்ய꞉ ஸம்ஶயஸ்யாஸ்ய சேத்தா நஹ்யுபபத்யதே" (ஏதம்மேஸம்ஶயம்க்ருஷ்ணச்சேத்துமர்ஹஸ்யஶேஷத꞉ । த்வதந்யஸ்ஸம்ஶயஸ்யாஸ்யச்சேத்தாநஹ்யுபபத்யதே) இதி கீதாஸூக்திஷ்டே.

மாயாவாமனனேமதுசூதா, நீயாயென்றுதொடங்கி, இவை யென்ன நியாயங்கள் - நீயருளாயித்யந்வய꞉. ....*

இரண்டாம்பாட்டு.

அங்கண்மலர்த்தண்டுழாய்முடியச்சுதனேயருளாய்
திங்களுநாயிறுமாய்ச்செழும்பல்சுடராயிருளாய்ப்
பொங்குபொழிமழையாய்ப்புகழாய்ப்பழியாய்ப்பின்னுநீ
வெங்கண்வெங்கூற்றமுமாமிவையென்னவிசித்திரமே.

ஆறுயிரப்படி.

(அங்கண்மலர்) அழகிய மதுவோடுகூடின பூவையுடைய திருத்துழாயைத் திருமுடியிலே யுடையையாய், இவ்வழகுக் கொருநாளு மொருச்யுதியில்லாதவனே ; திங்களும் ஞாயிறுமாய், அழகியதாய்ப் பலவகைப்பட்ட நக்ஷத்ரங்களுமாய், தமஸ்ஸுமாய், பொங்குபொழிமழையாய், புகழாய், பழியாய், பின்னும் நீ, வெவ்விய கண்ணையுடைய வெவ்விய ம்ருத்யுவுமான படிகளென்ன வைசித்ரிதானென்கிறார்..............

பன்னீராயிரப்படி.

அநந்தரம், அபிமதஸித்தியால்வந்த பூர்த்தியாலே அத்யுச்ச்ரிதனுயுள்ளநீ, சந்த்ரஸூர்யப்ரமுக சகலபதார்த்தங்களையும் விபூதியாக வுடையயான வைசித்ர்யத்தை யருளிச்செய்யவேணுமென்கிறார்.

அம்-விலக்ஷணமான. கள்-மதுவையுடைய. மலர்-பூவையுடைத்தாய். தண்-ஸ்ரமஹரமான. துழாய்-திருத்துழாயாலே யலங்க்ருதமான. முடி-மயிர்முடியையுடையயாய். அச்சுதனே - அர்த்தித்தவஸ்து கைப்புகுந்தவாறே சேஷித்வபூர்த்தியாலே அப்ரச்யுதஸ்வபாவனானவனே. அருளாய்-நீயருளிச்செய்யவேணும். தாபசீதகரரான, திங்களும்-சந்த்ரனும். நாயிறுமாய்—ஸூர்யனுமாயும். செழும் - விலக்ஷணமாய். பல்-பலவாயுள்ள. சுடராய்-தாராக்ரஹநக்ஷத்ரங்களான தேஜஃபதார்த்தங்களாயும். இருளாய்-ப்ராணிகளுக்கு பதார்த்ததர்ஸநம்பண்ணவொண்ணாதவிருளாய். பொங்கு - அந்தப்ராணிகளுடைய வபிவ்ருத்திஹேதுவாய்க்கொண்டு உச்ச்ரிதமாய். பொழி-சொரியும். மழையாய் மழையாய். புகழாய்-அத்தாலுண்டான ஸஸ்யாதிபதார்த்தசம்பத்தியாலே சம்பாதயமானபுகழாய். பழியாய் - அவற்றினுடைய பாத்ரவ்யயாதி வ்யதிரேகத்தால்வரும பழியாய். அப்பழியைத்தகாலத்து, பின்னும்-பின்னையும். வெங்கண் - அவர்களை யுபசம்ஹரிக்கைக்கடியாய் க்ரூரேக்ஷணனாய். வெம்-க்ரூரஸ்வபாவனுமான. கூற்றமுமாய்-ம்ருத்யுவாயும்நிற்கிற. இவை-இந்தப்ரகாரங்கள். எனை-என்ன. விசித்திரம்-வைசிதர்யங்கள் ....*

ஈடு - இரண்டாம்பாட்டு.

சந்தர ஸூர்யாதி பதாாத்தங்களடைய தனக்கு விபூதியாகவுடையனாயிருக்கிறபடியை யருளிசசெய்கிறார்.

(அங்கண்மலரித்யாதி) அழகிதாய் மதுவோடேகூடின மலரையுடைத்தாய்க் குளிர்ந்திருந்துள்ள திருத்துழாயைத் திருமுடியிலே யுடையயாய், அந்த வொப்பனையால் வந்தவழகுக் கொருநாளு மொருவேறுபாடின்றிக்கே யென்றுமொக்க நித்யமாம்படி யிருக்கிறவனே. வைத்தவளையத்தோபாதியும் போகயமாகிறதாயிற்று விபூத்யநுபவமிவர்க்கு. " கீழ்த்திருவாய்மொழியில் 'விள்கின்றபூந்தண்டுழாய்விரைநாறவந்து'என்று சொன்னத்தை ஸ்மரிக்கிறார் " என்று பிள்ளான்பணிக்கும். * மாயன்குழல்விள்கின்றபூந்தண்டுழா யுருவுவெளிப்பாடாய் பாதகமாகைதவிர்ந்து, சாக்ஷாத்கரித் தநுபவிக்கிறாரிறே. (திங்களும்நாயிறுமாய்) " ஸூர்யாசந்த்ரமஸௌ தாதா யதாபூர்வமகல்பயத் " (ஸூர்யாம்ஸஜநிதம்தாபம் நிர்யோதாராபதிப்ரஸமம்) என்கிறபடியே, ஆதித்யகிரணங்களால் பிறந்த தாபமெல்லாம் போம்படி சேதநர்க்காப்யாயநத்தைப்பண்ணக்கடவனான சந்த்ரனும், அவனால்வந்த நீர்க்களிப்பை யறுத்துக்கொடுக்கு மாதித்யனுமாய். (செழும்பல்சுடராய்) சேதநர்க்குவரும் லாபாலாபங்களையறிகைக்கீடான சஞ்சாரத்தையுடைத்தான நக்ஷத்ரங்களுமாய். (இருளாய்) சேதநர்க்கு போகயோக்யமானவிருளாய். (பொங்குபொழிமழையாய்) சகலப்ராணிகளுக்கும் ஜீவிக்கலாம்படி ஸஸ்யங்களையுண்டாக்கும் வர்ஷமுமாய். (புகழாய்) எல்லாருமாசைப்படும் யஸஸ்ஸாய். (பழியாய்) எல்

லார்க்கும் வருந்திப் பரிஹரிக்கவேண்டும்படியாய்.(பின்னும்)அதுக்குமே லே.,(வெங்கண்வெங்கூற்றமுமாய்) " [illegible] " (புராபூத்வாம்ருதுர்த்தாந்தஸ்ஸர்வபூதஹிதேரதஃ । நக்ரோதவசமாபந்நஃ ப்ரக்ருதிம்ஹாதுமர்ஹஸி) என்கிறபடியே, இவை யதிப்ரவ்ருத்தமானவா றே குளிரநோக்குமதுதவிர்ந்து, வெவ்விதானநோக்கையுடையையாய். (வெங்கூற்றம்) அந்தகன் "தண்ணீர்" என்னும்படி வெவ்வியகூற்றமு மாய். சம்ஹாரத்தில் ருத்ராத்யந்தர்யாமித்வத்தைச்சொன்னபடி. (இ வையென்னவிசித்திரமே) இவையென்ன வைசித்ரிதான்-அருளாய்......*

ஜீயர் அரும்பதம்.

இரண்டாம்பாட்டு. (அங்கணித்யாதி) "திங்களும்ஞாயிறுமாய்" இத்யாதி யைக்கடாக்ஷித்தவதாரிகை (சந்த்ரசூர்யாதித்யாதி)

"கண்" என்றது - கள்ளென்றபடி. "அச்சுதன்" என்றதுக்கர்த்தம் (அந் தவொப்பனையித்யாதி) விபூத்யநுபவத்திலே ஒப்பனை யழகைச் சொல்லுவானென் னென்ன (வைத்தவனையத்தித்யாதி) பரிஹாராந்தரம் (கீழிலித்யாதி) கீழில்திரு வாய்மொழியிலே பாதகமானத்தை தாரகமாக வநுபவிக்கிற வித்திருவாய்மொழி யிலே ஸ்மரிக்கக்கூடுமோவென்ன (மாயன்குழலித்யாதி)

சந்த்ரசூர்யர்களுக்கு வைசித்ரியேதென்ன (சூர்யாம்சஜநிதமித்யாதி) "[illegible]" (ஸூர்யாம்சஜநிதம்தாபம் நிர்யேதாராபதிம்சமம் । அஹம்மாநோத்பவம்துஃகம்விவேகஸ்ஸமஹாநிவ) இதிபஞ்சமேப் போ தமமே மரத்காலவர்ணகே பராமரஃ. "செழும்" என்று - அழகு. நக்ஷத்ரங் களுக்கழகேதென்ன (சேதநர்க்கித்யாதி) அந்தகாரத்துக்கு வைசித்ரியேதென்ன (சேதநர்க்குபோகேத்யாதி) "பொங்குபொழிமழை -" பொங்காநின்றுகொண் பொழியும் மழையென்று சப்தார்த்தம். வர்ஷத்துக் காம்சர்யமேதென்ன (சக ப்ராணிகளுக்கு மித்யாதி) கீர்த்திக்காம்சர்யமேதென்ன (எல்லாருமித்யாதி) பு க்காம்சர்யமேதென்ன (எல்லார்க்குமித்யாதி) "வெவ்விதான வீக்ஷணத்தையுடை யவன்" என்னுமதுக்கு ப்ரமாணம் (புராபூத்வேத்யாதி) "[illegible]" (புராபூத்வாம்ருதுர்த்தாந்தஸ்ஸர்வபூதஹிதேரதஃ । நக்ரோதவ மாபந்நஃப்ரக்ருதிம்ஹாதுமர்ஹஸி) இத்யாரண்யகாண்டே ராமம்ப்ரதிலக்ஷ்மணஃ

அங்கண்மலர்த்தண்டுழாய்முடியச்சுதனே-திங்களுமென்றுதொடங்கி, வ த்திரமே - அருளாயித்யந்வயஃ..

மூன்றாம்பாட்டு.

சித்திரத்தேர்வலவாதிருச்சக்கரத்தாயருளா
யெத்தனையோருகமுமவையாயவற்றுள்ளியலு
மொத்தவொண்பல்பொருள்களுலப்பில்லனவாய்வியவாய்
வித்தகத்தாய்நிற்றிநீயிவையென்னவிடமங்களே.

ஆறாயிரப்படி.

(சித்திரத்தேர்வலவா) சாரத்யம்பண்ணும்போது, ஆச்சர்யமாம்படி தேரைநடத்தவல்லவனே ; ஜயத்ரதவதத்திலன்று பகலை யிரவாக்கின வத்யாச்சர்யமான திருவாழியையுடையவனே; க்ருதாதிகளான வநேகயுகங்களையும், அவ்வவகாலங்களிலுண்டாயோரோவகையாலே யொத்தும், ஓரோவகையாலே வேறுபட்டும், தேவமநுஷ்யாதி ரூபேண பலவாய், ப்ரதிவ்யக்த்யஸங்க்யமான பதார்த்தங்களையும் விபூதியாகவுடையையாய், இப்படி விஸ்மயநீயனாய் நில்லாநின்றாய், இவையென்னசேராச் சேர்த்திகளென்கிறார்..*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், உத்துங்கனாய்வைத்து ஆச்ரிதபாரதந்த்ரனாயிருக்கிற நீ, காலோபலக்ஷித சகலபதார்த்தங்களுமாயிருக்க, அவற்றோடு தொற்றற்றுநிற்கிற வைஷம்யத்தை யருளிச்செய்யவேணுமென்கிறார்.

அவஸ்த்தாநுரூபமாக, சித்திரம் - விசித்ரமாம்படி. தேர் - தேரை. வலவா - நடத்தவல்லனாய். திருச்சக்கரத்தாய் - அந்த வைசித்ர்யம்போலே பகலையிரவாக்கும்பரிகரமான திருவாழியை யுடையவனே. அருளாய் - நீ யருளிச்செய்யவேணும். எத்தனை - க்ருத த்ரேதா த்வாபர கலிரூபமான வெல்லாவகையையு முடைத்தாய். ஓர் - ஒன்றோடொன்றொவ்வாதபடி அத்விதீயமான. உகமும் - யுகங்களுக்கு நிர்வாஹகனாய். அவையாய் - அந்த காலகால்யமாய்க்கொண்டு. அவற்றுள் - அதுக்குள்ளே. இயலும் - நடப்பதாய். ஒத்த - ஜ்ஞாநைகாகாரதயாவொத்து. ஒண் - ஸ்வயம் ப்ரகாசத்வ ஜ்ஞாத்ருத்வாதி குணவைலக்ஷண்யத்தையுடைத்தாய். பல- "ஸநகோ வைஹஸ்ராநாம்" (ஏகோபஹூநாம்) என்கிற மர்யாதையாலே ஸ்வரூபபேதத்தை யுடைத்தாய். உலப்பில்லன - அஸங்க்யாதமான. பொருள்கள் - சிதசித்பதார்த்தங்களை. ஆய் - ப்ரகாரமாக வுடையையாய். வியவு - அவற்றினுடைய சாம்யாகார திரோதாயகமான தேவமநுஷ்யாத்யாகாரங்களாலுண்டான வேறுபாட்டுக்கு. ஆய் - நிர்வாஹகனாய். இப்படியிருக்கச்செய்தே, வித்தகத்தால்- " நமஸ்திதாநிபூதாநி, " (நமஸ்த்திதாநிபூதாநி,) " நசாஹந்தேஷ்வவஸ்த்தித: " (நசாஹந்தேஷ்வவஸ்த்தித:) என்கிறகணக்கிலே தத்கததோஷாஸம்ஸ்ப்ருஷ்டனான விஸ்மயநீயதையோடே. நீ - நீ. நிற்றி - நில்லாநின்றாய். இவை - இவை. என்ன - என்ன. விடமங்கள் - வைஷம்யங்கள். ....*

ஈடு - மூன்றாம்பாட்டு.

க்ருத த்ரேதாதியுகங்களையும், அவ்வவகாலங்களிலுண்டான தேவமநுஷ்யாதிகளையும் விபூதியாகவுடையவனென்கிறார்.

(சித்திரத்தேர்வலவா) விசித்ரமாம்படியாகத் தேரைநடத்தவல்லவனே. வைசித்ரியாவது - த்ரோணன் கையுமணியும் வகுத்து வாசலைப்பற்றிநிற்க, அவனைவளைந்து அவனுக்கவ்வருகே தேரைக்கொடுபோய்நிறுத்தி அவனுக்கு வ்யாபரிக்கைக்கிட மறுந்தானாயிற்று. பீஷ்மன்கையில

ம்பு தூரப்போய்விழும், அர்ஜுநன்கையிலம்பு இவ்வருகேவிழும்; ஆகை யாலே, அவனம்புவிடப்புக்கவாறே தேரைப் பின்னே கழலக்கொடுபோ யும், இவனம்புவிடப்புக்கவாறே தேரைக்கிட்ட நிறுத்தியும். இப்படித்தே ரைநடத்தும்படியைப்பற்ற – சித்திரத்தேர்வலவாவென்கிறது. (திருச்சக் கரத்தாய) பகலையிரவாக்கும் பரிகரத்தையுடையவனே.

(எத்தனையோருகமுமவையாய்) க்ருதாதியுகங்களுக்கெல்லாம்நி ர்வாஹகனாய். (அவற்றுள்ளியலும்) அவற்றுக்குள்ளேவர்த்திக்கிற. (ஒத் தவித்யாதி) (ஒத்திருப்பதுமாய் - வியவாயிருப்பதுமான - ஒண்பல்பொ ருள்களுலப்பில்லனவாய்.) ஓராகாரத்தாலே யொத்தும், ஆகாராந்தரத் தாலே வேறுபட்டுமிருப்பனவுமாய், விலக்ஷணமுமான பலவகைப்பட்ட பதார்த்தங்களநேகங்களை யுடையையாய். தேவமநுஷ்யாதி ஜாதியாலே யொத்தும், வ்யக்திபேதத்தாலே வேறுபட்டும், சகலாத்மாக்களும்ஜ்ஞா நைகாகாரதயா ஒத்திருக்கச் செய்தேயும், அஹம்த்வமாதிபேதத்தாலே பிந்நராயிருப்பர்களிறே. (வித்தகத்தாய்நிற்றிநீ) இப்படி விஸ்மயநீயனாய்க் கொண்டு நில்லாநின்றாய் நீ.

(இவையென்னவிடமங்களே) இவையென்ன சேராச சேர்த்தி யான செயல்கள்தான்...*

ஜீயர் அரும்பதம்.

மூன்றாம்பாட்டு. (சித்திரத்தேரித்யாதி) " எத்தனையோருகமும் " என்று தொடங்கி, "உலப்பில்லனவாய்" என்னுமளவும் கடாக்ஷிந்தவதாரிகை (க்ருதத்ரே தாதீத்யாதி)

சப்தார்த்தம் (விசித்ரமாம்படியித்யாதி) தேரை நடத்துகையிலுண்டான வைசித்ரியை யிரண்டுவகையாக வருளிச்செய்கிறார் (வைசித்ரியாவதித்யாதிவாக்ய த்ரயத்தாலே) கையுமணியும் வகுத்து - யுத்தத்திலே வ்யூஹவிபாகம்பண்ணி. (கிட் டநிறுத்தியும்) என்றவநந்தரம், செய்தவிது என்றத்யாஹரிப்பது. "சித்திரத்தேர்வ லவா" என்றவநந்தரம் " திருச்சக்கரத்தாய் " என்கையாலே பலித்தவர்த்தம் (ப கலையிரவாக்குமித்யாதி) இதுவுமொரு வைசித்ரியென்று கருத்து.

" ஒத்து - வியவாயிருக்கிற - ஒண்பல்பொருள்களுலப்பில்லனவாய் " என்ற ந்வயித்தர்த்தம் (ஓராகாரத்தாலேயித்யாதி) " உலப்பில்லனவாய் " என்றதுக்கு-மு டிவின்றிக்கே அஸங்க்யாதமான வென்றர்த்தமாகையாலே (அநேகங்களையுடையை யாய்) என்கிறார். ஆக, ஒத்திருப்பதுமாய் - வியவாயிருப்பதுமாய் - உலப்பில்லன வான - ஒண்பல்பொருள்களை யுடையையாய்க்கொண்டு - வித்தகத்தாய் நிற்றிநீயெ ன்றபடி. விவரணம் (தேவமநுஷ்யாதீத்யாதி) அர்த்தாந்தரம் ('சகலாத்மாக்களு மித்யாதி)

விடமங்கள் - விஷமங்கள். விசித்ரங்களென்றபடி.

சித்திரத்தேர்வலவா, திருச்சக்கரத்தாய் - எத்தனையோருகமுமவையாயவற் றுள்ளியலும், ஒத்து - வியவாயிருக்கிற - ஒண்பல்பொருள்களுலப்பில்லனவாய்-வி த்தகத்தாய் நிற்றிநீ, இவையென்னவிடமங்கள் - அருளாயித்யந்வயঃ..............*

நான்காம்பாட்டு.

கள்ளவிழ்தாமரைக்கட்கண்ணனேயெனக்கொன்றருளா
யுள்ளதுமில்லதுமாயுலப்பில்லனவாய்வியவாய்
வெள்ளத்தடங்கடலுள்விடநாகணைமேன்மருவி
யுள்ளப்பல்யோகுசெய்தியிவையென்னவுபாயங்களே.

ஆறாயிரப்படி.

(கள்ளவிழ்) மதுஸ்யந்தியான தாமரைபோன்ற திருக்கண்களை யுடைய கண்ணனே எனக்கொன்றருளிச் செய்யவேணும். நித்யமாயிருக்கையாலே யுண்டென்றுசொல்லலாம் சேதநனும், பரிணமஸ்வபாவமாய்க்கொண்டு ப்ரதிக்ஷணமவஸ்த்தாந்தர பாக்காகையாலே யில்லையென்னலாம் ப்ரக்ருதியுமாய், வெள்ளத்தடங்கடலுள் விடநாகணைமேல் மருவி, திருவுள்ளத்தாலே பலரக்ஷணசிந்தைகளைப் பண்ணுகிற்றி, இவையென்னவிரகுக ளென்கிறார் ....*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், பரத்வ ஸௌலப்யரூபமான போக்யதை தோன்றும்படி புண்டரீகாக்ஷனை நீ, நித்யா நித்ய சமஸ்த பதார்த்தங்களையும் ப்ரகாரமாகவுடையையாய், அவற்றினுடைய ரக்ஷண சிந்தை பண்ணுகிற வுபாயமிருக்கிறபடி யென்னென்கிறார்.

கள் - மதுவை. அவிழ் - மலருகிற. தாமரை - செவ்வித்தாமரைப் பூப்போலேயிருக்கிற. கண் - திருக்கண்களையுடையனான. கண்ணனே - க்ருஷ்ணனே. எனக்கு, நீ நினைக்கிற ரக்ஷணோபாயங்களின்னதென்று, ஒன்று - ஒன்றை. அருளாய் - அருளிச்செய்யவேணும். உள்ளதும் - நித்யமாகையாலே யென்றுமுள்ளதாய். இல்லதுமாய் - அவஸ்த்தாந்தர பாக்காகையாலே யில்லாமையையுடைத்தாய். உலப்பில்லனவாய் - அசங்க்யாதமாய். வியவாய் - அவாந்தரமான வேறுபாட்டையுடைத்தாயிருக்கிற பதார்த்தங்களை ப்ரகாரமாகவுடையையாய். இந்தசகல சேதநாசேதநங்களையும் ரக்ஷிக்கைக்காக, வெள்ளம் - பூர்ணமாய். தடம் - இடமுடைத்தான. கடலுள் - க்ஷீரார்ணவத்திலே. விடம் விரோதிகளுக் கநபிபவநீயமாம்படி விஷத்தையுமிழுகிற. நாகணைமேல் - திருவநந்தாழ்வானாகிற படுக்கையிலே. மருவி - மேவி. உள்ளம் - திருவுள்ளத்திலே. பல் - பஹுவிதமான. யோகு - ரக்ஷணயோகங்களை. செய்தி - சிந்தியாநின்றாய். இவை - இவை. என்ன - என்ன. உபாயங்கள் - உபாயங்களாயிருக்கிறன.

அவதரணோபாயமோ, அநிஷ்டநிவ்ருத்த்யுபாயமோ, அபிமத ப்ரதாநோபாயமோ, ஆஶ்ரிதசம்ஶ்லேஷோபாயமோ, ஆவர்ஜநோபாயமோ வென்றறிகிறிலேன்; ஒன்றை நிஷ்கர்ஷித்தருளிச்செய்யவேணுமென்று கருத்து.

யோகு-உபாயம்...*

ஈடு - நான்காம்பாட்டு.

லோகத்தில் நித்யாநித்ய பதார்த்தங்களை விபூதியாகவுடையனாயிருக்கிறபடியை யருளிச்செய்கிறார்

(கள்ளவிழ்த்யாதி) அப்போதலர்ந்த தாமரைப்பூப்போலேயிருக்கிற திருக்கண்களையுடையனாய் பவ்யனாயிருக்கிறவனே. அவனுடைய தி

ருக்கண்கள்போலே யாயிற்றிவர்க்கு விபூதியுமாகர்ஷகமா யிருக்கிறபடி. அன்றிக்கே, திருக்கண்களோபாதி பாதகமாகாநின்ற தாயிற்று விபூத்யநுபவமுமிவர்க்கு. பாதகமாகையாவதென்னென்னில்; "இன்னது" என்று நிஷ்கர்ஷிக்கமாட்டாதே சம்சயித்துப்பட்ட தொரு க்லேசமுண்டிறே, அதுவும் பாதகமாயிருக்குமிறே. "கீழ்த்திருவாய்மொழியிலே — 'சூழவுந்தாமரை நாண்மலர்போல்வந்து தோன்றும்' என்றத்தை ஸ்மரிக்கிறார்" என்றுபிள்ளான் பணிக்கும். அத்தைஜீயர்கேட்டருளி, "கீழோடுகிறரீதியின்படியே யிதுவுமாகப்பெற்றதாகிலழகிது, அங்ஙனன்றிக்கே, இதுரசாந்தரமா யறிவுண்டானபின்பு ப்ரகரணத்தோடு பொருந்தமாட்டாது" என்றருளிச்செய்தாராம்.

(உள்ளதுமித்யாதி) உலப்பில்லனவாய்க்கொண்டு உள்ளதுமாய், வியவாய்க்கொண்டு இல்லதுமா யிருந்துள்ள சேதநாசேதநங்களுக்கு நிர்வாஹகனும். "यत्तु कालान्तरेणापि नान्यसंज्ञामुपैति वै । परिणामादिसम्भूतां तद्वस्तु नृप तच्च किम्" (யத்துகாலாந்தரேணாபி நாந்யஸம்ஜ்ஞாமுபைதிவை । பரிணாமாதி ஸம்பூதாம் தத்வஸ்து ந்ருபதச்சகிம்) என்கிறபடியே, அசித்து நஶ்வரமா யிருக்கையாலே யில்லதென்றுசொல்லலாயிருக்கும்; ஆத்மவஸ்து ஏகரூபமாயிருக்கையாலே உள்ளதென்கிறது. (வெள்ளத்தடங்கடலுளித்யாதி) திருப்பாற்கடலிலே, ப்ரதிகூலர்க்குக் கிட்டவொண்ணாதபடி விஷத்தை யுமிழாநின்றுள்ள திருவநந்தாழ்வான்மேலே பொருந்தி. "ஆங்காரவாரமது கேட்டழலுமிழும் - பூங்காரரவணையான்" என்கிறபடியே, அஸ்த்தானே பயஶங்கைபண்ணி யழலுமிழுமவனிறே. (உள்ளப்பல்யோகுசெய்தி) திருவுள்ளத்திலே பலரக்ஷண சிந்தைபண்ணாநிற்றி. சேதநபேதத்தோபாதியும் போருமாயிற்று அவன் பண்ணும் ரக்ஷணசிந்தையில் பரப்பு. இப்போதிது கீழோடும் மேலோடுமந்வயிக்கிறபடி யென்னென்னில்; அசித்தாவது நஶ்வரமாய்க்கொண்டு த்யாஜ்யமாயிருக்கும், ஆத்மவஸ்து ஏகரூபமாய்க்கொண் டுபாதேயமாயிருக்கும், இவையிரண்டுக்கும் நியந்தாவாயிருக்கு மீஶ்வரன். "இச்சேதநன்றானும், தான் பண்ணிற்றொரு கர்மமும் 'தனக்கு' என்னவொரு ருசியுமாயிருக்கையாலே, இவன், 'தனக்கு' என்னவோரிச்சைபிறக்கிலல்லது நம்மைப்பெற விரகற்றிருந்தது; இவனுக்கோ அதில்லையாயிராநின்றது; இனிச்செய்யும்படியென்" என்று, இவன், "இங்ஙின்றநீர்மையினியாமுறாமை" என்றால்செய்யுமத்தை, இவன்றலையிலிசைவின்றிக்கே யிருக்கசெய்தே, "இவன்நம்மைவந்து கிட்டினும் விரகேதோ" என்று, அதுக்குறுப்பாக வுபாயசிந்தைபண்ணிக்கண்வளர்ந்தருளுகிறபடி.

(இவையென்னவுபாயங்களே) சேதநர் பலரா யவ்வவர்களுடைய ரக்ஷணங்களும் பலவாயிறேயிருப்பது; அதுக்கீடான வுபாயமு மறியமே சர்வஜ்ஞனாகையாலே. இவையென்னவிரகுகளே.....................

ஜீயர் அரும்பதம்.

நாலாம்பாட்டு (கள்ளவிழித்யாதி) "உள்ளதுமில்லதுமாய்" என்றத்தை க்கடாக்ஷித்தவதாரிகை (லோகத்திலித்யாதி)

விபூதியையநுசந்திக்கிற விடத்திலே கண்ணழகைச் சொல்லுவானென்னென்ன (அவனுடைய வித்யாதி) பரிஹாராந்தரம் (அன்றிக்கேதிருக்கண்களித்யாதி) விஶ்லேஷ வேளையிலேயன்றோ விபூத்யநுபவம் பாதகமாயிருப்பது, இப்போதுபாதகமாகிறபடி யென்னென்கிற சங்கையையநுவதித்து பரிஹரிக்கிறார் (பாதகமாகையாவதித்யாதி வாக்யத்வயத்தாலே) அதாவது - "முடிச்சோதியாய்" இத்யாதிப்படியே சந்தேஹமாய்க்கொண்டு பாதகமாகிறதென்றுகருத்து, சம்ஶயித்துப்பட்டதொரு க்லேஶமென்றது - * முடிச்சோதிப்படியே சம்சயித்துப்பட்டதொரு க்லேஶமென்றபடி. பிள்ளான்நிர்வாஹம் (கீழிலித்யாதி) இதுக்கு நஞ்ஜீயரருளிச்செய்யும்படியை யருளிச்செய்கிறார் (அத்தையித்யாதி)

"உலப்பில்லன-" நாசமின்றிக்கேயிருக்கிற. நித்யமானவென்றபடி. கீழிற்பாட்டிலே, "உலப்பிலனவாய்" என்றது-அசங்க்யாதமாயென்றபடி. "வியவாய்" என்றது-வீயவாயென்றபடியாய், நஶ்வரமாயென்றபடி.

சேதநாசேதநங்களை "உள்ளதுமில்லதுமாய்" என்கிறது-ஏகரூபத்வத்தையும், பரிணாமித்வத்தையும்பற்ற. இத்தை ப்ரமாணமுகேந தர்ஶிப்பிக்கிறார் (யத்துகாலாந்தரேணேத்யாதி) த்விதியேம்ஶே த்ரயோதஶே ஶௌநகீராராம்ப்ராதி ஆஹ பராஶரஃ, "யத்து காலாந்தரேணாபி நாந்யஸம்ஜ்ஞாமுபைதி வை । பரிணாமாதிஸம்பூதாம் தத்வஸ்து ந்ருப தச்ச கிம்." (யத்துகாலாந்தரேணாபிநாந்யஸம்ஜ்ஞாமுபைதிவை । பரிணாமாதி ஸம்பூதாம்தத்வஸ்துந்ருபதச்சகிம்.)

அப்படிவிஷத்தை யுமிழுமவனோவென்ன (ஆங்காரவாரமித்யாதி)

"பல்யோகு" என்றதுக்குபாவம் (சேதநபேதத்தித்யாதி) கீழும்மேலும் விபூதியோகத்தைச் சொல்லாநிற்க, நடுவேயுபாயசிந்தையைச் சொல்லுவானென்னென்ன; சேதநாசேதநப்ரசங்கத்திலே உபாயசிந்தை ப்ராசங்கிகமாக வந்ததென்கிறார் (இப்போதித்யாதி, கண்வளர்ந்தருளுகிறபடி யென்றுமளவாலே) உள்ளத்திலே பலவுபாயசிந்தை பண்ணுவதியென்று சப்தார்த்தம்.

பஹுவசநார்த்தம் (சேதநரித்யாதி)

கள்ளவிழ்தாமரைக்கட்கண்ணனே - உலப்பில்லனவாய்க்கொண்டு - உள்ளதுமாய் - வியவாய்க்கொண்டு - இல்லதுமாய் - வெள்ளத்தடங்கடலுள் ளென்றுதொடங்கி, உபாயங்களே - எனக்கொன்றருளாய் இத்யந்வயஃ ....*

ஐந்தாம்பாட்டு.

பாசங்கணீக்கியென்னையுனக்கேயறக்கொண்டிட்டுநீ
வாசமலர்த்தண்டுழாய்முடிமாயவனேயருளாய்
காயமுஞ்சீவனுமாய்க்கழிவாய்ப்பிறப்பாய்ப்பின்னுநீ
மாயங்கள்செய்துவைத்தியிவையென்னமயக்குக்களே.

ஆறாயிரப்படி.

(பாசங்கணீக்கி) ஸௌஜாதபரிமளதுளஸீதள பூஷிதமான திருமுடி யையுடையையாய், அத்யாஸ்சர்யபூதனானநீ, ப்ராக்ருதவிஷய ப்ராவண்யத்தைத்தவிர்த்து த்வதேகதாரகனும்படி யென்னைப்பண்ணிவைத்து, பின்னையு மிப்ப்ரக்ருதியிலேயிட்டுவைக்கிற வாஸ்சர்யத்தை யருளிச்செய்ய வேணும். சரீரஜீவஜந்மமரணாதி நிர்வாஹகனாய், அவித்யாதிகளாகிற வஞ்சநங்களைப்பண்ணி வையாநின்றாய்; இவையென்ன துர்ஜ்ஞேய ப்ரவ்ருத்திகளென்கிறார்...*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், என்னை யநந்யப்ரயோஜநனும்படிபண்ணு மதிசயிதபோக்யதையையுடையநீ, சரீராத்மாக்களுடைய சம்பந்தமும் உத்பத்திவிநாசமும் நீயிட்டவழக்காயிருக்க, அதிலே யகப்படுத்திவைக்கிற ப்ரகாரங்களென்ன ப்ரமங்களாயிருக்கின்றனவென்கிறார்.

என்னை - த்வதேகசேஷமாய் த்வதேகரக்ஷ்யமான ஸ்வரூபத்தையுடையவென்னை. பாசங்கள் - அநநுரூபவிஷயஸங்கங்களை. நீக்கி-கழித்து. "தனக்கேயாகவெனைக்கொள்ளுமீதே" என்னும்படி, உனக்கேயற-த்வதேகப்ரயோஜநனாக. கொண்டிட்டு-அங்கீகரித்துவைத்து. வாசம்-அந்த அநந்யப்ரயோஜநத்வாபாதகமாய் பரிமளப்ரசுரமான. மலர்-பூவையுடைய. தண்டுழாய் - செவ்வித்திருத்துழாயாலே யலங்க்ருதமான. முடி-மயிர்முடியையுடைய. மாயவனே - ஆஸ்சர்யபோக்யபூதனே. நீ-ரக்ஷகனுமாய் போக்யனுமானநீ. காயமும்-பந்தகஸரீரமும். சீவனும் - பத்தஜீவனும். கழிவுபிறப்பு - இவற்றுக்குவரக்கடவதான விநாசோத்பத்திகளும். ஆய்-நீயிட்டவழக்காம்படியாயிருக்க. பின்னும்-பின்னையும். நீ, சரீராதிகளிலே சக்தனும்படி, மாயங்கள் - அவித்யாகர்மவாஸநாருசிகளாகிற வஞ்சநங்களை, செய்து - பண்ணி. வைத்திவையாநின்றாய். இவை-இவை. என்ன-என்ன. மயக்குக்கள்-ப்ராமகவ்யாபாரங்களாயிருக்கிறன. அருளாய் - அருளிச்செய்யவேணும்.....................................*

ஈடு - ஐந்தாம்பாட்டு.

இத்திருவாய்மொழிக்கு நிதாநமான பாட்டாயிற்றிது. அதாவது- * மயர்வறமதிநலமருளி, பின்னையும் எனக்குப்பொருந்தாதபடியான சம்சாரத்திலே யென்னைவைத்து ஜீவிப்பித்துக் கொடுபோருகிற விவ்வாஸ்சர்ய மிருந்தபடியை யெனக்கருளிச்செய்யவேணுமென்கிறார்.

(பாசங்கள்நீக்கி) மயர்வையறுத்து. அவித்யாதிகளைப்போக்கி. * பலசெய்வினைவன்கயிற்றால் சூழ்த்துக்கொண்டத்தைநீக்கி. (என்னை) விஷயாந்தரங்களிலே கால்தாழ்ந்திருக்கிறவென்னை. (உனக்கேயறக்கொண்டிட்டு) * துயரறுசுடரடிதொழும்படியாகப்பண்ணி. பாசங்கள்நீக்கிற்றும் தனக்கேயறக்கொண்டது மெத்தைக்காட்டியென்னில் (வாசமலர்த்யாதி) வைத்தவளையத்தி லழகைக்காட்டியாயிற்று, புறம்புண்டான பற்றறுத்ததும், தனக்கேயாம்படியாகப்பண்ணிற்றும். (பரிமளத்தையுடைத்தாய் மலரோடேகூடின ஸ்ரமஹாரமான திருத்துழாய்மாலையைத் திரு

டியிலேயுடைய வாஸ்சர்ய சௌந்தர்யயுக்தனே. (அருளாய்) இவ்வளவு புகுராநின்ற வென்னையிங்கேயிட்டுவைத்து நலியவோ.) (காயமித்யாதி) சரீரமும் ஆத்மாவுமாய், உத்பத்திவிநாசங்களுமாய். (பின்னுமித்யாதி) உன்பக்கலிலே யறிவைப்பிறப்பித்து, பின்னையுமிதில் பொருந்தாதபடியான வென்னை சம்சாரத்திலே வையாநின்றாய். (இவையென்னமயக்குக்களே) இவையென்ன தெரியாச்செயல்கள்தாம். புறம்புண்டானபற்றையறுத் துன்பக்கலிலே சங்கத்தைப் பிறப்பிக்கையாலே நீ யங்கீகரித்தாயோவென்றிராநின்றேன், பின்னையு மிஸ்ஸம்ஸாரத்திலே வைக்கையாலே கைவிடநினைத்தாயோ வென்றிராநின்றேன், இதென்னப்ரமம் …………… …*

ஜீயர் அரும்பதம்.

அஞ்சாம்பாட்டு (பாசங்களித்யாதி) ஆஸ்சர்ய ஜகதாகாரதையை யநுபவிப்பிக்கைக்கு ப்ரசங்கம் சொல்லுகிறதாகையாலே யிது நிதாநப்பாட்டென்கிறார் (இத்திருவாய்மொழிக்கித்யாதி) விவரணம் (அதாவதித்யாதி)

பலித்தவர்த்தம் (மயர்வையறுத்தென்று) பஹுவசநார்த்தம் (அவித்யாதிகளையித்யாதி) இவைபாசங்களோவென்ன (பலசெய்வினையித்யாதி) "உனக்கேயறக்கொண்டிட்டு" என்றதுக்கு - உனக்கே யநந்யார்ஹனாய் கைங்கர்யத்திலே யத்யவஸிதனாம்படி பண்ணியென்று சப்தார்த்தமாகையாலே, அத்தையருளிச்செய்கிறார் (துயரறுவித்யாதி)

கழிவு - விநாசம்.

விவரணம் (புறம்புண்டானவித்யாதி)

காயமும் சீவனுமாய்க்கழிவாய்ப்பிறப்பாயிருக்கிற-வாசமலர்த்தண்டுழாய்முடிமாயவனே-நீ-பாசங்கள்நீக்கியென்னை யுனக்கேயறக்கொண்டிட்டுநீ-பின்னும்-மாயங்கள்செய்துவைத்தி, இவையென்ன மயக்குக்கள் - அருளாயித்யந்வய: ………*

ஆறாம்பாட்டு.

மயக்காவாமனனேமதியாம்வண்ணமொன்றருளா
யயர்ப்பாய்த்தேற்றமுமாயழலாய்க்குளிராய்வியவாய்
வியப்பாய்வென்றிகளாய்வினையாய்ப்பயனாய்ப்பின்னுநீ
துயக்காநீநின்றவாறிவையென்னதுயரங்களே.

ஆறாயிரப்படி.

(மயக்காவாமனனே) ஸ்ரீவாமநனான வழகாலே பிச்சேற்றி, நினைத்தது முடித்துக்கொள்ளவல்ல விரகனான நீ, தெளிவுடையேனாம்படியொன்று பண்ணியருளாய். அஜ்ஞாநஜ்ஞாநோஷ்ண சீதவிஸ்மயநீய விஸ்மயஜய பாவபுண்ய தத்பல நிர்வாஹகனாய். அதுக்குமேலே, அந்யதாஜ்ஞாநாதிஜநகனாய் நீ நின்ற ப்ரகாரமென்ன துக்காத்மகங்களென்கிறார்….*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், ப்ராமகசேஷ்டிதங்களையுடைய வாமநனானநீ, விஸ்ம்ருத்யாதிவி சித்ரனாய்க்கொண்டு பண்ணுகிற க்லேசங்க ளென்னாயிருக்கிறனவென்கிறார்.

மயக்கா-வடிவாலும் நடையாலும் உக்தியாலும் மஹாபலியினுடையநெஞ்சு ப்ரமிக்கும்படி பண்ணின. வாமனனே-வாமநனே. மதியாம்வண்ணம்-எனக்குக்கல க்கந்தீர்ந்து அறிவுண்டாம்படி. ஒன்று, அருளாய்-அருளிச்செய்யவேணும். அயர்ப்பு-மறப்பும். தேற்றமும்-தெளிவும். ஆய்-நீயிட்டவழக்காய். அழல்-தாபமும். குளிர்-சைத்யமும். ஆய்-நீயிட்டவழக்காய். வியவு-விஸ்மயநீயமும். வியப்பு - விஸ்மயமும். ஆய்-நீயிட்டவழக்காய். வென்றிகள்-லோகத்தில் விஜயஸித்திகளும். ஆய்-நீயிட்டவழக்காய். வினை-புண்யபாபரூபகர்மங்களும். பயன்-தத்தத்பலங்களும். ஆய்-நீயிட்டவழக்காய். பின்னும்-அதுக்குமேலே. துயக்கு-இவற்றிலே சேதநர் கலங்குகிறகல க்கமும். நீயாய்-நீயிட்டவழக்காய். நீ, நின்ற-இம்முகத்தாலே லீலாரஸிகனாய்க்கொண்டுநிற்கிற. ஆறு-ப்ரகாரங்களான. இவை-இவை. ஜகத்துக்கு, என்ன-என்ன. துயரங்கள்-க்லேஶங்களாயிருக்கிறன.

வியவு-வியக்கப்பட்டன. வியப்பு-விஸ்மயமாயிருந்தவையும், மிகுதலுமாம்.*

ஈடு - ஆறும்பாட்டு.

விஸ்மரணாதிவிருத்தபதார்த்தங்களை விபூதியாகவுடையனாயிருக்கிறபடியை யருளிச்செய்கிறார்.

(மயக்கா) இன்றொன்றின்றிக்கே, ஆரேனுமாகக் கிட்டினாரை ம யங்கப்பண்ணுமவனே. அதெங்கேகண்டோமென்னில் (வாமனனே) தே வகார்யம் செய்யப்போந்தநீ, அந்ததேவர்களை நெருக்கின மஹாபலிதா னே நெஞ்சுநெகிழ்ந்துன்கையிலே நீரைவார்த்துத்தானே இசைந்துதரு ம்படி மயங்கப்பண்ணினவனே. " மன்னைமனங்கொள்ளவஞ்சித்து நெஞ் சுருக்கி " என்கிறபடியே. (மதியாமித்யாதி) அநுகூல ப்ரதிகூல விபா மற மயங்கப்பண்ணாதே, நான் தெளிவையுடையேனாம்படிபண்ணியருள வேணும். (அயர்ப்பாய்த் தேற்றமுமாய்) " [Grantha] ” (மத்தஸ்ஸ்ம்ருதிர்ஜ்ஞாநமபோஹநஞ்ச) என்றானிறேதானே. ஸ்ம்ருதியும் தெளிவுமாய். இவ்விடத்தில் விருத்தாகாரத்தைச்சொல்லு றதல்ல, விசித்ராகாரத்தைச்சொல்லுகிறது. (அழலாய்க்குளிராய்) தோஷ்ணங்களாய். (வியவாய் வியப்பாய்) விஸ்மய விஸ்மயநீயங்களா (வென்றிகளாய்) விஜயங்களாய். (வினையாய்ப்பயனாய்) புண்யபாபகர் களாய், அவற்றினுடைய பலங்களுமாய். (பின்னும் நீதுயக்கா) அதுக் மேலே, உன்னையாப்ரயித்தாரும் மதிகலங்கும்படி, அந்யதாஜ்ஞாந ரீதஜ்ஞாநங்களைப்பண்ணு. (நீநின்றவாறு) நீநின்றப்ரகாரம். (இவை ன்னதுயரங்களே) உனக்கிவைதம்மி லருமையின்றிக்கே லீலையாயிரு ன்றது, எங்களுக்கவைதாம் துஃகாத்மகமாயிராநின்றன ....

ஜீயர் அரும்பதம்.

ஆறாம்பாட்டு (மயக்காவித்யாதி) "அயர்ப்பாய்த்தேற்றமுமாய்" என்றத்தைக்கடாக்ஷித்தவதாரிகை (விஸ்மரணாதித்யாதி)

ப்ரதியோகியைச்சொல்லாமைக்குபாவம் (இன்றாரித்யாதி) மஹாபலியை மயக்கப்பண்ணினானோவென்ன, ப்ரமாணம் (மன்னைமனங்கொள்ளவித்யாதி) பெரியதிருமடல். ராஜாவானமஹாபலியை மனங்கொள்ளும்படியாக வஞ்சித்து நெஞ்சையுருக்கியென்றபடி. " மதியாம்வண்ணம் -" தெளிவுடையேனும்படி.

மறப்பும் தெளிவு மவனாகக்கூடுமோவென்ன, அதுக்குப்ரமாணம் (மத்தஸ்ஸ்ம்ருதிரித்யாதி) " 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌚𑌾𑌹𑌂 𑌹𑍃𑌦𑌿 𑌸𑌨𑍍𑌨𑌿𑌵𑌿𑌷𑍍𑌟𑍋 𑌮𑌤𑍍𑌤𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌰𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌪𑍋𑌹𑌨𑌂 𑌚 । 𑌵𑍇𑌦𑍈𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑍈𑌃 " (ஸர்வஸ்யசாஹம்ஹ்ருதிஸந்நிவிஷ்டோமத்தஸ்ஸ்ம்ருதிர்ஜ்ஞாநமபோஹநஞ்ச । வேதைஶ்சஸர்வை:) இத்யாதிகீதாஸூபஞ்சதமே. * நல்குரவிலர்த்தம்போலே யிருக்கையாலே, அத்தை பரிஹரிக்கிறார் (இவ்விடத்திலித்யாதி) பண்ணா-பண்ணியென்றபடி.

"இதென்னதுஃகம்" என்றத்தால்பலிதம் (உனக்கிவை யித்யாதி)

மயக்காவாமனனே - அயர்ப்பாயென்றுதொடங்கி, இவையென்னதுயரங்களே - மதியாம் வண்ணமொன்றருளா யித்யந்வய: ....*

ஏழாம்பாட்டு.

துயரங்கள்செய்யுங்கண்ணாசுடர்நீண்முடியாயருளாய்
துயரஞ்செய்மானங்களாய்மதனாகியுகவைகளாய்த்
துயரஞ்செய்காமங்களாய்த்துலையாய்நிலையாய்நடையாய்த்
துயரங்கள்செய்துவைத்தியிவையென்னசுண்டாயங்களே.

ஆறாயிரப்படி.

(துயரங்கள்செய்யுங்கண்ணாசுடர்நீண்முடியாயருளாய்) உன்னுடையதிருவபிஷேகத்தி லழகாலே நலியுங்க்ருஷ்ணனே, அப்படியே விபூதியினுடைய வாஶ்சர்யத்தாலேயும் நலிவுபடாமே தெளிவிக்கவேணும். துஃகஹேதுவான வபிமாநம், அத்தாலேவந்தமதம், உகப்பு, துஃககரமானகாமம், பரிமாணம், ஸ்த்திதிகமநங்கள், ஏவம்ரூபமாய் துஃகாத்மகமான வ்யாபாரங்களைப் பண்ணிவைத்தாய், இவையென்ன விளையாட்டுக்களென்கிறார் ....*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், கர்மாநுரூபதுஃகங்களைப்பண்ணும் ஸ்வாமியானநீ, அந்ததுஃகஹேதுவான தர்மாநாதிகளை விபூதியாகவுடையையாய் சேதநரை துஃகிப்பியாநின்றாய், இவையென்ன லீலார்த்த ஸ்வார்த்த ப்ரவ்ருத்திகளென்கிறார்.

துயரங்கள் - கர்மாநுரூபமான துஃகங்களை. செய்யும் - பண்ணுமிடத்தில். கண்ணா - அவதாரதசையோடு. சுடர்நீண்முடியாய் - பரதசையோடு வாசியறநடத்

துமவனே. துயரஞ்செய்-து:கஹேதுபூதமாயிருக்கிற. மானங்களாய்-அபிஜநாதிநி பந்தந தர்மாநங்களாய். மதஞகி - "ஸமெதஜஷாஃ" (ஏதேமதாঃ) என்கிறபடி யே யவையடியாகவரும் செருக்கும். உகவைகளாய்-அத்தால்வந்த ப்ரீதிகளுமாய். துயரம் - அபிநிவேசாதிதுঃகங்களை. செய்-விளைக்கக்கடவ. காமங்களாய் - பதார்த்த த்ருஷ்ணுருபகாமங்களாய். தலையாய்-அந்தபதார்த்தங்களினுடைய தாரதம்யபா தக பரிமாணமாய். நிலையாய் நடையாய் - அவற்றினுடையஸ்த்திதிகமநங்களுமாய். இப்படி, சேதநர்க்கு, துயரங்கள்-துঃகங்களை. செய்து-பண்ணி. வைத்தி - வைப்புதி. இவை-இவை. என்ன-என்ன. சுண்டாயங்கள்-பரதுக்கம்பாராத ஸ்வார்த்தப்ரவ்ரு த்திகள். அருளாய்-அருளிச்செய்யவேணும்.

சுண்டாயம் - ஸ்வார்த்தப்ரவ்ருத்தி..*

ஈடு - ஏழாம்பாட்டு.

து:கஹேதுவான வபிமாநந்தொடக்கமான விசித்ரபதார்த்தங்க ளை விபூதியாகவுடையனுயிருக்கிறபடியை யருளிச்செய்கிருர். ·

(துயரங்களித்யாதி) துঃகங்களைப்பண்ணக்கடவக்ருஷ்ணனே. (எ த்தாலேநலிவதென்னில்; *முடிச்சோதியிற்படியே திருவபிஷேகத்திலழ கைக்காட்டியாயிற்று) (சுடர்நீண்முடியாய்) தர்ஸநீயமாய் உபயவிபூதிக் கும் சூடினமுடி.) விபூத்யநுசந்தாநமும் திருவபிஷேகத்தோபாதி பாத கமாகாநின்றதாயிற்று. "'முற்றவிம்மூவுலகும் விரிகின்றசுடர்முடிக்கே யொற்றுமைக்கொண்டது' என்றது பின்னுட்டுகிறது" என்று பிள்ளா ன். அவனைக்கேட்டறியவேண்டுகையாலே பாதகமாயிறே. (துயரம்செயி த்யாதி) "ஊாஸொஹஃ" (தாஸோஹம்) என்கிற வபிமாநமடிக்கழஞ்சு பெற்றிருக்கும். அங்ஙனன்றிக்கே, "ஸொஹஃ" (ஸோஹம்) என்று துঃக த்தைப்பண்ணு மபிமாநங்களாய். (மதனித்யாதி) களிப்பும், அதுக்கடியா ன வுகவையுமாய், "ஸஜாத்ஸஂஜாயதெகாமঃ - பு-தி நாஸாத்ஃணஸ்ரதி" (ஸங்காத்ஸம்ஜாயதேகாமঃ – புத்திநாஸாத்ப்ரணஸ்யதி) என்கிறபடியே விநாஸபர்யந்தமான காமங்களாய். அங்ஙனன்றே பகவத்காமம். (தலை யாய்) ப்ரமாணமாய். நிறுக்குமதாய். (நிலையாய் நடையாய்) ஸ்த்தாவ ஜங்கமங்களைச்சொல்லுதல், ஸ்த்திதிகமநங்களைச்சொல்லுதல். இப்ப துঃகங்களைப்பண்ணுவியாநின்ருய். (இவையென்னசுண்டாயங்களே) உ க்கு லீலையாயிராநின்றது, எங்களுக்கு க்லேஸாவஹமாயிராநின்றது...

ஜீயர் அரும்பதம்.

ஏழாம்பாட்டு (துயரமித்யாதி) "துயரம்செய்மானங்களாய்" இத்யாதியை கடாக்ஷித்தவதாரிகை (துঃகஹேதுவானவித்யாதி)

விபூதியையநுசந்திக்கிறவிடத்திலே திருவபிஷேகத்தைச்சொன்னதுக்கு வம் (விபூதீத்யாதி) திருவபிஷேகத்தோபாதியென்றது - "நிற்றிமுற்றத்துள்" ன்கிறபாட்டைப்பற்ற. விபூத்யநுசந்தாநமும் திருவபிஷேகமும் பாதகமாகை ஹேதுவேதென்ன (அவனையித்யாதி) *முடிச்சோதிப்படியே யவனைக்கேட்ட வேண்டுகையாலே யென்றபடி.

துயரம்செய்யாத மானமுமுண்டோ, இப்படிவிசேஷிக்கிற தென்னென்ன (தாசோஹமித்யாதி வாக்யத்வயத்தாலே) மதன் - களிப்பு. கர்வமித்யர்த்தஃ. உக வை-சந்தோஷம். துயரம்செய்யாத காமமுண்டோவென்ன (அங்ஙனன்றேபகவத் காமமென்று) "துலே" என்றால் ப்ரமாணத்தைக்காட்டுமோவென்ன (நிறக்குமதா ய்) என்கிறார். "நிலையாய்" இத்யாதி - தர்மிபரமாதல், தர்மபரமாதலென்று விவக்ஷித்தர்த்தம் (ஸத்தாவரோத்யாதி வாக்யத்வயம)

"என்னசுண்டாயங்கள்" என்று விசேஷித்ததுக்குபாவம் (உனக்குலீலே யித்யாதிவாக்யத்வயம்) சுண்டாயம்-லீலையும், ஸ்வார்த்தப்ரவ்ருத்தியும்.

துயரங்கள்செய்யுங்கண்ணா, சுடர்நீண்முடியாய் - துயரம்செய்மானங்களா யென்றுதொடங்கி, என்னசுண்டாயங்கள் - அருளாயித்யர்வயஃ............ ...*

எட்டாம்பாட்டு.

என்னசுண்டாயங்களானின்றிட்டாயென்னையாளுங்கண்ணா
வின்னதோர்தன்மையையென்றுன்னையாவர்க்குந்தேற்றரியை
முன்னியமூவுலகுமவையாயவற்றைப்படைத்துப்
பின்னுமுள்ளாய்ப்புறத்தாயிவையென்னவியற்கைகளே.

ஆறாயிரப்படி.

(என்னசுண்டாயங்கள்) என்னலீலாயுக்தனாய் நிற்கின்றாய் என் னையடிமைகொள்ளுகிற க்ருஷ்ணனே. இன்னதொரு ஸ்வபாவமென்று ஜ்ஞாநாதிகருக்கு மறியவொண்ணாத நீ, பழையதான மூவுலகுக்குங்கட வையாய் அவற்றை ஸ்ருஷ்டித்து, பின்னையுமந்தர்ப்பஹிப்ரச வ்யாபித்து நின்றாய், இவையென்னவாப்ரசாய மென்கிறார்..............................*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், அதிசயிதஜ்ஞாநர்க்கு மவபோதிக்கைக் கரியையாய்க்கொண்டு சகலஜகத்துக்கும் ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணுகின்றாய், இவையென்ன செய்திக ளாயிருக்கிறதென்கிறார்.

என்னசுண்டாயங்களால்-ஸ்வார்த்தமாயுள்ள வென்ன லீலாவ்யாபாரங்க ளாலே, எங்ஙனே, என்ன ப்ரகாரத்திலே. நின்றிட்டாய் - நின்றாய். என்கண்ணா- எனக்கு பவ்யனான க்ருஷ்ணனே. இன்னதோர் - இன்னபடிப்பட்ட. தன்மையை - ஸ்வபாவத்தையுடையை. என்று - என்று. உன்னை - அபரிச்சிந்ந ஸ்வபாவனானவுன் னை. யாவர்க்கும் - அதிசயித ஜ்ஞாநராயிருப்பார்க்கும். தேற்ற - நிர்ணயித்துக்காட் ட. அரியை - அரியையாயிருப்புதி. முன்னிய - ப்ரவாஹாநாதியாயிருப்பதாய். மூ வுலகும் - க்ருதகாதிபேதத்தையுடைத்தான மூன்றுலோகத்தையும். அவையாய்-த தாத்மகனாய். அவற்றை - அவற்றை. படைத்து - ஸ்ருஷ்டித்து. பின்னும் - அதுக்கு மேலே. உள் - அநுப்ரவேஶ நிபந்தநமான அந்தர்வ்யாப்தியையும். புறம் - ஆதார த்வநிபந்தநமான பஹிர்வ்யாப்தியையும். ஆய்-உடையை யாகாநின்றாய். இவை-இ வை. என்ன - என்ன. இயற்கைகள் - ஸ்வாபாவிக வ்ருத்திகளாயிருக்கிறன........*

௯டு - எட்டாம்பாட்டு.

சகலஜகத்தையும் ஸ்ருஷ்டித்து அந்தர்ப்பஹிப்ˆச வ்யாபித்து இப்படி நிர்வஹித்துவைத்து துர்ஜ்ஞேயனுயிருக்கிற விதென்ன வாஸ்ˆச ர்யமென்கிருர்.

(என்னவித்யாதி) என்னலீலைகளையுடையையாய் நிற்கிருய் என்னை யடிமைகொள்ளுகிற க்ருஷ்ணனே.

(இன்னதோரித்யாதி) இன்னபடிப்பட்ட ஸ்வபாவத்தையுடையையென்று, சர்வகாரணபூதனுன வுன்னை, எத்தனையேனுமதிசயித ஜ்ஞாநரானவர்களாலு மறியவொண்ணுதபடி நிற்புதி. " ஸ்ரஹ்மாஸி நவெத்த்ய ஸம்ப்ரயத்நத꞉ " (ப்ரஹ்மாபிநவேத்த்யஸம்ப்ரயத்நத꞉) என்கிறபடியே.

(முன்னியமூவுலகுமவையாய்) ப்ரவாஹரூபத்தாலே பழையதாய்ப் போருகிற மூவுலகுக்கும் கடவையாய். த்ரிவிதசேதநரென்னுதல், த்ரைலோக்யமென்னுதல். (அவற்றைப்படைத்து) விபூதியானபோது, அவற்றையுண்டாக்கியென்கிறது; சேதநரானபோது, அவர்களுக்கு ஜ்ஞாநவிகாசத்தை யுண்டாக்கி யென்கிறது. (பின்னுமுள்ளாய்புறத்தாய்) * அந்தர்ப்பஹிப்ˆச வ்யாபித்திருக்கிறவனே. (இவை யென்னவியற்கைகளே) உனக்கிவைதான் லீலையாயிராநின்றது, எங்களுக்கிவைதாஞ்ஸ்ˆச ர்யமா யிராநின்றது..*

ஜீயர் அரும்பதம்.

எட்டாம்பாட்டு (என்னசுண்டாயங்களித்யாதி) " அவற்றைப்படைத்துப் பின்னுமுள்ளாய் - இன்னதோர் தன்மையையென்றுன்னை யாவர்க்கும் தேற்றரியை - என்னவியற்கைகளே " என்றபதங்களைக் கடாக்ஷித்தவதாரிகை (ஸகலஜகத்தையுமித்யாதி)

சுண்டாயம் - லீலை.

தேற்றரியை - தெளிகைக்கு சக்யநல்லாதவனே. அறியவொண்ணுமைக்கு ப்ரமாணம் (ப்ரஹ்மாபீத்யாதி)

" முன்னிய " என்றது - ப்ரவாஹரூபேண நித்யமாயென்றபடி. ஸப்தார்த்தம் (ப்ரவாஹரூபத்தாலே யித்யாதி)

இயற்கை - செய்தி. அதாவது - வ்யாபாரம்.

முன்னியவென்று தொடங்கி, புறத்தாய் - என்ன சுண்டாயங்களால் நின்றிட்டா யென்னையாளும் கண்ணு, இன்னதோர் தன்மையை யென்றுன்னை யாவர்க்கும் தேற்றரியை - இவையென்ன வியற்கைகளே யித்யந்வய꞉. " தேற்றரியை " என்றது - தேற்றரியனுய் நிற்புதி யென்றபடி..................................*

ஒன்பதாம்பாட்டு.

என்னவியற்கைகளாலெங்ஙனேநின்றிட்டாயென்கண்ணு
துன்னுகரசரணமுதலாகவெல்லாவுறுப்பு
முன்னுசுவையொளியூறுஒலிநாற்றமுற்றுநீயே
யுன்னையுணரவுறிலுலப்பில்லைநுணுக்கங்களே.

ஆறாயிரப்படி

(என்னவியற்கைகள்) என்ன ஸ்வபாவங்களையுடையனுய் எந்த வாகாரத்திலே நிற்கிருய் எனக்குபவ்யனுன க்ருஷ்ணனே. நெருங்கினகர சரணம் முதலானவெல்லா வுறுப்பும் - அவயவங்களுக்கும், ரஸம், ரூபம், ஸ்பர்ஸம், சப்தம், கந்தம், இவையெல்லா வற்றுக்கும் கடவையான வுன்னையநுசந்திக்கப்புக்கா லுன்னுடைய வைலக்ஷண்யத்துக்கு முடிவில்லை யென்கிருர்...*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், இப்படி யறியவரிய்யா யிருக்கைக்கடியான வதிஸௌக்ஷ்மய த்தாலே அக்கரணங்களோடு விஷயங்களோடிவாசியற வ்யாபித்து நிற்கிற நிலை யென்றுயிருக்கிறதென்கிருர்.

உன்னுடைய வாகாரங்களைக்காட்டி, என்னை - என்னை. ஆளும் - அடிமை கொள்ளுகிற. கண்ணு - க்ருஷ்ணனே. ஒருபடியென்று நிஷ்கர்ஷிக்க வொண்ணுதபடி. என்ன - என்ன. இயற்கைகளால் - ப்ரகாரங்களாலே. நின்றிட்டாய் - நின்றருளினுய். துன்னு - சரீரத்திலே செறியக்கடவதாய். கரசரணமுதலாக - கரசரணுதிகளான கர்மேந்த்ரியங்களும ஜ்ஞாநேந்த்ரியங்களுமான. எல்லாவுறுப்பும் - எல்லாக்கரணங்களும். உன்னு-மநஸ்ஸோடே ப்ரவணமாயுத்யோகிக்கும்படியான. சுவையொளியூறுஒலிநாற்றம் - ரஸரூபஸ்பர்ஸ சப்தகந்தங்களாகிற. முற்றும் - சகலவிஷயங்களும். நீயே - நீயேயாம்படி. உனை - அவற்றுக்கந்த்ராத்மாவானவுன்னை. உணரவுறில் - நிரூபிக்கநினைக்கில். " அணீயஸாம் - அணீயாம்ஸம் " என்கிறபடியே, நுணுக்கங்கள் - ஸௌக்ஷ்மயங்கள். உலப்பு - முடிவு. இல்லை - இல்லையாயிருக்கும்*

௯ - ஒன்பதாம்பாட்டு.

ஜ்ஞாநேந்த்ரியங்களும் கர்மேந்த்ரியங்களும் சப்தாதி விஷயங்களு மவனுக்கு விபூதியாயிருக்கிற விருப்பை யநுசந்திக்கிருர்.

(என்னவியற்கைகளாலெங்ஙனே நின்றிட்டாயென்கண்ணு) என்ன ஸ்வபாவங்களையுடையையாய்க் கொண்டு என்னப்ரகாரத்தாலே நிற்கிருய் எனக்கு பவ்யனுனக்ருஷ்ணனே.

(துன்னித்யாதி) நெருங்கியிருந்துள்ள கரசரணங்கள் தொடக்கமான வெல்லாவவயவங்களும், அநுசந்திக்கப்படப்படுவதாய்-ஆசைப்படுவதாயிருந்துள்ள சப்தாதிகளுக்கும்கடவையாயிருந்தாய். (உன்னையுணரவுறில்) உன்னையறியப்புகில்.(உலப்பில்லைநுணுக்கங்களே) உன்வைலக்ஷண்யங்களுக்கு முடிவில்லை. " அணீயாம்ஸமணீயஸாம் " (அணீயாம் ஸமணீயஸாம்) என்கிறபடியே, அசித்வஸ்துவைஸூக்ஷ்ம ரூபதயா எங்கும்புக்கு வ்யாபித்திருக்குமாத்மவஸ்து, இவ்விரண்டிலும் ஸூக்ஷ்மரூபேண வ்யாபித்திருப்புதி. (உன்னை நிரூபிக்கப்புகில் ஸௌக்ஷ்மயங்கள் முடிவில்லையாயிருக்கும். நுணுக்கம் - ஸௌக்ஷ்மயம்.)......................*

ஜீயர் அரும்பதம்.

ஒன்பதாம்பாட்டு (என்னவியற்கைகளாலித்யாதி) "துன்னுகரசரணம்" இத்யாதியைக் கடாக்ஷித்தவதாரிகை (ஜ்ஞாநேந்த்ரியங்களுமித்யாதி)

இயற்கை - ஸ்வபாவம்.

உறுப்பு - அவயவம். "எல்லாவுறுப்பும்" என்று கரசரணங்களையொழிந்த கர்மஜ்ஞாநேந்த்ரியங்களைச்சொல்லுகிறது. "உன்னு" என்றதுக்கர்த்தம் (அநுசந்திக்கவித்யாதி) "அநுசந்திக்கப்படுவதாய்" என்றதின் விவரணம் (ஆசைப்படப்படுவதாயிருந்துள்ளவென்று.) ஊறு - ஸ்பர்ஶம். ஒளி - ரூபம்.

நுணுக்கம் - ஸூக்ஷ்மதையால் வந்தவைலக்ஷண்யம். வைலக்ஷண்யங்களேதென்ன (அணியாம்ஸமித்யாதிவாக்யத்வயம்) "நாராயணமஶேஷாணாமணீயாம்ஸமணீயஸாம் | ஸமஸ்தாநாம் மஹிஷ்டஞ்ச பூராதீநாம் கரீயஸாம்" (நாராயணமஶேஷாணுமணீயாம்ஸமணீயஸாம்|ஸமஸ்தாநாம்மஹிஷ்டஞ்ச பூராதீநாம்கரீயஸாம்) இதி ஸ்ரீவிஷ்ணுபுராணே. "ப்ரஶாஸிதாரம் ஸர்வேஷாமணீயாம்ஸமணீயஸாம் | ருக்மாபம் ஸ்வப்நதீகம்யம் வித்யாத்தம் புருஷம் பரம்" (ப்ரஶாஸிதாரம் ஸர்வேஷாமணீயாம்ஸமணீயஸாம் | ருக்மாபம்ஸ்வப்நதீகம்யம்வித்யாத்தம்புருஷம்பரம்) இதிமாநவே..*

பத்தாம்பாட்டு.

இல்லைநுணுக்கங்களேயிதனிற்பிறிதென்னும்வண்ணந்
தொல்லைநன்னூலிற்சொன்னவுருவுமருவுநீயே
யல்லித்துழாயலங்கலணிமார்பவென்னச்சுதனே
வல்லதோர்வண்ணஞ்சொன்னாலதுவேயுனக்காம்வண்ணமே.

ஆறுயிரப்படி.

(இல்லை) இதிற்காட்டில், பிறிது - வேறு ஸூக்ஷ்மமில்லையென்னும்படி பழையதான வேதாந்தத்திலேசொன்ன அசித்துக்கும் சித்துக்கும் நிர்வாஹகனானவனே; அல்லியையுடைய திருத்துழாய்மாலையாலே யலங்க்ருதமான வழகியமார்பையுடையையாய், இவ்வழகுக்கொருநாளுமொழிவில்லாதவனே; வேதங்களும்ஸநகாதியோகிகளுமுன்னுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிகளைப்பேசப்புக்கால் பேசினவம்சம்பேசிற்றுமித்தனைபோக்கி, பேசாததுக் கவதியில்லை. அதவா, உனக்கு நல்லாரா யுன்குணங்களிலே யீடுபட்டிருப்பார் உன்னை யேதேனுமொருபடி பேசினால், அதுவே யுனக்காம் ப்ரகாரமென்கிறார்..*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், நித்யமான வேதைகவேத்யமாயுள்ள ஸூக்ஷ்ம சிதசித்வஸ்துக்களை ப்ரகாரமாக வுடைய நீ, வாசாமகோசரமஹிமா வென்கிறார்.

இதனில் - இதிற்காட்டில், பிறிது - வேறு. நுணுக்கங்கள் - ஸௌக்ஷ்ம்யம். இல்லை - இல்லை. என்னும்வண்ணம் - என்னும்படி. தொல்லை - அநாதியாய். நல்-அபௌருஷேயத்வாதி குணயோகத்தையுடைத்தான. நூலில் - வேதசாஸ்த்ரத்திலே. அவ்யக்தாக்ஷராவஸ்த்தையிலு மதிஸூக்ஷ்மமாக, சொன்ன-தமஶ்ஶப்தத்தாலேசொல்லப்பட்ட. உருவும் - அசித்தும். அருவும் - சித்தும். நீயே - "ஸதேவ" (ஸதேவ) என்கிறமர்யாதையாலே நீயேயாயு. இப்படிசேதநசேதநசரீரியானவளவன்றியே, அல்லி - பூந்தாரையுடைத்தான. தழாயலங்கல் - திருத்துழாய்மாலையை. அணி - அலங்காரமாகவுடைய. மார்ப - திருமார்பையுடையனுய். என், அச்சுதனே - அப்ரச்யுதாகாரனுன விலக்ஷண விக்ரஹயுக்தனே. இப்படியிருக்கிற வுன்னுடைய சர்வப்ரகாரவைபவத்தை, வல்லதோர்வண்ணம் - வல்லப்ரகாரம். சொன்னுல் - வேதாதிகள் சொன்னும். உனக்கு - உனக்கு. அதுவே - அதுவே. வண்ணம் - ப்ரகாரம். ஆம் - ஆம்படி. ஆஶ்ரிதபவ்யனுயிருப்புதி. ....*

ஈடு - பத்தாம்பாட்டு.

வேதைகஸமதிகம்யனும் காரணமா யதிஸூக்ஷ்மமா யிருந்துள்ள சேதநாசேதநங்களை விபூதியாகவுடையனு யிருக்கிறபடியை யருளிச்செய்கிறூர்.

(இல்லைநுணுக்கமித்யாதி) இதிற்காட்டில் வேறுஸூக்ஷ்மமாயிருப்பதில்லையென்னும்படி. அதாவது-இவற்றுக்கு "தனக்கு" என்னவொரு நாமரூபங்களின்றிக்கே, ப்ரஹ்மத்தினுடைய நாமரூபங்களையிட்டு வ்யவஹரிக்கவேண்டும்படி காரணுவஸ்த்தமாயிருக்கிறசேதநாசேதநங்கள் நீயிட்டவழக்கு. (தொல்லைநன்னூலிற்சொன்ன) "ஸதேவஸோம்யேதமக்ர ஆஸீத்" (ஸதேவஸோம்யேதமக்ரஆஸீத்) என்றதிறே. (பழையதாய் ப்ரமாணஶ்ரேஷ்டமான வேதத்திலேசொல்லுகிறவசேதநத்துக்கும், அதிற்காட்டில் ஸூக்ஷ்மமான சேதநபதார்த்தத்துக்கும்நிர்வாஹகன்நீயே.) ஆக, ஜகதாகாரனுயிருக்கு மிருப்பைசசொல்லிற்று.

(அல்லித்துழாயித்யாதி) நித்யவிபூதியுக்தனு யிருக்கும்படியைச்சொல்லுகிறது. அல்லியையுடைத்தான திருத்துழாய்மாலையாலே யலங்க்ருதமான திருமார்வையுடையையாய், அவ்விருப்புக் கொருநாளுமழிவில்லாதபடி பரமபதத்திலே யெழுந்தருளியிருக்கிறவிருப்பை யெனக்கு ப்ரகாசிப்பிக்கிறவனே. (வல்லதோரித்யாதி) இதுக்கிரண்டுபடியாக வருளிச்செய்வர். இவன்றனக்குள்ள வளவெல்லாங்கொண்டுபேசினுல், உன்பக்கல் சிலசொல்லிற்று மத்தனைபோக்கியல்லது, உனக்கோரியத்தை யில்லையிறேயென்னுதல்; அப்போதைக்கு, அதுவே யுனக்காம் வண்ணம்-அதுவன்றென்கிறது. மற்றைபபடிக்கு, உன்பக்கல் ஸ்நேஹிகளாயிருப்பா ரொத்தனையேனு மளவின்றிக்கே யிருந்தார்களாகிலும், அவர்களொன்

றைச்சொன்னால், ஸ்ரீவைகுண்டத்திலே நித்யஸூரிகள்நடுவே அவர்கள்தங் களுக்குங்கூடப் பேச்சுக்கு நிலமன்றிக்கே யிருக்கிற நம்மை, சம்சாரத்தி லே அதிக்ஷுத்ரனாயிருக்கிற விவனறிந்தானாகச் சொல்லுவதே? என்று சீறுகையன்றிக்கே, இவன்சொன்னதுவே தனக்களவாக நினைத்திருக்கு மென்கிறது...... ....*

ஜீயர் அரும்பதம்.

பத்தாம்பாட்டு. (இல்லையித்யாதி) "தொல்லைநன்னூலிற்சொன்ன - இல்லை நுணுக்கங்களே யிதனில் பிறிதென்னும்வண்ணம் - உருவுமருவும்நீயே" என்றபதங் களைக் கடாக்ஷித்தவதாரிகை (வேதைசேத்யாதி) அதிஸூக்ஷ்மமா யிருந்துள்ளவெ ன்றது - காரணாவஸ்தையைப்பற்ற.

"இதனிற்பிறிது - நுணுக்கங்கள் - இல்லை - என்னும்வண்ணம்" என்றந்வயி த்தர்த்தம் (இதிற்காட்டிலித்யாதி) ஏதத்விவரணம் (அதாவதித்யாதி) வேதத்தி லெங்கே சொல்லிற்றென்ன (சதேவேத்யாதி)

சப்தார்த்தம் (அல்லியையித்யாதி)

முந்தினவர்த்தத்துக்கு, "அதுவே" என்ற ஏகாரம் - பிரிநிலை. வ்யதிரோகா ர்த்தகமென்றபடி. த்விதீயார்த்தத்துக்கு, தேற்றேகாரம். நிஸ்சயார்த்தகமென்ற படி.

அல்லித்துழாயலங்கலணிமார்ப, என்னச்சுதனே - இதனில்பிறிது - நுணுக் கங்கள் - இல்லை - என்னும்வண்ணம் தொல்லை நன்னூலிற்சொன்ன வுருவு மருவும்நீ யே - வல்லதோர்வண்ணமித்யாரப்யாந்வயஃ.......................................*

பதினொன்றாம்பாட்டு.

ஆம்வண்ணமின்னதொன்றென்றறிவதரியவரியை
யாம்வண்ணத்தாற்குருகூர்ச்சடகோபனறிந்துரைத்த
வாம்வண்ணவொண்டமிழ்களிவையாயிரத்துளிப்பத்து
மாம்வண்ணத்தாலுரைப்பாரமைந்தார்தமக்கென்றைக்குமே.

ஆறாயிரப்படி.

(ஆம்வண்ணம்) ஒருவராலு மொருவகையு மறியவொண்ணா சர்வேஸ்வரனை யுள்ளபடியே யறிந்து அங்குத்தைக்கு ஸத்ருஸமாகவா வாராருளிச்செய்தவாயிரத்திலு மித்திருவாய்மொழியை யதாசக்தி சொ லுமவர்களே, என்றைக்கும் க்ருதக்ருத்யரென்கிறார். ....

பன்னீராயிரப்படி.

அநந்தரம், இத்திருவாய்மொழியை யப்யசிக்கவல்லவர்கள், யாவதா பாவி பகவதநுபவத்துக் கீடாகச் சமைந்தார்களென்று பலத்தை யருளிச்செ ருர்.

ஆம் - உண்டான. வண்ணம் - ப்ரகாரம். இன்னது - இன்னபடிப்பட்டிருப் பது. ஒன்று - ஒன்று. என்று - என்று. அறிவது - அறிகைக்கு. அரிய-அரியனான அரியை - சர்வேஶ்வரனை. குருகூர்ச்சடகோபன் - * மயர்வறமதிநலமருளப்பெற்ற வாழ்வார். ஆம்வண்ணத்தால் - உள்ளபடி. அறிந்து - அறிந்து. உரைத்த - அங்குத் தைக் கருபமாக வருளிச்செய்த. வண்ணம் - சந்தஸ்ஸை. ஆம் - உடைத்தாய். ஒண் - சர்வாதிகாரமாகிற நன்மையையுடைத்தான. தமிழ்கள் - தமிழாயுள்ள. இவை-இவை. ஆயிரத்துள் - ஆயிரத்துள். இப்பத்தும் - இந்தப்பத்தையும். ஆம்வண் ணத்தால் - தங்கள் ப்ரகாரத்துக்கிடாக. உரைப்பார் - சொல்லவல்லவர்கள். தமக் கு - தங்களுக்கு. என்றைக்கும்-யாவதாத்மபாவியான வநுபவத்துக் கிடாக. அமை ந்தார் - சமைந்தார்கள்.

இது - கலிவிருத்தம்..*

ஈடு - பதினொன்றும்பாட்டு.

நிகமத்தில் - அங்குத்தைக்குத் தகுதியாக வாழ்வாரருளிச்செய்த வாயிரந்திருவாய்மொழியிலு மித்திருவாய்மொழியை யதாசக்தி சொல்ல வல்லா ரென்றைக்கும் க்ருதக்ருத்யரென்கிறார்.

(ஆம்வண்ணமித்யாதி) இன்னபடிப்பட்டிருப்பதொரு ஸ்வபாவ த்தையுடையவனென்றுகொண் டொருவராலுமறிய வரியனாயிருக்கிற ச ர்வேஶ்வரனைக் கவிபாடிற்று. " யதோவாசோநிவர்த்தந்தே " (யதோவா சோநிவர்த்தந்தே) என்று வேதங்களும் மீண்டவனையாயிற்றுப் பேசிற் று. (ஆம்வண்ணமித்யாதி) அவனுக்குத் தகுதியாம்படி யாழ்வாரருளிச் செய்த. அறிவதரியவரியை என்றதாகில் ஆம்வண்ணத்தா லுரைக்கையா வதென், வ்யாஹதமன்றோ வென்னில் (அறிந்துரைத்த) அவன் * மயர் வறமதிநலமருளவாயிற் றிவர்பேசிற்று. ஸ்வயத்நத்தாலே யறியப்பார்க்கி லிறே அரிதென்றது, அவன்கொடுத்த வறிவுகொண்டறிவார்க்குக் குறை யில்லையிறே.

" நெறிவாசல்தானேயாய்நின்றானையைந்து, பொறிவாசல்போர்க் கதவஞ்சாத்தி - யறிவானும் " என்று ஆக்ஷேபிப்பது ஸ்வயத்நத்தாலே யறியப்பார்ப்பானையிறே. (ஆம்வண்ணவொண்டமிழ்களித்யாதி) அவ னுக்குத் தகுதியாம்படியிருக்கிற வழகிய தமிழென்னுதல்; தகுதியாயிரு ந்துள்ள சந்தஸ்ஸுக்களை யுடைத்தாய், சர்வாதிகாரமாகிற நன்மையையு டைத்தான தமிழென்னுதல். வண்ணம் - சந்தஸ்ஸு. அன்றிக்கே, வண் ணமென்று - ஓசையாய், நல்ல த்வநியை யுடைத்தான செந்தமிழென்னு தல். (தமிழ்களிவையாயிரத்துளிப்பத்தும்) தமிழாயிருந்துள்ளவிவை யாயிரத்துளிப்பத்தையும். (ஆம்வண்ணத்தாலுரைப்பார்) பின்னை, இ த்தைச் சொல்லுமவர்களுக்கும் * மயர்வறமதிநலமருளப்பெற்று அவனு க்குத் தகுதியான சொல்லாலே சொல்லவேணுமோவென்னில்; அத்தே வை யெல்லா மாழ்வார்தம்மோடே, இவர்களுக்குத் தாங்கள் வல்லவா வும் சொல்லவமையும். (அமைந்தார்தமக்கென்றைக்குமே) அவர்களு

க்கிவ்வாத்மா வுள்ளதனையும், ஈஶ்வரன் முழங்கைத்தண்ணீர் வேண்டா, ஆழ்வார் பரிக்ரஹமானதுவேபோரும். என்றைக்கும் தந்தாமுக்குத்தாமே யமைந்தார்களா யிருப்பர்கள். ....*

ஜீயர் அரும்பதம்.

நிகமம் (ஆம்வண்ணமித்யாதி) "ஆம்வண்ணத்தால்" என்று தொடங்கி, "அமைந்தார்தமக்கென்றைக்கும்" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை (அங்குத்தைக்கித்யாதி)

"இன்னதொன்று - ஆம்வண்ணம் - என்றறிவதரியவரியை" என்றந்வயம். இன்னபடிப்பட்டதொன்று அவனுக்காம் ஸ்வபாவமென்றறியவொண்ணாத சர்வேஶ்வரனை என்றிதுக்கு சப்தார்த்தம். இத்தால் பலித்த பாவம் (இன்னபடியித்யாதி) அப்படி யறியப்போகாதோவென்ன (யதோவாச இத்யாதி) "ஆம்வண்ணத்தால்" என்றது - ஆனப்ரகாரத்தாலென்றும், அங்குத்தைக்குத் தகுதியாகவென்றபடி. ஆனால் " அறிவதரிய " என்பானென்னென்ன (ஸ்வயத்நத்தாலேயித்யாதி) ஸ்வயத்நத்தாலே யறியப்போகாதோவென்ன, ப்ரமாணம் (நெறிவாசலித்யாதி) முதல் திருவந்தாதிநாலாம்பாட்டு. வாசலானநெறியென்றும், ஸ்வரூபாநுரூபமான வுபாயம் தானேயாய்க்கொண்டு நின்ற சர்வேஶ்வரனையென்னுதல்; நெறியென்று - உபாயமாய், வாசலென்று-உபேயமாய், உபாயமுமுபேயமும் தானேயாய்நின்ற சர்வேஶ்வரனையென்னுதல். (ஐந்தித்யாதி) பஞ்சேந்த்ரியத்வாரங்களிலடைக்கப்புக்கவர்களை முகத்திலேயறைந்து போருகிறகதவையடைத்து. (அறிவாரும்) ஸ்வயத்நஸித்தமான ஜ்ஞானசக்திகளைக்கொண்டறிவதாக விருக்கிறானென்று ஆக்ஷேபிக்கிறானென்றபடி. ஸ்வரூபாநுரூபோபாயோபேயங்கள் தானாய்நின்றவனை, இந்த்ரியங்களை ஜயித்து ருத்ரனறியமாட்டானென்றுகருத்து. இப்பாசுரத்தில், "நால்வர்க்கு" என்றது - அகஸ்த்ய புலஸ்த்ய தக்ஷமார்க்கண்டேயர்களை.

பலிதம் (அவர்களுக்கித்யாதி) ஆழ்வார் பரிக்ரஹமானதுவே - ஆழ்வார் பரிக்ரஹத்துக்கு விஷயமானதுவேயென்றபடி. சப்தார்த்தம் (என்றைக்குமித்யாதி) ஈஶ்வரன் முழங்கைத்தண்ணீர்வேண்டாவென்றது - ஈஶ்வரனுகிற முழங்கைத்தண்ணீர் வேண்டாவென்றபடி. முழங்கைத்தண்ணீராவது - ஒருவன்தண்ணீர்குடித்தா லவன்முழங்கையிலே யொழுகுகிற தண்ணீரைக்குடிக்கை.

இன்னதொன்று - ஆம்வண்ணம் - என்றறிவதரியவரியை-குருகூர்ச்சடகோபன்-ஆம்வண்ணத்தால் - அறிந்துரைத்த ஆம்வண்ணவொண்டமிழ்களென்றுதொடங்கி, உரைப்பார் - என்றைக்கும் - தமக்கு - அமைந்தாரித்யந்வயঃ................*

த்ராவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி.

(மாயாவாமனனே.)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௭௮

(பூதை:) தீயாய் நீராயித்யாதி - பஞ்சபூதங்களாலும்; (சந்த்ரார்யமாத்யை:) திங்களும் ஞாயிறுமாயித்யாதி - சந்த்ராதித்யநக்ஷத்ராதிகளாலும்; (ஸகலயுககதைர் வஸ்துபி:) எத்தனையோருகமுமவையாயித்யாதி - க்ருதத்ரேதாதி ஸகலகாலவர்த்தி பதார்த்தங்களாலும்; (சேதநாத்யை:) உள்ளது மில்லதுமாயித்யாதி-நித்யாநித்யங்களான சேதநாசேதநவஸ்துக்களாலும்; (லோகாநாம்நியத்யா) காயமும் சீவனுமாயித்யாதி - புந:புநர்ஜந்மவிநாசாதிகளை யுண்டாக்குகிறதாகத் தான்கட்டிவைத்த லோகமர்யாதையாலும்; (ஸ்மரணததிதரோத்பாதநாத்) அயர்ப்பாய்த்தேற்றமுமாய்-ஸ்மரணவிஸ்மரணங்களை யுண்டாக்குகையாலும்; (மாநநாத்யை:) துயரஞ்செய்மானங்களாயித்யாதி-மாநமதாதிகளாலும்;(துர்ஜ்ஞேயத்வாத்)இன்னதோர்தன்மையையென்றுன்னையாவர்க்கும் தேற்றரியை-இப்படிப்பட்ட ஸ்வபாவத்தையுடையவனென்று, எத்தனையேனு மதிசயிதஜ்ஞாநராலு மறியவொண்ணாதபடி நிற்கையாலும்; (ஸ்வபாஜாம்பஹூபகாரணாத்) நின்றிட்டாயென்னை யாளுங்கண்ணாவித்யாதி-தன்னையாச்ரயித்தபேர்களுக்கு நன்மைகளைப்பண்ணுகையாலும்; (வேதஸம்வேத்யபாவாத்) தொல்லை நன்னூலிற்சொன்ன வுருவுமருவும்நீயே - ஸூக்ஷ்மசிதசித்விசிஷ்டதயா “𑌸𑌦𑍇𑌵 𑌸𑍋𑌮𑍍𑌯𑍇𑌦𑌮𑌗𑍍𑌰 𑌆𑌸𑍀𑌤𑍍” (ஸதேவஸோம்யேதமக்ர ஆஸீத்) இத்யாதியாலே ப்ரதிபாதிக்கப்படுகையாலும்; எம்பெருமானாச்சர்யவிபூதிகனென்று “மாயாவாமனனே” என்கிறதசகத்திலே மாறனாலே ப்ரதிபாதிக்கப்பட்டதென்கிறார் .... (௭௮)

திருவாய்மொழிநூற்றந்தாதி.

மாயாமறன்னை வைத்தவைசித்திரியாலே
தீயாவிசித்திரமாச்சேர்பொருளோ - டாயாமல்
வாய்ந்துநிற்குமாயன்வளமுரைத்தமாறனைநா
மேய்ந்துரைத்துவாழுநாளென்று. (௬௮)

(மாயாமல்) இதில் - எம்பெருமான் காட்டின விசித்ரஜகதாகாரத்தையை யநுபவித்து விஸ்மிதராயருளிச்செய்த திவ்யஸூக்தியை யநுவதித்தருளிச்செய்கிறார். அதெங்ஙனேயென்னில், * ஏழையராவியில் - உருவுவெளிப்பாட்டாலே நோவுபடும்படி யாற்றாமை கரைபுரண்டிருக்கச்செய்தேயும், தம்மையறியாதபடிவைத்து நோக்கிக்கொண்டுபோருகிற விவ்வாச்சர்யத்தைக்கண்டிவர் விஸ்மிதராக, “இதொன்றுகண்டோ நீரிப்படி விஸ்மயப்படுகிறது” என்று அவன் தன்னுடைய வாச்சர்யஜகதாகாரத்தையைக்காட்டிக்கொடுக்க, அத்தையநுபவித்து விஸ்மிதராகிற * மாயாவாமனனிலர்த்தத்தை “மாயாமல் தன்னைவைத்த” இத்யாதியாலே யருளிச்செய்கிறாரென்கை.

(மாயாமல் தன்னைவைத்த வைசித்திரியாலே) அதாவது-சரண்யனானவனுக்கு அஜ்ஞாநசக்திகளாகிற தோஷமின்றிக்கே சர்வஜ்ஞத்வாதிகுணங்களுண்டாயிருக்க, சரணாகதனானவெனக்கு ஆகிஞ்சந்யாநந்ய கதித்வங்களும் ஆர்த்தியுமுண்டாகையாலே அதிகாரிமாந்த்யமின்றிக்கேயிருக்க, வைத்ததுக்கு ஹேதுவென் என்று- “பாசங்கள்நீக்கி” என்று தொடங்கி “மாயவனேயருளாய்” என்று அவன்றன்னைக்

கேட்க, அவனும் அதுக்கு நிருத்தரனாக, "இதில்பொருந்தாதிருக்கிற வென்னைவைத்துநிற்பதாக நடத்திக்கொடுபோருகிற விதொன்றிருந்தபடியென்!" என்று இவ்வாஸ்சர்யத்திலே யிவர்விஸ்மிதராக, அவனவற்றைக்கண்டுவைத்து "இதோராஸ்சர்யமோ" என்று தன் விசித்ரஜகதாகாரதையைக்காட்ட. (தீயாவிசித்திரமாச்சேர்பொருளோடு) "மாயாவாமனனே" என்றுதொடங்கி "இவையென்னவிசித்திரமே" என்றதைப் பின்சென் றருளிச்செய்தபடி. தீயாதியாக பஞ்சபூதங்களு மொன்றின்கார்யமொன்றுக்கின்றிக்கே விவிதாகாரமாய், சேதநவர்க்கங்களு மப்படியே விவிதாகாரமாகையாலே விசித்ரமாய்ச்சேர்ந்த பதார்த்தங்களோடே. (ஆயாமல்வாய்ந்து நிற்கும்மாயன்) அவற்றின் தோஷங்களையாராயாமல் வாய்ந்துநிற்கும்மாயன். (ஓயாமல்வாய்ந்துநிற்கும்) என்றுபாடமாய், நிரந்தரமாகச்சேர்ந்துநிற்கு மென்றுகவுமாம். பொருந்தியிருக்கு மாஸ்சர்யசக்தியுக்தனான சர்வேஸ்வரன். "மாயா" என்றதைப்பேசினபடி. (வளமுரைத்த) விபூதிவிஸ்தாரத்தை யருளிச்செய்த. அதாவது- "[Grantha text]" (புராபூத்வாம்ருதார்த்தாந்த: - நக்ரோதவஸமாபந்ந:) என்னும்படி, "அங்கண்மலர்த்தண்டுழாய்முடியச்சுதனேயருளாய்பின்னும் வெங்கண்வெங்கூற்றமுமா யிவையென்னவிசித்திரமே" என்றும், "சித்திரத்தேர்வலவா - வித்தகத்தால்நிற்றிநீ" என்றும், "கள்ளவிழ்தாமரைக்கட்கண்ணனே - உள்ளப்பல்யோகுசெய்தி" என்றும், "பாசங்கள்நீக்கியென்னை - இவையென்னமயக்குக்களே" என்றும், "மயக்காவாமனனே - இவையென்னதுயரங்களே" என்றும், "துயரங்கள்செய்யுங்கண்ணா - இவையென்னசுண்டாயங்களே" என்றும், "என்னசுண்டாயங்களாலெங்ஙனேநின்றிட்டாய் - இவையென்னவியற்கைகளே" என்றும், "என்னவியற்கைகளால் நின்றிட்டாய் - உலப்பில்லை நுணுக்கங்களே" என்றும், "இல்லைநுணுக்கங்களே - அச்சுதனே -அதுவேயுனக்காம்வண்ணமே" என்று மிப்படி யவன்விசித்ரவிபூதி விஸ்தாரயுக்தனாயிருக்கிறபடியை யருளிச்செய்தவையென்கை. (மாயன்வளமுரைத்தமாறனை) இப்படி விசித்ர ஜகதாகாரனானவன் சம்பத்தையநுபவித்தருளிச்செய்த வாழ்வாரை. (நாமேய்ந்துரைத்து வாழுநாளென்று) நாம் கிட்டி அவர்திருநாமங்களைச்சொல்லி வாழுங்காலமாகவற்றோ. அன்று மொருநாளாமோவென்றபடி .... (௬௮)

ஏழாம்பத்தில் - எட்டாந்திருவாய்மொழி முற்றிற்று.

ஆக - திருவாய்மொழி - ௬௮.—பாட்டு - ௭௫௦.

ஸ்ரீ

திருவாய்மொழி.

ஏழாம்பத்து.

ஒன்பதாந்திருவாய்மொழி.

என்றைக்கும் - ப்ரவேசங்கள்.

ஆறாயிரப்படி.

இப்படிமஹாஶ்சர்யமான ஜகத்ரூபத்தையும், அப்ராக்ருதஸ்வாசாதாரண திவ்யரூபத்தையும், இவையவன் பக்கலிலே ஸங்கதமாயிருக்கிறபடியையு மநுஸந்தித்தத்யந்த விஸ்மிதராய், நிரதிசயப்ரீதியுக்தராய், நிரஸ்த ஸமஸ்தப்ரஸ்துத வ்யஸநராயிருந்து, நிரவதிகாஶ்சர்யோபய விதாகாரத்தையுள்ளபடியே சொன்னார்; இது தானும் நிரூபித்தவாறே யவன் செயலாயிருந்தது, இத்தையநுஸந்தித்து, “அத்யந்தநிஹீநனாயிருந்தவென்னைக்கொண்டு திருவாய்மொழி சொல்லுவித்தருளுவதே” என்று, தம்மைக்கொண்டு திருவாய்மொழி பாடுவித்தருளினவனுடைய ஸர்வசக்தித்வ ஸௌசீல்யவாத்ஸல்யாதி கல்யாணகுணாநுபவ ஜநிதநிரவதிக ப்ரீதியாலே சொல்லுகிறார்..........................*

பன்னீராயிரப்படி.

ஒன்பதாந்திருவாய்மொழியில், கீழ் - தம்முடையவிரோதி நிவ்ருத்திக்கநுரூபமான, ஈஶ்வரனுடையவாஶ்சர்யசக்தியோகத்துக்கு ப்ரகாசகமாயுள்ள விசித்ர விபூதிமத்தையை யநுபவித்து ஸந்துஷ்டரானவிவர், இவன் விரோதி நிவர்த்தநத்தில் விளம்பிக்கைக்கடியென்னென்று நிரூபித்து, அவன்தம்மைவாசிக கைங்கர்யங்கொள்ளுகைக்காக வைத்த ப்ரகாரத்தைக்காட்டக்கண்டு ப்ரீதராய், தம்விரோதி கிடக்கச்செய்தே அத்தை மதியாமல் அசத்கல்பமாக்கி யடிமைகொள்ளுகைக்கடியான நிருபாதிக ஸம்பந்தத்தையும், ப்ரதமப்ரவர்த்தநத்தையும், பக்தார்த்தப்ரவ்ருத்தியையும், விரோதியைமதியாமல் விரும்பினபடியையும், விருப்பத்தால்வந்த மேன்மையையும், மேன்மைக்கெல்லைநிலத்தையும், அப்பரத்வாநுபவத்துக்கு விலக்கான பாபத்தினுடைய நிவர்த்தநத்தையும், அதிசயிதாநுபாவ்ய குணயோகத்தையும், அதினுடைய நித்யாநுபாவ்யதையையும், நிஷ்ப்ரத்யுபகாரமான நிரவதிகோபகாரகத்வத்தையு மநுபவித்து ஏவம்வித ஸ்வபாவனானவனென்விரோதியைக்கழித் தென்னை வாசிக கைங்கர்யங்கொண்டபடிக் கெத்தைச்செய்வேனென்று உபகார ஸ்ம்ருதியாலே அத்யந்தம் ஹ்ருஷ்டராகிறார்..........................*

ஈ டு.

கீழேபலகாலும், "சர்வேஶ்வரன்றன்னைப்பெறுவார்க்கு. ப்ரதிபந்தகங்களுண்டாயிருந்தாலும் தானேதன்னைத்தரப்பார்க்குமன்று தகையவல்லதொரு ப்ரதிபந்தகமின்றிக்கே யிருக்க, 'தன்னாலேபேறு' என்றிருக்கிறவென்னை யிங்கேவைத்ததென்" என்று கேட்டுப்போருவாரொருவர் அவனும், இதுக்குநேரான பரிஹாரத்தைப்பண்ணாதே யேதேனுமொரு குணாவிஷ்காரத்தைப்பண்ணி அந்யபரதையைப் பிறப்பிக்குமாயிற்று இவர்க்கிதிலே நெஞ்சுசெல்லாதபடி. இனி, கீழ்த்திருவாய்மொழியிலேயும்- "சம்சாரத்தில்பொருந்தாமையுண்டாய் உன்னையொழியச் செல்லாமையுண்டாய் நீயே யுபாயமாயிருக்க, பின்னையுமென்னை யிங்கேவைத்து ஜீவிப்பித்துக்கொடுபோருகிற வாஸ்சர்யமிருந்தபடியென், இத்தை யெனக்கருளிச்செய்யவேணும்" என்ன, "கண்டீரேதானிதோராஸ்சர்யமிருந்தபடி" என்று அவ்வழியாலே தன்னுடைய வாஸ்சர்ய ஜகதாகாரத்தையைக் காட்டிக்கொடுத்து, அத்தோடே பணிபோரும்படி பண்ணினான். இவரும், அப்போதத்தனையுமத்தை யநுசந்தித்து, அது தலைக்கட்டினவாறே அநந்தரம் பழையபடியேகேட்கத்தொடங்குமவரிறே. "இஸ்ஸம்ஸாரத்திலே பொருந்தாதிருக்கிறவென்னை யிங்குவைத்ததுக்கு ஹேதுவென்" என்ன, "நம்மையிதுக்கொருஹேது நிர்ப்பந்தித்துக்கேட்கவேணுமோ; கண்டதெல்லாவற்றிலும் நாக்குநீட்டி அவற்றிலே ருசிபண்ணிப்போந்தீராகில், அதுக்கடியான கர்மங்கிடந்ததாகில், வாசநாருசி கிடந்ததாகில், அவற்றாலே யிருந்தாலாகாதோ" என்ன, "அவையுங்கிடக்கச்செய்தே, அவற்றையும்பாராதே யெனக்கு * மயர்வற மதிநலமருளி * பாசங்கள்நீக்கியென்னை யுனக்கேயறக்கொண்டபின்பென்னை யிங்குவைக்கிறதென்" என்று வடிம்பிட்டுக்கேட்க, "நீர்தாமும்மைநமக்காக வோக்கிவைத்திராகச்சொன்னீரோ – 'தனக்கேயாகவெனைக்கொள்ளுமீதே' என்று, ஆனபின்பு நாம்வேண்டினபடி விநியோகங்கொள்ளக்கடவோமன்றோ, ஆனபின்பு நமக்கதிசயத்தைப் பிறப்பிக்கை யுமக்கு ஸ்வரூபமாயிருக்குமிறே; ஆனபின்பு, உம்மைக்கொண்டு, ஸ்ரீபீஷ்மனைசரதல்பத்திலே யிட்டுவைத்து நாட்டுக்கு வெளிச்சிறப்பைப்பண்ணிக் கொடுத்தாப்போலே, நமக்கும் நம்முடையார்க்கும் போதுபோக்காகச் சிலப்ரபந்தங்களைப்பண்ணுவிக்கப்பார்த்தோம், அதுதலைக்கட்டுந்தனையுங்காணு மும்மை வைப்பது" என்று நேரானபரிஹாரந்தன்னை யருளிச்செய்ய, இவருமத்தையநுசந்தித்து, சர்வேஶ்வரனு யவாப்தசமஸ்தகாமனாய் சர்வ ப்ரகார பரிபூர்ணனாயிருக்கிற வவன்றனக்கொரு குறையுண்டாய் அக்குறை பின்னைத் தம்மைக்கொண்டு தீர்ப்பதாகச்சொன்னவார்த்தையைப் பொறுக்க மாட்டிற்றிலர். "தனக்குச்சில ப்ரபந்தங்கள் வேண்டினாலும், அதுக்கீடான ஜ்ஞாநசக்த்யாதிகளால் குறைவற்ற ஸ்ரீவேதவ்யாஸபகவான், ஸ்ரீவால்மீகி

பகவான், ஸ்ரீபராசரபகவான் தொடக்கமானோர், 'செந்தமிழ்பாடுவார்' என்று சொல்லப்படுகிற முதலாழ்வார்கள், இவர்களெல்லாரு முண்டாயிருக்க, அநாதிகாலம் சம்சாரத்திலே பழகி சப்தாதிவிஷயங்களிலே யக்யபாஞய் 'அஸந்நேவஸபவதி' (அஸந்நேவஸபவதி) என்கிறபடியே அஸத்கல்பனுயுருமாய்ந்துபோன வென்னைக் கொண்டு தனக்கீடாகக்கவி பாடுவித்துக்கொள்ளுவதாகச் சொன்னவார்த்தை யென்னவார்த்தை, இதொரு நீர்மையிருக்கும்படியே, இதென்னநீர்மை" என்று, சர்வேச்வரன் தன்திறத்தில் பண்ணினவுபகாரத்தை யநுசந்தித்து, அதுக்கொருப்ரத்யுபகாரங் காணமையாலே தடுமாறிச்செல்லுகிறது...................*

ஜீயர் அரும்பதம்.

என்றைக்கும் ப்ரவேசே, ஈச்வரஸ்வபாவத்தைய மருளிச்செய்துகொண்டு மேழ்திருவாய்மொழியோடிதுக்கு சங்கதியருளிச்செய்கிறார் (மேழையித்யாதி.) பலகாலுமென்றது - * உண்ணிலாவி தொடங்கிப் பலகாலுமென்றபடி. கேட்கும்படியைக்காட்டுகிறார் (இஸ்ஸம்சாரத்திலே யித்யாதி.) "பாசங்கள்" என்றத்தைப்பற்ற (கண்டதெல்லாவற்றிலுமித்யாதி.) (உனக்கேயறக்கொண்டபின்பு) என்றவநந்தரம், நீசொல்லுகிறவிது பரிஹாரமன்று ஆகையாலே என்று கூட்டிக்கொண்டு, அநந்தரம் (என்னையிங்குவைக்கிற தென்னென்று வடிம்பிட்டுக்கேட்க) என்றநுசந்திப்பது. வடிம்பிட்டு - நிர்ப்பந்தித்து. "ப்ரபந்தங்களைப் பண்ணுவிக்கப்பார்த்தோம்" என்று உத்தரம் சொல்லப்பார்த்து, "ஆனுலென்னுற்றாமையெல்லாங்கிடக்க வெறும் ஸ்வகார்யமே பார்க்குமத்தனையோ" என்கிறசங்கையையும் பரிஹரிக்கிறார் (நீர்தாமித்யாதி) ஒக்கிவைக்கை - ஆக்கிவைக்கை. வெளிச்சிறப்பு - ஜ்ஞாநப்ரகாசம். பொறுக்கமாட்டிற் றிலனொன்றது - "என்சொல்லிநிற்பன்" இத்யாதியைப்பற்ற. "இன்கவிபாடும பரமகவிகள்," "ஒப்பிலாத்தீவினையேனை," "எதுவுமொன்றுமில்லைசெய்வது" இத்யாதிகளைக்கடாக்ஷித்து (தனக்குச்சில ப்ரபந்தங்களித்யாதி) "என்னின்னுயிரின்றொன்றாய்" என்றத்தைப்பற்ற (அஸந்நேவேத்யாதி.) செந்தமிழ்பாடுவார் - அழகிய தமிழ்பாடும் முதலாழ்வார்களித்யர்த்தம். திருமொழி, "வெந்திறல்" இத்யாதி...... ....*

ஒன்பதாந்திருவாய்மொழி.

முதற்பாட்டு.

என்றைக்குமென்னையுய்யக்கொண்டுபோகிய
வன்றைக்கன்றென்னைத்தன்னாக்கியென்னாற்றன்னை
யின்றமிழ்பாடியவீசனையாதியாய்
நின்றவென்சோதியையென்சொல்லிநிற்பனே.

அருயிரப்படி.

(என்றைக்குமென்னை) ஆத்மாந்தரங்கஸ்வேந ஸ்வீகரித்து, ப்ரதிகமும் என்னைத் தன்னைப்போலேபரிசுத்தனாக்கி, என்னை யுபகரணமாக்

க்கொண்டு திருவாய்மொழிபாடுந் தன்னுடைய சர்வசக்தித்வத்தையும், ஏதத்ப்ரபந்த நிர்மாண ஹேதுத்வக்ருத நிரவதிகதேஜஸ்ஸையும் எத்தைச்சொல்லி பர்யவசிப்பன். காலதத்த்வமுள்ளதெல்லாம் சொன்னாற்றுனார்வனோவென்கிறார்...*

பன்னீராயிரப்படி.

முதற்பாட்டில், நிருபாதிகசேஷியானவனென்னைக்கொண்டு தான் தன்னைக்கவிபாடிக்கொண்ட வௌஜ்ஜ்வல்யத்துக் கென்சொல்லி தரிப்பேனென்கிறார்.

என்றைக்கும் - ப்ரதமாங்கீகாரம் யாவதாத்ம பாவியாம்படி யங்கீகரித்து. போகிய - போகிற. அன்றைக்கன்று - காலந்தோறும். என்னை, உய்யக்கொண்டு- விசேஷகடாக்ஷம்பண்ணி. என்னை - என்னை. தன்னாக்கி - தனக்கேயாம்படி செல்லாமையைப் பிறப்பித்து. என்னால் - கவிபாடுகைக்கீடான ஜ்ஞாநாதிகளில்லாதவென்னைக் கரணமாகக்கொண்டு. தன்னை - வேதங்களும் பிற்காலிக்கும்படியானபெருமையையுடைய தன்னை. இன் - சப்தந்தானே நிரதிசயசரசமாய். தமிழ் - சர்வாதிகாரமான தமிழை. பாடிய - பாடின. ஈசனை - நிருபாதிகசேஷியாய். ஆதியாய்-எனக்குள்ளீடாக நின்று பாடுகையாலே யிதுக்கு மூலபூதனாய். நின்ற - அத்தாலேநிலைபெற்று. என்சோதியை - உஜ்ஜ்வலவிக்ரஹனா யிருக்கிறபடியை யெனக்கு ப்ரகாசிப்பித்தவனை. என் - எத்தை. சொல்லி - சொல்லி. நிற்பன் - தரிப்பேன்.

ப்ரதமமாபிமுக்யம்பண்ணும்படி யங்கீகரித்திலனென்னவோ, அத்தைமுழுக்க நடத்திற்றிலனென்னவோ, என்னைத் தனக்கே யாக்கிற்றிலனென்னவோ, நான் பாடினேனாம்படி தான் பாடிற்றிலனென்னவோ, அத்தாலுஜ்ஜ்வலனாயிற்றிலனென்னவோ, எத்தைச்சொல்லி தரிக்கலாவதென்று கருத்து..............................*

ஈடு - முதற்பாட்டு.

அதிக்ஷுத்ரனாயிருக்கிற வென்னை ஜ்ஞாநசக்த்யாதிகளையுடையேனாம்படிபண்ணி, என்னையிட்டுத் திருவாய்மொழி பாடுவித்துக்கொண்டவுபகாரத்தை யநுசந்தித்துத தரிக்கமாட்டுகிறிலேனென்கிறார்.

இப்படி நீர்படுகைக் கவன்செய்தநன்மைதானேதென்ன,இதுவென்கிறார் (என்றைக்குமென்னையுய்யக்கொண்டு) சர்வேஶ்வரனொருவனையொருநாள் விஷயீகரித்தால், பின்னை யவ்விஷயீகாரந்தன்னையே காலதத்த்வமுள்ளதனையுமநுசந்தித் துஜ்ஜீவிக்கலாயாயிற்றிருப்பது. "𑌤𑌚𑍍𑌚 𑌸𑌂𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯 𑌸𑌂𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯" (தச்சஸமஸ்ம்ருத்யஸம்ஸ்ம்ருத்ய) என்கிறபடியே - பின்னை யென்றுமொக்க வத்தை ஸ்மரித்து தரிக்கலாம்படியாயிற்றிருப்பது. "𑌸𑍍𑌮𑌰𑌨𑍍𑌰𑌾𑌘𑌵𑌬𑌾𑌣𑌾𑌨𑌾𑌂" (ஸ்மரந்ராகவபாணாநாம்) என்று அம்புக்கிலக்கானா ரலற்றுமாபோலே யாயிற்று, குணத்துக்கிலக்காளுரு மலற்றும்படி. அம்புபட்டபுண் மருந்திட்டாற்றலாம், குணத்தால்வந்தபுண்ணுக்குப் பரிஹாரமில்லையிறே. ஆக,சர்வேஶ்வர னொருநாளொருவனை விஷயீகரித்தா லதுதன்னையே யென்றுமொக்க ஸ்மரிக்கலாம்படியிருக்குமாயிற்று. இப்படிப்பட்ட விஷயீகாரந்தன்னை யொருகால் பண்ணிவிட்டவித்தனையோவென்னில் (போகியவன்றைக்கன்று) கழிகிற நாள்

தோறும் நாள்தோறு மிப்படியேயாயிற்று விஷயீகரித்தது. இதுதானிரு வர்படியாலு மாற்றப்போகாது. அவனுடைய விஷயீகாரத்துக் கிலக்கான விவர்படியைப்பார்த்தால், அத்தை யிவர் தாம்பொறுக்க வல்லவரல்லர்; அவனைப்பார்த்தால், தன்னை விப்ரவசித் துடனே கிடந்தவனை மடிதடவி னவன் "என்செய்தோமானோம்" என்றநுதபிக்குமாபோலே, எல்லாம் செய்து மொன்றும் செய்யாதானாய் "இவனுக்கென்செய்வோம்" என் றிருக்குமவன். (என்னைத்தன்னாக்கி) "அறிவிலேன்" என்கிறபடியே அ ஜ்ஞாநாசக்திகளுக் கிலக்காயிருக்கிற வென்னை, தன்னோடொக்க ஜ்ஞாந சக்த்யாதிகளை யுடையேனாம்படிபண்ணியென்னுதல்; (என்னைத்தன்னாக் கி) தன்னுடையேனாம்படிபண்ணி யென்னுதல். (என்னால்தன்னை) தன் னாலே தத்தசக்திகனானவென்னாலே, ப்ரருதிஸ்ம்ருதீதிஹாஸாதிகளுக் கவி ஷயமாம்படியிருக்கிற தன்னை. "யதோவாசோநிவர்த்தந்தே" (யதோவா சோநிவர்த்தந்தே,) "யஸ்யாமதம்தஸ்யமதம்-அவிஜ்ஞாதம்விஜாநதாம்" (யஸ்யாமதம்தஸ்யமதம் - அவிஜ்ஞாதம்விஜாநதாம்) என்கிறபடியே ப்ர மாணங்களுக் கவிஷயமாம்படியிருக்கிற தன்னை. (இன்தமிழ்பாடிய) இ துதன்னிலோடுகிற வர்த்தமும் பரிமாற்றமுங் கிடக்கச்செய்தே, சொல் லினிமைதானே யாகர்ஷகமாயிருக்கும்படி. (பாடிய) என்னைக் கொ ண்டு பாடுவித்தா னென்னுதல், பாடினானென்னுதல். "ஏதத்ஸாமகாயந்நாஸ்தே" (ஏதத்ஸாமகாயந்நாஸ்தே) என்று முக்தன் ஸாமகாநம்பண் ணுமாபோலே, அவனுமிவரோட்டை யநுபவத்தால் வந்த ஹர்ஷத்துக் குப் போக்குவிட்டு "தென்னா" என்றுபாடுமாயிற்று. இப்படியினியவி துண்டானபடி யெங்ஙனே யென்னில் (ஈசனை) சொல்லவேணுமோ, சர்வேஶ்வரன் செய்யமாட்டாததுண்டோ; அரிதோ வவனுக்குக் கவிபா டினீர் நீராயிராநின்றீர், அவனைப் பாடினானாகச் சொல்லாநின்றீர், இது தான்செய்தபடி யென்னென்ன (ஆகியாய்நின்ற) நான் கவிபாடுகைக்கு ஹேதுவாய் நின்றான் - அவனடியாக நான் கவிபாடிற்று. ஹேதுவானப டிதானென்னென்னில் (என்சோதியை) பிடாத்தை விழவிட்டுத் தன் வடிவழகைக்காட்டினான். திருத்திரையெடுத்தால் கூப்பிடுமாபோலேகூப் பிட்டேன், அது கவியாய்த் தலைக்கட்டிற்று. வடிவழகைக்காட்டியாயிற்று க் கவிக்குள்ளுறைகொடுத்தது. நீரும் கவிபாடினீராகில் பின்னை யிப்படி கிடந்து படுகிறதென்னென்ன (என்சொல்லிநிற்பனோ) நானும்பாதிவ ழிவந்து அவனாலே விஷயீக்ருதனாயிருக்கிறேனோ; அன்றிக்கே, பெற்ற பேறுதானளவுபட்டாறியிருக்கிறேனோ. சாதநாநுஷ்டாநம்பண்ணினார் க்குப் பலம் தப்பாமையாலே நானுமிப்பேற்றுக்குச் சிலசெய்தேனாய், இ து ப்ராப்தமென்றிருக்கிறேனோ, பெற்றபேறுதான் ஸாத்மிக்குமதாயாதி யிருக்கிறேனோ, எத்தைச் சொல்லித் தரிப்பது.

"க்ருஷ்ணத்வைபாயநம்வ்யாஸம்வித்தி நாராயணம்ப்ரபும் । கோ ஹ்யந்ய: புண்டரீகாக்ஷாந் மஹாபாரதக்ருத்பவேத்" (க்ருஷ்ணத்வைபா

யஸம்வ்யாஸம் வித்திநாராயணம்ப்ரபும் । கோஹ்யந்ய:புண்டரீகாக்ஷாந் மஹாபாரதக்ருத்பவேத்) என்றாப்போலே யிருக்கிறதாயிற்று. இதுக்கு ளவந்தாரருளிச்செய்யும்படி - "சர்வேஶ்வரன் செய்யப்புக்கா லரியது மொன்றுண்டோ" என்றும். அங்ஙனன்றிக்கே, எம்பெருமானார், "இவர்தாம்சொன்னாராகிலு மொருபடிபோகச்சொல்லித் தலைக்கட்டுவர், அவனும் தானே சொன்னானாகில் நிரவத்யமாகத் தலைக்கட்டும்; சிறு ப்ரஜை யெழுத்திடப்புக்கால் தானே யேதேனு மொருபடியிட்டுத் தலைக்கட்டும், பிதாவாத லுபாத்யாயனாத விடப்புக்கால் தானே யெழுத்தாயிருக்கும்; அங்ஙனன்றிக்கே, இவன்கையைப் பிடித் திடுவிக்கப்புக்கவாறே, இவனோரிடத்தே யிழுக்க அவனோரிடத்தேயிழுக்கக் குதறிக்கொட்டியாய் ரூபமழிந்து சிதறிப்போம்; அப்படியே, என்னை யுபகரணமாகக்கொண்டு கவிபாடாநிற்கச்செய்தேயும், என்னால் வரும்தோஷம் தன்பக்கல் ஸ்பர்ஶியாதபடி பாடுவித்தானென்கிறார்" என்று. ....*

ஜீயர் அரும்பதம்.

முதற்பாட்டு. (என்றைக்குமித்யாதி) "என்னைத்தன்னாக்கி யென்னாற்றன்னை யின்றமிழ்பாடியவீசனை - என்சொல்லிநிற்பன்" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை (அதிக்ஷூத்ரனுயித்யாதி.)

பதாவதாரிகை (இப்படிநீரித்யாதி) "போகியவன்றைக்கன்று - என்றைக்குமென்னை யுய்யக்கொண்டு" என்றந்வயித்தர்த்தம் (சர்வேஶ்வரனித்யாதி.) "ஒருநாள் விஷயீகரித்தா லென்றுமொக்க வத்தை யநுசந்தித்து தரிக்கலாயிருக்கும்" என்னுமதுக்கு ப்ரமாணம் (தச்சஸம்ஸ்ம்ருத்யேத்யாதி.) "தச்ச ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய ரூபமத்யத்புதம் ஹரே: । விஸ்மயோ மே மஹாந் ராஜந் ஹ்ருஷ்யாமி ச புந: புந:" (தச்சஸம்ஸ்ம்ருத்யஸம்ஸ்ம்ருத்ய ரூபமத்யத்புதம் ஹரே:।விஸ்மயோமேமஹாந்ராஜந்ஹ்ருஷ்யாமிசபுந:புந:) இதிகீதாஸ்வஷ்டாதஶே. அவன்குணமிப்படி யீடுபடுத்துமென்னுமதுக்கு வ்யதிரேகத்ருஷ்டாந்தம் (ஸ்மரந்நித்யாதி.) "ப்ரஹ்மதண்டப்ரகாஶாநாம் வித்யுத்ஸத்ருஶவர்ச்சஸாம் । ஸ்மரந் ராகவபாணாநாம் விவ்யதே ராக்ஷஸேஶ்வர:" (ப்ரஹ்மதண்டப்ரகாஶாநாம் வித்யுத்ஸத்ருஶவர்ச்சஸாம் । ஸ்மரந்ராகவபாணாநாம்விவ்யதேராக்ஷஸேஶ்வர:) இதியுத்தகாண்டே. அம்புபோலே குணங்கள் பாதகமோவென்ன (அம்புபட்டவித்யாதி.) உக்தார்த்தநிகமநம் (ஆகவித்யாதி.)

இப்படிப்பட்ட விஷயீகாரந்தன்னை - என்றுமொக்க வநுசந்தித்து தரிக்கலாம்படியான வொருநாளை விஷயீகாரத்தையென்றபடி. இவ்வுபய பதங்களாலும் பலித்தவர்த்தம் - இவருடைய வாதரமு மவனுடைய வ்யாமோஹமுமென் றருளிச்செய்கிறார் (இதுதானென்று) உய்யக்கொண்ட விந்த விஷயீகாரந்தானென்றபடி. விவரணம் (அவனுடையவித்யாதிவாக்யத்வயம்.) அதாவது - இவர் க்ருதஜ்ஞதையாலும், அவன் "உன்னடியார்க்கென்செய்வன்" என்னும் ஸ்வபாவத்தையாலும், இருவராலு மாற்றப்போகாதென்றபடி. அன்றிக்கே, இவன்றொருகால் விஷயீகரித்தால் போராதோ, இவர்தாமு மத்தை யொருகாலநுசந்தித்தால் போராதோவென்ன (இதுதானித்யாதி) என்னுதல். மடிதடவுகை - மடியில் த்ரவ்யத்தைக்

ளவுகாண்கை. பொறுக்கவல்லவரல்லரென்றது - ப்ரத்யுபகாரம் தேடித்தடுமாறுவ ரென்றபடி. தன்னுடையேனும்படி - தனக்கு சேஷமாம்படி.

"ஶ்ருதிஸ்ம்ருத்யாதிகளுக்கவிஷயம்" என்றதுக்கு ப்ரமாணம் (யதோவா ச இத்யாதி.) "இன்" என்றதுக்கர்த்தம் (இதுதன்னிலித்யாதி.) இதுதன்னில்- இத்திருவாய்மொழிதன்னிலென்றபடி. ஓடுகிறவர்த்தமாவது - திருவாய்மொழி பாடுவித்துக்கொள்ளுகை. பரிமாற்றமாவது - ஈஶ்வரனுடைய வ்யாமோஹம். "பாடிய" என்றதுக்கு - ப்ரயோஜககர்த்ருத்வமாதல், ஸ்வயம் கர்த்ருத்வமாதலென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (என்னைக்கொண்டித்யாதிவாக்யத்வயத்தாலே.) பாடினானென்றது - "என்முன்சொல்லும்" என்கிறபடியே முற்சந்தைசொன்னானென்றபடி. சொன்னானென்னாதே, "பாடினான்" என்றதுக்கு பாவம் (ஏதத்ஸாமகாயந்நித்யாதி.) இப்படி போக்யதையுண்டாயிற்றவன் சர்வசக்தியாகையாலே யென்னுமத்தை சங்காபூர்வகமாக வருளிச்செய்கிறார் (இப்படியினியவித்யாதி.)

மேலுக்கவதாரிகை (கவிபாடினீரித்யாதி.) பாட்டுக்குக் காரணபூதனிவனென்கிறார் (நான் கவிபாடுகைக்கித்யாதி.) விவரணம் (அவனடியாகவித்யாதி.) ஹேதுவானபடி யென்னென்னிலென்றது-ஸ்வரூபத்தாலேயோ,குணத்தாலேயோ, விக்ரஹத்தாலேயோ வென்றபடி. வடிவழகைக்காட்டி யென்று - ஹேதுவான ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார் (பீடாத்தையித்யாதி.) பீடாத்தை - போர்வையை. கவிக்கு ஹேதுவாக வடிவழகைக் கீழேசொல்லி, "என்சோதியை" என்றதுக்கு- கவிக்கு விஷயமாக பாவாந்தரம் (வடிவழகையித்யாதி.) உள்ளுறைகொடுத்தது- விஷயமாக்கிற்றென்றபடி. என்சோதியை - உஜ்ஜ்வலமான வடிவையுடையனாயிருக்கிறபடியை யெனக்கு ப்ரகாசிப்பித்தவனை யென்று சப்தார்த்தம்.

"என்சொல்லால்நிற்பன்" என்கிறதென், ஆறியிருக்கப் போகாதோவென்ன வருளிச்செய்கிறார் (நானும் பாதிவழியித்யாதி வாக்யத்வயத்தாலே.) ஏதத்விவரணம் (சாதகாநுஷ்டாந மித்யாதிவாக்யத்வயமும்.)

"என்னாற்றன்னையின்றமிழ்பாடியவீசனை" என்றதுக்குத்ருஷ்டாந்தம் (க்ருஷ்ணேத்யாதி) "க்ருஷ்ணத்வைபாயநம் வ்யாஸம் வித்தி நாராயணம் விபும் । கோ ஹ்யந்ய: புண்டரீகாக்ஷாந் மஹாபாரதக்ருத் பவேத்" (க்ருஷ்ணத்வைபாயநம்வ்யாஸம் வித்திநாராயணம்விபும் । கோஹ்யந்ய:புண்டரீகாக்ஷாந்மஹாபாரதக்ருத்பவேத்) இதி த்ருதியேம்ஸே சதுர்த்தே. அதாவது - வேதவ்யாசனை யுபகரணமாகக்கொண்டு மஹாபாரதம் செய்தாப்போலே யென்றபடி. இதுக்கென்றது- இப்பாட்டுக்கென்றபடி. ஆளவந்தார் நிர்வாஹத்துக்கு, "இன்றமிழ்பாடியவீசன்" என்றதிலேநோக்கு. ஈசன் - சமர்த்தனென்றபடி. எம்பெருமானார் நிர்வாஹத்துக்கு, "என்னாற்றன்னை யின்றமிழ்பாடியவீசனை" என்றதிலே நோக்கு. ஈசன்-ஹேயப்ரதிபடனென்றபடி. "க்ருஷ்ணத்வைபாயநம்" (க்ருஷ்ணத்வைபாயநம்) இத்யாதி - ஆளவந்தார் நிர்வாஹத்திலே.

போகியவன்றைக்கன்று - என்றைக்கு மென்னை யுய்யக்கொண்டு - என்னைத் தன்னாக்கி யென்னாற்றன்னை யின்றமிழ்பாடிய வென்றுதொடங்கி, என்சொல்லில்நிற்பனோ வித்யந்வய:..*

இரண்டாம்பாட்டு.

என்சொல்லிநிற்பனென்னின்னுயிரின்றொன்றா
யென்சொல்லால்யான்சொன்னவின்கவியென்பித்துத்
தன்சொல்லாற்றான்றன்னைக்கீர்த்தித்தமாயனென்
முன்சொல்லுமூவுருவாமுதல்வனே.

ஆறாயிரப்படி.

(என்சொல்லி) என்னையுமொருவஸ்துவாகக்கொண்டு, என்சொல்லால் யான்சொன்ன வின்கவியென்பித்து - ப்ரஹ்மருத்ராதிகளுக்காத்மாவாய் நின்று ஸ்ருஷ்ட்யாதிகளைப்பண்ணினாப்போலே, என்னையுபகரணமாகக்கொண்டு திருவாய்மொழிபாடியருளின தன்னுடைய விந்தகுணத்தை யெத்தைச்சொல்லி பர்யவஸிப்பதென்கிறார் ....*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், நான் தன்னைக்கவிபாடுகைக்கு, ப்ரதம ப்ரவர்த்தகனான தான் நான்பாடினேனென்று லோகத்தில் ப்ரஸித்தமாக்கித் தான் தன்னைப்பாடிக்கொண்ட வாஸ்சர்யபூதனை யெதுசொல்லி தரிப்பேனென்கிறார்.

என் - என்னுடைய. இன்-விஷயாந்தரஸக்தமான. உயிர்-ஆத்மாவானது. இன்று-இன்று. ஒன்றாய்-தனக்கொருவஸ்துவாய். என்-என்னுடைய. சொல்லால்-வசநவ்யக்தியாலே. யான்-நான்கர்த்தாவாக. சொன்ன-சொன்ன. இன் - இனிய. கவி-கவி. என்பித்து-என்றுநாட்டிலேப்ரஸித்தமாக்கி. தன் - தன்னுடைய. சொல்லால்-வாக்காலே. தான்-தான்கர்த்தாவாய்க்கொண்டு. தன்னை - தன்னைவிஷயமாக்கி. கீர்த்தித்த-ஸ்துதித்தவனாய். நான்சொன்னேனென்கைக்கு, என் - எனக்குள்ளேயிருந்து. முன்சொல்லும்-முன்னுருச்சொல்லக்கடவ. மாயன்-ஆஸ்சர்யபூதனாய். இதுக்குதாஹரணமென்னலாம்படி, மூவுருவாம்-மூர்த்தித்ரயத்தையுடையனாய். முதல்வன்-ஜகத்தைஸ்ருஷ்டித்திருக்கிற காரணபூதனை. என்-எத்தை. சொல்லி-சொல்லி. நிற்பன் - தரிப்பேன்.

அவனுபகாரம் பாசுரத்துக்கு நிலமல்லவென்று கருத்து ....*

ஈடு - இரண்டாம்பாட்டு.

தான் தன்னைக்கவிபாடி, நான்பாடினேனென்று லோகத்தில் ப்ரஸித்தமாக்குவதே! (ஒருவனுடையபடி யிருந்தபடியென்) என்று அவனுடைய வாஸ்சர்யத்தைக்கண்டு விஸ்மிதராகிறார். அநாதிகால மஹங்காரமமகாரங்களாலே நஷ்டப்ராயமாய்த் தன்பக்கல் வைமுக்யத்தைப்பண்ணிப்போந்தவென்னை, நிர்ஹேதுகமாக நானபிமுக்யம்பண்ணும்படி அவன் விஷயீகரித்தபடியை யநுஸந்தித்தா லெத்தைச்சொல்லி நான்தரையில் கால்பாவுவதென்கிறார்.

(என்சொல்லிநிற்பன்) அவனென்னை விஷயீகரித்த விஷயீகாரம் நிர்ஹேதுகமென்னவோ, ஸஹேதுகமென்னவோ. இத்தலையை யாராய்ந்

துபார்த்தவிடத் தொருஹேதுகாண்கிறிலர், அத்தலையை யநுசந்தித்துப் பார்த்தவிடத்தொரு ஹேதுகாண்கிறிலர். அநாதிகாலம் கைவிட்டதுக்கு மொருஹேதுகாண்கிறிலர், இன்று கைக்கொண்டதுக்கு மொருஹேது காண்கிறிலர். என்றிய, அதுவென், உடையவனாகையாலே தன்னுடைமையை வேண்டினபோது விஷயீகரித்தானாலோவென்னில் ; அங்ஙனேசெய்யப்போகிறதில்லை; தன்னுடைமையைத் தான் விஷயீகரித்தானா யிருக்கையன்றிக்கே, இவர்வாக்காலே தன்னைக்கவிபாட, தானுமுளனாய்த் தன்விபூதியுமுண்டாயிற்றாக நினைத்திராநின்றானவன்; ஆகையாலே தான் தரிக்கைக்கோ ரூற்றங்கோல்காண்கிறிலர்.

(என்னின்னுயிரின்றொன்றாய்) (இன்னுயிர்) பகவதபிப்ராயத்தாலே, அவனுடைய வங்கீகாரத்துக்கிலக்கானபடியாலே சொல்லுகிறாராதல்; அன்றிக்கே, விபரீதலக்ஷணையாலே பொல்லாதென்கிறாராதல். (இன்றொன்றாய்) இன்றைக்கு முன்பிதுதன்னை யொன்றாக நினைத்திராராயிற்று, இன்றாயிற்றொருவஸ்துவாயிற்றது. இப்படி யும்மை விஷயீகரித்து அவன்றான்கொண்ட காரியந்தானேதென்ன (என்சொல்லாலித்யாதி) சொல்லுமென்னதாய், சொன்னேனும்நானாய், அநுதா னினியகவியாம்படி நாட்டிலே ப்ரஸித்தமாக்கினான். சப்தமாகில் சர்வஸ்வாமியான சர்வேச்வரனதாயிருக்கு மத்தனைபோக்கி, க்ஷுத்ரனான சம்சாரிக்கில்லையிறே. இனி சேதநனுக்குத் தனித்து ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்கு யோக்யதையில்லையிறே; ஸ்வரூபஸ்த்தித்யாதிகள் ததநீநமா யிருக்கையாலே. இதுதன்னை யினியகவியென்று நாட்டிலே ப்ரஸித்தமாக்கினான், "பாலேய்தமிழரிசைகாரர்பத்தர்பரவுமாயிரம்" என்கிறபடியே; தான் வென்று அல்லாதாரோடொக்க நின்று அர்ஜுநனைப்புகழுமாபோலே. "மலைபுரைதோள்" இத்யாதி. [செங்கணலைவலை] "சுவாகு) நாடிாº" (அவாக்யநாதர:) என்றிருக்கக்கடவவன், அதனுடையவழிந்தேத்தத் தொடங்கினானாயிற்று. "இன்கவியென்பித்து" என்றாநின்றீர், இங்ஙனன்றோவென்னில்; அன்று; பின்னைச்செய்தபடி யென்னென்னில் (தன்சொல்லாலித்யாதி) சொல்லும் தன்னது, சொன்னானும் தான், சொல்லிற்றும் தன்னை. கவிபாட்டுண்டேன் நானாகில் கிடீர் ! கவிபாடினேன் நானாவது. தான் தன்னைக் கவிபாடினானாகில், நீர் கவிபாடினீரென்று நாட்டிலே ப்ரஸித்தமாக்கினபடி யெங்ஙனேயென்னில் (மாயன்) சொல்லவேணுமோ, ஆச்சர்யசக்தியுக்தனன்றோ. என்னை யுபகரணமாகக்கொண்டு தானே கவிபாடினான், உம்மை யுபகரணமாகக்கொண்டு கவிபாடினபடி யெங்ஙனேயென்ன (என்முன்சொல்லும்) அவன் முற்சந்தையிடப் பின்னே நான்சொன்னேன். தான் சொன்னானாகில் ஸ்ரீகீதையோபாதி வறமுறுகலாய்ப்போமிறே. நம்பிதிருவழுதிநாடுதாஸர், "ஸ்ரீகீதைபோவாரொருவன் சந்த்யாஸதஸ்ஸிலேவந்துகண்டால், பின்னையிவனுக் குழக்கரிசியைக்கொடுப்பித்

துவிடுமித்தனைபோக்கி அங்கவர்களுள்ளிடங்கொடார்கள்; திருவாய்மொழி யப்யஸித்தா னொருவிண்ணப்பஞ்செய்வான் சென்றால், சர்வேஶ்வரனும் க்ராமத்திலுள்ளாரும் புறப்பட் டெதிர்கொண்டு தங்களிருப்பிடத்தையொழித்து அவனுக்குக்கொடுத் தாதரியாநிற்பர்கள்" என்று ப்ரஸாதிப்பர். அதுதா னென்போலவென்றால் (மூவுருவாமுதல்வனே) ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்து அவனை யத்யயநம்பண்ணுவித்து தேவர்களுக்கு வெளிச்சிறப்பைப்பண்ணுவித்து "அதுதன்னை ப்ரஹ்மாசெய்தான்" என்று அவன்றலையிலே யேறிட்டும், ருத்ரனுக் கந்தராத்மாவாய்ப்புக்கு நின்று த்ரிபுரதஹநத்தைப் பண்ணுவித்து "ருத்ரன்செய்தான்" என்று அவன்றலையிலே யேறிட்டும் விருதுபிடிக்கப்பண்ணினாற்போலேயும், தானே ப்ரபந்தத்தைப்பண்ணி, நான் பண்ணினேனென்று என்றலையிலே யேறிட்டு எனக்கொரு ப்ரஸித்தியைத்தந்தான். தானே கார்யஞ்செய்து பிறர்தலையிலே யேறிடுகை யவனுக்குப்பண்டே ஸ்வபாவங்கிடீர்! "யொ ...ஹூாணம் விஃ யாதி ...ஹிணொதி" (யோ ப்ரஹ்மாணம்விததாதிபூர்வம்யோவைவேதாம்ஶ்சப்ரஹிணோதி) என்று ப்ரஹ்மாவை யோதுவித்ததும், "விஷ்ணு ... தெஜஸஃ । த ... ஃ." (விஷ்ணுராத்மாபகவதோபவஸ்யாமிததேஜஸ: । தஸ்மாத்தநுர்ஜ்யாஸம்ஸ்பர்ஶம்ஸவிஷேஹே மஹேஶ்வர:.) இப்போதுதானே நடத்திக்கொண்டதென்னென்றால்; ஸ்வேநரூபேண நின்று கார்யஞ்செய்யுமாபோலே ப்ரஹ்மருத்ராதிகளைத் தனக்கு சரீரமாகக்கொண்டு நின்று ஸ்ருஷ்டிஸம்ஹாரங்களைப்பண்ணி, அவர்கள்மேலே யேறிட்டாப்போலேகிடீர்! என்மேலே யேறிட்டு, கவிபாடினேன் நானாகச்சொல்லித் தலைக்கட்டினபடியுமென்கைக்காகச்சொல்லிற்று ....*

ஜீயர் அரும்பதம்.

இரண்டாம்பாட்டு (என்சொல்லியித்யாதி.) "என் சொல்லால்யான் சொன்னவின் கவியென்பித்துத்தன் சொல்லால் தான்றன்னைக் கீர்த்தித்தமாயன்" என்றபதங்களைக் கடாக்ஷித்தவதாரிகை (தான்தன்னையித்யாதி.) "என்னின்னுயிரின்றொன்றாய் - என்சொல்லிநிற்பன்" என்றவற்றைக் கடாக்ஷித்தவதாரிகாந்தரம் (அநாதிகாலமித்யாதி.)

"என்சொல்லிநிற்பன்" எந்தஹேதுவைச்சொல்லித் தரிப்பனென்றுசப்தார்த்தம். ஒருவழியாலும்தரிக்கைக் காலம்பாமில்லையென்று கருத்து. தமக்காலம்பாமில்லாமையைப்பரக்க வுபபாதிக்கிறார் (அவனென்னையென்றுதொடங்கி, ஊற்றங்கோல்காண்கிறிலொன்னுமளவாலே.) கீழ்வாக்யத்தி லர்த்தத்தை வ்யுத்க்ரமமாக விவரிக்கிறார் (இத்தலையை யித்யாதிவாக்யத்வயத்தாலே.) "இத்தலையை" இத்யாதி வாக்யவிவரணம் (அநாதிகாலமித்யாதிவாக்யத்வயம்.) அதாவது-அநாதிகாலமுபேக்ஷித்த உத்கடயாத்ருச்சிகம்டியான த்ருப்தவிஷயீகாரம்போலே நிர்ஹேதுகமென்னவும்போகாது, இத்தலையிலொரு ஹேதுகாணாமையாலே உபாஸகவிஷயீகாரம்

போலே ஸஹேதுகமென்னவும் போகாதென்றபடி. ஸ்வதந்த்ரமானவன், ஸ்வத்தைய பேக்ஷிதமானபோது அங்கீகரிப்பன், அநபேக்ஷிதமானபோது விட்டுவைப்பன், ஆகை யாலே நிர்ஹேதுகமென்னவொண்ணுதோவென்கிற ப்ரதிவாதியுக்தியை யநுவதித் து பரிஹரிக்கிருர் (என்றியவித்யாதி வாக்யத்வயத்தாலே) என்றிய-எதுக்காக. அது வென்-அதேது. ஊற்றங்கோல்-ஊன்றுகோல். இன்றென்றது - * மயர்வறமதிநலம ருளின வின்றென்றபடி.

மேலே "ஒன்ருய்" என்ருமிற்க, "இன்னுயிர்" என்று ப்லாகிக்கலாமோவெ ன்ன (பகவதித்யாதி) பரிஹாராந்தரம் (அவனுடையவித்யாதி) மூன்ருமர்த்தம் (அ ன்றிக்கே விபரீதேத்யாதி) "இன்ருன்ருய்" என்றதுக்குபாவம் (இன்றைக்குமுன் பித்யாதி)

மேலுக்கவதாரிகை (இப்படியும்மையித்யாதி) அவன் ப்ரஸித்தமாக்கிஞனெ ன்கிறதென், வஸ்துதஃ சப்தமும்மதன்ருேவென்ன (சப்தமாகிலித்யாதி) சொன்ன வர் நீரல்லீரோவென்ன (இனிசேதநனுக்கித்யாதி) அதுக்குஹேது (ஸ்வரூபஸ்த்தித் யாதிகளித்யாதி) சப்தார்த்தம் (இதுதன்னையித்யாதி) நாட்டிலே ப்ரஸித்தமாக்கிஞ னென்கைக்கு, இவர்கவியை நாட்டாரிஙிதென்பர்களோவென்ன (பாலேய்தமிழரி த்யாதி) தானேசெய்து வேருெருவர்பக்கலிலே ப்ரஸித்தமாக்கினதுக்கு த்ருஷ்டா ந்தம் (தான்வென்றித்யாதி) தானேவென்று அவனைப்புகழ்ந்தாஞேவென்ன, ப்ர மாணம் (மலையித்யாதி) பெரியாழ்வார்திருமொழி. "அலைவலை" என்றதிங்குவேண் டுவது. அலைவலை-பஹுஜல்பம் அதுக்கர்த்தம் (அவாகீத்யாதி)

தடஸ்த்தசங்கை (இன்கவியித்யாதி) "தனசொல்லால்" இத்யாதிக்கர்த்தம் (சொல்லும்தன்னதித்யாதி) " என்சொல்லால் யான்சொன்ன " என்றதுக்கு ப்ரதி கோடிதயா, தன்சொல்லால் தான கீர்த்தித்தவென்ருதே, " தன்னை " என்றுவிசே ஷிக்கிறதென்னென்ன; த்ருஷ்டாந்தார்த்தமென்கிருர் (கவிபாட்டுண்டேனித்யாதி) கவிபாட்டுண்கை-கவிக்கு விஷயமாகை.

மேலில்பதத்துக்கு சங்கதியிடுவாராக வதிஷ்டிகை (என்னையுபகரணமாக வித்யாதி) தான்சொல்லவொண்ணுதோ, இவனைகொண்டு சொல்லவேணுமோவெ ன்ன (தான்சொன்ஞுகிலித்யாதி) வறமுறுகல் - கருகிப்போனது. ஸ்ரீகீதைக்கும் திருவாய்மொழிகருமுண்டான வாசியை யாப்தஸமவாதத்தாலே தர்ஸிப்பிக்கிருர் (நம்பியித்யாதி) ஸந்தயாஸதஸ்ஸு - ஊர்ப்பொதுச்சாவடி. அதுதானனைபோலவெ ன்றது - தான்கவிபாடி ஆழ்வார்மேலே யேறிடுகிறதுதா னென்போலேயென்றப டி. " கீழ்ச்சொன்ன வேதப்ரதாநமும் த்ரிபுரதஹநமு மவனேசெய்தான் " என்று மதுக்குமேலே ப்ரமாணங்காட்டுவாராக பீடிகை (தானேகார்யமித்யாதி) ப்ரமாண த்தன்னை யருளிச்செய்கிருர் (யோப்ரஹ்மாணமித்யாதி) (ஸவிஷேஹமஹேஸ்வரஃ) என்றதும் என்றுகூட்டுவது. இதுக்கு, (ஸ்வபாவங்கிடீர்) என்றுகீழோடேயந்வயம். " மூவுருவாமுதல்வன் " என்று - ஸ்வவ்யாபாரத்துக்குக் காரணமென்பா னென் னென்ன; தான்செய்தகார்யம் தன்னதீநமானுப்போலே இவர்கள்செய்தகார்யமும் தன்னதீநமென்கைக்காகச் சொல்லுகிறதென்கிருர் (இப்போதுதானேயித்யாதி), இவர்கள்மேலே யேறிட்டது மதுபோலேகிடீரொன் றத்யாஹார்யம்.

* என்னின்னுயிரின்ருென்ருயென்றுதொடங்கி, மூவுருவாமுதல்வன் - என்று சொல்லும் - என்சொல்லிநிற்ப னித்யந்வயஃ ....

மூன்றாம்பாட்டு.

ஆமுதல்வனிவனென்றுதற்றேற்றியென்
னாமுதல்வந்துபுகுந்துநல்லின்கவி
தூமுதற்பத்தர்க்குத்தான்றன்னைச்சொன்னவென்
வாய்முதலப்பனையென்றுமறப்பனோ.

ஆறாயிரப்படி.

(ஆமுதல்வன்) ஆமிவனே சர்வேஶ்வரனென்று தன்னையுள்ளபடியே யறிவித்து, என் நாவைநியமித்துக் கொண்டுவந்து புகுந்து, * அயர்வறுமமரர்களுக்கு போக்யமாக நல்லனவா யினியவானகவிகளைத் தான் தன்னைச்சொல்லுகையாகிற விம்மஹோபகாரத்தை யென்று மறப்பனென்கிறார்...*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், பக்தர்களுக்காக வென்னைக்கொண்டு தான் தன்னைக் கவிபாடின வுபகாரகனை யொருகால் மறக்கவிரகுண்டோ வென்கிறார்.

முதல்வன்-காரணபூதனான தான். இவன்-இவன். ஆம் -கவியாநிகைக்காம். என்று - என்று. தன் - தன்னை. தேற்றி-என்பக்கலிலே தேறும்படிபண்ணி. அதுக்கீடாக, முதல்-முந்துற. என்-என். நா-நாவிலே. வந்து-வந்து. புகுந்து-புகுந்து. நல்-அர்த்தசப்தலக்ஷணங்களில் குறைவற்றிருப்பதாய். இன் - சந்தர்ப்பசாரஸ்யத்தையுடைய. கவி - கவியை. தூ - சத்வசுத்தி. முதல் - முதலான. பத்தர்க்கு - பக்திகுணயோகத்தையுடையவர்க் கநுபாவ்யமாம்படி. தான்-தானே. தன்னை - தன்னை. சொன்ன - சொல்லாநின்றுகொண்டு. என் - என். வாய் - வாக்வ்ருத்திக்கு. முதல் - முதலான. அப்பனை - உபகாரகனை. என்று - என்று. மறப்பன் - மறப்பன்.

அவ்வுபகாரகத்வம் ப்ரகாசியாததொருகாலமுண்டாகிலிறே மறக்கலாவதென்றுகருத்து. கவிபாடுகைக்கு ப்ரதாநனுவா னிவனென்று என்னைத் தன்பக்கலிலே தேறும்படிபண்ணி யென்றுமாம். வாய்முதலென்று - வாய்த்த ஹேதுபூதனென்றுமாம். தூமுதல் பத்தரென்று - அநந்யப்ரயோஜநராய் ப்ரதாநரான பக்தரென்றுமாம்...*

ஈடு - மூன்றாம்பாட்டு.

ப்ரத்யுபகாரம்பண்ணுதொழியவு மாங்கிடீர் நான் மறந்துபிழைக்கப் பெற்றேனாகி லென்கிறார்.

(ஆமுதல்வனிவனென்றுதற்றேற்றி) முதல்வனுமிவனென்று தன்பக்கலிலே யெனக்குத் தெளிவுண்டாம்படியாகப்பண்ணி - காரணவாக்யங்களிலுபாஸ்யனாகச் சொல்லப்படுகிறான் தானேயென்று தன்பக்கலிலே நான்தெளியப்பண்ணியென்னுதல்; அன்றிக்கே, பரமபதத்தோயா! சம்சாரத்தையும் திருத்தநினைத்தோம், அதுக்கிவன்முதலாம் - அடிய

மிவனென்று, தற்றேற்றி-என்பக்கலிலே தன் ஸ்வரூபாதிகளைத் தெளியப்பண்ணி யென்னுதல். இங்கேயருளிச்செய்யும்வார்த்தை - "திருப்புற்றுக்குக் கிழக்கே கரியமாணிக்காழ்வார்திருமுன்பின் ஸோபாநத்திலே ஆளவந்தாரெழுந்தருளியிருக்க, உடையவர் திருப்புற்றுக்குக் கிழக்காக வெழுந்தருளி நிற்கிறவனைக்கண்டு, 'ஆமுதல்வனிவன்' என்றருளிச் செய்தாராம்" என்று. (என்நாமுதல்வந்துபுகுந்து) சர்வேஶ்வரன் ப்ரஹ்மாவைக்கடாக்ஷித்து, அவன்பின்னை "மத்ப்ரஸாதாத் ப்ரவ்ருத்தேயம்ஸரஸ்வதீ" (மச்சந்தாதேவதேப்ரஹ்மந் ப்ரவ்ருத்தேயம்ஸரஸ்வதீ) என்கிறபடியே அவன்சரஸ்வதியையேவி, இப்படி நாவிரண்டு நிலைநின்றிறே ஸ்ரீவால்மீகிபகவானைப் பேசுவித்தது; அங்ஙனன்றிரிடையீடின்றிக்கே, என்னுடையநாக்கிலேதானே முற்பாடனாய்வந்து புகுந்தென்னுதல். அன்றிக்கே, என் நாவுக்கடியாய்வந்து புகுந்தென்னுதல். (நல்லின்கவி) லக்ஷணோபேதமாய், அந்தலக்ஷணங்கிடக்கச்செய்தே சொல்லினிமைதானே ஆகர்ஷகமாம்படி யினிதான கவிகளை. (தூமுதல்பத்தர்க்கு) அஸ்ப்ருஷ்ட சம்சாரகந்தரான நித்யஸூரிகளுக்கு. "கேட்டாரார் வானவர்கள்" என்கிறபடியே, அவர்கள்கொண்டாடும்படிசொன்ன வென்னுதல். சம்சாரத்தில் தலையான முமுக்ஷுக்களுக்கு. (தான்தன்னைச் சொன்ன) தானேசொல்லுதல் நானேயொருபடிசொல்லுதல் செய்கையன்றிக்கே, *என்நாமுதல்வந்துபுகுந்து தான்தன்னைச்சொன்னானாயிற்று. (என்வாய்முதலப்பனை) எனக்குவாய்த்த காரணபூதனான மஹோபகாரகனை யென்னுதல்; "என் நாமுதல்" என்கிறது தன்னையே யநுபாஷித்து, என் வாக்குக்கு முதலானவப்பனையென்னுதல். (என்றுமறப்பனோ) முன்புநாதிகாலம் மறந்துபோந்ததாகில் இனிமேல் நினைக்கைக்குடலான காலத்தையெல்லாம் மறக்கைக்குடலாக்கினால் தான்மறப்பனோ. முன்பு நினைக்கையிலுள்ள வருமையோபாதியும் போருமினி மறக்கையிலுள்ள வருமையும், இனியேதேனுமொருநாள் தானென்னாலே மறக்கப்போமோ*

ஜீயர் அரும்பதம்.

மூன்றும்பாட்டு (ஆமுதல்வனித்யாதி.) "வாய்முதலப்பனை யென்று மறப்பென்றத்தைக்கடாக்ஷித்தவதாரிகை (ப்ரத்யுபகாரமித்யாதி)

"தற்றேற்றி" என்று - தச்சப்தத்தாலே யீஶ்வரனைச்சொல்லி, தன்பக்கலிலே தெளிவைப்பண்ணியென்றபடி. விவரணம் (காரணவாக்யங்களிலித்யாதி.) அர்த்தாந்தரம் (அன்றிக்கேயித்யாதி.) "தற்றேற்றி" என்றதுக்கு-தன் ஸ்வரூபாதிகளையென்பக்கலிலே தெளியப்பண்ணி யென்றிரண்டாமர்த்தம். அதாவது - ஜகத்தைத்திருத்தத்தக்க ஜ்ஞாநமுண்டாம்படி * மயர்வறமதிநல மருளுகை. ப்ராசங்கிகமாக வைதிஹ்யம் (இங்கேயித்யாதி.) இங்கேயென்றது - ஜகத்தைத் திருத்துகைக்கடியாமென்று சொன்ன விவ்விடத்திலே யென்றபடி.

என்னுவிலே முற்பாடனாய்வந்து புகுந்தென்னுமதுக்கு வ்யாவர்த்யம் (சர்வேஶ்வரனித்யாதி.) இடையீடு - வ்யவதாநம். என்னுவிலே, முதல்-முற்பாடனாய்

அத்வாரகமாகப்ரவேசித்தென்னுதல்; என்னுவுக்குமுதலான காரணமாய்வந்து புகுந்தென்னுதல். "ராமஸ்யசரிதம்க்ருத்ஸ்நம்குருத்வம்ருஷிஸத்தம। மச்சந்தாதேவதேப்ரஹ்மந்" (ராமஸ்யசரிதம்க்ருத்ஸ்நம்குருத்வம்ருஷிஸத்தம। மச்சந்தாதே வதேப்ரஹ்மந்) இத்யாதிபாலகாண்டே. என்னுவுக்கடியாயென்றது - என்வாக்ப்ரவ்ருத்திக்கடியா யென்றபடி.

தூயராய் - பரிசுத்தராய். ப்ரதாநரான நித்யஸூரிகளுக்கென்று முந்தினவர்த்தம். "முதல் பத்தர்" என்றதுக்கர்த்தாந்தரம் (சம்சாரத்திலித்யாதி.) எம்பெருமானார் நிர்வாஹத்திலே வ்யாவ்ருத்தி (தானேசொல்லுதலித்யாதி.)

"என்றுமறப்பனோ" என்றதுக்குபாவம் (முன்பநாதித்யாதி.) மேல்வாக்ய விவரணம் (முன்புநினைக்கையித்யாதி வாக்யத்வயமும்)............... ....*

நான்காம்பாட்டு.

அப்பனையென்றுமறப்பனென்னாகியே
தப்புதலின்றித்தனைக்கவிதான்சொல்லி
யொப்பிலாத்தீவினையேனையுய்யக்கொண்டு
செப்பமேசெய்துதிரிகின்றசீர்கண்டே.

ஆறாயிரப்படி.

(அப்பனையென்று) என்னை யுபகரணமாகக்கொண்டு கவிசொல்லாநிற்கச்செய்தே, தப்பாதபடி சொல்லி யொப்பிலாத்தீவினையேனுயிருக்கச்செய்தே என்னை யாத்மார்த்தமாக வடிமைகொண்டு, மேன்மேலன நன்மைசெய்து திரிகின்ற சீர்கண்டு, அப்பனையென்று மறப்பனென்கிறார்.*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், என்விரோதியைப்பாராதே விரும்பி யென்னைக்கொண்டு தப்பாமல் கவிபாடுவித்துக்கொண்ட மஹோபகாரத்தைக் கண்டுவைத்து அவனைமறக்கும்படியென்னென்கிறார்.

என்னாகியே - என்பக்கலிலேதானாய். தப்புதல் - தப்புதல். இன்றி - இல்லாதபடி. தனை - தன்னை. தான் - தானே. கவி - கவி. சொல்லி - சொல்லி. ஒப்பு- ஒப்பு. இலா - அற்றிருப்பதாய். தீ - க்ரூரமான. வினையேனை - பாபத்தையுடையேனான வென்னை. உய்ய - உஜ்ஜீவிக்கும்படி. கொண்டு - கைக்கொண்டு. அஸ்ப்ருஷ்டசம்சாரகந்தரோடு பரிமாறுமாபோலே, செப்பமே - செவ்வையே. செய்து-செய்து. திரிகின்ற - வர்த்திக்கிற. சீர் - சீலத்தை. கண்டு - கண்டுவைத்து. அப்பனை- இப்படி யுபகாரகனானவனை. என்று - அபகாரியானபோதுதான். மறப்பன் - மறப்பனோ. ....*

ஈடு - நான்காம்பாட்டு.

தானே தன்னைக் கவிபாடிக்கொண்டானாகி லோராஸ்சர்ய மில்லை, அதுக்குப் பாங்கன்றிக்கேயிருக்கிற வென்னைக்கொண்டு தப்பாமே கவிபாடின விவ்வுபகாரத்தை யினிமறக்க வுபாயமில்லையெ யன்கிறார்.

(அப்பனையென்றுமறப்பன்) உபகாரகனானவனை நானென்று ம றப்பன். இனி அவனுபகாரம்பண்ணினுற்றுன் மறக்கப்போமோ.

உமக்கு மறக்கவொண்ணுமைக் கவன்பண்ணினவுபகாரமேதென் றல் (என்னுகியேதப்புதலின்றித்தனைக்கவிதான்சொல்லி) என்னை யுப கரணமாகக்கொண்டு கவிபாடுகிறவிடத்து, என்னுடைய ஸ்பர்ஶத்தாலே வந்ததோஷம் தட்டாதபடி கவிபாடினுன். (என்னுகியே) என்பக்கலி லேதானுய். இவ்விடத்துக் கெம்பாரருளிச்செய்யும்படி - " தான்பாடினு னுகில் நிரவத்யமாய்த்தலைக்கட்டும், நான் பாடினேனுகிலும் வருந்தியொ ருபடி தலைக்கட்டும், என்னையுபகரணமாகக்கொண்டு கவிபாடாநிற்கச்செ ய்தேயு மென்னேட்டை ஸ்பர்ஶத்தால் வந்ததோஷம் தட்டாதபடி கவி பாடித்தலைக்கட்டினுன் " என்று. (தனைக்கவிதான்சொல்லி) விஷயாநு ரூபமாகக் கவிபாடினுன். (ஒப்பிலாத்தீவினையேனையுய்யக்கொண்டு) என் னையுபகரணமாகக்கொண்டு இப்படி கவிபாடுவித்தது, முன்பு நின்றநிலை யிற்காட்டில் நானெவ்வளவுபுகுரநின்றேனுக; நான் முன்புற்றையிற்காட் டிலோரடிவரநின்றதுண்டோ. (ஒப்பிலாத்தீவினையேனையுய்யக்கொண்டு) நானுமவனுக்கொப்பனென்கிருர். சர்வஜ்ஞத்வ சர்வசக்தித்வங்களுக்கவ னுக் கொப்பில்லாதாப்போலே யாயிற்று, அஜ்ஞாநாசக்திகளுக் கெனக் கொப்பில்லாதபடியும். (உய்யக்கொண்டு) "ஸஞ்ஜீவநம்தமேநாவிது:" (ஸந்தமேநம்ததோவிது:) என்கிறபடியே என்னை யுஜ்ஜீவிக்கும்படி கைக் கொண்டு. (செப்பமேசெய்துதிரிகின்ற) குடிலஹ்ருதயனுயிருக்கிற வென் னேடே, அஸ்ப்ருஷ்ட சம்சாரகந்தரான நித்யஸூரிகளோடு பரிமாறுமா போலே என்னுடனே செவ்வையே பரிமாறினுனென்னுதல்; எனக்கு ர க்ஷைபண்ணிப் போருகிறவென்னுதல். (சீர்கண்டே) இப்படியிருக்கிற சீலாதிகுணங்களை யநுசந்தித்து - அப்பனையென்றுமறப்பன்............*

ஜீயர் அரும்பதம்.

நான்காம்பாட்டு. (அப்பனையித்யாதி.) " என்னுகியேதப்புதலின்றி, ஒப்பிலா த்தீவினையேனையுய்யக்கொண்டு, அப்பனையென்றுமறப்பன் " என்கிறவற்றைக்கடா க்ஷித்தவதாரிகை (தானேதன்னையித்யாதி.)

மறக்கப்போகாமையி னுறைப்பை யருளிச்செய்கிருர் (இனியவனித்யாதி.)

" என்னுகியேதப்புதலின்றி " என்றவநந்தரம், " ஒப்பிலாத்தீவினையேனை " என்றதுக்கு பாவம் (என்னை யுபகரணமாகவித்யாதி.) உக்தத்துக்கு சம்வாதம் (இ வ்விடத்துக்கித்யாதி.)

அவனுக்கொத்தபடி யெப்படியென்ன (சர்வஜ்ஞத்வேத்யாதி.)

செப்பம் - ஆர்ஜவமும், ரக்ஷையும்.

என்னுகியே தப்புதலின்றி யென்று தொடங்கி, திரிகின்றசீர்கண்டு - அப்ப னையென்று மறப்பனித்யந்வய:...*

ஐந்தாம்பாட்டு.

சீர்கண்டுகொண்டுதிருந்துநல்லின்கவி
நேர்படயான்சொல்லுநீர்மையிலாமையி
லேர்விலாவென்னைத்தன்னாக்கியென்னாற்றன்னைப்
பார்பரவின்கவிபாடும்பரமரே.

ஆறாயிரப்படி

(சீர்கண்டு) தன்னுடைய கல்யாணகுணங்களையுள்ளபடி கண்டு கொண்டு, திருந்துநல்லின் கவிநேர்பட யான் சொல்லும் நீர்மையிலா மையில் எனக்கு சத்ருசரில்லை; இப்படி குணலேசமின்றியேயிருந்தவெ ன்னைத் தன்னைப்போலே ஹேயப்ரத்யநீகத்வ சர்வஜ்ஞத்வாதி குணவிசி ஷ்டனாக்கி, என்னாற்றன்னை சர்வலோகமு மிக்கவியைஸ்துதிக்கும்படி யி ன்கவிபாடும் பரமனையென்று மறப்ப னென்கிறார்........................*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், எனக்குக்கவிபாடுகைக்கு யோக்யதையின்றிக்கே யிருக்க, எனக் கு யோக்யதையுண்டாக்கித் தானே தன்னைக் கவிபாடிக்கொள்ளும் பெரியவனாயிரு ந்தானென்கிறார்.

சீர் - ப்ரதிபாத்யங்களான தன்குணங்களை. கண்டு - அபரோக்ஷித்து. கொ ண்டு - அநுசந்தித்து. திருந்து - ப்ரதிபாதகமாம்படி திருந்தியிருப்பதாய். நல் - சப் தார்த்தலக்ஷணோபேதமாய். இன் - * ஸம்ஸ்ரவேமதுரமான. கவி - கவிகளை. நேர் பட - வாய்க்கும்படியாக. யான் - நான். சொல்லும்-சொல்லுகைக்கீடான. நீர்மை- ஜ்ஞாநசக்த்யாதிஸ்வபாவம். இலாமையில் - இல்லாமையாலே. ஏர்விலா - அஸத்ரு ஶனை, என்னை - என்னை. தன் - தன்பக்கலிலே. ஆக்கி-ஜ்ஞாநப்ரேமாதிகளையுடை யேனும்படிபண்ணி. என்னால் - என்னாலே. தன்னை - தன்னை. பார் - கடிந ஸ்வபா வையானபூமியகப்பட. பரவு - கொண்டாடும்படி. இன் - மதுரமான. கவி - கவி யை. பாடும் - பாடுதலால். பரமர் - பரமனாயிராநின்றான்........................*

ஈடு - ஐந்தாம்பாட்டு.

தன்னைக்கவிபாடுகைக்கீடான நீர்மையுமின்றிக்கே இச்சையு மின் றிக்கே யிருக்கச்செய்தே, லோகமெல்லாம் கொண்டாடும்படியான கவி யை யென்னைக் கொண்டுபாடுவதே! என்ன சர்வேஶ்வரனோவென்கிறார்.

(சீர்கண்டுகொண்டு) கல்யாணகுணங்களை யவகாஹித்து. (தி ருந்தித்யாதி) கட்டளைப்பட்டு லக்ஷணோபேதமாயினிதான கவிகளை. (நேர்படவித்யாதி) இவையொன்று மில்லையாகிலும், சொல்லுகிறவ னுடைய நன்மையாலே வருவதொருநன்மையு முண்டிறே கவிக்கு ; அப்படி வாய்க்கச்சொல்லும் ஸ்வபாவத்தை நானுடையேனல்லாமை யில். (ஏர்விலாவென்னை) ஏரொன்று - அழகு, அதில்லாதவென்னை. (தன்னாக்கி) தன்னோடொக்கப்பண்ணி யென்னுதல், தனக்காக்கியெ

ன்னுதல். (என்றால் தன்னையித்யாதி) என்னை யுபகரணமாகக்கொண்டு, தன்னைப்பாரிலுள்ளாரடையப்பரவும்படி யினிய கவிகளைப்பாடினன். விசேஷஜ்ஞாவிசேஷஜ்ஞரென்று வாசியின்றிக்கே. எல்லாரும் கொண்டாடும்படிபண்ணினன். (பரமரே) "ந தத்ஸமம்ச" (நதத்ஸமம்ச) என்கிற வாக்யங்கொண்டிவனுடைய வுத்கர்ஷமறியவேண்டா, என்னையிடுவித்துக்கவிபாடுவித்துக்கொண்ட விதுவேபோருமவனுடைய வுத்கர்ஷமறிகைக்கு...*

ஜீயர் அரும்பதம்.

அஞ்சாம்பாட்டு (சீர்கண்டித்யாதி.) "நீர்மையிலாமையில் ஏர்விலாவென்னை - பார்பரவின்கவிபாடும்பரமரே" என்றத்தைக்கடாக்ஷித்தவதாரிகை (தன்னைக் கவிபாடுகைக்கித்யாதி.) "ஏர்விலா" என்றத்தைப்பற்ற (இச்சையுமின்றிக்கே யென்றது.)

"ஏர்" என்று - அழகாய். இச்சையைச்சொல்லுகிறது கட்டளைப்பட்டு - திருந்தப்பட்டு. இவை - கட்டளைப்பாடு முதலானவை. நீர்மையென்று - ஜ்ஞாநசக்த்யாதிகளைச் சொல்லுகிறது இலாமையில் - இல்லாதிருக்கச் செய்தேயு மென்றபடி. (சொல்லுகிறவனுடைய நன்மையாலே) என்றவிடத்திலே - "அபிராமகவே ராஜதஸ்த்ரோரதரஸ்பந்தமாத்ரமேவ காவ்யம்" (அபிராமகவே ரஜாதஸ்த்ரோரதரஸ்பந்தமாத்ரமேவகாவ்யம்) இத்யாதியை யருளிச்செய்வர். "ஏர்" என்று- அழகாய், கவிபாடுகைக்கீடான விச்சையில்லாதவென்றபடி.

"பாரிலுள்ளார்" இத்யாதியின்விவரணம் (விசேஷஜ்ஞரித்யாதி.) பரமன்- சர்வாதிகன்...*

ஆறும்பாட்டு.

இன்கவிபாடும்பரமகவிகளாற்
றன்கவிதான்றன்னைப்பாடுவியாதின்று
நன்குவந்தென்னுடனாக்கியென்னாற்றன்னை
வன்கவிபாடுமென்வைகுந்தநாதனே.

ஆறாயிரப்படி.

(இன்கவி) இன்கவிபாடும்பரமகவிகள் தனக்குளராயிருக்கச்செய்தே, அவர்களைக்கொண்டு தன்னைக் கவிபாடுவியாதே, இன்று நன்குவந்து என்னுள்ளே புகுந்து, வேதங்களி னுள்ளுமடங்காத தனக்குங்கூடவடங்காத கவிகளைப்பாடின என்வைகுந்தநாதனை யென்று மறப்பனென்கிறார். ....*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், பெரியவர்களையிட்டுக் கவிபாடுவித்துக்கொள்ளாதே, என்னாலே தான் தன்னைக் கவிபாடுவித்துக்கொண்டு எனக்கு ஸ்ரீவைகுண்டநாதனான பெருமை தோன்ற விராநின்றா னென்கிறார்.

இன் - நிரதிசயமதுரமான. கவி - கவிகளை. பாடும் - பாடுமவர்களாய். பர
கவிகளால் - தங்களுக்கு மேலில்லாத கவிகளான பராசர பாராசர்ய வால்மீகிப்ர
ருதிகளாலும் முதலாழ்வார்களாலும். தன் - தனக்குத்தகுதியான. கவி-கவியை.
ான் - தான் ப்ரயோஜநகளுக்கொண்டு. தன்னை - நிரவதிகமாஹாத்ம்யயுக்தனை
ன்னை. பாடுவியாது - எப்போதும் பாடுவியாதே. இன்று - இன்று. நன்கு-சாபி
ந்திகளுக்கொண்டு. வந்து - வந்து. அக்கவிபாட்டை, என்னுடன்-என்னோடே.
ாக்கி - ஆக்கி. என் - எனக்கு. வைகுந்தநாதனே - தான ஸ்ரீவைகுண்டநாதனை
ெருமையைத் தோற்றுவியா நின்றுகொண்டு. என்றால் - என்றாலே. தன்னை-அந்
ப்பெருமையையுடைய தன்னை. பெருமைக்குத் தகுதியாம்படி, வன் - சிக்கென.
கவி - கவி. பாடும் - பாடாநிற்கும். ....*

ஈடு - ஆறும்பாட்டு.

வ்யாஸ பராஶர வால்மீகிப்ரமுகரான கவிகளைக்கொண்டு கவிபா
டுவித்துக்கொள்ளாதே, என்னையுபகரணமாகக்கொண்டு கவிபாடுவதே !
என்று ப்ரீதராகிறார்.

(இன்கவிபாடும் பரமகவிகளால்) பின்னைத் தான் தனக்குச் சி
லகவிகளைப் பாடவேண்டினால், அதுக்கீடாக விருப்பார் ஸ்ரீவேதவ்யாஸ
பகவான் ஸ்ரீபராசரபகவான் ஸ்ரீவால்மீகிபகவா னிவர்களுண்டாயிருக்க,
மற்றும் வேணுமாகில் “ செந்தமிழ்பாடுவார் ” என்று சொல்லப்படுகிற
முதலாழ்வார்க ளெல்லாருமுண்டாயிருக்க, என்னைக்கொண்டு கவிபாடு
வித்துக்கொண்ட விதுவுமொரு நீர்மையே ! யென்கிறார். முதலாழ்வார்க
ளிலே யொருவரை “ ஒருகவிசொல்லிக்காணும் ” என்ன [பெருகுமித்
யாதி] ஆற்றுப்பெருக்குப்போலே பெருகாநின்றுள்ள் மதத்தை யுடைய
வானையானது. [மாப்பிடிக்குமுன்னின்று] மதித்து முன்னடிதோற்றாதே
வருகிற வித்தையுந் தனக்குக் கையாளாக்கிக்கொள்ளவற்றா யாயிற்று இ
தினுடைய ப்ராவண்யத்தை யிருக்கிறபடி. [முன்னின்று] “நானிங்குத்தை
க்குச்செய்யவேண்டுவதென்” என்று * ஏவிற்றுச்செய்கைக் கவஸரப்ரதீ
க்ஷமாய் நிற்குமாயிற்று. [இருகணிளமூங்கில்வாங்கி] இரண்டுகண்ணே
றி அதுக்குத்தக்க முற்றனவு மின்றிக்கேயிருக்கிற மூங்கில்குருத்தைவாங்
கி. தான் மதித்து முன்னடிதோற்றாதே திரியச்செய்தேயும் பிடியின்பக்
கலுண்டான ஆதராதிசயத்தாலே அவதாநத்தோடே சாதரமாகவாங்கி.
[அருகிருந்ததேன்கலந்து] திருமஞ்சநத்துக் குபகரணங்கள் சமைந்தி
ருக்குமாபோலே, அருகே மலைமுழஞ்சுகளிலே நிரம்பியிருக்கிற தேன்க
ளிலே வாங்கித்தோய்த்து. மூங்கில் குருத்தையும் த்ரவத்ரவ்யத்தோபா
தியாக வருளிச்செய்கிறார். [நீட்டும்] இதுதானிரந்துகொடாநிற்க, அத்
தை “ உனக்குவேண்டுவார்க்குக்கொடாய் ” என்று நிற்குமாயிற்று [வா
ன்கலந்தவித்யாதி] மூங்கில் குருத்தும் தேனும் கலந்தாப்போலேயாயிற்
று, மேகமுமவன்றிருநிறமுங் கலந்திருக்கும்படி. இனிய கவிகளைப் பாட
வல்ல மேலானகவிகளாலே. (தன்கவிதான்தன்னைப்பாடுவியாது) கவியு

ம் தன்னது, பாடினும் தான், ப்ரதிபாத்யனும் தான். அவர்களைக்கொண்டு, தன்னுடைத்தானசொல்லாலே, அதுக்குப்ரதிபாத்யனான தான் தன்னைப்பாடுவியாதே. (இன்றுநன்குவந்து) இன்றுநானிங்ஙனே யுஜ்ஜீவிக்கும்படிக்கிடாக வந்தென்னுதல். அன்றிக்கே, நன்கு, உவந்து என்றுய்-நன்றாகவுகந்தென்றும்; இக்கவிபாடுகைதானே ப்ரயோஜநமாக வுகந்து. (என்னுடனாக்கி) என்னைப்பிரியாத வுபகரணமாகக்கொண்டு. (வன்கவி பாடும்) சொற்செறிவை யுடைத்தாயிருக்கை, "மொய்யசொல்லால்" என்கிறபடியே; ப்ரபலதமாயிருக்கையன்றிக்கே. (என்வைகுந்தநாதனே) "அழியாததான * கலங்காப்பெருநகரத்தை யிருப்பிடமாக வுடையோமானவோபாதி, அழியாதே வேதம்போலே நித்யமானவாயிரம் பாட்டுப் பாடுவிக்கவேணும்" என்றுபார்த்தான். பரமபதத்தை யிருப்பிடமாக வுடையனுகையாலே வந்தவேற்றத்தோபாதி யாகநினைத்திரா நின்றானாயிற்று, இக்கவிபாட்டுடையனுகையால் வந்தவேற்றத்தையும்.................*

ஜீயர் அரும்பதம்.

அரும்பாட்டு (இன்கவியித்யாதி.) "இன்கவிபாடும் பரமகவிகளால் தன்கவிதான் தன்னைப்பாடுவியாது - என்றுற்றன்னைவன்கவிபாடும்" என்றவற்றைக் கடாக்ஷித்தவதாரிகை (வ்யாசேத்யாதி.)

ஸம்ஸ்க்ருதம் தெரியாதவர்களிழக்கு மத்தனையன்றோ வென்ன (மற்றும் வேணுமாகிலித்யாதி)

முதலாழ்வார்கள் கவி யினிதா யிருக்குமோவென்ன (பெருகுமித்யாதி.) இப்பாட்டுக்குசங்கதி (முதலாழ்வார்களிலே) இத்யாதிகிழ்வாக்யம். இதுக்கர்த்தம் (ஆற்றுப்பெருக்கித்யாதி.) "மாப்பிடி" என்றதுக்கர்த்தம் (மதித்தித்யாதி.) "மா" என்ற - ஶ்லாக்யதை. பிடுங்கியென்னுதே, "வாங்கி" என்றதுக்குபாவம் (தான் மதித்தித்யாதி.) திருமஞ்சநத்துக் குபகரணங்கள் சமைந்திருக்குமாபோலே யென்றது - திருமஞ்சநங்கொண்டருளுகைக்குக் கலஶங்கள் பூரித்திருக்குமாபோலே யென்றபடி.. தோய்த்தென்னுதே, "கலந்து" என்றதுக்குபாவம் (மூங்கிலித்யாதி.) கொடுக்குமென்னுதே, "நீட்டும்" என்றதுக்குபாவம் (இதுதானித்யாதி.) "தேன்கலந்து" என்றும் "வான்கலந்த" என்றும் ஶப்தம் சமாநமாகையாலே யருளிச்செய்கிறார் (மூங்கில்குருத்துமித்யாதி)

"தன்கவி, தான், தன்னை" என்றமூன்றுக்கும் பேதமருளிச்செய்கிறார் (கவியுமித்யாதி.) விவரணம் (அவர்களையித்யாதி.)

உவந்து - உகந்து. உடன் - உபகரணம.

சொற்செறிவை யுடைத்தாயிருக்குமோவென்ன, ப்ரமாணம் (மொய்யவித்யாதி.)

இப்போது, "வைகுந்தநாதன்" என்றதுக்குபாவம் (அழியாததானவித்யாதி.) பாவாந்தரம் (பரமபதத்தையித்யாதி.)

என்வைகுந்தநாதன் - இன்கவிபாடும் பரமகவிகளா லித்யாரப்ய, வன்கவி மித்யந்வயஃ...*

ஏழாம்பாட்டு.

வைகுந்தநாதனென்வல்வினைமாய்ந்தறச
செய்குந்தன்றன்னையென்னாக்கியென்னாற்றன்னை
வைகுந்தனாகப்புகழவண்டீங்கவி
செய்குந்தன்றன்னையெந்நாளசிந்தித்தார்வனே.

ஆறாயிரப்படி.

(வைகுந்தநாதன்) ஸ்ரீவைகுண்டநாதனாயிருந்துவைத்து, என்னுடைய வல்வினைகளையெல்லாம்போக்கி, ஆதலால் குந்தனென்னும் திருநாமத்தையுடையனாய், என்னைத் தன்னைப்போலே தூயனாக்கி, என்னாற்றன்னை வைகுந்தனாகப்புகழ வண்டீன்கவி செய்குந்தன்றன்னை காலதத்வமெல்லா மநுபவித்தாற்றானார்வனோவென்கிறார் ....*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், என்விரோதியைப்போக்கித் தன்பெருமைக்கீடாகக் கவிபாடுவித்துக்கொண்ட வுபகாரகனை யநுசந்தித் தொருநாள் த்ருப்திபிறக்குமோவென்கிறார்.

வைகுந்தநாதன் - ஸ்ரீவைகுண்டநாதனான பெருமையையுடையனாய்வைத்து. தன்னையநுபவிக்கைக்குவிரோதியாய், வல்-ப்ரபலமான. என் - என். வினை-பாபத்தை. மாய்ந்தற-நசிக்கும்படி. செய் - பண்ணும். குந்தன் - தன்மையையுடைய. தன்னை-தன்னை. என்னாக்கி-எனக்குவிஷயமாக்கும்படியாக்கி. என்னால்-என்னைக்கரணமாகக்கொண்டு. தன்னை-அநதப்பாரம்யத்தையுடையதன்னை. வைகுந்தனாக-தன்னுடைய சர்வஸ்வபாவகுண்டநம் பிறவாதபடியாக. புகழ-புகழும்படி. வண்-உதாரமாய். தீ - இனிதான. கவி - கவியை. செய்-செய்யும்படியான. குந்தன் - உபகாரஸ்வபாவத்தையுடைய. தன்னை-தன்னை. சிந்திந்து-சிந்தித்து. எந்நாள்-எந்நாள். ஆர்வன்-த்ருப்திபிறப்பது.

உள்ளதனையும் நினைத்தாலு மாராதென்று கருத்து.

வல்வினைமாய்ந்தறச் செய்குந்தனென்று - விரோதியைப்போக்கும் குந்தமாகிற வாயுதததை யுடையவனென்றுஞ்சொல்லுவர். கவிசெய்குந்தனென்று-குந்தப்பூப்போலே சுத்தஸ்வபாவனென்றுஞ்சொல்லுவர்...... ....*

ஈடு - ஏழாம்பாட்டு.

என்னைக்கொண்டு, பரமோதாரமாய் நிரதிசயபோக்யமான கவியைப்பாடுவித்துக்கொண்ட மஹோபகாரத்துக்கு, இவனைக் காலதத்வமுள்ளதனையு மநுபவித்தாலும் த்ருப்தனாகிறிலேனென்கிறார்.

(வைகுந்தநாதன்) உபகரித்தவனென்னோடணையநின்றானொருவனாய் நானறிந்திருக்கிறேனே. * அயர்வறுமமரர்களதிபதியொருசம்சாரிபக்கலிலே மேல்விழாநின்றாலெங்ஙனே யறியிருக்கும்படி. "லோகநாத: புரா பூத்வா ஸுக்ரீவம் நாதமிச்சதி" (லோகநாத:புராபூத்வாஸு

க்ரீவம்நாதமிச்சதி) என்கிறவிதுக்கு மவ்வருகாயிருக்கிறதிறேயிது. ஸ்ரீசு
க்ரீவமஹாராஜனை நாதராகவுடையராகைக்கு யோக்யதை சம்பாதித்தப
டியாயிற்று முன்பு லோகநாதரானது. பெறுவார், பெருதொழிவார், மூ
ன்ன மிச்சியாநின்றார். கிடையாதத்திலேயிறே யிச்சைகள்தாம்செல்லு
வது. * ஸராமோவாநரேந்த்ரஸ்ய ப்ரஸாதமபிகாங்க்ஷதே போலேயாயிற்
று. (என்வல்வினைமாய்ந்தற) வல்வினைபோகவேணுமென்றிராத வென்
னுடைய. "மயர்வறமதிநலமருளினன்" என்றவித்தனையிறே. எனக்கருளி
னன் என்கைக்கு, அருளுவதற்குமுன்பு தாமொருவருளராகக்கண்டிலரி
றே. " அஸந்நேவஸபவதி " (அஸந்நேவஸபவதி) என்னும்நிலையிறே
முன்பு. (வல்வினைமாய்ந்தற) சர்வசக்தியான தன்னாலேதா னிதுசெய்ய
லாமோ. (மாய்ந்தறச்செய்குந்தன்) என்னுடைய ப்ரபலவிரோதியைப்
போக்கின சக்தியோகத்தையுடையவன். " அடியார்க்குத்தீர்க் தசுரர்க்கு
த்தீமைகள்செய்குந்தா " என்னக்கடவதிறே. முகுந்தா என்கிறத்தை,
குந்தனென்று தலைக்குறைத்தலாயக் கிடக்கிறதென்னவுமாம். அன்றிக்
கே, குந்தனென்று திருநாமமாகவுமாம். " குமுத: குந்தர: குந்த: "
(குமுத: குந்தர:குந்த:) என்று குந்தனென்கிற திருநாமமாயிற்றிறே.
ஆஸ்ரிதர்பக்கலிலே பக்ஷபதித்து அவர்கள்பண்ணின பாபங்களை யநாஸ்ரித
ர்பக்கலிலே யசல்பிளந்தேறிடும்படியான சக்தியோகத்தையிறே யவ்விட
த்திற்சொல்லுகிறது. தன்னையென்னாக்கியென்றது - என்னைத்தன்னோ
டொக்கப்பண்ணியென்னுதல், தனக்காம்படி பண்ணியென்னுதல். (என்
னால் தன்னைவைகுந்தனாகப்புகழ) பிதாவானவன் புத்ரனுக்கொரு பசு
வை நீர்வார்த்துக்கொடுத்துத்திரிய வவன்பக்கலிலே பசுவை நீரேற்றுப்
பெறுமாபோலே யிருப்பதொன்றாயிற்றிதுவும். (வைகுந்தனாகப்புகழ)
நித்யவிபூதியிறேயது; இங்ஙனே யிருக்கச்செய்தேயும், இவர்புகழ்ந்தவித்
தாலே தனக்கவ்விபூதியுண்டாயிற்றதாக நினைத்திராநின்றான். ஆத்மவஸ்
து நித்யமாயிருக்கச்செய்தே, "அஸந்நேவ" (அஸந்நேவ) என்றும் "ஸ
ந்தமேநம்" (ஸந்தமேநம்) என்றும் சொல்லாநிற்கிற வோபாதியாயிற்
று. "இன்னான்வாக்காலே கவிபாடினபின்பு அவன்வாழ்ந்தான்" என்னக்
கடவதிறே; அப்படியே, புகழ்ந்தபின்பு தனக்கந்தவிபூதியி லிருப்புண்
டாயிற்றதாக நினைத்திராநின்றானவன். (வண்டமிழ்நூற்கவியிதில்) உதாரமா
யினிதாயிருந்துள்ள கவிகளைப்பாடி, அதுதன்னைத் தன்பேறாக நினைத்தி
ருக்கிற சக்தியையுடையவனை. " துயரறுசுடரடி " என்கிறபடியே இவ
ரைக்கொண்டு கவிபாடினபின்பு, தன்துயரந்தீர்ந்தானாயிருக்கிறபடி. இவ
ர்துயர்போனபின்பு, தனக்கொரு துயருண்டாய் அதுபோனாற்போலே
நினைத்திராநின்றானாயிற்று. சரீரத்துக்குவந்த வ்யாதி யநுபவிப்பான் சரீ
ரியிறே. [வ்யஸநேஷு மநுஷ்யாணாம்] [வ்யஸநேஷு மநுஷ்யாணாம்]
திவ்யாந்த:புரத்திலுள்ளார்க்காதல் திருத்தாய்மார்க்காதலொரு வ்யஸநம்
வந்தாலோ து:கிதராவதென்றால் [உத்ஸவேஷு ச ஸர்வேஷு பிதேவ

வதி] [மநுஷ்யாணாம்ப்ருஸம்துஃகிதோபவதி] துஃகிதனானவனளவன்றிக்கே, ஆனையளறுபட்டாப்போலே நோவுபடுவராயிற்று. [உத்ஸவீதோ பவதி] [துஃகிதோபவதி] இன்றொருபடியாய், பிறைநாளொருபடியாய் அநந்தர மாறிப்போமிவர்களுக்கு; இவர்கள் க்லேசத்தில் நாள்தோறும் புதியராயிருப்பர். வ்யஸநமிவனதானால் துஃகமுமிவனதாகவேண்டியிருக்க, இவர் துஃகிதராகைக்கு ஹேதுவென்னென்னில்; " இவன்படுகிற க்லேச மிவன்காவற்சோர்வால்வந்த தொன்றன்றே, நங்காவற்சோர்வாலே வந்ததொன்றன்றோ " என்று, ரக்ஷகராகையாலே நாள்தோறும்புதியராயிருப்பர். " ஹ்ரீரேஷாஹிமமாதுலா " (ஹ்ரீரேஷாஹிமமாதுலா) என்னக்கடவதிறே. இவனளவல்லவாயிற்று பிற்பாட்டுக்கவன் லஜ்ஜிக்கும்படி. (எந்நாள்சிந்தித்தார்வனோ) பண்ணினவுபகாரம் கனத்திராநின்றது, உபகாரஸ்ம்ருதிக்குக்காலம் போருகிறதில்லை; நானென்செய்வேன். சரீரவிஸ்லேஷாநந்தரத்தில் தானேவாய்ப்புகு நீராகையா லநுசந்திக்கைக் கவகாசமில்லை, இங்கிருக்கும்நாள் காலம்போருகிறதில்லை, பண்ணினவுபகாரமோ கனத்திராநின்றது; நானென்செய்கேன்..............*

ஜீயர் அரும்பதம்.

ஏழாம்பாட்டு (வைகுந்தநாதனிதயாதி) " என்னுற்றன்னை - வண்டமங்கவிசெய்குந்தன்றன்னை எந்நாள் சிந்தித்தார்வனோ " என்றவற்றைக்கடாக்ஷித்தவதாரிகை (என்னைக்கொண்டித்யாதி) அநுபவித்தாலுமென்றது - உபகார ஸ்ம்ருதிபண்ணினாலுமென்றபடி.

பதப்ரயோகத்துக்குபாவம் (உபகரித்தவனித்யாதி) லோகநாதனென்கிற மாத்ரமன்றிக்கே, "வைகுந்தநாதன்" என்கையாலே-மஹாராஜரிலிவர்க்கு வ்யாவ்ருத்தியருளிச்செய்கிறார் (லோகநாதஇத்யாதி) கிஷ்கிந்தாகாண்டே ஹநுமந்தம்ப்ரதிலக்ஷ்மணஃ, " ஏஷதத்வாசவித்தாபிப்ராப்யசாநுத்தமம்யஸஃ " (ஏஷதத்வாசவித்தாபிப்ராப்யசாநுத்தமம்யஸஃ) இதிபூர்வார்த்தஃ. "ஸ்நாத்வா" (ஸ்நாத்வா) என்கிறல்யப்புப்போலே, " பூத்வா " (பூத்வா) என்கிறவிதுவும்- அங்கத்வவிதாயகமென்கிறார் (ஸ்ரீஸூக்தீவேத்யாதி) " இச்சதி " (இச்சதி) என்றதுக்கர்த்தம் பெறுவாரித்யாதி) " இச்சதி " (இச்சதி) என்று லிவ்வர்த்தத்தைக் காட்டுமோவென்ன (கிடையாதத்திலேயித்யாதி) மேன்மையையுடையவன்தாழநின்றதுக்கு ப்ரமாணாந்தரம் (ஸராமஇத்யாதி) " யஸ்யப்ரஸாதேஸததம்ப்ரஸீதேயுரிமாஃப்ரஜாஃ" (யஸ்யப்ரஸாதேஸததம்ப்ரஸீதேயுரிமாஃப்ரஜாஃ) இதிபூர்வார்த்தம்.

"என்" என்றதுக்கர்த்தம் (வல்வினையித்யாதி) இவ்வர்த்தத்துக்கு நியாமகமேதென்ன (மயர்வறவித்யாதி) எனக்கருளினனென்றுதொழிந்த தென்னென்ன (எனக்கித்யாதி) தாமுளரன்றோவென்ன (அஸங்கேவேத்யாதி) "வல்" என்றதுக்கர்த்தம் (சர்வசக்தியானவித்யாதி) குந்தமென்று - குருந்தமாய், அதின்பூவெனுத்திருக்கையாலே சுத்தியைச்சொல்லுகிறதென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (என்னுடையவித்யாதி) அதுக்கு ப்ரமாணம் (அடியார்க்குத்தீர்த்தித்யாதி) இது திருநாமமோவென்ன (குமுதஇத்யாதி) "அடியார்க்குத்தீர்த்து" இத்யாதிக்கர்த்தம் (ஆஸ்ரி

தர்பக்கலிலேயித்யாதி) அன்றிக்கே, "குந்தன்" என்கிற திருநாமம் அர்வர்த்தஸம் ஜ்ஞையென்கிறார் (ஆஸ்ரிதர்பக்கலிலேயித்யாதி) என்னுதல். அசலிளங்தேறிடும்ப டியான - ப்ரவேசிப்பித்தநுபவிக்கும்படியானவென்றபடி. அசல் பிளங்தேறிகை- அத்யந்தஸங்க்ரமிப்பிக்கை. ஆக, "குந்தன்" என்றதுக்கு - மூன்றர்த்தம்.

"என்னுக்கியென்னுற்றன்னை - புகழ" என்றதுக்கு த்ருஷ்டாந்தம் (பிதா வானவனித்யாதி.) நித்யமானவிபூதி யிவர்புகழ்ந்தபின்புண்டாயிற் றென்னக்கூடு மோவென்ன (நித்யவிபூதியிறேபித்யாதி) இதுக்குத்ருஷ்டாந்தம் (ஆத்மவஸ்துவித் யாதி) அப்படியொருவன் கவிபாடினு, லத்தாலதிசயமுண்டாமோவென்ன (இன் னுனித்யாதி)

" தன்பேருக நினைத்திருக்கிற " என்றதிருபபாதநமாதல், உக்தார்த்தத்துக் குப்ரமாணமாதல் (அயாறுமித்யாதி) தன்துயர்தீர்ந்ததிருவறைப்பை யருளிச்செய்கி றாரதல், விவரணமாதல் (இவர்துயரீந்யாதி) ஆழ்வார்துக்கம் தன்னதானபடியெ ன்னென்ன (சரீரத்துக்கித்யாதி) உபபத்திகாட்டி யதுஷ்டாநமுங்காட்டுகிறார் (வ்யஸநேஷ்வித்யாதி) அயோத்யாகாண்டே. " உத்ஸவேஷு ச ஸர்வேஷு பிதேவ பரிதுஷ்யதி " (உத்ஸவேஷுசஸர்வேஷு பிதேவபரிதுஷ்யதி) இத்யு த்தரார்த்தம். "மநுஷ்யாணாம்" (மநுஷ்யாணும்) என்றதுக்குபாவம் (இவ்யர் த்தபுரத்திலித்யாதி) "ப்ருசம்" (ப்ருசம்) என்றதுக்கர்த்தம் (துக்கித்துனவனித் யாதி) " பவதி " (பவதி) என்கிறவர்த்தமாநார்த்தம் (இன்றொருபடியித்யாதி) அளறுபட்டாப்போலே - சேற்றிலேயகப்பட்டாப்போலே. அளறு - சேறு. வ்யஸ நமிவனதானு லவர்துக்கிதரானைக்கு நேறுவை ப்ரமநோரதரூபேண வருளிச்செ ய்கிறார் (வ்யஸநமிவனதானுவித்யாதி) உதவப்பெற்றிலோமென்று நோவுபட்டிருக் குமோவென்ன (ஸ்ரீரோஷாஹீத்யாதி) " ப்ரஸீத த்வம் ஸ்ரீரோஷா ஹீனோ மே ஸத்தமா | யதி மத்ஸஹாயே ஸம்ஸாரே ஸ்வபூருபாப துஷ்கிதம் " (ப்ரஸீதத்துபவர்தோமேஸ்ரீரோஷாஹிமமாதுலா | யதித்ருஸ்ஸஹம்வீப் ஸாருபஸ்த்தேயைருபஸ்த்திதம்) இதயாரண்யகாண்டேராமம். "அதுலா" என்றதுக் கர்த்தம் (இவனளவல்லவித்யாதி)

"எந்நாள்சிந்தித்தார்வன் " என்றதுக்கு பாவம் (பண்ணினவுபகார மித் யாதிவாக்யத்வயம்.) "எந்நாள்" என்கிறதென், காலமில்லையோ வென்ன (சரீ ரத்யாதிவாக்யத்ரயம்.)

" வண், தீ, கவி " என்று பதச்சேதம். தீ - இனிமை ... .*

எட்டாம்பாட்டு.

ஆர்வனேவாழியங்கையெம்பிரான்புகழ்
பார்விண்ணீர்முற்றுங்கலந்துபருகிலு
மோர்விலாவென்னைத்தன்னுக்கியென்னுற்றன்னைச்
சீர்பெறவின்கவிசொன்னதிறத்துக்கே.

ஆறாயிரப்படி.

(ஆர்வனோ) என்னைக்கொண்டு தானுமுளனும்படி கவிபாடின வந்தருணத்தை, இவ்வண்டாந்தர்வர்த்திகளான வஸங்க்யேய வாத்மாக்களுடைய வாகாத்யுபகரணங்களையும் * அயர்வறுமமரர்களுடைய வாகாத்யுபகரணங்களையுங்கொண் டநுபவித்தாற்று ளார்வனோவென்கிறார்......*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், சமஸ்தவிபூதியிலுமுள்ள வாகாரங்களை யுடையனுய்க்கொண்டு மஹோபகாரகனை வுன்புகழை யநுசந்தித்தாலு மார்வனோவென்கிறார்.

ஏர்வு - கவிபாடுகைக்குத் தகுதியான ஜ்ஞாநசக்த்யாதிகள். இலா-இல்லாத· என்னை - என்னை. தன்னுக்கி - தன்விஷயத்திலே ஜ்ஞாநாதிகளை யுண்டாக்கி. என்னால் - என்னையிட்டு. தன்னை - பூர்ணனானதன்னை. சீர் - சீலாதிகுணலாபம். பெற-பிறக்கும்படி. இன் - இனிய. கவி - கவியை. சொன்ன - சொன்ன. திறத்துக்கு-ப்ரகாரத்துக்கு. ஆழியங்கை - கையுந்திருவாழியுமான வழகைக்காட்டி. எம்பிரான்-அறிவைப்பிறப்பித்து உறவையுண்டாக்கின வென்ஸ்வாமியுடைய. புகழ் - குணப்ரதையை. பார் - பூம்யுபலக்ஷிதமான வவதாரஸ்த்தலத்திலும். விண் - பரமாகாசரூபமான பரஸ்த்தலத்திலும். நீர் - க்ஷீரார்ணவமான வ்யூஹஸ்த்தலத்திலுமுள்ள. முற்றும் - சேதநரெல்லாருமாய். கலந்து - கலந்து. பருகிலும் - அநுபவிக்கிலும். ஆர்வனோ - த்ருப்தனுவனோ............ ....*

ஈடு - எட்டாம்பாட்டு.

நானொருவனுமிருந்து ஜீவிக்கும்நா ளுபகாரஸ்ம்ருதிக்குக் காலம் போராதென்று நோவுபடுகிறேனோ, என்னுடைய வுபகாரஸ்ம்ருதியையு மபேக்ஷையையு முடையராய்க்கொண்டு புறம்பே யங்யபரராயிருக்கிற பகவத்வ்யதிரிக்த சமஸ்தசேதநரு மென்னுடனேகூடி நெடுங்காலமெல்லாம் நானுமவர்களுங்கூடிநின் றநுபவித்தாற்று ளார்வனோவென்கிறார்.

(ஆர்வனோவித்யாதி) ஆழியங்கையெம்பிரான்புகழைப் பார்விண்ணீர்முற்றுங்கலந்துபருகிலும் - நானார்வனோ. தன்னுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிகளை யென்னுடைய கவிகருவிஷயமாக்கின மஹோபகாரகனுடைய புகழை. “வாய்கொண்டுமானிடம்பாடவந்தகவியேனல்லேன், னாய்கொண்டசீர்வள்ளலாழிப்பிரானெனக்கேயுளன்” என்கிறாரிறே. பாரிலுள்ளார், விண்ணிலுள்ளார், நீரிலுள்ளாரான விவர்களெல்லாருடைய வாகாத்யுபகரணங்களையும் போக்த்ருத்வத்தையும் சக்திவிசேஷங்களையு முடையேனுய்க்கொண்டு காலமெல்லாம் நின்றநுபவித்தாலுந்தான் நானார்வனோ. கலக்கை - அவற்றோடேசேர்க்கை. அன்றிக்கே, பார்விண்ணென்று - உபயவிபூதியையுஞ்சொல்லி, நீரொன்று - நீர்மையாய், ஸ்வபாவமாய், உபயவிபூதியிலுள்ளார் போக்த்ருத்வசக்தி ஸ்வபாவத்தையுமுடையேனுயநுபவித்தாலும் என்றாகவுமாம். நீரிப்படி யெல்லாருடைய வுபகரணங்களையுமுடையீராய்க்கொண்டு காலமெல்லா மநுபவியாநின்றாலு மாரா

மைக் கவன்பண்ணின வுபகாரந்தானேதென்றால் (ஏர்விதயாதி) இங்கு-நன்மையில்லையாகச் சொல்லுகிறது. கீழே - கவிபாடுகைக்கீடான விச்சையுமில்லையென்றார்; இங்கு - அவ்விச்சைக்கடியான யோக்யதையுமில்லையென்கிறார். "ப்ராஹ்மணாவிவிதிஷந்தி" (ப்ராஹ்மணுவிவிதிஷந்தி) என்னுமிற்கசெய்தேயும், "யஜ்ஞேநதாநேநதபஸாநாஸகேந" (யஜ்ஞேநதாநேநதபஸாநாஸகேந) என்று யோக்யதையைச் சொல்லிற்றிறே; அதுவுமின்றிக்கேயிருக்கிற வென்னையென்கை.

(என்னுற்றன்னைச்சீர்பெறவின்கவிசொன்ன) சமஸ்தகல்யாணகுணாத்மகனானவன் இக்கவியாலே தனக்கு நிறமாம்படியாகச்சொன்ன. நான்கவிசொல்ல சர்வேப்ரவரனான தனக்கித்தாலே நிறமாக நினைத்திராநின்றான். இச்சீரிழுக்கவரிலும் விடவொண்ணாதபடியாயிற்றுக் கவியினினிமை. (இன்கவிசொன்னதிறத்துக்கு) இப்படி யினியகவிகளைச்சொன்ன ப்ரகார மொன்றுக்கும். அல்லாதகுணங்கள் குமரிருந்துபோ மித்தனை. இப்ப்ரகாரமொன்றுக்கும் - ஆழியங்கையெம்பிரான்புகழைப் பார்விண்ணீர் முற்றுங்கலந்து பருகிலும் - ஆர்வனே. ....*

ஜீயர் அரும்பதம்.

எட்டாம்பாட்டு. (ஆர்வனேவித்யாதி) "'பார்விண்ணீர்முற்றுங்கலந்துபருகிலும்' என்றதுக்கு - அவதாரிகையிலேயொருபொருளும், பாட்டிலேயிரண்டுபொருளும்" என்றருளிச்செய்வர். பாரிலுள்ளார், விண்ணிலுள்ளார், நீரிலுள்ளார், இவர்களெல்லாருங்கூடிநின்று அவன்குணங்களை யநுபவித்தாலும் த்ருப்திபிறவாதென்றொருபொருள்; இத்தை யருளிச்செய்கிறார் (நானொருவனுமித்யாதி.)

அந்வயிக்கிறார் (ஆழியங்கையித்யாதி.) சப்தார்த்தம். (தன்னுடையவித்யாதி.) கையுந்திருவாழியுமான தன்னை யிவர்கவிக்கு விஷயமாக்கினானேவென்ன (வாய்கொண்டித்யாதி.) "ஆழியங்கை" என்று - ரூபமும், "எம்பிரான்" என்று - குணமும் சொல்லுகையாலே, ஸ்வரூபவிபூதிகளு மர்த்தாத்ஸித்தங்கள். அவதாரிகையிலே - பாரிலுள்ளாரும், விண்ணிலுள்ளாரும், "நீர்" என்று - கீழ்லோகங்களுக்கு முபலக்ஷணமாய், பாதாளாதிலோகஸ்த்தரும், முற்றும் - எல்லாரும் நானுமாகக்கலந்து உபகாரஸ்ம்ருதிபண்ணினாலு மார்வனேவென்றோரர்த்தமருளிச்செய்து, "முற்றுங்கலந்து" என்றதுக்கு - அவர்களுடைய வாகாத்யுபகரணங்களையும் போக்த்ருத்வ சக்தி விசேஷங்களையு முடையேனாய்க்கொண்டென் றர்த்தாந்தரம் (பாரிலுள்ளாரித்யாதி.) "கலந்து" என்றாலிவ்வர்த்தத்தைக் காட்டுமோவென்ன (கலக்கையித்யாதி.) மூன்றாமர்த்தத்துக்கு, "விண்" என்று - பரமபதம்; "நீர்" என்று - நீர்மை. ஸ்வபாவமாய், போக்த்ருத்வசக்தியைச் சொல்லுகிறது. "முற்றும்" என்று - போக்த்ருத்வசக்திஸ்வபாவ மெல்லாவற்றையுமென்றபடி. கீழேயும் "ஏர்விலா" என்றுவைத்து, இங்கேயும் "ஏர்விலா" என்றால் புநருக்தமன்றோ வென்ன வருளிச்செய்கிறார் (இங்குநன்மையித்யாதி.) நன்மையாவது - யோக்யதையென்றபடி. விவரணம் (கீழேயித்யாதி.) கீழேயென்றது - அஞ்சாம்பாட்டிலே. யோக்யதையாவது - ஸுக்ருதம். இச்சைக்கு யோக்யதைவேணுமோவென்ன (ப்ராஹ்மண இத்யாதி.) விவிதிஷந்தி - வேதிதுமிச்சந்தி. இந்த ஸ்ருதிக்கு ஸ்ருதப்ரகா

சிகையிலே, "இச்சையை பலமாகச்சொல்லி யஜ்ஞாதிகளைசாதநமாகச்சொன்னால் அந்யோந்யாஸ்ரயதோஷம் வரும், ஆகையாலே யதுசேராது" என்றார். அந்யோந்யாஸ்ரயதோஷம் வரும்க்ரமமென்னென்ன; இச்சையுண்டாயே யஜ்ஞதாநாதிகள்பண்ணவேணும், யஜ்ஞாதிகளைப்பண்ணினாலொழிய விச்சையில்லை, ஆகையாலே, "விவிதிஷந்தி" (விவிதிஷந்தி என்று - வேதநத்தை பலமாக்கி, அதுக்குசாதநம் யஜ்ஞாதிகளென்று நிர்வஹித்தருளினார். ஜ்ஞாநத்தை பலமாக்கி, அதுக்கு சாதநம் யஜ்ஞாதிகளென்று சப்தம்வசிக்கும்படியென்னென்னில்; "அஸிநாஜிகாம்ஸதி" (அஸிநாஜிகாம்ஸதி) என்றால் - அஸியானது இச்சாசாதநமன்றிக்கே ஹநநத்துக்கு சாதநமானாப்போலே, இங்கும யஜ்ஞாதிகள் ஜ்ஞாநத்துக்கேசாதநமாகிறதென்றபடி. "ஏர்விலா" என்று - இங்கு, இச்சைக்கு சாதநமில்லையென்னும்போது, ஸ்ரீ பாஷ்யத்தோடு விரோதியாதோவென்ன; அங்ஙன் விரோதமில்லை. லகுஸித்தாந்தத்திலே "யத்யபிவிவிதிஷந்தியஜ்ஞேநேதி யஜ்ஞாதயோவிவிதிஷோத்பத்தௌ விநியுஜ்யந்தே" (யத்யபிவிவிதிஷந்திதியஜ்ஞாதயோவிவிதிஷோத்பத்தௌவிநியுஜ்யந்தே) இத்யாதிவாக்யத்திலே பாஷ்யகாரர் அப்யுபகம்யவாதமபண்ணி, உத்தரோத்தரோச்சா சாதநத்வமருளிச்செய்தாரிறே. அப்யுபகம்யவாதமாவது - பரபக்ஷத்தையங்கீரித்துச்சொல்லுகை. இந்தவர்த்தந்துக் கந்யோந்யாஸ்ரயதோஷம் பரிஹரிக்கும்க்ரமமேதென்ன; அஜ்ஞாத ஸுக்ருத விசேஷங்களாலே யவ்வோ விச்சையுண்டாய், அந்தவிச்சையினுடைய அவிச்சிததியை சாத்யமாக்கி யஜ்ஞதாநாதிகளை சாதநமாகச்சொல்லும்போது தோஷம் வாராதென்று பரிஹரித்து, இதுவுமொரு நிர்வாஹமாக்கி நிர்வஹித்தார்; அந்த "யத்யபி" (யத்யபி) இத்யாதி வாக்யத்தை யநுசரித் திவரிப்படியருளிச்செய்கிறாரென்று கருத்து. அநாசகேந-அநஸநேநேத்யர்த்த:

"சீர்பெற" என்றதுக்குபாவம் (சமஸ்தகல்யாணேத்யாதி.) சீர்பெற-(நிறமாம்படியாக.) நீர் கவிசொல்ல அவனுக்கு நிறமுண்டாம்படி யென்னென்ன (நான்கவிசொல்லவித்யாதி) "இன்கவி" என்றதுக்கர்த்தம் (இச்சீரித்யாதி.) "திறத்துக்கே" என்கிறவவதாரணார்த்தம் (அல்லாதவித்யாதி.) குமரிருந்துபோகை-அநுபவயோக்யமன்றிக்கேயிருக்கை.

ஏர்விலாவென்றுதொடங்கி, திறத்துக்கே - ஆழியங்கையெம்பிரான்புகழ் பார்விண்நீர்முற்றும்கலந்து பருகிலும் ஆர்வனோவித்யந்வய:. ....*

ஒன்பதாம்பாட்டு.

திறத்துக்கேதுப்புரவாந்திருமாலின்சீ
ரிறப்பெதிர்காலம்பருகிலுமார்வனோ
மறப்பிலாவென்னைத்தன்னாக்கியென்னாற்றன்னை
யுறப்பலவின்கவிசொன்னவுதவிக்கே.

ஆறாயிரப்படி.

(திறத்துக்கு) அஜ்ஞாநத்துக்குங்கூட வாஸ்ரய மல்லாமையாலே யசித்கல்பனாயிருந்தவென்னைத்தன்னைப்போலேயாக்கி, என்னைக்கொண்டு பிராட்டியும் தானுமாகத்திருவாய்மொழி பாடின விம்மஹோபகார

த்தை, முன்புசொன்ன சர்வோபகரணயுக்தனுய்க்கொண்டு பூதபவிஷ்ய த்வர்த்தமான காலமெல்லா மநுபவித்தாற்ருனுர்வஞேவென்கிருர்.......*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், கீழ்ச்சொன்ன ப்ரகாரத்திலே சர்வசேதந சக்திவிசிஷ்டனுய்க் கொண்டு சர்வகாலாநுபவம்பண்ணினுலு மார்வஞேவென்கிருர்.

ஒருகால் நினைவில்லாமையாலே, மறப்பு - மறப்பு. இலா - இல்லாதபடியான. என்னை - என்னை. தன்னுக்கி - தன்பக்கலிலே மறப்பறும்படியான வறிவையுடையனுக்கி. என்னுல் - என்னையிட்டு. தன்னை - தன்னை. உற - அவ்யவதாநேந வாசகமாய். பல - ஸஹஸ்ரஸங்க்யாதமாய். இன் - மதுரமான. கவி - கவியை. சொன்ன - சொன்ன. உதவிக்கு - உபகாரத்துக்கு. திறத்துக்கு - இழிந்தகார்யப்ரகாரங்களுக்கு. ஏய் - அநுரூபமான. துப்புரவாய் - சக்தியையுடையனுன. திருமாலின் - ஸ்ரீயப்பதியினுடைய. சீர்-ஔதார்யசீலஸௌலப்யாதிகுணங்களை. இறப்பெதிர்காலம்-அதீதாநாகதங்களான காலத்தையும் கூட்டிக்கொண்டு பூர்வோத்தர காலவர்த்தி சகலசேதநசக்தியுக்தனுய்க்கொண்டு, பருகிலும்-அநுபவிக்கிலும். ஆர்வஞே-ஆர்வஞே.

துப்புரவு - மிடுக்கு...*

ஈடு - ஒன்பதாம்பாட்டு.

என்னைக்கொண்டு கவிபாடுவித்துக்கொண்ட மஹோபகாரகனை, சகலசேதநருடைய போக்த்ருத்வசக்தியை யுடையேனுய்க்கொண்டு காலமெல்லாம் புஜித்தாலுமாரோனென்ருர் - கீழ்; அந்தபோக்த்ருத்வ சக்தியுடனே காலத்வயமும் புஜித்தாலுமாரோனென்கிருரிதில்.

(திறத்துக்கேயித்யாதி) ஏதேனுமோரிடையாட்டத்தில் வந்தால், ஒரு த்ருணத்தைக்கொண்டு காரியங்கொள்ளப் பார்த்தாலத்தைக் கொண்டேகாரியத்தை யப்படி தலைக்கட்டிக்கொள்ளும்படிக் கீடானதுப்புரவுண்டு - சாமர்த்த்யம், அத்தையுடையனுன. அதுக்கடியென்னென்ருல்; ஸ்ரீயப்பதியாகையாலே. நினைத்தகாரியஞ்செய்து தலைக்கட்டுகைக்கீடான சாமர்த்த்யத்தையுடையனுன ஸ்ரீயப்பதியுடைய கல்யாணகுணங்களை. ஒருவன் செய்ததுவாய்த்துவரப் புக்கவாறே. "அவன்குப்பைக்காலன்காண், ஸ்ரீமான்செய்ததெல்லாம்நன்ருய்வருங்காண்" என்னக்கடவதிறே. (இறப்பெதிரித்யாதி) சமஸ்தசேதநருடையவும் வாகாத்யுபகரணங்களையும் போக்த்ருத்வாதிசக்திகளையும் நானுடையேனு யநுபவிக்கப்புக்காலும், ஜீவிக்கைக்கடியான ஆயுஸ்ஸு அல்பமாகையாலே உபகாரஸ்ம்ருதிக்குக்காலம்போருகிறதில்லை. "எந்நாள்சிந்தித்தார்வஞே" என்னவேண்டாதே அவ்வவருடைய வுபகரணங்களையு முடையேனுய், போனகாலமும் மேல்வரக்கடவகாலமுமெல்லா மநுபவியாநின்ருலுந்தானுர்வஞே. (வர்த்தமாநகாலம் தன்னடையேவருமிறே. போனகாலமநுபவிப்பாராய்ச்சொல்லுகிருரன்று, எல்லாக்காலமுமநுபவித்தாலும் போராதென்கைக்காக. "எந்நாள் சிந்தித்தார்வஞே" என்கிறதிற்காட்டிலேற்றமில்லையாமிறே,

கீழ்ப்பாட்டிற்சொன்ன சேதநனைக்கூட்டிக்கொள்ளாதபோது.) எல்லாருடைய வுபகரணங்களையுங்கொண்டு காலமெல்லா மநுபவித்தாலும் தீராராதேயொழிகிறது அவன்பண்ணின வெவ்வுபகாரத்தை ஸ்மரித்தென்ன (மறப்பிலாவித்யாதி) மறப்பில்லையானவென்னை. மறப்புக்குப் பூர்வக்ஷணவர்த்தியான நினைவுமெனக்கில்லை யென்கைக்காக - மறப்பிலாவென்கிறபாசுரத்தாலே யருளிச்செய்கிறார். மறப்பிலாவென்னவேண்டுவானென்னென்னில்; நினைவுள்ளவிடத்திலேயிறே மறப்புள்ளது. ஆக, காதாசித்கமானஸ்ம்ருதியுங்கூட வெனக்கில்லையென்கிறார். (மறப்பிலாவென்னைத்தன்னுக்கி) காதாசித்கமாக ஸ்மரித்து பின்னையொருகால் மறப்புண்டாய், அத்தைக்காணுக்கண்ணிட்டுத் தானிப்படி விஷயீகரித்தானே. முதலிலே தன்பக்கல் ஸ்ம்ருதியின்றிக்கே யிருக்கிறவென்னைத்தன்னுக்கி. (என்னுல்) " மறந்தேனுன்னைமுன்னம் " என்கிறவநுதாபமுங்கூட வின்றிக்கேயிருக்கிறவென்னையிடுவித்து. (தன்னையுறப்பலவின் கவிசொன்ன) என்றதுக்கு ஜீயரருளிச்செய்யும்படி - " 'யதோவாசோ நிவர்த்தந்தே' (யதோவாசோ நிவர்த்தந்தே) என்றுவேதங்கள் மீண்டவிஷயத்தை மறுபாடுருவச்சொன்ன " என்று. அன்றிக்கே, பிள்ளான் பணிக்கும்படி - " சர்வேப்வரனுக்குச் சாலவுற்றதென்கிறார் " என்று. (பலவின்கவிசொன்ன) " சதுர்விம்ஶத்ஸஹஸ்ராணிஶ்லோகாநாமுக்தவாந்ருஷிঃ " (சதுர்விம்ஶத்ஸஹஸ்ராணிஶ்லோகாநாமுக்தவாந்ருஷிঃ) என்னுமாபோலே, சம்சாரத்திலே யிப்படி விலக்ஷணமாயிருப்பதாயிரம்பாட்டைப்பாடுவதே யென்கிறார். இனிய கவிகளைச்சொன்ன, உதவிக்கு - இவ்வுபகாரத்துக்கு-திருமாலின்சீரிறப்பெதிர் காலம்பருகிலுமார்வனே.......................................*

ஜீயர் அரும்பதம்.

ஒன்பதாம்பாட்டு. (திறத்துக்கேயித்யாதி.) உக்தார்த்தத்தை யநுவதித்துக்கொண்டு, " இறப்பெதிர்காலம் பருகிலுமார்வனே " என்றத்தைக்கடாக்ஷித்தவதாரிகை (என்னைக்கொண்டித்யாதிவாக்யத்வயத்தாலே.) காலத்வயமென்றது-பூதபவிஷ்யத்காலமென்றபடி.

இடையாட்டம் - வ்யாபாரம். சப்தார்த்தம் (நினைத்தவித்யாதி.) " திறத்துக்கேதுப்பரவாம் - " நினைத்தகாரியத்துக்கீடான சாமர்த்யத்தையுடைய ஶ்ரிய:பதியுடைய சீரையென்று நிஷ்க்ருஷ்டசப்தார்த்தம். துப்புரவு - சாமர்த்யம். ஶ்ரிய:பதியாலு துப்பரவுண்டாமோவென்ன (ஒருவனித்யாதி.) குப்பைக்காலன்-நல்வழிக்காலன்.

கீழிரண்டுபாட்டி லர்த்தத்தையுங் கூட்டி யருளிச்செய்கிறார் (சமஸ்தேத்யாதி.)

" மறப்பிலா " என்று - சர்வஜ்ஞத்வம் சொல்லுகிறரோவென்ன (மறப்புக்கித்யாதி.) மறப்பிலாவென்னவேண்டுவா னென்னென்னிலென்றது - ஸ்ம்ருதியில்லாதவென்னவேண்டியிருக்க, " மறப்பிலா " என்னவேண்டுவானென்னென்னிலென்றபடி. இத்தால்பலிதம் (ஆகவித்யாதி.) விவரணமாதல் " மறப்பிலா " என்ற

த்தோடே "தன்னுக்கு" என்றத்தையுங்கூட்டி பாவமாதல் (காதாசித்கமாக வித்யாதி.)

உற - மறுபாடுருவவென்னுதல், ஸத்ருஶமாகவென்னுதல். "உற" என்றதுக்கு பாவம் (யதோவாச இத்யாதி.) "பலவின்கவி" என்றதுக்குபாவம் (சதுர்விம்ஶதித்யாதி.)பாலகாண்டே, "ததா ஸர்க்கஸஹஸ்ராணி பஞ்சஷட் காண்டானி ததோத்தரம்" (ததாஸர்க்கஸஹஸ்ராம்பஞ்சஷட்காண்டாநிததோத்தரம்) இத்யுத்தரார்த்தம்.

மறப்பிலாவென்றுதொடங்கி, சொன்னவுதவிக்கு-திறத்துக்கேயென்றுதொடங்கி, பருகிலுமார்வனே வித்யந்வயஃ. ....*

பத்தாம்பாட்டு.

உதவிக்கைம்மாறென்னுயிரென்னவுற்றெண்ணி
லதுவுமற்றாங்கவன்றன்னதென்றற்றன்னைப்
பதவியவின்கவிபாடியவப்பனுக்
கெதுவுமொன்றுமில்லைசெய்வதிங்குமங்கே.

ஆறாயிரப்படி.

(உதவி) இப்படியென்னைக்கொண்டு திருவாய்மொழி பாடுவித்தருளின விம்மஹோபகாரத்துக்குக் கைம்மாறாக வென்னாத்மாவை யவனுக்கடிமையாகக் கொடுக்கவெண்ணில், அதுவும்பண்டே யவனுக்கடிமையாதலால், இங்குமங்கு மிதுக்கொரு கைம்மாறுசெய்யலாவதில்லையென்று அவனுடையமஹோபகாரத்தை யநுபவிக்கிறார்........................*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், அவனுடையவுபகாரத்துக்குப்ரத்யுபகாரமொருப்ரகாரத்தாலுமில்லையென்கிறார்.

உதவி-கவிபாடுவித்துக்கொண்ட வுபகாரத்துக்கு. கைம்மாறு - ப்ரத்யுபகாரம். என்-என். உயிர்-ஆத்மா. என்ன-என்று. அத்தை, உற்று - சிக்கென. எண்ணில்-நிரூபித்துப்பார்க்கில். ஆங்கு-அந்தப்ரத்யுபகாராவஸ்த்தையில். அதுவும் - அந்தவாத்மாவும். மற்று-பின்னை. அவனதன்னது - அவனுக்கஸாதாரண சேஷமாகையாலே. என்றால்-என்னையிட்டு. தன்னை-தன்னை. பதவிய-ம்ருதுவாய். இன்-இனிதான. கவி-கவியை. பாடிய-பாடின. அப்பனுக்கு-உபகாரகனுக்கு. இங்கும்-இந்தவிபூதியிலும். அங்கும்-அந்தவிபூதியிலும். செய்வது-செய்யவடுப்பது. எதுவும்-ஏதேனுமல்பமாயிருப்பது. ஒன்றும்-ஒன்றும். ப்ரத்யுபகாரம், இல்லை-இல்லை.

(• ஜ்ஞாநம்பிறந்தத்தால் நித்யபரசேஷமான வாத்மாவுக்கு முமுக்ஷுதசையோடு முக்ததசையோடு வாசியற சமர்ப்பணீயத்வமில்லையென்றுகருத்து. ஸ்வகீயத்வாபிமாநமுள்ளது அஜ்ஞாநதசையிலிறே ....*

ஈடு - பத்தாம்பாட்டு.

உபகாரஸ்ம்ருதிக்குக் காலம்போருகிற தில்லையென்று நீர்புண்பட்டாகில்லாதே, உம்மதாயிருப்பதொரு வஸ்துவை யவனுக்கு ப்ரத்யுபகாரமாகக்கொடுத்துப் பிழைத்துப்போக மாட்டீரோவென்ன; அப்படிசெய்யலாயிற்றிறே ஈஸ்வரனைப்போலே நானுமெனக்குடைமையா யிருப்பதொரு வஸ்துவும்பெற்றேனாகிலென்கிறார்.

(உதவி) உதவியுண்டு - உபகாரம், அதுக்குக்கைம்மாறாக - ப்ரத்யுபகாரமாக. (என்னுயிரென்ன) நித்யமாய் ஜ்ஞாநாநந்தலக்ஷணமாய் ஸீலாக்யமா யிருப்பதொன்றுண்டிறே - ஆத்மவஸ்து, அத்தைக்கொடுத்தாலோவென்னில்; அதுசெய்யலாயிற்றிறே, அடியிலே * மயர்வறமதிநல மருளிற்றிலனாகில்; முன்னே அத்தைக்கொடுத்துவைத்தானே. ப்ராந்திசமயத்திலாத்மசமர்ப்பணம்போலேயிருப்பதொன்றாயிற்று, உபகாரஸ்ம்ருதியாலே ப்ரத்யுபகாரந்தேடிக் கலங்குகிறவிது. ப்ராந்திசமயத்திலாத்மசமர்ப்பணந்தான்வேணும், தெளிந்தவநந்தரம் "என்னுடையவஸ்துவை யவனுக்குக் கொடுத்தேன்" என்றிருக்கக்கடவனல்லன். அநாதிகாலமாத்மாபஹாரம்பண்ணிப்போந்தவதிலுங்கடையாயிற்று, தெளிந்தவநந்தரம் "நானென்னுடையவஸ்துவைத்தந்தேன்" என்றிருக்குமாகில். பின்னையும் பழைய வபஹாரமே யநுவர்த்தித்ததாமே; ஜ்ஞாநம் பிறந்தமை பொய்யாமிறே. சர்வமுக்தி ப்ரசங்கபரிஹாரார்த்தமாக வாத்மசமர்ப்பணந்தான் வேண்டிவரும்; நெஞ்சிலே வெளிச்சிறப்புண்டானாலவன் வஸ்துவையவனதாக விசைந்திருக்கக்கடவன். "ஶ்யாஸமர்பித꞉" (மயாஸமர்ப்பித꞉,) "க்ஷவாகிந்ஸமர்பயாமிதே" (அதவாகிந்நுஸமர்ப்பயாமிதே) என்னாநின்றதிறே. "எனதாவிதந்தொழிந்தேன்" என்று, "எனதாவியார்யானார்" என்றாரிறே. ஸ்வரூபஜ்ஞாநம் பிறந்தால் பேற்றளவுஞ்செல்லவிவ்விரண்டாகாரமு மநுவர்த்திக்கக் கடவதாயிருக்கும். ஆக, ஆத்மசமர்ப்பணத்துக்கு முபகார ஸ்ம்ருதிக்கும் தனித்திவனுக்கு ப்ராப்தியில்லாதபடியான விவனுடைய வத்யந்த பாரதந்த்ர்யத்தைச் சொல்லுகிறது. (உற்றெண்ணில்) ஆராயாதே மேலெழநின்றுகொடுக்கில் கொடுக்கலாம், நெஞ்சிலே சிறிதுவெளிசசிறப்புப்பிறந்து இதினுடைய ஸ்வரூபத்தையு மாராய்ந்துபார்த்துக்கொடுக்குமன்று கொடுக்கப்ராப்தியில்லை. (அதுவும்) ஆத்மாவும் (மற்று) அப்படிப்பட்ட வாத்மீயங்களும். (ஆங்கவன்றன்னது) ப்ரத்யுபகாரம்பண்ணி தரிக்கவேண்டும் தசையிலவனதாயிராநின்றது.

(என்னுமித்யாதி) உபகாரஸ்ம்ருதிக்குங்கூட ப்ராப்தியில்லாததென்னாலே, மஹோபகாரகனாயிருக்கிற தன்னை. (பதவியவின்கவிபாடியவப்பனுக்கு) கவிபாட்டுண்கிறவனுக் கிக்கவிபாட்டாலேபண்டில்லாத நீர்மையுண்டாம்படியாகக் கவிபாடின வுபகாரகனுக்கு. (எதுவுமொன்று மி

ல்லெசெய்வது) ஏதேனுமொன்றுஞ்செய்யலாவதில்லை. இங்கிருக்கும் நான் சங்கோசத்தாலே செய்யலாவதொன்றில்லையேயாகிலும், சங்கோசமற்றுமுக்தனானால் ப்ரத்யுபகாரம்பண்ணத்தட்டென்னென்னில (இங்குமங்கே) இங்கானால், தேஹாத்மாபிமாநத்தாலே “ நான், என்னது ” என்றுபோய்க்கால்கட்டித்திரிகையாலே, “ செய்யலாவதொன்றுண்டோ” என்று ப்ரமிக்கவுமா யிருக்கும் ; அதுவுமின்றிக்கே, சங்கோசங் கழிந்தவளவில், தானேசெய்யலாவதொன்றில்லை யென்னுமிடம் சொல்லவேண்டாவிறே. “ ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே ” (ஸ்வேநரூபேணுபிநிஷ்பத்யதே ” (என்று - ஸ்வரூபஜ்ஞாநம்பிறந்தவிடத்தில் ஸ்வரூபவிரோதியாக ப்ரவர்த்திக்கப்போகாதிறே...............................*

ஜீயர் அரும்பதம்.

பத்தாம்பாட்டு (உதவியித்யாதி) “ என்னுயிரொன்னவுற்றெண்ணி லதுவுமற்றுங்கவன்றன்னது - உப்பனுக்கெதுவுமொன்றுமில்லைசெய்வதிங்குமங்கே” என்றபதங்களைக்கடாக்ஷித்தவதாரிகை (உபகாரஸ்ம்ருதிக்கித்யாதி)

ஆத்மவஸ்துவை ப்ரத்யுபகாரமாக ஸமர்ப்பிக்கலாமென்கைக்குறுப்பாக விதினுடைய ஶ்லாக்யதையை யருளிச்செய்கிறார் (நித்யமாயித்யாதி) “உற்றெண்ணில்”, என்றதுக்குபாவமருளிச்செய்கிறார் (அதுசெய்யலாயிற் றித்யாதிவாக்யத்வயத்தாலே) அத்தை - * மயர்வறமதிநலத்தையென்றபடி. அஜ்ஞனானு லாத்மஸமர்ப்பணம்பண்ணுமதொழிய, ஜ்ஞாநமுண்டானு லுபகாரஸ்ம்ருதியாலே யாத்மாவை ஸமர்ப்பிக்கப்போகாதோவென்ன ப்ராந்திஸமயத்திலித்யாதி) ப்ராந்திஸமயமாவது-ப்ரபத்திபண்ணுகிறஸமயம். ஆத்மஸமர்ப்பணமாவது - ஆத்மீயபரவாஸம். ப்ரபத்திபண்ணுகிற சமயத்தை ப்ராந்திசமயமென்கிறது - சமர்ப்பித்தவநந்தரம். “சமர்ப்பிக்கத்தான் நானார்” என்றநுதபிக்கும்படி யிருக்கையாலே. ப்ரத்யுபகாரந்தேடிக்கலங்குகிற விதென்றது - ஆத்மஸமர்ப்பணம்பண்ணுகிறேனென்று கலங்குகிறவிதென்றபடி. ஆனால் ப்ரபத்தி சமயத்தி லாத்மசமர்ப்பணம் வேண்டாவோவென்ன; ஆத்மஸமர்ப்பணம்பண்ணும் ப்ரகாரத்தையும், ததநந்தர மிவனிருக்கக்கடவபடியையுமருளிச்செய்கிறார் (ப்ராந்திசமயத்திலித்யாதிவாக்யத்வயத்தாலே) இருந்தாலோவென்ன (அநாதீத்யாதி) இது கடையர்னபடிக்கு ஹேதுகதநபூர்வகமாகவிவரணம் (பின்னையுமித்யாதிவாக்யத்வயம்) ஆனால் செய்தநுதபிக்கவேணுமோ, முதலிலேசெய்யாதிருக்க வொண்ணாதோவென்ன; இன்னதுக்காகச் செய்யவேணுமத்தையும், செய்தவநந்தர மின்னபடியிருக்கவேணுமென்னுமத்தையுமருளிச்செய்கிறார் (சர்வமுக்தீத்யாதி வாக்யத்வயத்தாலே) அப்படி சமர்ப்பித்தநுதபித்தபேருண்டோவென்ன (மயாசமர்ப்பிதஇத்யாதி) ஸ்தோத்ரேயாமுநாசார்யர், “வபுராதிஷுயோபிகோபிவா” (வபுராதிஷுயோபிகோபிவா) இத்யாதி, “ ததஹம் தவபாதபத்மயோ ரஹமத்யைவ மயா ஸமர்ப்பித:;” (ததஹம்தவபாதபத்மயோரஹமத்யைவமயாஸமர்ப்பித:;) “ மமநாத யதஸ்தி யோஸ்ம்யஹம் ” (மமநாதயதஸ்தியோஸ்ம்யஹம்) இத்யாதி, “ அதவா கிந்நு ஸமர்ப்பயாமிதே ” (அதவாகிந்நுஸமர்ப்பயாமிதே) ஆக, “ ப்ராந்திஸமயத்தி லாத்மஸமர்ப்பணம்போலே ” என்றத்தையுபபாதித்து, அநந்தரம், “உபகாரஸ்ம்ருதியாலே” இத்யாதியையுபபாதிக்கக்

கோலி, அப்படியுபகாரஸ்ம்ருதியாலேகலங்கி யாத்மாவை ஸமர்ப்பித்து, தெளிந்தவ நந்தர மநுதபித்தவிடமுண்டோவென்ன (எனதாவியித்யாதி) இத்தால்பலிதம் (ஸ்வரூபஜ்ஞாநமித்யாதி) இவ்விரண்டாகாரமுமென்றது-உபகாரஸ்ம்ருதியாலே ஸம ர்ப்பிக்கையும், அநந்தர மநுதபிக்கையுமாகிற விவ்விரண்டாகாரமுமென்றபடி. இப் பாட்டில் "ஆத்மஸமர்ப்பணம்பண்ணப்போகாது" என்றத்தால் பலிதம் - அத்யந்த பாரதந்த்ர்யமென்கிறார் (ஆக ஆத்மஸமர்ப்பணத்துக்குமித்யாதி) "உற்றெண்ணில் அதுவுமற்றாங்கவன்றன்னது" என்கிறவித்தால் பலிதமான வர்த்தவிசேஷத்தைய ருளிச்செய்கிறார். (ஆராயாதேயித்யாதிவாக்யத்வயத்தாலே)

மற்று - ஆத்மீயங்களென்றபடி. அங்கு - ப்ரத்யுபகாரதசையிலென்றபடி.

ப்ராப்தியில்லாதவென்றாலே - அத்யந்த பரதந்த்ரனாகையாலே (ப்ராப்தியி ல்லாதவென்றாலே) என்றுகூட்டுவது. பதவிய - பதமுண்டாம்படியாக. நீர்மையு ண்டாம்படியாகவென்றபடி. "பதவியவின்கவி" என்றதுக்கு-ம்ருதுவா யினிதானக வியென்று பொருளாகையாலே, இதுக்கு மார்த்தவமேதென்ன (கவிபாட்டுண்கிற வித்யாதி) "இங்குமங்கும்" என்றதுக்கவதாரிகை (இங்கிருக்கும்நாளித்யாதி) கீழ் சங்கைக்கு பரிஹாரம் (இங்காலித்யாதிவாக்யத்வயம்) "சங்கோசங்கழிந்த" இத் யாதியின்விவரணம் (ஸ்வேநரூபேணேத்யாதி)

உதவிக்கைம்மாறென்றுதொடங்கி, அப்பனுக்கு-இங்குமங்கும்-எதுவுமொன் றுமில்லை செய்வதித்யந்வயஃ ....*

பதிகனொன்றாம்பாட்டு.

இங்குமங்குந்திருமாலன்றியின்மைகண்
டங்ஙனேவண்குருகூர்ச்சடகோப
னிங்ஙனேசொன்னவோராயிரத்திப்பத்து
மெங்ஙனேசொல்லினுமின்பம்பயக்குமே.

ஆறாயிரப்படி.

(இங்குமங்கும்) ஸ்ரிய:பதியானவனல்ல துபகாரகரில்லையென்னுமி டத்தை யநுசந்தித்து அந்த பாவயுக்தரான வாழ்வார், தம்மைத் திருவா ய்மொழிபாடுவித்தருளின விம்மஹோபகாரத்தைச்சொன்ன வித்திருவா ய்மொழி, எங்ஙனே சொல்லினு மின்பம் பயக்குமென்கிறார். ....*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், இத்திருவாய்மொழி, தன்னோடந்வயித்தார்க்கு நிரதிசயாநந்தத் தை யுண்டாக்காநிற்குமென்று பலத்தையருளிச்செய்கிறார்.

இங்கும் - இந்தவிபூதியிலுண்டான வாஸ்ரயணதசையிலும். அங்கும் - அந் தவிபூதியிலுண்டான கைங்கர்யதசையிலும். திருமால் - பூர்வோத்தரவாக்ய ப்ரஸி த்தமான ஸ்ரிய:பதித்வத்தையுடையவனே. அன்றி - ஒழிய. இன்மை-வேறில்லா மையை. கண்டு - அநுசந்தித்து. அங்ஙனே-அந்தப்ரகாரத்தையுடையராய். வண்-

உதாரரான. குருகூர்ச்சடகோபன் - ஆழ்வார். சொல் - தம்மை வாசிக கைங்கர்ய ங்கொண்ட. இங்ஙனே - இந்தப்ரகாரத்திலே. சொன்ன - அருளிச்செய்த. ஓர், ஆ யிரத்து - ஆயிரத்திலே. இப்பத்தும் - இப்பத்தும். எங்ஙனே - இவருடைய உபகா ரஸ்ம்ருதிரூபமான அர்த்தவ்யதிரேகேண. சொல்லிலும் - சப்தமாத்ரமேசொல்லி லும். ஆழ்வார்வைபவத்தாலும், இத்திருவாய்மொழியின் மாஹாத்ம்யத்தாலும், இ ன்பம் - பகவதநுபவஜநிதநிரதிசயாநந்தத்தை. பயக்கும் - உண்டாக்கும்.

இது - கலிவிருத்தம். ....*

ஈடு - பதினொன்றாம்பாட்டு.

நிகமத்தில் - இத்திருவாய்மொழி, ஏதேனு மொருபடிசொல்லிலு மாநந்தத்தை யுண்டாக்குமென்கிறார்.

(இங்குமங்குந்திருமாலன்றி யின்மைகண்டு) சாதநாநுஷ்டாந சமயத்தோடு ப்ராப்யவஸ்துவை ப்ராபித்த சமயத்தோடு வாசியற, இஹ லோக பரலோகங்க ளிரண்டிலும் ஸ்ரிய:பதியல்லதுபோக்கி யிவ்வாத்மவ ஸ்துவுக்குத் தஞ்சமாயிருப்பார் வேறில்லையென்னுமத்தை யநுசந்தித்து. "பண்டைநாளாலே நின்றிருவருளும் பங்கயத்தாள் திருவருளுங்கொண் டுநின்கோயில்சீய்த்து" என்கிறபடியே, கைங்கர்யம்பண்ணுமிடத்திலும அவள்முன்னாகப்பண்ணவேணுமிறே; ஆஶ்ரயணவேளையிலுமவள்முன்னாக வேணுமிறே. [ஹநைத ஸஹிஷக-பராஜ-ஸ] [ஹநேதஸ்மிந்நகுர்யு:] என் று ராவணன் சொல்லுகையாலே அன்றிருந்து நலிந்தார்களாகில், இப் போதும் நலிவர்களோ? என்று அவர்கள்பக்கலிலும் குணத்தை யாரோ பித்துச்சொல்லும் நீர்மையையுடையவளாயிற்று. (அங்ஙனேயித்யாதி) நமக்கும், சதாசார்யன் அருகேயிருந்து, ஸ்ரிய:பதி யொழிய விவ்வாத்மவ ஸ்துவுக்குத் தஞ்சமாயிருப்பாரில்லை" என்றுபதேசித்தால், அத்தனைபோ தும் "அப்படியே" என்றிருக்குமதுண்டிறே; இவராங்ஙனன்றிக்கே, அந் நினைவுக்கநுரூபமான பரிமாற்றத்தையு முடையராயிருப்பராயிற்று. ஆக, மநோர்வாக்காயங்கள் மூன்று மொருபடிப்பட்டிருக்குமோவென்னில் (இ ங்ஙனித்யாதி) இப்பாவவ்ருத்தியிலேசொல்லிற்றாயிற்று ஆயிரம்பாட்டும். நீர், மநோவாக்காயங்கள் மூன்றிலும் "ஸ்ரிய:பதியேயிவ்வாத்மவஸ்துவுக் குத்தஞ்சம்" என்றத்யவஸித் தருளிச்செய்த விப்பாசுரத்தை யப்யஸிப் பார்க்கு மநோவாக்காயங்கள் மூன்றும் பாஹ்யாதிவிஷயங்களில்நின்றும் மீளவேணுமோ - நீர் * சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் தேவபிரானையே தந்தைதாயென்றடைந்தவராயிராநின்றீர், இவர்களுக்கு மெல்லாம் பின்னை யிப்படிவேணுமோவென்னில்; அத்தேவைகளெல்லா ம் நம்மோடே, இது கற்பார்க்கு அதுவேண்டாவென்கிறார் (எங்ஙனே சொல்லிலு மின்பம்பயக்குமே) ஏதேனுமொருபடிசொல்லிலு மின்பமு ண்டாம். என்னுடையபாசுரத்தைக் கற்றவர்களென்றிறே யீஶ்வரனிவர் களைக்கடாக்ஷிப்பது; இல்லையாகி லிவர் தம்மைப்போலே மநோவாக்காய ங்களுடைய நியதியுண்டா யநுபவிக்கப்பெறிலழகிது, அதில்லாதபோது

ம் பலவ்யபிசாரியாகாதென்கைக்காகச் சொல்லிற்றத்தனையிது. (இன்பம் பயக்குமே) "ஏஷஹ்யேவாநந்தயாதி" (ஏஷஹ்யேவாநந்தயாதி) என்கிறபடியே, நிரந்தரபகவதநுபவத்தால்பிறக்குமாநந்தமானதுண்டாம்.*

ஜீயர் அரும்பதம்.

நிகமம் (இங்குமங்குமித்யாதி) "எங்ஙனேசொல்லிலுமின்பம்பயக்கும்" என்றத்தைக்கடாக்ஷித்தவதாரிகை (இத்திருவாய்மொழியித்யாதி)

இன்மைகண்டு - இல்லாமையையநுசந்தித்து. இஹலோக பரலோகங்களிரண்டிலும் ஸ்ரிய:பதியே தஞ்சமென்றதுக்கு பாவமருளிச்செய்யாநின்றுகொண்டு, சப்தார்த்தம் (சாதநாநுஷ்டாநேத்யாதி) பலவேளையிலு மாஸ்ரயணவேளையிலும் பிராட்டி ஸம்பந்தம் வேணுமோவென்ன (பண்டைநாளாலேயித்யாதிவாக்யத்வயம்) "ஆஸ்ரயணவேளையி லிவள்முன்னாகவேணும்" என்கைக்கு, இவன்தோஷத்தைப்பார்த்து ஈஸ்வரன் சீறுமளவிலத்தை யாற்றிச்சேர விடும்படியான நீர்மையுடையவளோவென்ன (ஹதேதஸ்மிந்நித்யாதி) "ஹதே தஸ்மிந் ராவணே ... ராக்ஷஸ்யோ ... ஸீதா" (ஆஜ்ஞப்தாராவணேநைதாராக்ஷஸ்யோமாமதர்ஜயந் । ஹதேதஸ்மிந் குர்யுர்ஹிதர்ஜநம்வாநரோத்தம) இதியுத்தகாண்டே ஸீதா.

"அங்ஙனே" என்றதுக்கு வ்யாவர்த்யபூர்வகமாக வர்த்தம் (நமக்குமித்யாதி) பரிமாற்றத்தை-அநுஷ்டாநத்தையென்றபடி,

ஆகவென்றது - ஆறுலென்றபடி. மூன்று மொருபடிப்பட்டிருக்குமோவென்றது - மாநஸமான வத்யவஸாயமும் காயிகமான வநுஷ்டாநம்போலே வாசிகமு மொத்திருக்குமோவென்றபடி.

"எங்ஙனேசொல்லிலும்" என்றதுக்கவதாரிகை (நீர்மநோவாக்காயங்களித்யாதி) "நீர்மநோவாக்காயங்கள்" இத்யாதிவாக்யவிவரணம் (நீர்சிந்தையாலுமித்யாதி) அதுக்குஹேதுவேதென்ன (என்னுடையபாசுரத்தையித்யாதி) "சொல்லிலும்" என்றயதிசப்தார்த்தம் (இல்லையாகிலித்யாதி) பயக்கும்-உண்டாக்கும். ஆநந்தயாதி - ஆநந்தயதி என்றபடி ....*

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி.

(என்றைக்குமென்னை.)

ஸ்வாமித்வாத் ஸ்வாஸ்ரயபாவாத் அஸுகரகவிதாதாநதோ ...
ஜீவாத்மைக்யாத் ... ஸம்ஸ்துதத்வாத் ... । ...
... த்ருஷ்ட்வா ...
... மாயஸ॥ (௭௩)

(ஸ்வாமித்வ) இன்றமிழ்பாடியவீசனை - சர்வஸ்வாமியாகையாலும்; (ஆஸ்ரயபாவாத்) தன்சொல்லால்தான்றன்னைக் கீர்த்தித்த மாயன்-அத்யாஸ்சர்யசக்தி

யுக்தனுகையாலும்; (கருணயாதத்தவாக்ஜ்ரும்பணத்வாத்) என்வாய்முதலப்பனை-த்ருவனுக்குப்போலே தன்க்ருபையாலே தானேயாஸ்ரிதர்க்கு வாக்கையுண்டாக்குமவனுகையாலும்; (உஜ்ஜீவாபாதகத்வாத்) ஒப்பிலாத்தீவினையேனை யுய்யக்கொண்டு - அத்யந்தநிக்ருஷ்டர்களையு முஜ்ஜீவிப்பிக்கு மவனுகையாலும்; (அகடிதகடநாஸக்தி) ஏர்விலாவென்னைத் தன்னுக்கியித்யாதி - தன்னைக்கவிபாடுகைக்கு, சர்வப்ரகாரத்தாலுமயோக்யரானவர்களையுங்கொண்டு பாடுவித்துக்கொள்ளவல்ல வகடிதகடநா சாமர்த்த்யத்தை யுடைத்தாகையாலும்; (வைகுண்டயோகாத்) வன்கவிபாடுமென்வைகுந்தநாதனே-ஸ்ரீவைகுண்டத்திலெழுந்தருளியிருக்கையாலும்; (ஸ்வதந்த்ரஸ்வாந்தத்வ) வல்வினைமாய்ந்தறச்செய்குந்தன்றன்னை - ஆஸ்ரிதருடைய பாபங்களை நிவ்ருத்தமாம்படிபண்ணவல்ல பரிசுத்தஸ்வபாவனுகையாலும்; (சக்ராயுத) ஆர்வனே வாழியங்கையெம்பிரான் புகழ் - திருவாழியை திவ்யாயுதமாக வுடையனுகையாலும்; (ஜலதிஸுதாவல்லபத்வாத்) திருமாலின்சீர் - ஸ்ரிய:பதியாகையாலும் (பித்ருத்வாத்) பதவியவின்கவிபாடியவப்பனுக்கு-மஹோபகாரகனுகையாலும்; எம்பெருமானுஸ்ரிதனை அநந்ய ப்ரயோஜந ஸ்வவிஷய ஸ்தோத்ரத்திலே மூட்டாநிற்கிருனென்று, “ என்றைக்குமென்னை ” என்கிறதஸகத்திலே யாழ்வா ரருளிச்செய்தாரென்கிருர்...(எகூ)

திருவாய்மொழி நூற்றந்தாதி.

என்றனைநீயிங்குவைத்ததேதுக்கெனமாலு
மென்றனக்குமென்றமர்க்குமின்பமதா - நன்றுகவி
பாடவெனக்கைம்மாறிலாமைபகர்மாறன்
பாடணைவார்க்குண்டாமின்பம். (௬௬)

(என்றனைநீ) இதில் - அவன் திருவாய்மொழி பாடுவித்தபடியை யநுசந்தித்திடுபடுகிற பாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிருர். எங்ஙனேயென்னில்; “எனக்கு ருசியின்றிக்கேயிருக்க சம்சாரத்திலே யென்னைவைத்ததுக்கு ஹேதுவென்” என்றுகேட்க, “ உம்மைக்கொண்டு நமக்கும் நம்முடையார்க்கு மநுபவிக்கலாம்படி விலக்ஷணமான திருவாய்மொழி ப்ரபந்தத்தைப் பாடுவித்துக்கொள்ளவைத்தோமிங்காணும் ” என்று நேர்கொடுநேரானபரிஹாரத்தை யவனருளிச்செய்ய, “வேதங்கள், வ்யாஸாதிகள், முதலாழ்வார்கள், இவர்களுண்டாயிருக்க, அத்யந்தஹேயனானவென்னைக்கொண்டு, வேதங்களாலு மெல்லைகாணவொண்ணுத தன்வைபவத்துக்குத்தகுதியாக விலக்ஷணமான திருவாய்மொழியைப் பாடுவித்துக்கொண்ட |விம்மஹோபகாரத்துக்கு உபயவிபூதியிலும் சத்ருஸமாகச் செய்யத்தக்கதொரு ப்ரத்யுபகாரமில்லை” என்று தலைசீய்த்துப்படுகிற * என்றைக்கு மென்னையிலர்த்தத்தை, “ என்றனைநீ ” இத்யாதியாலே யருளிச்செய்கிருரென்கை.

(என்றனைநீயிங்குவைத்ததேதுக்கென) அவன்காட்டினதாகையாலே விசித்ரவிபூதியை யநுபவித்து, மீளவும் பூர்வப்ரக்ருதமான|தம்முடையசங்கையை, “பர்சங்குள்நீக்கி யென்னை யுனக்கேயறக்கொண்டிட்டு நிவாசமலர்த்தண்டுழாய்முடிமாயவனேயருளாய் ” என்றுகேட்க. (என்றனைநீ) சம்சாரத்தில் பொருந்தாதவென்னை, நீ - சம்சாரத்தில் பொருந்தாதாரை யேறவிடுகைக்கு சர்வசக்தியுக்தனுனநீ.

(இங்கு) * இருள்தருமாஞாலமான விவ்விபூதியிலே. (வைத்தேதுக்கென) ப்ரயோஜநநிரபேக்ஷமாயிருக்க, என்னப்ரயோஜநத்தைப்பற்ற வைத்ததென்ன. (மாலுமென்றனக்குமென்றமர்க்கு மின்பமதாநன்றாகவிபாடவென) திருமாலானவென க்கினிதாகவும், * திருமாலடியாரான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கினிதாகவும், விலக்ஷணமாய் "கவியமுதம்" என்னும்படியான வினியகவிகளைப்பாடவைத்தோமென்ன. தன்னைக்கவிபாடுகைக்கு, வேதங்களும், அத்தைப்பின்சென்ற வைதிகரான வ்யாசவால்மீகி ப்ரப்ருதிகளான பரமருஷிகளும், * செந்தமிழ்பாடுவாராய் "பெருந்தமிழனல்லேன்பெருகு" என்று ப்ரசம்ஸிப்பாருமான முதலாழ்வார்களு முண்டாயிருக்க, கவிபாடவென. (கைமாறிலாமை) "கவிபாடவைத்தோம்" என்றவிந்தவுபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமில்லாமையை. '(பகர்மாறன்) அருளிச்செய்தவாழ்வார். அதாவது - "என்றைக்கும் - என்சொல்லிநிற்பனோ," "என்சொல்லிநிற்பன் - என்முன்சொல்லும் மூவுருவாமுதல்வனை," "ஆமுதல்வனிவனென்று - என்வாய்முதலப்பனையென்றுமறப்பனோ," "செப்பமேசெய்துதிரிகின்றசீர்கண்டு - அப்பனையென்று மறப்பன்," "சீர்கண்டுகொண்டு - பார்பரவின்கவிபாடுபரமரோ," "இன்கவிபாடுபரமகவிகளால் தன்கவிதான்தன்னைப்பாடுவியாது - வன்கவிபாடுமென் வைகுந்தநாதனே," "வைகுந்தநாதன் - எந்நாள்சிந்தித்தார்வனோ," "ஆர்வனோ - சிர்பெறவின்கவிசொன்னதிறத்துக்கே," "திறத்துக்கு - உறப்பலவின்கவிசொன்ன வுதவிக்கே," "உதவிக்கைம்மாறென்னுயிர் - எதுவுமொன்றுமில்லைசெய்வதிங்குமங்கே" என்றிப்படி உபகாரஸ்ம்ருத்யதிசயத்தாலே யீடுபட்டருளிச்செய்தவென்கை. " 'என்சொல்லி,' 'எந்நாள்,' 'பார்விண்ணீர்,' 'இறப்பெதிர்,' 'எதுவும்' என்கிற வுபகாரஸ்ம்ருதியோடே" என்றிறே நாயனாருமருளிச்செய்தது. "[illegible]" (சதுர்விம்சத்ஸஹஸ்ராணிஶ்லோகாநாமுக்தவாந்ருஷி:) என்னும்படி, * பாலோடமுதன்னவான * இங்ஙனேசொன்ன வோராயிரமான * உறப்பலவின்கவிகளைப் பாடுவிக்கையாலே யிவர்க்கீடுபாடாயிருக்கிறது. (கைம்மாறிலாமைபகர்மாறன்பாடணைவார்க்குண்டாமின்பம்) இப்படி க்ருதஜ்ஞரானவாழ்வார் பரிசரவர்த்திகளாம்படி கிட்டுவார்க்காநந்தமுண்டாம். "எங்ஙனே சொல்லிலு மின்பம்பயக்குமே" என்கிற நிர்ப்பந்தமும்வேண்டா, கேவலம்கிட்டவமையும்.. (௬௯)

ஏழாம்பத்தில் - ஒன்பதாந்திருவாய்மொழி முற்றிற்று.

ஆக - திருவாய்மொழி - ௬௯.—பாட்டு - ௭௬௧.

ஸ்ரீ

திருவாய்மொழி.

ஏழாம்பத்து.

பத்தாந்திருவாய்மொழி.

இன்பம் - ப்ரவேசங்கள்.

ஆறாயிரப்படி.

(இன்பம்பயக்க) இப்படியென்னைத் திருவாய்மொழி பாடுவித்தரு ளுகைக்காக, திருநாட்டினின்றும் அங்கே யெழுந்தருளி யிருந்தபடியே சபரிகரமாகத்திருவாறன் விளையிலே வந்துபுகுந்து என்னைத் திருவாய் மொழி பாடுவித்துப் பாட்டைக்கேட்டருளி, திருவடி, பெருமாள் குண ங்களைச் சொல்லக்கேட்டருளி அசோகவநிகையிலே பிராட்டிநிர்வ்ருதை யாயிருந்தாப்போலே நிர்வ்ருதனாயிருந்த திருவாறன் விளையையென்றோ சென்று நாமநுபவிக்கப்பெறுவதென்று மநோரதிக்கிறார்... ....*

பன்னீராயிரப்படி.

பத்தாந்திருவாய்மொழியில், கீழ்ப்படி தம்மைக்கொண்டு கவிபாடுவித்துக்கொ ண்ட மஹோபகாரத்தாலே தம்முடையவிரோதி அஸத்ஸமமாம்படி ஹ்ருஷ்டரா னவர், அவனுபகாரத்துக்கொரு ப்ரத்யுபகாரங்காணாமையாலே, சேஷியானவனுக்க திசயஜநகமான சேஷவ்ருத்தியொழிய இல்லையென்றறுதியிட்டு, ப்ரதிசம்பந்தியா ன வவனுடைய வசேஷசேஷித்வப்ரகாசகமான ஸ்ரீய:பதித்வபூர்த்தியையும், அநந் யார்ஹசேஷத்வாபாதாநத்தையும்; ஆஸ்ரிதரக்ஷணகாரத்தையும், அநுபாவ்யமான வி க்ரஹயோகத்தையும், அநுபவார்த்தமான வவதாரத்துக்கு மூலமாயுள்ள அநந்தச யநத்வத்தையும், அநிஷ்டநிவ்ருத்திவிசிஷ்டமான வபிமதசாதகத்வத்தையும், ப்ர பலவிரோதி பஞ்சநத்வத்தையும், ஆந்தரதுஃகநிவர்த்தகத்வத்தையும், பாபம்நிவ்ருத் தமாய் ப்ராப்யதேசம் சித்திக்கிலும் உத்தேஸ்யமான ஆஸந்நதேஸயோகத்தையும், நிரதிசயவ்யவசாயஜநகத்வத்தையுமநுசந்தித்து, ஏவம்விதஸ்வபாவனானவன் நம் மைவிரோதியைக்கழித்தடிமை கொள்ளுகைக்காக ஆஸந்நமான திருவாறன் விளையி லே சந்நிஹிதனான வவன்திருவடிகளிலே யடிமைசெய்யக்கடவோமென்று மநோ ரதித்து, இப்படி நிவர்த்யவிரோதிபலநிரூபண பூர்வகமாக வதினுடைய சரண்யநி வர்த்யத்வத்தை நிஷ்கர்ஷித்து நிகமிக்கிறார்................................ ......*

ஈடு.

சர்வேஸ்வரன் தம்மைக்கொண்டு திருவாய்மொழி பாடுவித்துக் கொண்ட மஹோபகாரத்துக்கு ப்ரத்யுபகாரந்தேடிக் காணாமை தடுமாறி

னார் - கீழ்த்திருவாய்மொழியிலே, இவர் தாம்தம்முடைய ப்ரமத்தாலே ப்ரத்யுபகாரந்தேடித் தடுமாறினாரத்தனைபோக்கி இவர்தமக்குக்கொடுக்கலாவதொன்றுமில்லை, அவனென்றுகொண்டு குறைதீரவேண்டும் சாபேக்ஷனல்லன், இவர்தம்முடைய வுபகாரஸ்ம்ருதியிருந்த விடத்திலிருக்கவொட்டாமையாலே செய்ததொன்றிறே; ஆனாலுமாறியிருக்க மாட்டாரே. இனி, நாமுமவனுக்கொன்று கொடுத்தோமாய், அவனும் நம்பக்கலொன்று பெற்றானாகச்செய்யலாவதொன்றுண்டு. அவன், தனக்குவருந்தகைங்கர்யத்தைப்பண்ணவே, அதுதன்னைத்தனக்கு ப்ரத்யுபகாரம்பண்ணிற்றாகநினைத்திருக்கும் ஸ்வபாவனாயிருந்தான்; ஆனபின்பு, நம்முடைய ஸ்வரூபாநுரூபமான வாத்மாந்ததாஸ்யத்திலே யதிகரிப்போமென்று பார்த்தார். இனித்தான், வேதவாக்யங்களும் “ 𑌸𑍍𑌵𑍇𑌨 𑌰𑍂𑌪𑍇𑌣𑌾𑌭𑌿 𑌨𑌿𑌷𑍍𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 ” (ஸ்வேநரூபேணாபிநிஷ்பத்யதே) என்று-ஸ்வரூபப்ராப்தியளவுஞ்சொல்லவே, அதுக்கவ்வருகில் கைங்கர்யமானது, அவகாதஸ்வேதம்போலே தன்னடையே வருமென்று ப்ரஹ்ம ப்ராப்தி யளவுஞ்சொல்லிவிடும். ஆழ்வார்கள் “வழுவிலாவடிமைசெய்யவேண்டுநாம் ” என்று அதுதன்னையேசொல்லாநிற்பர்கள், ப்ராப்திபலமானகைங்கர்யத்தில் ருசியாலே. “ ஸம்ஸாரம்த்யாஜ்யம், சர்வேஶ்வரனுத்தேஶ்யன் ” என்கிறஜ்ஞாநம்பிறந்து, பகவத்ஸமாஶ்ரயணம்பண்ணினவர்கள், “ 𑌭𑍇𑌷𑌜𑌂 𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌃 ” (பேஷஜம்பகவத்ப்ராப்தி:) என்றுபகவத்ப்ராப்தியளவிலே நின்றார்கள்; அவர்களிற்காட்டில் “ மயர்வறமதிநலமருளினன் ” என்று பகவத்ப்ரசாத லப்தமானஜ்ஞாநத்தையுடையரான விவர்களுக்கு வாசியிதுவாயிற்று. இனி, அடிமைசெய்யுமிடந்தன்னில் “ சரீரசம்பந்தமற்று பரமபதப்ராப்திபண்ணினால் பின்புசெய்கிறோம் ” என்றவ்வளவுமாறியிருக்கும்படியன்றே உபகாரஸ்ம்ருதி யிவரைநலிகிறபடி. ஆகையாலே, ஸ்ரீவால்மீகிபகவான் பாடின ஸ்ரீராமாயணங்கேட்கைக்குத் திருவயோத்யையிலே திருத்தம்பிமாரும் தாமுங்கூடப் பெருமாள் பேரோலக்கமிருந்தாப்போலே, சர்வேஶ்வரனும், நாம்பாடினதிருவாய்மொழி கேட்கைக்காகத்திருவாறன் விளையிலே, பர்யங்கவித்யையிற் சொல்லுகிறபடியே திருவநந்தாழ்வான்மேலே நாய்ச்சிமாரோடேகூடி நித்யபரிஜநத்தோடேகூடவெழுந்தருளி யிருந்தான். அங்கேபோய்த் திருவாய்மொழிகேட்பித்தடிமைசெய்வோமென்று மநோரதிக்கிறாராய், அம்மநோரதந்தன்னிலும், சர்வேஶ்வரன் ப்ராப்யனானால் அர்ச்சிராதிகதியோடு தேஶவிசேஷத்தோடு வாசியற ப்ராப்யாந்தர்க்கதமிறே. அதாவது-முன்பப்ராப்தமாய் பின்புபாசநத்துக்குப்பலமாய் வருவனயாவைசில, அவையெல்லாம்ப்ராப்யாந்தர்க்கதமாகக்கடவதிறே; அப்படியே, திருவாறன்விளையிலே யெழுந்தருளியிருக்கிற சர்வேஶ்வரன் திருவடிகளிலேபோ யடிமைசெய்யக்கடவோம். அதுதானும்வேண்டா, அத்தேஶப்ராப்திதானேயமையும்; அது

தானும்வேண்டா, இங்கேயிருந்தே யங்கேறப்போவதாக மநோரதிக்கிற வம்மநோரதந்தானேயமையும். இனி, நாமத்தேஶத்தை "ப்ராப்யம்" என்று புத்திபண்ணிப்போருகிறவோபாதி அவனும்நாமிருந்ததேஶத்தைக்குறித்து வரக்கடவன், அவ்வளவிலும் நாமவனை யநுவர்த்தித்து விட்டு நாமத்தேஶத்திலேபோய்ப் புகக்கடவோம், அத்தேஶமேநமக்கு ப்ராப்யம்; அங்கேபோய்ப்புகவே நம்முடையகைங்கர்ய விரோதிகளடையப்போம். இனி, நான்வேறொன்றிலே யிச்சைபண்ணிலும், என்னெஞ்சானது அத்தேஶத்துக்கொழிய வேறொரு தேஶத்துக்காளாகமாட்டாது; "ஸாவொநாநந்யத்ர மஹூக்ஷி" (பாவோநாந்யத்ரகச்சதி) என்கிறபடியே.

ஆக, திருவாறன் விளையிலே புக்கடிமைசெய்யக்கடவ படிகளை மநோரதித்தினியராகிறார். ஸ்ரீராமாயணத்திற் காட்டிலிதுக்குவாசி - பாடினாரே கேட்பிக்கையும், பாட்டுண்டாரே கேட்கையுமாயிற்று. "ஸீதாயாஶ்சரிதம்மஹத்" (ஸீதாயாப்ஶ்சரிதம்மஹத்) என்னுநிற்கச்செய்தே, கவி பாட்டுண்டவனை யொழியத்தனியே யிருந்திறே கேட்டது. பாடினான் ஸ்ரீ வால்மீகிபகவான், கேட்பித்தாரும் குசலவர்களிறே......................*

ஜீயர் அரும்பதம்.

இன்பம்பயக்க ப்ரவேஶம், வ்ருததவர்த்திஷ்யமாண சங்கதிக்காக வ்ருத்தாநுவாதம்(சர்வேஶ்வரனித்யாதி) ஆனால் வெறுமனே யிருக்கவொண்ணாதோவென்ன; உபகாரஸ்ம்ருதியாலே வெறுமனே யிருக்கமாட்டாமல் தடுமாறினாரென்கிறார் (இவர்தாம் தம்முடைய வித்யாதிவாக்ய சதுஷ்டயத்தாலே.) இவருடைய வாகிஞ்சந்யத்தாலு மவனுடைய பூர்த்தியாலும் ப்ரத்யுபகாரம்பண்ண விரகில்லையாகில் வெறுமனேயிருக்கிறதுக்கென்னென்ன (ஆனாலுமித்யாதி) ஆனால் ப்ரத்யுபகாரம்பண்ணும் விரகேதென்ன; சங்கதியருளிச்செய்கிறார் (இனிநாமுமித்யாதி) அதாவதேதென்ன (அவன்தனக்கித்யாதி) (அவன்) என்றதுக்கு, (நினைததிருக்கும் ஸ்வபாவனுயிருந்தான்) என்றத்தோடே யந்வயம். வகுத்தகைங்கர்யம் - ப்ராப்தமானகைங்கர்யம். ஆனபின்பு - அவன்ஸ்வபாவ மிதுவானபின்பென்றபடி. ஆத்மாந்ததாஸ்யம்-யாவதாத்மபாவியான கைங்கர்யம். ஶ்ருதியிலே "பகவத்ப்ராப்தியே புருஷார்த்தம்" என்னாநிற்க, கைங்கர்யம் புருஷார்த்தமென்பானென்னென்ன (இனித்தானித்யாதி) வேதம்போலே யாழ்வார்களும் ப்ராப்திமாத்ரத்தைச்சொல்லி விடவொண்ணாதோவென்ன (ஆழ்வார்களித்யாதி) அதுதன்னையே - கைங்கர்யந்தன்னையே. அப்படி சொல்லுகைக்கு ஹேதுவேதென்ன (ப்ராப்திபலமான வித்யாதி) ஆனால் வேததாத்பர்யத்தை உபப்ரும்ஹணமுகேந வெளியிடுகிற ருஷிகள் சொல்லாமைக்குஹேதுவேதென்ன; ஸ்வரூப யாதாத்ம்ய ஜ்ஞாநமில்லாமையாலேயென்கிறார் (சம்சாரமித்யாதி) இவர்களுக்கு வாசியேதென்ன (அவர்களிலித்யாதி) இதுவாயிற்று - கைங்கர்யத்தில் ருசியுடையராகையாயிற்றென்றபடி. பரமபதத்திலே போனாலன்றோ வடிமைசெய்யலாவது, "இங்கேசெய்யவேணும்" என்றபேக்ஷிக்கிற தென்னென்ன (இனியடிமையித்யாதி)

"பாம்பணையப்பன்" இத்யாதியைப்பற்ற (பர்யங்கேத்யாதி) "எழில்மலர் மாதர்," "தேவபிரான்" என்றத்தைப்பற்ற (நாய்ச்சிமாரோடே யித்யாதிவிசேஷ

ணத்வயம்) அடிமை-வாசிகமானவடிமை. ஆனாலவனையொழிய அவனிருந்ததேசம் போகிறவழியெல்லாவற்றையும் மநோரதிக்கிறதென்னென்ன (சர்வேஶ்வரனித்யாதி) அதெங்ஙனேயென்ன (அதாவதித்யாதி) உபாசநத்துக்கு - உபாயத்துக்கென்றபடி. பலமென்றது - அவாந்தரபலமென்றபடி. "ஈங்கினைக்கப்பெற" என்றத்தைப்பற்ற (இங்கேயிருந்தேயித்யாதி) "ஆடுபறவைமிசைக்கண்டுகைதொழுதன்றி" என்றத்தைப்பற்ற (இனிநாமத்தேசத்தையித்யாதி) " ஒன்றிவலம்செய்யவொன்றுமோதீவினை " என்றத்தைப்பற்ற (அங்கேபோய்ப்புகவேயித்யாதி) " கூடுங்கொலெனறுமென்சிந்தனை" என்றத்தைப்பற்ற (நான்வேறொன்றிலேயித்யாதி) இதுக்குத்ருஷ்டாந்தம் (பாவ இத்யாதி)

நிகமநம் (ஆகவித்யாதி) இத்தால் வ்யாவ்ருத்தி (ஸ்ரீராமாயணத்திலித்யாதி) அங்கிவ்விரண்டு மில்லையோவென்ன வருளிச்செய்கிறார் (ஸீதாயா இத்யாதிவாக்யத்வயத்தாலே) " காவ்யம் ராமாயணம் க்ருத்ஸ்நம் ஸீதாயாஶ்சரிதம் மஹத் । பௌலஸ்த்யவதமித்யேவ சகார சரிதவ்ரத: " (காவ்யம்ராமாயணம்க்ருத்ஸ்நம்ஸீதாயாஶ்சரிதம்மஹத் । பௌலஸ்த்யவதமித்யேவசகாரசரிதவ்ரதஃ) இதிபாலகாண்டே, " நிரஸ்தாதிஶயாஹ்லாதஸுகபாவைகலக்ஷணா । பேஷஜம் பகவத்ப்ராப்திரேகாந்தாத்யந்திகீமதா " (நிரஸ்தாதிஶயாஹ்லாதஸுகபாவைகலக்ஷணா । பேஷஜம்பகவத்ப்ராப்திரேகாந்தாத்யந்திகீமதா) இதிஷஷ்டேம்ஶே ......*

பத்தாந்திருவாய்மொழி.

முதற்பாட்டு.

இன்பம்பயக்கவெழின்மலர்மாதருந்தானுமிவ்வேழுலகை
யின்பம்பயக்கவினிதுடன்வீற்றிருந்தாள்கின்றவெங்கள்பிரா
னன்புற்றமர்ந்துறைகின்றவணிபொழில்சூழ்திருவாறன்விளை
யன்புற்றமர்ந்துவலஞ்செய்துகைதொழுநாள்களுமாகுங்கொலோ.

ஆறாயிரப்படி.

பரஸ்பரஸாஹித்யத்தாலே தங்களுக்கின்பமுண்டாம்படியாகவும், * அயர்வறுமமரர்களுக் கினிதாம்படியாகவும், பிராட்டியோடேகூடத் திருமாமணிமண்டபத்திலே வீற்றிருந்தருளி, இவ்வேழுலகை யின்பம்பயக்கவாள்கின்ற வெங்கள்பிரான் அன்புற்றமர்ந்துறைகின்ற வணிபொழில் சூழ்திருவாறன்விளை யன்புற்றமர்ந்து வலஞ்செய்து கைதொழுநாள்களுமாகவற்றேயோவென்கிறார்..*

பன்னீராயிரப்படி.

முதற்பாட்டில், சேஷியானவன் லக்ஷ்மியோடே பரிபூர்ணனாயெழுந்தருளியிருக்கிற திருவாறன்விளையை யநுபவித்தடிமைசெய்யுங்காலமுமாமோவென்கிறார்.

எழில் - ஸௌந்தர்யாதிகுணோபேதையாய். மலர்மாதரும் - பத்மவாஸிநீத்வத்தாலேவந்த போக்யதையையுடைய லக்ஷ்மியும், தானும் - அவர்கள் தான்விரு

ம்பி மேல்விழும்படியான வைலக்ஷண்யத்தையுடைய தானும். இன்பம் - பரஸ்பரா நந்தவ்ருத்தி. பயக்க - உண்டாம்படியாக. இனிதுடன் - போகஸாரஸ்யத்தோடே கூட. வீற்றிருந்து - சர்வசேஷித்வ வ்யாவ்ருத்தி தோன்றும்படி யிருந்து. இவ்வே ழுலகை - வ்யக்தாவ்யக்த காலசுத்த ஸத்வாத்மக சதுர்விதா சேதநவர்க்கமும், பத்தமுக்த நித்யரூபமான த்ரிவிதசேதநவர்க்கமுமாகிற ஏழுவகைப்பட்டவிந்தலோகங்களை. இன்பம்பயக்க - ஆநந்தகந்தளிதமாம்படி. ஆள்கின்ற - அடிமைகொள்ளாநிற்குமவனாய். எங்கள்பிரான் - அப்படி யெங்களையும் வாசிக கைங்கர்யங்கொண்ட மஹோபகாரகனானவன். அன்புற்று - அடிமைகொள்ளுகைக் கேகாந்தஸ்த்தல மென்றுவிரும்பி. அமர்ந்து - அல்லாத பரவ்யூஹாதிஸ்த்தலத்திற்காட்டில்பொருத்தமுடையனாய். உறைகின்ற - நிரந்தரவாஸம்பண்ணுகிற. அணி - தர்சநீயமான. பொழில் - பொழில். சூழ் - சூழ்ந்த. திருவாறன்விளை - திருவாறன்விளையை. அன்புற்று - அடிமைசெய்கைக் காஸந்நஸ்த்தலமென்று ஸ்நேஹித்து. அமர்ந்து - ப்ரயோஜநாந்தரங்களைக்கொண் டகலப்போகத் தேடாதே பொருந்தி. வலஞ்செய்து - ஸ்வரூபாநுரூபமான வநுகூலவ்ருத்தியைப்பண்ணி. ஹ்ருஷ்டராய், கைதொழும் - * பத்தாஞ்சலிபுடராய் நாம்அநுபவிக்கும். நாள்களும்-நாள்கள். ஆகுங்கொல்-உண்டாமோ.

ஈடு - முதற்பாட்டு.

திருவாறன்விளையிலேபுக்கு ஹ்ருஷ்டராய்க்கொண் டடிமைசெய்யுங்காலமாகவற்றோ! யென்று மநோரதிக்கிறார்.

(இன்பம்பயக்க) "ஆநந்தமயஃ" (ஆநந்தமயஃ) என்கிறவஸ்துவுக்கும்; நித்யதுஃகியான சம்சாரிசேதநனுக்குத் தன்னோட்டைச்சேர்த்தியாலே ஆநந்தமுண்டாமாபோலேயாயிற்று, பிராட்டியோட்டைச்சேர்த்தியாலே யவன்றனக்கு மாநந்தமுண்டாம்படியும். " அல்லிமலர்மகள் போகமயக்குக்களாகியும் நிற்குமம்மான் " என்று பிராட்டியோட்டைச் சேர்த்தியாலே பிச்சேறியிருக்குமாயிற்று. [ராமஃ] ஸ்ரீபரசுராமாழ்வானைச் செருக்குவாட்டிப் படைவீட்டிலே வந்து புகுந்து சக்ரவர்த்தியையும் மஹர்ஷிகளையுமநுவர்த்தித்து தர்மோத்தரமாக நடத்திப்போந்தவர்.[து] பித்ருஶுஶ்ரூஷணாதிகளைப் பண்ணினபின்பு பிராட்டியோட்டை ரஸதாரையிலே யிழிந்தபின்பு, " இதுக்கு முன்பெல்லாம் வாத்ஸ்யாயநங்கற்றுக் காமதந்த்ரமே நடத்திப்போந்தாரித்தனையோ! " என்னும்படி வேறுபட்டார். முன்பு போருகிறநாளில் " இவரிதுக்குமுன்பு காமரஸம்புதியதுண்டறியாரோ! " என்னும்படி போந்தவிவர், இப்போது " இதுக்குமுன்பு தர்மதத்த்வம் புதியதுண்டறியாரோ ? " என்னும்படி வேறுபட்டார். [ஸீதயாஸார்த்தம்] [ஸீதயாஸார்த்தம்] அயோநிஜையாய் பரமபதத்தில் தானுமவனுமாயிருந்து கலந்தபோதைச் செவ்வியிலொன்றுங்குறையாமலிருந்தவளிறே பிராட்டி; இப்படியிருக்கச்செய்தேயும், தம்மையழியமாறி இதரஸஜாதீயராய்வந் தவதரித்தாரோயாகிலும், போகத்தில்வந்தாலவளுங்கூட அப்ரதானையாம்படி யதில் தலைநின்றார். அதுக்கடி யென்னென்னில் ; ராஜபுத்ரரான ரஸிகத்வத்தால்வந்த வேற்றத்தாலே. [விஜஹார] ப்ரிப்பேயொழிய போகத்திலிழியப்பெற்றிலர். உபக்ரமத்துக்கே

பணிபோந்த இத்தனை. உபோத்காதத்துக்குக் காலம்போந்த இத்தனை. [ஸஹ-ஸ்ரு-த-ஸ] [பஹு-ஸ்ருதாங்] "ஸமாஸாதஸ்ததராஹஃ" (ஸமாத்வாதஸ்தத்ராஹம்) என்கிறபடியே பன்னிரண்டாண்டொருபடிப்பட வநுபவிக்கச்செய்தேயும், ருதுசப்தத்தாலேசொல்லுகிறதாயிற்று - அவ்வவகாலங்களுக்கடைத்த புஷ்பாத்யுபகரணங்களைக்கொண்டு காலாவயவங்கள்தோறு மநுபவித்துப் போந்தமைதோற்ற. சீதகாலத்துக் கடைத்தவைகொண்டு பரிமாறியும், உஷ்ணகாலத்துக் கடைத்தவைகொண்டு பரிமாறியு மநுபவித்தமைதோற்றச் சொல்லுகிறது. [மநஸ்வீ] [மநஸ்வீ] ப்ரணயதாரையில் வந்தால், அவள்பாரித்தபாரிப்புக்கெல்லா மானைக்குக் குதிரைவைக்கைக்கீடான நெஞ்சிலகலமுடையவராயிற்று. [தத்கத꞉] [தத்கத꞉] த்ரவ்யம் த்ரவ்யத்தோடு சேர்ந்தாப்போலன்றிக்கே, ஜாதிகுணங்கள் த்ரவ்யத்தோடு சேருமாபோலேசேர்ந்தார். "அநந்யாராகவேணாஹஃ" (அநந்யாராகவேணஹம்) என்றும், "அநந்யாஹிமயாஸீதா" (அநந்யாஹிமயாஸீதா) என்றுமிறே யிருவர் வார்த்தையும். [தஸ்யாநித்யம்ஹ்ருதிஸமர்ப்பித꞉] [தஸ்யாநித்யம்ஹ்ருதிஸமர்ப்பித꞉] இதி விழிவதற்குமுன் பிவளையறிந்திருக்குமவளாகையாலே, "அப்படி பெரியவரிப்போ தென்பக்கலிலே தாழநிற்பதே!, இப்படி யிதொருநீர்மையே!" என்றெப்போது மிவ்வநுசந்தாநமே யாத்ரையாகையாலே, வேறொன்றும் நெஞ்சிற்படாதே அவள் தன்னைத் தம்பக்கலிலே போகடும்படியானார். "தத்கத꞉" (தத்கத꞉) என்கையாலே - இவர்தம்மை யவள் பக்கலிலே யோக்கினபடி சொல்லுகிறது. "நித்யம்ஹ்ருதிஸமர்ப்பித꞉" (நித்யம்ஹ்ருதிஸமர்ப்பித꞉) என்கையாலே - அவள்தன்னை யிவர்பக்கலிலே யோக்கிவைத்தபடி சொல்லுகிறது. இப்படி யிருவருமான சேர்த்தியிலே யிதுக்குமுன் பாநந்தம் புதியதுண்டறியாதா னொருவனுக்கு நந்தமுண்டாமாபோலேயாயிற்று, க்ஷணந்தோறுமாநந்தமுண்டாம்படி. (எழில்மலர்மாதரும்) "ராகவோர்ஹதிவைதேஹீம்" (ராகவோர்ஹதிவைதேஹீம்) என்னுமாபோலேயாயிற்றித்தலை. (தானும்) "யஸ்யஸீதாபவேத்பார்யா" (யஸ்யஸீதாபவேத்பார்யா) என்றும், "யஸ்யஸாஜநகாத்மஜா" (யஸ்யஸாஜநகாத்மஜா) என்றும் சொல்லலாம்படியாயிற்றத்தலை.

(இவ்வேழுலகையின்பம்பயக்க) "ராமஸ்ஸீதாமநுப்ராப்யராஜ்யம்புநரவாப்தவாந் । ப்ரஹ்ருஷ்டமுதிதோலோக꞉" (ராமஸ்ஸீதாமநுப்ராப்யராஜ்யம்புநரவாப்தவான் । ப்ரஹ்ருஷ்டமுதிதோலோக꞉) என்கிறபடியே, மாதாபிதாக்களிருவரும் சேரவிருந்து பரியப்புக்கால் ப்ரஜைகளுக்கொரு குறைகளும் பிறவாதிறே. ஆக, இருவருமான சேர்த்தியாலே தங்களுக்காநந்தமுண்டாக, அச்சேர்த்தியைக்காண்கையாலே லோகத்துக்காநந்தமுண்டாக, அதுதன்னைக்கண்டு, ப்ரஜை பால்குடிக்கக்கண்

டுக்கும் தாயைப்போலே, இவர்களுக்குண்டான ப்ரீதியைக்கண்டு அத் தாலேதாங்களினியராயிருப்பர்களாயிற்று. (இனிதுடன்வீற்றிருந்தாள்கி ன்ற) தன்சந்நிதியாலே லோகமடையத்தளிரும் முறியுமாம்படி யிருக்கி றவன், தான்பெறும்பேறுபெற்றாப்போலே, " திருவாய்மொழிகேட்கைக் கிடாயிருப்பதொருதேசம்பெறற்றோம் " என்றுவிரும்பி வர்த்திக்கிற தே சமாயிற்று. (எங்கள்பிரான்) * கேசவன்றமர்க்குப்பின்பிவர் தாமேகாகிக ளல்லரிறே. என்னை யிடுவித்துத்திருவாய்மொழிபாடுவித்துக்கொண்ட வு பகாரகன். (அன்புற்று) "திருவாய்மொழி கேட்கலாயிருப்பதொரு தே சம்பெறுவோமே" என்று அங்கே ஸ்நேஹத்தைப்பண்ணி. (அமர்ந்து) அத்தேசவாசத்துக்கு மேற்பட ஒரு ப்ரயோஜநத்தைக் கணிசியாதேவி ரும்பி. (உறைகின்ற) அவதாரங்கள்போலே தீர்த்தம்ப்ரசாதியாதே, நித் யவாசம்பண்ணுகிற. (அணிபொழில்சூழ்திருவாறன்விளை) " ப்ராப்யபூ மி " என்று தோற்றும்படியிருப்பதாய், அவன்றனக்கும் விபூதியிலுள் ளார்க்குமிருந்து திருவாய்மொழிகேட்கைக்கிடான பரப்பையுடைத்தா ய், தர்ஸநீயமாயிருக்கிற பொழிலாலே சூழப்பட்டதிருவாறன் விளையை. " தெநதெதஉந—வ்ரதாஃ " (தேநதேதமநுவ்ரதாஃ) என்கிறபடியே, அவனுக்குத்தேஶ்யமான விடமுமிவனுக் குத்தேஶ்யமாகக் கடவதிறே. (அன்புற்று) " திருவாய்மொழிகேட்கைக்கிடானதேசம்பெற்றோம் " எ ன்று அவன்விருப்பத்தைப் பண்ணினாப்போலே, " திருவாய்மொழிகே ட்பிக்கைக்கிடாயிருப்பதொரு தேசத்தைப்பெறுவோமே" என்று அத் தேசத்திலே விருப்பத்தைப்பண்ணி. (அமர்ந்து) அத்தேசவாசத்துக்க வ்வருகொரு ப்ரயோஜநத்தைக் கணிசியாதே. (வலஞ்செய்து) ப்ரதக்ஷி ணாதிகளைப்பண்ணி. (கைதொழுநாள்களுமாகுங்கொலோ) " அபீதாநீம் ஸகாலஸ்ஸ்யாத் " (அபீதாநீம்ஸகாலஸ்ஸ்யாத்) என்றாரோ ஸ்ரீகௌசலையா ர் - போய்வருகைதவிராராகில் மீண்டுபுகுரும்நாள் இன்றாயிற்றாகிலோ என்றாப்போலே. இம்மநோரதத்துக் கடைத்தகாலமே யநுபவத்துக்க டைத்தகாலமாகப் பெற்றோமாகிலோவென்கிறார்.........................*

ஜீயர் அரும்பதம்.

முதற்பாட்டு (இன்பமித்யாதி) " அணிபொழில்சூழ்திருவாறன்விளை " என் றுதொடங்கி "ஆகுங்கொல்" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை (திருவாறன்வி ளையிலேயித்யாதி)

"எழில்மலர்மாதருந்தானும் - இன்பம்பயக்க" என்றுகூட்டி, " எழில்மலர் மாதர் " என்றுவிசேஷிக்கையாலே - ஈஶ்வரனுடையவானந்தத்துக்கு ஹேது வி வள்சேர்த்தியென்கிறார் (ஆநந்தமயஇத்யாதி) ஆநந்தமயஃ என்கிறவஸ்துவான வவன் றனக்கும்-பிராட்டியோட்டைச் சேர்த்தியாலே யாநந்தமுண்டாம்படியுமென்றங்வ யிப்பது. பிராட்டியோட்டைச் சேர்த்தியாலே யாநந்தமுண்டாமோவென்ன (அல் லிமலர்மகளித்யாதி) இருவருமான சேர்த்தியிலே யாநந்தமுண்டாமென்னுமதுக்கு

ப்ரமாணம் (ராம இத்யாதி) "ராமஸ்து ஸீதயா ஸார்த்தம் விஜஹார பஹூந் ருதூந்" (ராமஸ்துஸீதயாஸார்த்தம் விஜஹாரபஹூந்ருதூந்) இத்யாதிபால காண்டே. "ராமஃ" என்றதுக்கர்த்தம் (பரசுராமாழ்வானித்யாதி.) செருக்கு வாட்டி - கர்வத்தைப்போக்கி. வாத்ஸ்யாயநம் - காமசாஸ்த்ரம். விவரணம் (முன் புபோருகிறவித்யாதி.) "ஸஹ யுக்தே ப்ரதாநே" (ஸஹயுக்தேப்ரதாநே) என்று - அப்ரதாநே த்ருதீயையாக்கியர்த்தம் (அயோகிஜையாயித்யாதி.) ஸீதா-லாங்கலபத்ததிஃ, ஆகையாலே (அயோநிஜையாயென்றது.) அதுக்கடி - தலைசிற் கைக்கடி. அநுபபூவ என்னுதே, "விஜஹார" என்றதுக்குபாவம் (பாரிப்பேயித் யாதி.) "போகத்திலிழியப்பெற்றிலர்" என்றதின் கருத்தை யருளிச்செய்கிறார் (உபக்ரமத்துக்கே யித்யாதி.) விஹாரணம் - விளையாட்டாய், அத்தால் - உபக்ரமத் தைச்சொல்லுகிறது. ஏதத்விவரணம் (உபோத்காதத்துக்கித்யாதி.) வத்ஸராந் என்னுதே, "ருதூந்" என்கிறதென்னென்ன (ஸமாத்வாதமேத்யாதி.) விவரணம் (சீதகாலத்துக்கித்யாதி.) * பூமாவிலே இனி ப்ரத்யயமாக்கி யர்த்தம் (ப்ரணயதா மையிலித்யாதி.) ஆனைக்குக் குதிரைவைக்கையாவது - பிடிகொடுக்குமாபோலே யி ருந்து பிடிகொடாதொழிகை. அப்படி சேர்ந்திருப்பர்களோ வென்ன, ப்ரமாணம் (அநந்யேத்யாதி) "அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா" (அநந்யாராகவேணுஹம் பாஸ்கரேணப்ரபாய தா - ஸக்யாலோபயிதும்நாஹம்) இத்யாதி ஸுந்தரகாண்டே ராவணம்ப்ரதிஸீதா' "அநந்யா ஹி மயா ஸீதா பாஸ்கரேண ப்ரபா யதா। விஸுத்தா த்ரிஷு லோகேஷு மைதிலீ ஜநகாத்மஜா" (அநந்யாஹிமயாஸீதாபாஸ்கரேணப்ரபாயதா। விஸுத்தாத்ரிஷுலோகேஷுமைதிலீஜநகாத்மஜா) இதிராவணவதாநந்தரோ ப்ரஹ் மாதிதேவாந் ப்ரதிராமஃ. "'தத்கதஃ' (தத்கதஃ) என்றதும், 'தஸ்யா நித்யம் ஸமர்ப்பிதஃ' (தஸ்யாநித்யம்-ஸமர்ப்பிதஃ) என்றதும், 'அஸ்யா தேவ்யா மநஸ்தஸ்மிம்ஸ்தஸ்ய சாஸ்யாம் ப்ரதிஷ்டிதம்' (அஸ்யாதேவ்யாமநஸ்தஸ்மிம்ஸ்தஸ்யசா ஸ்யாம்ப்ரதிஷ்ட்டிதம்) என்றாப்போலே யிருக்கிறது" என்றருளிச்செய்வர். ஒக்கி னபடி - ஆக்கினபடி. பரதந்த்ரராக்கினபடி யித்யர்த்தஃ. வசநமெடுத்ததுக்கு ப்ர யோஜநம் (இப்படியிருவருமானவித்யாதி.) "ராகவோர்ஹதி" (ராகவோர்ஹ தி) என்கையாலே, "எழில்மலர்மாதர்" என்று-பிராட்டிவைலக்ஷண்யமும், "ய ஸ்யஸீதா பவேத்பார்யா," (யஸ்யஸீதாபவேத்பார்யா,) "யஸ்ய ஸா ஜநகாத்மஜா" (யஸ்யஸாஜநகாத்மஜா) என்று, யஸ்ய என்கிறது * சேஷேஷஷ்ட்டியா கையாலும், "பார்யா" (பார்யா) என்கையாலும், "தானும்" என்று-பெரு மாள்வைலக்ஷண்யமுஞ் சொல்லுகிறதென்றபடி. இத்தலையென்றது-பிராட்டியை. அத்தலையென்றது - பெருமாளை. "துல்யஸீலவயோவ்ருத்தாம் துல்யாபிஜநலக்ஷணாம்। ராகவோர்ஹதி வைதேஹீம் தம் சேயமஸிதேக்ஷணா." (துல் யஸீலவயோவ்ருத்தாம் துல்யாபிஜநலக்ஷணம் । ராகவோர்ஹதிவைதேஹீம்தம்சேய மஸிதேக்ஷணு.) "யஸ்ய ஸீதா பவேத்பார்யா யஸ்ய த்வம் ச ஸஹாநுஜஃ। அதிஜீவேத் ஸ ஸர்வேஷு லோகேஷ்வபி புரந்தராத்" (யஸ்யஸீதாபவேத் பார்யா யஞ்சஹ்ருஷ்டாபரிஷ்வஜேத் । அதிஜீவேத்ஸஸர்வேஷு லோகேஷ்வபிபுர ந்தராத்) இதி ராவணம் ப்ரதி சூர்ப்பணகா. "அப்ரமேயம் ஹி தத்தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா" (அப்ரமேயம்ஹிதத்தேஜோயஸ்யஸாஜநகாத்மஜா) இதி

ராவணம் ப்ரதி மாரீச:. இருவருடைய வாக்யம்சொன்னவநந்தரம், லோகத்தாருடைய வாக்யம் சொன்னதுக்கு பாவம் (ராமஸ்ஸீதாமித்யாதி) ஸங்க்ஷேபே, "துஷ்டபுஷ்டஸஸ்தா தார்மிகா:" (துஷ்ட:புஷ்ட:ஸ்ஸஸ்தாதார்மிக:) இதிசேஷ:. பூர்வோக்தரான மூவருடைய வாக்யத்தையும் நிகமித்துக்கொண்டு, "இனிதுடன் வீற்றிருந்து" என்றதுக்குபாவம் (ஆகவிருவருமானவித்யாதி.) "அன்புற்றமர்ந்துறைகின்ற" என்றதுக்கவதாரிகையாதல், அத்தைக்கடாக்ஷித்துபாவமாதல் (தன் சந்நிதியாலேயித்யாதி.) "எங்கள்" என்ற பஹுவசநத்துக்கு பாவம் (கேசவனித்யாதி.) "பிரான்" என்றதுக்கர்த்தம் (என்னையிடுவித்தித்யாதி.)

கணிசியாதே - அபேக்ஷியாதே. "அழகிய பொழிலையுடைய திருவாறன்விளை" என்று - தோப்பை வர்ணித்ததுக்குபாவம் (ப்ராப்யபூமிமித்யாதி.) "அணி பொழில்" என்கையாலே - பரப்புமர்த்தாத்ஸித்தம்.

"அன்புற்று" என்றதுக்கவதாரிகையாதல், "அன்புற்றமர்ந்துறைகின்ற" என்றவநந்தரம், "அன்புற்று" என்றதுக்கு பாவமாதல் (தேநதேதமித்யாதி) "ஸர்வேஷாம்ஹிஸதர்மாத்மா வர்ணாநாம்குருதேதயாம் | சதுர்ணாம்ஹிவயஸ்தாநாம் தேநதேதமநுவ்ரதா:" (ஸர்வேஷாம்ஹிஸதர்மாத்மா வர்ணாநாம்குருதேதயாம் | சதுர்ணாம்ஹிவயஸ்த்தாநாம் தேநதேதமநுவ்ரதா:) இத்யயோத்யாகாண்டே. "அன்புற்று" என்றதுக்குசப்தார்த்தம் (திருவாய்மொழியித்யாதி.) இப்போது "ஆகுங்கொலோ" என்று விவக்ஷித்து, இப்படிசொன்னருண்டோவென்ன (அபீதாநீமித்யாதி) "அபீதாநீம்ஸகால:ஸ்யாத் வநாத்ப்ரத்யாகதம்புந: | யத்த்வாபுத்ரகபஶ்யேயம் ஜடாமண்டலதாரிணம்" (அபீதாநீம் ஸகாலஸ்ஸ்யாத் வநாத்ப்ரத்யாகதம்புந: | யத்த்வாபுத்ரகபஶ்யேயம் ஜடாமண்டலதாரிணம்) இத்யயோத்யாகாண்டே கௌஸல்யா. ஹேபுத்ரக, வநாத் புந: ப்ரத்யாகதம் - ஜடாமண்டலதாரிணம் - த்வா - பஶ்யேயமிதியத்ஸகால: இதாநீம் ஸ்யாதபி இத்யந்வய:. இதுக்கர்த்தம் (போய்வருகையித்யாதி) த்ருஷ்டாந்தத்தில்சொன்னவர்த்தத்தை தார்ஷ்டாந்திகத்திலே யதிதேஶிக்கிறார் (இம்மநோரதத்துக்கித்யாதி) எழில்மலர்மாதரும் தானுமான விருவர்க்கும் இன்பமுண்டாம்படியாகவும், அத்தாலே யிவ்வேழுலகுக்கு மின்பமுண்டாம்படியாகவு மினிதுடன் வீற்றிருந்தாளுகிறவென்று சப்தார்த்தம்.

எழில்மலர்மாதரும் தானும் - இன்பம்பயக்க - இவ்வேழுலகையென்றுதொடங்கி, கைதொழுநாள்களு மாகுங்கொலோ வித்யந்வய:.......... ....*

இரண்டாம்பாட்டு.

ஆகுங்கொலையமொன்றின்றியகலிடமுற்றவுமீரடியே
யாகும்பரிசுநிமிர்ந்ததிருக்குறளப்பனமர்ந்துறையு
மாகந்திகழ்கொடிமாடங்கணீடுமதிட்டிருவாறன்விளை
மாகந்தநீர்கொண்டுதூவிவலஞ்செய்துகைதொழக்கூடுங்கொலோ.

ஆறாயிரப்படி.

(ஆகுங்கொல்) ஒருசந்தேஹமின்றிக்கே யகலிடமுற்றவுமீரடியே யாகும்படி யளந்தருளின ஸ்ரீவாமநனெழுந்தருளியிருக்கிற, திருவாய்

மொழி பாடுவிக்கையாகிற மஹோத்ஸவத்துக்காகக் கொடிகட்டி யலங்க்ருதமான திருவாறன் விளையை, சந்தநகர்ப்பூராதி சுகந்த த்ரவ்யவாசிதமாய் ஹிமசீதளமான நீர்கொண்டு தூவி வலம்செய்து கைதொழக்கூடுமேயோவென்கிறார்...*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், அநந்யார்ஹத்வா பாதகமான த்ரிவிக்ரமாபதாநத்தையுடையவன் வர்த்திக்கிற திருவாறன்விளையை. ஸுகந்தமான ஜலங்களாலே திருநீரிட்டு ப்ரதக்ஷிணத்யது வ்ருத்திகள் பண்ணக்கூடுமோ வென்கிறார்.

ஒன்று - ஒரு. ஐயம் - சந்தேஹம். இன்றி - அற. ஆகுங்கொல் - உண்டாமோ. எதென்னில், அகல் - விஸ்தீர்ணமான. இடம் - லோகங்களை. முற்றவும் - எல்லாம். ஈரடியே - இரண்டடியே. ஆகும்பரிசு - ஆம்படி. நிமிர்ந்த - வளர்ந்தருளின. திருக்குறள் - ஸ்ரீவாமநனை. அப்பன் - மஹோபகாரகன். அமர்ந்து - அவதாரஸ்த்தலமான தேவலோகத்திலுங் காட்டிலமர்ந்து. உறையும்-உறையக்கடவதாய். மா - பெரிய. கம் - ஆகாசத்திலே. திகழ் - விளங்காநிற்கிற. கொடி - கொடிகளையுடைய. மாடங்கள் - மாடங்களையும். நீடு - நெடிய. மதிள் - மதிள்களையுமுடைத்தான. திருவாறன்விளை - திருவாறன்விளையை. மா - விலக்ஷணமான. கந்தம் - கந்தத்தையுடைத்தான. நீர் - நீரை. கொண்டு-கொண்டு. தூவி - தூவி. வலம் - ப்ரதக்ஷிணம். செய்து - பண்ணி. கைதொழ - அஞ்சலிபண்ண. கூடுங்கொலோ - கூடுமோ.

“ ஆகுங்கொல் ” என்கிற நினைவை - மேலேயுபபாதித்தபடியாயிருக்கிறது. ஐயமொன்றின்றியென்று - மேலேகூட்டவுமாம். இதுசக்யமோவென்கிற வையமின்றியளந்தானென்னவுமாம் ....*

ஈடு - இரண்டாம்பாட்டு.

திருவாறன்விளையிலே மிக்கபரிமளத்தையுடைத்தான நீரைக்கொண்டு திருநீர்விட்டு ப்ரதக்ஷணம்பண்ணிக் கையாலே தொழவுங்கூடவற்றேயென்கிறார்.

(ஆகுங்கொலையமொன்றின்றி) இது அநுபாஷணமாகாநிற்கச்செய்தே, ஆதராதிசயஸூசகமாயிருக்கிறது. ஒருசம்சயமின்றிக்கே நமக்கிதுகூடவற்றே. அன்றிக்கே, ஆகுங்கொலென்கிற ஐயமுங்கூடவின்றிக்கே, ஈரடியேயாகும் பரிசுநிமிர்ந்தானென்னவுமாம். எல்லாம்செய்தாலும் “ நமக்கிதுகூடுமோ? கூடாதோ? ” என்றிருந்தானுயிற்று மௌக்த்யத்தாலே. (அகலிடமுற்றவும்) பரப்பையுடைத்தான பூமியையும் புவர்லோகாதிகளுமெல்லா மிரண்டடியாகும் பரிசுநிமிர்ந்த. இரண்டடியாலே பூம்யந்தரிக்ஷாதிகளை யளந்தானுயிற்று, ஓரடிக்கிவனைச் சிறையிட்டு வைக்கநினைத்து. (திருக்குறளப்பன்) ஸ்ரீவாமநனைமஹோபகாரகன். (அமர்ந்துறையும்) இந்த்ரனுக்கு ராஜ்யத்தைவாங்கிக்கொடுத்துத்திருப்பாற்கடலிலேபோய்ச் சாய்கையன்றிக்கே, அவன்வந்துநித்யவாசம் பண்ணுகிற. (மாகந்திகழித்யாதி) அவன்திருவடிகளாலளந்தவாகாசப் பரப்படங்கலும் வ்யாபியாநின்றுள்ள கொடிகளையுடைத்தான மாடங்களையும், ஓங்

கி யிருந்துள்ள மதிட்களையுமுடைத்தான திருவாறன்விளையை. (மாகந்த நீரித்யாதி) [ஸிஞ்சந்து வஸுதாம் க்ருத்ஸ்நாம் ஹிமசீதேந வாரிணா] [ஸிஞ்சந்துவஸுதாம்க்ருத்ஸ்நாம்ஹிமசீதேநவாரிணா] என்று ஸ்ரீநந்திக்ராமந்தொடங்கி ஸ்ரீபரத்வாஜபகவானுஶ்ரமத்தளவும்வர, பனிநீராலேவிடுவித்தான் ஸ்ரீ சத்ருக்நாழ்வானென்றதிறே; அப்படியே, மாகந்தநீர்கொண்டு தூவி, அநுகூலவ்ருத்திகளைப் பண்ணிக்கைதொழக் கூடவற்றேயோ.

ஜீயர் அரும்பதம்.

இரண்டாம்பாட்டு (ஆருங்கொலித்யாதி) "திருவாறன்விளைமாகந்தநீர்கொண்டு"இத்யாதிமேலெல்லாம்கடாக்ஷித்தவதாரிகை (திருவாறன்விளையிலேயித்யாதி)

திரியவும் "ஆருங்கொல்" என்கிறதென்னென்ன (இதநுபாஷணமித்யாதி) சப்தார்த்தம் (ஒருசம்சயமித்யாதி) "ஐயமொன்றின்றி - ஆருங்கொல்" என்றபடி. அர்த்தாந்தரம் (அன்றிக்கேயித்யாதி) சர்வசக்திக்கு சம்சயப்ரசக்தியேதென்ன (எல்லாம்செய்தாலுமித்யாதி.)

முற்றவும்-புவர்லோகாதிகளையும். ஆரும்பரிசு-ஆம்ப்ரகாரம். மூன்றடியையிரந் திரண்டடியாலே யளப்பானென்னென்ன (இரண்டடியாலேயித்யாதி.)

மாகம் - மஹாகம். விஸ்ருதமான வாகாசமென்றபடி.

" க்ருத்ஸ்நாம் " (க்ருத்ஸ்நாம்) என்றதுக்கர்த்தம் (ஸ்ரீநந்திக்ராமமித்யாதி)

" ஸிஞ்சந்து வஸுதாம் க்ருத்ஸ்நாம் ஹிமசீதேந வாரிணா । ததோப்யவகிரந்த்வந்யே லாஜை: புஷ்பைஶ்ச ஸர்வஶ: " (ஸிஞ்சந்துவஸுதாம்க்ருத்ஸ்நாம்ஹிமசீதேநவாரிணா । ததோப்யவகிரந்த்வந்யேலாஜை:புஷ்பைஶ்சஸர்வஶ:) இதி ராமாகமநவேளாயாம் பரிஜநப்ரதாந் ப்ரதிஶத்ருக்ந: ....*

மூன்றாம்பாட்டு.

கூடுங்கொல்வைகலுங்கோவிந்தனைமதுசூதனைக்கோளரியை
யாடுபறவைமிசைக்கண்டுகைதொழுதன்றியவனுறையும்
பாடும்பெரும்புகழ்நான்மறைவேள்வியைந்தாறங்கம்பன்னினர்வாழ்
நீடுபொழிற்றிருவாறன்விளைதொழவாய்க்குங்கொனிச்சலுமே.

ஆறாயிரப்படி.

(கூடுங்கொல்) சௌசீல்யவாத்ஸல்யாதி கல்யாணகுண விசிஷ்டனானவெம்பெருமான் பெரியதிருவடிமேலே யெழுந்தருளி யிருக்கும் படியைக்கண்டு கைதொழுகையன்றியே, அவனுக்குங்கூட ப்ராப்யமாய், சாங்க சகலவேத விதக்ரேசரராய், ததர்த்த பரமபுருஷாராதநரூப பஞ்சமஹாயஜ்ஞாத் யநுஷ்டாந சீலராயிருந்த திவ்யஜநங்கள் வாழ்கிற திருவாறன்விளையை நிச்சலும் தொழக்கூடுமேயோவென்கிறார்..........*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், ஆஸ்ரிதரக்ஷணார்த்தமான வாகாரத்தையுடைய கருடவாஹநனை யநுபவித்து, அவன் வர்த்திக்கிற தேசத்தை நித்யமாகத்தொழ வாய்க்கவற்றேவென்கிறார்.

வைகலும்-என்றும். கூடுங்கொல்-இப்படிகூடவற்றே. கோவிந்தனை-கோரக்ஷணத்துக்கு முடிசூடினவனாய். மதுசூதனை-ரக்ஷயவிரோதியான மதுவுக்கு நிராஸகனாய். கோளரியை-அத்யுஜ்ஜ்வலதேஜோரூப ஸிம்ஹம்போலே விரோதிகளுக்கு அபிபவநீயனானவனை. ஆடு-தர்ஸநீயகதியான. பறவை - பெரியதிருவடி. மிசை - மேலே. கண்டு-கண்டு. கைதொழுது-அஞ்சலிபண்ணியநுபவித்து. அன்றி - அவ்வளவன்றியே. அவன்-அவன. உறையும்-வர்த்திக்குமிடமாய். பாடும் - உச்சரிதஸ்வரமாம்படிபாடப்படுகிற. பெரு - பெரிய. புகழ்-பகவத்குணப்ரதையையுடைத்தான. நான்மறை-ருக்யஜுஸ்ஸாமாதர்வண ஸ்வரூபமான நாலுவேதங்களையும். ஐந்துவேள்வி-தேவபித்ருபூதமநுஷ்ய ப்ரஹ்மயஜ்ஞரூபமான பஞ்சமஹாயஜ்ஞங்களையும். அங்கம்-சிக்ஷைநிருக்தம் வ்யாகரணம் சந்தோவிசிதி கல்பஸூத்ரம் ஜ்யோதிஸ்ஸாஸ்த்ரமென்கிற அங்கங்கள். ஆறு-ஆறையும். பன்னினர்-பரக்கநிரூபித்துப்போருகிறவர்கள். வாழ்-பகவதநுபவத்தோடே வாழ்வதாய். நீடு-பெரிய. பொழில் - பொழிலையுடைத்தான. திருவாறன்விளை-திருவாறன்விளையை. தொழ-தொழ. நிச்சலும்-நித்யமாக. வாய்க்குங்கொல்-வாய்க்கவற்றே ....*

ஈடு - மூன்றாம்பாட்டு.

திருவாறன்விளையி லெம்பெருமான் பெரியதிருவடிமேலே யேறியெழுந்தருளக்கண்டாலும், அவனைத்தவிர்ந்து திருவாறன்விளையைத் தொழக்கூடவற்றே! யென்கிறார்.

(கூடுங்கொல்வைகலும்) இதுவுமநுபாஷணமாய், நாள்தோறும் நடக்கிறது கூடவற்றேயோ.

(கோவிந்தனித்யாதி) அங்குநிற்கிறவனைக்கண்டால் மூன்றுபடிதொடைகொள்ளலாயிருக்கும். ஆஸ்ரிதவாத்ஸல்யமும், ஆஸ்ரிதவிரோதிநிரஸந சீலதையும், அநாஸ்ரிதர்க் கபிபவநீயனென்னுமிடமு மிவை. (கோளரி) "ஜ்வலந்தம்" (ஜ்வலந்தம்) என்கிறபடியே. (ஆடுபறவைமிசைக்கண்டு) வெற்றிப்புள்ளின்மேலேகண்டு. ஆடு-வெற்றி. அன்றிக்கே, " சர்வேஸ்வரன்வாஹநம் " என்கிற ஹர்ஷ ப்ரகர்ஷத்தாலே, மதுபாநமத்தைப்போலே களித்தாடாநின்றுள்ள பெரியதிருவடி திருத்தோளிலே கண்டென்றுமாம். நாம் திருவாறன்விளையை " ப்ராப்யம் " (ப்ராப்யம்) என்று போகிறவோபாதி, அவனும் திருநகரியை "உத்தேஸ்யமாம்" என்று வாராநிற்குமிறே. (கண்டு) நடுவழியிலேகண்டால். (கைதொழுது) காரியங்கொண்டிலோமேயாகிலும், கிட்டினால் கைதொழுகைக்கு ப்ராப்தியுண்டிறே; ஆகையாலே, முறைதப்பாம லநுவர்த்தித்து. (அன்றி) அவனைவிட்டு. (அவனுறையும்) அவனிராத்தங்குமூரிலேபோய்ப் புகக்கடவோம். சர்வேஸ்வரன் ப்ராப்யனாகாநிற்கச்செய்தே, ஒரு தேசவிசேஷத்

திலேபோ யநுபவிப்பதாக வொருங்கியதியுண்டிறே. (பாடும்பெரும்புகழ் நான்மறை) அவனுடைய கல்யாணகுணங்களைப்பாடாநின்றுள்ள நாலு வகைப்பட்ட வேதங்கள். (வேள்வியைந்து) பஞ்சமஹாயஜ்ஞங்கள். (ஆறங்கம்) அங்கங்களாறும். இவற்றைப்பண்ணினவர்கள் - எஃகிக்கனாகண்டிருக்குமவர்கள். "ஶ்ரோஷயத்ஸஷ்ஸரஃ" (போதயந்தஃபரஸ்பரம்) என்னும்படி, அவ்வூரிலுள்ளாரோடேபோய்க்கூடவேணும். (வாழ்) வேததாத்பர்யபூதனைக் கண்ணாலேகண்டநுபவித்து வாழாநின்றுள்ள. (நீடு பொழில்திருவாறன்விளைதொழ) ஓக்கத்தையுடைத்தான பொழிலையுடைய திருவாறன்விளையைத்தொழ. (வாய்க்குங்கொல்நிச்சலுமே) அங்குத்தைஸ்ரீவைஷ்ணவர்களோடேகூடிநித்யாநுபவம்பண்ணக்கூடவற்றேயோ

ஜீயர் அரும்பதம்.

மூன்றும்பாட்டு (கூடுங்கொலித்யாதி) "ஆடுபறவை மிசைக்கண்டுகைதொழுதன்றியவனுறையும் - திருவாறன்விளைதொழவாய்க்குங்கொல்நிச்சலும்" என்றபதங்களைக்கடாக்ஷித்தவதாரிகை (திருவாறன்விளையித்யாதி.)

மூன்றுதிருநாமத்தைச்சொன்னதுக்குபாவம் (அங்குநிற்கிறவனையித்யாதி.) தொடைகொள்ளுகை-தோன்றுகை. "கோளரி" தேஜஸ்ஸையுடைய ஸிம்ஹமென்று விவக்ஷித்து, அதுக்கு ப்ரமாணம் (ஜ்வலந்தமித்யாதி) பெரியதிருவடிமேலே காண்கைக்கு ப்ரஸக்தியேதென்ன (நாம் திருவாறனித்யாதி) அவனைவிட்டத்தேசத்தேறப்போகிறவுமக்கு அவனைத்தொழவேண்டுவானெனென்னென்ன (காரியமித்யாதி.) இத்தால் - சரமபர்வநிஷ்டர்க்கு மீஶ்வரனுத்தேஶ்யமென்கிறது. அவனிங்கேவந்தாலத்திருநகரி ப்ராப்யமாயிருக்க, அங்கேபோவானெனென்னென்ன (அவனிராத்தங்குமித்யாதி) எதிரேவந்தவனைவிட் டங்கேபோவானெனென்னென்ன (சர்வேஶ்வரனித்யாதி.)

"பெரும்புகழ் - பாடும் - நான்மறை" என்றந்வயம். இங்கே - "தஸ்யருக்ஸாமசேஷ்ணௌ" (தஸ்யருக்ஸாமசேஷ்ணௌ) என்றதநுஸந்தேயம். இப்போதிவர்களைச்சொல்லுகிறதுக்கு ப்ரயோஜநமேதென்ன (போதயந்தஇத்யாதி)"வாழ்" என்றதுக்குபாவம் (வேதேத்யாதி) ....*

நான்காம்பாட்டு.

வாய்க்குங்கொனிச்சலுமெப்பொழுதுமனத்தீங்குநினைக்கப்பெற
வாய்க்குங்கரும்பும்பெருஞ்செந்நெலும்வயல்சூழ்திருவாறன்விளை
வாய்க்கும்பெரும்புகழ்மூவுலகீசன்வடமதுரைப்பிறந்த
வாய்க்குமணிநிறக்கண்ணபிரான்றன்மலரடிப்போதுகளே.

ஆறுயிரப்படி.

(வாய்க்குங்கொல்) ஸ்ரீமதுரையிலேவந்து திருவவதாரம்பண்ணியருளுகையாலே யத்யுஜ்ஜ்வலமான வாத்மகுணங்களையும் ரூபகுணங்க

ளையுமுடையனுயிருந்த வவனெழுந்தருளியிருந்த திருவாறன்விளையிலே, அவன்றிருவடிமலர்களை நெஞ்சாலென்றநுபவிக்கக் கூடுமென்கிறுர்.....*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், அநுபாவ்யவிக்ரஹ விசிஷ்டனுய்க் கொண்டு திருவாறன் விளையி ல் வர்த்திக்கிறவன்றிருவடிகளை நெஞ்சாலே நிரந்தரமாக வநுபவிக்கும்படி வாய்க் கவற்றே வென்கிறுர்.

வாய்க்கும் - சம்ருத்தமாய்வாய்த்துவருகிற. கரும்பும் - கரும்பும். பெரு - பெரும். செந்நெலும் - செந்நெலுமான. வயல் - வயல். சூழ் - சூழ்ந்த. திருவாற ன்விளை - திருவாறன்விளையிலே. வாய்க்கும் - சந்நிஹிதனுகையாலே. பெரும் - அ பிவ்ருத்தமான. புகழ் - புகழையுடையனுய். மூவுலகு - த்ரிவித சேதநாசேதநங்க ளுக்கும். ஈசன் - ஸ்வாமியாய்வைத்து. ஆஸ்ரிதரக்ஷணர்த்தமாக, வடமதுரை - ஸ்ரீ மதுரையிலே. பிறந்த - அவதரித்து. வாய்க்கும் - ஆஸ்ரிதர்க்கநுபாவ்யமாம்படி வா ய்த்த. மணி - நீலரத்நம்போலே யிருக்கிற. நிறம்-திருநிறத்தையுடைய. கண்ணன் - க்ருஷ்ணனுகிற. பிரான்றன் - மஹோபகாரகனுடைய. மலர் - விகசிதமான. அடிப் போதுகள் - திருவடித்தாமரைகளை. ஈங்கு - இங்கேயிருந்து. மனத்து-மநஸ்ஸிலே. நினைக்க - நினைக்க. அவன்நினைவின்படியே. நிச்சலும் - என்றும். எப்பொழுதும்- ஒருக்ஷணமுமொழியாமல். பெற-பெறும்படி. வாய்க்குங்கொல்-வாய்க்கவற்றே...*

ஈடு - நான்காம்பாட்டு.

இதில், அங்குப்போ யநுபவிக்கவேண்டா, இங்கேயிருந்தங்குத் தைப்பரிமாற்றங்களை மநோரதிக்கும் மநோரதம் நமக்குக்கூடுவதுகா ணென்கிறுர்.

(வாய்க்குங்கொல்நிச்சலும்) நமக்கிப்பேறு நாள்தோறும்கூடவே ணும். (எப்பொழுதும்) அதுதன்னிலும் நித்யாக்நிஹோத்ரம்போலே யொருகாலவிசேஷத்திலேயாய்ப்போகவொண்ணுது, எல்லாவவஸ்த்தை களிலுமுண்டாகவேணும். (மனத்தீங்குநினைக்கப்பெற) அங்குப்போயநு பவிக்கவேண்டா, இங்கேயிருந்துநெஞ்சாலே யங்குத்தைப் பரிமாற்றங்க ளை யநுசந்திக்கப்பெறவமையும். பெறவென்கையாலே - இம்மநோரதத் துக்கவ்வருகொருபேறில்லையென்றிருக்கிறு ராயிற்றிவர். [உ-ஹூ தாவஹி] [துர்க்கதாவபி] உத்க்ரமணதசையிலேவருவதொரு துர்க்கதியுண்டு, அத் தைப்பரிஹரித்துத் தரவேணுமென்று ப்ரார்த்திக்கிறேனல்லேன்; * ஐயா ர் கண்டமடைக்கிலும் நின்கழலெய்யாதேத்தும்படிபண்ணி யருளவேணு ம். [த்வ தோமேமநோரத:] [த்வத்கதோமேமநோரத:] எனக்கிதுகூடு மென்று தோற்றியிருந்ததோவுனக்கு. [யதிநாஸம்நவிந்தேத] [யதிநாஸ ம்நவிந்தேத] இப்படியிருக்கிற விம்மநோரதத்துக் கழிவுவாராதாகில். [தாவதாஸ்மிக்ருதீஸதா] [தாவதாஸ்மிக்ருதீஸதா] நாட்டார், மநோரத மென்றும், அநுபவமென்று மிரண்டாகவிறே சொல்லிப்போருவது;

எனக்கிதெல்லாம்வேண்டா, இம்மநோரதமாத்ரத்தாலே க்ருதக்ருத்யன் நான். [ஸதா] சரீரஸம்பந்தமற்று பரமபதத்திலேபோ யேற்றமாக வநுபவிக்கு மதிற்காட்டில், நான் பேறுகநினைத்திருப்பதித்தையே. முற்காலத்திலே இடையாற்றுக்குடிநம்பியென்பா ரொருவருண்டு, அவர்திருநாட்கள்தோறும் பெருமாளைவந்து சேவித்துப்போனால், மறித்துத் திருநாள்வருந்தனையு மதுதன்னையே போதுபோக்காக ஸ்மரித்துக்கொண்டிருப்பராயிற்று; ஒருநாளொரு திருநாளில் வ்ருத்தாந்த மநுசந்தியாநிற்கச்செய்தே, "அமுதுசெய்கைக்குப் போதுவைகிற்று" என்றார்களாய், "ஆகில் வருகிறதிருநா ளணித்தாகிறது" என்றாராம். அவர் நூறுவயஸ்ஸும் புகுகையாலே பலஹாநிபிறந்து திருமூலத்திருநாளில் பெருமாள் புறப்பட்டருளுகைக்குதவவந்து புகுரப்பெற்றிலர், பெருமாளும் தேடியருளிக்காணாமை, "நம்மிடையாற்றுக்குடியான்வந்திலன், நங்கண்ணாலமல்லவோ!" என்று திருவுள்ளமானாராம். அவர்தா மாறுந்திருநாளிலே சேவித்திருக்கச்செய்தே, "நாமுனக்குச்செய்யவேண்டுவதென்?" என்றுகேட்டருள, "தேவரீர் தந்தருளினசரீரத்தைக்கொண்டு போரக்காரியங்கொண்டேன், இனிப்போக்குவரத்துக்கு யோக்யமாகாதபடிபோரஜரித்தது" என்ன, "வாராய், மெய்யேயிளைத்தாயாகி லிங்ஙனேயிரு" என்றருளிச்செய்தார்; பெருமாள் நடுவிற்றிருவாசலுக் கவ்வருகேயெழுந்தருளுங்காட்டில் திருநாட்டுக்கெழுந்தருளினார்.

(வாய்க்குமித்யாதி) இட்டதடைய ஸம்ருத்தமான தேசமாயிற்று. வாய்த்தகரும்பும், அதுக்கு நிழல்செய்யும்படியாக வளர்ந்த செந்நெலுமான வயலாலே சூழப்பட்ட திருவாறன்விளையில். (வாய்க்கும்பெரும்புகழ்) இட்டதடைய ஸம்ருத்தமான தேசமாகையாலே, அத்தேசாபிமாநிக்கும் கல்யாணகுணங்களும் ஸம்ருத்தமாகாநிற்குமாயிற்று. (மூவுலகீசனித்யாதி) சர்வலோகேஶ்வரனாயிருந்துவைத்து, * சாதுபரித்ராணார்த்தமாக ஸ்ரீமதுரையிலேவந்தவதரித்த. (வாய்க்குமணிநிறக்கண்ணபிரான்றன்) அப்ராக்ருததிவ்ய ஸம்ஸ்தாநத்தையிறே யிதரஸஜாதீயமாக்கிற்று; ஆகையாலே, அழகிய நீலமணிபோன்ற திருநிறத்தையுடைய வுபகாரசீலனான க்ருஷ்ணனுடைய, விகாசத்தையுடைத்தான திருவடிகளாகிற செவ்விப்பூக்களை - ஈங்கு - மனத்து - நினைக்கப்பெற - வாய்க்குங்கொல் நிச்சலுமெப்பொழுதும்..*

ஜீயர் அரும்பதம்.

நாலாம்பாட்டு (வாய்க்குங்கொலித்யாதி) "ஈங்கு-மனத்து-நினைக்கப்பெற-வாய்க்குங்கொல்" என்றபதங்களைக்கடாக்ஷித்தவதாரிகை (இதிலங்குப்போயித்யாதி) கூடுவதுகாண் - கூடுமோவென்றபடி.

"நிச்சலும்" என்றுவைத்து, திரியவும் "எப்பொழுதும்" என்பானென்னென்ன (அதுதன்னிலுமித்யாதி) "ஈங்கு" என்றதுக்கு (அங்குப்போயித்யாதி) "நினைக்க" என்னாதே, "பெற" என்றதுக்குபாவம் (பெறவென்கையாலேயித்யாதி)

அப்படி மநோரதமாத்ரமே புருஷார்த்தமோவென்ன, ப்ரமாணம் (தார்க்க தாவபீத்யாதி) "ஊர்த்வம் தாவதிஜாதாயாம் த்வத்கதோ மே மநோரத: । யதி நாஸம் ந விந்தேத தாவதாஸ்மி க்ருதீ ஸதா" (தார்க்கதாவப்ஜாதாயாம்த்வத்கதோமேமநோரத: । யதிநாஸம்நவிந்தேததாவதாஸ்மிக்ருதீஸதா) இதி ஜிதந்தாயாம். ஜயார் - ஶ்லேஷம். "மே" என்றதுக்குபாவம் (எனக்கித்யாதி) "மமைதத் துர்லபம் மந்யே உத்தமஶ்லோகதர்ஶநம் । விஷயம் நோ யதா ப்ரஹ்ம கீர்த்தநம் ஶூத்ரஜந்மந:" (மமைதத்துர்லபம்மந்யே உத்தமஶ்லோகதர்ஶநம் । விஷயம் நோயதாப்ரஹ்ம கீர்த்தநம்ஶூத்ரஜந்மந:) என்றதிவ்விடத்தி லநுஸந்தேயம். "தாவதா - க்ருதீ - அஸ்மி" என்றதுக்கு வ்யாவ்ருத்தி பூர்வகமாகவர்த்தம் (நாட்டாரித்யாதி) "ஸதா" என்றதுக்கு வ்யாவ்ருத்தி பூர்வகமாகவர்த்தம் (சரீரசம்பந்தமித்யாதி) அப்படிமநோரதமாத்ரமே புருஷார்த்தமாயநுபவித்தபேருண்டோவென்ன (முற்காலத்திலேயித்யாதி) வைகிற்று - கழிந்தது. வருகிறதிருநாள்-இரண்டாம்திருநாள். இப்படியிருப்பதொன்கைக்கு நியாமகமேதென்ன (ஒருநாளித்யாதி) இத்தால்-இப்போதநுசந்திக்கிறதிருநாள் முடியலாயிற்று, வருகிறேனென்றுறொன்றபடி. ப்ரஸங்காத் அவர் வைபவம் (அவர்நூறுவயஸ்ஸித்யாதி)

"மூவுலகு" என்றது-எல்லாலோகங்களுக்கு முபலக்ஷணமாக்கி (சர்வலோகேஶ்வரன்) என்கிறார். இதரஸஜாதீயனாயவதரித்தவிடத்தே வாய்க்கும் மணிநிறமுண்டோவென்ன (அப்ராக்ருதேத்யாதி) வாய்க்குமணிநிறம் - அழகிய நீலமணி நிறமென்றபடி. "வாய்க்கும்" என்று - இங்கு, அழகைச்சொல்லுகிறது. அந்வயங்காட்டுகிறார் (ஈங்கித்யாதி.)

வாய்க்கும் கரும்புமென்றுதொடங்கி, மலரடிப்போதுகளை - நிச்சலுமெப்பொழுதும் - ஈங்கு - மனத்து - நினைக்கப்பெற - வாய்க்குங்கொலித்யந்வய:......*

ஐந்தாம்பாட்டு.

மலரடிப்போதுகளென்னெஞ்சத்தெப்பொழுதுமிருத்திவணங்கப்
பலரடியார்முன்பருளியபாம்பணையப்பனமர்ந்துறையு
மலரின்மணிநெடுமாடங்கணீடுமதிட்டிருவாறன்விளையுலக
மலிபுகழ்பாடநம்மேல்வினையொன்றுமில்லாக்கெடுமே.

அரும்பதவுரை / அருமைப்படி.

(மலரடிப்போதுகள்) தன்திருவடிமலர்களை யென்னெஞ்சத்தெப்பொழுதுமிருத்தி வணங்கித் திருவாய்மொழிபாடி யநுபவிக்கும்படி, திருவநந்தாழ்வான்முதலாகவுள்ள பலரடியார் முன்பருளிய பரமகாருணிகனமர்ந்துறையும் திருவாறன்விளையினுடைய வுலகமலிபுகழ்பாட நம்முடைய க்லேஶமெல்லாம் தீரும், திருவாறன்விளையைப் பாடுங்கோளென்று ஸ்ரீவைஷ்ணவர்களைக்குறித்தருளிச்செய்கிறார்..........................*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், ஆஶ்ரிதாநுபவார்த்தமாக வநந்தசாயியானவன் வர்த்திக்கிற திருவாறன்விளையினுடைய சம்ருத்தமான புகழைப்பாட, நம்பாபமொன்றுமொழியாமேபோமென்கிறார்.

மலர்-நிரதிசயபோக்யமாம்படி விகஸிதமான. அடிப்போதுகள் - திருவடித்தாமரைகளை. என்-என். நெஞ்சத்து-நெஞ்சத்திலே. எப்பொழுதும் - சர்வகாலமும். இருத்தி-இருத்தி. வணங்க-அந்தவுகப்பாலே வணங்கும்படியாக. பலர்-சூரிகளும், பராசராதிகளும், பக்தர்களுமான பலவகைப்பட்ட. அடியார் - அடியார். முன்பு-சந்நிதியிலே. அருளிய - நிரவதிகக்ருபையைப்பண்ணியருளின. பாம்பணையப்பன்-ஆஶ்ரிதசம்ஶ்லேஷஸ்வபாவனுயுள்ள வநந்தசாயியானவன். அமர்ந்து-புறம்பு ஜகத்வ்யாபாராங்யபரதையற்று. உறையும்-வாசந்தானே ப்ரயோஜநமாக வர்த்திக்குமிடமாய். மலரில்-புஷ்போபஹாரங்களையுடைத்தான. மணி - மணிமயமான. நெடு-ஓங்கின. மாடங்கள்-மாடங்களையும். நீடு-நெடிய. மதிள்-மதிளையுமுடைத்தான. திருவாறன்விளை-திருவாறன்விளையினுடையதாய். உலகம்-லோகத்திலே. மலி - மிக்க. புகழ்-புகழாய். பாட-உகப்போடேபாட. நம்-நம்மை. மேல்-மேலிட்டு வர்த்திக்கிற. வினை-பாபங்கள். தானே, ஒன்றும்-நம்பக்கலொன்றும். நில்லா-இல்லாதே. கெடும்-புக்கவிடமறியாமற்போம் ....*

ஈடு - ஐந்தாம்பாட்டு.

திருவாறன்விளையிலே புக்கடிமைசெய்கைக்கு விரோதியானவையெல்லாம், அவனுடைய மிக்கபுகழைப்பாடப்பறந்துபோமென்கிறார்.

(மலரடிப்போதித்யாதி) மலர்ந்திருந்துள்ள திருவடிகளாகிற செவ்விப்பூக்களையென்னுடைய ஹ்ருதயத்திலே யெப்போதுமிருத்தி, அவ்வநுசந்தாநம்போய்க்கனக்க அத்தாலே நிர்மமனாய்க்கொண்டு திருவடிகளிலேவிழும்படியாக. (பலரடியார்முன்பருளிய) ஸ்ரீவேதவ்யாஸபகவான், ஸ்ரீவால்மீகிபகவான், ஸ்ரீபராசரபகவான், "இன்கவிபாடும்பரமகவிகள்" என்று சொல்லப்படுகிற முதலாழ்வார்களெல்லாருமுண்டாயிருக்க, என்பக்கலிலே விசேஷகடாக்ஷம்பண்ணுவதே!. [illegible] [illegible] முதலிகளெல்லாருமிருக்கச்செய்தே திருவடிபக்கலிலே விசேஷகடாக்ஷம்பண்ணினாப்போலே யாயிற்று, பலருமுண்டாயிருக்க இவரை விஷயீகரித்தபடி. "கிழக்குத்தை ராஜாக்கள் பொல்லாங்காலே யிங்கேநலிவுபிறக்கு மளவிற்செய்வதென்?" என்று எம்பெருமானாரத்தை யநுசந்தித்தருளி, " இத்தேசத்தைவிடாதே நோக்கிக்கொண்டுகிடந்தோம், இவ்விடத்துக்கு மழிவுவரும்படி ஆசுரவர்க்கம் மேலிடாநின்றது, மேல்செய்யவடுப்பதென்?" என்று பெரியநம்பிக்கறிவிக்க; " நான் பெருமாளுடைய திருவெல்லையிலே யொருப்ரதக்ஷிணம் வரும்படியாக வும்முடைய சிஷ்யர்களிலே யொருவரைப் போரவிடுவது " என்ன, " அதுக்காவாரார் " என்ன, " என்பின்னேபோராநின்றால் ' ஒருவன்பின்னே போகாநின்றேன்' என்று தன்னெஞ்சிற்படாதே, சாயைபோலே யென்னைப்பின்செல்வா

னொருவனாகவேணும்'' என்ன, "அதுக்காவாரார்'' என்ன, "ஆழ்வானைப் போகவிடலாகாதோ'' என்றாராம். (பலரடியார்முன்பருளிய) பலமுதலி களுண்டாயிருக்க, ஆழ்வானை ப்ரஸாதித்தாப்போலே. (பாம்பணையப்பன மர்ந்துறையும்) பர்யங்கவித்யையிற்சொல்லுகிறபடியே திருவநந்தாழ்வா னைப்படுக்கையாகவுடைய ஸர்வேச்வரன், அப்படுக்கையிற்காட்டிலும் விரும்பி வர்த்திக்கிற தேசமாயிற்று. (மலரில் மணிநெடுமாடங்கள்) தே வர்கள் வர்ஷித்த புஷ்பத்தோடேகூடி, மணிமயமான மாடங்களினுடைய ஔ த்தையுடைத்தாய், ஓங்கினமதிளையுமுடைத்தான திருவாறன்விளை. (உல கமலிபுகழ்பாட) ஈண்டினவிடத்தில் வெள்ளம்போலே, லோகத்திலடங் காதபடியான அவனுடைய கல்யாணகுணங்களை ப்ரீதிப்ரேரிதராய்க்கொ ண்டுபாட. (நம்மேல்வினையொன்றுமில்லாக்கெடுமே) பாபம்போகைக்கா கத் தனித்தொருத்யோகம்பண்ணவேண்டா, பால்குடிக்க நோய்தீருமா போலே நம்முடைய பாபங்கள் தாமே நசித்துப்போம் ....*

ஜீயர் அரும்பதம்.

அஞ்சாம்பாட்டு (மலரடியித்யாதி) "மலிபுகழ்பாடநம்மேல் வினையொன்று மில்லாகெடும்'' என்றத்தைக்கடாக்ஷித்தவதாரிகை (திருவாறன்விளையிலேயித்யாதி)

"வணங்க'' என்னுமளவுக்குமர்த்தம் (மலர்ந்தித்யாதி) போய்க்கனக்க - மிக வுமதிசயிக்க. போய்-மிகவுமென்றபடி. "வார்தல் போத லொழுக லிவை நெடுமை யாகும்'' என்னக்கடவதிறே. விசேஷகடாக்ஷம்பண்ணுகையாவது - திருவாய்மொ ழிபாடுவித்துக்கொள்ளுகை. பலரடியார்முன்னே விசேஷகடாக்ஷம்பண்ணினதுக் கு த்ருஷ்டாந்தம் (பஹூநாமநேகேத்யாதி) "[illegible] | [illegible]'' (ப்ரீத் யாசரமமாணோதராகவஃபரவீரஹா | பஹூநாமநேகமஹதாஹநூமந்தமவைக்ஷத) இ தி ஸுந்தரகாண்டே. பலரடியார் முன்பருளினதுக்கு த்ருஷ்டாந்தாந்தரம் (கிழக் குத்தையித்யாதி) கிழக்குத்தை ராஜாக்கள் - க்ரிமிகண்டாதிகள்.

மலரில்-மலரோடேகூடின.

"மலி'' என்றதுக்குபாவம் (ஈண்டினவித்யாதி) ஈண்டினவிடம்- ஸங்குசிதஸ் த்தலம். உலகம்-லோகத்திலென்றபடி. புகழ்பாடுகிறது பாபநிவ்ருத்திக்கு ஸாதகமா கவோவென்ன (பாபமித்யாதி)

மலரடிப்போதுக ளென்னெஞ்சத்தென்றுதொடங்கி, பலரடியார்முன் பரு ளினவனாய் - மலரில் மணிதொடங்கி, திருவாறன்விளையில் - அமர்ந்துறையும்-பாம் பணையப்பனுடைய - உலகமலிபுகழ்பாட நம்மேல்வினை யித்யாரப்யாந்வயஃ... ...*

ஆறும்பாட்டு.

ஒன்றுமில்லாக்கெடுமுற்றவுந்தீவினையுள்ளித்தொழுமின்றொண்டீ
ரன்றங்கமர்வென்றுருப்பிணிநங்கையணிநெடுந்தோள்புணர்ந்தா
னென்றுமெப்போதுமென்னெஞ்சந்துதிப்பவுள்ளேயிருக்கின்றபிரா
னின்றவணிதிருவாறன்விளையென்னுநீணகரமதுவே.

ஆறாயிரப்படி.

(ஒன்றுநில்லாக்கெடும்) அன்றங்கமர்வென் றுருப்பிணிநங்கை யணிநெடுந்தோள் புணர்ந்தருளிய - திருமணம் புணர்ந்தருளின திருவழகை யென்றுமென்னெஞ்சம் துதிப்ப வென்னெஞ்சுள்ளே புகுந்திருக்கிற பிரான் நின்ற வணிதிருவாறன்விளையென்னும் நீணகரமதுவே, உள்ளித் தொழுமின்தொண்டீர், உங்கள் சமஸ்ததுஃகங்களும் போமென்கிறார். ..*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், அநிஷ்டமான விரோதியைத் தலையழித்து அபிமதையானருக்மிணியை சம்ஶ்லேஷித்த க்ருஷ்ணன் வர்த்திக்கிற திருவாறன்விளையை யாஶ்ரயிக்க, சமஸ்தபாபங்களும் போமென்கிறார்.

அன்று - சிசுபாலன் கைப்பிடிப்பதாகப் படைதிரட்டினவன்று. அங்கு - பின்தொடர்ந்துவந்தவிடத்திலே. ருக்மனை, அமர் - பூசலிலே. வென்று - வென்று. நங்கை - பரிபூர்ணரூபவையான. உருப்பிணி - ருக்மிணியினுடைய. அணி - அலங்காராலங்க்ருதமாய். நெடும் - அதிசயிதபோக்யமான. தோள் - திருந்தோள்களை. புணர்ந்தான் - "ஹஸ்தாரம்பரிஷ்வஜே" (பர்த்தாரம்பரிஷஸ்வஜே) என்கிற கணக்கிலே சம்ஶ்லேஷித்தவனாய். இவ்வபதாநத்தை, என்றும் - என்றும். எப்போதும் - ஒருக்ஷணமுமொழியாமல். என் - என். நெஞ்சம் - நெஞ்சமானது. துதிப்ப- அநுபவித்து ஸ்தோத்ரம்பண்ணும்படி. உள்ளே - என்னகவாயிலே. இருக்கின்ற-இருக்கிற. பிரான் - மஹோபகாரகனானவன். நின்ற - எல்லாருங்கண்டநுபவிக்கும்படி நின்றருளின. அணி - தர்ஶநீயமான. திருவாறன்விளை - திருவாறன்விளை. என்னும் - என்று ப்ரசித்தமான. நீணகரமது - அந்தமஹாநகரத்தை. தொண்டீர் - அநுபவசாபலமுடைய நீங்கள். உள்ளி - அநுசந்தித்து. தொழுமின் - தொழும்படி பாருங்கோள். தீ - க்ரூரமான. வினை - பாபங்கள். ஒன்றும் - ஒன்றும். நில்லா-சேஷியாதபடி நிலைகுலைந்து. முற்றவும் - சர்வமும். கெடும் - நசித்துப்போம்.......*

ஈடு - ஆறும்பாட்டு.

எம்பெருமான் பக்கல் சாபலமுடையார், உங்களுடைய சமஸ்த துஃகங்களும் போம்படி திருவாறன்விளையை நெஞ்சாலே நினையுங்கோளென்கிறார்.

(ஒன்றுநில்லாக்கெடும்முற்றவுந்தீவினை) இவன்றான் போக்கப்பார்க்குமன்றிறே, புதுப்புடைவை யழுக்குக் கழற்றுமாபோலே சிறிதுகிடக்கச் சிறிதுபோவது; அங்ஙனன்றிக்கே, சர்வசக்தியானவன் போக்குமன்று வாஸனையோடேபோமிறே. [மேருமந்தரமாத்ரோபி] [மேருமந்தரமாத்ரோபி] மேருவையும், அதின்மேலே மந்தரத்தையும் வைத்தாப்போலேயிருக்கிற கனத்தபாபங்கள் ; சாதமாக, பிஷக்கைக்கிட்டின துர்வ்யாதிநசிக்குமாபோலே, * மருத்துவனாய்நின்ற மாமணிவண்ணனைக்கிட்டினபாபங்களானவை நசிக்கும். "ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி" (ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி) என்றானிறே. "ஸர்வபாபா

நஂவைாஜ-ஞுயஷெ" (ஸர்வேபாப்மாநஃப்ரணுயந்தே) என்றுநின்றதிறே. இது தேசத்துக்குமுபலக்ஷணம்.

(உள்ளித்தொழுமின்தொண்டீர்) அதனையநுசந்தித் தரிக்கப்பாருங்கோள், பகவத்விஷயத்தில் சாபலமுடையார். (அன்றித்யாதி) அபேக்ஷித்தவர்களுடைய வபேக்ஷித சமயத்திலே வந்து தோற்றுமவனாயிற்று. (அன்று) சிசுபாலன் ஸ்வயம்வரத்திலே முடிகியிருக்கிறவன்று. (அங்கு) இவன் த்வரியாநின்றான், உடையவன்வந்து கைக்கொள்ளானோ வென்றிருக்கிறவளவிலே, தூணிலே தோற்றினாப்போலே தோற்றினானாயிற்று. (அமர்வென்று) அவளுக்காக மார்விலேயம்பேற்று. (உருப்பிணிநங்கை) எல்லாம் படவேண்டும்படி ஆத்மகுணங்களாலே பூர்ணையாயிருக்கும்படி. (அணியித்யாதி) தனக்குத்தானே யாபரணமாய், போக்யதை யளவிறந்துள்ள தோளோடே கலந்தவன். (என்றுமித்யாதி) ருக்மிணிப்பிராட்டியுடைய கல்யாணகுணமேகாணு மிவர்நெஞ்சில்பட்டுக்கிடப்பது. எல்லாக்காலத்திலு மெல்லாவவஸ்தைகளிலு மென்னுடைய ஹ்ருதயமானது ஸ்துதிக்கும்படி யென்னெஞ்சிலேயிருக்கிற வுபகாரகன். (நின்றவித்யாதி) ப்ரகாசியாநிற்கச்செய்தேயும் கண்ணுக்கிலக்காகாதபடியிருக்கையன்றிக்கே, "இவன் நமக்குளன்" என்று அச்சந்தீரும்படி கண்ணாலேகண்டநுபவிக்கும்படி நிற்கிற வழகிய திருவாறன்விளையாகிற மஹாநகரத்தை-உள்ளித்தொழுமின்தொண்டீர். தாமடிமைசெய்யமநோரதிக்கிறாராகில், "உள்ளித்தொழுமின்" என்கிற பரோபதேசத்துக்குக் கருத்தென்னென்னில்; இவர்க்கு ஸ்வாநுபவந்தான் பரோபதேசத்தை யொழிந்திராது, நெஞ்சை சம்போதித்ததோடு தொண்டரொன்றதோடு வாசியில்லை. ....*

ஜீயர் அரும்பதம்.

ஆறாம்பாட்டு. (ஒன்றுநில்லாவித்யாதி.) "தொண்டீர் - தீவினை - முற்றவும் - ஒன்றுநில்லாகெடும் - திருவாறன்விளையென்னும் நீணகரமது - உள்ளித்தொழுமின்" என்கிறபதங்களைக் கடாக்ஷித்தவதாரிகை (எம்பெருமானித்யாதி.)

தீவினை முற்றவும் போகக்கூடுமோவென்ன (இவனருளித்யாதிவாக்யத்வயம்.) வாஸனையோடே போமென்கிறதுக்கு ப்ரமாணம் (மேருவித்யாதி.) "மேரு மந்தர மாத்ரோபி ராஶி: பாபஸ்ய கர்மண: । கேஶவம் வைத்யமாஸாத்ய துர்வ்யாதிரிவ நஶ்யதி" (மேருமந்தரமாத்ரோபி ராஸிஃபாபஸ்யகர்மணஃ, கேஸவம்வைத்யமாஸாத்யதுர்வ்யாதிரிவநஸ்யதி) இதி ஸ்ரீவிஷ்ணுதர்மே. "மேருமந்தரமாத்ரோபி" (மேருமந்தரமாத்ரோபி) என்றதுக்கர்த்தம் (மேருவையுமித்யாதி.) "கேஶவம் வைத்யமாஸாத்ய" (கேஸவம்வைத்யமாஸாத்ய) என்றதுக்கர்த்தம் (சரதமாகவித்யாதி.) சரதமாக - நிஸ்சயமாக. மருத்துவன்-ஆசார்யன். திருவாறன்விளையை யுள்ளித்தொழுதால் பாபங்கள் போமென்றதுக்கு-ஈஸ்வரன் பாபத்தைப் போக்குமென்கிற ப்ரமாணங்களை யெடுப்பானென்னென்ன (இது தேசத்துக்குமித்யாதி.)

பதப்ரயோகத்துக்கு பாவம் (அபேக்ஷித்தவித்யாதி.) "அமர்வென்று -" அமரிலேவென்று. அமர் - யுத்தம்.

"நங்கை" என்றதுக்குபாவம் (எல்லாம்படவித்யாதி.) தோள் புணர்ந்தானுடைய குணங்களை (ஸ்துதிப்ப) என்று கூட்டிக்கொள்வது. "தோள்புணர்ந்தான் - உள்ளேயிருக்கின்ற" என்றதுக்கு பாவம் (ருக்மிணியித்யாதி.)

"நின்ற" என்றதுக்குபாவம் (ப்ரகாசியாநிற்கச்செய்தேயித்யாதி.)

மநோரதப்ரகரணத்தில் மநோரதம் ஸங்கதமாம்படி யெங்ஙனேயென்று சங்கித்து பரிஹரிக்கிறுர் (தாமடிமையித்யாதி.) ஆனால், "என்மனனே" என்றுப்போலே தன்றிருவுள்ளத்துக் கருளிச்செய்தாரோவென்ன (நெஞ்சையித்யாதி.) நெஞ்சுபோல்வாரை "தொண்டர்" என்கையாலே - ஸ்வாநுபவ ஹாநியில்லை யென்றபடி.

அன்றங்கமர்வென்றென்றுதொடங்கி, நீணகரத்தை - தொண்டர் - உள்ளித்தொழுமின் - தீவினை - முற்றவும் - ஒன்று நில்லா கெடுமித்யந்வயஃ..................*

ஏழாம்பாட்டு.

நீணகரமதுவேமலர்ச்சோலைகள்சூழ்திருவாறன்விளை
நீணகரத்துறைகின்றபிரானெடுமால்கண்ணன்விண்ணவர்கோன்
வாணபுரம்புக்குமுக்கட்பிரானைத்தொலையவெம்போர்கள்செய்து
வாணனையாயிரந்தோடுணித்தான்சரணன்றிமற்றென்றிலமே.

ஆறுயிரப்படி.

(நீணகரமதுவே) திருவாறன் விளையென்னும் நீணகரமதுவே பரமப்ராப்யம், அதுபெறுகைக் குபாயம் அதிலேநின்றருளினவவன், அவனுகிறுன் * அயர்வறுமமரர்க ளதிபதியாயிருந்துவைத்து ஆச்ரித வாத்ஸல்யமஹோததியாகையாலே, ஸ்ரீமதுரையிலே யாச்ரிதபரித்ராணார்த்தமாக வந்து திருவவதாரம்பண்ணியருளின ஆச்ரிதவிரோதி நிரசநைகபோகனுன க்ருஷ்ணன், அவனல்லதுபாயமில்லை, அவனைசரணம் புகுங்கோளென்கிறுர்..*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், அநிருத்தனுக்கு ப்ரதிபந்தகனுனபாணனை, அஸஹாயனும்படி பொருதழித்து, அவன் பாஹுவநத்தைச்சேதித்த க்ருஷ்ணனே ப்ராப்த்யுபாய பூதனென்கிறுர்.

நீணகரம் - அயோத்யை, அபராஜிதையென்று ஶ்ருதிப்ரஸித்தமான மஹாநகரம். அதுவே - அர்ச்சாவதாரஸ்த்தலமான வதுவேயாம்படி. மலர் - மலரையுடைத்தான. சோலைகள் - சோலைகள். சூழ் - சூழ்ந்த. திருவாறன்விளை - திருவாறன் விளையூரிற. நீணகரத்து - மஹாநகரத்திலே. உறைகின்ற - நித்யவாசம்பண்ணுகிற. பிரான் - மஹோபகாரகனுய். நெடுமால் - ஆச்ரிதவ்யாமுக்தனுய்க்கொண்டு. கண்ணன் - க்ருஷ்ணனுயவதரித்த. விண்ணவர்கோன் - நித்யஸூரிசேவ்யனுய். வாணபு

ரம் - அநிருத்தன் நிருத்தனுனைபாணபுரத்திலே புக்கு-சென்று. முக்கட்பிரானை-சக்ஷுசகமான த்ரிணேத்ரத்வத்தையும் ஈஶ்வரத்வாபிமானத்தையுமுடையருத்ரனை. தொலைய - "ஆஶ்ரிதரக்ஷணம்பண்ணினதமையும்" என்று உபரதனும்படியாக. வெம் - ப்ரதாபோத்தரமான. போர்கள் - பூசல்களை. செய்து - பண்ணி. வாணனை-பாணனுடைய, ஆயிரந்தோள் - ஆயிரந்தோளையும். துணித்தான்-துணித்தவன். சரண்-தேசப்ராப்திக்குபாயபூதன். அன்றி - அவனையொழிய. மற்று - வேறு. ஒன்று - ஓருபாயத்தை. இலம் - உடையோமல்லோம்..*

ஈடு - ஏழாம்பாட்டு.

திருவாறன்விளையே ப்ராப்யமென்றுநின்றீர், அவனன்றோ ப்ராப்யனென்ன; அன்றென்னவல்லேனோ, என் சித்தாந்தமிருக்கும்படி கேட்கலாகாதோ வென்கிறார். உபாசநபலமாய் வருமவையடைய ப்ராப்யாந்தர்க்கதமாகக்கடவது, சாத்யவிவ்ருத்திக்குடலாய் வருமவையெல்லாம் பலத்துக்குடலாகக்கடவது; ஆகையாலே, ப்ராப்யபூமி அத்தேசமே, அங்கேகொடுபோய்சசேர்க்கும் கடகனவன், இது என்சித்தாந்த மிருக்கும்படி யென்கிறார்.

(நீணகரமதுவே) * கலங்காப்பெருநகரமாய், புக்கார்க்கு " ந ச புநராவர்த்ததே " (நசபுநராவர்த்ததே) என்கிறபடியே ஒருநாளும் மீட்சியில்லாதபடி நித்யாநுபவம்பண்ணும் ப்ராப்யதேசம் அதுவே. (மலரித்யாதி) " அவனுக்குங்கூட ப்ராப்யபூமி " என்றுதோற்றும்படி யிருக்குமாயிற்று. நித்யவசந்தமானபொழிலாலே சூழப்பட்டதிருவாறன் விளையாகிற மஹாநகரத்திலேவந்து வர்த்திக்கிறவுபகாரகன். (நெடுமாலித்யாதி) * அயர்வறுமமரர்க ளதிபதியாயிருந்துவைத்து, சம்சாரத்தில் தன்பக்கல் ருசியுடையரானவர்கள் பக்கல் வ்யாமோஹத்தாலே க்ருஷ்ணனுய்வந்தவதரித்து, ஒருகடலில் நின்று மொருகடலிலே யெடுத்துவிட்டு, ஈஶ்வராபிமாநியாய் " இவன்காரியத்துக்கெல்லாம்நானேகடவன் " என்றிருக்கிறவனுடைய வபிமாநமெல்லாந்தொலைந்து, "நானினியொருதேவதையா யொருவன்காரியத்துக்கபிமாநித்திரேன்" என்னும்படி க்ரூரமான யுத்தங்களைப்பண்ணி. " க்ருஷ்ண க்ருஷ்ண மஹாபாஹோ. " (க்ருஷ்ணக்ருஷ்ணமஹாபாஹோ.) "ஆனைக்குந்தனக்குத்தக்கவாதம்" என்னுமாபோலே, தேவதைகளுக்கு நம்மிற்காட்டிலறிவுகேடு விஞ்சியிருக்கும். ஒருவில்லைமுறித்தபோதாக " அதிகம் மேநிரே விஷ்ணும் " (அதிகம்மேநிரேவிஷ்ணும்) என்பர்களாயிற்று தேவஜாதியாக. (வாணனையாயிரந்தோள்துணித்தான்) " உஷைபித்ருஹீநையாகவொண்ணாது " என்றுபார்த்து, உயிரிருக்கத்தோளைக் கழித்துவிட்டானாயிற்று. (சரண்) அவன் கடகன், திருவாறன்விளையே ப்ராப்யம். ப்ராப்யனானவன்வந்து சந்நிதிபண்ணினதேசமாகையாலே, அவனோட்டைசம்பந்தத்தாலே அத்தேசமும் ப்ராப்யமென்கைக்குத்தட்டில்லை. ஒருசர்வாதிகனுபாயமாய் பலப்ரதனாகவேணு

மே; ஆகையாலே, அவனுபாயம், அத்தேசம்ப்ராப்யம். (அன்றிமற்றொன்றிலமே) இங்ஙனல்லது ப்ராப்யப்ராபகங்கள் மாறாடக்கடவோமல்லோம்..*

ஜீயர் அரும்பதம்.

ஏழாம்பாட்டு (நீணகரமித்யாதி.) "நீணகரமதுவே" என்றத்தாலே பலித்தது - திருவாறன்விளை போக்யமென்னுமதிறே; அத்தைக்கடாக்ஷித் தவதாரிகை (திருவாறன்விளையேயித்யாதி.) என்னுமின்றொன்றது - கீழெல்லாமென்றபடி. உம்முடைய சித்தாந்தமானாலு முபபந்நமாகவேண்டாவோவென்ன (உபாசநேத்யாதி.) அதாவது - ப்ராப்யனானவனை யொருதேசவிசேஷத்திலேபோ யநுபவிக்கவேண்டுகையாலே, அதுவும் ப்ராப்யமென்றபடி. உபாசநபலமாய்வருமவையாவன - ஆஶ்ரயணபலமான வர்ச்சிராதிகதி, திவ்யதேசப்ராப்திமுதலானவை. பரிஹாராந்தரம் (சாத்யவிவ்ருத்திக்கித்யாதி.) அதாவது - ஸாத்யேப்ரதமாவதி பகவத்கைங்கர்யமாய், தத்விசேஷவ்ருத்திஹேதுவாகையாலே, தச்சரமாவதி தேசமாயிருக்கையென்றபடி. கடகனென்றது - உபாயமென்றபடி.

இதுப்ராப்யம் என்னுமதுக்குவாசகம் "நீணகரம்" என்கிறவிதென்னுமிடந்தோற்ற வருளிச்செய்கிறார் (கலங்காவித்யாதி) அதுவேயென்றது - திருவாறன்விளையை.

"உறைகின்ற" என்றத்தைக்கடாக்ஷித்து, இதுக்குபாவம் (அவனுக்குமித்யாதி.) "விண்ணவர்கோன் - நெடுமால்கண்ணன்" என்றந்வயித்தர்த்தம் (அயர்வறுமித்யாதி) ஒருகடலிலேநின்று மொருகடலிலேயெடுத்து விட்டென்றது - த்வாரகை மேலைசமுத்ரத்திலேயும், சோணிதபுரம் கீழைக்கடற்கரையிலேயு மாகையாலே யென்றபடி. "முக்கட்பிரானைத்தொலையவெம்போர்கள்செய்து" என்றதுக்கர்த்தம் (ஈஶ்வராபிமாநியித்யாதி.) அவனப்படிதோற்றானோவென்ன; தோற்றன்றோ ஸ்தோத்ரம்பண்ணினானென்கிறார் (க்ருஷ்ணக்ருஷ்ணேத்யாதி) "ஸம்ஸாரஜ்ஞாந உதிவ்ருஜ" (ஈஶ்வராத்ஜ்ஞாநமந்விச்சேத்) என்னும்படியானஜ்ஞாநவானுக்கஜ்ஞாநமுண்டோ, "ஜாநே" என்பானென்னென்ன (ஆனைக்குமித்யாதி.) உபபாதநம் (ஒருவில்லையித்யாதி.)

தலையையறாதே தோளைக்கழித்ததுக்குஹேது (உஷையித்யாதி,) உபாசநபலமாய் வருமதாகையாலே பரமபதமன்றோ ப்ராப்யம், திருவாறன்விளைப்ராப்யமாகக்கூடுமோவென்ன (ப்ராப்யனானவனித்யாதி.) உபாயமும் திருவாறன்விளையானாலோவென்ன (ஒருசர்வாதிகனித்யாதி.)

மலர்ச்சோலைகள் சூழ்தித்யாரப்ய, விண்ணவர்கோன் - நெடுமால் கண்ணன்- வாணபுரமென்றுதொடங்கி, தோள் துணித்தான் சரண் - நீணகரமதுவே - அன்றி மற்றொன்றிலமித்யந்வயঃ..*

எட்டாம்பாட்டு.

அன்றிமற்றொன்றிலநின்சரணேயென்றகலிரும்பொய்கையின்வாய்
நின்றுதன்னீள்கழலேத்தியவானையின்னெஞ்சிடர்தீர்த்தபிரான்
சென்றங்கினிதுறைகின்றசெழும்பொழில்சூழ்திருவாறன்விளை
யொன்றிவலஞ்செய்யவொன்றுமோதீவினையுள்ளத்தின்சார்வல்லவே.
௫௦

ஆறாயிரப்படி.

(அன்றிமற்றொன்றிலம்) சரணம்புக்கால் நம்மபேக்ஷிதம் செய்தருளுமோவென்னில்; * பரமாபதமாபந்நனாய் சரணாகதனான ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய வாபத்தை யெல்லாம்போக்கி யவனைரக்ஷித்தருளின சரணாகதவத்ஸலனல்லனோ திருவாறன்விளையிலே யிருக்கிறான், அவன்நம்முடைய வபேக்ஷிதம் செய்தருளும், ஆதலால், உங்களுடைய சமஸ்த துஃகங்களும் போம்படி திருவாறன்விளையிலேபோ யநுபவியுங்கோளென்கிறார்...*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், ஆஶ்ரிதருடைய ஆந்தரதுஃகநிவர்த்தகன் வர்த்திக்கிற திருவாறன் விளையையாஶ்ரயிக்க, நெஞ்சிலொருபாபமும் நடையாடாதென்கிறார்.

நின் - உன். சரண் - திருவடிகளை. அன்றி - ஒழிய. மற்று - மற்று. ஒன்று - ஒன்றையும். இலம் - உடையோமல்லோம். என்று - என்று. அகல்- விஸ்தீர்ணமாய். இரும் - அகாதமான. பொய்கையின்வாய் - பொய்கையிடத்திலே. நின்று - முதலையின்கையிலே யகப்பட்டுநின்று. தன், நீள் - ஆபந்நரிருந்த விடத்தளவும்வரும். கழல் - திருவடிகளை. ஏத்திய - “ நாராயணா ” என்று சம்பந்த பூர்வகமாகவேத்தின. ஆனையின் - ஆனையினுடைய. நெஞ்சிடர் - “ செவ்விமாறாமல் பூவைச்சாத்தப்பெற்றிலோம் ” என்கிற நெஞ்சு துஃகத்தை. தீர்த்த - தீர்த்த. பிரான் - மஹோபகாரகன். சென்று - ஆஶ்ரிதர்க்குதவுகைக்காகச்சென்று. அங்கு, இனிது-இனிமையோடே. உறைகின்ற - வர்த்திக்கிறவிடமாய். செழு - நிரதிசயபோக்யமான. பொழில்- பொழில். சூழ் - சூழ்ந்த. திருவாறன்விளை - திருவாறன் விளையை. ஒன்றி - கிட்டி. வலஞ்செய்ய - வலஞ்செய்ய. ஒன்றுமோ - கூடுமோ. கூடுமாகில், தீ - க்ரூரமான. வினை - பாபங்கள். உள்ளத்தின் - உள்ளத்தின். சார்வு-பொருத்தத்தை. அல்லவே- உடையவல்லவாம்.

ஒன்றிவலஞ்செய்ய - தீவினை - ஒன்றும் - உள்ளத்தின் சார்வல்லவென்று உக்திப்ரகாரமாகவுமாம்...*

ஈடு - எட்டாம்பாட்டு.

திருவாறன்விளையிலேபுக, நம்முடைய சகலதுஃகங்களும் போமென்கிறார்.

(அன்றிமற்றொன்றிலம் நின்சரணேயென்று) நின்சரணே - அன்றிமற்றொன்றிலம் - என்று. உன்திருவடிகளையல்லது வேறொரு பற்றுடையேனல்லேனென்று. புறம்பே சிலர் ரக்ஷகராக ப்ரமித்திருக்கு மதுவுந்தவிர்ந்து, “𑌗𑌜𑌾𑌕𑌰𑍍𑌷𑌤𑍇 𑌤𑍀𑌰𑍇 𑌗𑍍𑌰𑌾𑌹𑌾𑌕𑌰𑍍𑌷𑌤𑍇 𑌜𑌲𑍇” (கஜஆகர்ஷதேதீரே க்ராஹஆகர்ஷதேஜலே) என்கையாலே தான் ரக்ஷகமாக நினைத்திருக்குமதுவுந்தவிர்ந்து, “𑌮𑌨𑌸𑌾𑌽𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌤𑍍” (மநஸாசிந்தயத்.) என்கையாலே கூப்பீடும் கார்யகரமாமெல்லையுங்கழிந்தது. அவனைப்பார்த்தால் தானுமல்லாதாரோபாதி புறம்பாய்க்கடக்க நிற்கும்படியாயிறே ப்ரா

ப்தியிருக்கும்படி. ஆகைச்சுட்டியிறே ப்ரணவத்தில் மத்யமபதங்கிடக்கச் செய்தேயிறே திருமந்த்ரத்தில் மத்யமபதம் ஜீவிக்கிறதும். (அகலிரும் பொய்கையின்வாய்) அகலத்தையு மாழத்தையுஞ் சொல்லவேண்டுமளவிலே, அகலத்தைச்சொல்லி யிருமையைச் சொல்லுகையாலே - அது ஆழத்தைச் சொல்லிற்றாகக்கடவது. இப்போது அகலமுமாழமுஞ்சொல்லுகிறதுக்குக் கருத்தென்னென்னில்; அவனுபாயமாய் ரக்ஷித்தல், இல்லையாகில் முடிதல்செய்யுமித்தனைபோக்கி, தான் வேறொரு கரைகாணமாட்டானாகாதே. (அகலிரும்பொய்கையின் வாய்நின்று) பயஸ்த்தாநத்திலே பயநிவ்ருத்தியுள்ளவிடத்திற்போலே நிற்கும்படியாயிற்றுச் செயல்மாட்சி. முதலை நீரிலேயிழுக்க, ஆனைகரையிலேயிழுக்க, இரண்டினுடைய வ்யாபாரமுமாய்ச் செல்லுகை தவிர்ந்து ஒன்றினுடைய வ்யாபாரமேயாய்நிற்கை. (தன்னீள்கழல்) எதிர்த்தலையில் செயல்மாட்சியே யெல்லையாகவளரும் திருவடிகள். முதலைவாயிலே யகப்பட்டு நிற்கச்செய்தேயும், அவனை யநுசந்தித்தால் அச்சங்கெட்டிருக்கலாம்படி யாகாதேதா னிருப்பது. “𑌆𑌨𑌨𑍍𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌨 𑌬𑌿𑌭𑍇𑌤𑌿” (ஆநந்தம்ப்ரஹ்மணோ வித்வாந்நபிபேதி) என்னக்கடவதிறே. [கூ-௦-தூ-ந] [குதப்ஃசந] ப்ராமாதிகத்துக்கன்றிக்கே புத்திபூர்வகமாகப் பண்ணினதுக்கு மஞ்சவேண்டாதபடியாயிருக்கும். “செய்தாரேல் நன்றுசெய்தார்” என்றால், இவனெதுக்கஞ்ச. புத்திபூர்வத்துக் கஞ்சவேண்டாவிட்டால், ப்ராமாதிகத்துக் கஞ்சவேண்டாவென்னுமிடம் கிம்புநஃ இறே. ப்ராமாதிகத்துக்கஞ்ச வேண்டாமை பக்தியோகத்துக்குமுண்டிறே. (ஏத்திய) முட்பாய்ந்தால் “அம்மே!” என்பாரைப்போலே, வாஸநையாலே சொன்ன வித்தனை. (ஆனையின்நெஞ்சிடர்தீர்த்தபிரான்) துதிக்கை முழுத்தினவிடமிறே, நீண்டகை குறுகுமளவுமிறே பார்த்துநின்றது, இவன் கைவிட்டால் கைக்கொள்ளாநின்றானித்தனையிறே. (ஆனையின் நெஞ்சிடர்தீர்த்தபிரான்) “இப்பூவிற் செவ்விமாறுவதற்குமுன்னே திருவடிகளிலே சாத்தப்பெறுகிறிலோம்!” என்கிறவிடரைப் போக்கினானாயிற்று. அன்றிக்கே, “நாமடியாக சர்வேஶ்வரனுக் கவத்யம்வருகிறதோ?” என்னுமிடராதல். அதாவது - “‘இவனிப்படி க்லேஶிக்க அவன் ரக்ஷித்தபடி யழகிதாயிருந்தது, இவனையே நாமிப்படி ‘ரக்ஷகன்’ என்று நினைத்திருந்தது’ என்று நாட்டா ரிவனை யிப்படி நினைக்கிற்செய்வதென்” என்று இடர்பட்டது. “இரண்டும்போ யிரண்டின்வீடு” என்கிறபடியே - இரண்டுக்குமிடர்வாராதபடி கரையிலேகொண்டேறி, பின்னை முதலைவாயைக் கிழித்து ஆனையினிடரை நீக்கினானாயிற்று. இதுக்கு பட்டரருளிச்செய்யும்படி - “ராஜபுத்ரனைச் சிறையிலேயிட்டுவைத்தால், கைக்கூட்டனுக்கும் பாலுஞ்சோறுமிடுவாரைப்போலேகாண்” என்றும். இரண்டும் மோக்ஷத்தைப்பெற்றதே!; முதலை சாபமோக்ஷமும், ஸ்ரீகஜேந்த்ராழ்வான் ஸாக்ஷாந்மோக்ஷமும் பெற்றார்களிறே. (பிரான்) ஆனையிடர்போக்கினவிதுவும், அதுக்க

ன்றித் தமக்குபகரித்தானாக நினைத்திருக்கிறார்காணுமிவர். இப்பாவவ்ருத்தியை யுடையவனாகையிறே யொருவன் வைஷ்ணவனாகையாவது. அநுகூலரிலே யொருவனுக்கொரு நன்மையுண்டானா லதுதன்னதாகநினைத்திருக்கையும், அநர்த்தம்வந்தா லது தனக்குவந்ததாக நினைத்திருக்கையுமாகிற இவ்விரண்டு முண்டானாலிறே வைஷ்ணவத்வ முண்டாயிற்றாவது. (சென்றங்கினிதுறைகின்ற) இவனுதவாதவன்று அவ்வானைக்குள்ள விடரோபாதியும் போருமாயிற்று, அத்தேசத்தை ப்ராபியாதபோது சர்வேஸ்வரனுக்குண்டான விடரும். அவன்வந்து தன்னுதரமெல்லாந்தோன்றும்படி வர்த்திக்கிற, அழகிய பொழிலாலே சூழப்பட்ட திருவாறன்விளையைக்கிட்டி ப்ரதக்ஷிணாதிகளைப்பண்ண. (ஒன்றுமோ) கிட்டுமோ. (தீவினையுள்ளத்தின்சார்வல்லவே) அப்போது தீவினை யுள்ளத்தின்சார்வாகாது. தேஜஸ்திமிரங்களுக்கு ஸஹாவஸ்தாநமுண்டோ, அவன்வந்து ஹ்ருதயத்திலேநித்யவாசம்பண்ணத் தீவினையொதுங்கவிடமுண்டோ.

ஜீயர் அரும்பதம்.

எட்டாம்பாட்டு. (அன்றிமற்றித்யாதி.) "திருவாறன்விளையொன்றிவலஞ்செய்ய - தீவினையுள்ளத்தின்சார்வல்லவே" என்றபதங்களைக்கடாக்ஷித்தவதாரிகை (திருவாறன்விளையிலேயித்யாதி.)

"மற்றொன்றிலம்" என்றதுக் கர்த்தம் (புறம்பேயித்யாதி.) "மற்று" என்றால் - பிறரையொழியத் தன்னையும் காட்டுமோவென்ன (அவனையித்யாதி.) தன்னுடைய ரக்ஷணத்தில் தனக்கு ப்ராப்தியில்லையென்னுமிடமெங்கேசொல்லிற்றென்ன (ஆகைச்சுட்டியித்யாதி.) ஆகைச்சுட்டி யென்றது - தன்னுடையரக்ஷணத்தில் தனக்கு ப்ராப்தியில்லாமையாலே யன்றோவென்றபடி.

"இருமை" என்று - ஆழமாக விவக்ஷித்த வர்த்தத்தை யிஸ்ஸப்தம் வசிக்குமோவென்ன (அகலத்தையுமித்யாதி.) "நின்று" என்றதுக்குபாவம் (பயஸ்தாநத்திலே யித்யாதி.) செயல்மாட்சி - நிர்வ்யாபாரதை. செயல்மாட்சிதன்னை யுபபாதிக்கிறார் (முதலையித்யாதி.)

திருவடிகளுக்கு நீட்சியேதென்ன (எதிர்த்தலையிலித்யாதி.) எதிர்த்தலை-இத்தலையென்றபடி. "நீள்" என்றதுக்கர்த்தாந்தரமாதல், நீட்சியாலிவனுக்கு பலித்ததொரு ப்ரயோஜநமாத லருளிச்செய்கிறார் (முதலைவாயிலேயித்யாதி.) அப்படி யச்சம் கெட்டிருக்கலாமோவென்ன, ப்ரமாணம் (ஆநந்தமித்யாதி.) அதுக்கு ஹேதுவேதென்ன (செய்தாரேலித்யாதி.) ஆனால் ப்ராமாதிகத்துக்கெப்படியென்ன (புத்திபூர்வத்துக்கித்யாதி.) ப்ராமாதிகத்துக்கொழிய புத்திபூர்வத்துக்கு மஞ்சவேண்டாவென்கிறதேதென்ன (ப்ராமாதிகத்துக்கித்யாதி.) அதாவது - பக்திநிஷ்டவ்யாவ்ருத்யர்த்தமென்றபடி. நினைக்கமாட்டாத தேத்தவற்றேவென்ன (முட்டாய்ந்தாலித்யாதி.) இப்போ தானையினிடரைப் போக்குகிறவன் உபக்ரமாவஸ்தையிலேதானே போக்கவொண்ணாதோவென்ன (துதிக்கையித்யாதிவாக்யத்ரயம்.) ஆனைக்கு நெஞ்சிடரின்னதென்றும், அத்தைத் தீர்த்தப்ரகாரமு மருளிச்செய்கிறார் (இப்பூவிற்செவ்வியித்யாதி.) "நெஞ்சிடர்" என்றதுக்கு மூன்றர்த்தம். மூன்றினது (துதிக்கைமுழுத்தினவிடரிறேயென்றது.) இரண்டாமர்த்தம் (இப்பூவிற்செவ்வியித்யாதி.) மூன்றாமர்த்தம் (அன்றிக்கே நாம்டியாகவித்யாதி.) நெஞ்சிடர்தீர்த்த

துக்கு ப்ரமாணம் (இரண்டும்போயித்யாதி.) முதலையுமாலையுமாகிற விரண்டும் ஒன்றையொன்று விட்டுப்போ யிரண்டுக்கும் சாபமோக்ஷமும் ஸாக்ஷாத் மோக்ஷமு முண்டாம்படி திருவுள்ளம்பற்றி யருளினுவென்றபடி. நாலாந்திருவந்தாதி, "மதி த்தாய்போய்" இத்யாதி. (இரண்டுக்குமிடர்வாராதபடி) என்றவநந்தரம், ஒன் றுக்கே யிடர்வரும்படி யென்றுகூட்டுவது. இரண்டுக்கும் மோக்ஷம்வருவா னென் னென்ன (இதுக்கித்யாதி.) இதுக்கு - "இரண்டின்வீடு" என்றதுக்கென்றபடி. கைக்கூட்டன் - காவற்காறன். ஆனையன்றோ மோக்ஷத்தைப்பெற்றதென்ன (இரண் டுமித்யாதி.) பெற்றக்ரமமேதென்ன (முதலையித்யாதி.) இத்தால் - ஸ்வரூபத்தி லோரர்த்தத்தை பலிப்பிக்கிறார் (இப்பாவவ்ருத்தியித்யாதி.) விவரணம் (அறுகூ லரிலேயித்யாதி.)

"சென்று" என்றதுக்கு பாவம் (இவனுதவாதவித்யாதி.)

"ஒன்றுமோ-" ப்ரதக்ஷிணாதிகளைப் பண்ணக்கூடுமோ வென்றபடி.

அப்போது - கூடிருலென்றபடி. ப்ரதக்ஷிணாதிகளைப் பண்ணினால் பாபம் ஸ் பர்ஸியாமைக்கடியேதென்ன வருளிச்செய்கிறார் (தேஜஸ்திமிரங்களுக்கித்யாதிவா க்யத்வயத்தாலே.) இவ்விடத்திலே - "ஹ்ருதி யதி பகவாநநாதிராஸ்தே ஹரிரஸிசங்ககதாதரோ வ்யயாத்மா । ததகமகவிகாதகர்த்ரு பிந்நம் பவதி கதம் ஸதி சாந்தகாரமர்க்கே" (ஹ்ருதியதிபகவாநநாதிராஸ்தே ஹரிரஸிசங்ககதாதரோ வ்யயாத்மா । ததகமகவிகாதகர்த்ருபிந்நம்பவதிகதம்ஸதிசாந்தகாரமர்க்கே) என்ற தநுசந்தேயம். உள்ளத்தின்சார்வல்ல - உள்ளத்தின் சேர்த்தியையுடைய தல்லவா மென்றபடி..*

ஒன்பதாம்பாட்டு.

தீவினையுள்ளத்தின்சார்வல்லவாகித்தெளிவிசும்பேறலுற்று
ஞவினுள்ளுமுள்ளத்துள்ளுமமைந்ததொழிலினுள்ளுநவின்று
யாவரும்வந்துவணங்கும்பொழிற்றிருவாறன்விளையதனை
மேவிவலஞ்செய்துகைதொழக்கூடுங்கொலென்னுமென்சிந்தனையே·

ஆறாயிரப்படி.

(தீவினை) திருவாறன்விளையோ ப்ராப்யம், திருநாடன்றோவென் னில்; நிரஸ்தசமஸ்த ப்ரதிபந்தகராய்த் தெளிவிசும்பேறலுற்றால்; திரு வாறன்விளையைக்கண்டால் திருநாட்டைவிட்டு இத்தையே ப்ராப்யமாகக் கொண்டு, சர்வகரணங்களாலு மநுபவிப்பார் - திருநாட்டிலுள்ளார்க்கு மிதுவே ப்ராப்யம், என்னெஞ்சும் திருவாறன்விளையைமேவி வலஞ்செய் துகைதொழக்கூடுமேயோ வென்று மநோரதியாநிற்கும், அதுவே ப்ரா ப்யமென்கிறார்...*

பன்னீராயிரப்படி.

௯. அநந்தரம், பாபநிவ்ருத்தி பிறந்து ப்ராப்யதேசம் சித்திக்குமானாலும், சர் வாநுபாவ்யமான திருவாறன்விளையை ப்ராபித்தநுபவிக்க வமையுமென்னாநின்றதெ ன்னெஞ்சென்கிறார்.

தீ - க்ரூரமான. வினை - பாபங்கள். உள்ளத்தின் - நெஞ்சில். சார்வல்லவாகி - சேர்த்தியற்று, தெளி - ஸ்வரூபப்ரகாசம் பிறக்கும்படி தெளிவையுடைத்தான. விசும்பு - பரமவ்யோமத்திலே. ஏறல்-ஏறுதல். உற்றால் - வந்துகிட்டினாலும். என் - என். சிந்தனை-நெஞ்சானது. நாவினுள்ளும்உள்ளத்துள்ளும் - வாங்மநசங்களிலும். அமைந்த - அநுக்கூலமாகச்சமைந்த. தொழிலினுள்ளும் - ப்ரவ்ருத்தியிலும். நவின்று - சேர்த்தியை யுடையராய்க்கொண்டு. யாவரும் - எல்லா விபூதியிலுள்ளாரும். வந்து - வந்து. வணங்கும் - வணங்கும்படியாய். பொழில் - போக்யதாப்ரகாசகமான பொழிலையுடைத்தான. திருவாறன்விளை - திருவாறன் விளையாகிற. அதனை - அத்தேசந்தன்னையே. மேவி - கிட்டி. வலஞ்செய்து - அநுகூலவ்ருத்தி பண்ணுகையாலே. கைதொழ - தொழ. கூடுங்கொல் - கூடுமோ. என்னும் - என்றுநினையாநின்றது...*

ஈடு - ஒன்பதாம்பாட்டு.

எனக்கு ஸ்ரீவைகுண்டமும் திருவாறன்விளையு மிரண்டும் கிடைப்பதானால், ஸ்ரீவைகுண்டத்தைவிட்டு "திருவாறன்விளையே யமையும்" என்னுமெனனெஞ்சமென்கிறார்.

(தீவினையித்யாதி) "'திருவாறன்விளையே ப்ராப்யம்' என்று இங்கிருந்தநாளுண்டான சங்கோசத்தாலே சொல்லுகிறீர், சங்கோசங்கழிந்தவாறே பரமபதத்திலே தோள்மாறுகிறீர்" என்ன, அதுவேண்டா, சங்கோசங்கழிந்தால் நானிருக்கும்படியைக் கேட்கலாகாதோ வென்கிறார் (தீவினையுள்ளத்தின் சார்வல்லவாகி) பண்டுபண்ணின வவித்யாகர்மவாசநா ருசிகளானவை, ப்ரத்யக்வஸ்துவை ஸ்பர்ஶியாவாய்க்கொண்டு. (தெளிவிசும்பேறலுற்றால்) திருநாடேறப்போக வுத்யோகித்தால், நாவினுள்ளுமித்யாதி) எத்தனையேனு மதிசயிதஜ்ஞாநரான திருநாட்டிலுள்ளாரும் வந்து மநோவாக்காயங்களாலே பயின்று ஆஶ்ரயிக்கும்படி நிரதிசயபோக்யமான திருவாறன்விளையை. (மேவியித்யாதி) அத்தேசத்தை நான்சென்று ப்ராபித்து அநுகூல வ்ருத்திகளைப்பண்ணி. (கைதொழக்கூடுங்கொலென்னுமென்சிந்தனையே) என்னெஞ்செனக்கு விதேயமல்ல; "ஹாவொநாநந்ருஜூநஹ்ஹி" (பாவோநாந்யத்ரகச்சதி) என்கிறபடியே.*

ஜீயர் அரும்பதம்.

ஒன்பதாம்பாட்டு (தீவினையித்யாதி.) "தெளிவிசும்பேறலுற்றால் - திருவாறன்விளையதனைமேவி" இத்யாதிகளைக் கடாக்ஷித்தவதாரிகை (எனக்கித்யாதி)

"தெளிவிசும்பேறலுற்றால்" என்னவமைந்திருக்க, "தீவினை, யுள்ளத்தின் சார்வல்லவாகி" என்று விசேஷித்ததுக்குபாவம் (திருவாறன்விளையேயித்யாதி) இதுபதாவதாரிகை. "உள்ளம்" என்று - உள்ளிருக்கிற வாத்மாவைச்சொல்லுகிறது. ப்ரத்யக்வஸ்து - ஆத்மா.

"யாவரும்வந்து - உள்ளத்துள்ளும் - நாவினுள்ளும் - அமைந்ததொழிலினுள்ளும்நவின்று - வணங்கும்பொழில் திருவாறன்விளையதனை" என்றந்வயித்தருளிச்செய்கிறார் (எத்தனையேனுமித்யாதி.) நவின்று - கிட்டி. நவிலுகை - கிட்டுகை. பயின்று - கிட்டி.

"என்சிந்தனை" என்றதுக்குபாவம் (என்னெஞ்சித்யாதி) இதுக்குப்ரமாணம் (பாவஇத்யாதி.)

தீவினையென்றுதொடங்கி, ஏறுஉற்றால் - யாவரும்வந்து - உள்ளத்துள்ளும் - நாவினுள்ளும் - அமைந்ததொழிலினுள்ளும் நவின்று - வணங்கும்பொழில் திருவாறன்விளையதனை - என்சிந்தனை - மேவிவலம் செய்து கைதொழக்கூடுங்கொலென்று மித்யந்வய:...*

பத்தாம்பாட்டு.

சிந்தைமற்றொன்றின்றிறத்ததல்லாத்தன்மைதேவபிரானறியுஞ்
சிந்தையினாற்செய்வதானறியாதனமாயங்களொன்றுமில்லைச்
சிந்தையினாற்சொல்லினாற்செய்கையாநிலத்தேவர்குழுவணங்குஞ்
சிந்தைமகிழ்திருவாறன்விளையுறைதீர்த்தனுக்கற்றபின்னே.

ஆறாயிரப்படி.

(சிந்தை) "திருநாடேப்ராப்யம்" என்னும் ப்ரஸித்தியாலே யும்மைத்திருநாடேறக்கொண்டெழுந்தருளிற் செய்வதென்னென்னில்;

திருவாறன்விளையே ப்ராப்யமென்றிருக்கைக்கு விரோதியான பாபத்தைப்போக்கி யென்னைத்திருவாறன்விளையே ப்ராப்யமென்றிருக்கப் பண்ணினபின்பு, "திருவாறன்விளை" என்றால் என்னெஞ்சு தாழ்ந்துகிடக்கும்படி யறியானோ, சர்வஜ்ஞனல்லனோவென்கிறார் ....*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், திருவாறன்விளையிலே வர்த்திக்கிற ஏன்பக்கலிலே வ்யவஸிதமானபின்பு நெஞ்சு வேறொன்றிற்போகாதென்னுமிடமவன்றானே யறியுமென்கிறார்.

சிந்தையினால் சொல்லினால் செய்கையால்-மநோவாக்காயங்களாலே. நிலத்தேவர்-நிலத்தேவரானபாகவதருடைய. குழு-சங்கமானது. அநுபவிக்க, வணங்கும்-வணங்கும்படியாய். சிந்தை-போக்தாக்கள்நெஞ்சை. மகிழ் - மகிழ்விக்கும். திருவாறன்விளை-திருவாறன்விளையிலே. உறை-வர்த்திக்கிற. தீர்த்தனுக்கு-பரமபாவநபூதனுக்கு. அற்றபின்-அநந்யார்ஹசேஷமாம்படி யறுதியுடைத்தானபின்பு. சிந்தை-நெஞ்சு. மற்றொன்றின்-வேறொன்றை. திறத்ததல்லா-உத்தேஶ்யமாகநினைத்திராத. தன்மை-ஸ்வபாவத்தை. தேவன்-சூரிசேவ்யனான. பிரான் - சர்வஜ்ஞன்றானே. அறியும்-அறியும். சிந்தையினால்-சிந்தையினால். செய்வ-செய்யப்பட்டு. மாயங்கள்-மறைந்ததொழில்களானவை. தான்-அவன்றான். அறியாதன-அறியாதன. ஒன்றும்-ஒன்றும். இல்லை-இல்லை ....*

ஈடு - பத்தாம்பாட்டு.

இதுதானொருக்திமாத்ரமாய் உம்முடைய நெஞ்சு பரமபதத்தை விரும்பினாலோவென்ன; "அத்தை, என்னினைவுக்கு வாய்த்தலையிலேயிருக்கிற சர்வேஶ்வரனைக்கேட்டுக்கொள்வது" என்றிங்ஙனே யருளிச்செய்வர் ஜீயர். அன்றிக்கே, பிள்ளான், நீர் "திருவாறன்விளையேப்ராப்யம்"

என்றிருக்கிறீர், ஈஶ்வரன் ஸ்வதந்த்ரனன்றே, அவன் பரமபதத்தைத்தரி லோவென்ன; “ அவன் சர்வஜ்ஞனன்றே, அறியானோவென்கிறார் ” என்று, “புருஷார்த்தப்ரதனன்றே, புருஷனர்த்திதத்தையன்றே கொடுப்பது”

(சிந்தைமற்றொன்றின்றிறத்ததல்லாத்தன்மை தேவபிரானறியும்) நெஞ்சானது பரமபதப்ரசங்கமும் நினையாதது சர்வேஶ்வரனறியும். தன்மை—ஸ்வபாவம். மற்றென்கிறது-பரமபதத்தின்பேர் சொல்லுகையுங் கூட வஸஹ்யமானபடி. உம்மைக்கேட்க சர்வேஶ்வரனைச் சாக்ஷியாகச் சொன்னதுக்குக் கருத்தென்னென்ன (சிந்தையினாலித்யாதி) அவன் நினைத்தா லிவனநந்தரம் நினைக்கவேண்டும்படியிருக்க, அவனறியாதது துண்டோ. * உள்ளுவாருள்ளித்தெல்லா முடனிருந்தறியுமவனன்றே. அவன் நினைப்பிட்டாலன்றே யிவனுக்கு நினைக்கலாவது. நெஞ்சால் செய்யப்படுவனவற்றி லவனறியாத வஞ்சநங்களொன்றுமில்லை. (சிந்தையினாலித்யாதி) நித்யசூரிகளோபாதி முமுக்ஷுக்களும் வந்தாஶ்ரயிக்கும் தேசமாயிற்று. மநோவாக்காயங்கள் மூன்றாலும் பூசுரரான ஸ்ரீவைஷ்ணவர்கள் திரண்டுவந்தாஶ்ரயிக்கும் தேசமாயிற்று. (சிந்தை மகிழ்திருவாறன்விளை) ஆரேனுமாகப்புக்காரை நிரதிசயாநந்திகளாகப்பண்ணும் தேசமாயிற்று. “ ப்ராப்யபூமி ” என்று தோற்றும்படி யிருக்குமாயிற்று. திருவாறன்விளையிலே வந்து வர்த்திக்கிற சர்வேஶ்வரனைக் கேட்டுக்கொள்வது. உமக்கித்தெளிவுதானென்று தொடங்கி வந்ததென்ன (தீர்த்தனுக்கற்றபின்) அவன் தன்னுடைய போக்யதாதிசயத்தாலே எனக்குப்புறம்புண்டானபற்றைத்தவிர்த்துத் தனக்கே யநந்யார்ஹனும்படி பண்ணிக்கொண்ட வன்றுதொடங்கி. உஜ்ஜீவிக்கப்பண்ணினவன்றுதொடங்கி. நடுவே யுஜ்ஜீவியாதே கிடந்துபோந்ததே அநாதிகாலம்..*

ஜீயர் அரும்பதம்.

பத்தாம்பாட்டு (சிந்தைமற்றித்யாதி) “மாயங்களொன்றுமில்லை” என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை (இதுதானித்யாதி வாக்யத்வயம்) “ அறியும் ” என்கையாலே (கேட்டுக்கொள்வது) என்று ஸித்தம். வாய்த்தலை-மூலம். அறிந்தாலோவென்ன (புருஷார்த்தேத்யாதி) “ இவ்வர்த்தத்துக்கு சாக்ஷியாக வவனைக்கேட்டுக்கொள் ” என்று நஞ்சீயருக்குக்கருத்து.

முந்தின வவதாரிகையிலே யருளிச்செய்கிறார் (உம்மைக்கேட்கவித்யாதி) அவனையறியாதே யிவன் நினைக்கவொண்ணாதோவென்ன (அவன்நினைத்தாலித்யாதி) அப்படி யவனறியுமோவென்ன, ப்ரமாணம் (உள்ளுவாரித்யாதி) அவன் நினைத்தவநந்தரம் நினைக்கவேணுமோவென்ன (அவன் நினைப்பிட்டாலித்யாதி) சப்தார்த்தம் (நெஞ்சாலித்யாதி) “செய்வ” என்றது-செய்யப்படுவனவற்றிலென்றபடி.

கீழ்ப்பாட்டிலே நித்யசூரிக ளாஶ்ரயித்தபடி சொன்னவநந்தரம், இங்கே முமுக்ஷுக்க ளாஶ்ரயிக்கிறபடியைச் சொன்னதுக்குபாவம் (நித்யசூரிகளோபாதி

யித்யர்தி) "சிந்தையினால் சொல்லினால் செய்கையால்" என்று-கார்யேகாரணோபசாரம்பண்ணுகிறது.

இன்னார் சிந்தையென்னுமையாலே யருளிச்செய்கிறார் (ஆரேனுமித்யாதி இத்தால்பலிதம் (ப்ராப்யபூமியித்யாதி) பரமபதப்ரஸங்கம் நினையாதிருக்கிறவிவர், "தேவபிரான்" என்று பரமபதநிலயனைச்சொல்லுவா னென்னென்கிறசங்கையிலே, "தேவபிரான்" என்றதுக்கர்த்தம் (திருவாறன்விளையிலேயித்யாதி) உஜ்ஜீவிக்கப்பண்ணினவன்றுதொடங்கியென்றது - மத்யமாக்ஷரத்தி லர்த்தத்தை யெனக்குண்டாக்கினவன்றுதொடங்கியென்றபடி. இதில் வ்யதிரேகஸித்தமானவர்த்தத்தை யருளிச்செய்கிறார் (நடுவேயித்யாதி) நடுவேயென்றது - விசேஷகடாக்ஷத்துக்குமுன்புள்ளகாலத்தை. அகாரமகாரங்களுக்கு நடுவேயென்றும்.

சிந்தையினாலென்றுதொடங்கி, தீர்த்தனுக்கற்றபின்-சிந்தைமற்றொன்றினைன்றுதொடங்கி, தேவபிரானறியும், சிந்தையினால் செய்வதானறியாதன மாயங்களொன்றுமில்லை யித்யர்வயஃ ....*

பதினொன்றாம்பாட்டு.

தீர்த்தனுக்கற்றபின்மற்றோர்சரணில்லையென்றெண்ணித்தீர்த்தனுக்கே
தீர்த்தமனத்தனனாகிச்செழுங்குருகூர்ச்சடகோபன்சொன்ன
தீர்த்தங்களாயிரத்துள்ளிவைபத்தும்வல்லார்களைத்தேவர்வைக
றீர்த்தங்களேயென்றுபூசித்துநல்கியுரைப்பர்தந்தேவியர்க்கே.

ஆறாயிரப்படி.

(தீர்த்தனுக்கற்றபின்) திருவாறன்விளையே ப்ராப்யமென்றிருக்கைக்கு விரோதியானவென்னுடைய பாபத்தைப்போக்குகையாலே பவித்ரம் அதில் நின்றருளினவெம்பெருமான், அதிலும் பவித்ரம் அவனை ப்ரதிபாதித்த திருவாய்மொழிகள், இவைவல்லாரவற்றிலும் பவித்ரபூதரென்று, இந்த்ராதி தேவர்கள் சத்கரித்துக்கொண்டு தங்கள் ப்ரணயினிகளுக்குச் சொல்லுவரென்கிறார்...................................*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், இத்திருவாய்மொழியை யப்யஸிக்கவல்லவர்களை நித்யஸூரிகள் ஸ்லாகிப்பரென்று பலத்தையருளிச்செய்கிறார்.

தீர்த்தனுக்கு - உபாயோபதேஷ்டாவான வவனுக்கு. அற்றபின் - அநந்யார்ஹமானபின்பு. மற்று - வேறு. ஓர் - ஒரு. சரண் - உபாயம். இல்லை - இல்லை. என்று - என்று. எண்ணி - அறுதியிட்டு. தீர்த்தனுக்கே - * சர்வபாபவிமோசகனாய் பரமபாவநபூதனானவவனுக்கே. தீர்த்த - அறுதியாக்கப்பட்ட. மனத்தனனாகி-நெஞ்சையுடையராய்க்கொண்டு. செழும் - தர்ஸநீயமான. குருகூர் - திருநகரிக்குநிர்வாஹகரான. சடகோபன் - ஆழ்வார். சொன்ன - அருளிச்செய்ததாய். தீர்த்தங்கள் - தனித்தனியேவித்யாஸ்த்தாநங்களான, ஆயிரத்துள் - ஆயிரந்திருவாய்மொழியிலும். இவைபத்தும் - இப்பத்தையும். வல்லார்களை - அப்யஸிக்கவல்லவர்களை. தேவர் - நித்

யசூரிகளானவர்கள். வைகல் - சர்வகாலமும், தம் - தங்கள். தேவியர்க்கு-மஹிஷி களுக்கு. பூசித்து-பஹுமாநமாக. நல்கி-ஸ்நேஹித்து. தீர்த்தங்களே-சம்சாரதோஷ நிவர்த்தகரான பவித்ரபூதர். என்று - என்று. உரைப்பர்-சொல்லாநிற்பர்கள்.

இது - அறுசீராசிரியவிருத்தம்..(... ....*

ஈடு - பதினொன்றாம்பாட்டு.

நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றவர்கள் * அயர்வறு மமரர்களுக்கு ப்லாகநீயரென்கிறார்.

(தீர்த்தனித்யாதி) இன்னார்க்குத்தீர்த்தனென்றுமையாலே ஸ்வவ்யதிரிக்தர்க்கெல்லாம் தீர்த்தனாயிற்று. தீர்த்தமாவது தான்பரிசுத்தமுமாய், தன்னைஸ்பர்சித்தாரும் பரிசுத்தராம்படி பண்ணுமதாயிற்று. * தீர்த்தனுலகளந்த சேவடியை ப்ரஹ்மாவிளக்க, அந்ததீர்த்தத்தை பாவநார்த்தமாக ஜடாமத்யேதரித்தான் ருத்ரன். "ஆறுபொதிசடையோன்" என்னககடவதிறே. கங்காதரனென்றே பேரவனுக்கு. அந்தகங்கைக்கடியை யாராய்ந்து கொள்ளுகையிறே யினியுள்ளது; ஆராய்ந்தவாறே அது அடிப்பட்டிருக்குமே; * கங்கைபோதரக் காலநிமிர்த்தருளிய கண்ணனிறே. (தீர்த்தனுககற்றபின்) தன்னுடையபோக்யதாதி சயத்தாலே தன்னையொழிந்த விஷயங்களி லுண்டானருசியைக கழித்தவனுக்கற்றபின் என்றுமாம். (மற்றோர்சரணில்லையென்றெண்ணி) அவனையொழிய ரக்ஷகரில்லையென்று தெளிந்தாராயிற்று. (தீர்த்தனுக்கேதீர்த்தமனத்தனாகி) பாஹ்ய விஷயங்களில் ருசியைப்போக்கினவனுக்கே யறுதியாகவெழுதிக்கொடுத்த நெஞ்சையுடையராய். "உனைநினைந்தெள்கல்தந்தவெந்தாய்" என்றாரேகிழ்; "மாற்பால்மனஞ்சுழிப்பமங்கையர்தோள்கைவிட்டு" என்றும், "பரமாத்மநி யோரக்தோவிரக்தோபரமாத்மநி" (பரமாத்மநி யோரக்தோவிரக்தோபரமாத்மநி) என்றுஞ்சொல்லுகிறபடியே, தன்பக்கலிலே நெஞ்சைவைத்தால் பின்பு புறம்புபோக வொட்டாதே சௌந்தர்யம். "மனைப்பால்பிறந்தார் பிறந்தெய்தும் பேரின்பமெல்லாம் - துறந்தார் தொழுதாரத்தோள்" என்று - மனைப்பால் பேரின்பத்தில்கைகழியவொட்டாதே. (செழுங்குருகூர்ச்சடகோபன்சொன்ன) அருக்கடியான ஜந்மபூமியையுடைய வாழ்வாரருளிச்செய்தது. (தீர்த்தங்களாயிரம்) ஆயிரம்பாட்டும் ஆயிரந்தீர்த்தங்களாயிற்று. இந்தப்பத்தை யப்யசிக்கவல்லார்களை, தேவருண்டு-திருவடி, திருவநந்தாழ்வான், சேனைமுதலியார் தொடக்கமானார், இவர்களை "நாள்தோறும்பவித்ரபூதர்" என்றாதரித்துக்கொண்டுபோந்து, தங்கள் மஹிஷிகளை ஸ்நேஹித்துக் கொண்டாடும் தசையிலே சொல்லுவர்கள். (நல்கியுரைப்பர்தந்தேவியர்க்கு) மஹிஷிகளுந்தாங்களுமாக ஸ்ரீவைகுண்டநாதனுக்கடிமைசெய்து, ப்ரீதிப்ரகர்ஷத்தாலே ஓடமேற்றிக் கூலிகொள்ளுமளவானவாறே, அவர்களுக்கு சர்வஸ்யதாநம்பண்ணிக் கனக்கநதங்கள் ப்ரபாவத்தைச் சொல்லும்படியாகப்

பெறுவர். ஓடமேற்றிக்கூலிகொள்ளும் தசையாகிறது - பகவத்விஷயத்தில் கைங்கர்யம்பண்ணும்போது எடுத்துக்கைநீட்டுகையிறே. சரமஸ்லோகம் ரக்ஷித்துக்கொண்டவளவுபோலே யிருக்குமளவுகளிலே யென்றபடி. (அதாவது-உடையவர், திருக்கோட்டியூர்நம்பி தமக்கத்யந்தரஹஸ்யமாக வுபதேசித்தசரமஸ்லோகத்தைத் தெற்காழ்வார் திருமுன்பேயெடுத்துக்கைநீட்டினவர்களுக்கு, அவர்கள்விஷயந்திலே யுகப்பாலே யருளிச்செய்தாரிறே; அத்தைச்சொல்லுகிறது.) (வைகலும்பூசித்து) "அபர்வணிகடல்தீண்டலாகாது" என்றுப்போலே, அதுக்கொருநியதியில்லையென்கை. வைகல் - காலம். "ஒழிவில்காலமெல்லா முடனாய்மன்னி" என்று தத்விஷயத்திலிவர் ப்ரார்த்தித்தத்தை, இதுகற்ற ததீயவிஷயத்திலே நித்யசூரிகளடிமைசெய்வர்கள்..................................*

ஜீயர் அரும்பதம்.

நிகமம் (தீர்த்தனுக்கித்யாதி) "வல்லார்களைத் தேவர்வைகல் தீர்த்தங்களே" இத்யாதிகளைக் கடாக்ஷித்தவதாரிகை (இத்திருவாயமொழியித்யாதி.)

"தீர்த்தன்" என்றால் - பரிசுத்தனென்று காட்டுமதொழிய, ஸ்வவ்யதிரிக்தர்க்கெல்லாம் சுத்தியைவிளைக்குமவனென்று காட்டுமோவென்ன (தீர்த்தமாவதித்யாதி.) அப்படிதன்னை ஸ்பர்சித்தாரையும் சுத்தமாக்கிறுனோவென்ன (தீர்த்தனுலகளந்த வித்யாதி.) இவ்விடத்திலே - " தஷ ஸ ஸவேதிதம் ஸ ஷஹாஷயாபஸிவஹா ஹபஃ। வாவ நாபூஜடாஜமெ ழியொமெழாஷீத ழவயாபணாஃ" (தடம்புதிதம்த்ருஷ்ட்வாதநாரஸிரஸாஹரஃ। பாவநார்த்தம்ஜடாமத்யேயோக்யோஸ்மீத்யவதாரணாத்) என்கிறஸ்லோகமநுசந்தேயம். அப்படிதரித்தானோவென்ன; ப்ரமாணம் (ஆறுபொதியித்யாதி) கங்கையையேகதேசத்திலே யடக்கின ஜடையை யுடையவனித்யாதத்தாலும். திருவெழுகூற்றிருக்கை. அவனிந்தநீர்ந்தத்தை தரித்தானென்னுமதுக்குபபத்தியருளிச்செய்வராக வதிஷ்டிகை (கங்காதரனித்யாதி) கங்காதரனென்றமாத்ரத்திலே அவன திருவடிகள் விளக்கின தீர்த்தத்தைதரித்தானென்று மிடம் தோன்றுமோவென்ன; அதுக்கு ஹேதுவைவிசாரித்துக் கொள்ளவேணுமென்னுமத்தையும், அப்படி விசாரித்தால் திருவடிகளிலேபிறந்ததாயிருக்குமென்னுமத்தையு மருளிச்செய்கிறார் (அந்தகங்கைகித்யாதிவாக்யத்வயத்தாலே) அடிப்பட்டிருக்கும் - சமூலகமாயிருக்கும். திருவடிகளை ஸ்பர்சிந்திருக்குமென்றுமாம். அப்படியிருக்குமோவென்ன (கங்கைபோதரவித்யாதி) கங்கைபுறப்படுமபடியாகவும் திருவடிகளை நிமிர்த்தருளின சர்வேஸ்வரனென்றபடி. திருமொழி நாலாம்பத்து இரண்டாந்திருமொழி, "அங்கையாலடி" இத்யாதி. "தீர்த்தன்" என்றதுக்கு - போக்யனென்றர்த்தாந்தரம் (தன்னுடையவித்யாதி.)

"போக்யபூதனுனவனுக்கு" என்றத்தால் பலித்தபாவம் (பாஹ்யேத்யாதி.) அப்படிபாஹ்ய விஷயங்களில் ருசியைப்போக்கிறுனோவென்ன, ப்ரமாணங்கள் (உனைநினைந்தித்யாதி) எள்கல் - உபேக்ஷை. சௌந்தர்யம் புறம்புபோகவொட்டாதென்னுமதுக்கு ப்ரமாணம் (மனைப்பாலித்யாதி.) " அத்தோள் - தொழுதார் - பேரின்பமெல்லாம் துறந்தார் " என்றநவயித்தர்த்தம் (மனைப்பால் பேரின்பத்திலித்யாதி). கையானது - தோளானது. கழியவொட்டாது - போகவொட்டாதென்று ஸ்வபாவார்த்தம். அதுக்கடியான - இதரவிஷய பராவண்யத்தைத்தவிரும்படி பி

றந்த வத்யவசாயத்துக் கடியானவென்றபடி. ஆயிரம்பாட்டும் தீர்த்தம்போலே பரமபாவநமென்றபடி.

“ தேவர்-பூசித்து ” என்றுகூட்டியர்த்தம் (தேவருண்டித்யாதி) “ நல்கி,” என்றதுக்கர்த்தம் (இவர்களை-ஆதரித்துக்கொண்டென்று.) தேவியர்க்குநல்கியுரைக்கைக்குஹேதுவேதென்ன (மஹிஷிகளுமித்யாதி) நல்குதல்-ஸ்நேஹித்தலும், கொடுத்தலும். ஓடமேற்றிக்கூலிகொள்ளுமளவாவது - ஓடத்திலேற்றினபின்பு நட்டாற்றில் கூலிபொருந்திக்கொள்ளில்கொடாதிருக்கவொண்ணாத தசையென்றபடி. மஹிஷிகளெடுத்துக்கைநீட்டின (ப்ரீதிப்ரகர்ஷத்தாலே) என்றுகூட்டுவது. தங்களென்றது - இத்தை யப்யசித்தவர்களை. “ ஓடமேற்றிக் கூலிகொள்ளுமளவானவாறே ” என்றதுக்குத்ருஷ்டாந்தம் (சரமச்லோகமித்யாதி) அதாவது. அதிகுஹ்யமாய்ப் பேணிக்கொண்டிருந்த சரமச்லோகத்தை, த்ரௌபதிகுழல்முடிக்கைக்காக வ்யாமோஹத்தாலே அர்ஜுநனுக்கு வெளியிடவேண்டும்படியான வளவுபோலே யிருக்கிற வளவுகளிலே யென்றபடி. “ வைகல் ” என்றதுக்குபாவம் (அபர்வணீத்யாதி) பலிதம் (ஒழிவில்காலமித்யாதி.)

தீர்த்தனுக்கற்றபின்னென்றுதொடங்கி, வல்லார்களைத்தேவர்வைகல் பூசித்து - தீர்த்தங்களேயென்று - தம்தேவியர்க்கு - நல்கியுரைப்பரித்யந்வய: ... .*

த்ராவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி.

(இன்பம்பயக்க.)

வைகுண்டே நித்யயோகாச் ச்ரிதவிவசதயா நந்தகீர்த்யுஜ்ஜ்வலத்வாத்
சேஷசாயித்வ ருக்மிண்யபிமத ஸ்வராஜித்பாணதோ: கண்டநாத்தே: |
க்ராஹக்ரஸ்தேபரக்ஷா ப்ரதிதவிஷயேஸஞ்சிதா நாத்மபாவாத் ஸ்தோ
த்ராணார்த்தம் ஸ்வேச்சாதம்விஷ்டயதி ஹரிஸ்தத்வபோதாய்யாயி || (௮௦)

(வைகுண்டேநித்யயோகாத்) இன்பம் பயக்கவித்யாதி - பெரியபிராட்டியாரும் தானுமாக * நலமந்தமில்லதோர் நாட்டுக்குள்ளே நித்யவாஸம்பண்ணுகையாலும்; (ச்ரிதவிவசதயா) அகலிடமுற்றவுமித்யாதி, கூடுங்கொல்வைகலும் கோவிந்தனையித்யாதி - வாமநக்ருஷ்ணதிருபேண வவதரித் தாச்ரிதர்க்குச்சொல்லிற்றுச் செய்யுமவனுகையாலும்; (அநந்தகீர்த்யுஜ்ஜ்வலத்வாத்) வாய்க்கும்பெரும்புகழ்மூவுலகீசன் - நிரவதிககீர்த்தியாலே யுஜ்ஜ்வலனுகையாலும்; (சேஷசாயித்வ) பாம்பணையப்பனமர்ந்துறையும் - திருவநந்தாழ்வானைத் திருப்படுக்கையாகவுடையனுகையாலும்; (ருக்மிண்யபிமத) உருப்பிணிநங்கை யணிநெடுந்தோள்புணர்ந்தான்- ருக்மிணிப்பிராட்டிக் கபிலஷிதஸமயத்திலே யுதவுகையாலும்; (ஸ்வராஜித்பாணதோ:கண்டநாத்யை:) வாணபுரம்புக்கு முக்கட்பிரானைத்தொலைய வெம்போர்கள் செய்து வாணனை யாயிரந்தோள்துணித்தான்-“ நெற்றியிலேகண்படைத்த ருத்ரனை ரக்ஷகனுகப்பற்றினேம் ” என்றிறுமாந்து தேவர்களோடே விரோதித்த பாணுசுரனிருந்தவிடத்தேசென்று, சேந்த்ரதக்ஷகந்யாயத்தாலே அவனுக்கு ரக்ஷகனுன்ருத்ரனை முன்னே பங்காபிமாநனுகப்பண்ணி, பின்னை யவனுடைய வாயிரங்கரங்களைக் கழிக்கையாலும்; (க்ராஹக்ரஸ்தேபரக்ஷாபி:) அகலிரும்பொய்கையின்வாயித்யாதி-

ப்ரபலமானு முதலையின்கையிலே யகப்பட்டு அநந்யகதியாய்நின்ற கஜேந்த்ராழ்வானை ரக்ஷிப்பைபண்ணி. அதில்நின்றும் விடுவித்து ரக்ஷிக்கையாலும், (உசிதவிஷயேஸந்நிதாநாத்) யாவரும்வந்துவணங்கும் பொழில்திருவாறன்விளையதனை - * அயர்வறுமமரர்களும் வந்தாஸ்ரயிக்கும்படி யதிஸ்லாக்யமான (திருவாறன்விளையிலேயெழுந்தருளியிருக்கையாலும்; (ஸாசித்வாத்) திருவாறன்விளையுறை தீர்த்தனுக்கற்றபின்னே - தன்னிடத்திலே ப்ரவணராணை யிதரவிஷய நிஸ்ப்ருஹமாம்படிபண்ணவல்ல பரிசுத்தனுகையாலும், திருவாறன்விளை யெம்பெருமான், தன்னை ஸ்தோத்ரம்பண்ணுகிற பேர்களுடைய துக்கத்தையெல்லாம் சமிப்பியாநிற்கிருனென்று "இன்பம்பயக்க" என்கிற தஸகத்திலே யாழ்வாராலே யறுதியிடப்பட்டதென்கிருர். ௭0

இப்படி ஸப்தமஸதகத்தில், பத்து தஸகங்களாலும் ப்ரதிபாதிதங்களான வர்த்தங்களை ஸங்க்ரஹித்தருளுகிறார்.

[illegible]

(௭க)

சாட்யாசங்கையை சஹிக்குமவனும், ஆஸ்ரிதருடைய கர்ஹையை சமிப்பிக்குமவனும், தன்னுடைய ரக்ஷகத்வத்தை வெளியிடுமவனும், அதினுடைய ப்ரகாரங்களை ப்ரகாஸிப்பிக்குமவனும், தன்னுடைய சர்வஜ்ஞ சௌஹார்த்தத்தை தர்ஸிப்பிக்குமவனும், ஸ்வாஸ்ரிதருடைய கூப்பீட்டைப் பரிஹரிக்குமவனும், அவர்களுக்கு விஸதமாக ஸ்ம்ருதிவிஷயனுமாய், ஆஸ்சர்யவிபூதிகனுமாய், ஆஸ்ரிதனை ஸ்வவிஷயஸ்தோத்ரத்திலே யோஜிக்குமவனும், ஸ்தோதாக்களுடைய துக்கத்தை ஹரிக்குமவனுன வெம்பெருமானை, சப்தமசதகத்திலே ஆஸ்ரிதாநிஷ்ட நிவர்த்தகனுக வாழ்வாரருளிச்செய்தாரென்கிருர்........... .. .. (௭க)

திருவாய்மொழிநூற்றந்தாதி.

இன்பக்கவிபாடுவித்தோனையிந்திரையோ
டன்புற்றுவாழ்திருவாறன்விளையிற் - றுன்பமறக்
கண்டடிமைசெய்யக்கருதியமாறன்கழலே
திண்டிறலோர்யாவர்க்குந்தேவு. (௭0)

(இன்பக்கவி) இதில் - திருவாய்மொழிபாடி யடிமைசெய்யப்பாரித்த திவ்யசூக்தியை யநுவதித்தருளிச்செய்கிருர். எங்ஙனேயென்னில், தாம்பாடின திருவாய்மொழிகேட்கைக்காகப் பெரியபிராட்டியாருடனே பேரோலக்கமாகத் திருவாறன்விளையிலே யவன்வந்தெழுந்தருளியிருக்கிறபடியை யநுசந்தித்து, "நாமங்கேசென்று ''திருமால்வன்கவி' என்றவாயோலேப்படியே' அவனுமவளுமான சேர்த்தியிலே திருவாய்மொழியை யவர்களிருவரு முகந்து திருச்செவிசாத்தும்படிகேட்பித் தடிமைசெய்யப்பெறுவதெப்போதோ?" என்று மநோரதிக்கிற * இன்பம்பயக்கவிலர்த்தத்தை, "இன்பக்கவிபாடுவித்தோன்" இத்யாதியாலே யருளிச்செய்கிருரென்கை.

(இன்பக்கவிபாடுவித்தோனை) "இன்கவிபாடியஞ்சனை," "தூயகவியென்பித்து," "என்னாமுதல்வந்து புகுந்துநல்லின்கவி," "திருந்துநலலின்கவி," "வண்டமிழ்க்கவி," "சீர்பெறவின்கவி," "உறப்பலவின்கவி," "பதவியவின்கவியாடியவப்பன்" என்று நிரதிசயபோக்யமான திருவாய்மொழியை யென்னைக்கொண்டு பாடுவித்த வுபகாரகனை. (இந்திரையோடன்புற்றுவாழ் திருவாறன்விளையில்) பெரியபிராட்டியாரோடேகூட, "திருவாய்மொழிகேட்கைக்குப் பாங்கானவிடம்" என்றதயாதரத்தைப்பண்ணிவாழ்ந்து கொடுபோருகிற திருவாறன்விளையில். அன்றிக்கே, இந்திரையோடன்புற்றென்று - பெரியபிராட்டியாரிடத்திலே ஸங்கதனென்றுமாம். இத்தால் - "இன்பம்பயக்க" என்கிறமுதற்பாட்டைக் கடாக்ஷித்தருளிச்செய்தபடி. "ராமஸ்துஸீதயாஸார்த்தம்," (ராமஸ்துஸீதயாஸார்த்தம்) * ராமஸ்ஸீதா மநுப்ராப்யராஜ்யம்புநரவாப்தவாந் । ப்ரஹ்ருஷ்டமுதிதோலோகஃ இறே. (திருவாறன்விளையில் தன்பமறக்கண்டு) * ஏழையராவியில்துஃகமெல்லாம்தீரக்கண்டு. (அடிமைசெய்யக்கருதிய) கண்டால்செய்யும்கார்யமான கைங்கர்யம்செய்கையிலேமநோரதிக்கிற. அதாவது-"அன்புற்றமர்ந்துவலஞ்செய்து கைதொழுநாள்களுமாகுங்கொலோ," "மாகந்தநீர்கொண்டு தூவிவலஞ்செய்து கைதொழக்கூடுங்கொலோ," "நீடுபொழில்திருவாறன்விளைதொழவாய்க்குங்கொல்நிச்சலுமே," "வடமதுரைப்பிறந்தவாய்க்குமணிநிறக்கண்ணபிரான்றன்மலரடிப்போதுகள்-எப்பொழுதும்மனத்தீங்குநினைக்கப்பெற-வாய்க்குங்கொல்நிச்சலுமே," "மகிட்டிருவாறனவிளையுலகமலிபுகழ்பாட," "திருவாறன்விளையென்னும்நீணகரமதுவே," "வாணனையாயிரந்தோள் துணித்தான்சரணன்றிமற்றொன்றிலமே," "திருவாறன்விளையொன்றிவலஞ்செய்ய," "திருவாறன்விளையதனைமேவிவலஞ்செய்து கைதொழக்கூடுங்கொலென்னுமென்சிந்தனையே," "திருவாறன்விளையுறை தீர்த்தனுக்கற்றபின் - மற்றோர்சரணில்லை" "என்றிப்படியாயிற திவர்க்கவ்விஷயத்தில் கைங்கர்யமநோரதம் நடந்தபடியென்கை. "உபகாரஸ்ம்ருதியோடே தன்சரிதை கேள்வியாகாமல் * இன்பம்பயக்கவிருந்த நிலத்தேவர்குழுவிலே பாட்டுக்கேட்பிப்பதாக காநகோஷ்டியையும் தேவபிரானறியமறந்தவர்" என்றிறே ஆசார்ய ஹ்ருதயத்திலுமருளிச்செய்தது. (கண்டடிமைசெய்யக்கருதியமாறன்கழலே திண்டிறலோர்யாவர்க்குந்தேவு) தர்ஸநாநுபவ கைங்கர்ய மநோரதத்தையுடைய வாழ்வார்திருவடிகளே,தருடாத்யவஸாய யுக்தராயுள்ளார்க்கெல்லாம் பரதேவதை. ஆழ்வாரும்வேண்டா, நமக்குத்தேய்ய மாழ்வார்திருவடிகளே யமையும். அன்றிக்கே, மாறன்கழல்சேர் திண்டிறலோருண்டு - த்ருடாத்யவஸாயயுக்தரான மதுரகவி, நாதமுனி ப்ரப்ருதிகளாயுள்ளவர்கள். அத்யவஸாயதார்ப்பலராயுள்ளாரெல்லார்க்கும் குலதைவமென்றுமாம் .. . .(௭0)

ஏழாம்பத்தில் பத்தாந்திருவாய்மொழி முற்றிற்று.

ஆக - திருவாய்மொழி - ௭0.—பாட்டு - ௭௭௨.

ஏழாம்பத்து முற்றிற்று.